# எங்கிருந்து வந்தாயடா

**கதையின் பெயர் - எங்கிருந்து வந்தாயடா**

**கதாபாத்திரம்**

**வேந்தன்** – **அன்புக்கு அடிமை**

**அதிகம் விரும்புவது தனிமை**

**கோபமும் வேகமும் உடைமை.**

**வெண்மதி**- **கள்ளமில்லா வெள்ளை மனம்**

**பார்வையிலே குமரியம்மா**

**பழக்கத்திலே குழந்தையம்மா**

**மற்றும் வெற்றிவேலன். வினோதா, விபீஷணன், இவர்களோடு கலந்து களம் இறங்குகிறார்கள் .**

லஷ்மிரவி

DO NOT COPY



அத்தியாயம் 1

அதிகாலை பொழுது ஆதவன் மெதுவாக எட்டி பார்க்க ,அருகில் இருக்கும் கோவிலில் சுப்ரபாரதம் பாட ,அந்த விடிகாலை பொழுதிலும்,வெடவெடவென்ற குளிரிலும் 10வது 12வது படிக்கும் குழந்தைகள் புத்தக பையை சுமந்து கொண்டு டியுசன்க்கு ஓட,எங்கு எது நடந்தாலும் எங்களுக்கு கவலை இல்லை,இடியே விழுந்தாலும் இமைகள் திறப்பதில்லை என்ற முடிவோடு தலை முதல் கால் வரை இழுத்து போர்த்திக்கொண்டு தூங்கிகொண்டிருந்தன இரண்டு ஜீவன்கள் .

“ஐயா பால்” என்ற சத்தம் கேட்க

“டேய் பால்டா” என தூங்கி கொண்டிருந்த ஒருவன் சத்தம் எழுப்ப

“இன்னைக்கு காஜல்தான்டா டூட்டி ,நாளைக்கு அமலாபால் வர சொல்லு “என சொல்லி கொண்டே அந்த உருவம் மறுபடியும் தலையணைக்குள் தன் தலையை புதைத்துக் கொள்ள

“டேய் பால்காரண்டா” என அவன் சொல்ல அவன் சொல்ல

“நீங்கள் பேச விரும்பும் நபர் கனவில் காஜளோடு டூயட் பாடிகொண்டு இருக்கிறார்...இப்போது தொடர்பு கொள்ள முடியாது” என பதில் வர

“எல்லாம் நேரம்டா....நானே வாங்கறேன்” என சோம்பல் முறித்து கொண்டே எழுந்து சென்றான் மற்றொருவன் .

அப்போது ஓம் ...ஓம் ...என சத்தம் மட்டும் வர

“அடாடா அடுத்தது இவனா ....இவன் தொல்லை தாங்க முடியலடா...ஒரு மனுஷன் நிம்மதியா காலையில தூங்க முடியுதா” என சொல்லி கொண்டே தலையணையை தூக்கி கால்பக்கம் வைத்து மீண்டும் படுத்து தூங்கினான் கும்பர்கர்ணன் என பெயர் வைப்பதற்கு பதிலாக விபீஷ்ணன் என பெற்றோரால் தெரியாமல் பெயர் வைக்கப்பட்டு நம்மால் விபீஷ் என்று செல்லமாக அழைக்கபடுபவன்.

“சிறிது நேரத்தில் டேய் மணி 7 ஆகபோகுது .நீ 8 மணிக்கு சைட்க்கு போகணும்.இன்னும் தூங்கிட்டு இருக்க...மவனே அவன் வந்தான் நீ தொலைஞ்ச”‘ என சொல்லி கொண்டே அவனது போர்வையை உருவினான் கடமை கண்ணாயிரமாக விளங்கும் வெற்றிவேலன் என பெற்றோர்கள்ளால் பெயர் வைக்க பட்டு வெற்றி என நம்மால் சுருக்கப்பட்டு KK என நண்பரக்ளால் அழைக்கபடுபவன். இவன் தான் பால் வாங்க சென்றவன்.

போர்வையை உருவியதும் சலித்து கொண்டே கண்ணை திறந்த விபீஷ் .”.டேய் இப்பதான் காஜல் கண்ணுக்குள்ள நின்னா ...அதுக்குள்ள வந்து எழுப்பிட்டியா ...கொஞ்சம் பொறு நான் வழியனுப்பி வச்சுட்டு வரேன்” என சொல்லி மீண்டும் கண்ணை மூடி கொள்ள

“டேய் ஓம் சத்தம் நின்னுச்சு.அவன் யோகா முடிச்சுட்டு வரபோறான்.அப்புறம் எது நடந்தாலும் நான் பொறுப்பல்ல” என சொல்லி கொண்டே வெற்றி அங்கிருந்து நகர

“அச்சோ !!!!!!! காஜல்  வர நேரத்தில்தான் இந்த கடோத்கஜனும் வரணுமா,இந்த சுதந்திர நாட்டுல என் காஜல்அகர்வாலோட ஒரு டூயட் பாட முடியல ...என்ன கொடுமைடா இது” என புலம்பிக் கொண்டே படுக்கையை விட்டு எழ

“அதற்குள் இரண்டு பேரும்  ரெடியா ...நான் இன்னும் 10நிமிடத்தில் ரெடி ஆகிடுவேன் என சொல்லி கொண்டே உள்ளே வந்தவன்.... அப்படியே சிமெண்ட் 500 மூட்டை ,5 லோடு மணல்,கம்பி 20டன் வந்திடுச்சானு போன் பண்ணி கேளுங்க” என சொல்லி கொண்டே குளியலறை நோக்கி சென்றான் இக் கதையின்  நாயகன் வேந்தன்.பெயர்தான் வேந்தன். ஆனால் விபீஷ் அவனுக்கு வைத்திருக்கும் பெயர் விருமாண்டி.கிட்டத்தட்ட தோற்றமும் அதே போல் தான் இருக்கும்.எப்போதும் முகத்தை இறுக்கமாகவே வைத்திருப்பான்.சிரிப்பு கிலோ என்ன விலை என்று கேட்பான்.அதிக வார்த்தை பேசமாட்டான்.ஆனால் ஒரு வார்த்தை பேசினாலும் எதிர்புறத்தில் இருந்து மறு வார்த்தை பேசமுடியாது.அது போல் இருக்கும்.வேலை உண்டு வீடு உண்டு என்று இருப்பவன்.

சொன்னது போலவே 10 நிமிடத்தில் கிளம்பி வேந்தன் வெளியே வர,அப்போதுதான் ப்ரெஷ்யை வாயில் வைத்து கொண்டிருந்தான் விபீஷ்.வெற்றி போன் செய்து  வேந்தன் சொன்ன விபரங்களை கேட்டு கொண்டிருந்தான்.

வேந்தன் விபீஷை  பார்த்து முறைக்க “சாரி நண்பா.....எனக்கு நைட் தூக்கமே இல்லை....வாஸ்த்து பிரகாரம் அந்த மூலை சரியில்லை....பயங்கரமான கனவு எல்லாம் வருது “ என சொல்லி கொண்டே அந்த மூலையில் கையை நீட்ட

அவன் நீட்டிய மூலையை பார்த்த வேந்தன் அவனை முறைத்து விட்டு சென்றான்.

“இவன் எதுக்கு முறைக்கிறான்” என விபீஷ் யோசனையுடன் பார்க்க

அங்கு  வந்த வெற்றி “அங்க அவன் படுத்திருந்தாண்டா” என சொல்ல

“இல்லைடா நான் இப்ப அங்கிருந்து தான் எழுந்திரிச்சேன்” என விபீஷ் வேகமாக  சொன்னான்.



Do Not Copy

"ம்ம்ம்...காலையில் தூக்க கலக்கத்துல காஜலுக்கு உம்மா கொடுக்கிரேனு இங்கிருந்து அவன் கட்டிலுக்கு போய் அவன் தலயனைக்கு கொடுத்தில்ல...அப்புறம் அப்படியே படுத்திட்ட .... ..அந்த கொடுமைய வேற தூங்கி எழுந்த உடனே நான் பார்க்க வேண்டியதா போச்சு ...ஏன்டா இப்படி பண்ற" என தலையில் அடித்து கொண்டு அங்கிருந்து நகர்ந்தான்.

"ஓ அப்படியா  என யோசித்தவன் ...நல்லவேளை தப்பிச்சேன்" என சிரிக்க

உடனே வெற்றியும் "புரியுது புரியுது அப்போ மட்டும் நம்ம விருமாண்டி அச்சோ உன்னோட சேர்ந்து எனக்கும் அப்படியே வருது என்றவன் வேந்தன் மட்டும் அங்க இருந்திருந்தான் ...உன் நிலைமயை நினைச்சு பார்.இப்போ புத்தூர்லதான் இருப்ப கட்டோட" என சொல்லி சிரிக்க

உடனே விபீஷ் "எதுக்குடா இந்த கொலைவெறி காலையிலேயே உனக்கு" என பீதியுடன் கூற

"என்ன முடிசுட்டிங்கலா....நான் வீட்டை பூட்டலாமா" என கையில் பூட்டோடு வந்தான் வேந்தன் .

"அய்யோ நான் இன்னும் குளிக்கவே இல்லயே" என சொல்லி முடிக்கும்முன்பே வேகமாக உள்ளே நுழைந்தவன் 5 நிமிடத்தில் தயாராகி வெளியே வந்தான்.அதற்குள் வெற்றியும் வேந்தனும் சாப்பிட்டு முடித்து விட

"சரி புறப்படலாம்" என வேந்தன் கிளம்ப

"வேந்தா அவன் இன்னும் சாப்பிடல "என வெற்றி தயங்க

"அவனுக்கு கொடுத்த நேரம் முடிஞ்சுடுச்சு...கிளம்பலாமா" என சொல்லிகொண்டே வேந்தன்  வெளியே நடக்க

வெண்பொங்கல், வடையும் நாவில் எச்சில் ஊற  பார்த்து கொண்டே வேதனையுடன் வெளியே வந்தான் விபீஷ்.

**மூன்று பெரும் வெளியே வந்து தங்களது 2 சக்கரவாகந்த்தை எடுக்க,இருவர் ஹெல்மெட் அணிய ,விபீஷ் மட்டும் ஹெல்மெட் அணியாமல் வண்டி எடுக்க**

**"விபீஷ் ஹெல்மெட் போட்டு வண்டி ஓட்றதா இருந்தா வண்டி எடு ...இல்ல பஸ்ல வந்திடு" என ஒரு குரல் வர திரும்பாமலே புரிந்தது அவனுக்கு .**

**'ஆஹா விருமாண்டி ஆரம்பிச்சுட்டான்யா" என மனதில் சொல்லி கொண்டே ஹெல்மெட் எடுத்து மாட்டினான்.**

**"ஏண்டா இப்படி பண்ற...அவனை பத்திதான் தெரியும்ல "என வெற்றி அவன் காதை கடிக்க**

**"இல்லைடா மாப்பிள்ளை ...நேத்து நம்ம காயத்ரி ரோட்ல பார்த்தேன்.ஹெல்மெட் போட்டதால் உங்கள அடையாளம் தெரியல...வண்டி நம்பர் வச்சுதான் கண்டுபிடிச்சேன்.அதுக்குள்ள நீங்க போய்ட்டிங்க அப்படின்னு சொன்னா....எனக்கு எவ்ளோ கஷ்டமா போய்டுச்சு தெரியுமா ....நிறைய பிகர மிஸ் பண்றேண்டா...என்னை பார்க்காம பொண்ணுங்க ஏங்கி போறாங்க தெரியுமா?" என அவன் சோகமாக சொல்லி கொண்டிருக்க**

**வேந்தன் திரும்பி அவனை பார்க்க**

**"கிளம்பிட்டேன் நண்பா"  என சொல்லிகொண்டே ஹெல்மெட் எடுத்து மாட்டிகொண்டு கிளம்பினான்.**

**இவர்கள் அலுவலகம் செல்லும் முன்பு இவர்கள் குடும்பத்தை பற்றி பார்த்து விடலாமா**

**நம்ம ஹீரோ விருமாண்டி என்கிற வேந்தன்.சிறுவயதில் தாய் தந்தை இழந்து ஆசிரமத்தில் வளர்ந்தவன்.யாரிடமும் அதிகம் பேசமாட்டான்.எதையும் முறையாக செய்யவேண்டும் என்று நினைப்பவன்.தனிமையை ரொம்ப விரும்புபவன்.கோபம் அதிகம்.ஆனால் அந்த கல்லுக்குள் ஒரு ஈரம் இருக்கும்.அது அவனை பற்றி தெரிந்தவர்களுக்கு நன்கு புரியும்.**



DO NOT COPY

அடுத்தது நம்ம ஹீரோவின் வலது கை KKஎன்கிற வெற்றி வேலன்.கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன்.எல்லாரிடமும் இனிமையாக பழகுபவன்.தனது துன்பத்தை எளிதில் வெளிபடுத்தமாட்டான்.தாய்,தந்தை ,தங்கை என அழகான குடும்பம்.வீட்டு பற்று அதிகம்.யாரிடமும் பழகாத வேந்தன் இவனிடம் மட்டும் இயல்பாக பழக இவனது நல்ல குணங்களே காரணம்.

அப்புறம் யாரு நம்ம கும்பகர்ணன் என்கிற விபீஷ்தான்.செல்வமும் செல்வாக்கும் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவன்.எதை பற்றியும் கவலை படாதவன்.இப்போது இருக்கும் நொடியை ரசித்து வாழ்பவன். அக்கா ,தங்கை அம்மா அப்பா என சந்தோசமான குடும்பம்.சேட்டைகள் பல செய்தாலும் நல்ல குணமும் பண்பும் நிறைந்தவன்.

இந்த மூன்று துருவங்கள் ஒன்றாக இணைந்தது கல்லூரி வாழ்கையில்தான்.

மூவரும் சிவில் இஞ்சினியர் முடித்து விட்டு சேர்ந்து V4 BUILDERS என்ற ஒரு நிறுவனத்தை நடத்தி வருகின்றனர்.வெற்றி மட்டும் வேறொரு நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டு இதிலும் பங்குதாரராக இருக்கிறான்.அவனுக்கு பணத்தேவை என்பதால் நண்பர்களும் அவனுக்கு ஒத்துழைப்பு கொடுத்தனர்.மற்றவர்கள் இதில் முழு நேரமும் பணி புரிந்தனர்.

வேந்தனும் வெற்றியும் தனியாக வீடு எடுத்து தங்கி இருக்கிறார்கள்.விபீஷ் வீடு இங்குதான் உள்ளது.அவனது அக்கா திருமணம் செய்து அமெரிக்காவில் வசிப்பதால் அவரை பார்க்க அவனது அம்மா அங்கு சென்றுள்ளார்.அவனது தங்கை ஹாஸ்டல்.அவனது தந்தைக்கும் அவனுக்கும் 7 ம் பொருத்தம் (எந்த வீட்ல அப்பாவுக்கும் மகனுக்கும் ஏக பொருத்தமா இருந்திருக்கு)தந்தையின் தொழிலில் அவனுக்கு விருப்பம் இல்லை.அதனால் நண்பர்களுடன் சேர்ந்து தனியாக தொழில் தொடங்கியதில் அவருக்கு கோபம்.அவனது அம்மா வரும் வரை இங்கு வெற்றி வீட்டில் தங்கி இருப்பான்.இது அடிக்கடி நடக்கும்.

**விபீஷின் சேட்டைகள் வேந்தனுக்கு கோபம் வந்தாலும் அவனை தடுக்க மாட்டான்.சில சமயம் வேந்தனே அவனை வரசொல்லுவான்.மூன்று பேருடைய குணநலன்கள் வேறாக இருந்தாலும் அவர்களுக்கிடைய ஒரு பாசப்பினைப்பு உண்டு.**

**திருச்சியில் மத்தியில் இவர்களது V4 பில்டர்ஸ் அலுவலகம் இருந்தது.இப்போது தான் வளரும் நிலையில் இருப்பதால் 2 அறைகள் கொண்ட சிறிய கட்டிடம்தான்.மூவரும் தங்களது வாகனத்தை நிறுத்தி விட்டு உள்ளே வர அங்கு சாம்பிராணி புகை மற்றும் வாசம் பரவ**

**"வந்திட்டாங்கடா சின்சியர் சிகாமணி ....டேய் மாப்பிள்ளை இவ தொல்லை வர வர தாங்க முடியலடா.........வீட்ல தூங்குவளா...மாட்டாளா ..விடிய காலையிலே இங்க வந்திடறா" என திட்டி கொண்டே விபீஷ் உள்ளே செல்ல**

**அவன் சொல்வதை கண்டுகொள்ளாமல் மற்ற இருவரும் உள்ளே சென்றனர்.**

**"குட் மார்னிங் சார்" என சொல்லி கொண்டே ஒரு அழகிய இளம் பெண் வெளியே வர**

**"குட்மார்னிங்" என இருவரும் சொல்லிக்கொண்டு முன்னே செல்ல**

**விபீஷ் வந்தவன் அவளை பார்த்து முறைக்க**

**அவள்" குட்மர்ர்ர் னிங் சார்" என தடுமாற**

**"உனக்கு எத்தன முறை சொல்வது ...இது ஒன்னும் உன் வீடு இல்ல...ஆபிஸ்னு ...இப்படி சாம்பிராணி போடாத...ரூம் ப்ரெஸ்ர் அடிச்சு விடுன்னு" என அவளை திட்ட**

**அவள் அமைதியாக தலை குனிந்து நின்றாள்.**

**"விபீஷ் விடுடா...இதும் இயற்கை நறுமணத்தோட நல்லாத்தான இருக்கு" என வேந்தன் அவனை அடக்க**

**"ஆமா ....உன்னை ஏதாவது சொன்னா உடனே விருமாண்டி சப்போர்ட்க்கு வந்துருவானே " என முனகி கொண்டே அவளை கடந்து சென்றான்.**

“சரி விடுமா…அவனை பற்றிதான் உனக்கு தெரியுமே …போ…போய் வேலையை ஆரம்பி” என்றான் வெற்றி.

அவன் சொன்னதும் தலையை ஆட்டி கொண்டே உள்ளே செல்லும் அந்த பெண்ணின் பெயர் வினோதா என்கிற வினு.

மாலை நேர கல்லூரியில் படித்து கொண்டே இங்கு பணிபுரிகிறாள்.அவளும் சிவில்தான்.அவளது திறமையை பார்த்த வேந்தன் அவள் சேர்ந்து 6 மாதத்திற்க்குள்ளே அவளையும் இதில் பங்குதாரராக சேர்த்து கொண்டான்.இப்படிதான் V4 பில்டர்ஸ் உருவானது. . ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து தனது மதிப்பெண் அடிப்படையில் பெரிய கல்லூரியில் படித்து கொண்டிருந்த அவள் மேல் வேந்தனுக்கு தனி பாசம் உண்டு.அவள் எது கேட்டாலும் செய்து கொடுப்பான்.

சிறிது நேரம் வேலை பார்த்து கொண்டிருந்தவர்கள் “சரி வேந்தா நேரமாகிடுச்சு …நான் ஆபிஸ் கிளம்பறேன்…சாயந்திரம் நேரமே வந்தறேன்….டிம்பெர்ஸ் பத்தி அப்போ டிஸ்கஸ் பண்ணலாம் “என சொல்லி விட்டு கிளம்பினான் வெற்றி.

“வெற்றி  என வேந்தன் அழைக்க …திரும்பி பார்க்க  இதை விபீஷ்கிட்ட கொடு….பாவம் பசி தாங்க மாட்டான்……நான் கொடுத்தேன்னு கொடுக்காத…அப்புறம் அவன் இந்த தப்பை தொடர்ந்து செய்வான்” என ஒரு டிபன் பாக்ஸ் கொடுக்க…சிரித்து கொண்டே அதே வாங்கியவன் “நீ எவ்ளோ சொன்னாலும் அவன் திருந்த போறதில்லை.நீயும் இதை நிறுத்த போறதில்லை” என சொல்லிவிட்டு சென்றான்.

வெற்றி விபீஷின்  இருக்கைக்கு வர உடனே விபீஷ் “டேய் வர வர இந்த விருமாண்டி அராஜகம்  தாங்க முடியல…எனக்கு பசிக்குது……இவன் மட்டும் நல்ல சாப்பிட்டான்”  என கோபமாக சொல்லிவிட்டு அவன் முகத்தை பாவமாக பார்க்க

“இதை காலையில லேட்டா எழுந்திரிக்கும்போது யோசிச்சிருக்கனும்….இந்தா சாப்பிடு” என டிபன் பாக்ஸ்சை  வெற்றி அவன் முன் நீட்ட ..



DO NOT COPY

**“ஒ நீ வாங்கிட்டு வந்திட்டியா ...தேங்க்ஸ் நண்பா” என்றவாறே வேக வேகமாக சாப்பிட்டான் விபீஷ்,**

**உன்னை சரியா புரிஞ்சு வச்சிருகாண்டா அவன் என மனதில் நினைத்தபடி ...சரிடா நான் கிளம்பறேன் என சொல்லிவிட்டு கிளம்பினான் வெற்றி.**

**எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து**

**நட்பு என்னும் கூட்டில்**

**ஒன்றாய் இணைந்து**

**ஓர் உயிராய் வாழும்**

**இவர்கள் இதை**

**இறுதி வரை தொடர்வார்களா ?????????**

## அத்தியாயம் 2

**காலை எழுந்ததில் இருந்தே மனதில் ஏதோ இனம் புரியாத ஒரு சந்தோசம் குடிகொள்ள அந்த புன்னகையுடன் அலுவலகத்திற்குள் நுழைந்தான் வெற்றி.**

**உள்ளே நுழைந்ததும் “வாழ்த்துக்கள் வெற்றி” என கோரசாக நண்பர்கள் குரல் எழுப்ப**

**திடீரென வந்த சத்தத்தில் ஒன்றும் புரியாமல் வெற்றி விகித்து போய் நிற்க**

**“கங்கிராட்ஸ் வெற்றி!!!!!!!” என அந்த நிறுவனத்தின் MD அவனை பாராட்டி கொண்டே அருகில் வந்தார்.**

**"என்ன சார்...எதுக்கு இந்த வாழ்த்துக்கள் எல்லாம்...எனக்கு ஒன்றும் புரியவில்லை?" என அவன் புரியாமல் கேட்க**

**"உன்னோடSTRUCTURAL DRAWINGS நம்ம ஹெட்ஆபிஸ்க்கு அனுப்பிருந்தோம் இல்லயா ...அது அவங்களுக்கு ரொம்ப பிடிச்சு போயிடுச்சாம்.அவங்களோட ஒரு பெரிய மால் ப்ராஜெக்ட் ஒன்ன நமக்கு கொடுத்திருக்காங்க ...அது சம்பந்தமா உன்னை கனடாவுக்கு அனுப்பறாங்க".....என சொல்ல**

**வெற்றி சந்தோசத்தில் திளைத்தவன்...."ரொம்ப நன்றி சார்....நீங்க என் மேல நம்பிக்கை வச்சு என்னோட DRAWING அனுப்பி வைச்சனாலதான் எனக்கு இந்த வாய்ப்பு கிடச்சுது" என தனது நன்றியை அவர்க்கு தெரிவிக்க**

**"உன்னோட திறமைக்கு உனக்கு இது ரொம்ப தாமதம் தான் வெற்றி...சரி சரி...நீ உள்ளே வா...சில டாகிமேன்ட்ஸ்ல கையெழுத்து போடணும்" என சொல்லி விட்டு நகர்ந்தார்.**

**நண்பர்கள் அனைவரும் அவனை சூழ்ந்து வாழ்த்த வெற்றிக்கு தனை அறியாமல் ஒரு பெருமிதம் மனதில் ஏற்பட்டது.இதே உடனே தனது நண்பர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என நினைத்து அலைபேசியை எடுக்க**

**அதற்குள் MDயிடம் இருந்து அழைப்பு வர அவரது அறைக்குள் சென்றான்.**

**"வா வா வெற்றி.....இப்படி உட்கார்.நம்ம அலுவலகத்திற்க்கே உன்னால பெருமை.உன்னோட திறமைக்கு இது அருமையான வாய்ப்பு.மாதம் 2 லட்சம் சம்பளம்.ஆனா 2 வருசத்துக்கு நீ காண்ட்ராக்ட்ல சைன் பண்ணனும்.அங்கிருந்து வர முடியாது.அதையும் நல்லா யோசிச்சுக்கோ" என அவர் சொல்ல**

**ஒரு நிமிடம் யோசித்தவன் பின்னர் "பரவாயில்லை சார்.2 வருஷம் தான ...சீக்கிரம் ஓடிடும்.நான் இதை ஒத்துகிறேன் சார்.எங்க கையெழுத்து போடணும் சொல்லுங்க போடுகிறேன்" என**



DO NOT COPY

**மகிழ்ச்சியுடன் கூறியவாறே கையெழுத்து இட்டான்.அது அவன் தலையெழுத்தை மாற்ற போகிறது என்பதை அப்போது அவன் உணரவில்லை.**

**“எப்ப சார் போகனும்” என வெற்றி கேட்க**

**“அடுத்த வாரம் வெற்றி.விசா ஏற்பாடு எல்லாம் கம்பெனி பார்த்துக்கும்.நீங்க இன்றிலிருந்தே அதற்கான மற்ற ஏற்பாடுகளை கவனிங்க” என சொல்ல சந்தோசத்துடன் ஒத்து கொண்டான் வெற்றி.**

**“அப்புறம் வெற்றி” என மறுபடியும் அவர் அழைக்க**

**அவன் திரும்பி பார்க்க**

**“நீங்க இதுல கையெழுத்து போட்டுட்டிங்க .....இனி இதுல இருந்து பின் வாங்க முடியாது.எவ்வளவு அவசரமா இருந்தாலும் அந்த ப்ராஜெக்ட் முடிச்சுட்டு தான் வரணும்” என்றார்.**

**“ok சார்...எனக்கு ஒன்றும் பிரச்சனை இல்லை.நீங்கள் என்னை நம்பி பண்ணலாம்” என மன நிறைவுடன் சொல்லி விட்டு வெளியே வந்தான்.**

**அங்குள்ள நண்பர்கள் அனைவரிடமும் விடை பெற்று கொண்டு V4பில்டர்ஸ் அலுவலகம் நோக்கி நடந்தான்.**

**மனதில் கற்பனைகள் கட்டவிழிந்து ஓடியது .**

**மனதிற்குள்ளே புதைத்து**

**வைத்திருந்த ஆசைகள்**

**மடை திறந்த வெள்ளம் போல்**

**வெளியே ஓடிவர**

**தடுப்பானைகள் ஏதும்**

**இல்லா சந்தோசத்தில்**

**எதிர்காகாலம் ஏகாந்தமாய் தெரிய**

**நெஞ்சம் நிறைந்த நினைவோடு**



DO NOT COPY

நண்பர்கள் முன் நின்றான் வெற்றி.

வேலைக்கு சென்றவன் உடனே திரும்பி வந்ததை பார்த்த வேந்தன் யோசனையுடன் முகத்தை சுருக்க

அதற்குள் வினு “என்ன சார் ஆபிஸ் நேரத்தில் இங்க வரமாட்டிங்க ...இன்னைக்கு வந்து இருக்கீங்க ...ஏதாவது முக்கியமான விஷியமா” என கேட்க

உடனே வெற்றி “சொல்றேன்...சொல்றேன் என்றவன் எங்கே விபீஷ் காணோம்?.அவனும் வரட்டும் சொல்றேன்” என்றான்.

அவனது இந்த நிதானமான பதில் அவசரம் ஏதும் இல்லை என்பதை உணர்த்த வேந்தனும் ஏதும் சொல்லாமல் வேலையில் மூழ்க

அதற்க்குள் தனது மேஜைக்கு சென்று பாஸ்போர்ட் சம்பந்தமான விபரங்களை தேடி கொண்டிருந்தான் வெற்றி..

“இச்சே...வர வர இந்த திருச்சி டன்ஜன் சிட்டி ஆகிடுச்சு.எங்க போனாலும் ஏகப்பட்ட ட்ராபிக்..இந்த ட்ராபிக் சிக்னல்தான் வைக்கிறாங்கலே...ஒரு லேடீஸ் காலேஜ்பக்கம்,ஒரு தியோட்டர் பக்கம் வைக்க மாட்டங்க...அட வெயிட் பண்ற நேரத்தை உபயோகமா செலவளிகலாம்.இதை எல்லாம் முதல்ல மந்திரிகிட்ட மனுவா எழுதி போடணும்” என சொல்லி கொண்டே உள்ளே வந்தான் நம்ம விபீஷ்.

நேராக வேந்தனிடம் சென்றவன் “தில்லை நகர் பில்டிங் பேஸ் மட்டத்தோட நிற்க்குதுபா...DRAWING ஏதோ மாத்தனுமா...அதுநாள் வெயிட் பண்ண சொல்றார்.அப்புறம் அந்த டீச்சர்ஸ் காலனி வீடு வெள்ளி கிழமை கான்கிரீட் .அதற்கான வேலையே பார்த்திடு.சமயபுரத்துல இருக்க சைட்டுக்கு போக முடியல நண்பா ...மதியம் போயிட்டு வந்தடறேன் .இதற்கே நேரம் சரியாக இருந்தது” என தனக்கு கொடுத்த வேலையை முடித்து விட்டதை அவனிடம் தெரிவித்து விட்டு தனது இருக்கையில் வந்து அமர்ந்தான் விபீஷ்.

அருகில் இருக்கும் வினுவை பார்க்க அவள் வேடிக்கை பார்த்து கொண்டிருக்க "என்ன வினு அங்க என்ன வேடிக்கை பார்த்திட்டு இருக்க" என சொல்லி கொண்டே திரும்ப

அங்கு வெற்றி அமர்ந்திருக்க

"டேய் KK நீ எங்கடா இங்க இருக்க...ஆபிஸ் லீவா ....என்ன உங்க சொட்டதலை மேனேஜர் மண்டைய போட்டானா...இல்ல உன்னோட கடமை உணர்ச்சியை பார்த்து நீ இங்க இருக்கிற மத்தவங்களையும் சேர்த்து கெடுத்திடுவேனு சொல்லி ஆபிஸ்ல இருக்கிற எல்லாரும் சேர்ந்து உன்னை வேலையை விட்டு துரத்திட்டாங்களா...நான் இதே முன்னடியே எதிர்பார்த்தேன்...ஆனா இப்பவாவது அவனுகளுக்கு புரிஞ்சுதே" என சிரித்து கொண்டே சொன்னான்.

"விபீஷ் கொஞ்சம் சும்மா இருடா...வெற்றி அதான் விபீஷ் வந்துட்டான்ல இப்போ சொல்லு ..என்ன விஷயம்..." என வேந்தன் கேட்டான்.

உடனே வெற்றி "ஆமாண்டா விபீஷ் சொன்ன மாதிரி என்னை இந்த லெட்டர் கொடுத்து ஆபிஸ்ல இருந்து துரத்திட்டாங்க" என முகத்தை சோகமாக வைத்து கொண்டு சொல்ல

உடனே வேந்தன் "என்னடா...என்ன நடந்தது...ஏதாவது பிரச்சனயா...எதா இருந்தாலும் சொல்லு...முகத்தை பார்த்தா அப்படி தெரியலியே" என வேந்தன் வேகமாக கேட்க

"என்ன சார் என்ன ஆச்சு " என வினுவும் பதற

உடனே விபீஷ் "என்னடா இது வரைக்கும் நல்லாதான இருந்த....ஏதாவது பிரச்சனயா ...நீ வேற முழுசா எதையும் வெளியே சொல்ல மாட்டியே..... என்னாச்சு" என கேட்க

"எப்படி சொல்றது...என்னை மன்னிச்சுடுங்க ...இப்படி நடக்குமுனு நானே எதிர்பார்கலை...என்ன பண்றது விதி ரொம்ப விளையாடிடுச்சு" என மேலும் அவன் பாவமாக சொல்ல

"என்னடா நடத்துது...உண்மைய சொல்லித்தொலை" என வேந்தன் எகிற

**உடனே விபீஷ் வெற்றியின் காதருக சென்று .".நண்பா விருமாண்டி மலையேறிட்டான்...சீக்கிரம் சொல்லிடு...இல்ல மலை எறக்கிறதுக்கு நம்ம மொட்டை அடிச்சாகனும் சொல்லிட்டேன்" என முனக**

**வெற்றி அமைதியாக தன் கையில் இருந்த கவரை வேந்தனிடம் நீட்ட**

**வேந்தனுக்கு இப்போது  லேசான ஒரு பயம் ஏற்பட அந்த கவரை பிரிகாமலேயே**

**"வெற்றி இதுல என்ன இருக்கு...பிரச்சனை ஏதும் இல்லயே" என கேட்கும்போதே குரல் உள்ளே செல்ல**

**ஏனனெனில் எப்போதும் விபீஷ் தான் இந்த மாதிரி விளையாடுவான்.இப்போது வெற்றி இது போல் சொன்னதும் எதோ வில்லங்கம் இருப்பது போல் வேந்தன் மனதிற்கு தோன்றியது. 1**

**மெதுவாக கவரை பிரித்து படிக்க**

**அதுவரை முகத்தை சோகமாக வைத்திருந்த வெற்றி "என்ன நண்பா ...நீ என்ன நினைக்கிற" என்று கேட்க**

**அந்த பேப்பரரில் இருந்து  தலையை மேலே தூக்கியவன் ...ஒரு நிமிடம் அனைவரையும் பார்த்தவன் "டேய் மாப்பிள்ளை கலக்கிட்டடா ...என கத்திகொண்டே அவனை இழுத்து அணைத்தவன் ...அருமையான வாய்ப்பு இது...மிஸ் பண்ணாத "என கூறி சந்தோசத்தில் திளைக்க**

**அதற்க்குள் அதை படித்த விபீஷும் "காங்கிராட்ஸ் நண்பா .....கனடா போகபோற ....நல்ல வாய்ப்பு" என பாராட்ட....வினுவும் அவனுக்கு வாழ்த்து சொல்ல அந்த இடமே மகிழ்ச்சி கடலில் மூழ்கி தத்தளித்தது.**

**பின்னர் நண்பர்கள் இதை பற்றி சிறிது நேரம் பேசிகொண்டிருந்தனர்.அப்போது வெற்றி 2 வருடத்திற்கு வரமுடியாது என சொல்ல**

**இதை கேட்டதும் வேந்தன் முகம் சுருங்கியது .**

**"ஏன் வேந்தா என்ன யோசனை" என வெற்றி கேட்க**

**“இல்லை 2 வருடம் காண்ட்ராக்ட் ரொம்ப அதிகமா தெரியுது.எதாவது அவசரம்னா என்ன பண்ணுவ” என வேந்தன் தயங்க**

**உடனே வெற்றி “அது ஒன்னும் பிரச்சனை இல்லை.நீங்க இருக்கீங்க....எல்லாம் பார்த்துக்குவிங்கிர நம்பிக்கை எனக்கு இருக்குது...அதுனாலதான் நான் உடனே சரின்னு சொல்லி கையெழுத்து போட்டுட்டேன்” என சிரித்து கொண்டே சொன்னான்.**

**உடனே விபீஷும் “அது ஒன்னும் பிரச்சனை இல்லை.இப்பதான் VC இருக்குல்ல...நேர்ல இருந்தா கூட அப்படி பேசிக்கமாட்டோம்.டெக்னாலஜி இருக்கும்போது நமக்கு என்ன கவலை என சொல்ல” அனைவரும் திருப்தி அடைந்தனர்.**

**“சரி  நண்பா....அடுத்தது என்ன பண்ணலாம்...இதை கொண்டாடி ஆகணும்.அதுனால இன்னைக்கு ஆபிஸ் லீவ்” என விபீஷ் உற்சாகமாக சொல்ல**

**எதிர்புறத்தில் இருந்து எந்த விதமான ரியாகஷ்னும் வராமல் இருக்க மூன்று  பேரையும் பார்த்தவான்.....எல்லாம் ஒரே கட்சியா ...நடத்துங்க...நடத்துங்க....ம்ம்ம் சென்னை எக்ஸ்பிரஸ் ரிலிஸ்னு சொன்னாங்க....ம்ம்மம  திவியாபடுகோன்வேற நான் ரசிகர் ஷோக்கு வந்தே ஆகணும்னு டுவிட்டேர்ல சொல்லிருந்தா .......போலாம்னு நினைச்சேன்... என புலம்பி கொண்டே தனது இருக்கையில் அமர்ந்தான்.**

**பின்னர் வெற்றி வேந்தனிடம் திரும்பி  “வேந்தா இந்த சான்ஸ் நம்மளோட பிஸினெஸ்க்கு பெரிய சப்போர்ட்டா இருக்க போகுது.கனடாக்கு  போயிட்டு வந்ததுக்கு அப்புறம் எல்லாரும் முழுசா இந்த பிஸினெஸ்ல இறங்கிடலாம். அங்க நமக்கு தேவையான அட்வான்ஸ் டெக்னாலஜி எல்லாம் நான் பார்த்திட்டு வரேன்.இங்க அதை நம்ம அதை யூஸ் பண்ணிக்கலாம்  அதையும் யோசிச்சுதான் இந்த முடிவு எடுத்தேன்” என சொல்ல நண்பர்கள் இருவருக்கும் அளவில்லா ஆனந்தத்துடன் அவன் நினைத்தது நல்ல படியாக முடிய மனதார வாழ்த்தினர்.**

**பின்னர் வேந்தன் “ வெற்றி உன் வீட்டிற்க்கு சொல்லிட்டியா” என கேட்க**

**“இன்னும் இல்லை.அங்கு அலைபேசி கிடையாது.BSNL பாதி நாள் வேலை செய்யாது.அப்பாவா பார்த்து என்னை கூப்பிட்டாதான்.இன்னைக்கு கூப்பிட்ர நாள் தான் அப்போ சொல்லிடறேன்” என சொன்னான் வெற்றி.**

**நாட்கள் ஓட ஊருக்கு போவதற்கு தேவையானதை அனைத்தும் ரெடி பண்ணி கொண்டிருந்தார்கள் நண்பர்கள். வெற்றியும் தனது பெற்றோர்கள் நண்பர்கள் அனைவரிடமும் விபரங்களை சொல்லி வாழ்த்துகளை பெற்று கொண்டான்.**

**ஊருக்கு கிளம்புவதற்கு இன்னும் 3 நாட்கள் இருக்கும் நிலையில் விசா விஷயமாக வெற்றி வெளியே கிளம்பி கொண்டிருக்க,விபீஷ் மார்பிள் கல் எடுப்பது சம்பந்தமாக ராஜஸ்தான் சென்றிருக்க, வேந்தன் எப்போது போல் அலுவலகம் கிளம்பி கொண்டிருந்தான்.**

**அலைபேசி ஒலி கேட்டு அதை எடுத்த வெற்றி அதை ஆன் பண்ண அதோடு தொடர்பு துண்டிக்கப்பட**

**“என்ன புது நம்பர் வருது..........அதும் கட் ஆகிடுச்சே” என தனக்கு தானே சொல்லி கொண்டு மறுபடியும் அந்த எண்ணிற்கு அவன் தொடர்பு கொள்ள அது தொடர்பு எல்லைக்கு அப்பாற்பட்டது என்றே பதில் வந்தது.**

**எதோ ஒன்று அவனுக்கு மனதில் பட,அது அவன் முகத்தில் காட்டி கொடுக்க அதை கவனித்த வேந்தன்**

**“டேய் ஒன்னும் இருக்காது....நீ கிளம்பறையில ...அதுனால உனக்கு தெரிஞ்சவங்க உன்கிட்ட பேசணும்னு ஆசைப்பட்டிருப்பாங்க...அதான்...கொஞ்சம் பொறுமையா இரு...மறுபடியும் கூப்பிடுவாங்க என சொல்லி விட்டு...முதல்ல வந்து சாப்பிடு வா...அங்க போனா இந்த சாப்பாடு எல்லாம் கிடைக்காது” என சிரித்துகொன்டே சொல்லிவிட்டு அவனை உணவு மேஜைக்கு இழுத்து சென்றான்.**

**அவன் சொன்னதை கேட்டு கொஞ்சம் இயல்பு நிலைக்கு வந்த வெற்றி..”.ஆமா வேந்தா...சாப்பாடு பெரும் பிரச்சனையாம் சொன்னாங்க...அப்புறம் நீயும் இங்க கவனமா இரு...நான் வரும்**



DO NOT COPY

வரைக்கும் விபீஷ் உன்கூட இருக்கட்டும்.அப்போதான் அவன் வால்தனம் கொஞ்சம் அடங்கும்.அப்புறம் வேந்தா அவன் பேசுவானே தவிர குழந்தை மனசு....ரொம்ப திட்டிடாத" என சொல்ல

"ஏண்டா என்னை பார்த்தா என்ன சண்டைக்காரன் மாதிரியா இருக்கு.எனக்கும் அவனை பத்தி தெரியும் வெற்றி.நீ எதுக்கும் கவலைபடாத...நாங்க இங்க பார்த்துக்கிறோம்.நீ அங்க உன்னோட வேலையே சிறப்ப முடிச்சுட்டு வா என சொல்லி விட்டு......... வரும்போது ஒரே ஆளா வாடா" என சொல்லி விட்டு வேந்தன்  அவனை ஓரகண்ணில் பார்க்க

"ஏன் நண்பா ...நீ எப்போ இப்படி மாறின ....இப்படி எல்லாம் பேசுவியா நீ என சொன்னவன்  கவலைபடாதே ...உங்க அனுமதி இல்லாம என் வாழ்கையில் ஏதும் நடக்காது" என சிரித்து கொண்டே சொன்னான் வெற்றி.

"எல்லாம் இந்த விபீஷோட சேர்ந்து தான்...சகவாச தோஷம்னு சொல்லுவாங்கல்ல...அதான்.....நீ என்னடானா அவனை நல்ல பார்த்துக்கங்கனு எங்கிட்ட சொல்ற...இத அவன் கிட்ட சொல்லிட்டு போ" என சொல்லி வேந்தன் சிரிக்க

"ஹப்பா நண்பா ...இன்னைக்கு என்ன இப்படி போட்டு தாக்கற....நீ இவ்ளோ பெரிய வார்த்தை பேசி நானே இன்னைக்குதான் பார்கிறேன்....ரொம்ப சந்தோசமா இருக்குடா....அந்த கேசரி இன்னும் கொஞ்சம் வை" என சொல்லி கொண்டே கேசரியை தட்டில் வைத்தான்.

அதற்க்குள் அலைபேசி மீண்டும் ஒலிக்க

"அடாடா இதோட தொல்லை தாங்கமுடியல என சொல்லி கொண்டே ஆன் செய்து காதில் வைத்தவன் வாயில் இருந்த கேசரி கீழே விழ அப்படியே சுவரோடு சாய்ந்தவன்...என்ன ஆச்சு!!!!!!!!!!! ...ஒன்னும் பிரச்சனை இல்லயே!!!!!!!!!!!!" என  பதற

அவனை பார்த்து கொண்டிருந்த வேந்தன் வேகமாக வந்து என்ன ஆச்சு வெற்றி.......என்ன ஆச்சு!!!!!!!!!!!!.... என கேட்க

**அவன் திகிலடைந்தது போல் நிற்க அலைபேசிய எடுத்து காதில் வைத்தவன் அது தொடர்பில்லாமல் இருக்க**

**வேந்தனின் கற்பனை குதிரையோ கடிவாளம் இல்லாமல் ஓடியது.**

**சந்தோஷ நினைவுகளில்**

**மனம் சதிராட்டம் போட**

**பார்க்கும் பொருளெல்லாம்**

**பல வண்ணங்களாய் தெரிய**

**இடையில் ஒரு செய்தி**

**இடியென தாக்க**

**அடிபட்ட மனமோ**

**அதிர்ந்து போய் நிற்க**

**இடையில் நின்றவன்**

**விடை தெரியாமல் தவித்தானே!!!!!!!!!! 2**

**அத்தியாயம் -3**

**செய்தி கேட்டவனோ சிலையென நிற்க ,விபரம் தெரியாமல் வேந்தனோ விழிக்க ,எண்ணங்கள் அவனை மீறி எங்கெங்கோ சென்றது.**

**“டேய் என்னடா …யாருடா………யாருக்காவது ஆபத்தா…….அச்சோ …நம்ம விபீஷ்,ராஜஸ்தான்……….இருக்காது….அப்போ கனடா விஷயம்……. சொல்லி தொலையேன்டா “என வேந்தன் கத்தி கொண்டே அவனை பிடித்து உலுக்க**

“அப்பாவுக்கு ரொம்ப சீரியசாம்.உடனே புறப்பட்டு வர சொல்றாங்க ....எனக்கு ரொம்ப பயமா இருக்குடா...போன்ல பேசும்போது நல்லாதான பேசினார்.மனசு படபடனு அடிச்சுகுது” என அவன் பிதற்ற

ஒரு நிமிடம் நின்று நிதானத்திற்கு வந்த வேந்தன்,அவன் கைகளை பிடித்து கொண்டு “கவலைபடதடா.....அவருக்கு எதும் ஆகிருக்காது.இங்க ஹாஸ்பிட்டலில் வச்சு நம்ம பார்த்துக்கலாம்.நீ உடனே கிளம்பு “என அவனுக்கு தைரியம் சொல்லி அவனை கிளப்பினான்.

அவன் கிளம்பி வெளியே செல்ல,அவனையே பார்த்து கொண்டிருந்த வேந்தன் திடிரென” நானும் உன்கூட வரேன் வெற்றி” என சொல்ல

அதை கேட்டதும் ஒரு திருப்தி வெற்றியின் முகத்தில் வந்து மறைய,அதை உணர்ந்து கொண்ட வேந்தனும் வேகமாக கிளம்பினான்.எந்த ஒரு மனிதனும் சந்தோசத்தை பகிர்ந்து கொள்ள துணை தேடுகிறானே இல்லியோ,துன்பம் வரும்போது துணை தேடுவது இயல்பு.அந்த துணை நண்பனாக இருந்தால் அதை விட சிறப்பு ஏது.இருவரும் காரில் கிளம்பினர்.

வெற்றியோட ஊர் ஈரோடுக்கு அருகில் வலையாபாளையம் என்ற குக்கிராமம்.திருச்சியில் இருந்து செல்வதற்கு 5 மணி நேரமாகும்.பயணம் முழுவதும் படபடக்கும் மனதோடு ,வேதனையை வெளியே காட்டாமல் வெற்றி அமைதியாக இருக்க அவனது எண்ணத்தை புரிந்து கொண்ட வேந்தனும் அவனை தொந்தரவு செய்யாமல் அமைதியாக வந்தான்.

ஊரின் எல்லை வந்ததும் கார் நின்று விட வேந்தன் வெற்றியை பார்க்க “இதற்க்கு மேல் காரில் செல்ல முடியாது.2 சக்கர வாகனம் அல்லது நடந்து தான் செல்ல வேண்டும்” என்றான் வெற்றி.

இந்த காலத்துல இப்படி ஒரு கிராமமா என வேந்தன் வியக்க

“நாங்க தோட்டத்துக்குள்ள இருக்கோம் வேந்தா....அங்க ரோடு வசதி கிடையாது.அப்பா கிட்ட வண்டி இருக்கு.நான் வரும்போது அவர் வந்திடுவார்” என அந்த வேதனையிலும் அவனுக்கு விளக்கம் கொடுத்தான் வெற்றி.

வேந்தன் முதன் முறையாக இப்போது தான் இங்கு வருகிறான்.வெற்றி மட்டுமே அவனுக்கு தெரியும்.மற்றபடி அவனுடைய குடும்பத்தினர் யாரையும் அவனுக்கு தெரியாது.அவனும் தனியாக இருந்ததால் அதை பற்றி அவன் அறிந்து கொள்ள முற்படவில்லை.வெற்றியும் வீடு விஷயங்கள் எதையும் நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டதில்லை.எனவே அவனுக்கு விளக்கம் கொடுத்தான் வெற்றி.

சரி...சரி...இறங்கு என சொல்லி கொண்டே இருவரும் காரை விட்டு கீழே இறங்க

அதற்க்கு காத்திருந்தார் போல் “டேய்ய்ய்ய்.......மாப்பிள்ளை வேலு வந்திட்டியா” என கத்தி கொண்டே அவன் வயதில் ஒருவன் வேகமாக ஓடி வர

“டேய் மாசி என்னாச்சுடா .அப்பாவுக்கு....பயபட்றமாதிரி ஏதும் இல்லயே” என பதட்டத்துடன் கேட்க

“ஒண்ணுமில்லடா....வா வீட்ல போய் எல்லாம் பேசிக்கிலாம்.....நேரமாகிடுச்சு....”.என அவன் முகத்தை பார்க்காமலே அவன் கையை பிடித்து கொண்டு நடந்தான் மாசி.

“வேந்தா வாடா” என வெற்றி அழைக்க

நிமிர்ந்து பார்த்த மாசி ...யார் என்று பார்வையால் கேட்க....

உடனே வெற்றி வெற்றி “இவன் என் நண்பன்.திருச்சியில் இருவரும் ஒன்றாக தான் தங்கி இருக்கிறோம் என சொல்லிவிட்டு இரண்டு வண்டி இருக்கா என கேட்க

ம்ம்ம்ம்.... என்று தலைஆட்டிய மாசி அவர்களை அழைத்து கொண்டு வீடு நோக்கி சென்றான்.

வண்டி உள்ளே நுழைந்ததும் வேலு...வேலு ஊரில் அவனை வேலு என்று தான் அழைப்பார்கள்.”வேலு....வேலு ....நம்மை எல்லாம் ஏமாத்திட்டு போயட்டங்கடா” என கத்தி கொண்டே ஒரு வயதான அம்மா ஓடி வர



DO NOT COPY

**கீழே இறங்கியவன் வீட்டில் நிறைய பேர் நிற்க,விவரம் தெரிந்து கொள்ளும் வேகத்தில் பக்கத்தில் இருக்கும் மாசியின் சட்டையை பிடித்த வெற்றி.... டேய் என்னடா...என்ன நடந்துச்சு என கத்த**

**அதற்குள் அங்கு வந்த ஒரு பெரியவர் "எல்லாம் முடிஞ்சு போய்டுச்சு வேலு....நெஞ்சு வலிக்குதுன்னு சொன்னான்.நம்ம மாசி தோட்டத்துல இருந்து வரதுக்குள்ள எல்லாம் முடிஞ்சு போச்சு "என சொல்லி அழ**

**கேட்டதும் அப்படியே சிலையாகி நின்றவன்..... வேந்தன் அவனை உலுக்கிய பிறகே நிதானத்திற்கு வந்தான்.**

**அம்மா எங்க மாமா என வேகமாக கேட்க...."அப்பா இறந்திட்டாங்கனு தெரிஞ்ச உடனே அந்த அதிர்ச்சியில் அவளும் போய்ட்டா" என அந்த பெரியவர் கதற**

**அடுத்தடுத்த அதிர்ச்சியில் அப்படியே தடுமாறி வெற்றி கீழே விழ அவனை தாங்கி பிடித்த வேந்தன் அவனை அமரவைத்து சிறிது நேரம் தன் தோழோடு சாய்த்து கொண்டிருந்தவன் சுற்றும் எல்லாம் பார்வையால் அளந்தான்.பின்னர் மனதை திடபடுத்தி கொண்டு**

**வெற்றி சாரிடா....ஆனா நீயே இப்படி இருந்தா எப்படி?...பாரு எல்லாரும் உன் முகத்தை தான் பார்த்திட்டு இருக்காங்க... அடுத்தது என்ன பண்ணனும்னு சொல்லு என சொல்ல**

**அவன் திரும்பி வேந்தனை ஒரு பார்வை பார்க்க....அந்த பார்வையில் தெரிந்தது என்ன,சோகமா,இல்லை ஏமாற்றமா,இல்லை என் நிலைமையில் நீ இருந்து பார் என்ற வேதனையா என்று தெரியவில்லை .**

**ஆனால் வேந்தனுக்கு அது புரிந்தது....என்ன சொன்னால் தன் நண்பன் இந்த அதிர்ச்சியில் இருந்து வெளியே வருவான் என தெரிந்தே சொன்னான்.இந்த இடத்தில் அவன் தடுமாறினால் எல்லாம் தடுமாறி விடும் என நினைத்தான்.எனவே அடுத்தது ஆக வேண்டிய வேலையை அவனுக்கு நினைவூட்டினான்.**

DO NOT COPY

வேந்தன் சிறு வயதில் இருந்தே ஆசிரமத்தில் வளர்ந்ததால் எதிலும் அதிக பற்று வைக்க மாட்டான்.கிடைத்தால் நல்லது.இல்லையெனில் தவறு இல்லை என நினைத்து கொண்டு போய் விடுவான்.அதனால் அவனால் இப்போது மூன்றாவது மனிதனின் பார்வையில் இருந்து எதையும் யோசிக்க முடிந்தது.

அதற்க்குள் கூட்டத்தில் ஒருவர் "நேரமாச்சு...அதான் வேலு வந்திடுச்சுல...காரியத்தை முடிச்சுடலாம்" என குரல் கொடுக்க

"ம்ம்ம் என்று தலையாட்டிய வெற்றி ... பாப்பா எங்க...அச்சோ "என சொல்லி கொண்டே வேகமாக உள்ளே ஓட

அதற்குள் அவனை பிடித்து இழுத்த இருவர் "அந்த பொண்ணு காலையில இருந்து அழுது மயக்கம் ஆகிடுச்சு.நம்ம ராக்காயி அத்தை வீட்ல தான் இருக்கா...கண்ணே முழிக்கல இன்னும்" என சொல்ல

நான் அவளே பார்க்கணுமே என சொல்லி கொண்டே வேகமாக அங்கு சென்றவன்.அங்கு மயக்கத்தில் தனது உடன்பிறப்பு சுருண்டு போய் கிடக்க பார்த்த வெற்றியின் மனதிலோ ரத்தம் வடிந்தது.பொங்கி வந்த ஆத்திரத்தை மனதில் அடக்கி கொண்டு அவள் தலையை வருடி கொடுத்தவன் பின்னர் அவளை எழுப்ப அது அவள் மூளைக்கு எட்டினாலும் உடல் ஒத்துழைக்க மறுக்க அசைவின்றி கிடந்தாள்.

அதற்குள் ஒரு பெரியவர் "நேரமாகிறது" என அவசரபடுத்த

அவளை அங்கே படுக்க வைத்து விட்டு மீண்டும் தன் தாய் தந்தையை பார்க்க வந்தான்.

வேந்தனுக்கோ இங்கு நடப்பவை அனைத்தும் புதிதாகதெரிய வேடிக்கை பார்த்து கொண்டு அமர்ந்திருந்தான்.

பின்னர் ஒரு வழியாக எல்லா காரியமும் முடித்து விட்டு வீட்டிற்க்கு வந்தனர் அனைவரும்.

வீட்டிறக்குள் வந்த வெற்றி... "பாப்பா எங்கே"? என கேட்க

DO NOT COPY

**எழுந்தவள் சிறிது நேரம் அழுது கொண்டே இருந்தாள்.மீண்டும் மயங்கி விழுந்து விட்டாள்.அதனால் அவள் அங்கயே இருக்கட்டும் என ஒரு பெரியம்மா சொல்ல**

**சரி என தலை ஆட்டிவிட்டு திரும்பியவன் அப்போது தான் வேந்தன் தனியாக இருப்பதை கவனித்தான் வெற்றி.**

**அவனிடம் சென்று அமர்ந்தவன் அவன் முகத்தை பார்க்க**

**அவனை பார்த்த உடனே புரிந்து கொண்ட வேந்தன்....”அழுதிடு வெற்றி...ரொம்ப அடக்காத .....”.என சொல்ல**

**முதன் முதலாக வெற்றின் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக கொட்டியது.”என்னால இத நம்பவே முடியலடா....போன்ல கூட நல்ல தான் பேசினார்.நான் கனடா போறேன்னு ஒத்துகிட்டதே இவங்கள சந்தோசமா வச்சுக்கனும்னு தான்.ஆனா இப்போ நானும் என் தங்கையும் அனாதை ஆகிட்டோமே” என கதற**

**அனாதை என்ற வார்த்தையை கேட்ட உடன் வேந்தன் உள்ளம் பதற ...”ஏன்டா இப்படி பேசற ......நாங்க எல்லாம் இருக்கோம் உனக்கு.இனி இப்படி பேசாதே” என அவனுக்கு ஆறுதல் கூறினான்.**

**அந்த சமயம் ஒரு பெரிய மனிதர் அவனருகில் வந்து அமர்ந்து அவன் தோளை தொட**

**நிமிர்ந்து பார்த்தவன் “என்ன சித்தப்பா” என்று கேட்டான்.**

**“கொஞ்சம் வெளியே வா”...... என அழைத்து சென்றவர் அங்கு 5 பேர் நின்று கொண்டிருந்தனர்.**

**வேந்தனும் வெற்றின் பின்னால் நிற்க ,அவர் “இந்த தம்பி “என தயங்க**

**“இருக்கட்டும் சித்தப்பா என் நண்பன் தான்” என்றான் வெற்றி.**

**பின்னர் அவர்கள் அவனிடம் பத்திரங்களை நீட்ட அது வெற்றியின் தந்தை அவர்களிடம் கடன் வாங்கியதற்கான அத்தாட்சி பத்திரம்.**

**அதை பார்த்த வெற்றி ஏதும் பேசாமல் “இப்போ நான் என்ன செய்யணும்” என கேட்க**



DO NOT COPY

அதற்குள் வேந்தன் “என்னங்க இது....இப்பதான அவங்க இறந்தாங்க....அதுக்குள்ளே பணத்திற்கு வந்து நிக்கிறிங்க” என கோபமாக கேட்க

உடனே ஒருவர் “தம்பி நீங்க கொஞ்சம் சும்மா இருங்க....நாங்க சண்டை போட  வரல....ஆனால் பணம் வாங்கினவங்க இறந்திட்டாங்க...அதற்க்கு யார் பொறுப்பு என கேட்க தான் வந்தோம்” என அமைதியாக சொல்ல வேந்தனும் அதில் நியாயம்  இருக்க அமைதியாக நின்றான்.

உடனே வெற்றி “இதற்கு நான் பொறுப்பு.கண்டிப்பாக உங்க பணம் உங்களுக்கு வந்து சேரும்” என உறுதி கொடுத்த பின் அனைவரும் கலைந்து சென்றனர்.

அதற்குள் அவன் தங்கைக்கு மயக்கம் தெளிந்து விட்டது என ஒருவர் வந்து சொல்ல தங்கையை பார்க்க  வேகமாக ஓடினான் வெற்றி. 2

நடந்து கொண்டிருப்பது எதுவும் வேந்தனுக்கு புரியவில்லை.அமைதியாக நடப்பதை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தான்.அங்கு அனைவரும் ஒவொவொரு வேலையும் இழுத்து போட்டு கொண்டு செய்தது அவன் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. அவன் நிலைமை ஒரு நிமிடம் கண்ணில் தோன்றி மறைந்தது.

தன் தங்கையை பார்த்துவிட்டு அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு அவளை அங்கே இருக்க சொல்லிவிட்டு மீண்டும் வேந்தன் அருகில் வந்து அமர்ந்தான் வெற்றி.

மறுபடியும் ஒருவர் அவன் அருகில் வந்து அமர வெற்றியின் மனமோ திடுக்கிட...இப்ப என்ன பிரச்சனையோ என யோசனை செய்து கொண்டே அவரை பார்த்தவன்

“என்ன அப்புச்சி எதாவது சொல்லனுமா” என்றான் .

ம்ம்ம்ம்....என்று தலையாட்டியவர் சுற்றும் முற்றும் பார்க்க அருகில் வேந்தன் இருப்பதை பார்த்தவர் கொஞ்சம் முகம் சுருக்க

உடனே வேந்தன் “நான் அங்க இருக்கேன்” என அங்கிருந்த கிளம்ப

DO NOT COPY

“இல்லை வேந்தா…நீயும் இரு…அப்புச்சி இவன் என் நண்பன் தான்.ஒன்னும் பிரச்சனை இல்லை…நீங்க என்ன விஷியம் சொல்லுங்க” என்றான்.

“வேலா உன் தங்கச்சியை பத்தி என்ன யோசிச்சு வச்சிருக்க….உங்க அப்பா சொன்னார்.நீ வெளிநாட்டுக்கு போறேன்னு” என கேட்க

அப்போதுதான் இருவருக்குமே நியாபகம் வந்தது.சூழ்நிலையின் நிதர்சனமும் புரிந்தது.வெற்றி அப்படியே அதிர்ச்யில் அமர்ந்திருக்க

“இன்னும் அத பத்தி யோசிக்கவே இல்லைங்க” என வேந்தன் பதில் சொல்ல

அவனை ஒரு பார்வை பார்த்தவர்,அந்த பார்வை நான் உன்னிடம் கேட்கவில்லை எனபது போல் இருக்க

அவரை திரும்பி இவனும் முறைக்க,அதற்குள் “வெற்றி என்ன அப்புச்சி சொன்னிங்க” என மறுபடியும் கேட்டான்.

“இல்ல வேலா பாப்பாவையும் நீ போற ஊருக்கே கூட்டிட்டு போயட்றியா” என அவர் கேட்டார்.

அவளை எப்படி அழைத்து செல்வது என யோசித்தவன் திரும்பி வேந்தனின் முகம் பார்க்க

அவனோ நீயே பேசிக்கோ உங்க அப்புச்சியிடம் என்பது போல் வேறு பக்கம் பார்த்து கொண்டிருக்க

“என்ன அப்புச்சி சொல்றிங்க…. அவளை நான் அங்க எப்படி கூட்டிட்டு போக முடியும். நான் வேலை விஷயமா போறேன் ……..இப்ப என்ன பண்றது…………இங்கவேணா பெரிய ஆத்தா வீட்ல விட்டுடு போகட்டுமா…நாம்ம ஜோதி எல்லாம் இருக்காங்கள….கொஞ்ச நாளைக்கு இங்க இருந்து காலேஜ் போகட்டும்.அதுக்குள்ள நானும் வந்திடுவேன்” என யோசனையாக அவரிடம் கேட்டான்.

“கெட்டது போ….அவ இந்த ஊர்ல இருக்க வேண்டாம்னுள்ள சொல்றேன்.உனக்கு உங்க அப்பா விஷயம் சொல்லலியா….நம்ம பெரிய வீட்டுகாரருக்கு நம்ம பாப்பா மேல ஒரு கண்ணு.அவங்க பேரனுக்கு

**நம்ம பாப்பாவ கேட்டாங்க.ஆனா அவன் போக்கு சரி இல்லைன்னு உங்க அப்பா மாட்டேனு சொல்லிட்டார்.இதுநாள உங்க குடும்பத்து மேல கொஞ்சம் கோபத்துல இருக்காங்க அவங்க....அவங்க கிட்ட உங்க அப்பா கடன் வேற வாங்கி இருக்கார்.இதை காரணமாக வச்சு அவங்க இப்ப  எதாவது பிரச்சனை பண்ணா என்ன பண்றது"அதான் யோசிக்கிறேன்... என  ஒரு குண்டை தூக்கி போட**

**அடி மேல் அடி இடியாக வெற்றின் மீது விழ இதை கேட்டு கொண்டிருந்த வேந்தனுக்கோ தலை சுற்றி போய் விட்டது.இவ்ளோ பிரச்சனை ஒரு சேர வந்தா ஒரு மனிதன் எப்படி சமாளிப்பான்.நினைத்து பார்க்கவே ஆயசாமாக இருக்க தலையை பிடித்து கொண்டு அமைதியாக அமர்ந்திருந்தான்.**

**வெற்றியோ வலையில்  சிக்கிய மீனை போல தவித்து கொண்டிருந்தான்.**

**"இப்போ நான் என்னதான் அப்புச்சி பன்றது" என நொந்து போய் கேட்க**

**"ஒன்னு நீ பாப்பவ எங்க போறியோ அங்க கூட்டிட்டு போ...இல்லை அவளுக்கு கல்யாணத்தை  பண்ணி வச்சுடு" என அவர் சொன்னார்.**

**என்ன ஆஆஅ....... என அதிர்ந்து இருந்து இடத்தை விட்டு எழுந்தவன்...என்ன அப்புச்சி உங்களுக்கு கிறுக்கு எதாவது பிடிச்சுடுச்சா...எந்த இடத்துல உட்கார்ந்து என்ன பேசறிங்க .....எங்க அப்பா அம்மா இறந்து ஒரு  நாள் கூட ஆகல என சொல்ல சொல்ல தொண்டைகமற,அழுகை அவனை அறியாமல் பீறீட்டு கொண்டு வெளியே வர**

**உடனே வேந்தன் அவனை பிடித்து அணைத்து அமர வைத்தவன்,அவன் கைகளை அழுத்தி கொடுக்க,அதன் விளைவு வெற்றி கொஞ்சம் பழைய நிலைக்கு வந்து அவரை நிமிர்ந்து பார்த்தவன் சொல்லுங்க அப்புச்சி....அவ குழந்தை அப்புச்சி  என்றான்.**

**"உன்னோட நிலைமை எனக்கும் புரியுது  வேலா....ஆனா என் உள்மனசு சொல்லுது.நீ அவளை இங்க தனியா விட்டுடு ஊருக்கு போனா அவளுக்கு இங்க பாதுகாப்பு இல்லை சொல்லிபுட்டேன்.அவங்களுக்கு**

**இங்க செல்வமும் இருக்கு...செல்வாக்கும் இருக்கு எத வேணாலும் பண்ணுவாங்க"  என அவர் பயமுறுத்த**

**கண்ணை கட்டி காட்டில் விட்டது போல் இருந்தது வெற்றிக்கு.**

**அதற்குள் வேந்தன் "அதெல்லாம் பிரச்சனை இல்லை ஐயா.அங்க ஹாஸ்டல்ல விட்றோம்.பாதுகாப்பும் இருக்கும்.எங்களுக்கும் ஆள் பலம் இருக்கு" என விபீஷை மனதில் வைத்து கொண்டு சொன்னான் வேந்தன்..**

**"தம்பி விவரம் தெரியாம பேசாதிங்க...இது கிராமம்.இங்க ஒரு பிரச்சனைன்னு வந்திட்டா எல்லாரும் பெரிய வீட்டுக்கு தான் சப்போர்ட் பண்ணுவாங்க.போலீசே வந்தாலும் ஒன்னும் பண்ண முடியாது.இது எங்க கிராம கட்டுபாடு" என அவர் பீதியை கிளப்ப**

**வேந்தனே ஒரு நிமிடம் தடுமாறி வெற்றியின் முகத்தை பார்க்க அவன் ஏதோ ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.**

**"என்ன அப்புச்சி பண்ணலாம்" என வெற்றி அவரை  கேட்க**

**"அதற்குள் அவர் நம்ம மளிகை கடை முருகேசன் பையன் வாத்தியார மதுரையில் இருக்கானாம்.நல்ல சொந்த பந்தம்.வசதி நல்ல வசதி. கேட்டு பார்க்கலாமா" என அவர் கேட்க**

**அதற்குள் வேந்தனோ ..".ஏண்டா கல்யாணம்கிறது ஆயிரம்காலத்து பயிர்னு சொல்லுவாங்க...இப்படி  அவசரத்துல அதை முடிவு செய்விங்க...நீ கவலைபடாத...நாங்க இருக்கிறோம்  பார்த்துக்கிறோம்...நீ அமைதியாக இரு "என அவனை அடக்க**

**"இல்லை வேந்தா...உனக்கு அவங்கள பத்தி தெரியாது.காரணம் இல்லாம அப்புச்சி சொல்ல மாட்டார்.ஏன்னா என்னை விட என் தங்கைனா  அவர்க்கு உயிர்" என்றான் வெற்றி.**

**"ஏன் அப்புச்சி நம்ம மாசி" என அவன் சொல்ல**

**"வேண்டாம் வேலா...இந்த ஊர்ல அவ இருக்க வேண்டாம்" என அவர் சொல்ல**

**உடனே வேந்தன் "என்ன விளையாடறிங்களா...தேவையில்லாம பயமுறுத்திரிங்க...சரின்னு அதற்க்கு தீர்வு சொன்னா அதற்கும் குறை சொல்றிங்களே என எகிற...இங்கயே பிறந்து வளர்ந்த பொண்ணுக்கு இங்கே பாதுகாப்பு இல்லினா எப்படி" என கோபபட**

**அவர் வேந்தனை ஒரு மாதிரி பார்க்க,அதை பார்த்த வெற்றி வேந்தனை அமைதி படுத்தினான்.**

**அந்த பெரியவர் வெற்றியை தனியாக அழைத்து சென்று ஏதோ சொல்ல அவனும் யோசனையுடனே வந்து அமர்ந்தான்..அதற்க்கு பிறகு இரவு அனைவரும் உறங்கும் நேரத்தில் வேந்தனிடம் முக்கியமான விஷயம் பேச வேண்டும் என வெற்றி அவனை அழைத்தான்..**

**நேராக அவனை ஒரு வீட்டிற்கு அழைத்து செல்ல ,அங்கு மேகபொதிகை கூட்டத்திற்கு நடுவில் வெண்ணிலா வீற்றுருப்பது போல் சுற்றிலும் அனைவரும் உறங்க நடுவில் ஒரு பெண் கை கால்களை சுருக்கி கொண்டு கண் மூடி இருக்க,.....அதை பார்த்த வேந்தன் துக்க வீடு என்பதயும் மறந்து அவளை ரசிக்க,.......அவளது மாசு மறுவற்ற முகம் அன்று பூத்த மலரை நினைவு படுத்த,ஒரு பக்கமாக படுத்திருந்தால் ஒரு புறம்மட்டுமே இரவிலும் ஜொலிக்க அதை தன விழிகாளாலே விழுங்கி கொண்டிருந்தவன்,**

**வேந்தா....வேந்தா என வெற்றியின் குரல் கேட்டு நினைவுலகிற்கு வந்தவன் இவள் தான் என் தங்கை வெண்மதி என்றான் வெற்றி..**

**அடைமழை என பிரச்சனை**

**அடுத்தடுத்து வர...**

**வேதனையில் உழலும் நெஞ்சமோ**

**விம்மி புடைக்க...**

**கூட பிறந்தவளின்**

**வாழ்வை சீராக்க...**

லஷ்மிரவி

DO NOT COPY

**தீர்வு கிடைக்காமல்**

**திணறி கொண்டிருந்தவன்**

**துன்பத்தில் தோள் கொடுக்கும்**

**நட்பு நினைவிற்கு வர**

**இனி நடப்பது நன்மையே**

**என அவன் மனம் துள்ளி குதித்தது !!!!!!!!!!!!**

**அத்தியாயம் -4**

**“இவள் தான் என் தங்கை வெண்மதி” என வெற்றி சொல்ல**

**அவனது கண்ணில் ஒரு மின்னல் வந்து செல்ல,தான் மனதில் நினைத்ததே அவளது பெயராக இருக்குமென்று அவன் எதிர்பார்க்கவில்லை .அந்த கனம் மனமும் உடலும் சிலிர்க்க ,சிறிய புன்னகை அவன் முகத்தில் தோன்றி மறைய அவளை பார்த்து கொண்டே நின்றான் வேந்தன்.**

**தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறியாமல் பெற்றவர்களை இழந்த வேதனையில் வெம்பி போய் அங்கு சுருண்டு கிடந்தாள் வெண்மதி.**

**அதை கண்ட வேந்தனின் மனமோ அவளுக்கு ஏதாவது நல்லது செய்யவேண்டும் என தோன்ற திரும்பி வெற்றியை பார்த்தான். பின்னர் ஏதும் பேசாமல் அந்த இடத்தில் நகர்ந்தவன் முன்னே செல்ல வெற்றியும் அவன் பின்னால் சென்றான்.**

**அங்கு ஓரிடத்தில் அமர்ந்த வேந்தன் வெற்றியை ஒரு நிமிடம் இமைக்காமல் பார்த்தான்.பின்னர் “சொல்லு வெற்றி ….என்ன பேசணும்” என்றான்.**

**வெற்றியும் தனது முடிவில் உறுதியாக இருந்ததால் எந்த தயக்கமும் இன்றி அவனாலும் தான் நினைத்ததை சொல்ல முடிந்தது.**



DO NOT COPY

**“நீ என் தங்கையை திருமணம் செய்து கொள்கிறாயா” என கேட்க**

**இந்த முறை வேந்தனுக்கு பெரிய இடி விழுந்தது போல் இருந்தது.தனது நண்பன் தன்னிடம் இப்படி கேட்பான் என்று நினைக்கவில்லை. தன்னிடம் யோசனை கேட்பான் என்று தான் நினைத்து இருந்தான்.**

**“என்னடா உளற”.... என வேந்தன் கோபமாக கேட்க முயன்று தோற்று அது குரலில் வெளிபடாமால் வார்த்தைகள் மெதுவாக வெளியே வர**

**“இல்ல நண்பா ....நான்  தெளிவாகதான் பேசறேன்..இப்ப இருக்கிற சூழ்நிலைக்கு நான் இந்த முடிவை எடுப்பதை தவிர வேற வழி இல்லை.நான் கண்டிப்பாக கனடா போக வேண்டும்.அப்போதான் இந்த கடன் எல்லாம் சொன்ன நாளில்  கொடுக்க முடியும்.ஆனா என் தங்கையை விட்டு நான் எப்படி?” என நிறுத்தியவன்**

**“எனக்கு உன் மேல நம்பிக்கை இருக்கு வேந்தா.நீ என் தங்கையை நல்ல பார்த்துக்குவேனு அதுவும் இல்லாம உன்கிட்ட இருக்கிறது அவளுக்கும் ஒரு நல்ல பாதுகாப்பு.யாரும் அவளை நெருங்க முடியாது.அவ குழந்தைடா ...எங்க கைக்குள்ளே வச்சு வளர்த்திடோம்.அவளை எப்படி தெரியாத இடத்துல கொடுக்கிறது நீயே சொல்லு” என கேட்க**

**வேந்தன் அமைதியாக இருந்தான்.வெற்றி கேட்டதும் வேந்தனின் மனதில் ஒரு துள்ளல் எழுந்தது உண்மை.எதோ அவனுக்குள் ஒரு நிம்மதி வந்தது போன்ற  உணர்வு ஏற்பட்டது அவனுக்கே புரிந்தது.ஆனால் இந்த மாதிரி ஒரு கட்டாயமான சூழ்நிலையில் அவன் திருமணம் நடைபெறுவதை அவன் விரும்ப வில்லை.மேலும் அந்த பெண்ணின் மன நிலைமையும் என்ன?. அவளுக்கும் தன்னை  பிடிக்க வேண்டும்  என யோசித்தவன்**

**“வெற்றி அவசரத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருக்காது.அதுவுமில்லாம உன் தங்கை மனதில் என்ன இருக்கிறது என்று தெரியவில்லை.பாவம் அவள் துக்கத்தில் துவண்டு போய் இருக்கிறாள்.அவளிடம் போய் ....என நிறுத்தியவன்.... வேண்டாம் வெற்றி....கொஞ்சம் பொறு...யோசிக்கலாம்” என்ற வார்த்தை மட்டும் வாய்க்குள் முனக**

“வெற்றியோ இல்லை வேந்தா.....அவளிடம் நான் பேசிகொள்கிறேன்.நீ என்ன சொல்கிறாய்.இங்கு விஷயம் ரொம்ப சிக்கல் ஆவதற்கு முன்பு நான் என்னோடய முடிவை பெரியவர்களிடம் சொல்லிவிட வேண்டும்.என் தங்கையை உனக்கு பிடிக்க வில்லையா” என வருத்தமாக கேட்க

“இல்லை…இல்லை…என அவசரமாக மறுத்த வேந்தன், (அப்புறம் எதுக்கு இம்புட்டு buildup)சரி உன் விருப்பம் போல் செய்” என்றான்.

அவன் அப்படி சொன்னதும் வெற்றி அவனை அணைத்து தேங்க்ஸ் நண்பா என கூறிவிட்டு நிஜமாவே நீ எனக்கு மாப்பிள்ளை ஆகிட்டடா “என சந்தோசத்தில் குதிக்க……… வேந்தனின் மனமோ நிலையில்லாமல் தடுமாறி கொண்டிருந்தது.

வேந்தன் அமைதியானவன்.அதிகம் ஆசை படாதவன்…ஆனாலும் அவனுகென்று சில கோட்பாடுகள் உண்டு.அதற்க்கு உடன்பட்டு வரும் பெண்ணை தான் திருமணம் செய்யவேண்டும் என எண்ணிருந்தான்…அது நிறைவேறாமல் போவதை அவனால் ஒத்து கொள்ளமுடியவில்லை.ஆனால் நண்பன் இப்போ இருக்கும் சூழ்நிலையில் இதை அவனிடம் சொல்ல முடியாது.என்ன செய்வது என தெரியாமல் குழம்பி தவித்தான்.

இன்று வியாழன்…நாளை வெள்ளி காலை திருமணம் என்றான் வெற்றி. வேந்தன் ஏதும் சொல்லவில்லை.

விடியும் காலை பொழுது வேந்தன் வெண்மதி திருமணம் அந்த நாளின் சிறப்பு செய்தியாக இருந்தது.எப்போதும் வெற்றியை சுற்றி சித்தப்பா,பெரியாப்பா தாத்தா.அப்புச்சி என ஒரு கும்பல் இருந்து கொண்டே இருந்தது.வேந்தனால் அவனிடம் அதற்க்கு பிறகு பேசவே முடியவில்லை.

இங்கு ஒரு கும்பல் திருமணவேலையில் சுற்றி கொண்டிருந்தது.ஒரே நாளில் திருமனபுடவை வேஷ்டி எல்லாம் ஊருக்குள் வந்தது.பெண்களுக்கும் இந்த திருமண செய்தி எட்ட ஒரு சிலர்…என்ன இது…துக்கம் நடந்த வீட்டில் கல்யாணமா என முனுமுனுக்க ……

வேலு வெளிநாடு போறானாம்.அதுனால கல்யாணத்தை முடித்து விட்டு போறானாம் என சொல்லப்பட்டது.காரணம் சரியாக இருந்ததால் மற்றவர்கள் ஏதும் சொல்லவில்லை.

வேந்தன் யோசனையாக வெளி திண்ணையில் அமர்ந்திருந்தான் ....கிராமத்திற்கு உரித்தான வெட்கத்தோடு ஒரு சில பெண்கள் ஏய்.....இவர்தான் மாப்பிள்ளை..... என மறைந்து நின்று பார்க்க.......என்ன இவ்ளோ உசரம் இருக்காரு என ஒருத்தி வாய் விட்டு சொல்ல....வேந்தனுக்கோ மணிரத்தினம் படம் பார்ப்போது போல் இருந்தது.

அதற்குள் ஒரு வயதான அம்மா அவனிடம் வந்து “ஏம்பா நீ தான் எங்க பாப்பாவ கட்டிக்க போற மாப்பிளையா ....ஆமா என்ன வேலை செய்யற...எவ்ளோ சம்பளம் .......கவெர்மென்ட் வேலையா....எந்த ஊரு நீ...உனக்கு அம்மா அப்பா இல்லியா ........பாப்பாவ நல்லா பார்த்துக்கப்பா....பொத்தி பொத்தி வளர்த்த புள்ள...அவங்க அப்பன் தரைல நடக்க விடமாட்டான்.........ஏதோ அதுக்கு நேரம் ...இப்படி அவசரகல்யாணம்.....சொந்த பந்தம் நிறையா இருக்கிற இடத்துலதான் எங்க ஊரு பொண்ணுங்கள கொடுப்போம்............நல்லது கெட்டதுனா நாலு பேர் வேண்டாமா ......இந்த வேலன்கிட்ட சொன்னா கேட்கிறானா என தன் மனதில் உள்ள ஆற்றாமையை வெள்ளேந்தியாக வெளியேற்றிவிட்டு .....அறியாபுள்ள அது பத்திரமா பார்த்துக்கோ” என தங்கள் வீட்டு பிள்ளையை பற்றியும் பரிந்து பேசிவிட்டு சென்றார்.

இதை கேட்ட வேந்தனின் மனமோ துடித்து விட்டது......இது வரை அவன் அதை பற்றி யோசிக்கவே இல்லை.....இப்படி யாரும் நேரிடையாக அவனிடம் பேசியதும் இல்லை ..........நான் அனாதை என்பதை எப்படி சொல்லி விட்டு போகிறார்கள் என கொதித்தவன்........ஏதோ நான் இந்த திருமணத்தை வேண்டும் வேண்டும் என்று சொன்ன மாதிரி அல்லவா பேசுகிறார்கள்......... எங்கே இந்த வெற்றி என அவனை தேடி செல்ல

அங்கு அவனை சுற்றி ஒரு கட்ட பஞ்சயாத்து நடந்து கொண்டிருந்தது.ஆளாளுக்கு ஒன்று பேச அமைதியாக கேட்டு கொண்டிருந்தான் வெற்றி.

வேந்தன் அவனுக்காக காத்து கொண்டிருக்க,அதற்குள் அந்த ஊர்காரர் இருவர் "பாவம்பா இந்த பையன்.....இவனும் எத்தன பிரச்சனையதான் சமாளிப்பான்.....நான் கூட அவன் தங்கைக்கு டாக்டர் மாப்பிள்ளை சொன்னேன்....நல்ல வசதி,ஆனா இவன் தன்னோட நண்பனுக்குத்தான் கொடுப்பேனு உறுதியா இருக்கான்.அந்த பொண்ணு தலையில என்ன எழுதி இருக்கோ அதான நடக்கும்" என சொல்லிகொண்டே செல்ல

வேந்தன் மனம் சற்று நிதானம் அடைந்தது.தன் மேல் தன் நண்பன் வைத்திருக்கும் நம்பிக்கை நினைத்து மனதிற்குள் மகிழ்ந்தவன் இனி என்ன நடந்தாலும் வெற்றி விருப்பபடியே நடக்கட்டும் என முடிவு செய்து மறுபடியும் வந்து அமர்ந்து கொண்டான். 1

திருமண ஏற்பாடுகள் வேகமாக நடந்து கொண்டிருக்க,இங்கு வேந்தனோ தனது மனையாளை ஒரு முறை பார்க்க வேண்டும் என தவித்து கொண்டிருந்தான்.சில விஷயங்கள் மனதிற்கு சரியில்லாமல் இருந்தாலும் வெண்மதியை நினைக்கும்போது அவன் மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி ஏற்படுவதை அவனும் உணர்ந்தே இருந்தான்.அவள் என்ன சொன்னாள்...திருமணதிற்கு சரி என்றாளா?...என யாரிடம் கேட்பது என தவித்து கொண்டிருந்தான்.அவனுக்கு தெரிந்த ஒரே ஜீவன் வெற்றி மட்டுமே அங்கு.

மறுபடியும் வெற்றியை தேடி செல்ல அவனை பார்த்ததும் வெற்றி எழுந்து வந்து ..."சாரிடா ....உன்னை கவனிக்க முடியல...இங்க வேலை தலைக்கு மேல....எதாவது வேணுமா" என கேட்க

இல்லை...இல்ல என தடுமாறியவன்...என்கிட்டயும் வேலை கொடு ,நானும் செய்யறேன் என்றான்.

"இல்ல வேந்தா...இங்க மாப்பிள்ளை எல்லாம் வேலை செய்யமாட்டாங்க...உன் பேர் சொல்லிகூட கூப்பிடகூடாது...மாப்பிளைனுதான் கூப்பிடனும்...அவ்ளோ மரியாதையை எங்க ஊரு மாப்பிள்ளைக்களுக்கு என சொல்லி சிரித்தவன்.........நீ ரெஸ்ட் எடு என்று கூறிவிட்டு ,அவனை உற்று பார்த்து விட்டு எதாவது பிரச்சனயா வேந்தா" என கேட்டான்.

“இல்ல…உன் தங்கை என்ன சொன்னா….சரின்னு சொல்லிடாங்களா…”என கேட்க

உடனே சிரித்து கொண்டே வெற்றி “இதுக்குதான் இவ்ளோ யோசனையா ….நான் அவகிட்ட பேசிட்டேன்…அவளும் சரின்னு சொல்லிட்டா….நீ போட்டு குழப்பிக்காத…போய் ஓய்வு எடு” என சொல்லி கொண்டிருக்க…அதற்குள் அவனுக்கு அழைப்பு வர அங்கு சென்று விட்டான்.

வேந்தன் வந்து மீண்டு அமர மறுபடியும் ஒரு சிலர் இவனை வந்து விசாரிக்க இவனின் நிலைமையோ மிகவும் தர்ம சங்கடமான சூல்நிலையாக இருந்தது.

அதில் ஒரு சிலர் வெண்மதி பற்றி புகழ்ந்து சொல்லி இவனை மட்டம் தட்டி பேச இவனை அறியாமல் வெண்மதி மேல் கோபம் ஏற்பட்டது.அது கிராமத்து வழக்கம்.எங்க ஊரு பொண்ணு அப்படி…இப்படி என புகழ்ந்து சொல்வது…அது வேந்தனுக்கு புரியவில்லை.தன்னை அவர்கள் கீழ்படுத்தி பேசுகிறார்கள் என நினைத்து கொண்டான்.

மேலும் இரவு வரை வெண்மதி இவனை பார்க்க வரவே இல்லை.அதுவும் அவனுக்கு வருத்தமாக இருந்தது.ஏதோ கட்டாயபடுத்தி திருமணம் நடக்கிறதோ என்ற சந்தேகம் அவனுக்கு எழுந்தது.இவை எல்லாம் மனதில் அழுத்த இரவு உறங்கா இரவானது.

விடிகாலை பொழுது கதிரவன் மெதுவாக வெளியே வர அந்த நேரத்திலும் தேனியை போல் சுறுசுறுப்பாக சுற்றி கொண்டிர்ந்தனர் அந்த கிராம மக்கள்.

“‘ஏய் ராக்காயி மாடு கண்ணு எல்லாம் இழுத்து கட்டிட்டு வா…கண்ணாலம் முடிஞ்சு போய் பார்த்துக்கலாம்” என ஒரு சத்தம் கேட்க

அப்போது தான் எழுந்த வேந்தன் இரவு வெகு நேரம் உறக்கம் இல்லாததால் விடியும் பொழுது உறங்கிவிட்டான் அவன்.எல்லாரும் கிளம்பிட்டாங்களா என நினைத்து கொண்டு வேகமாக வெளியே வர அந்த நேரம் வெற்றி உள்ளே



DO NOT COPY

"வேந்தா எழுந்துட்டியா ....எப்பவும் 5 மணிக்கு எழுந்துடுவ....வந்து பார்த்தா நல்லா தூங்கிட்டு இருந்த...அதான் போயிட்டேன்.இந்த உன்னோட டிரஸ் ...குளிச்சுட்டு சீக்கிரம் வா என சொல்லி விட்டு வேற எது வேணாலும் கேளுடா என்றவன் அவன் கைகளை பிடித்து கொண்டு வேந்தா இதுல உனக்கு சம்மதம் தான" என அவன் முகத்தை பார்த்து மறுபடியும் கேட்க

சிரித்து கொண்டே அவன் கைகளை அலுத்தியவன் "முழு சம்மதம்...நீ கிளம்பு...நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன் "என சொல்லிவிட்டு குளிப்பதற்கு சென்றான்.

கிளம்பி வெளியே வர அங்கு அவனுக்காக ஒத்தை மாட்டு வண்டி காத்திருக்க ,

வேந்தன் வெற்றியை பார்க்க...இங்க இது வழக்கம் வேந்தா என்று சொல்ல பேசாமல் அவன் வண்டில் குதித்து அமர

பாருடா...பட்டணத்து மாப்பிள்ளையா  இருந்தாலும் வண்டில் ஏற லாவகம் எல்லாம் தெரிஞ்ச்ருக்கு என ஒரு பெருசு குரல் குடுக்க

அந்த சந்தோசத்தில் திருமணம் நடக்கும் இடம் நோக்கி அனைவரும் நடந்தனர் .ஊர்மக்கள்  அங்கு காத்திருந்தனர்.

மார்கழி மாதத்து பனி மூட்டம்  மெல்லென விலக,இலைகளின் மேல் உள்ள பனித்துளி ஆதவனின் பார்வையை உள்ளிழுத்து பல வண்ணங்களை வெளியிட,பூக்களின் வாசனை நாசியை துளைக்க ,பச்சை பசேலென நெற்கதிர்கள் அந்த இளம் காற்றில் அசைந்தாடுவது அவர்களுக்கு வரவேற்ப்பு கொடுப்பதாக அமைய அதற்க்கு நடுவில் அழகிய செம்பருத்தி பூ ஆடை கட்டி அசைந்து வருவது போல் மெல்ல வெண்மதி விடியற்காலையில் பூமாலை சூடி அடிமேல் அடிவைத்து நடந்து வர,பார்த்து கொண்டிருந்தவர்கள் மனமோ பரவசத்தில் மகிழ பார்க்க வேண்டியவனோ பார்வையை வேறு பக்கம் திருப்பி கொண்டிருக்க மெல்லென அவனருகில் வந்து நின்றாள். 2

DO NOT COPY

வேந்தன் இரவு ஒரு முடிவோடுதான் படுத்தான்.இன்று திருமணம் முடிந்த உடன் அவன் நினைத்ததை  செயல்படுத்தவேண்டும் என நினைத்தான்..அவள் என்ன அவ்ளோ பெரிய ஆளா.....ஏதோ எனக்கு அவள் வாழ்க்கை பிச்சை கொடுப்பது போல் அல்லவா இவர்கள் பேசுகிறார்கள்.வெற்றிக்காக இந்த உதவியை செய்யலாம் என் நினைக்கும்போதே மனம் ஒரு நிமிடம் தயங்க  ....ஆமா இவ என்ன பெரிய அழகியா....என தனக்கு தானே ஒரு முகமூடி போட்டு கொண்டு அவளை பற்றி கோபமான எண்ணங்களையும்  மனதில் வளர்த்திகொண்டான்.

பின்னர் சம்பிரதாயங்கள் நடக்க நல்ல நேரத்தில் அவள் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவித்தான் வேந்தன்.அவளுக்கு குங்குமம் இடும்போது தான் அவளை நிமிர்ந்து பார்த்த வேந்தன்,அவளது மாசுமருவற்ற அந்த முகம் அவன் மனதை பிசைய அவன் மனம் சிறிது லேசானது.ஆனால் வெண்மதியோ அவனை நிமிர்ந்து பார்க்கவே இல்லை.

பெரியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்கிய பின்னர் வெற்றியிடம் இருவரும் சென்று நிற்க,கண்களில் நீர் மல்க வேந்தனின் கைகளை அழுத்தி பிடித்தவன் ,ஏதும் சொல்லாமல் அவனை பார்த்து கொண்டே இருக்க ,அவனின் என்ன ஓட்டத்தை புரிந்து கொண்ட வேந்தன்

“வெற்றி என்னில் என் உயிரில்  பாதி வெண்மதி.........இதைவிட உனக்கு எப்படி  புரிய வைப்பது” என சொல்ல நண்பனை இழுத்து அணைத்தவன் “தேங்க்ஸ் மாப்பிள்ளை” என்றான்.பின்னர் தங்கையை பார்த்தவன் அவள் ஏதும் பேசாமல் தலை குனிந்து கொண்டு நிற்க

“பாப்பு அண்ணா சொன்னது எல்லாம் நியாபகம் இருக்குல்ல .மாப்பிள்ளை ரொம்ப நல்லவன்மா நீயும் நல்லபடியா நடந்துக்கணும் என சொல்லிவிட்டு அவள் முகத்தை தன இரு கைகளால் ஏந்தியவன் என்னடா ....என கேட்க அவன் முகத்தை பார்த்ததும் “அண்ணா!!!!!!!!!” என கத்திகொண்டே அவனை அணைத்து கொண்டு தேம்பி தேம்பி அழுதாள் வெண்மதி.



DO NOT COPY

**சுற்றி இருந்தவர்களோ வேந்தனை ஒருமாதிரி பார்த்துவிட்டு....வெண்மதிக்கு ஆறுதல் சொல்ல வேந்தனின் மனம் மறுபடியும் இறுக**

**“வெற்றி....வெற்றி” என இருமுறை வேந்தன் அழைக்க,அழுது கொண்டிருந்த வெண்மதி தேம்பி கொண்டே அவனை விட்டு விலக**

**“நாங்க திருச்சி கிளம்பனும்” என அமைதியாக சொல்ல**

**“என்னது இப்பவேவா “ என அனைவரும் கோரசாக குரல் எழுப்ப**

**வெண்மதியோ தேம்பலை நிறுத்தி விட்டு விழிவிரித்து அதிர்ச்சியுடன் அவனை பார்க்க**

**வெற்றியோ சிறிது அதிர்ந்து பின்னர்...”ஏண்டா ....உடனே கிளம்பனுமா” என வருத்தத்துடன் கேட்க**

**“ஆமாம் வெற்றி...11மணிக்கு ட்ரைன் இருக்கு.நாங்க கிளம்பறோம்” என்றான்.அவனது அந்த அழுத்தமான பேச்சு இனி என்ன சொன்னாலும் அவன் இருக்கபோவதில்லை என்பதை உணர்ந்த வெற்றி சரியென்று தலை ஆட்டினான்.**

**ஊருக்கு செல்வதற்கு எல்லாம் தயாராக,வெண்மதியை சுற்றி அனைவரும் சூழ்ந்து கொண்டு அவளுக்கு புத்திமதி என்ற பெயரில் அவளது பயத்தை அதிகபடுத்தி கொண்டிருந்தனர்.அதை கவனித்த வேந்தன் சரி கிளம்பலாம் நேரமாச்சு என அவசரபடுத்த அனைவரிடமும் கண்களில் நீரோடு விடைபெற்று கொண்டு அந்த கிராமத்தை விட்டு கிளம்பினாள் வெண்மதி.**

**ரயில் நிலையம் வரை வெற்றியும் வேந்தனும் ஏதோ பேசிகொண்டே வர,அங்கு அவர்களை ஏற்றிவிட்டு வெற்றி வெளியே நிற்க,,,”அண்ணா நீங்க வரலையா” என வெண்மதி கேட்க**

**“இல்ல பாப்பு.....அண்ணனுக்கு வேலை இருக்கு....நாளைக்கு நான் வந்தடறேன்....மாப்பிள்ளை உன்னை நல்லா பார்த்துக்குவான்” என கண்களில் நீர் முட்ட சொன்னவன் தன் முகத்தை பார்த்து கொண்டிருக்கும் தங்கையின் முகம் பார்க்க முடியாமல் கீழே குனிந்து கொண்டான் வெற்றி.**



DO NOT COPY

**ரயில் பயணம் தொடங்கியது.வெண்மதியின் வாழ்க்கை பயணமும் வேந்தனோடு தொடங்கியது.**

**வாழ்கையை தனகென்று ஒரு வட்டத்தை போட்டு கொண்டு அதில் வாழ்பவன் வேந்தன்.**

**எதிர்காலம் என்பதே என்னவென்று தெரியாமல் இருக்கும் காலத்தை இனிதே வாழும் குழந்தை உள்ளம் கொண்டவள் வெண்மதி.**

**இவர்கள் இணைந்து ஒரு புது பாதையை உருவாக்குவார்களா...இல்லை ஒருவரின் பாதயில் மற்றறொருவர் இணைந்து செல்வார்களா என்பதை காலம் தான் தீர்மானிக்கும்.**

**ரயில் பயணம் வெண்மதிக்கு புதிது.அவள் அதை ரசித்தபடி வர வேந்தனோ அப்போது தான் அலைபேசி வேலை செய்ய அதை பார்த்து கொண்டுவந்தான்.**

**சிறிது நேரம் கழித்து அவன் எழுந்து செல்ல**

**வெண்மதியும் அவன் பின்னே எழுந்து சென்றாள்.**

**திரும்பி பார்த்த வேந்தன் ...."இப்ப எதுக்கு என் பின்னாடி வர.....நான் பாத்ரும் போறேன்....உனக்கு என்ன வேணும்" என வேகமாக கேட்க**

**முதன் முதலாக அவளிடம் பேசும் வார்த்தை இதான் என்பதை அவனும் அறியவில்லை.**

**அவன் கேட்ட வேகத்தில் ஒரு நிமிடம் தடுமாறியவள்...."இல்லை...இல்லைஈஈ "என வார்த்தை தந்தி அடிக்க**

**"போ...போய் உட்கார் "என சொல்லிவிட்டு நகர்ந்தான்.**

**வந்து அமர்ந்த வெண்மதிக்கோ உடல் எல்லாம் சில்லிட ஏதோ பயம் மனதில் சூழ்ந்து கொண்டது.**

**அதற்குள் டிக்கெட் சரிபார்ப்பவர் அங்கு வர "இங்கு வேந்தன் யாரு "என்று கேட்க**

**அனைவரும் அமைதியாக இருக்க**

**“என்னப்பா வேந்தன் இல்லயா ….ஆமா வெண்மதி யாரு” என கேட்க**

**“நான் தான்…நான்தான்” என வேகமாக அவள் இடத்தை விட்டு எழுந்தரிக்க**

**சரி…இங்க வேந்தன் இல்லியா…..என மறுபடியும் அவர் கத்த**

**அதற்குள் அங்கு வந்த வேந்தன் …”சார் நான்தான் வேந்தன்…..இந்தாங்க” என டிக்கெட் கொடுக்க**

**அதில் வெண்மதி பெயரும் இருக்க உடனே அவர் வெண்மதியை பார்த்து “ஏம்மா உன்கிட்ட கேட்டேன்ல……நீ ஒன்னுமே சொல்லல…என்ன இரண்டு பேருக்கும் சண்டையா “என சொல்லிவிட்டு அவர் ஒரு மாதிரி பார்த்து கொண்ட சொன்னார்.**

**வேந்தனுக்கோ கோபம் சுருசுருவென்று ஏற…..”வாயில் என்ன கொலுகட்டையா வச்சிருக்க…பேர் சொல்ல கூட பிடிக்கலியா உனக்கு” என அவன் கோபமாக கத்தினான்.**

**அவள் சுற்றும் முற்றும் பார்த்து திருதிர்வென்று விழிக்க….. அதை பார்த்தவன் பின்னர் அமைதியாக அவள் அருகில் அமர்ந்து “உன்னை உங்க ஊர்ல ரொம்ப புத்திசாலின்னு சொன்னங்க……”என அவளின் காதில் முனகினான்.**

**அவள் அமைதியாக இருக்க**

**அவன் அவளை பார்த்து முறைக்க**

**“…இல்ல….இல்ல……எனக்கு உங்க பேரே தெரியாது.எல்லாரும் மாப்பிள்ளை மாப்பிளைனுதான் சொன்னங்க…..அண்ணனும் என் நண்பன்தான் சொன்னான்.பேர் யாருமே சொல்லல” என சொல்ல இப்போது வேந்தன் அதிர்ந்தான்.**

**என்னது என் பேரே உனக்கு தெரியாதா என கேட்டவன்……ஒரு நிமிடம் அவளையே பார்க்க அவள் தலை குனிந்தது கொண்டே இருக்க அவனது மனமோ யோசனையில் ஆழ்ந்தது.**

நிலவே பெண்ணாக வந்ததோ

என அவளை பார்த்து அவன் நினைக்க

நினைவு நிஜமாக

தெய்வம் தந்த பூ இவளே

என அவளை மனதிற்குள்

மணிமகுடம் சூட்டி மகாராணியாக

அமர்த்தியவன்

அதை வெளிபடுத்த தெரியாமல்

கனலென வார்த்தைகள்

வெளியே வர

அந்த வெப்பத்தில்

காதலும் கரைந்து விடுமா

இல்லை தீயில் சுட்டு

மிளிரும் பொன்போல்

ஜொலித்துடுமா????????

DO NOT COPY

**அத்தியாயம் -5**

**ஈரோடு டு திருச்சி எக்ஸ்பிரஸ் சீறிக்கொண்டு செல்ல வேந்தனின் எண்ணஓட்டங்களோ அவனது கட்டுபாட்டை மீறி போய்கொண்டிருந்தது.பெயரே தெரியாமல் ஒரு பெண் திருமணத்திற்கு சம்மதிப்பாளா?இவளுக்கு இதில் விருப்பம் இருக்கா?இல்லயா?எல்லாம் குறுகிய நாட்களில் நடந்து முடிய… வெண்மதியின் மன நிலைமை என்ன என்பதை இறுதி வரை அவனால் அனுமானிக்க முடியாத நிலையில்…இனி இப்படியே தொடர்வது நல்லதல்ல…முதலில் இவள்**

மனதில் உள்ளது என்ன என்பதை கண்டுபிடிக்கவேண்டும்.பின்னர் மற்றதை பற்றி யோசிக்கலாம் என முடிவு செய்தவன் சற்று அமைதி அடைந்தான்.

நிர்மலமான மனதுடன் அவளை நிமிர்ந்து பார்த்தவன் ,ரயிலின் ஜன்னலில் தனது கையை முட்ட கொடுத்து ,தன் முகத்தை அதில் பதித்து,இமைகள் மூட மறந்து இயற்கையை அவள் ரசித்து கொண்டிருக்க,அதை பார்த்த வேந்தனின் மனதில் அன்பு பெருக்கெடுக்க ஆசையோடு அவளை பார்த்தவன்,அவளோ இயற்கையின் அழகில் தன்னை இழந்திருக்க சிறிது நேரம் விழிகளாலே அவளை பருகியவன் மனம் நிறைவு கொள்ள அப்படியே கண்மூடி அமைதியாக அமர்ந்திருந்தான்.

திருச்சி ஜங்சனில் வந்து இறங்கியதும் சுற்றிலும் வேடிக்கை பார்த்து கொண்டே வெண்மதிஅப்படியே நிற்க, அதை அறியாமல் வேந்தன் வேகமாக முன்னே நடந்தான்.சிறிது தூரம் சென்று திரும்பி பார்த்தவன் அவள் அதே இடத்தில் நின்று கொண்டு வேடிக்கை பார்ப்பதை கண்டவன் கோபம் தலைக்கு ஏற ,வேகமாக அவளிடம் வந்து “நீ முன்ன பின்ன மனுஷங்களை பார்த்தது இல்லயா.....இப்படி வேடிக்கை பார்த்திட்டு நிற்கிற....சாவகாசமா நின்னு சட்டம் பேசறதுக்கு இது என்ன உங்க ஊரு மாதிரி பட்டிக்காடா ....இன்னும் கொஞ்ச நேரத்துல காலேஜ் கும்பல் வந்திடும்...அப்புறம் நகரவே இடம் இருக்காது...உன்னை எல்லாம்.......” என படபடவென்று பேசிகொண்டே அவளை இழுத்து கொண்டு நடந்தான்.

அவன் கும்பலை தள்ளி கொண்டு செல்வதில் கவனமாக இருந்ததால் இங்கு வெண்மதியின் முகம் பயத்தில் வெளிரியதயோ ,உடலில் சிறு நடுக்கம் எற்பட்டதையோ அவன் உணரவில்லை.

ஆட்டோவில் வீட்டிற்கு சென்று இறங்கியதும் அவளை விடாமல் பிடித்தி கொண்டே கதவை திறந்தான். “ம்ம்ம் உள்ளே போ” என சொல்லி விட்டு அவன் ஆட்டோவை திருப்பி அனுப்ப சென்றான்.

இதுவரை தன் தாய் தந்தையின் அன்பில், அரவணைப்பில் பாதுகாப்போடு வாழ்ந்து வந்தவள்,........ ,முதன் முதலாக புதிய இடத்தில் புதிய நபருடன் வரும்பொழுது அனைவருக்கும் ஏற்படும் ஒரு பயம் கலந்த ஒரு உணர்வு வெண்மதிக்கும் ஏற்பட்டது.அவள் அப்படியே சிலையாக நிற்க

திரும்ப வந்த வேந்தன்...."இன்னும் உள்ள போகலியா.....இங்க என்ன பார்த்திட்டு நிற்கிற " என சொல்லி கொண்டே பெட்டியை எடுத்து கொண்டு அவள் கையை பிடித்து உள்ளே நுழைய முற்பட,

அதற்குள் "சார்ர்ரர்ர்ர் ...சாரி....இருங்க நான் வந்திட்டேன் என சொல்லிய படி வேகமாக வந்தாள் வினு,சாரி சார்...கொஞ்சம் நேரமாகிடுச்சு ...அப்படியே இருங்க ....ஆரத்தி கரைச்சுட்டு வரேன்" என சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

"அதெல்லாம் எதற்கு வினு" என வேந்தன் சொல்லி கொண்டிருக்கும்போதே உள்ளே இருந்து ஆரத்தி தட்டோடு வந்தவள் ,அவர்களுக்கு ஆரத்தி சுத்தி விட்டு "மணமகளே மருமகளே வா,,,,உனது வலது காலை எடுத்து வைத்து வா வா" என பாட

"என்னது வினு இது...போதும்...போதும்..." என வேந்தன் சிறித்து கொண்டே சொல்ல

"என்ன பாஸ்....அவ்ளோ கொடுமையாவா இருக்கு நான் படறது" என முகத்தை பாவமாக வைத்து கொண்டு கேட்டவள்

அச்சோ இல்ல வினு...யாராது பார்க்கபோறாங்க....வெளியிலே நின்னுட்டு இருக்கோம்...உள்ளே வா" என சொல்லி கொண்டே அவன் வேகமாக உள்ளே நுழைய முற்பட

என்ன கொடுமைடா இது....வெட்கப்படவேண்டிய பொண்ணு முழிச்சுட்டு நிக்குது....கம்பிரமா இருக்க வேண்டியவர் நீங்க ஏன் பாஸ் இவ்ளோ வெட்கபட்ரிங்க...இத பார்த்தாதான் மத்தவங்க தப்ப நினைப்பாக......என்னதான் புது மாப்பிள்ளையாக இருந்தாலும் இது கொஞ்சம் ஓவர் தான் பாஸ் என என் தனது முட்டைகண்ணை உருட்டி கொண்டுசொன்னவள், ஆர்த்தி கீழே ஊற்றி விட்டு அவர்களை உள்ளே அழைத்து சென்றாள்..

**“ஹப்பா இதன வீட்டுக்கு இப்பதான் ஒரு லஷ்மிகடாசமே வந்திருக்கு என்றவள் திரும்பி வெண்மதியை பார்த்து உங்கள எப்படி கூப்பிடறது.. அக்கா,இல்ல அண்ணி” என சொல்லி கொண்டே திரும்பி வேந்தனை பார்க்க**

**“பெயர் சொல்லியே கூப்பிடு வினு என்றவன் மதி இவள் பெயர் வினோதா...நாங்க வினுனு கூப்பிடுவோம் v4 பில்டர்ஸ்ல இவளும் பார்ட்னர் “என அறிமுக செய்து வைத்தான்.**

**“வினு இவள் பெயர் வெண்மதி ...இனி வெண்மதி வேந்தன் “எனசொன்னவன், சொல்லும்போதே அவனை அறியாமல் அவன் முகத்தில் சந்தோசம் பொங்க,அதை அறியவேண்டியவள் அறிந்து கொண்டாலோ இல்லையோ ........ அதை வினு கண்டு கொண்டாள்.ஏதோ அவசர திருமணம் முடிந்து விட்டது என ரயிலில் வர வர வேந்தன் இவளிடம் சொல்ல இவளும் சிறிது கவலைபட்டாள்.ஆனால் இப்போது அந்த கவலை மறைந்தது.**

**வினுவின் கலகலப்பான பேச்சு வெண்மதிக்கு பிடித்து போக தன் வயதில் ஒரு தோழி கிடைத்த சந்தோசம் அவள் முகத்தில் தெரிந்தது.**

**மெதுவாக அவள் அருகில் வந்த மதி” நீங்க எப்பவும் இப்படிதான் பேசுவிங்களா” என அவள் முகத்தை பார்த்து கேட்டாள்.**

**“ஆமா ஏன்??????” என கேள்வியோடு வினு அவள் முகத்தை பார்க்க**

**“இல்ல கேட்டேன் “என சொல்லிவிட்டு திரும்பி பார்த்தவள் ,அதற்குள் வேந்தன் அவனது அறைக்குள் சென்று இருக்க**

**“உங்களை எல்லாம் உங்க பாஸ் திட்ட மாட்டாரா...... இப்படி பேசுனா...” என குசுகுசுவென அவள் காதிற்குள் கேட்க**

**அவளது அந்த செயல் வினுவிர்க்கு சிரிப்பு வர “...எந்த பாஸ் சொல்ற......எந்த பாசும் திட்ட மாட்டாங்க” என அவளும் அதே போல் சொன்னாள்.**

**“இவருதான் என வேந்தனை காட்டியவள்,அப்புறம் நான் பேசினாள் மட்டும் எதுக்கு திட்றாரு” என் முகத்தை அழுவது போல் வைத்து**

DO NOT COPY

**கொண்டு அவள் அவன் மேல் புகார் மனு  ஒன்றை தாக்கல் செய்தாள்.**
**1**

**"அவருக்கு கொஞ்சம் கோபம் வரும்....ஆனா ரொம்ப நல்லவர்" என சொல்லி சிரிக்க**

**"எங்க அண்ணாவும் அதை தான் சொன்னாங்க.....ஆனா உனக்கு தெரியாது.....என்னை பார்த்தவே திட்றார்" என மறுபடியும் அதே சொன்னாள்..**

**"சரி...சரி....இனி திட்டாம இருக்கணும்னு சொல்லிட்டு போறேன்" என சிறு குழந்தைக்கு சாக்கு சொல்வது போல் வினு  அவளுக்கு சொல்ல அவளும் சந்தோசமாக தலையாட்டினாள்..**

**அவளை வீட்டிற்க்குள் சுற்றி காட்ட அழைத்து செல்ல அதற்க்குள் வேந்தன் உடை மாற்றி கொண்டு வெளியே வந்தான்.**

**அந்த வீடு 2 அறைகள் கொண்ட  தனி வீடு....ஒரு சமையல் அறை வரவேற்ப்பறை,ஒரு பெரிய பெட்ரூம்.மற்றொன்று சிறிய ரூம்.யாராவது விருந்தினர் வந்தால் படுத்து கொள்ள இருந்தது.**

**எல்லாம் பார்த்து விட்டு வெளியே வர அதற்குள் வினுவிர்க்கு தொலைபேசி அழைப்பு வர உடனே கிளம்பினாள் வினு.**

**அவள் கிளம்புகிறாள் என்று தெரிந்ததும்  வெண்மதி அவள் கைகளை இருக்க பிடிக்க ,அவள் கைகளை அழுத்தி கொடுத்த வினு, "மதி கொஞ்சம் வேலை இருக்கு முடிச்சுட்டு வரேன்" என் சொல்லிவிட்டு வெளியே வந்தாள்..**

**வெளியே நின்று கொண்டிருந்த வேந்தன் "வினு விபீஷ் போன் பண்ணானா .....நான் ட்ரை பண்ணேன்  நாட் ரீச்சபள்னு வருது" என கூற**

**"இல்ல சார்...நானும் நீங்க சொன்ன உடனே ட்ரை பண்ணேன்...எனக்கும் அதே பதில்தான் என கூறிவிட்டு, கொஞ்சம் வேலை இருக்கு வந்தறேன்" என சொல்லிவிட்டு கிளம்பினாள்.**



DO NOT COPY

**மீண்டும் இருவர் மட்டுமே இருக்க,வெண்மதிக்கு மறுபடியும் தனிமை சூழ வரவேற்பறைக்கு வந்தவள் ,அங்க வேந்தன் டிவி பார்த்து கொண்டிருக்க,இவளும் சிறிது நேரம் நின்று பார்த்தவள் அவன் தன்னை கவனிக்க போறதில்லை என் முடிவு செய்து**

**“மாமா....மாமா” என மெதுவாக அழைக்க அப்போதும் அவனிடம் இருந்து எந்த பதிலும் வரவில்லை.....**

**“மாமாஆஅ “என கொஞ்சம் சத்தமாக அழைக்க**

**செய்தி சேனல் பார்த்து கொண்டிருந்தவன்....என்னது திடிரென சேனலில் மாமா என்று சத்தம் கேட்கிறதே என திடுக்கிட**

**மீண்டும் மாமா என்ற சத்தம் கேட்க,திரும்பி பார்த்தவன் அங்கு வெண்மதி மட்டும் நின்று கொண்டிருக்க,அப்போது தான் அவளை கவனித்தான் அவன்.**

**“நீயா என்னை கூப்பிட்ட” என கேட்டான்.**

**அவள் “ஆமாம்” என்று சொல்ல**

**“என்னனு சொல்லி கூப்பிட்ட” என மறுபடியும் கேட்க**

**“மாமான்னு கூப்பிட்டேன் என பயத்துடன் அவன் முகத்தை பார்த்து கொண்டே மெதுவாக சொன்னவள்.....அவன் எங்கே தன்னை திட்டி விடுவானோ என பயந்து....... இல்ல...எங்க பெரியம்மா தான் உங்களை அப்படி கூப்பிடனும்னு சொன்னங்க....அதான் கூப்பிட்டேன்......ஏன் மாமா நான் மாமான்னு சொல்றது உங்களுக்கு பிடிக்கலியா...எங்க ஊர்ல எல்லாம் கல்யாணம் ஆகிடுச்சுனா அவங்க வீட்டுக்காரர இப்படிதான் கூப்பிடுவாங்க....உங்களுக்கு பிடிக்கிலியா மாமா....அப்படினா எப்படி கூப்பிடறதுன்னு சொல்லுங்க மாமா அப்படியே கூப்பிடறேன்” என குரலில் சிறிது நடுக்கத்தோடு பேசியவள்....வேண்டாமா என கேட்டு கொண்டே அந்த வார்த்தையை விடாமல் சொல்லி விட்டு அவனது முகத்தை பார்த்து கொண்டே இருக்க**

**இங்கு வேந்தனின் மனமோ மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்தது....இந்த மாதிரி உறவுகளை சொல்லி அழைக்க ஆள் இல்லாமல் எத்தனை நாள் ஏங்கியிருப்பான்,,,,, அவன் ஆசிரமத்தில்**



DO NOT COPY

எல்லாரும் அக்கா,அண்ணன்,தம்பி,தங்கைகள் என்றே கூறுவார்.பின்னர் கல்லூரி படிக்கும்போது நண்பர்களுக்குள் இந்த வார்த்தை வரும்.இவனுக்கு நட்பு வட்டமும் குறைவு.அதற்கான வாய்ப்பும் அவனுக்கு கிடைக்க வில்லை .

முதன் முதலாக தனக்கென்று ஒரு உறவு,தன்னை மாமா என்று அழைக்கும் உறவு,அவனது வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் ,புதிய சொந்தத்துடன் நினைக்க நினைக்க நெஞ்சம் மகிழ.மனநிறைவோடும்,கண்ணில் காதொலோடும் மெதுவாக அவள் அருகில் சென்றான்.

அவன் நெருங்கி வர..... வெண்மதியோ சற்று மிரண்டு பின் வாங்கியவள்,பின்புறம் சுவர் இருக்க அதில் சாய்ந்து நின்றாள்.அவன் தன்னை திட்ட வருகிறான் என எண்ணி தலை குனிந்திருக்க,மெதுவாக தன் இரு கைகளால் அவள் முகத்தை உயர்த்தியவன்,அவள் கண்களுக்குள் தன்னை கலக்க விட,ஆனால் அவளது விழிகளோ பயத்தில் மிரண்டு அங்கும் இங்கும் ஓட ,

“நான் எதாவது தப்பா சொல்லிட்டனா...என்னை திட்டாதீங்க” என வார்த்தை தந்தி அடிக்க அவள் சொன்னாள்.

இதை கேட்டதும் வேந்தனின் முகத்தில் சிறு புன்னகை மலர “...இல்ல மதி....இந்த வார்த்தையால் என் வாழ்க்கைக்கே ஒரு புதிய அர்த்தத்தை ஏற்படுத்தி விட்டாய்.நீ சொன்ன வார்த்தையால் நான் எவ்ளோ சந்தோசமா இருக்கேன் தெர்யுமா?நீ தாரளமா என்னை மாமானு கூப்பிடு....இப்படி கூப்பிட ஆள் இல்லாம தான் நான் ஏங்கி போய் இருந்தேன் தெரியுமா?”என தன் மனதின் வலியை வேதனையுடன் வெளிபடுத்த ஆனால் அதை உணர்ந்து கொள்ளும் நிலையில் அவன் மனையாள் இல்லை.

அவளின் மனமோ ஏரோப்லனை விட வேகமான யோசனையில் இருந்தது.இது வரை நடந்ததில் மாமா என்ற வார்த்தைக்கு மட்டும் தான் அவன் திட்டாமல் பேசி இருக்கிறான்.இனி நம்ம அடிக்கடி இந்த வார்த்தையை சொல்லணும் என அவளாகவே ஒரு முடிவு செய்து கொண்டு நிமிர்ந்து அவன் முகம் பார்த்தாள்.

**மிக அருகாமயில் முதன் முதலில் அவன் முகத்தை பார்க்க,காந்தம் போன்ற அவன் கண்கள் அவளுக்கு கதை சொல்ல,அகன்ற நெற்றிபரப்பு அவனது மனதை எடுத்து சொல்ல,நீண்ட நாசி அவனுக்கு மேலும் மெருகூட்ட அவனில் இருந்து தன் பார்வையை பிரிக்க முடியாமல்,ஆனால் அது என்ன உணர்வு என்று அறியவும் முடியாமல் அவளது விழிகள் இங்கும் அங்கு அலை பாய**

**அதற்குள் வீட்டின் அழைப்பு மணி ஓசை கேட்டு சட்டென்று விலகிய வேந்தன்,"பொறு யாருன்னு பார்த்திட்டு வரேன்" என சொல்லிவிட்டு நகர்ந்தான்.**

**எதுவும் புரியாமல் குழப்பத்தோடு  அங்கே நின்று கொண்டிர்ந்தாள் வெண்மதி.**

**வெண்மதியை பொறுத்தவரை அவள் இன்னும் வளர்ந்த குழந்தை தான்.அண்ணன் திருமணம் செய்து கொள்ள சொன்னான்.மற்றவர்களும் அவளுக்கு எடுத்து சொல்ல அவள் அதற்க்கு ஒத்து கொண்டாள்.மற்றபடி அவளுக்கு வேற எந்த எண்ணமும் இல்லை.உலக அனுபவம், அறிமுகம் இரண்டுமே அவளுக்கு குறைவு.அவனை அருகில் பார்த்த உடன் அவள் மனதில் அவளை அறியாமல் தோன்றிய உணர்வுகளை கூட அவளால் என்னவென்று புரிந்து கொள்ள தெரியவில்லை. 2**

**கதவை திறக்க அங்கு வினு டிபன் காரியர்ரோடு  நின்று கொண்டிருந்தாள்."இப்பதான வந்து இருக்கீங்க...சாப்பாட்டுக்கு என்ன பண்ணுவிங்கனு நினைச்சு எடுத்துட்டு வந்தேன் பாஸ்" என்றாள்**

**"உனக்கு எதுக்கு  வீண் சிரமம்....நான் பார்த்து கொள்ள மாட்டேனா" என் சொல்லி கொண்டே அவளுக்கு வழி விட்டான்.**

**"இல்ல பாஸ் ...பாவம் வெண்மதி புது இடம்....ரொம்ப பயந்திருக்காங்க...அதான் வீட்டு சாப்பாடுனா கொஞ்சம் சாப்பிடுவாங்கள அதான் கொண்டு வந்தேன்" என் சொல்லி கொண்டே அவற்றை திறந்து வைத்தாள்.**

**"உனக்கு ரொம்ப சிரமம் கொடுக்கிறேன் வினு "என சொல்லி கொண்டே அவன் சாப்பிட அமர**

**“எங்க பாஸ் மதியை காணோம்” என கேட்க**

**“அச்சோ இங்கதான இருந்தா...மதி ....மதி” என சத்தமிட**

**“ம்ம்ம்ம்” என்ற முனகல் மட்டுமே பதிலாக வர**

**திரும்பி பார்த்தவன் சுவர் ஓரமாக அவள் அப்படியே நின்று கொண்டிருந்தாள்.**

**வேகமாக எழுந்து அவள் அருகில் சென்றவன் மதி என மெல்ல அழைக்க ,அவள் மெதுவாக நிமிர்ந்து பார்க்க......மாமா நான் இருக்கேன்ல.....நீ பயப்படகூடாது என சிரித்து கொண்டே சொன்னவன் ........ வா என சாப்பிட அழைத்து வந்தான்.**

**தட்டு எல்லாம் எடுத்து வைத்து கொண்டிருந்த வினு...”.மதி மதி வா வா....“எங்க அம்மா செஞ்ச இட்லியும் தக்காளி தொக்கும ரொம்ப நல்லா இருக்கும் மதி...சாப்பிட்டு பாரு” என சொல்லிகொண்டே அவளுக்கு எடுத்து வைத்து விட்டு அவளும் அருகில் அமர்ந்து சாப்பிட**

**“தேங்காய் சட்னி வச்சுகிறியா” என மறுபடியும் அவளது தட்டில் வைத்து விட்டு அவள் முகம் பார்க்க**

**கண்களில் இருந்து அருவி போல் கண்ணீர் வந்து கொண்டிருக்க சாப்பாட்டை வெறித்து கொண்டே அமர்ந்திருந்தாள் வெண்மதி.**

**“மதி...மதி என்ன ஆச்சு” என வினு அவள் கையை ஆதரவாய் பிடித்து கொண்டு கேட்க**

**அதற்குள் அதை கவனித்த வேந்தன் “என்ன ஆச்சு மதி....சாப்பாடு பிடிக்கிலியா” என கேட்டான்.**

**கண்ணீர் தேம்பலாக மாறி அழுகையாக உருமாறி சத்தமிட்டு அவள் கதற**

**வினுவும் ,வேந்தனும் பயந்து எழுந்து அவளை சமாதானபடுத்த**

**ஆனால் அவள் யார் முகத்தையும் பார்க்காமல் கண்ணை மூடிகொன்டே “அம்மா....அப்பாஆஆஆ” என கத்த**

“பெற்றோரின் நினைவு வந்து விட்டது போல்” என வருத்தத்துடன் சொன்ன வேந்தன் என்ன செய்வது என தெரியாமல் முழித்து கொண்டிருக்க

வினுவிர்க்கோ அவளின் வேதனை புரிய அவளை தன் தோளோடு அணைக்க

உடனே திமிறிக்கொண்டு எழுந்தவள் .......”.எங்க ஊருக்கு போகணும்....எனக்கு அப்பா அம்மா வேணும்...அவங்க என்னை விட்டு போகமாட்டாங்க” என கத்தி கொண்டே எழுந்து வெளியே ஓடினாள்,

அதை சற்றும் எதிர்பார்க்காத வினு அவள் பின்னால் வேகமாக வர

நடப்பதை புரிந்து விரைந்து முன்னே வந்த வேந்தன் கதவின் முன் நின்று கொண்டு” .....மதி நான் சொல்றத கேளு......அப்பா அம்மா இறந்திட்டாங்கடா.....உங்க அண்ணா நாளைக்கு வந்திடுவான்.....நீ இப்போ உள்ளே போம்மா” என பொறுமையாக சொல்ல

“இல்ல நீ பொய் சொல்ற....நான் ஊருக்கு போகணும்...அங்க ராசு,சீனு எல்லாம் எனக்காக சாப்பிடாம கத்திட்டு இருப்பாங்க....எங்க அப்பாவுக்கும் இட்லின ரொம்ப பிடிக்கும்” என சொல்லி கொண்டே அவள் அவனை தள்ளி கொண்டு வெளியே செல்ல முயன்றாள்.....

அதற்க்கு முன்னாள் சொன்ன சொல் காற்றில் பறக்க “ஏய்....என்ன விளையாடறியா .....நான் தான் சொல்றேன்ல ....முதல்ல உள்ளே போ.....சின்ன பொண்ணுன்னு பொறுமையா சொன்னா ரொம்ப எகிற” என அவன் கோபமாக பேச

அவனது சத்தத்தில் மிரண்டவள் அப்படியே பின்புறம் திரும்பி வினுவை கட்டி கொண்டு....” எங்க அப்பா அம்மா ஒன்னும் சாகல...அவங்க என்ன விட்டு போகமாட்டாங்க.......என்னை திட்றாங்க பாரு.... இப்பதான் திட்ட மாட்டேனு சொன்னாங்க .....எனக்கு பிடிக்கல .........நான் எங்க ஊருக்கு போறேன்னு .... நான் எங்க அண்ணன் கிட்ட போகணும்....போகணும்” என அழுது கொண்டே சொன்ன வார்த்தையே திரும்ப திரும்ப சொல்ல

“இப்போ அழுகையை நிறுத்த போறியா இல்லயா” என மறுபடியும் அவன் அதட்டல் போட,சட்டென்று அழுகை நின்று தேம்பலாக மாற

“போய் சாப்பிடு” என சாதாரண குரலில் சொல்ல

வினு வேந்தனின் செய்கையை புரிந்து கொண்டு அவளை அழைத்து சென்று இட்லி ஊட்ட

அழுகையின் ஊடே இட்லி சாப்பிட்டவள்....உனக்கு தெரியுமா வினு எங்க அப்பாவும் இப்படிதான் ஊட்டி விடுவாங்க....ஆனா இப்ப...என அழுக ஆரம்பிக்க ....அதற்குள் வேந்தன் அருகில் வர அமைதியாக சாப்பிட்டு முடித்தாள்.

பின்னர் அவளை எழுப்பி துணி மாற்ற சொல்லி அவளை சிறிய அறையில் படுக்க வைத்து தட்டி கொடுத்தாள் வினு. ,குமரி குழந்தையாக மாறி துயில் கொள்ளவதை வெளியில் இருந்து பார்த்தவன் இவளை எப்படி மாற்றுவது என்ற எண்ணமே மலைப்பை கொடுக்க பெருமூச்சு விட்டு கொண்டே சென்று சோபாவில் அமர்ந்தான்.

அழுத மயக்கத்தில் வெண்மதி உறங்கிவிட ...எழுந்து வெளியே வந்த வினு....”ஏன் பாஸ் ....பாவம் வெண்மதி...ரொம்ப பயந்துட்டாங்க என சொல்லிவிட்டு ,கொஞ்சம் மென்மையா சொல்லுங்க பாஸ்...ரொம்ப குழந்தை தனமா இருக்காங்க.........கொஞ்சம் பொறுமையா இருங்க “ ......” என்றாள்.

“எனக்கும் புரியுது வினு....நீயும் பார்த்த இல்லயா......எவ்ளோ வேகமா வெளியே வந்தான்னு...எனக்கே பயமாகிடுச்சு....அந்த டென்சொன்ல தான் கத்திட்டேன்.அவளும் பொறுமையா சொன்னா கேட்கமாட்டா....இப்போ பாரு அமைதியாகிட்டா” என சொன்னான்.

“ரொம்ப செல்லமா வளர்த்திருப்பாங்கலாட்ட இருக்கு. பாவம் அடுத்தடுத்த இழப்பை அந்த பொண்ணுனால ஏத்துக்க முடியல.....அதான் இப்படி பண்ணுது” என வேதனையுடன் வினு சொல்ல

“ம்ம்ம்ம் என்றவன்...இதை விட இழப்பை எல்லாம் நாங்க பார்த்திருகோம் வினு.சரி உனக்கு நேரமாகிடுச்சு ....நீ கிளம்பு....நான் பார்த்துகிறேன்” என சொன்னான் .

சரி என்று கிளம்பியவள் ...மறுபடியும் அவளை பார்த்து விட்டு வந்தவள்.....”நல்ல தூங்கிறா சார்....அவளை தொந்தரவு பண்ண

**வேண்டாம்....அப்படியே தூங்கட்டும்.......நீங்களும் போய் படுங்க” என கூறிவிட்டு சென்றாள்.**

**வினு சென்ற பிறகு கதவை அடைத்தவன் மறுபடியும் மதியின் அறைக்குள் வந்து அவள் உறங்குவதை சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவன்,கண்கள் அவனுக்கும் சுலழ அவனது அறைக்கு சென்று படுத்தான்.**

**நடு இரவில்  கனவு வர கண் முழித்தவன் ....எழுந்து பாத்ரூம் செல்ல வெளியே வர அங்க வாயிற்படியில் நடுங்கி கொண்டேவெண்மதி அமர்ந்திருக்க**

**பதற்றத்துடன் “அச்சோ என்ன ஆச்சு.........தூங்கலையா......இங்க என்ன பன்ற நீ என சொல்லி கொண்டே வேகமாக வாசல் கதவை பார்க்க அது மூடபட்டிருந்தது.**

**அவள் பயத்துடன் சுவோரோடு சுவராக ஒட்டி கொண்டு” எனக்கு பயமா இருக்கு......தனியா படுக்க என திக்கி திணறி சொல்லி முடித்தவள்......நான் வேணா ஊருக்கு போய் எங்க அண்ணன் கூட படுத்து கொள்ளட்டுமா “என அப்பாவியாக கேட்க**

**வேந்தனுக்கோ அவளை பார்க்க பாவமாக இருக்க....அவள் அருகில் அமர்ந்து அவள் கைகளை பிடித்தவன்**

**அவள் அந்த பயத்தில் ஏதும் பேசாமல் அமைதியாக இருக்க**

**“எவ்ளோ நேரமா இங்க உட்கார்ந்திருக்க” என கேட்டான்.**

**“ரொம்ப நேரமா இருக்கேன்....”என அவள் மெதுவாக சொன்னவள்**

**“வந்து என்னை எழுப்பி இருக்கலாமல” என்றான்.**

**“ம்ம்ம்ம் ....நீங்க திட்டுனிங்கனா என்ன பண்றது ...”அதான் என அவள் அப்பாவியாக  பதில் சொல்ல**

**“சரி வா என அவளை தனது  அறைக்குள் அழைத்து சென்று இங்க படு....நான் வந்துவிடுகிறேன்” என சொல்லிவிட்டு பாத்ரூம் சென்றான்.**

திரும்பி வந்து பார்த்தால் மெத்தை முழுவதும் அவளே ஆக்கிரமத்தபடி குறுக்காக படுத்திருக்க

இப்போது பாவமாக நிற்பது வேந்தனின் முறையாகி போனது.

எங்கே படுப்பது என்று அவன் குழம்பி போனான்.அவள் கீழே படுப்பாள் என எண்ணிருந்தான்.

அவன் கீழே படுப்பது ஒத்துவராது என நினைத்தவன் மெதுவாக அவள் கால் தலைப்பை நேராக வைத்து அவளை ஒரு பக்கமாக நகர்த்தி தானும் அடுத்த பக்கத்தில் படுத்து கொண்டான்.

சிறிது நேரம் படுத்திருந்தவள்...அப்பா...அப்பா என்று அனத்த

“மதி...மதி...என்ன படுத்து தூங்கு” என அவன் தட்டி கொடுக்க...உடனே அவள் தூக்கத்திலும் கையை நீட்டி ஆள் இருப்பதை உறுதி படுத்திகொண்டவள்....... அவனது இரவு உடையை பிடித்து கொண்டே உறங்க இப்பவும் வேந்தன் நிலைதான் கவலை கிடமானது.எப்படி இருக்க வேண்டிய இரவு என ஒரு நிமிடம் நினைத்தவன்...அவளது முகத்தை ஆவலுடன் பார்த்தான்...பின்னர் உள்மனது அவசரப்படாதே என அவன் தலையில் கொட்ட மனதை சமன்செய்து கொண்டு கண் மூடினான்.

இனிய காலை பொழுது இன்பமாக விடிய எப்போதும் போல் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்தான் வேந்தன்.அவன் யோகாவில் இருக்க

கண் விழித்த வெண்மதி.....கண்ணை தேய்த்து கொண்டே அவனை தேட

ஓம் சத்தம் கேட்கும் திசையில் பார்க்க

அங்கு அவன் கண் மூடி தியானத்தில் இருக்க ,அதை பார்க்க அவளுக்கு சிரிப்பு வர அந்த புன்னகையுடனே குளிக்க சென்றாள்.

வாயிலின் அழைப்பு மணி ஒலிக்க...திரும்பி பார்த்த வெண்மதி....அவன் அசையாமல் இருப்பதை பார்த்து அவளே எழுந்து சென்று கதவை திறந்தாள்.

அங்கு வெளியே தூங்கி எழுந்த அப்படியே வந்தது போல் ஒருவன் நின்று கொண்டிருக்க

"யார்...நீங்க...என்ன வேணும்?" என்றாள்.

அவனோ திரு திருவென்று முழித்தவன் மறுபடியும் வேகமாக வெளியே சென்று வீட்டின் நம்பரை பார்த்து விட்டு மறுபடியும் உள்ளே வந்தவன்....

என்னடா இது விருமாண்டி வீட்டில் வில்லேஜ் குய்னா...இருக்காதே.....என யோசித்தவன்

நான்கு நாளுக்குள் வீட்டிற்க்குள் ஒரு பெண்ணா....அதும் வயசு பெண்ணா.....அடபாவிங்களா.......இருக்காதே ....நம்ம விருமாண்டி விவேகனாந்தர் சீடனாச்சே.....இந்த வில்லங்கத்துல எல்லாம் மாட்ட மாட்டேனே......நம்ம வெற்றி ம்ம்ம்ம் அவன் அப்துல்கலாம் சீடனாச்சே....அப்புறம் என அவனது மூளை யோசனையில் கிளை கிளையாக பிரிய .....

மெதுவாக அவளை நோட்டம் விட்டவன்,16 வயதினிலே படத்தில் ஆத்த நான் பாசாகிட்டேனு ஓடி வர மயிலு கெட்டப்பில் இருக்கும் இந்த குயிலின் பெயர் என்னவோ? என கேட்க

அதற்க்கு ஏற்றார் போல் அவளும் குளித்து விட்டு பெட்டியை திறந்தவள் அனைத்தும் புடவையாக இருக்க ....ஆனால் அவளுக்கோ புடவை கட்ட தெரியாது.தாவணி மட்டுமே வீட்டில் அணிவாள்.கல்லூரிக்கு யூனிபார்ம் சுடிதார்.எடுத்து வைய்த்த பெண்கள் புடவை மட்டுமே எடுத்து வைத்திருக்க,தேடி பார்க்க ஒரு தாவணி செட் உள்ளே இருக்க அதை எடுத்து அணிந்து கொண்டு தலைக்கு குளித்து முடியை 2 ஆக வகுத்து பின்னலிட்டிருந்தாள்.அதனால் அவனுக்கு அப்படி தோனியது அவன் குற்றம் இல்லை.

அவன் கேட்ட தேரோனை அவளுக்கு சிரிப்பு வர,"குரங்குஆட்டம் காட்டுபவன் கையில் இருப்பதி போல் போல் அரைக்கால் ட்ரவுசருடன் வந்திருக்கும் இந்த வானரத்திற்கு தேவையான முகவரி என்னவோ "என அவளும் அவனை போலவே ஒய்யாரமாய் முகத்தை வைத்து கொண்டு கேட்க

என்னதூஊஊஊஊஊஊஊ.........எனக்கே ரிப்பீட்டா........ஆஹா இனியும் பேசிட்டு இருந்தா நமக்கு நல்லதல்ல என முடிவு செய்தவன் .

**“வீட்ல வேற யாரும் இல்லயா” என கேட்டு கொண்டே தலையை உள்ளே விட்டு எட்டி பார்க்க**

**யார் கூட பேச்சிட்டு இருக்க என கேட்டுகொண்டே வெளியே வந்தான் வேந்தன்.**

**வெளியே விபீஷ் யோசனையுடன் நின்று கொண்டிருக்க .....**

**டேய் விபீஷ் ஏண்டா அங்க நிற்கிற...உள்ளே வா என வேந்தன் சொல்ல**

**நண்பா ...இது நம்ம வீடுதான....நீ விருமாண்டி சாரி வேந்தன் தான ......நான் விபீஷ் தான என உளறிகொண்டே உள்ளே வந்தான் விபீஷ்.**

**விதியின் விளையாட்டால்**

**திசை மாறி போய்விடுமோ**

**என் எண்ணியிருந்தவளின் வாழ்க்கை**

**நல்இதயம் படைத்த நாயகனின்**

**கைகளில் சென்றடைய**

**இனி எல்லாம் சுகமே**

**என அனைவரும் நினைக்கும்போது**

**நடந்த நல்ல நிகழ்வுகளை**

**விட்டுவிட்டு**

**நடந்து முடிந்த கசப்பான நினைவுகளை**

**நித்தமும் நினைவில் வைத்து**

**கொண்டிருந்தால்**

**நிம்மதி இழந்து தவிப்பது**

**இரண்டு உயிர்கள் அல்லவா**

லஷ்மிரவி

DO NOT COPY

என்பதை உணருமா அந்த மனம்.

**அத்தியாயம் -6**

“ஏன்டா ஒரு போன் கூட பண்ணல......உனக்கு பண்ணாலும் நாட் ரிச்சப்ல் வருது” என சொல்லிகொண்டே சோபாவில் அமர்ந்தான் வேந்தன்.

“அதை விடுப்பா......என வேகமாக வந்து அவன் அருகில் அமர்ந்தவன் ...என்ன நண்பா இது....நம்ம வீட்ல தேவதை மாதிரி ஒரு பொண்ணு ......சூப்பர் பிகர் நண்பா” என ஜொள்ளு விட்டு கொண்டே சொன்னான்.

“டேய் அது என் மனைவிடா...”.என வேந்தன் வேகமாக சொன்னான்.

“என்னது உன் மனைவியா....எப்படி உனக்கு தான் இன்னும் திருமணமே ஆகலியே .....அப்புறம் எப்படி” என அவன் முழிக்க

“எல்லாம் ஆகிடுச்சு” என ஒரு வார்த்தையில் முடித்தான் வேந்தன்..

“என்னது....எப்போ.....எனக்கு தெரியாம....டேய் என்னடா நடக்குது இங்க” என குதித்தவன்.....ஆமா நம்ம வெற்றி எங்க.....கூப்பிடு அவன.....அவன் வேற நாளைக்கு ஊருக்கு கிளம்பனும்ல......அதான் நானே வேலைய முடிச்சுட்டு சீக்கிரமா வந்தேன்” என சொல்லி கொண்டே விபீஷ் அவனை தேட

வெண்மதிக்கோ தன் அண்ணன் பெயர் கேட்ட உடன் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு வர,முகம் வாடி நின்றாள்.

வெற்றியின் பெயர் எடுத்த உடனே அவன் கைகளை வேந்தன் அழுத்த அவன் கவனிக்கும் மன நிலையில் இல்லை.மதியின் முகத்தை பார்த்த வேந்தன்

“டேய் நீ ஏண்டா மறுபடியும் முதல்ல இருந்து ஆரம்பிக்கிற” என சொல்லி கொண்டே அவன் கைகளை பிடித்து இழுத்து கொண்டு வெளியே சென்றான்.

விபரங்கள் அனைத்தும் கூற முதலில் புரியாமல் கேட்டு கொண்டிருந்தவன் அவன் முடித்தபோது வேதனையின் வலியில் அவன் முகம் இறுகி போய் இருந்தது.

“ஏண்டா எனக்கு சொல்லல என சொல்லும்போதே அழும் நிலைக்கு சென்று விட்ட விபீஷ்....பாவம்டா வெற்றி......இப்படி தொடர்ந்து சோதனை வரகூடாது” என அவன் வருத்ததுடன் சொல்லிவிட்டு சிறிது நேரம் அமைதியாக நின்றான்.

உனக்கு சொல்ல கூடாதுன்னு இல்லைடா விபீஷ்......... அந்த ஊரு குக்கிராமம்....அங்க போன் டவர் கிடைக்கல....யாருக்கும் தகவல் தெரியாது.திருமணம் முடிஞ்சு இங்க வந்து தான் வினுவிர்க்கே சொன்னேன்......உனக்கு ட்ரை பண்ணா நாட் ரிச்சபல்....நான் என்ன பண்ணட்டும்” என நிலைமையை விளக்கினான் வேந்தன்.

“அப்போ  இந்த பொண்ணு வெற்றியோட தங்கையா ” என விபீஷ் இழுக்க

ஆமா வெற்றியோட தங்கை தான்.....வெற்றி கேட்ட போது என்னால் மறுக்க முடியவில்லை....அதுமட்டும் இல்லாம என ஆரம்பித்தவன் பின்னர் பேச்சை மாற்றும் விதமாக ஆமா....நீ போன காரியம் என்னாச்சு.... கிரானைட் கல்லு சொன்ன தேதில இறங்கிடுமா..... ரேட் குறைச்சு பேசினியா ...மெயில் பண்ணிருக்கிள்ள” என அவனது கேள்வியை ஆரம்பித்தான் வேந்தன்.

“அடேய் ....உன் கடமை உணர்ச்சிக்கு ஒரு அளவே இல்லயாடா  என அவனை பார்த்து பாவமாக கேட்ட விபீஷ்......நான் இன்னும் இந்த அதிர்ச்சியில் இருந்த வெளியே வரல...அதுக்குள்ள உன்னோட டார்ச்சர் ஆரம்பிச்சுட்டியா” என கேட்டு கொண்டே தலையில் கைவைத்து கொண்டு அருகில் இருக்கும் துணி துவைக்கும் கல்லில் அமர

“சரி சரி நான் குளிச்சுட்டு வரேன் ...நீ போய் ரெஸ்ட் எடு....அரைமணி நேரம் தான் டைம்....என சொல்லி விட்டு நகர்ந்தவன் ....மறுபடியும் திரும்பி....ம்ம்ம் விபீஷ் அந்த பொண்ணுகிட்ட இத பத்தி கேட்டுடாத....நேத்து நைட் பயங்கர அழுகை என சொல்லிவிட்டு

நடந்தை சொன்னவன் ....என்னையே பயப்பட வச்சுட்டானா பாரு" என்றான்.

"அச்சோ....ரொம்ப சின்ன பொண்ணா தெரியராடா என கேட்ட விபீஷ்...என்னடா படிக்குது அந்த பொண்ணு" என கேட்டான் .

"எனக்கே தெரியாது....இனிதான் விசாரிக்கணும்...அந்த ஊருகார ஆளுக எங்க பேசவிட்டாணுக" என கடுப்புடன் சொல்லிகொண்டே குளியல் அறை நோக்கி நடந்தான் வேந்தன்.

சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தவன் பின்னர் எழுந்து உள்ளே வர

அங்கு வெண்மதியோ சுவற்றை வெறித்து கொண்டு சோகமாக அமர்ந்திருந்தாள்.

அதை பார்த்ததும் வெள்ளத்தில் அடித்து வரப்பட்ட வெண்தாமரை மலர் காம்பு ஒடிந்து கரையில் ஒதுங்கி துவண்டு கிடப்பது போல் தோன்ற ,பால் நிலவு போன்ற முகம் அவளது வெகுளித்தனத்தை வெளிச்சம் போட்டு காட்ட ....பாவம் இந்த சிறுவயதில் இந்த பெண்ணிற்கு எவ்வளவு துன்பம் என நினைத்து அவன் மனம் வருந்தியது.

பின்னர் வேந்தன் சொன்னது நியாபகம் வர....இனி இவள் முகத்தில் சிரிப்பு மட்டுமே நிரந்திரமாக இருக்கவேண்டும் என முடிவு செய்து கொண்டான் விபீஷ்.

"ஹாய்...மயிலு என்ன உன்னோட முட்ட கண்ணால எங்க வீட்டு முட்டு சுவற்றை பார்த்திட்டு இருக்க...எத்தன செங்கல்னு எண்ணிட்டு இருக்கியா "என கேட்டு கொண்டே அவள் முன்னால் நின்றான் விபீஷ்..

அவன் யார் என்று தெரியாமல் அவனிடம் எதுகை மோனையில் பேசியவள் ,அவன் வேந்தனின் நண்பன் என தெரிந்ததும்,அவள் மிகவும் பயந்து போனாள்.இவனும் அவரை போல் தான் இருப்பானோ?நான் பேசியதை சொல்லி இருப்பானோ என எண்ணஓட்டம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் மனதில் ஓடிகொண்டிருந்த வேலையில் இவனது இந்த கிண்டலான பேச்சு அவனுக்கு என்ன பதில் சொல்வது என தெரியாமல் அவள் திருதிருவென்று முழித்தாள்.

“என்ன பதிலே காணோம்...கணக்குல வீக்கோ” என சிரித்து கொண்டே கேட்டவன் .....KKக்கு இப்படி ஒரு அப்பாவி தங்கையா என மனதில் நினைத்தான்...

அதற்குள் “இல்ல...இல்லா “என மதி தடுமாற

“அய்யோ என்ன இது....தொண்டையில் கிச் கிச்சா ....அப்போ உடனே ஆசிட் எடுத்து குடித்தால் அரை நொடியில் குணமாகிவிடும்....அதற்க்கு பின்பு கிச் கிசே இருக்காது...நீங்க ரொம்ப சுகமாக உணர்விங்க” என அவன் முகத்தை சீரியசாக வைத்து கொண்டு சொல்ல மதியினால் சிரிப்பை அடக்க முடியவில்லை.சத்தம் போட்டு சிரித்து விட்டாள்.

“ஹப்பா ....இப்பதான் சூப்பரா இருக்கு.எப்பவும் இப்படியே இருந்தா நல்ல இருக்கும்” என்றான். 1

உடனே அவள் மெதுவாக வந்து அவனிடம் வினுவிடம் கேட்ட அதே கேள்வியை கேட்டாள்...”நீங்க எப்பவும் இப்படிதான் பேசுவிங்களா.....திட்டமாட்டாரா” என கேட்டாள்.

“ஏன் கேட்கிறிங்க ? என்னை யாரு திட்ட போறா.......ஓஒ அதுக்குள்ள அந்த விருமாண்டி இந்த சின்ன பொண்ண பயமுறுத்தி வச்சுட்டானா....வர வர இவன் அலும்புக்கு அளவே இல்லாம போச்சு”...என நினைத்தவன்..

“யாரு வேந்தனா....அவன் கிடக்கிறான் பொடியன்....சின்ன பையன்...உலக அனுபவம் பத்தாது அவனுக்கு .....அவன் எல்லாம் என்னை கண்டு பயப்படுவான்.....நீ போய் அவனுக்கு பயப்படற....இங்க பாரு....உன்னோட குரு நான் இருக்கேன்....நீ எதுக்கும் பயப்படாதே ...அவன் எதாவது சொன்னா என்கிட்டே சொல்லு...நான் பார்த்துகிறேன்” என வீரமாக சொல்லிவிட்டு சுற்றிலும் பார்த்தவன் ஹப்பா இன்னும் குளிச்சுட்டு வரல என நினைத்து பெருமூச்சு விட்டான்.

இவனது இந்த சரளமான பேச்சும், கலையான முகமும் மதிக்கு பிடித்து போக “அப்போ சரி ....மாமா என்னை திட்டினா உடனே உங்ககிட்ட சொல்லிடறேன்....நீங்க அவரை திட்டுங்க” என அவள் அப்பாவியாக சொல்ல

உடனே அவன் "டேய் விபீஷ் இந்த மாதிரி ஆளுங்க இருக்க வரைக்கும் உன்னை யாரும் அசச்சுக்க முடியாது … அசச்சுக்க முடியாது என மனதுக்குள் சொல்லியபடி ....நீ ஒன்னும் கவலை படாதே..... அபயகுரல் கேட்டால் அதும் பெண்களின் அபய குரல் கேட்டால் எங்கிருந்தாலும் ஓடி வந்துவிடுவான் இந்த விபீஷணன்" என அவன் கையை ஆசிர்வதம் பண்ணுவது போல் வைத்து கொண்டு சொன்னான்.

அவனது அந்த செய்கை அவளுக்கு சிரிப்பு வர மனம் விட்டு சிரித்தாள் அந்த மங்கை.அந்த நேரத்தில் குளியல் அறையில் இருந்து வெளியே வந்த வேந்தன் அவளது முகம் மகிழ்ச்சியில் செந்தாமரை போல் சிவந்து இருக்க,அவளது இதழ்களோ ரோஜா மொட்டு தன இதழ்களை விரிப்பது மெல்ல விரிந்திருக்க, அதை ரசித்தவனின் மனமோ அதில் தேன் குடிக்கும் வண்டாக மாற ஏங்கியது.

விபீஷும் அவளது கள்ளமில்லா குழந்தைத்தனமான இந்த சிரிப்பு இப் பெண்ணிற்கு எப்போதும் நிலைத்து இருக்க வேண்டும் என மனதார நினைத்தான்.

சிறிது நேரம் தன் மனையாளை ரசித்தவன்,பின்னர் கடமை நினைவு வர வேகமாக உள்ளே வந்தவன் "விபீஷ் நேரமாச்சு சீக்கிரம் கிளம்பு" என கூறிவிட்டு தனது அறைக்கு சென்றான்.

"என்னது கிளம்பறதா....நான் இன்னும் ரெஸ்ட் எடுக்கலப்பா" என அவன் பாவமாக சொல்ல

"உனக்கு கொடுத்த நேரம் முடிஞ்சுடுச்சு ....சீக்கிரம் கிளம்பு....நான்குநாள் வேலை இருக்கு" என கூறிகொண்டே அவன் கிளம்பி வெளியே வந்தான்.

"வர வர உன் தொல்லை தாங்க முடியல" என முனகிகொன்டே கிளம்ப தயாரானான் விபீஷ்.

வேந்தன் சத்தம் கேட்டதும் வெண்மதி மறுபடியும் தன் கூட்டிற்குள் அடைந்து கொண்டாள்.

அவளிடம் வந்தவன்" மதி இப்போ மெஸ்ல இருந்து சாப்பாடு வந்திடும்.மதியம் எங்களுக்கு வேண்டாம்.நீ செஞ்சு சாப்பிடுக்கோ" என

சொல்லி கொண்டிருக்க அதற்குள் சாப்பாடு வர ,விபீஷும் வர இருவரும் சாப்பிட்டு கிளம்பினார்கள்.

வெண்மதியோ விகித்து போய் நின்றாள்.அவளுக்கு ஏதும் புரியவில்லை.நேற்று தான் வந்தோம்.யாரையும் தெரியாது.இவங்களும் கிளம்பி போய் விட்டார்கள்.என்ன செய்வது என்பதே தெரியவில்லை.அவளுக்கு சமைக்கவும் தெரியாது.நினைக்க நினைக்க ஆத்திரம் பொங்க அழுது கொண்டே அமர்ந்திருந்தாள்.

வேந்தனை பொறுத்த வரை எந்த ஒரு விஷயத்துக்கும் ரொம்ப அலட்டிக்க மாட்டான்.நான்கு நாட்கள் அலுவலகம் செல்லவில்லை என்ற எண்ணமே மனதில் ஓடி கொண்டிருந்ததால் வெண்மதியின் நிலைமை அவன் உணரவில்லை.மேலும் திருமணம் ஆகிவிட்டது.இனி அவள் எல்லாம் தானே தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவன் நினைத்து இருந்தான். பெரியவர்கள் இருந்திருந்தால் எடுத்து சொல்லி இருப்பார்கள்..ஏனெனில் அவன் வளர்ந்த சூழ்நிலை அப்படி.அங்கு சிறு குழந்தைகள் கூட அவர்கள் வேலையை அவர்களே செய்து கொள்வார்கள்.அதனால் அவனுக்கு அது பெரிதாக தோன்ற வில்லை.

வண்டியில் செல்லும்போது வெற்றி எப்போ வருவான் நண்பா என்று கேட்டான் விபீஷ்.

“தெரியலை விபீஷ்....போன் வசதி இல்லாதனால அங்க தொடர்பு கொள்ள முடியல....இன்னைக்கு வந்திடுவான்னு நினைக்கிறேன்.நாளைக்கு காலையில் ப்ளைட்ல” என சொன்னான் வேந்தன்.

அவன் சொன்ன வாக்கு பலிக்க அப்போது தான் ரயில் நிலையம் வந்து இறங்கினான் வெற்றி.நேராக ஆட்டோ பிடித்து வந்து வீட்டில் இறங்கியவன் கதவு திறந்திருக்க..... ஆனால் வேந்தனின் வண்டி இல்லாமல் இருக்க யோசனையுடன் உள்ளே நுழைந்தவன் அங்கு மதி இருக்கும் நிலைமைய பார்த்து ...

“ஐயோ!!!!!! பாப்பா” என அலறிகொண்டே அவளிடம் ஓடினான்.

அலுவலக கட்டிடத்துக்குள் வண்டி நுழைந்த உடன் அலுவலக இன்னும் திறக்க படாமல் இருக்க

“என்னடா இது ஆச்சிரியமா இருக்கு....இன்னேரம் புகை மண்டலாம இருக்க வேண்டிய ஆபிஸ் இப்படி பொசுக்குனு தெரிது....திறக்காம இருக்கு” என வேந்தனை பார்த்து கேட்டான் விபீஷ் .

“தெரியலடா...நேத்து வினு எங்க வீட்ல இருந்து போகவே லேட் ஆகிடுச்சு......சின்ன பொண்ணா இருந்தாலும் எவ்ளோ பொறுப்பா இருக்க தெரியுமா” என வேந்தன் அவளை பற்றி புகழ்ந்து சொல்ல

“ம்ம்ம்ம் ...இருப்பா...இருப்ப” என வார்த்தையில் அழுத்தம் கொடுத்து வாய்க்குள் முனகினான் விபீஷ்.

“என்னடா சொன்ன” என வேந்தன் கேட்க......

“அது ஒன்னும் இல்ல மதி கூட ரொம்ப சின்ன பொண்ணா தெரியுது....பாவம் தனியா வேற விட்டுட்டு வந்துட்டோம்” என்றான் விபீஷ்.

“அதனால என்னடா......நம்ம வீடு தான.....அதான் நேத்து சாய்ந்திரத்துல இருந்து இருக்கால்ல ..........அப்புறம் என்ன ? ...எல்லா பழகிக்கணும் ...அதான் என்னை  பொறுத்தவரைக்கும்  கிணத்துல குதிக்காம நீச்சல் கத்துக்க முடியாது. இரண்டு  நாள் கஷ்டபடுவா...அப்புறம் இதானு பழகிடும்” என்றான்.

“இல்ல நண்பா எனகென்னமோ பயமாத்தான் இருக்கு....அதும் அந்த பொண்ணு உன்ன பார்த்து ரொம்ப பயப்படுது” என விபீஷ் சொல்ல

“ஏண்டா....நான் அவ புருஷன்டா.........என்ன எதுக்கு பார்த்து பயப்படறா அவ” என அவன் எதார்த்தமாக கேட்க

“புரியாம பேசாத வேந்தா” என விபீஷ் வேகமாக சொல்லி கொண்டிருக்கும் போதே “குட்மார்னிங் சார்” என்ற குரல் அவர்களது பேச்சு வார்த்தைக்கு முற்று புள்ளி வைத்தது.

“குட்மார்னிங் வினு என வேந்தன் சிரித்து கொண்டே சொல்ல,விபீஷோ ம்ம்ம் “என அனத்தலோடு முடித்து கொள்ள ஆபிஸ் திறந்த உடன் உள்ளே இருந்து சாம்பிராணி புகை வாசம் வர

“சார் ஆபிஸ் எட்டு  மணிக்கு எல்லாம் திறந்துட்டேன்....கொஞ்சம் அவசரமா அம்மா கூப்பிட்டாங்க அதான்” என தயங்கி சொல்ல

“பரவயில்லை வினு....ஆனா இனி ஆபிஸ் திறந்த பிறகு மூடாத...போன் பண்ணா நாங்க யாரவது வந்திடறோம்” என சொல்லி கொண்டே உள்ளே சென்றான் வேந்தன்.

மெதுவாக படியேறிய விபீஷ் அவளை பார்த்து கொண்டே நடக்க அவளோ அவன் கண்களை பார்க்க முடியாமல் தலை குனிந்து நின்றாள்.

உள்ளே சென்று வேந்தனிடம் தான் சென்று வந்த விபரங்களை கொடுத்து விட்டு வெளியே  வர

அப்போது உள்ளே நுழைந்த ஒரு அழகான  இளைஞன்........”ஹாய் வினு...குட்மார்னிங் ....இந்தா எங்க வீட்ல பூத்தது “என ஒரு வெள்ளை ரோஜாவே அவளிடம் கொடுக்க

“தேங்க்ஸ் ராஜ்” என சிரித்து கொண்டே வாங்கியவள் அதை தன் தலையில் வைக்க திரும்புபோது அங்கு நின்று கொண்டிருந்த விபீஷின் கண்களை பார்த்தவள் அதை அப்படியே கைகளில் மறைத்து கொண்டு

“ராஜ்........சார் வந்துட்டாங்க ......நீ உள்ளே போ” என சொல்லி விட்டு தனது இருக்கையில் அமர்ந்தாள்.

விபீஷ் ஏதும் பேசாமல் அமைதியாக தன் இடத்தில் அமர்ந்தான். 2

சிறிது நேரத்தில் வேந்தன் அவனை அழைக்க உள்ளே சென்றவன் .....விபீஷ் இவர் பெயர் ராஜ்மோகன் .....இவரும் நம்ம சப்ஜெக்ட் தான். வினுவோட கிளாஸ்மேட்....நம்ம வெற்றி கிளம்பறான் இல்லியா ....அந்த வேலைக்காக போட்ருக்கேன்...நீ தான் ராஜஸ்தான் போய் இருந்தில ...அப்போ ஜாயின்ட் பண்ணான்” என சொல்லிவிட்டு

“ராஜ் இவரும் உனக்கு பாஸ் தான்....பெயர் விபீஷணன் “என அறிமுகபடுத்தி வைத்தான் வேந்தன்.

அவனை சிறிது நேரம் முறைத்து பார்த்தவன்.....

ராஜ் அவனுக்கும் விஷ் பணிய்தும் ...ஏதும் சொல்லாமல் தலையை மட்டும் ஆட்டிவிட்டு சென்று விட்டான்.

பின்னர் “அந்த மூன்று சைட் விபரங்களை எடுத்திட்டு வாங்க” என வினுவை பார்த்து சொல்லிவிட்டு தனது இருக்கையில் சென்று அமர்ந்தான்.

“இந்தாங்க சார்....”என குரல் கேட்க நிமிர்ந்தவன் அங்கு ராஜ் நின்று கொண்டிருக்க

“நான் உங்கள கொண்டு வர சொல்லலியே” என்றவன்,

அதற்க்கு ராஜ்....”இல்ல சார்.....வினோ வேலையா இருக்கா...அதான் நான் எடுத்திட்டு வந்தேன்” என்றான்.

“ஓ ரொம்ப பிஸியா” என அவன் ஒரு மாதிரி கேட்க

ராஜ் திரு திரு வென்று முழித்தவன்...”நான் வினோவ வரசொல்றேன் சார் “என கூறிவிட்டு வேகமாக வெளியே சென்றான்.

சில நொடிகளில் வினு உள்ளே வர

நிமிர்ந்து பார்த்தவன் அவள் அவன் கண்களை பார்த்ததும் பார்வையை தாழ்த்த

“என்ன உனக்கு அவன் PAவா .......நீங்க வரமாட்டிங்களோ.....”என அவளை பார்த்து கோபமாக கேட்க

“இல்ல சார்....அவன் தான் புது பாஸ் கிட்ட நானும் கொஞ்சம் பழகிக்கிறேனு எடுத்திட்டு வந்தான்” என மெதுவாக சொன்னாள்.

“ம்ம்ம் எப்படி இருக்க” என அவன் கேட்க

அவள் சட்டென்று குழப்பமாக நிமிர்ந்து பார்க்க

“இல்ல ....நான் ஒரு வாரம் ஊர்ல இல்ல...அதான் வேலை எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு அப்பிடின்னு கேட்டேன்” என்றான்.

உடனே அவள் வேகமாக” அதெல்லாம் நல்ல போயிட்டு இருக்கு சார்.....மோல்டிங் முடிச்சுட்டோம்...அந்த டீசெர்ஸ் காலனி வீடுகோட



DO NOT COPY

மறுபடியும் வொர்க் ஸ்டார்ட் பண்ணிட்டோம்" என அவள் சொல்லிகொண்டே இருக்க

அவனின் மனமோ அவளது முக உணர்சிகளை படம்பிடித்து கொண்டிருந்தது.

அவள் சொல்லி முடித்து விட்டு ..."சார் இனி நீங்க தான் சொல்லணும் "என்றாள்.

அவனிடம் இருந்து எந்த பதிலும் இல்லாமல் போக

."..சார்....சார்...என அழைத்தவள் என்னாச்சு இவர்க்கு"...என யோசனையுடன் நிற்க

அதற்குள் அங்கு வந்த வேந்தன்..."வினு இங்க என்ன பன்ற...அந்த டிராயிங் முடிச்சுட்டிய" என கேட்க

வேந்தனின் சத்ததை கேட்டு நினைவிற்கு வந்தவன்..... சரி...எல்லாம் வச்சுட்டு போ நான் பார்த்து கொள்கிறேன் என்றான்.

வினுவோ அவனை ஒரு மாதிரி பார்த்து கொண்டே சென்றாள்.

"விபீஷ் கொஞ்சம் வேலை இருக்கு...அந்த சமயபுரம் சைட்டுக்கு போயிட்டு  வந்தறேன்....."என கிளம்பினான் வேந்தன்.

" அவ்ளோ தூரமா ....இரு.......நானும் வரேண்டா" என விபீஸ் கிளம்ப

இல்லடா...இன்னைக்குதான ஊர்ல இருந்து வந்திருக்க....கொஞ்சம் ஆபிஸ்ல இரு...அலைச்சல் வேண்டாம் என கூறிவிட்டு சென்றான்.

இதான் வேந்தன்.அவனை பொறுத்தவரை எல்லாமே முறையாக நடக்க வேண்டும்..அதாவது அவனை பொருத்தவரை ஒரு தடவை சோம்பேறிதனத்திர்க்கு இடம் கொடுத்தால் அது நம் உடன்பிறவா சகோதர்ராகிவிடும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன்.நேரத்தை விரயம் செய்வது அவனுக்கு பிடிக்காது.அக்கறை இருந்தாலும் அதை வெளிப்படையாக காட்டி கொள்ள மாட்டான்.அவனது குணம் அது. அதனால் தான் ஊரில் இருந்து வந்த உடன் இவனை அலுவலகத்திற்கு இழுத்து வந்தான்.ஆனால் அவனுக்கு

அலைச்சல் இல்லாமல் அலுவலகத்திலே இருக்குமாறு சொல்லிவிட்டு சென்றான்.

வேந்தன் சென்றதும் ஓய்வாக நாற்காலியில் சாய்ந்தவன் அப்படியே திரும்பி பார்க்க,அங்கு வினு தீவரமாக எதோ வரைந்து கொண்டிருக்க கண்கொட்டாமல் அவளையே பார்த்து கொண்டிருந்தான்.

அலங்காரம் இல்லாத அழகான முகம்,நெற்றியின் முன்பு சுருண்டிருக்கும் இரு முடிகள் அவளுக்கு நெற்றி சுட்டியாக அமைய ,பேசும் கண்கள்,செர்ரி பழம் போன்ற உதடுகள் என அவளை மனதில் வர்ணித்து கொண்டிருக்க ,

.அந்த நேரத்தில் "வினு இந்த டிசைன் பாரேன் ...நல்ல இருக்குல்ல" என சொல்லி கொண்டே ராஜ் அவள் பக்கத்தில் வந்து அமர்ந்து அவளை மறைக்க

"அச்சோ இந்த கொசு தொல்லை தாங்க முடியலைடா......ஒட்டகசிவிங்கிக்கி OOTTO SHIRTS மாட்டின மாதிரி ஒரு உருவம்....கடவுளே" என மனதிற்குள் புலம்பியவன்...."அவனை சொல்லி குத்தமில்லை.இவளை சொல்லணும் என .......இருடி உனக்கு ஆப்பு இருக்கு" என திட்டி கொண்டே அமர்ந்திருந்தான்.

கனவுகளே இல்லாத

கல்யாண வாழ்க்கை

எதிர்பாராமல் அமைந்துவிட

அதை ஏற்று கொண்டு

இல்வாழ்க்கையை நல்வாழ்க்கையாய்

அமைத்திட துடிக்கும் இரண்டு மனம்......

கண்டஉடன் காதல் வர

கனவுகள் மட்டுமே நிஜத்தில் இருக்க

அவை எப்போது நினைவாகும்

என தெரியாமல் காத்திருக்கும்

ஒரு மனம்.......

ஆசைகள் ஆத்மார்த்தமாக இருந்தால்

அரங்கேறும் நாள் விரைவில் வரும்.

என்பது நிதர்சனம்.

**அத்தியாயம்-7**

வானில் தோன்றும் எண்ணற்ற நட்சத்திரங்கள் சந்தோஷ பூக்களாக வானில் படர்ந்திருக்க,அதை தான் தாய் மண்ணில் படுத்து கொண்டு பார்த்து கொண்டிருந்த வெற்றி ,தனக்கு இந்த நான்கு நாட்களில் ஏற்பட்ட வேதனைகள் இவையும் மிஞ்சும் என நினைத்தவன்,அதில் நடுவே வெள்ளி நிலா வான் வீதியில் ஊர்வலம் வர அதை கண்டதும் அவனது மனம் உற்சாகம் கொள்ள இந்த நிலவை போல் நான் ....நட்சத்திரம் போல் எத்தனை துன்பங்கள் வந்தாலும் நிலவை போல் தனி ஒருவனாக நின்று ஜொலிப்பேன்.....என மனதில் நினைத்தபடி படுத்திருந்தவன்,,,,,

நிலவை பார்த்ததும் மதியின் முகம் நினைவு வர ,அவளை சரியான இடத்தில் ஒப்படைத்திருக்கிறோம் என அவன் மனம் திருப்தி அடைய ,நாளை நண்பர்களை சந்திக்கும் நேரத்தை ஆவலோடு எதிர்பார்த்து கொண்டிருந்தான்.

மாறுநாள் கிளம்பி திருச்சி வந்தவன் நேராக வீட்டிற்கு வர அங்கு கிழிந்த நாரை போல் சுருண்டு கிடந்த தங்கையை பார்த்தவன் அதிர்ச்சியில் பதறி கொண்டு ஓடி வர

அவனது குரல் கேட்டாலும் கண் திறக்க முடியாமல் பசி மயக்கத்தில் அவள் இருக்க வெற்றியின் மனமோ வேதனையில் வெந்து துடித்தது.



DO NOT COPY

**“பாப்பு!!!....பாப்பு என்னடா ஆச்சு.....பாப்பு....பாப்பு......”என அவன் வாய் சொல்லி கொண்டிருக்க ,கைகள் அவள் முகத்தை கைகளை உலுக்க.....,”ம்ம்ம்ம்!!! என்ற முனகல் மட்டுமே அவளிடம் இருந்து வந்தது.**

**பின்னர் அவளை மடியில் கிடத்தியவன் அப்போது தான் அவள் கையில் இருக்கும் தன பெற்றோரின் புகைப்படத்தை பார்த்தான்.மனம் பதறியவன்,”பாப்பா ....பாப்பா ...அண்ணன்டா” என சொல்லி படியே அருகில் தண்ணியை எடுத்து அவள் முகத்தில் அடித்தவன். குடிக்கவும் கொடுக்க சற்று தெளிந்தாள் வெண்மதி.**

**கண் திறந்து அவனை பார்த்தவள் “....அண்ணா...அண்ணா....எனக்கு ரொம்ப பயமா இருக்கு!!!!!!....என்னையும் உன் கூடவே கூட்டிட்டு போய்டு!!!!....இல்ல நானும் அப்பா அம்மா கூடவே போயிடறேன்” என அவன் கைகளை பிடித்து கொண்டு கதற வெற்றியின் சப்த நாடியும் ஒரு நிமிடம் அடங்கி பின்னர்  துடித்தது.**

**“ஏண்டா...குட்டிம்மா...ஒன்னுமில்லடா....அண்ணன் வந்திட்டேன்ல ....இங்க பாரு....என அவன் தனது மொத்த பாசத்தையும் வார்த்தையில் கொண்டு வந்து அவளை சமன்படுத்த முயற்சி செய்தான்.ஆனால் அதை கேட்கும் மனநிலையில் அவள் இல்லை.அவனை விட்டு விலகாமல் அதையே சொல்லி கொண்டிருந்தாள்.**

**பேசிகொண்டே சுற்றும் முற்றும் பார்த்தவன் மேசையில் சாப்பாடு அப்படியே இருக்க ,அவளிடம் பேசிகொண்டே அதை தட்டில் வைத்து அவளுக்கு ஊட்டினான்.**

**மதிக்கும் நல்ல பசி இருந்ததால் தேம்பி கொண்டே அதை சாப்பிட்டு முடித்தவள் இன்னும் கொஞ்சம் தெளிவானாள்.**

**பின்னர் அவளை சோபாவில் அமரவைத்து ...”பாப்பா என்னடா இது”.....என கேட்க**

**மீண்டும் அவள் அழ ஆரம்பிக்க**

**“சரி...சரி அழக்கூடாது” என அவள் கண்களை துடைக்க**

**“நீங்க எப்ப வந்திங்க அண்ணா....ரொம்ப நேரம் ஆச்சா என பாசகார தங்கையாக தன் கேள்வியை ஆரம்பித்தவள் பின்னர் ராசு,கண்ணு**



DO NOT COPY

எல்லாம் என்ன பண்ணிங்க.என தன் வீட்டு ஆட்டுகுட்டியில் இருந்து......,ஊர்காரங்க அனைவரயும் நலம் விசாரித்தாள் அவனின் அன்பு தங்கை.

இப்போது தான் வெற்றிக்கு போன உயிர் திரும்பி வந்தது.நம் தங்கை தெளிவாகத்தான் இருக்கிறாள்.பசி மயக்கம்,புது இடம் பயம் அவளை அப்படி பேச வைத்துள்ளது என மனதில் நினைத்தவன் சிறிது நேரம் அவள் போக்கிலே பேசி அவளை பழைய நிலைக்கு கொண்டு வந்தான்.

அண்ணனிடம் வெகு நேரம் பேசி கொண்டிருந்தவள் திடிரென்று."...அய்யோ.....நேரமாகிடுச்சு.....நான் வேற சமைக்கணுமே" என்று சொன்னவள் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நின்றது.

"ஏண்டா....நீ எதுக்கு அழுகுற......ஆமா நீ எதுக்கு சமைக்கிற....எங்க போய்ட்டான் அந்த வேந்தன்" என கேட்டான் வெற்றி.

வேந்தன் பெயரை கேட்டதும் அவள் முகம் மாறுவதை கவனித்தவன் ,,,,,"ஏண்டா,,,,அவன் உன்ன திட்னானா" என கேட்டான் வெற்றி.

அவள்....ஆமாம்....இல்லை என இருபக்கமும் தலை ஆட்ட

"என்னடா சொல்ற" என அவன் கேட்க

ஆமாம் என தலை ஆட்டியவள் ....அவனிடம் நெருங்கி அமர்ந்து "அண்ணா என்னையும் உன்னுடன் கூட்டிட்டு போயட்ரியா.........நான் உனக்கு தொல்லையே கொடுக்க மாட்டேன்....எனக்கு...எனக்கு...அவங்கள பார்த்தாலே பயமா இருக்கு" என அவள் திக்கி திணறி சொல்ல...கண்களில் இருந்து கண்ணீர் அருவி மாதிரி கொட்ட

அவனின் ரத்தமோ கொதித்தது...கண்களில் கோபம் கொழுந்து விட்டு எறிய ..... எதற்கும் தளராத அவனது மனம் தங்கையின் கண்ணீரில் பொடி பொடியாகிவிட கண்களை மூடி சிறிது நேரம் தன்னை ஆசுவாசபடுத்தி கொண்டவன் ,"எங்கே வேந்தன்" என்றான்.

"அவக...அவக...மாமா ஆபிஸ்க்கு போய்ட்டாங்க ......எதோ நான்கு நாள் வேலை இருக்காம்" என சொல்ல

திடிரென்று  வந்த தகவலினால் ஏதும் சொல்லாமல் தன்னுடன் அவனும் கிளம்பி வந்ததால் இங்கு என்ன பிரச்சனை நடந்திருக்கும் என்று வெற்றிக்கும் புரிந்தது.அன்று ஒரு கட்டிடத்திற்கு மோல்ட் போட்டு  கொண்டிருந்தனர்.அதற்க்கு பணம் பட்டுவாடா செய்யாமல் இருந்தது...இவை எல்லாம் அவன் மனதில் ஓட.....கடமை உணர்ச்சி தலை தூக்க....சரி...சரி என சற்று சமாதனம் அடைந்தவன் அவளை தன மடியில்  படுக்க வைத்தான்.

அவளது நிலைமையும்  அவனுக்கு புரிந்தது.அவன் எதிர்பார்த்தானோ இல்லயோ ...ராக்காயி அத்தை அவனிடம் விளக்கமாக சொல்லி அனுப்பி இருந்தாள்.பெற்றவர்கள் இருந்து சொல்ல வேண்டியது.....,இல்லை சொந்தத்தில் பெரியவர்கள் சொல்ல வேண்டியது......இவை இரண்டுமே மதிக்கு கொடுப்பினை இல்லை.அதனால் நீ தான் அவளுக்கு அனைத்துமாகி இருந்து பக்குவாமாக எடுத்து சொல்ல வேண்டும். ....மனைவி என்ற பொறுப்பு சாதரணம் இல்லை என சில அறிவுரைகளை  என சொல்லி இருந்தாள்.

மேலும் வேந்தனை பற்றியும் அவனுக்கு நன்றாக தெரியும் .அவன் பலாபழம் போல்,வெளியே முள்ளாக இருந்தாலும் உள்ளே மென்மையானவன்.அதனால் தான் வேந்தனை தேர்ந்தெடுத்தான்.மேலும் சொந்த பந்தம் யாரும் இல்லாததால் தன் தங்கைக்கு எந்த தொந்தரவும் இருக்காது என கொஞ்ச சுயநலமும் கலந்து யோசித்து தான்  முடிவு எடுத்தான்.

வெண்மதியின் வெகுளித்தனமும் அவனுக்கு தெர்யும்.கும்பலாக இருந்தால் அவளை ஏமாற்றி விடுவார்கள் .அதனால் அதற்க்கு இரும்பு போல் இருக்கும் வேந்தன் தான் சரியாக இருப்பான் என நினைத்தான்.அதனால் தான் இந்த திருமண முடிவு எடுத்தான். யார் எடுத்து சொல்லியும் அவன் கேட்கவில்லை.

ஆனால் இப்போது  அவனது மனதில் ஒரு மூலையில் சின்ன சலனம்.நட்பா?????.....ரத்த பாசமா"??????? என பார்க்கும்போது ஒரு நூலிழையில் பாசம் உயர்ந்து நட்பு கொஞ்சம் இறங்கியது.தான் எடுத்த முடிவு தவறோ என ஒரு சின்ன சலனம் அவன் மனதில் தோன்றியது.

அவனை சொல்லியும் குற்றம் இல்லை....தன பாசமான தங்கை,தான் சொன்ன ஒரு வார்த்தையில் ஏதும் பேசமால் திருமணதிற்கு சம்மதித்தவள் ...........,தன் கைகளை பிடித்து கொண்டு எனக்கு பயமாக இருக்கிறது என சொல்லும்போது யாராக இருந்தாலும் துடித்து போவது உண்மைதானே...

இந்த யோசனையில் மூழ்கி இருந்தவனை ."..அண்ணா....அண்ணா "என வெண்மதியின் குரல் தடுக்க

"ம்ம்ம்....என்னடா" என கேட்டு நினவுலகிர்க்கு வந்தான்.

"என்ன நினைச்சு கவலை பட்றியா......சரிண்ணா நான் உன் கூட வரல ....நீ மட்டும் போயிட்டு வா,,,,ஆனா சீக்கிரம் வந்திடுண்ணா....நம்ம ஊருக்கே போய்டலாம்.இங்க யாருமே இல்ல....பயமா இருக்கு என்றாள் "அந்த வெகுளிபெண்.

அவள் அறியாமைதனத்தை நினைத்து ஒரு புறம் சிரித்தாலும்,மறுநிமிடம் யோசித்தவன் ஒரு முடிவுக்கு வந்தான்.

"இங்க பாரு பாப்பு உனக்கு என்ன பிரச்சனை வந்தாலும் அண்ணா நான் இருக்கேன்.அதுனால நீ எதுக்கும் பயப்படாத ....".என அவளது தலையை வருடிகொண்டே அவளுக்கு நம்பிக்கை ஊட்டினான் அவளது தமையன்.

பெண்குழந்தைகளை பொறுத்த வரை பிறந்த இடத்தில் இருந்து திருமணமாகி வேறு இடத்திற்கு செல்வது வேரோடு மரத்தை பிடுங்கி வேறு இடத்தில் நடுவது போலாகும். மரத்தை வேரோடு பிடுங்கும்போது அந்த இடத்தின் மண்ணும் சிறிது எடுத்து வந்து புது இடத்தில் போடுவது வழக்கம்.அதே போல்தான் பெண்களுக்கும் நீங்கள் எங்கு சென்றாலும் பிறந்த இடத்தின் ஆதரவு உனக்கு எப்பவும் உண்டு என்ற நம்பிக்கையை விதைத்து அனுப்பினால் கண்டிப்பாக அந்த பெண் சென்ற இடத்திலும் கொஞ்சம் நிமிர்வுடன் நடப்பாள்.இது மறுக்க முடியாத உண்மை.

"பாப்பா...வேந்தன் உன்னை என்ன சொன்னான்" என்றான்.

"யாரு மாமாவா என்றவள்.....ஒன்னும் சொல்லல...ஆனால் திட்றார்....மிரட்ராறு...".என நேற்று நடந்த அனைத்தும் சொன்னாள்.

அதை கேட்டவன் தன் நண்பனின் நிலை என்ன...தங்கையின் நிலை என்ன என அனைத்தும் புரிந்து கொண்டான்.

சரி பாப்பா.....நான் ஊர்ல இருந்து சீக்கிரம் வந்து உன்ன கூட்டிட்டு போய்டறேன்.அது வரைக்கும் நீ என்ன  பண்ணனும்னு சொல்லிட்டு போறேன்...அதை செய்யணும் சரியா" என்றான்.

"சீக்கிரம் வந்திடு அண்ணா என்றவள்...சரி சொல்லு என்ன செய்யணும்" என்றாள்.

"முதல்ல பசிக்குது....சாப்பிட சமைக்கணுமா" என்றான்.

"ஆமாம் என்று தலை ஆட்டியவள் ஆனால் எனக்கு தெரியாதே" என்றாள்.

அது ரொம்ப ஈசி பாப்பா....என சொல்லிவிட்டு சமையல் அறைக்கு அழைத்து சென்று அத்தியாவசிய பொருட்களை மட்டும் சொல்லி கொடுத்து ,பருப்பை கடைந்து,ரசம் வைத்து சாப்பாடு எப்படி வைப்பது என அவளுக்கு சொல்லி கொடுத்தபடியே அவன் செய்து முடித்தான்.அவளும் அதை கற்று கொண்டாள்.

இப்போது மதியின் முகத்தில் ஒரு தெளிவு வந்தது.பேசியபடியே இருவரும் சாப்பிட்டு முடித்தனர். சிறு சிறு புத்திமதிகளை அப்படியே தங்கைக்கு சொன்னான் வெற்றி. பின்னர் அவளை சிறிது நேரம் உறங்க சொன்னான்.அவளும் தமயனை பார்த்த சந்தோசத்தில் நிம்மதியாக உறங்கினாள்.

அதற்குள் ஊருக்கு போவதற்கு தேவையான எல்லாவற்றையும் எடுத்து வைத்தான் வெற்றி..அந்த சமயத்தில் வேந்தன் மதியம் வராமல் இருப்பது  மனதில்  சிறு கோபம் ஏற்படுவதை அவனால் தடுக்க முடியவில்லை.மனதை திடபடுத்தி கொண்டு வேளைகளில் கவனம் செலுத்தினான்.தனது தங்கைக்காக சமையல் அறையில் என்னென்ன பொருட்கள் என்பதை சிறு பேப்பரில் எழுதி ஒட்டி வைத்திருந்தான்.

வேலை எல்லாம் முடித்து வேந்தன் நிமிர்ந்து பார்த்த போது மணி 5 தொட்டிருந்தது.விபீஷும் வெளியே சென்று இருந்தான்.மற்ற இருவரும்



DO NOT COPY

கல்லூரிக்கு கிளம்பி இருந்தனர்.அலுவலகத்தில் அவன் மட்டும் தனியாக அமர்ந்திருந்தவன் நினைவுகள் கொஞ்சம் மாற கண்களை மூடி இருக்கையில் அப்படியே சாய்ந்தான்.

வெண்மதியின் செந்தாமரை முகம் நெஞ்சம் முழுவது நிரம்பி இருக்க,அவளை ரசித்த தருணங்கள் அலைகளாக வந்து போக,நினைக்கையிலே உடலில் ஒரு அதிர்வு ஏற்பட ,அந்த இன்பமான நினைவுகளில் மூழ்கி இருந்தவன் ஏதோ தோன்ற கண்களை திறந்து பார்த்தான்.அங்கு வாட்ச்மேன் டீ, வடை வைத்து விட்டு செல்ல,அதை பார்த்ததும் தான்...... தான் சாப்பிடாமல் இருப்பது நினைவு வர ,மதியும் என்ன செய்தாலோ என மனம் பதைபதைக்க உடனே விபீஷ்க்கு போன் செய்தான்.

“விபீஷ் வேலை முடிச்சிட்டியா......வீட்டிற்கு போகலாமா?மதி வேற தனியா இருப்பா” என்றான்.

“நண்பா இப்போவாவது மதி தனியா இருப்பான்னு தோனுச்சே உனக்கு என சொன்னவன்....கொஞ்சம் நேரமாகும் நீ கிளம்பு நான் வந்து விடுகிறேன்” என்றான்.

“இல்ல...இல்ல...நீயும் வா....உன்ன பார்த்தா தான் அவ கொஞ்சம் சிரிக்கிறா” என்றான் வேந்தன்.

“அடபாவி பாசத்துள கூப்பிட்றேனு நினச்சேன்.....இப்படி காமெடி பீசாக்கிட்டியே என்ன” என அவன் புலம்ப

“ தொன தொனனு பேசிட்டு இருக்காம சீக்கிரம் வாடா.....”என்றான் வேந்தன்.

“இல்ல நண்பா என இழுத்த விபீஷ் ,நான் எங்க வீட்டுக்கு போய்டறேன்.அம்மா இன்னும் 2 நாள்ல வந்தட்றேனாங்க ....உனக்கும் இப்பதான் திருமணம் ஆகிருக்கு” என சொல்ல

“லூசாடா நீ....அவளே என்ன பார்த்தா பயப்பட்ரா......உன்கிட்டதான் நல்ல பேசறா....நானே உன்கூடதான் வீட்டுக்கு போகணும்னு நினைச்சிட்டு இருக்கேன்.வெற்றி வேற இன்னும் காணோம்.என்ன பிரச்சனைல

இருக்கானோ....அவனுக்கு எல்லாம் ரெடி பண்ணும் ...முதல்ல நீ கிளம்பி வா" என்றான் வேந்தன்.

"அட ஆமா....வெற்றி கிளம்பனும்ல .....இதோ வந்தறேண்டா" என்றான் விபீஷ்.

வரும் வழியில் எல்லாம் வெண்மதி வெற்றியை பற்றியே யோசித்து கொண்டு வந்தவன்,வீட்டிற்கு வர வாசலில் செருப்பை பார்த்த உடன் வேந்தனின் மனம் சுருங்கியது.ஆனால் விபீஷ் "டேய் வெற்றி வந்துட்டாண்டா......பாவம் என்ன மாதிரி சூழ்நிலையை சமாளிச்சுட்டு வந்திருக்கானோ" என சொல்ல

வேந்தனின் மனம் அந்த பேச்சில் சற்று இதமாக யோசனையுடனே உள்ளே நுழைந்தான்.

அங்கு அண்ணனும் தங்கையும் பெட்டில் துணிகளை அடுக்கி கொண்டிருந்தனர்.

உள்ளே நுழைந்ததும் "ஹே விபீஷ் அண்ணா வந்தாச்சு" என சந்தோசத்தில் மதியின் முகம் விரிய,பின்னால் வேந்தனை பார்த்ததும் அப்படியே அமைதியானவள் மெதுவாக அண்ணனிடம் ஒன்டினாள்.

அதை வெற்றி கவனிக்க .வேந்தனோ வேறு சிந்தனையில் இருந்தான்.

நேராக வெற்றியிடம் வந்த விபீஷ்......"சாரி நண்பா....நான் இல்லாம போயிட்டேன்" என தனது வருத்தத்தை தெரிவித்தவன் பின்னர் அவன் பிரச்சனைகளை எப்படி சமாளித்தான் என கேட்க பேச்சும் பொதுபடையாக மாறியது.நண்பர்கள் மூவரும் மாறி மாறி சில யோசனைகளை சொல்ல ஒரு வழியாக அந்த பேச்சு வார்த்தை முடிவுக்கு வந்தது.

"என்ன மயிலு....உன்ற அண்ணாவுக்கு காபி...தண்ணீ எதாவது கொடுத்தியா" என்றான் விபீஷ்.

"காபியா......இல்ல தண்ணீர்தான் கொடுத்தேன்" என்றாள்.

இரண்டும் ஒன்றுதான் மயிலு....அதும் உங்க அண்ணா போடுவான் பாரு காபி .....அப்படியே பிஸ்லேரி வாட்டெர கொதிக்க வச்சா என்ன எபக்ட் வருமே அதே மாதிரி இருக்கும் என விபீஷ் கிண்டலடிக்க.....

அடபாவி அதேயே 3 கிளாஸ் வாங்கி குடிப்பியேடா என வெற்றி அவனிடம் கேட்க......

"விடு நண்பா ..... சில சமயம் பல்லு விலக்களைனாலும் சுடு தண்ணில வாய் கொப்பிளிச்சா போதும்னு சொன்னங்க ... உன்னோட சுடுதண்ணிய அதான் காபில வாய் கொப்பளிச்சேன் .....ஆனால் சும்மா சொல்ல கூடாது....வாய் புத்துனற்சியோட இருக்கு...பல்லு எல்லாம் பளிச்சுன்னு ஆகிடுச்சு...... என அவன் சொல்ல...அனைவரும் சிரிக்க அவனது பேச்சு அந்த இறுக்கமான சூழ்நிலையை மாற்ற பின்னர் நண்பர்கள் சந்தோசமாக பேசி கொண்டிருந்தனர்.

பின்னர் வெற்றி தங்கையிடம்,"பாப்பா எல்லாருக்கும் காபி போடுமா" என்றான்.

சரி என்று தலையாட்டிவிட்டு அவள் பழகியவள் போல் சமையல் அறைக்குள் செல்ல மற்ற இருவரும் வியந்து பார்த்து கொண்டிருந்தனர்.

"KK உங்க ஊர்ல மந்திரிச்சு தாயத்து ஏதாவது எடுத்திட்டு வந்தியா....மயிலு முகத்துல தவுசண்ட் வாட்ஸ் பல்பு எரியுது"... மந்திரிச்சு விட்ட மாதிரி திடீர்னு சமையல்கட்டு பக்கம் எல்லாம் போகுது..... என விபீஷ் கேட்க

வெற்றி சிரித்து கொண்டே....."இல்லைடா......நான் கொஞ்சம் சமையல் சொல்லி கொடுத்தேன் அதான்" என்றான்.

"என்னது நீயா யா உய யா......... ...ஏன்??????ஏன் இப்படி??? உன் சமையல் கொடுமை தாங்க முடியாம தான்..... நீ ஊருக்கு போறேன்னு சொன்ன உடனே பிள்ளையாருக்கு 50 தேங்காய் உடைச்சேன்.அடபாவி ....அடுத்த ஆள ரெடி பண்ணிட்டு போறியாடா ?ஏன் இந்த கொலைவெறி உனக்கு" என அவன் புலம்ப

அதற்குள் "இந்தாங்க டீ "என வெண்மதி கொடுக்க பயந்து கொண்டே குடித்தவர்கள் முகத்தில் ஆச்சிரியம் தோன்ற



DO NOT COPY

**“மயிலு சூப்பர்” என விபீஷ் பாராட்ட**

**“ரொம்ப நல்லா இருக்குடா” என வெற்றி தங்கையை சீராட்ட**

**மதியின்  முகத்திலோ மகிழ்ச்சி கரை புரண்டு ஓட,வேந்தனின் முகத்தை பார்க்க**

**வேந்தன் எதுவுமே பேசாமல் குடித்து முடித்தான்.**

**சிறிது நேரம் அமைதியாக இருந்த வேந்தன் “நீ எப்போ வந்த வெற்றி” என்றான்.**

**“நான் காலையிலே வந்திட்டேண்டா” என சொல்லி கொண்டே அறைக்குள் அவன் செல்ல**

**“ஏன் ஆபிஸிற்கு வரல ....போன் கூட பண்ணல” என கேட்டான்.**

**“இல்லடா....வரல” என ஒரு மாதிரி குரலில் சொல்லிவிட்டு வெற்றி அவன் வேலையை பார்க்க**

**உடனே விபீஷ்....”நண்பா....பாவம் மதி தனியா இருப்பான்னு நீ எவ்ளோ பீல் பண்ணின....நல்ல வேளை வெற்றி வந்திட்டான்.....இத நினச்சு சந்தோஷபடுவியா “என சொல்லி விட்டு**

**“ஆனாலும் மயிலு உன்ற மாமா உன்ன நினச்சு எம்புட்டு பீல் பண்ணான் தெரியமா?......ஆத்தா வையும் கடைக்கு போகணும் காசு கொடு அப்படின்னு சப்பாணி  சொல்ற மாதிரி..........,மதி தனியா இருப்பா...வீட்டுக்கு போகணும்...சீக்கிரம் வானு என்ன பிராண்டி எடுத்திட்டான்” என சொல்ல**

**வெண்மதியோ வியந்து போய் நிற்க,வெற்றியோ  மனதில் இதமாக உணர்ந்தான்.**

**“டேய் சும்மா இருடா” என அவனை அடக்கினான்  வேந்தன்.**

**“சரி KK அடுத்த வேலை என்ன?” என்றான் விபீஷ்.**

**“ஷாப்பிங் போகணும்” என்றான் வெற்றி.**

**“எதுக்குடா....அதான் எல்லாம் வாங்கிட்டோம்ல” என விபீஷ் கேட்க**



DO NOT COPY

**“இல்லடா....மதிக்கு கொஞ்சம் வாங்கணும்.ஊர்ல இருந்து சேலை மட்டும் எடுத்திட்டு வந்திருக்கா.....சுடிதார் எடுக்கணும்.இன்னும் கொஞ்சம் எதோ வாங்கனுமா அதாண்டா” என சொல்லியபடி கிளம்பி வெளியே வந்தான்.**

**“அப்படியே ஐஸ் கிரீம்பார்லர் போலான்னு சொன்னிங்கலண்ணா” என அவன் தங்கை சந்தோசத்துடன் சொல்ல**

**அமாம் ...ஆமாம் என அவன் தலை ஆட்ட**

**இங்கு வேந்தனின் முகத்திலோ எள்ளும் கொள்ளும் வெடித்தது.**

அன்புக்கு அன்னை

அறிவுக்கு தந்தை

இவை இரண்டையும்

ஒன்றாக தரும் உறவு

தமையன் உறவல்லவா!

பிள்ளையை வயிற்றில் சுமக்கும்

பெண்ணிற்கு அந்த சுமை

பத்து மாதம்தான்.......

ஆனால் தன்னுடன் பிறப்பவள்

பெண்ணாக இருந்து விட்டால்

ஆயுள் முழுவதும் அவளை

மனதில் வைத்து சுமப்பவன்

தமையன் அல்லவா......

திருமணம் முடியும் வரை

தமையன் என்ற முறையில்



DO NOT COPY

சகோதிரியை காப்பது.

திருமணம் முடிந்தத பிறகு

அவளுடிய குழந்தைக்கு

தாய் மாமன் என்ற முறையில்

சீர்கொடுப்பதும்,சீராட்டுவதும்

இறுதி வரை இந்த பந்தம்

இணைபிரியாத பந்தம் அல்லவா!

தமையனும் இன்னொரு தாயுமானவானே !!!!!!!!!!

**அத்தியாயம் -8**

**ஒருவரின் மீது அதிக அன்பு வைத்து விட்டால் அவர்களிடம் நம்மை அறியாமல்  அதிக உரிமை எடுத்து கொள்ள தோன்றும். தன்னவள் என்ற அன்பு மனதில் இருக்க ஆனால் அவளின் மனமோ பாசத்தில் கட்டுண்டு கிடக்க.அது இயல்பானது தான் என அறிவு சொன்னாலும் மனமோ அதை ஏற்று கொள்ள மறுத்து கோபத்தை எழுப்பி விட , வேகமாக இடத்தை விட்டு நகர்ந்தான் வேந்தன்..**

**பேசாமல் உள்ளே சென்று உடை மாற்றி கொண்டு  வெளியே வந்தவன் டிவி முன்பு அமர**

**"என்ன நண்பா....சாதாரண டிரஸ்ல இருக்க......நீ வரலியா" என விபீஷ்**

**கேட்க**

**"இல்லடா.....எனக்கு தலைவலி ....நீங்க போயிட்டு வாங்க "என்றான் வேந்தன்.**



DO NOT COPY

"என்னடா உலற.....என அவன் காதை கடித்த விபீஷ்....அவன் நாளைக்கு ஊருக்கு கிளம்பறான்.....மயிலும் முதல்முறை வெளியே வருது ....நீ இல்லாமையா" என அவனை திட்ட

அதற்குள் மயிலு ...."விபீஷ் அண்ணா ....மாமாக்கு தலைவலியா ....இந்த கஷாயம் சாப்பிட்டா சரியா போய்டும்.....அண்ணா மதியம் சொல்லி தந்தாங்க...சுக்கு எல்லாம் போட்டு இருக்கேன்.....உடனே சரி ஆகிடுமா! .......அதான் போட்டு வந்தேன்" என அவள் தூரத்தில் நின்று கொண்டே விபீஷிடம் நீட்ட

"ம்ம்ம்ம்.....உன்ற மாமாவுக்கு நீயே கொடு மயிலு.....நான் வெற்றி எங்கேனு பார்க்கிறேன்" என சொல்லிவிட்டு பதிலை எதிர்பார்க்காமல் வேந்தனை முறைத்து கொண்டே வெளியேறினான்.

அவன் தலையில் கை வைத்த படி அமர்ந்திருக்க.....தயங்கி...தயங்கி அவன் அருகில் வந்தவள்....."மாமா.....மாமா......டீ என திக்கி திணறி சொன்னவள்.....அவன் நிமிர்ந்து பார்க்க ....முகத்தில் பயத்துடன் ....இல்ல தலைவலிக்குதுன்னு சொன்னிங்கள அதான்" என மெதுவாக சொல்ல

அவளது முகத்தை பார்த்தவன் அவளது பயம் அவன் மனதை பிசைய "ரொம்ப தேங்க்ஸ் மதி" என்ற படி கசாயத்தை வாங்கிகொண்டான்.

அவள் ஏதும் பேசாமல் சுவர் ஓரமாக நின்று கொண்டு அவனயே பார்க்க....குடித்து முடித்தவன் நிமிர்ந்து அவளை பார்க்க ,அவள் கண்கள் கீழே பார்க்க ,"சரி கிளம்பு போலாம்" என்றான்.

உடனே ஒரு சந்தோசம் முகத்தில் பரவ தயாராகி வெளியே வந்தாள்.

"என்ன இப்படியே வா வர" என அவன் கேட்க

"ஆமா என்றாள்" அவள்.....

"என்னது இந்த தாவணி பாவடையோடவா "என அவன் தயங்க

"அதுக்குதான் இப்போ துணி எடுக்க போறோம் " என்றபடி வந்தான் வெற்றி.நீ இன்னும் கிளம்பலயா" என அவன் கண்களை பார்த்து கொண்டே வெற்றி கேட்க ......


DO NOT COPY

**" சிறிது நேரம் அமைதியாக இருந்தவன் ........இதோ இப்ப வந்தறேன்" என உள்ளே சென்று கிளம்பி வெளியே வந்தான்.**

**கடைக்குள் சென்றதும் எப்போதும் போல் வெண்மதி வேடிக்கை பார்த்து கொண்டு நிற்க ,விபீஷும் வெற்றியும் முன்னாடி செல்ல,அவளை பற்றி தெரிந்த வேந்தன் அவளை கண்காணித்தபடியே  வந்தான்.அவள் அப்படியே நின்ற இடத்தில் அவளை அதட்டி அழைத்து வந்தான்.**

**ஒவவொறு முறையும் இவர்கள் இருவரும் அந்த இடத்தை அடைந்து சிறிது நேரத்திற்கு பின்னர்தான் வேந்தனும் மதியும் வந்து சேர்வார்கள்.**

**"மயிலு என்ன எந்த பொம்மையா பார்த்தாலும் அப்படியே நின்னுக்கிற.....நல்ல வேலை வேந்தன் வந்தான்....இல்லினா உன்னயே சிலைன்னு நினச்சு முக்கொம்பு பூங்கால   கொண்டு போய் நிக்கவச்சிருப்பாங்க" என விபீஷ் சிரித்து கொண்டே சொல்ல அதில் இருக்கும் உண்மை வெற்றிக்கும் நன்றாக புரிந்தது.**

**பின்னர் துணி எடுக்கும்போது எல்லாம் அவள் அண்ணனிடமே யோசனை கேட்க**

**வேந்தனும் அதை பற்றி கண்டு கொள்ளவில்லை.ஆனால் இதை கவனித்த விபீஷ்.....**

**"டேய் KK ஒரு நிமிடம் இங்க வா.....ஒரு சின்ன வேலை" என அழைக்க**

**"இருங்க விபீஷ் அண்ணா....டிரஸ் எடுத்திட்டு வரோம்" என அவள் சிணுங்க**

**"அதுக்கு உன்ற மாமா இருக்கான்...அவன புடிச்சுக்கோ......என்றதும்" வெற்றி புரிந்து கொண்டு விபீஷுடன் சென்று விட்டான்.**

**வெண்மதி டிரெஸ்ஸை கையில் வைத்து கொண்டு தனியாக நிற்க**

**"ஏன்மா...எடுக்கிறியா இல்லயா ....பட்டிகாடுனாவே இப்படிதான்" என துணி காட்டுபவன் புலம்ப**

**உடனே மதிக்கு கோபம் வர டிரெஸ்ஸை அவனிடமே தூக்கி எறிந்தவள்..".யார பட்டிகாடுனு சொல்ற" என கோபமாக பேச எண்ணி அழுகை வர**



DO NOT COPY

வேகமாக திரும்பியவள் அங்கு வேந்தன் சோபாவில் அமர்ந்து புத்தகம் படித்து கொண்டிருக்க அவனிடம் சென்றவள்

அந்த கோபத்தில் தனது பயத்தையும் மறந்து" மாமா….அவன் பட்டிகாடுனு என்ன திட்றான்" என அழுது கொண்டே சொல்ல

அவனுக்கு ஒரு நிமிடம் ஒன்றும் புரியவில்லை….மதிதானா தன்னிடம் பேசியது என மீண்டும் தன்னை கில்லி பார்த்தவன்…அதற்குள் அவள் தேம்பி அழ..

"ஹே …அழுகையை நிறுத்து முதல்ல…..எனக்கு அழுகறவங்கள கண்டாவே பிடிக்காது" என அவன் சாதரனமாக சொல்ல நினைத்து அது அதட்டலாக மாற

அவள் சட்டென்று அமைதியாக

அச்சோ என தன்னையே நொந்து கொண்டவன்…"எங்க போனானுக அந்த 2 தடியனங்களும்" என அவர்களை திட்டி கொண்டே அவள் கண்களில் கண்ணீரை துடைத்தவன்….

"அவங்க வெளியே போய்ட்டாங்க….உங்கள பார்க்க சொன்னாங்க" என அவள் சொல்ல

"சரி…யார் திட்டுனா வா" என அழைத்து சென்றவன்…..வேலை செய்பவனிடம்….ஏன் மிஸ்டர் உங்க கடையில துணி எடுக்கணும்னா வெளிநாட்ல இருந்து வந்தாதான் காட்டுவீங்களா? பட்டிகாடுனு சொன்னிங்கலாமா ….கூப்பிடு உங்க ஓனர என சண்டைக்கு போக …..அதற்குள் கடையின் உரிமையாளர் வந்து மன்னிப்பு கேட்க….துணி காட்டுபவனும் மதியிடம் மன்னிப்பு கேட்க மதிக்கோ மகிழ்ச்சி தாங்கவில்லை.கடையின் உரிமையாளர் அவர்களை மரியாதையுடன் தனது அறைக்கு அழைத்து சென்று அழகிய வேலைபாடுகள் நிறைந்த சுடிதார்ஸ் காட்ட அதே தன் மனையாளுக்கு தேர்ந்தெடுத்தான் வேந்தன்.

அவளுக்கு நன்றாக இருகிறதா என வைத்து பார்த்து வேந்தன் எடுக்க…வெண்மதிக்கோ சந்தோசம் தாளவில்லை. அவளது சந்தோசம் அவனையும் தொற்றி கொள்ள……. இறுதியில் வெற்றி எடுத்து வைத்த ட்ரஸ் எல்லாம் அப்படியே விட்டுட்டு வேந்தன் எடுத்ததை மட்டும்

DO NOT COPY

**எடுத்து வந்தாள் வெண்மதி........அந்த சந்தோஷத்தில் அவள் அதை மறந்துவிட்டாள் ..அதான் உண்மை.**

**இங்கு ஒரு ஹோட்டலில் வெற்றியும் விபீஷும் பேசிகொண்டிருக்க யாரோ தங்களையே பார்த்து கொண்டிருப்பது போல் தோன்ற திரும்பி பார்த்த வெற்றி ஒரு பெண் இவர்களது மேஜையை பார்த்து கொண்டிருந்தாள்.சிறிது நேரம் பார்த்து கொண்டிருந்தவன் அவள் யோசனை யுடனே நிற்ப்பதை பார்த்து ..."விபீஷ் உனக்கு தெரிஞ்ச பொண்ணாடா" என கேட்டான்.**

**"யாருப்பா " என விபீஷ் பார்பதற்க்குள்**

**அவள் அங்கிருந்து சென்று விட ஒரு பேரர் வேகமாக வந்தான்.**

**"சார்...இது ஏற்கனவே ரிசெர்வ் பண்ணி வச்சிருகிறது....அதுனால நீங்க கொஞ்சம் இடம் மாத்தி உட்கார்ந்திக்கிரிங்க்லா" என கேட்க**

**வெற்றி "சரி என்று எழுந்திரிக்க....இல்லேயே ரிசெர்வுடுனு எந்த குறிப்பும் மேசையில இல்ல..... நாங்க எதுக்கு எழுந்திரிக்கனும்....."என விபீஷ் எகிற**

**"ஏண்டா.....அதோ அந்த மூலையில இடம் இருக்கு அங்க போலாம் வா...அதான் ரிசெர்வ்டுனு சொல்றாங்கள" என வெற்றி சொல்ல**

**"இல்ல நண்பா ....இங்க இருந்து பார்த்தாதான் பிகர் வர்தெல்லாம் நல்லா தெரியும்.....நான் வரமாட்டேன்...."என அவன் பிடிவாதம் பிடிக்க**

**"டேய் வாடா" என இழுத்து சென்றான் வெற்றி.**

**"என்ன சார் சொல்லாம இங்க வந்திட்டிங்க ....நான் காபி வச்சுக்கிட்டு அங்க தேடறேன் "என அவர்கள் ஆர்டர் கொடுத்த பேரர் வர**

**"அதான் ரிசெர்வேடு மேஜையாம் "என விபீஷ் இழுத்து சொல்ல**

**"என்னது அப்படி எல்லாம் எங்க ஹோட்டேல்ல கிடையாது சார்.யார் முதல்ல வராங்களோ அவங்களுக்குதான்" என்றான் அவன்.**

**வெற்றிக்கு கோபம் குபு குபுவென்று வர....**



DO NOT COPY

“விபீஷோ அதான் சொன்னேன்....கேட்டியா .......யாரு அந்த மேஜைல உட்கார்ந்து இருக்கா ” என திரும்பி பார்த்தான்.

“டேய் எல்லாமே கலேஜ் ஸ்டுடென்ட்ஸ்டா....செம பிகருங்டா” என சந்தோசமாக அவன் சொல்ல

வெற்றியோ கோபத்தில் கொந்தளித்து கொண்டிருந்தவன்...அந்த பேரர் அந்த நேரத்தில் வர

வேகமாக சென்று அவன் சட்டையை பிடித்தவன் ...”ஏன்டா எங்கள பார்த்தா உனக்கு எப்படி தெரியுது ?....அந்த இடம் வேணும்னா மரியாதையா கேட்டு இருக்கலாம்ல....அது எதுக்கு பொய் சொன்ன” என கத்த

அதற்குள் இன்னொருவன் வர...என்ன பிரச்னை என விசாரிக்க வெற்றி விளக்கம் சொல்ல

உடனே அவன் அந்த பேரரை முறைக்க ...”இல்ல டேவிட் அந்த பொண்ணுதான் எங்களுக்கு அந்த டேபிள் தான் வேணும்... நாங்க ரெகுலரா வரவங்கனு சொன்னாங்க......அவங்க தான் இந்த யோசனையும் சொன்னாங்க” என அவன் சொல்ல

வேகமாக வெற்றி அந்த பெண்ணை நோக்கி செல்ல ...”.வேண்டாம் வெற்றி.....நேரமாச்சு வா” என விபீஷ் அவனை இழுக்க.....ஏனெனில் வெற்றி சீக்கிரம் சண்டைக்கு போகமாட்டான்.போனால் கண்டிப்பாக அது பெரிய பிரச்சனை ஆகிடும்.அதனால் விபீஷ் அவனை சமாதானபடுத்த ....அதற்குள் அலைபேசி மணி ஒழிக்க காதில் வைத்தவன் ...இதோ இப்ப வரேண்டா என சொல்லியபடி ....பேரரிடம் திரும்பியவன்...”.தப்பிச்சுட்டா” ....கண்களில் ஆத்திரத்தோடு அவளை பார்த்து கொண்டே வெளியே வந்தான்.

ஆனால் அவள் அவனை கவனிக்கவில்லை.

“டேய் என்னடா.....இதுக்கு போய் இவ்ளோ கோபபடற என விபீஷ் கேட்க

“இல்லைடா அவ முதல்லே இருந்தே நம்ம டேபில பார்த்திட்டு இருந்தா .....அப்பவே கேட்டு இருக்கலாம்ல.....பொய் சொல்லி எழுந்திரிக்க வச்சுட்டா பாரு ....அவள” என திட்டியபடியே வர

அதற்குள் “அண்ணா “என மதி அழுதபடி அவனிடம் ஓடி வர

அனைத்தும் மறந்தவனாக” என்ன பாப்பா” என பதறிக்கொண்டு அவளை அணைத்தவன்.....

அங்கு வேந்தன் முகத்தை கடுகடுவென்று வைத்து கொண்டு நிற்க

அதை பார்த்த விபீஷ்” விருமாண்டி விறைச்சுகிட்டு நிக்கிறதா பார்த்தா ஏதோ வில்லங்கமான விஷயம் நடந்திருக்கும் போல இருக்கே ... இந்த பொண்ணு ரொம்ப பாவம் ” என மனதில் நினைத்தவன்

வெற்றியோ “என்னடா பாப்பா ...ஒன்னும் இல்ல....அதான் அண்ணன் வந்திட்டேன்ல” என சொன்னவன் அவளை அருகில் இருக்கும் சேரில் உட்கார வைத்தான்.

வேந்தனிடம் வந்த விபீஷ்” என்ன நண்பா” என கேட்க

வேந்தன் அவனை திரும்பி முறைக்க

அதற்குள் மதி வெற்றியிடம் “இல்ல அண்ணா ....அங்க ஒருத்தர் ஜோசியம் பார்க்கிரேனு சொன்னாரா.....நான் வேடிக்கை பார்த்திட்டு இருந்தனா.....மாமா ட்ரெஸ்க்கு பணம் கொடுக்க போயிருந்தார்.உனக்கும் சொல்றேன்...நீ காசு கொடுக்க வேண்டாம்னு அவன் சொன்னான்.சரி நானும் கையை நீட்டினேன்....அதுக்குள்ள மாமா வந்து திட்டி என்ன இழுத்திட்டு வந்திட்டார்” என சொன்னவள்

“காசு கொடுத்தா பார்த்தார்.......சும்மாதான பார்கிறேனார்...அதுக்கு போய் அவரை திட்டி அடிக்க போட்டார் மாமா....என்னையும் இழுத்திட்டு வந்திட்டார்.” என அவள் அவன் மீது குற்றபத்திரிக்கை தாக்கல் செய்ய

கேட்ட வெற்றிக்கும்,விபீஷ்க்கும் தலை சுத்த

அட ராமா ...மயிலு...நீ எப்பவுமே இப்படியா....இல்ல எப்பவாவது இப்படியா....எங்கனால முடியல...... என ஆயாசமாக சொன்னவன்........நல்ல வேலை வேந்தன் நல்ல மூட்ல இருந்திருக்கான்...இல்ல அந்த ஜோசியர் செத்திருப்பான்” என விபீஷ் அழுத்தி சொல்ல



DO NOT COPY

**“ஏன் விபீஷ் அண்ணா....இங்க நல்லவங்கள எல்லாரும் அடிப்பாங்களா......காசே இல்லாம பார்க்கிறாருல...எவ்ளோ நல்லவரு அவரு’ ....... என அவள் மறுபடியும் கேட்க**

**“டேய் வெற்றி...போதும்....முடியல......ரத்தம் வருது...கிளம்பலாம்” என வடிவேல் பானியில் விபீஷ் சொல்ல**

**“என்னது ரத்தமா......அச்சச்சோ உங்களையும் யாரது அடிச்சாங்களா....என கேட்டவள்....ஆமா எங்க போனிங்க என்ன விட்டுட்டு” என ஆரம்பிக்க**

**அதற்குள் வெற்றி மதியிடம் அந்த மாதிரி யார் என்ன சொன்னாலும் நம்பகூடாது பாப்பா என அறிவுரை சொன்னவன்**

**பின்பு வேந்தனிடம் வந்த வெற்றி ... “சாரி வேந்தா ...அவ தெரியாம “ என சொல்லி கொண்டே தோளை தொட**

**அவன் கைகளில் தன் கைகளை வைத்தவன்....”அவ என் பொண்டாட்டிடா .....நான் பார்த்துகிறேன்” என சிரித்து கொண்டே சொன்னான்.**

**“தேங்க்ஸ்டா ” என அவனை அணைத்து கொள்ள**

**“இது என்ன மச்சான் முறையிலா...இல்ல நண்பன் முறையிலா” என வேந்தன் கேட்க**

**வெற்றி திடுகென்று விலகி அவனை பார்க்க.....”போடா ....பெருசா தேங்க்ஸ் சொல்ல வந்திட்டான்” என சிரித்து கொண்டே விபீஷிடம் சென்றான். 2**

**இதுபோன்ற பல குளறுபடிகளுடன் அன்றிய ஷாப்பிங் முடித்து விட்டு வீடு வந்து சேர்ந்தனர் நண்பர்கள்.**

**அனைவரும் வெளியே சாப்பிட்டதால் வந்த உடன் படுக்க சென்றனர்.வெண்மதி வேந்தன் எடுத்து தந்த டிரஸ் எல்லாம் இருவரிடமும் காட்டினவள் அவன் தனக்கு பார்த்து பார்த்து எடுத்ததை குதுகலத்துடன் சொல்ல கூட பிறந்தவனின் மனமோ எல்லையில்லா ஆனந்தம் கொண்டது.**



DO NOT COPY

மயிலு கடைசிலே நாங்க எடுத்து கொடுத்த டிரஸ் விட்டுட்டு உன்ற மாமா  எடுத்து கொடுத்த டிரெஸ்ஸ எடுத்திட்டு வந்திட்டா....இந்த பொண்ணுங்களே இப்படிதான்......புருஷன் வந்திட்டா போதும்....கூடபிறந்தவங்கள அப்படியே கலட்டி விட்டுடுவாங்க என சலித்து கொண்டே சொல்ல

“அச்சோ ஆமா.... என பதறியவள் வேணா நாளைக்கு போய் எடுத்திட்டு வந்திடலாம்” என அவள் சொல்ல

“உனக்கு ஏண்டா பொறாமை...என் பொண்டாட்டிக்கு நான் எடுத்து கொடுக்கிறேன்” என வேந்தன் உரிமையுடன் சொல்ல

“அப்படி சொல்லுங்க மாமா” என அவளை அறியாமல் வெண்மதி அவன் சொன்னதற்கு சந்தோசமாக ஒத்து ஊத(இப்பதான்பா...உருப்படியா ஒரு காரியம் பண்ணிருக்கா)

விபீஷுக்கோ  அவளது அந்த கள்ளமில்லா வெகுளித்தனம் பிடித்து போக...”வெற்றியை பார்த்தவன் நீ ரொம்ப அதிர்ஷ்டகாறேண்டா என்றவன் வேந்தனை பார்த்து நீ கொடுத்து வச்சவன்டா இந்த மாதிரி கல்மிஷம் இல்லாத  மனைவி அமைய நீ புண்ணியம் செஞ்சிருக்கணும்” என்றான்.

வேந்தன் வெற்றி என இருவரின் மனதுமே அவனது பேச்சில் மகிழ்ச்சி அடைய

“ஆமா என்னடா படிச்சிருக்கு மயிலு” என்றான் விபீஷ்.

“ஏண்டா “என வெற்றி கேட்க

“இல்ல இப்படி சின்ன பொண்ண இருக்கே....நிறையா பேர் குழந்தை திருமணம்...போலீஸ் பிடிச்சுகும்னு மிரட்றாங்க அதான் கேட்டேன்” என்றான்.

“பாப்பா  சொல்லலியா என்றவன் டீச்சர் ட்ரைனிங் 2 வது  வருஷம்டா “என்றான்.



DO NOT COPY

“என்னது டீச்சர் ட்ரைனிங்கா....கிழிஞ்சுது போ....இதா பார்த்தாவே குழந்தை மாதிரி இருக்கு....இது குழந்தைகளுக்கு சொல்லி தருதா என சொன்னவன்

அதற்குள் என்ன லைட் ஆப் பண்ணலாமா என வேந்தன் கேட்க

“வந்துடாரப்பா...டைம் பீஸ் ....அலாரம் ஆப் ஆகி இருக்கேன்னு நினச்சேன்”....என முனக

“நான் எங்க அண்ணன் கூட படுத்துகிறேன்” என வெண்மதி தலையணையை கொண்டு வந்து வெற்றியின் அருகில் போட

வெற்றியோ வேந்தனை பார்க்க

“அவ உன்கூடவே ...படுக்கட்டும்” என சொல்லி விட்டு அவனும் அவர்களுடன் கீழேயே படுத்து கொண்டான்.

அனைவரும்  நிம்மதியாக தூங்க வெற்றியின் மனமோ பல யோசனைகளில் மூழ்கி இருந்தது.

நாளை கிளம்ப வேண்டும்.அதற்குள் வெண்மதியின் நிலையை  பற்றி எந்த முடிவும் எடுக்க முடியாது.விபீஷிடமும் சொல்லியாகிவிட்டது.அவனும் தான் எல்லாம் பார்த்து கொள்கிறேன் என்று தான் சொல்கிறான்.ஆனாலும் ஏனோ வெற்றியின் மனம் திருப்தி அடையவில்லை.

குழப்பத்திலே படுத்திருந்தவன் இரவு முழுவதும் தூங்காததால் விடியகாலையின் போது நன்கு உறங்கி விட்டான்.

வேந்தன் எப்போதும் போல் எழுந்து தனது வேலையை ஆரம்பிக்க வேற யாரும் எழவில்லை.பின்னர் வெற்றிக்கு தேவையான அனைத்தும் எடுத்து ஓரிடத்தில் வைத்தவன் அனைவருக்கும் பில்டர் காபி தயாரித்து கொண்டிருக்க

நன்றாக தூங்கி கொண்டிருந்த வெண்மதிக்கு காபி வாசனை மூக்கை துளைக்க மெதுவாக எழுந்தவள் “அம்மா எனக்கும் காபி “என கண்ணை கசக்கி கொண்டே சமையல் அறைக்கு வர

அங்கு இருந்த வேந்தன் ஏதும் பேசாமல் அப்படியே நிற்க



DO NOT COPY

“என்னம்மா பண்றா...இவ்ளோ நேரமா” என் சொல்லிகொண்டே உள்ளே வந்தவள் வேந்தனை பார்த்த பின்பு தான் இது தன் வீடு இல்லை என உரைக்க

அவனும் ஏதும் பேசாமல் அவளையே  பார்த்து கொண்டிருக்க

வெண்மதியின்  தூக்கம் இருந்த இடம் தெரியாமல் போக,”மாமா...மாமா நான் அம்மான்னு நினச்சு” என சொல்லி முடிப்பதற்குள்ளே அழுகை முட்டி கொண்டு வர

அவன் சிரித்து கொண்டே அவள் அருகில் வந்தவன்....”காபி வேணுமா...இந்தா” என அவளுக்கு எடுத்து கொடுக்க

“இல்ல...வேண்டாம்” என அவள் பின் வாங்க

“ஏன்....நீ தான கேட்ட” என்றான் வேந்தன்.

“இல்ல நான் தான உங்களுக்கு போட்டு தரனும்......நீங்க ஏன்.......ரொம்ப நேரம் தூங்கிட்டனா” என மெதுவாக கேட்க

“ஹப்பா ....எப்படி இவ்ளோ நீளமான வார்த்தை எல்லாம் என்கிட்டே பேசற நீ” என சிரித்து கொண்டே கேட்டவன்

“பரவாயில்லை....உன்னோட மாமா தான போட்ருக்கேன்....எடுத்துக்கோ “என்றான்.

“ம்ம்ம்ம்......” என வேகமாக தலையை ஆட்டி கொண்டே சந்தோசமாக அதை எடுத்தவள்

அதற்குள்..”.ம்ம்ம் முதல்ல போய் ப்ரெஷ் பண்ணிட்டு வா அப்புறம் குடிக்கலாம்” என அவன் சொன்னதும்

 சரி என்று தலை ஆட்டி விட்டு  முகம் சோர்ந்து  அவள் வெளியே போக

“அதான பார்த்தேன்...என்னடா விருமாண்டி திடிர்னு சந்தோசமா பேசறானேன்னு......அவனோட ரூல்ஸ் இல்லாம அவனால் இருக்க முடியாதே  என அங்கு நடந்த விஷயங்களை படுத்து கொண்டே



DO NOT COPY

கேட்டிருந்த விபீஷ் ....இவனை எல்லாம் திருத்தவே முடியாது" என மனதில் திட்டி கொண்டே மீண்டும் கண்களை மூட

"கண்ணை மூடிகிட்டு அடுத்தவங்க பேசறதை ஒட்டு கேட்கறவங்க எல்லாம் நேரிடியாவே என்னை திட்டலாம்" என சொல்லி கொண்டே விபீஷை கடந்து வெளி திண்ணைக்கு சென்றான் வேந்தன். 3

"ஆஹா 24 மணி நேரமும் அலர்ட்டாவே இருக்கான்பா" என சொல்லி கொண்டே எழுந்த விபீஷ்

"அச்சோ என்னது மணி எட்டு ஆச்சு.... வெற்றிக்கு நேரமாச்சே " என சொல்லி கொண்டே வேகமாக எழுந்து வெற்றியும் எழுப்பி விட்டான்.

பின்னர் இருவரும் அடித்து பிடித்து குளித்து வெளி வருவதற்குள் வேந்தன் கிளம்பி நிற்க

வெண்மதியும் காலையில் உப்புமா தயார் செய்ய அதற்க்கு இடையிடயே உதவியும் செய்தான் வெற்றி.

கிளம்பி வெளியே வந்தவன் அவனுக்கு தேவையான அனைத்து பொருள்களும் தயார் நிலையில் இருக்க ஷூ முதற்கொண்டு பாலிஷ் போட்டிருந்தது.

"ஹே எல்லாம் எடுத்து வச்சுடிங்கலா "என சந்தோசமாக சொல்லி கொண்டே வந்த வெற்றி

"எல்லாம் இவன்தான் பண்ணான் "என விபீஷ் வேந்தனை கை காட்ட

"இந்த பாஸ்போர்ட் ....எல்லாம் சரி பார்த்துக்கோ......உன்னோட ஒத்த தலைவலிக்கான மாத்திரை இதுல வச்சுருக்கேன்"... என வேந்தன் சொல்ல

"அட ஆமா....கிளம்புபோது வாங்கிடலாம்னு அன்னைக்கு வாங்காம வந்திட்டோம்....சூப்பர் நண்பா" என விபீஷ் சொல்ல

"தேங்க்ஸ் நண்பா என்றான் வெற்றி.வேந்தன் எதுவும் சொல்லாமல் சரி சாப்பிட்டு கிளம்பு...ஆபிஸ் போகனுமா?" என கேட்க

இவர்களது பேச்சை கேட்டு கொண்டிருந்த வெண்மதிக்கு அண்ணனக்கு வேந்தன் பார்த்து பார்த்து செய்தது மனதிற்கு மகிழ்ச்சியை தர வேடிக்கை பார்த்து கொண்டு நின்றாள்.

“இல்ல நண்பா ...அவங்க எல்லாம் ஏர்போர்ட்க்கு வந்திருவாங்க” என சொன்னான் வெற்றி.

எல்லாரும் கிளம்ப மதி ஏக்கத்துடன் பார்த்து கொண்டே நிற்க

“நீயும் வறியா மதி” என விபீஷ் கேட்க

சந்தோசத்துடன் அவள் கிளம்ப

“மதி வேண்டாம்” என சொல்லி விட்டு வேந்தன் முன்னாடி நடக்க

வெற்றியோ தங்கையின் முகத்தை பார்த்தவன் அப்படியே நின்று விட்டான்.

பின்னால் திரும்பி பார்த்த வேந்தன் “வெற்றி என்ன பன்ற” என குரல் கொடுக்க

“இல்லைடா பாப்பாவையும் கூட்டிட்டு போலாம்” என சொல்ல

“அதெல்லாம் வேண்டாம்.. நேரமாச்சு சீக்கிரம் வா” என வேந்தன் அதட்ட

அழுது கொண்டே அவள் வேகமாக உள்ளே ஓட

யார்க்காக பேசுவது என புரியாமல் விழித்த வெற்றி அமைதியாக வேந்தனிடம் சென்றான்.

காரில் வேந்தன் பொதுப்படையாக பேச வெற்றியோ ஏதும் பேசாமல் அமைதியாகவே வந்தான்.

பின்னர் விமான நிலையத்தில் அவனது உயர் அதிகாரிகள் இருக்க அவர்களுடன் பேசவே வெற்றிக்கு நேரம் சரியாக இருந்தது.வேந்தனிட விபீஷிடம் கூட அதிகம் பேசவில்லை.

செக் அவுட் முடித்து உள்ளே செல்ல நண்பர்கள் இருவரின் முகத்திலும் பிரிவின் துயரம் தெரிய



DO NOT COPY

தன்னிடம் வந்து அமைதியாக நின்ற நண்பனை அணைத்த வேந்தன் .. "நீ எதை நினச்சு கவலைபடறேன்னு தெரியும்..........எதையும் போட்டு குழப்பிக்காம போ......பழைய வெற்றியாவே இரு ...... நீ எடுத்த முடிவு எப்போதும் தப்பாகாது" என அழுத்தமாக சொல்ல

ஒரு நிமிடம் வெற்றியின் உடல் அதிர......வேந்தா!!! என ஆரம்பிக்க

அதற்குள் அவனுக்கு அழைப்பு வர

விபீஷோ நாங்க பார்த்துகிறோம் என கண்களாலே அவனுக்கு ஆறுதல் சொல்ல

சொல்ல நினைத்த பல விஷயங்கள் சொல்ல முடியாமல் மனதிற்க்குல்லே புதைய , இதழில் மெல்லிய புன்னகையுடனும் விமானம் ஏறினான் வெற்றி.

வெற்றியை வழியனுப்பிவிட்டு வேந்தன் திரும்ப அங்கு விபீஷ் அவனை முறைத்து கொண்டு நின்றான்.

விடியாத இரவும் இல்லை

மலராத பூக்கள் இல்லை

கரை இல்லாத கடலும் இல்லை

நடந்ததை நினைத்து வருந்தாமல்

நடக்கபோவதை நம் வசமாக்கி கொண்டால்

காலமும் நமக்கு கைபிள்ளையாக

மாறிவிடும்

எடுத்த முடிவை நினைத்து வருந்தாமல்

அதை நல்ல முடிவாக மாற்ற

முயற்சி செய்தால்

## அத்தியாயம் -9

மனதிற்குள் ஆயிரம் எண்ணங்கள் இருந்தாலும் அவற்றை வெளிபடுத்தினால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என அனைவரும் நினைக்க, நம்பிக்கை ஒன்று இருந்தால் போதும் எண்ணங்களை வெளிபடுத்தாமலே புரிந்து கொள்ள முடியும் என்பதை இந்த நண்பர்கள் உணர்ந்து கொண்டிருந்தனர்.தனது நண்பனின் மேல் உள்ள நம்பிக்கையில் வெற்றி தனது தங்கையை விட்டு செல்ல,உனது நம்பிக்கைக்கு நான் உகந்தவன் தான் என வேந்தன் தன செய்கையால் நிரூபிக்க நட்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்.

விபீஷும் வேந்தனும் காருக்கு வர ..."ஆனாலும் நண்பா நீ பண்ணது ரொம்ப தப்பு .....மயிலு கூட்டிட்டு வந்திருக்கலாம்.....போகும்போது எவ்ளோ பீல் பண்ணிட்டு போறான்" என விபீஷ் அவனிடம் கோபமாக சொல்ல

"இல்ல விபீஷ்......மதி இங்க வந்திருந்தா நிச்சியம் வெற்றி கிளம்பிருக்கமாட்டான்.அவளை பத்தி உனக்கு தெரியாது....எமோசன் ஆகிட்டா அவ என்ன பண்றான்னு அவளுக்கே தெரியாது....அன்னைக்கு நைட் நான் பட்ட பாடு எனக்கு தான தெரியும்.இங்க அந்த மாதிரி மிரட்ட முடியாது.அப்புறம் வெற்றி ஆபிஸ்ல இருந்து எல்லாரும் வந்திருந்தாங்க....ஆனா அவ வந்திருந்தா வெற்றி அவங்ககிட்ட பேசியிருக்கமாட்டான்.அதான் வேண்டாம்னு சொன்னேன்" என்றான் .

வேந்தன் சொன்னதும் உண்மை என்று விபீஷிர்க்கு புரிய ...".ஓ இவ்ளோ விஷயம் இருக்கா இதுல" என பேசிகொண்டே இருவரும் வீடு வந்து சேர்ந்தனர்.

அன்று விடுமுறை ஆனதால் விபீஷ் ஊர் சுற்ற வெளியே கிளம்ப ...வேந்தனும் வெண்மதியும் மட்டுமே இருந்தனர்.

மதியம் என்ன செய்வது என தெரியாமல் வெண்மதி திணறி கொண்டிருந்தாள்.

வேந்தனிடம் கேட்கலாம் என்று நினைத்தவள்,வெற்றி கூட தன்னை அழைத்து  செல்லாமல் விட்டதனால் அவன் மேல் கோபம் கொண்டு பேசாமல் இருந்தாள்.

வேந்தனோ புத்தகம் படித்து கொண்டிருந்தவன் வீட்டிற்குள் இருந்து பாத்திரம் உருட்டும் சத்தம் கேட்க வேகமாக எழுந்து சமையல் அறைக்கு வந்தான்.அங்கு பாத்திரங்களை எடுத்து அடுக்கி கொண்டிருந்தாள் வெண்மதி.

“மதி என்ன பன்ற ? எதாவது வேணுமா?”என கேட்க

அவன் மீது கோபத்தில் இருந்தவள் பயத்தை மறந்து அவனை திரும்பி ஒரு பார்வை பார்த்து விட்டு ஏதும் பேசாமல் தன் வேலையை தொடர்ந்தாள்.

வேந்தனுக்கோ அந்த பார்வை பிடித்து போக ,சிரித்துகொன்டே நின்று அவள் செய்வதை ரசித்து கொண்டிருந்தான்.

அவன் தன்னேயே பார்ப்பததை உணர்ந்தவள் அதற்க்கு பிறகு வேலை செய்ய முடியாமல் அப்படியே தலை குனிந்து நின்றிருக்க

“அவள் அருகில் வந்த வேந்தன் என்ன ஆச்சு? காலையில் அவ்ளோ பெரிய வசனம் பேசுனிங்க? இப்ப என்ன” என அவள் காதருகில் வந்து கேட்க

அவன் அருகில் வந்ததினால் வந்த பதட்டமா......இல்லை அவன் மேல இருந்த கோபமா என தெரியவில்லை ...ஆனால் பொங்கி எழுந்து விட்டாள் வெண்மதி.

“நீங்க ஒன்னும் பேசாதிங்க மாமா ......எங்க அண்ணன் கூட நான் போவேன்....நீங்க எதுக்கு வேண்டாம்னு சொன்னிங்க.....இனி எங்க அண்ணன் 2 வருசத்துக்கு அப்புறம் தான் வரும் தெரரியுமா? என

DO NOT COPY

சொல்லும்போதே கண்களில் கண்ணீர் வர ..........வந்ததுல இருந்து நானும் பார்க்கிறேன் திட்டிட்டே இருக்கீங்க ?நீங்க இப்படி இருகிறதால எனக்கு உங்கள பிடிக்கலை மாமா......நான் இனி உங்க கூட பேசமாட்டேன்.".......என ரோசமாக சொல்லி கொண்டு சமையல் அறையின் வாயிற்படியில் நின்றவனை இடித்து தள்ளி விட்டு வெளியே வந்தாள்.

வேந்தனோ அவளது சிறுபிள்ளைதனமான இந்த கோபத்தை ரசித்தவன் ,மறுபடியும் அவளிடம் வந்து

"ஆஹா எல்லாருக்கும் மூக்குக்கு மேல கோபம் வந்தா என் பொண்டாட்டிக்கு காது வரைக்கும் கோபம் வருதே" என சொல்லி சிரிக்க

திரும்பி அவனை முறைத்தவள்....".சிரிக்கதிங்க மாமா.....எனக்கு எவ்ளோ கஷ்டமா இருந்திச்சு தெரியுமா? பாவம் அண்ணன் என்ன பார்த்துகிட்டே போச்சு.....எல்லாம் உங்கனாலதான் "என ஆத்திரமாக பேச நினைத்து அழுது கொண்டே சொல்லி முடித்தாள்.

"அவன் சிரித்து கொண்டே நீ என்கிட்டே கேட்கவே இல்லயே மதி "என சொல்ல

"என்ன கேட்கவே இல்ல" என முகம் சுளித்த படி அவள் கேட்க

"நீ வெற்றிய வழியனுப்ப வரேன்னு கேட்டியா.......விபீஷ் தான உன்ன கூப்பிட்டான். உனக்கு எதாவது வேணும்னா நீ தான் கேட்கணும்.மத்தவங்க கேட்பாங்க அதுல நாமும் சேர்ந்துக்லாம்னு இருக்க கூடாது.உனக்கு தேவையான விஷயத்தை மத்தவங்களுக்கு நீ தான் புரிய வைக்கணும்.அதை விட்டுட்டு நீ அழுதுகிட்டே உள்ள போய்ட்ட......அதான் கிளம்பிட்டோம்.அழுகைனால் ஏதும் சாதிக்க முடியாது மதி....அத நல்லா புரிஞ்சுக்கோ....என்ன பொறுத்தவரை உனக்கு எது வேணும்னாலும் நீ தான் கேட்கணும்.அடுத்தவங்கள சிபார்சுக்கு கூப்பிட்றது எனக்கு பிடிக்காது....புரியுதா?"என அவன் சொன்னவன் இப்டியாவது அவள் நம்மிடம் பேசுவாள் ன்று நினைத்தான்.

அவளுக்கு பாதி புரிந்து பாதி புரியவில்லை என்றாலும்,அழுதால் இவனுக்கு பிடிக்காது...திட்டுவான் என்ற பெரிய உண்மையை (அடுத்த கண்டுபிடிப்பு) தெரிந்து கொண்டவள், கண்களை துடைத்து கொண்டு மறுபடியும் சமையல் அறைக்கு சென்றாள். 1

"மாமா இங்க வாங்க" என மதி  வேகமாக அழைக்க .......

"மெதுவா பேசு என சொல்லி கொண்டே வந்தவன் என்ன வேணும்" என கேட்க

இனி எதா இருந்தாலும் நானே உங்ககிட்ட கேட்கிறேன் என சொல்லிவிட்டு சாம்பார் வைக்கணும் ...பாசி பருப்பு எங்க இருக்கு?என கேள்வியில் ஆரம்பித்து சமையல் முடியும் வரை அவனை அது எங்க...இது எங்கனு கேள்வியால் துளைத்து எடுத்தவள் ,அவள் சமையல் முடிப்பதற்குள் இவன் களைத்து போனான்.

வேலை எல்லாம் முடித்து விட்டு பாத்திரத்தை சுத்தம் செய்தவள் காலையில் மீதம் இருந்த உப்புமாவை கீழே கொட்ட செல்ல

தண்ணீர் குடிக்க உள்ளே வந்தவன் ..."என்ன பன்ற" என கேட்க

"உப்புமாவ கீழே கொட்டிட்டு வந்திடறேன் மாமா" என அவள் சொல்லிகொண்டே நகர

என்னது கீழ கொட்றியா? இங்க கொண்டா என வேகமாக வாங்கி பார்த்தவன்........அறிவிருக்கா உனக்கு...... இவ்ளோ பொருளை வீணாக்குற....இந்த சாப்பாடு இல்லாம நாங்க எவ்ளோ கஷ்டபட்ருக்கோம் தெரியுமா? ....ஆள் வளர்ந்தா மாட்டும் பத்து...அறிவும் வளரனும்...".என திட்டிகொண்டே அதே மறுபடியும் ஓவனில் வைத்து சூடு பண்ணியவன்...இதையும் மதிய சாப்பாடோடு வைத்து விடு என சொல்லி விட்டு சென்றான்.

பயத்தை விட்டு அப்போது தான் வெளியே வந்த மதி மீண்டும் அந்த கூண்டிற்குள் சென்று அடைந்து கொண்டாள்.வேந்தனும் புத்தகத்தை எடுத்து கொண்டு பழையபடி படிக்க அமர்ந்தான்.

மதியும் பின்புறம் சென்று அமர்ந்தவள் "இப்போ நான் என்ன செஞ்சேன்.மாமா ஏன் இப்படி கோவிச்சுகிறார் என யோசித்தவள்,கீழே

கொட்ட வேண்டாம் என்று சொல்லி இருந்தால் கேட்டுக்கிறேன்...அதுக்கு போய் திட்றாங்க" என தனது சின்ன மூளையை போட்டு குழப்பி கொண்டிருந்தாள்.அவளுக்கு தெரியுமா இந்த சாப்பாடு கூட இல்லாமல் அவன் எவ்ளோ நாள் பட்டனி கிடந்திருப்பான் என்று அந்த வடு அவன் மனதில் அழுத்தமாக பதித்திருக்கிறது என்று.........மேலும் எந்த பொருளையும் நேரத்தையும் வீணாக்குவது வேந்தனுக்கு பிடிக்காது.இது தெரியாமல் தன்னை வேண்டும் என்றே திட்டுகிறான் என போட்டு குழப்பி கொண்டிருந்தாள் அவன் மனையாள்.

வெளியே சுற்றி விட்டு வீட்டிற்கு வந்த விபீஷ் "மயிலு...மயிலு இன்றய நளபாகம் என்னவோ" என கேட்டு கொண்டே உள்ளே வர

அவனது குரல் கேட்டு வேகமாக வெளியே வந்த மதி "நளபாகமும் இல்லை....துலாபாரமும் இல்லை "என கோபமாக சொல்லிவிட்டு ...எங்க போனிங்க நீங்க  என கேட்க

"ஆஹா மயிலு என்ன கவுண்ட்டர்ல  என்னை விட பின்ற நீ........... வர வர உனக்கு தான் ரசிகர் கூட்டம் ஜாஸ்தி ஆகிட்டே போகுது"  என சொன்னவன்

"என்ன பண்றான் விருமாண்டி.....புதையல தேட்றவனாட்ட புத்தகத்தை புரட்டிகிட்டே உட்கார்ந்திருப்பானே ...எங்க" என கேட்க

"விருமாண்டியா அது யார்?" என அவள் முகம் சுளிக்க

"ஓ  உனக்கு தெரியாதா? ......வேந்தன் தான்" என்றான்.

"ஓ அப்படியா என கண்களை உருட்டி கேட்டவள்....இந்த விஷயம் மாமாக்கு தெர்யுமா" என கேட்க

"தெரியும் ஆனால் தெரியாது....கண்டுக்கமாட்டான்" என்றான் விபிஷ்.

"அது என்ன விபீஷ் அண்ணா நீங்க எது சொன்னாலும் ஒன்னும் சொல்ல மாட்டேன்கிறாங்க.....நான் சொன்ன மட்டும் திட்றாங்க ..."என அவள் அப்பாவியாக கேட்க

விபீஷ்க்கோ என்ன சொல்வெதென்று புரியாமல்"அது வந்து மயிலு இவனும் நல்லவந்தான்.என்ன காலையில எல்லாரும் சட்டைக்கு காஞ்சி போட்டா ,இவன் சத்துக்குனு கஞ்சி குடிக்கிறான்.அதான் நாள் முழுசும்  விறப்பாவே இருக்கிறான்" என அவனும் ரகசியம் போல் சொல்ல

"ஓ அப்படியா "என அவள் அதை நன்றாக கேட்டு கொள்ள பின்னால் வரப்போகும் விபரீதம் தெரியாமல் ஆமாம் ஆமாம் என்று தலையாட்டினான் விபீஷ்..

மதியம் மூவரும் அமர்ந்து சாப்பிட.....நாளைக்கு அம்மா வராங்களாம்....நான் கிளம்பறேன் என சொன்னான் விபீஷ்.

வேந்தன் பேச ஆரம்பிக்கும் முன்

"என்னது கிளம்பரிங்களா.......... என்ன இப்படி சொல்றிங்க...... அய்யோ......அப்போ நான் மட்டும் தனியாவா .....வேண்டாம்ணா....நீங்க போகாதீங்க" என சாப்பிட்டு கொண்டிருந்தவள் கண்ணீருடன் கெஞ்ச

விபீஷ்க்கோ என்ன சொல்வது என்று தெரியாமல் தர்ம சங்கடமான சூழ்நிலையில் நெளிய

வேந்தன்  ஏதும் பேசாமல் தட்டில் இருப்பதை மட்டும் சாப்பிட்டு விட்டு விருட்டென்று எழுந்து சென்றான்.

ஆனால் மதியோ அதை கவனிக்கவில்லை.....தனக்கு இருந்த ஒரு ஆதரவும் தன்னை விட்டு போவது மட்டும் அவள் மனதில் இருக்க

"அண்ணா நீங்க இருங்க அண்ணா....வெற்றி அண்ணாவும் போய்ட்டாங்க...நீங்களும் போய்ட்ட நான் என்ன செய்வேன்.மாமாவும் ஒரு சமயம் நல்ல பேசறாங்க....பலசமயம் திட்றாங்க" என அழுது கொண்டே சொல்ல

சாப்பிடும்போது எதற்கு இந்த பேச்சை எடுத்தோம் என மனதில் புலம்பிய விபீஷ்,வேந்தனின் எண்ணமும் அவனுக்கு பிடிபட முதலில் மதி பேச்சை நிறுத்த வேண்டும் என முடிவு செய்தவன்,

"சரி மயிலு....இங்கே இருக்கேன்....நீ சாப்பிடு" என சொல்ல

“அப்போ நீங்க போகமாட்டீங்கள “ என மறுபடியும் கேட்க

“இல்லம்மா ....போகமாட்டேன்...”என்றான் விபீஷ்.

“அப்போ சரி” என கண்களை துடைத்து கொண்டவள் திரும்பி பார்க்க

“அடடா மாமா அதுக்குள்ள சாப்பிட்டு எழுந்திட்டாங்களா ....நம்மதான் லேட்டா” என சொல்லி கொண்டே அவள் வேகமாக சாப்பிட

இப்போது விபீஷ்க்கே குழப்பமாக இருந்தது.இந்த பெண்ணை வைத்து கொண்டு வேந்தன் எப்படி சமாளிக்க போறான் என்று நினைத்தவன் ,ஆனால் தனது நண்பன் கண்டிப்பாக மாற்றி விடுவான் என்ற நம்பிக்கையும் அவனுக்கு இருந்தது.

நினைப்பது எல்லாம் நடந்து விட்டால் தெய்வம் என்று எதுவும் இல்லை .

இவன் இவளை மாற்றுவான்

என அனைவரும் எதிர்பார்க்க

அந்த மாற்றத்திற்குள்

இவனே மறைந்து போவான்

என்பதை மற்றவர்கள்

அறிவார்களா????? 2

இரவுமகளின் மடியில்  வெள்ளி நிலா வீதி உலா வர ,கொண்டுவரும் சேதி என்ன என வெண்மேகம் விழித்திருக்க ,எண்ணங்களின் ஓட்டத்தில்  தன் வீட்டு மொட்டை மாடியில் வேந்தனும் உலாசென்று கொண்டிருந்தான்.தன் மேல் ஒரு கை விழ திரும்பி பார்த்தவன் விபீஷ் நின்று கொண்டிர்ந்தான்.

“என்ன நண்பா பட்டி வடை சுட்டுட்டு வரும்னு காத்திட்டு இருக்கியா” என ரொம்ப சீரிசாக கேட்க



DO NOT COPY

முதலில் திகைத்தவன் பின்னர் அர்த்தம் புரிந்து தன்னை அறியாமல்அவன் சிரித்து விட

பின்னர் "என்ன விபீஷ்.....என்ன விஷயம் "என கேட்க

"அதான் நானும் கேட்கிறேன்...என்ன விஷயம்......இங்க வந்து நின்னிட்டு இருக்க" என கேட்க

"இல்லைடா சும்மாதான்" என சொன்ன வேந்தன்,வானத்தை பார்த்து கொண்டிருக்க

"ரொம்ப பர்சனல் நினச்சா சொல்லவேண்டாம் என சொன்னவன்,பனிகொட்டுதுடா உள்ள வா......உனக்கு வீசிங் வேற இருக்கு" என சொல்லி விட்டு விபீஷ் அங்கிருந்து நகர

"ஹே அப்படி எல்லாம் இல்ல என் அவனை நிறுத்தியவன் ....எனக்கு எல்லாமே நீங்கதான ......நம்ம மதி பத்தி தான் யோசிச்சுட்டு இருந்தேன்.....ஆமா நீ வீட்டுக்கு அவசியம் போகனுமா?" என்றான்.

இல்ல வேந்தா....அம்மா வராங்க உண்மைதான்......ஆனா நான் இல்லினா மதி இன்னும் கொஞ்சம் உன்கிட்ட ஒட்டி வருவா...அதான் கிளம்ப்லாம்னும் முடிவு பண்ணேன்.

"வேந்தா அது ரொம்ப சின்ன பொண்ணா இருக்குடா .....அதை மாத்தறது கொஞ்சம் கஷ்டம் தான்.வெற்றிகூட ரொம்ப பீல் பண்ணான்.என்னோட சுயநலத்துக்கு வேந்தன பலியாடு ஆகிட்டோனோனு சொன்னான்டா....ஆனா எனக்கு என்னமோ மதி பார்த்தா உனக்கு கடவுள் கொடுத்த கிப்ட் அப்டினுதான் தோணுது.உன்னோட நல்ல மனசுக்கு சூதுவாது தெரியாத அந்த பொண்ணு சரியா இருக்கும்டா.....கொஞ்சநாள் பொறு.....எல்லாம் சரி ஆகிடும்" என தன நண்பன் எங்கே மதியை வெறுத்து விடுவானோ என நினைத்து விபீஷ் பேச

விபீஷை பார்த்த வேந்தன் "ஏண்டா நீ கூட நம்பறியா......நான் வெற்றிக்காக மட்டுமே மதிய கல்யாணம் பண்ணிருப்பேனு என கேட்டவன்,அவன் கேட்கிறதுக்கு முன்னடியே எனக்கு அவளை பிடிச்சு போய்டுச்சுடா....என்ன திடிரென்னு ஏற்பாடு ஆனாதானால என்னால

மதிய பத்தி தெரிஞ்சுக்க முடியல......அவ்ளோதான்.மத்தபடி என் மனசு பூர அவதாண்ட இருக்கா.....இப்பவும் அவ என்ன தவிர்க்கும்போது கோபம் வருது எனக்கு...அது கொஞ்ச நேரம் தான்.எனக்கும் இந்த அனுபவம் புதுசுதான.....அதுனால நீ போட்டு குழப்பிக்காத ....அவளை எப்படி மாற்றலாம்னு தான்  நான் யோசிச்சுட்டு இருக்கேன் என்றான் வேந்தன்..

அவன் பேசி முடிக்க.....”அடபாவி இவ்ளோ ஆசையா மனசுல வச்சுட்டு தான் அந்த பொண்ண அந்த மிரட்டு மிரட்டுனியா நீ” என கேட்க

“இல்லைடா....இப்ப பாரேன் அவ அவங்க அப்பா அம்மாவை மறந்திட்டு நம்மலதான் நினச்சுட்டு இருப்பா ...அதுக்குதான் அப்படி பண்ணேன்” என்றான்.

“ஓ சரி..சரி.... அப்போ நான் கிளம்பறேண்டா நாளைக்கு” என்றான் விபீஷ்.

“எனக்கு ஒன்னும் பிரச்சன இல்ல....மதிய சமாளிக்கிறது உன் பொறுப்பு என சிரித்து கொண்டே சொன்னவன்...விபீஷ் இது ஏதும் மதிக்கு தெரிய வேண்டாம் .அவள பொறுத்த வரை நான் திட்ற மாமாவாகவே இருக்கேன் “என சொல்ல

“ஆமா நான் சொல்லி உன் மனைவி கேட்டாலும்....நீ சிரிச்சு பேசினினாவே அவள கைல பிடிக்க முடியாது என சொன்னவன்..... சீக்கிரம் கீழே போ ...மதி டிவி பார்த்துட்டே உட்கார்ந்திருக்கு” என்றான் விபீஷ்.

“ஏண்டா நீ  கீழே வரல” என வேந்தன் கேட்க

நீ இவ்ளோ நேரம் பாட்டிக்காக  காத்திருந்தில ...நான் கொஞ்ச நேரம் அவங்க பேத்தி கத்ரினா கைப்காக  வெயிட் பண்ணிட்டு வரேன்” என சொல்ல

“பார்த்துடா காத்து கருப்பு எதாவது அடிச்சற போகுது” என சொல்லி விட்டு வேந்தன் கீழே செல்ல

“நான் கத்ரினா கைப்னு சொல்றேன் ...இவன் காத்து கருப்புன்னு சொல்றான் ...என்ன கொடுமைடா  இது” என அவன் முனக

**“நானும் அதை தானடா சொல்றேன்” என அவன் சத்தமாக சொல்லிவிட்டு செல்ல**

**அவனை திரும்பி முறைத்தான் விபீஷ்.**

**கீழே வந்த வேந்தன் அங்கு மதி தலையனைய வைத்து கொண்டு கொட்ட கொட்ட முழித்து கொண்டிருக்க**

**மதியத்தில் இருந்து அவள் அவனிடம் ஏதும் பேசவில்லை....இப்போதும் அமைதியாக உள்ளே வர**

**சிறிது நேரம் அவனியே பார்த்தது கொண்டிருந்தவள் “மாமா...மாமா...”என மெதுவாக அழைக்க**

**ம்ம்ம் என்ற சத்தம் மட்டுமே அவன் பதிலாக கொடுக்க**

**“நான் உங்க கூடவே படுத்துக்கிட்டுமா......எனக்கு தனியா படுக்கிறதுணா பயமா இருக்கு...விபீஷ் அண்ணா வேணுனாலும் இங்கே படுத்துகட்டும்.நானும் படுத்துகிறேன்” என சொல்ல**

**“அவன் தனியா படுத்துக்குவான்....நீ இங்க படு” என வேந்தன் சொல்ல**

**“பாவம் மாமா...விபீஷ அண்ணா ....இங்க நம்ம கூடவே படுத்துக்கிட்டுமே” என சொல்ல**

**திரும்பி வேந்தன் அவளை முறைக்க.”அப்போ அவன் இங்க படுக்கட்டும் ...நீ அங்க போய் படு” என சொல்ல**

**“வேண்டாம் மாமா ... நான் மட்டுமே படுத்துகிறேன்...... குட் நைட் மாமா” என சொல்லி விட்டு அவசரமாக கட்டலில் ஏறி படுத்து கொண்டாள்.அவளின் செய்கை அவனுக்கு சிரிப்பு வர இவளை எப்படி மாற்றுவது என யோசிக்க ஆரம்பித்தான் வேந்தன்.**

**காரணம் இன்றி காரியம் இல்லை**

**காரணத்தை கண்டறிய முற்பட்டால்**

**முடிவு வரும்போது**

லஷ்மிரவி

DO NOT COPY

முதலில் இருப்பதே பரவாயில்லை

என மனம் ஏங்கிபோகிறது.

நினைத்ததை முடிக்காமல்

ஓய மாட்டான் அவன்.

நடப்பதை மட்டுமே

நினைக்க கூடியவள் அவள்.

இவர்களில் மாறபோவது

யாரோ ????????????

விடை தெரிந்தால் கூறுங்களேன்.

**அத்தியாயம் -10**

இன்றைய பொழுது அனைவருக்கும் நல்ல பொழுதாக அமைய வேண்டும் என வேண்டியபடியே எழுந்தான் வேந்தன்.

மனதை ஒருநிலை படுத்த யோகாவில் மூழ்கி இருக்க ,அவனது மனைவியோ அவனுடனே எழுந்து தனது வேலையை பார்க்க சமையல் அறைக்கு செல்ல ,கதிரவனே மறைந்தாலும் தன் கனவை முடிக்காமல் எழுந்திரிக்க கூடாது என கங்கணம் கட்டி கொண்டு விபீஷ் படுத்திருக்க

அதை கூடிய வரை தொடர விடக்கூடாது என்பதற்காவே வந்தவள் போல் “விபீஷ் அண்ணா எழுந்திரிங்க......எழுந்தரிங்க என மதியின் குரல் ஒலித்தது.

“ஆஹா.....கத்ரினா கூட ஒரு டூயட் பாட விடமாட்டேன்கிறாங்க” என புலம்பியபடியே கண்ணை விழித்தவன்

“என்ன மயிலு வேணும்....அவன் தொல்லை தான் தாங்க முடியலைன்னு நினச்சிருந்தா ...இப்போ உன்னோட தொல்லை அதுக்கு மேல இருக்கு போல “ என சொன்னவன்

“சொல்லு மயிலு “என கேட்க

“இல்லண்ணா உங்களுக்கு காபி எடுத்திட்டு வந்தேன் “ என்றாள்.

அப்போ கடிகாரத்தில் இருந்து சத்தம் வர திரும்பி பார்த்தவன்

கடிகாரம் 5 என காட்ட ....”அடகடவுளே மயிலு காபிங்கிறது விடிஞ்சதுக்கு அப்புறம் எழுந்து பிரெஷா இருக்க குடிக்கிறது....இப்படி விடிய விடிய குடிக்கிறதுக்கு இல்ல தெரிஞ்சுதா....”... என அழுபவன் போல சொன்னவன்

“என்னை சுத்தி எல்லாரும் இப்படி நல்லவங்களாவே இருக்காங்களே....என்ன கொடுமை சரவணன் இது” என சொல்லி கொண்டே மீண்டும் படுக்க

“அச்சோ நான் நேரத்த பார்க்கல அண்ணா....மாமா எழுந்தரிச்சரா ....நானும் எழுந்திட்டேன்...சரி தூங்குங்க இன்னும் அரை மணி நேரம் கழிச்சு வரேன்” என சொல்லி விட்டு அவள் நகர்ந்தாள்.

“என்ன மறுபடியும் வருவியா !!!!!!...என்றவன் வேகமாக எழுந்து அந்த காபிய வாங்கி மட மடவென்று குடித்தவன்....இங்க பாரு மயிலு காபி தான குடிக்கணும்..... குடிச்சுட்டேன்....இனி நீ இந்த பக்கம் வர கூடாது ...புரியுதா “என சொல்ல

“என்ன அண்ணா பல்லு விளக்காம குடிச்சிடிங்க “ என்று அவள் கேட்க

“ஷ் ஷ் ஷ் ...காபி கொடுத்திட்டில...கிளம்பு “என சொல்லிவிட்டு அவள் கிளம்ப, “ ஒரு மனுசன நிம்மதியா தூங்க விட்றிங்க்லா” என முனகியபடி மறுபடியும் படுத்து உறங்கினான்.

வேந்தனும் விபீஷும் ஆபிஸ் கிளம்ப ,தான் இன்று கிளம்புவதாகவும் தினமும் மதிய சாப்பாட்டிற்கு வருவதாகவும் விபீஷ் சொல்லி அவளின் அறைகுறையான தலயாட்டுதலை பெற்றவன்,சந்தோசமாக கிளம்ப வேந்தனும் கிளம்பினான்.

“மாமா ….மாமா “என அழைத்து கொன்டே மதி  பின்னே ஓடி வர

என்ன என்று நின்று திரும்பி பார்த்தவன்

“இல்ல மதியம் என்ன சமைகிறது” என கேட்டாள்.

ஒரு நிமிடம் யோசித்தவன் “உனக்கு என்ன பிடிக்கிறதோ அதை செய்” என சிரித்து கொண்டே வேந்தன் சொல்ல வெண்மதியும் சந்தோசமாக தலையாட்டினாள்.

எப்போதும் போல் அலுவலகத்தில் வேலை நடந்து கொண்டிருக்க  ராஜ் அடிகடி வினுவிடம் சென்று பேசுவது விபீஷிர்க்கு எரிச்சலை வரவழைத்தது.

மேலும் எப்போதும் விபிஷிர்க்கு காலையில் புன்னகையுடன் கூடிய குட் மார்னிங் வினுவிடம் இருந்து வரும்.ஆனால் இன்று ராஜிடம் பேசிகொண்டே அவள் விபீஷ் வந்ததை கவனிக்கவில்லை.பின்னால் வந்த வேந்தனுக்கு மட்டும் விஷ் பண்ணினாள் .அப்போதே விபீஷிர்க்கு அவள் மேல் கோபம் .இந்த ராஜ் வந்ததில்  இருந்து தான் தன்னை கண்டுகொள்ள மாட்டேன் என்கிறாள் என்று  மனதில் புலம்பி கொண்டிருந்தான்.

அப்போது என்று  சேலரி வவுச்சரில் கையெழுத்து வாங்க ராஜ் வர,அதில் சிறு தவறு இருக்க

“என்ன ராஜ்…..இத கூட கவனிக்காம என்ன பண்றிங்க…வேலைக்கு வந்தா வேலைய மட்டும்தான் பார்க்கணும்…சும்மா கண்டபடி மனச அலைபாய விட்ட இப்படிதான்…எங்களுக்கு சின்சியரான ஆள் தான் வேண்டும்….பிடிகலையினா நீங்க நின்றுங்க” என கோபத்தில் என்ன வார்த்தை பேசுகிறோம் என தெரியாமல் அவன் வார்த்தைகளை கொட்ட

இந்த சின்ன விஷயத்திற்கு இவர் ஏன் இவ்ளோ கோபபடறார் என புரியாமல்  ராஜ் முழிக்க. விபிஷின் பேச்சு அவனுக்கு சினத்தை மூட்ட…சாரி சார்….இனி இந்த தப்பு நடக்காம பார்த்துகிறேன் என வெடுகென்று  சொல்லிவிட்டு வேகமாக வெளியே வந்தான்…



DO NOT COPY

**அவனது வேகத்த பார்த்த வினு "என்ன ஆச்சு ராஜ்?" என கேட்க**

**அவனும் நடந்ததை சொன்னவன்...."இது சின்ன தவறு தான் வினு...இதுக்கு போய் வேலைய விட்டு போன்னு சொல்லாம சொல்றார்....இவர் வேற எதோ மனசுல வச்சுட்டு பேசறார்.....தேவையில்லாத வார்த்தயை உபயோகிக்கிறார் "என சொல்ல**

**"அப்படியா...சார் அப்படி எல்லாம் பேசமாட்டாரே......இங்க பார் ராஜ் சார் ரொம்ப நல்ல டைப்.....எதையும் ஈசியா எடுத்துக்குவார்......ம்ம்ம் எதோ மூட் அவுட்ல இருப்பார் போல இருக்கு....நீ அவரு சொன்னத பெருசா எடுத்துக்காத...நீ எப்போதும் போல வேலைய பாரு" என்றாள். .**

**அவன் சென்றதும் சிறிது நேரம் யோசிச்ச வினு பின்னர் நேராக விபீஷிடம் சென்றாள்.**

**விபீஷோ அவனை திட்டி விட்டு தன்னை தானே நொந்து கொண்டிருந்தான்.இப்ப எல்லாம் அடிகடி கோபம் வருது...குறைக்கணும் என யோசித்தபடி இருக்க**

**அவன் முன்னாள் வந்து நின்ற வினி.... "என்ன சார் ஆச்சு......உடம்பு சரி இல்லயா ...எதாவது பிரச்சனயா? ....ரொம்ப டென்ஷன்ல இருக்கீங்க "என கேட்க**

**அவளது கனிவான விசாரிப்பு அவன் மனதில் இன்ப சாரலை தூவ....."இல்ல வினு அப்படி எல்லாம் இல்லை....நல்லாத்தான் இருக்கேன்"....என சிரித்து கொண்டே சொன்னான்.**

**."அப்புறம் எதுக்கு சார் ராஜ அப்படி திட்னிங்க...பாவம் எவ்ளோ பீல் பண்றார்.....புதுசா சேர்ந்திருக்கார் ....நம்ம தான சொல்லி கொடுக்கணும் என அவள் சாதரணமாகத்தான் சொன்னாள்..**

**"ராஜ் பெயரை அவள் சொன்னதை கேட்ட உடனே விபீஷிர்க்கு கோபம் வர...ஒ நீங்க அவனுக்கு சப்போர்ட்டா....ஏன் நான் திட்ட கூடாதா....வேலை செய்யறவங்க தப்பு பண்ணா திட்றது சகஜம் தான ...இது என்ன புதுசா வந்து கேட்கிற?...ரொம்ப பாசமோ....." என வேகமாக கேட்க**



DO NOT COPY

"ஏன் சார் நான் கேட்க கூடாதா?"...நானும் இங்க வேலை செய்கிறேன் என்ற அர்த்தத்தில் அவள் கேட்க

"ஓ ...ஆமாமா நீயும் இங்க பார்ட்னெர்தான....சரி சரி...இனி நான் ஏதும் பேசுல  நீங்களே பேசுங்க" என  அவன் கோபமாக சொல்ல

இவன் இப்படி பேசுவான் என எதிர்பார்க்காத வினு அதிர்ந்து நிற்க

அப்போது அங்கு வந்த வேந்தன் "டேய் அந்த டீச்சர்ஸ் காலனி சைட்க்கு விசிட் போகலியா....மேஸ்திரி போன் பண்ணான்...எனக்கு வேலை இருக்கு ....நீ ஆடிட்டர் ஆபிஸ் போயிட்டு வந்திட்டியா" என கேட்க

"இல்ல நண்பா இப்ப  ஆடிட்டர் ஆபிஸ் கிளம்பறேன்" என அவளை முறைத்து கொண்டே அவன்  கிளம்பினான்.

"அப்ப சைட்க்கு  யார் போறது?" என வேந்தன் சொல்லும்போதே

"நான் வேணா போகிறேன் சார்" என்றாள் வினு.

"நீயா வினு என யோசித்தவன் இல்ல நம்ம ராஜ் அனுப்பி வை" என்றான்.

"இல்ல சார் ராஜ்க்கு அந்த இடம் தெரியாது.அப்புறம் புதுசு வேற...அதுனால நான்  வேனா கூடபோய் சொல்லிட்டு வந்திடறேன். அப்புறம் அவர் போய்க்குவார்" என்றாள் வினு.

"ஆமா ஆமா அதும் சரிதான்" என வேந்தன் சொல்ல

வண்டி சாவி எடுக்க வந்தவன் காதில் இந்த பேச்சு விழ

மனம் அனலென கொதிக்க அவளை முறைக்க

வேந்தனிடம் பேசிவிட்டு திரும்பியவள் விபீஷின் அக்னி பார்வையை கண்டதும் சற்று மிரண்டு பின் வாங்கினாள்,

"ஹே வினு நீயும் நானும் அவுட் சைட்க்கு போறமா...சார் சொன்னார்...சூப்பர்...வா போலாம்" என சந்தோசமாக சொல்லி கொண்டே ராஜ் அங்கு வர

அந்த நேரத்தில் ராஜ் மட்டும் அவன் கண்களை பார்த்திருந்தால் பொசுங்கி இருப்பான்.அவனோ வினுவை பார்த்து கொண்டிருந்தான்..

கோபத்தை மனதினில் அடக்கியவன் அதன் வேகத்தை வண்டியில் காட்ட ஸ்டார்ட் பண்ண சத்தம் மட்டும் தான் கேட்டது.வினு வெளியே வருவதற்குள் அந்த தெருவை கடந்திருந்தான் விபீஷ்.

வினுவின் மனமோ சுழலில் சிக்கிய கப்பலை போல் சுழன்று கொண்டிருந்தது.

வண்டியில் சென்று கொண்டிருந்த விபீஷ் எண்ணங்களோ காற்றை விட வேகமாக ஓடிகொண்டிருந்தது.தான் இவ்வாறு ஆத்திரபடுவது தவறு என அவனுக்கு தெரிந்தாலும் காதல் கொண்ட மனமோ அதை ஏற்று கொள்ள மறுக்கிறது.

விபீஷ் வினுவை உயிருக்கு உயிராக நேசிக்கிறான்.ஆனா இது யாருக்கும் தெரியாது.ஏன் வினுவிடம் கூட இவன் சொல்ல வில்லை. முதல் பார்வையிலே வினு அவன் இதயத்தில் இடம் பிடித்து விட்டாள்.. வினு முதன் முதலில் வேலை கேட்டு வந்த போது, படபடக்கும் விழிகளோடு , முகத்தில் சிறு பயத்தோடு ,அதே சமயத்தில் நிமிர்ந்த நடையோடு அவள் உள்ளே நுழைய ,அவளது முதல் பார்வை விபீஷின் மேல் விழ ,அந்த விழிகள் ஏதோ அவனுக்கு சொல்வது போல் இருக்க,கலந்த விழிகளில் இரு விழிகள் பிரிய மனம் இல்லாமல் பிரிந்து அருகில் இருக்கும் நபரிடம் செல்ல,விபீஷின் விழிகளோ அவளையே தொடர்ந்தது.அவளுக்கு வேலை தருவது என வேந்தன் சொன்னதும் வினுவை விட அதிகம் சந்தோசப்பட்டது விபீஷ் தான்.தேவியின் தரிசனம் தினமும் கிடைக்குமே...ஆனால் அந்த தேவியோ எப்போதும் போல் அனைவருக்கும் தரிசனம் தந்தாள்..அவளை பொறுத்த வரை இவர்கள் மூவரும் ஒன்றே என்று தான் நினைத்தாள்..

வேந்தனும் வெற்றியும் அவளிடம் பொறுமையாக பேசும்போது இவனால் மட்டும் பேச முடியவில்லை.பேசினால் எங்கே மனதில் இருப்பது வெளியே வந்து விடுமோ என எண்ணியே அவளை பார்க்கும்போது எல்லாம் சிடு சிடுவேன்றே இருந்தான்.வினுவும்

முதலில் அதை கண்டு வருத்தபட்டவள் பின்னர் கண்டு கொள்வதில்லை.அதும் வேந்தன் அவளிடம் மிகவும் பாசமாக இருப்பது விபீஷின் மனதில் பொறாமையை ஏற்றி விட்டு கொண்டிருந்தது.அதனாலே அவளை காரணம் இல்லாமல் திட்டுவான். காதல் என்று வந்து விட்டால் நிழலும் எதிரியாக மாறும்போது நண்பர்கள் மட்டும் அதற்க்கு விதி விலக்கா என்ன ?

வேந்தனின் திருமணம்,வெற்றியின் வெளிநாட்டு பயணம் என எல்லா பிரச்சனையும் முடிந்தது என நினைத்து கொண்டிருக்கும்போது புதிதாக ராஜ் முளைக்க விபீஷிர்க்கோ கோபம் கொழுந்து விட்டு எரிந்தது.அதுவும் வினுவும் அவனிடம் பேச அவன் மனம் கொந்தளித்து கொண்டிருந்தது.அதற்க்கு என்னை ஊற்றுவது போல இன்றிய நிகழ்ச்சி நடக்க எங்கே இருந்தால் அவளை திட்டி விடுவோமோ என எண்ணி விருட்டென்று கிளம்பி விட்டான்.

இது ஏதும் தெரியாத வினு ....விபீஷ் தன் மேல் ஏன் இவ்ளோ கோபபடுகிறார்? என தெரியாமல் தவித்து கொண்டிருந்தாள். 2

தன் வேலையை முடித்து கொண்டு மதியம் திரும்பி வந்தவன் அங்கு வினு அமர்ந்திருக்க அவளை முறைத்து கொண்டே தனது இருக்கைக்கு சென்றான்.

வேந்தனும் ராஜும் இல்லாததால் இவர்கள் இருவர் மட்டுமே இருக்க ....சிறிது நேரம் அப்படியே அமர்ந்திருந்தவன் “வேந்தன் எங்க”? என கேட்க

“ராஜும் அவரும் டீச்சர்ஸ் காலனி சைட்க்கு போய்ட்டாங்க சார்” என சொல்ல

ஏன் நீ போகலையா?” என அவன் கேட்க

“இல்ல போகல” என மெதுவாக சொன்னாள்.

ஏன்? என அவன் கேட்க

விபீஷ் வேகமாக கிளம்பியதும் வினு ஓடி பார்த்தவள் நேராக ராஜிடம் வந்து “ஏன் ராஜ் நான் எதாவது தப்பா சொல்லிட்டனா ....சார் ஏன் என்ன முறைச்சு பார்த்திட்டு போறார்” என கேட்க

**ராஜ்விற்கு ஏதோ புரிவது போல் இருந்தது.ராஜூம் வந்ததில் இருந்து கவனித்து கொண்டுதான் இருக்கிறான்.அவன் வினுவிடம் பேசும்போது மட்டுமே விபீஷ் கோபபடுவான்.மற்ற நேரங்களில் இருவரும் சேர்ந்து வெளியே போகும்போது நல்ல ஜாலியாக இருப்பான்.ஆனால் அது உறுதியாக தெரியத பட்சத்தில் ஏதும் சொல்ல கூடாது என நினைத்தவன்**

**“சரி வினு…நீ இரு…நான் வேந்தன் சார் கிட்ட கேட்டு போய்கிறேன்.அப்படியே சாப்பிட போய்டறேன்” என சொல்லிவிட்டு உள்ளே சென்றவன் வேந்தனும் வரேன் என்று சொன்னதும் இருவரும் கிளம்பினர்.**

**“இல்ல சார் அவன் வேந்தன் சாரோட போய்ட்டான்” என்றாள் .**

**இப்போது விபீஷ் மனதில் ஒரு பெரிய நிம்மதி வர “சரி சரி வேலைய பாருங்க” என சொல்லிவிட்டு மனதில் இருப்பதை மேசையின் மேல் உள்ள வெள்ளை தாளில் கிறுக்க**

**பெண்ணே உந்தன் விழிகளே**

**எனது பிறப்பிற்கான**

**அர்த்தம் சொன்னதடி**

**உந்தன் முகமே**

**எனக்கு முகவரி ஆனதடி …**

**நீ சிரித்தாள் நான் சிரித்து**

**நீ அழுதால் நான் அழுது**

**உனது முச்சுகாற்றை நான் சுவாசித்து**

**உனக்குள் நான் அடங்கி**

**உயிருக்குள் கலந்திட**

**மனம் ஏங்குதடி.**

**எனக்கான மூச்சுகாற்றாக**

நீ இருப்பதால்

உன்சுவாசம்  மட்டுமே

என் வாள்நாளை நிர்னயிக்கிறதடி.......

 என அவனை அறியாமல் இந்த கவிதையை எழுதியவன் அதை ரசித்து படித்து கொண்டிருக்கும்போது  அருகில் யாரோ இருக்கும்  உணர்வு தோன்ற நிமிர்ந்த பார்க்க வினு  நின்று கொண்டிருந்தாள்.

ஒரு நிமிடம் அதிர்ந்தவன்'...என்ன...என்ன வேணும் "என தடுமாற

"உங்க போன் அடிச்சுட்டே இருந்தது.நீங்க கவனிக்கல...அதான்" என சொல்ல

ஓ என பெருமூச்சுவிட்டவன்,"ஏன் சார்  உண்மைய சொல்லுங்க எதாவது உடம்பு சரி  இல்லயா? காலையில் இருந்தே ஒரு மாதிரி இருக்கீங்க" என கேட்க

"இல்ல...இல்ல...நல்லாத்தான் இருக்கேன்" என சொல்லி கொண்டிருக்கும்போதே மறுபடியும் தொலைபேசி அழைக்க எடுத்தவன் எதிர்புறத்தில் தாயின் குரல் கேட்க

"அம்மா ...வந்திட்டிங்களா ....இல்லம்மா மதியம் வரேன் "என சொல்லிவிட்டு தொலைபேசியை வைத்தவன்

அந்த தாள் காற்றில் பறக்க ...அதை ஓடி சென்று எடுத்த வினு,என்ன சார் இது என சொல்லி கொண்டே அதே படிக்க

விபீஷின் மனமோ படபடப்போடு அவளை பார்த்து கொண்டிருந்தது. .

கவிதையை படித்தவள் வேகமாக நிமிர்ந்து....."என்ன சார் இது....நீங்களா இது........ இப்படி பண்ணுவிங்கனு நினைக்கவே இல்ல.... உங்க மேல எவ்ளோ மதிப்பு வைச்சிருந்தேன்..".என அவள் அதிர்ந்து  சொல்ல

அவளது வேகத்தை பார்த்தவன் திடுக்கிட்டு "இல்ல வினு...அது வந்து....நான் சும்மா தான்......"  என உளறி கொட்ட,முகமெல்லாம் வேர்க்க அவள் முகத்தை பார்க்க முடியாமல் தலைகுனிந்தான்.

**“போங்க சார் ....நீங்க நல்லா கவிதை கட்டுரை எல்லாம் எழுதுவிங்க,தமிழ் பேச்சாளர்னு  வெற்றி சார் சொல்லி இருக்கார்.ஆனா இந்த கவிதையில் இப்படி எழுத்து பிழையோட எழுதி இருக்கிங்களே....நான் எதிர்பார்கவே இல்ல” என அவள் சொல்லி கொண்டே பிழைகளை சுட்டி கட்ட**

**“ஹப்பா ....இதான என சொல்லி கொண்டே அப்படியே நாற்காலியில் சாய்ந்தவன் ,ஏன் வினோ இதுக்குதான் இந்த ரியாக்சன் கொடுத்தியா” என சொல்லிவிட்டு சிறிது நேரம் மூச்சை இழுத்து விட்டு தன்னை ஆசுவாசபடுத்தி கொண்டான்.**

**எந்த ஒரு ஆண்மகனும் அவன் எட்டு ஊரை கட்டி  ஆளும் ராஜாவாக இருந்தாலும் சரி , இல்லை ஏழை குடிசையில் வாழ்பவனாக இருந்தாலும் சரி, தன் மனதில் ஒருத்தியை நினைத்து விட்டால் அவளிடம் இருந்து வரும் ஒவொவொரு வார்த்தையும் அவனுக்கு வேதம் அல்லவா!......அதுவும் விபிஷின் சொல்லாத காதல்,சொல்வதற்காக எழுதிய கவிதை ,அவனாக சொல்வதற்கு முன்னாள் அவளாக படித்து அதையும் அவள் அதிர்ந்து போய் கேட்க ,சொல்ல வேண்டிய வார்த்தையோ  வாயில் இருந்து வராமல் சண்டித்தனம் பண்ண..... அவனின் நிலையை விளக்க வார்த்தைகள் இல்லை......சொல்லாத  காதலுக்குதான் எத்தனை வலிகள்..**

**“சார்...சார்” என அவள் அழைக்க**

**கண் திறந்து பார்த்தவன் ....”என்ன” என கேட்க**

**“நான் கிளம்பட்டுமா “ என கேட்டாள்.**

**சரி என்று தலை ஆட்டியவன்,,,,அவள் சிறிது தூரம் சென்றதும் வினு என அழைக்க**

**அவள் திரும்பி பார்க்க....**

**“இந்த கவிதையை படிச்ச உடனே உனக்கு என்ன தோனுச்சு “என்றவன்,அவள் முகத்தையே  பார்க்க**

**சிறிது நேரம் அமைதியாக இருந்தவள்,அவன் கண்களை பார்த்து "நல்லா இருக்கு சார்....வேற ஒன்னும் தோனல சார் " என அழுத்தமாக சொல்லி விட்டு நகர**

**"ஒன்னுமே தோணலையா" என அவன் ஒரு எதிர்பார்போடு கேட்க**

**அவன் கேட்ட விதமும் ,அவன் கண்களில் இருந்த எதிர்பார்ப்பும் அவளுக்கு எதோ புரிய வைத்து விடவேண்டும் என துடிக்க**

**ஆனால் அதற்க்கு அவள் சொன்ன பதிலில் அவன் தான் துடித்து போனான்.**

**கண்ட உடன் காதலா!**

**அவளை பார்ப்பதற்கு முன்பு**

**அது வயதின் கோளாறு.**

**அவளை பார்த்த பின்போ**

**அது வாழ்கையின் வரலாறு.**

**அவளில்லாமல் அவனில்லை என**

**மனம் சொல்ல**

**அதை அவளிடம் சொல்ல**

**வார்த்தைகளை தேட....தேட**

**தேடலும் முடிந்தபாடில்லை**

**காதலும் சொன்னானில்லை**

**சொல்லாத காதல் செல்லாது.**

**சொல்லும் துணிவு வருவது எப்போது ..... 3**

DO NOT COPY

**அத்தியாயம் 11**

**சுட்டெறிக்கும் சூரியன் தனது ஆக்ரோசத்தை நண்பொழுதில்காட்டிகொண்டிருக்க மூன்றாவது மாடியில் இருந்து கட்டிடத்தை பார்த்து கொண்டிருந்தவன் வேர்வை துளிகள் வெண்முத்துகலாக கீழே விழ நின்று கொண்டிருந்தான்.**

**“சார்...சர்ர் “என ராஜ் அழைக்க**

**“என்ன ராஜ்...நேரமாகிடுச்சா...சரி கிளம்புங்க...கல்லூரி வேற போகணும்ல......கிளம்புங்க...நான் முடிச்சுட்டு வந்தறேன்” என சொல்லி விட்டு தனது வேலையை தொடர்ந்தான்.**

**வேலை செய்பவர்களும் சாப்பிட சென்று விட வேந்தனும் கிளம்பினான்.விபீஷை அழைக்க..... அவன் அம்மா வந்திருப்பதாக சொல்ல..... ,சரி நான் மதிகிட்ட சொல்லிடறேன் என கூறிவிட்டு இவன் கிளம்பினான்.**

**வண்டியில் செல்லும்போது அவனது நினைவு முழுவதும் மதியிடமே இருந்தது.என்ன செய்து வைத்திருக்கிறாலோ என நினைத்தவன் முதன் முதலாக மனைவி தனியாக சமைத்து தான் சாப்பிடபோவதை நினைத்தவன் மனதிற்குள் ஒரு மகிழ்ச்சி தோன்ற சந்தோசமாக வீட்டிற்கு சென்றான்.**

**வீடு முழுவதும் திறந்திருக்க உள்ளே நுழைந்தவன் யாரும் இல்லாததை பார்த்ததும் மனதில் சட்டன்று கோபம் துளிர் விட...வீட்ட திறந்து வைச்சுட்டு எங்க போனா என நினைத்து கொண்டே பின்னே சென்றவன்**

**“மதி...மதி “என அழைக்க**

**“இங்க இருக்கேன் மாமா.”....என்ற சத்தம் கேட்டு திரும்பி பார்த்தவன் அவள் அங்கு துணியை துவைத்து காயபோட்டு கொண்டிருந்தாள்.**

**வெயிலில் வேர்த்து ஒழுக அவள் துணிகளை உலர்த்தும் அழகை பார்த்தவன் அவனை அறியாமல் மனதில் ஒரு இன்பம் வர அனைத்து**



DO NOT COPY

**துணிகளும் பளிச்சென்று இருப்பதை பார்த்து…".மதி ரொம்ப நாளைக்கு அப்புறம் துணியோட உணமையான கலர இப்பத்தான் பார்க்கிறேன்" என சிரித்து கொண்டே சொன்னான்.**

**"ஆமா மாமா…மெசின்ல போட்ட துணி கசங்கிடுது…சுருக்கமா போய்டுது…அதான் நானே துவச்சேன்" என அவளும் சந்தோசமாக சொன்னாள்.**

**"ஆனால் இப்படியே காய போடகூடாது மதி …இதுகெல்லாம் கஞ்சி போடணும்….அப்பத்தான் சட்டை எல்லாம் ஸ்டிபா இருக்கும் என்றான் வேந்தன். ஆனா எங்களுக்கு நேரமில்ல…அதுனால போடறதில்ல" என வருத்ததுடன் சொன்னான்.**

**உடனே வேகமாக அவன் அருகில் வந்த மதி….''மாமா….நானும் அப்படிதான் நினச்சேன்…..எங்க பக்கத்து வீட்ல அக்கா சொல்வாங்க…அந்த அண்ணா துணிகல்லாம் கஞ்சி போடுவாங்க…துணி மொடமொடப்பா இருக்கும்.நீங்க கவலை படாதிங்க நான் கஞ்சி போட்டுதான் துவச்சு காய போட்ருக்கேன்" என்றாள்.**

**"அப்படியா …வர வர நீ ரொம்ப புத்திசாலி ஆகிட்ட மதி "என அவன் கிண்டலாக சொல்ல**

**அவளும் அவனது பேச்சில் ஒன்றி" என்ன மாமா பண்றது….யாரோ ஒருத்தராவது அப்படி இருக்கணும்ல" என சொல்லி கொண்டே உள்ளே சென்றாள்.**

**அவள் சொன்ன பதிலின் அர்த்தம் சில நிமிடங்களுக்கு பிறகு தான் வேந்தனுக்கே புரிந்தது."அடிபாவி போறபோக்குல என் கால வாரிட்டு போறா இவகிட்ட கொஞ்சம் ஜாக்கிரதயாதான் இருக்கணும் "என நினைத்து கொண்டே உள்ளே சென்றான்.**

**அதற்குள் சாப்பிடுவதற்க்கு எல்லாம் எடுத்து வைத்தவள்,"விபீஷ் அண்ணா அப்புறம் வருவாங்களா மாமா" என கேட்க**

**"இல்ல மதி…அவங்க அம்மா வந்திட்டாங்க…அவன் மதியம் அங்க போறான் உன்கிட்ட சொல்ல சொன்னான்" என சொல்லி கொண்டே சாப்பிட அமர்ந்தான்.**



DO NOT COPY

**அதை கேட்டதும் அவள் முகம் சின்னதாக**

**அதை பார்த்தும் வேந்தன் முகம் சுருங்க"...ஏன்?என்னாச்சு....நான் வந்திருகன்ல" என அழுத்தமாக கேட்க**

**இதுவரை நன்றாக பேசி கொண்டிருந்தவன் திடீரென்று அமைதியாக அழுத்தமாக பேசியதும் மதி அவனை நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையை கீழே போட்டு கொண்டாள்..**

**சிறிது நேரம் அவளையே பார்த்து கொண்டிருந்தவன் ..."இப்ப எதுக்கு முகத்தை உம்மென்று வச்சிருக்க" என எரிச்சலாக கேட்க**

**அவள் இல்லை என்று தலை மட்டும் அசைத்து விட்டு அவனுக்கு சாம்பார் ஊற்ற**

**நீயும் சாப்பிடு என்றான்.**

**அவள் ஏதும் பேசாமல் அமர்ந்திருக்க**

**"மதி" என அவன் கோபமாக பேச ஆரம்பிக்கும்போதே வேகமாக தட்டை எடுத்து சாப்பாடு போட்டாள்.**

**சாதத்தை பிசைந்து கொண்டே "ஆமா எல்லா துணியையும் துவச்சுட்டியா....கொஞ்சம் கொஞ்சமா துவைக்கலாமல.....கஞ்சி போடறதுன்னு தனிய எடுத்து வச்சிருந்தனே" என சொல்ல**

**பேச்சு மாறியது அவளின் மூடும் மாற..."எல்லாமே துவச்சுட்டேன் மாமா...அதுக்கும் கஞ்சி போட்டேன்...ஆனா என்ன கஞ்சிதான் சரி இல்லை...திப்பி திப்பியா இருந்தது...".என்றாள்.**

**"நீ எங்க வாங்கின கஞ்சிய என கேட்டவன் சட்டென நிமிர்ந்து....ஆமா நீ கடைக்கு போனியா" என கேட்க**

**"இல்ல மாமா....வீட்ல இருக்கிறதே போட்டேன்......பாவம் வேஸ்ட்டா போயிடும்னு நீங்களும் எவ்ளோ தான் குடிப்பிங்க...அதான் சட்டைக்கு எடுத்து போட்டேன்" என அப்பாவியாக சொல்ல**

**"என்ன உளற" என்றபடி சாதைத்தை பிசைந்து வாயில் வைத்தவன்**



DO NOT COPY

**“அதான் மாமா அந்த பெரிய பாத்திரத்துல ஒரு கஞ்சி பவுடர் இருக்குல.....அதான்.....விபீஷ் அண்ணாகூட சொன்னங்க...நீங்க காஞ்சி குடிகிரதுனாலதான் ரொம்ப விரப்பா இருக்கிங்கனு.....அதான் போட்டேன்” என அவள் சாவகாசமாக பதில் சொல்ல**

**“என்னதுதூஊஊ!!!!!!!!........ என அதிர்ந்தவன் வேகமாக எழுந்து சென்று பார்க்க அந்த டப்பாவில் இருந்து காஞ்சி பவுடர் எடுக்கப்பட்டிருந்தது. 1**

**கண்களில் அனலென கோபம் கொப்பளிக்க அவளை திரும்பி பார்த்தவன் “ஏண்டி.....அறிவிருக்கா உனக்கு ?இதோட விலை என்ன தெரியுமா? என்ன படிச்சு கிழிச்ச நீ? துணிக்கு போடற கஞ்சிக்கும் இதுக்கும் வித்தியாசம் தெரியாதா? பட்டிக்காடு...பட்டிகாடு.....உங்க ஊர்காராணுக என்னமோ அப்படி பேசினாணுக.... என கோபத்தில் வேந்தன் கத்த**

**அவன் கோபத்தில் கத்தினதை கேட்ட உடன் பயத்தில் வேகமாக எழுந்து சின்ன பெண் போல் கதவின் பின்னால் ஒழிந்தவள் எங்கே தன்னை அடித்து விடுவானோ என கண்களை இறுக மூடிக்கொண்டு நிற்க ...பயத்தில் மதிக்கு வேர்த்து கொட்டியாது...**

**வேகமாக அவள் அருகில் வந்தவன் கதவை சாத்த அந்த நேரத்தில் மதியின் கை அதில் இருக்க தாளில் மாட்டி நசுங்கியது....அந்த வலிகூட தெரியாமல் அவள் மிரண்டு போய் நிற்க**

**“எப்ப பார்த்தாலும் இந்த மாதிரி பயந்து ஒன்டிக்க வேண்டியது .....முதல்ல வெளியா வா” என அவள் கையை அவன் பிடித்து இழுக்க அப்போதுதான் கவனித்தான் கையில் ரத்தம் வருவதை .....**

**“என்னடி இது”!!!!!! என அதிர்ந்தவன் வேகமாக அவள் அருகில் வர**

**“ஆனால் இதை இல்லாமல் அறியாமல் கண்ணை மூடி கொண்டிருந்த மதியோ ....இல்லை மாமா....இனி அப்படி பண்ணமாட்டேன்....பண்ணமாட்டேன்” என புலம்பி கொண்டே இருந்தாள்.**

**“அச்சோ கண்ணை திறடி.....ஏண்டி இப்படி பன்ற.....இப்படி ரத்தம் வருது” என சொல்லி கொண்டே அவள் கைகளை பிடிக்க**

அப்போது தான் அவளே கவனித்தாள்.."அய்யோ ரத்தம்".... என்றவள் அப்படியே மயங்கி விழ அவளை தாங்கி பிடித்தவன் படுக்கையில் கிடத்தி தண்ணீர் தெளித்தான்.

"மதி ....மதி இங்க பாரு...இங்க பாரு ஒன்னும் இல்ல" என அவள் கன்னத்தில் தட்ட

எழுந்தவள் அவள் முகத்தை பார்த்ததும்.....பயத்தில் முழிக்க

அதற்குள் அவளின் காயத்திற்கு மருந்து போட்டவன்......அவளின் முகத்தை பார்த்ததும் அது வெளிறிபோயிருந்ததை பார்த்தவன் கோபம் தணிந்தவன்

"ஏன் மதி இப்படி பன்ற...அது குடிக்கிற சத்து மாவு கஞ்சி....பாதாம்,முந்திரி எல்லாம் போட்டு அரைச்சுது....அது என்ன விலை தெரியுமா?...அதான் கோபம் வந்திடுச்சு......சரி வா சாப்பிடலாம்" என அவளை அழைத்து சென்றவன் ஆவளுக்கும் அவனே பிசைந்து ஊட்டி விட்டான்.

சாப்பிட்டு முடித்தும் "சாரி மாமா...இனி இப்படி பண்ணமாட்டேன்.....விபீஷ் அண்ணா சொன்னாங்களா ....அதான் "என சொல்ல

"அவனா...அவன் என்ன சொன்னான்" என வேந்தன் கேட்க நடந்த விஷயங்களை சொன்னவள் "அதான் மாமா" என சொல்ல...அந்த நேரத்தில் விபீஷ் மட்டும் வேந்தன் கையில் மாட்டி இருந்தான்...அவ்ளோதான்...

"சரி...சரி...இனி மாமா திட்டமாட்டேன்...நீயும் இப்படி பயப்படகூடாது.பாரு கையில் காயம் என அன்பாக சொன்னவன் சரி நான் கொஞ்சம் நேரம் படுக்கிறேன்" என சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.

சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த மதி " மாமா...மாமா...."என அழைக்க

"என்ன வேணும்" என அவன் கேட்க

"உங்களுக்கு கால் பிடித்து விடட்டுமா ........எங்க அப்பாவுக்கு பிடித்து விடுவேன்" என சொல்லி கொண்டே அவன் கால்களை தொட துள்ளி எழுந்த வேந்தன் ....

**“என்ன பன்ற மதி....வேண்டாம்” என சொல்ல**

**“பரவயில்லை மாமா”... என சொல்லிவிட்டு அவள் அந்த பணியை தொடர**

**அவள் முகத்தை பார்த்தவன் அவளது வெள்ளைமனம் அவனது இரும்பு இதயத்தில் மெல்லிய பனி சாரலை தூவ,நெருப்பினால் இரும்பை உருக்கலாம்...ஆனால் மலரால் அந்த இரும்பின் இறுக்கத்தை தளர்த்த முடியுமா?மதியினாள் அது முடிந்தது.**

**“மதி...மதி”... என மென்மையாக அவன் அழைக்க**

**அவள் அவனை பார்த்ததும்....”இங்கு வா என அழைத்தவன் ...ரொம்ப வலிக்குதாடா” என்று கேட்க**

**முதன் முதலாக அவன் பேசும் கனிவான வார்த்தை....மற்ற நேரங்களில் சாதாரனமாக பேசுவான்....இல்லை கோபமாக பேசுவான்...இப்போது தான் அவள் மேல் உள்ள அக்கறையில் அவளை அருகே அழைத்து அன்போடு கேட்டது**

**அவனது குரலின் மாற்றம் மதிக்கும் மாற்றத்தை ஏற்படுத்த....”ஆமா மாமா....ரொம்ப வலிக்குது” என சொல்லும்போதே கண்களில் இருந்து கண்ணீர் வர ...வேகமாக அவன் கைகளில் இருந்து தன் கையை அவள் எடுக்க**

**“ஏய்...ஏன்...என்னாச்சு மெதுவா” என அவன் பதற**

**அதற்குள் அவள் கண்களை துடைத்தவள்...”.திட்டாதிங்க மாமா...நான் அழுகலை” என சொன்னதும் வேந்தனின் மனதில் ஒரு சிறு வலி வந்து மறைந்தது.**

**“ பின்னர் சிரித்து கொண்டே சரி வா....வந்து படு” என்றான் வேந்தன்**

**“இல்ல மாமா...கொஞ்சம் வேலை இருக்கு...முடிச்சுட்டு வந்திடறேன்” என நகர**

**“எல்லாம் அப்புறம் செய்யலாம் கொஞ்சம் படு...வலி தெரியாது” என சொல்லி அவளை படுக்க வைத்தான்.**



DO NOT COPY

அவளை சிறிது நேரம் இமைக்காமல் பார்த்து கொண்டிருந்தவன் பின்னர் கண்களை மூட அவளது பயந்த முகமே கண்களில் நிற்க...தான் பேசியது இந்த அளவிற்கா இவளை பாதித்துள்ளது என நினைத்தான். திட்டும்போது பயந்து நடுங்கியது...ரத்தத்தை பார்த்து மயங்கியது...பின்பு அவனது கோபத்தை மறந்து அவனிடமே கால் பிடித்து விட கேட்டது என அவளின் வெள்ளை மனம் அவனுக்கு புரிய....... ஆனால் அவன் பேசியது எதுவும் அவனுக்கு தவறாக தோனவில்லை.நான் எப்போதும் போல் தானே பேசினேன்......இவள் ஏன் அதற்க்கு இப்படி பயப்படுகிறாள்........இவளை என்னால் மாற்ற முடியுமா?......இவளுக்காக நான் மாற வேண்டுமா ?அது முடியுமா ? என பல கேள்விகளில் அவன் மனம் சுழன்று கொண்டிருந்தது.

பின்னர் எழுந்து அவன் அலுவலகம் கிளம்ப மதியோ நல்ல உறக்கத்தில் இருந்தாள்..

அலுவலகத்திற்குள் நுழைந்தவன் அங்கே விபீஷ் வேப்பிலை அடித்தவன் போல் அமர்ந்திருக்க "டேய் என்னடா ஆச்சு....இப்படி உக்காந்திருக்க ......மதியம் வீட்டுக்கு போனியா.... இல்லயா....அக்கா எல்லாம் எப்படி இருக்காங்க?" என விசாரிக்க

விபீஷோ எதற்கும் பதில் சொல்லாமல் அப்படியே அமர்ந்திருந்தான்.வினு சொன்ன வார்த்தைகள் மட்டுமே அவன் காதில் ஒலித்து கொண்டிருந்தது.

"எனக்கு ஒன்னும் தெரியல சார்.... பார்க்கும் எல்லாவற்றிக்கும் விளக்கம் தேடினால் தேடல் மட்டுமே இருக்கும்.விடை தெரியாது.கண்ணால் பார்க்கும் பல விஷயங்களில்,சில விஷயங்களை மட்டுமே கருத்தில் பதிய வைக்கணும். என்னை பொறுத்த வரை இதை கண்ணோடு நிறுத்தி விட்டேன் சார்...அதனால் பிழை மட்டுமே தெரிகிறது..வேற எதுவும் தெரியலை என சிரித்து கொண்டே சொல்லிவிட்டு அவள் நகர.......... சிலையென அமர்ந்திருந்தான் விபீஷ்.....

அவன் இதை எதிர்பார்க்கவே இல்லை.அவள் தெரியவில்லை என ஒரு வார்த்தையில் பதில் அளித்து இருந்தால் இவன் அமைதி

அடைந்திருப்பான்.ஆனால் அவளோ தத்துவங்களை சொல்லி குழப்பிவிட்டு சென்று விட்டாள்..

இவள் தன் மனதை புரிந்து பேசுகிறாளா? ....இல்லை புரியாமல் பேசுகிறாளா....வார்த்தைகளை பார்த்தால் புரிந்து பேசுவது போல் இருக்கிறது....ஆனால் சிரித்து கொண்டே செல்வதை பார்த்தால் சாதரணமாக இருக்கிறது ....டேய் விபீஷ் உனக்கே இந்த நிலைமையா? ....எத்தன பேரை நீ குழப்பி இருப்ப ....ஆனா உனக்கே ஒருத்தி ஆப்பு வைக்கிறா....ஆனா அந்த ஒருத்தி அவனது உள்ளம் கவர்ந்தவள் என நினைக்கையில் அவனை அறியாமல் ஒரு சந்தோசம் அந்த நேரத்திலும் அவன் மனதில் ஏற்பட்டது..

ம்ம்ம்...இவகிட்ட காதல சொல்றதுக்கு முன்னாடியே இவ்ளோ குழப்பம்....இனி இவகிட்ட எப்ப காதலை சொல்லி சம்மதம் வாங்கி கல்யாணம் வரை செல்வது....அதுக்குள்ள கமண்டலத்த தூக்கிட்டு காசி யாத்திரை போய்டுவனாட்ட இருக்கே என நினைக்கயிலே அவன் தலை சுத்த அப்படியே அமர்ந்திருதான்.

அப்போது தான் வேந்தன் வந்தான்...."டேய் விபீஷ் என்ன பகல்ல தூக்கமா.....சாமியார் மாதிரி உட்கார்ந்து இருக்க " என கேட்க

அடபாவிங்களா....நிஜமாவே ஆப்படி ஆக்கிடுவிங்களா என அதிர்ந்தவன் ......ஏண்டா நீங்க எல்லாம் கல்யாணம் பண்ணி புள்ள குட்டியோட இருக்கணும்....நான் சாமியார போகனுமா....நல்ல எண்ணம் உங்களுக்கு.....நீங்க எல்லாம் நல்லா வருவீங்கடா என நொந்து பொய் சொல்ல

"டேய் சும்மா சொன்னேன்டா.... சரி...சரி..... சாப்ட்டியா நீ" என கேட்டான் வேந்தன்.

..."..ம்ம்ம் என்ன நண்பா....நீ சாப்பிட்டு வந்திட்டியா என்றவன்...எப்படி இருந்தது மயிலு சமையலு "என சிரித்து கொண்டே கேட்க

"அதெல்லாம் நல்லாதான் இருந்தது....ஆனா நீ பண்ண வச்ச கூத்துகுதான்" என அவன் கோபமாக ஆரம்பிக்க அதற்குள் விபீஷிர்க்கு அலைபேசி அழைப்பு வர பேச்சு தடைபட்டது.

பின்னர் கிளம்பு நேரத்தில் "வெற்றி மெயில் பண்ணிருக்கான்.....அங்க போய் செட்டில் ஆகிட்டானா....இன்னைக்குதான் ஆபிசில் ஜாய்ன்ட் பண்றானாம் .....நைட் உன்கூட பேசறேன்னு சொன்னான். அதுநாள் நைட் VC ல இருடா" என விபீஷ் சொன்னான்.

"ம்ம்ம்...நானும் பார்த்தேன்.....நானே சொல்லனும்னு நினச்சேன்....அப்புறம் விபீஷ் நாளைக்கு சாயந்திரம் சின்ன மீட்டிங் இருக்கு....ஒரு அப்பார்ட்மென்ட் டெண்டர் வந்திருக்கு....அத பத்தி டிஸ்கஸ் பண்ணனும்...வினு கிட்டயும் சொல்லிடு" என சொல்லி விட்டு அவன் கிளம்ப

நண்பா என விபீஷ் மெதுவா அழைக்க..."நண்பா மதிகிட்ட பார்த்து நடந்துக்கோ "என்றான்.

அவன் மெதுவாக திரும்பி பார்த்து..."இப்ப நீ என்ன சொல்ல வர" என கேட்டான்.

"இல்ல வேந்தா....அந்த பொண்ணு படிச்சிருக்க தவிர உலக அனுபவம் சுத்தமா இல்லை....இன்னும் விளையாட்டு பிள்ளையாவே இருக்கு.....அதான்....ஆனா நீ சொல்லி தந்தா புரிஞ்சுக்கும்....அது வரைக்கும் கொஞ்சம் பக்குவமாய் நடந்துக்கோ" என சொல்ல

"இதாண்டா பெரிய பிரச்சனை எனக்கு .....நீங்க இப்படி பேசறது எனக்கே கில்டி பீலிங் வர வைக்கிறிங்க....அவ என் பொண்டாட்டி....அவதான் இனி எனக்கு எல்லாமே ...எனக்கும் புரியும்" என வேந்தன் வேகமாக சொன்னான்.

"அச்சோ...இல்ல நண்பா...நீ தப்பா எடுத்துக்காத...எதுக்கு சொல்ல வந்தனா" என அவனை சமாதனபடுத்தும் நோக்கத்தோடு அவன் ஆரம்பிக்க

"அதுவும் புரியுது ....எனக்கு அப்பா...அம்மா இருந்தாங்கனா சொல்லி புரிய வச்சிருப்பாங்க....அது இல்லை......அதுனால நீ சொல்றேன்னு.......நானும் கோபபடலடா.....எனக்கும் மதிய பிடிச்சிருக்குனுதான் சொல்றேன்" என்றான்.



DO NOT COPY

"சரி நண்பா.....நான் கிளம்பறேன்....இன்னைக்கு ஒரு உள்நாட்டு போரை வேற சந்திக்கணும்....நாளைக்கு அவசியம் சாப்பாட்டிற்கு வரேன்னு மயிலுகிட்ட சொல்லிடு" என்றான்.

வேந்தனும் சிரித்து கொண்டே...."என்ன உங்க அப்பா கூடதான...இது உனக்கு புதுசா என்ன..."என சொல்லிகொண்டே இருவரும் கிளம்பினர்.

வேந்தன் வீட்டிற்கு வர அங்கு அவன் மனைவி அழுகையுடன் அமர்ந்திருக்க ..."என்னாச்சு மதி...எதுக்கு அழுதிட்டு இருக்க" என கேட்டு கொண்டே அருகில் வந்தவன் கையில் அவளது பெற்றவர்களின் புகைப்படத்தை பார்த்ததும் எதனால் இந்த அழுகை என்று புரிந்தது .

வேகமாக அறைக்குள் சென்றவன் "மதி இங்க வா...என்ன புக்ஸ் எல்லாம் இப்படி கிடக்குது...எடுத்து வை....நைட் டிபன் ரெடி பண்ணு...பசிக்குது...நான் குளிச்சுட்டு வந்திடறேன்" என மடமடவென்று அவளுக்கு வேலை கொடுத்து விட்டு குளிக்க சென்றான்.

மதியோ அப்படியே அமர்ந்திருந்தாள்.தன்னிடம் அன்பாக பேசுவான் என அவள் எதிர்பார்க்கவில்லை....ஆனால் ஆறுதலாக எதாவது சொல்வான் என நினைத்திருந்தாள்.ஏனெனில் மதியம் வேந்தனின் பேச்சு அவளை கொஞ்சம் மாற்றி இருந்தது.அவன் தன்னிடம் பாசமாக தான் இருக்கிறான் என நினைக்க தொடக்கி இருந்தாள்......ஆனால் இப்போது இவனின் செயல் அதனை பொய்யாக்க வேகமாக எழுந்து கோபத்தோடு புத்தகத்தை எல்லாம் எடுத்து வைத்தவள் சமையல் அறைக்குள் சென்றாள்.

அவள் முகத்தை பார்த்து கொண்டே சாப்பிட அமர்ந்தவன்...."என்ன கோபமா?ஏற்கனவே கோழி முட்டை சைசில கண்ணு....இப்போ அழுது அழுது யானை முட்டை சைசுல இருக்கு....பார்த்து முழி பிதுங்கி வெளியே வந்திட போகுது" என கிண்டல் பண்ண

அவனை நிமிர்ந்து பார்த்து முறைத்தவள் முகத்தை திருப்பிஅமர்ந்து கொண்டாள்..

அவளது இந்த ஊடலை ரசித்தவன்,மதி!...மதி! என அழைக்க

அவள் திரும்பாமல் அப்படியே அமர்ந்திருக்க

**“சரி சாப்பிடு மதி ....நீ பேசவேண்டாம்” என சொன்னவன் ,அவள் திரும்பாமல் இருக்க...அவன் மட்டும்  சாப்பிட்டு எழுந்தான்.**

**அவன் மறுபடியும் தன்னை சாப்பிட சொல்வான்...கையில் கட்டோடு எப்படி சாப்பிடுவது....என கேட்க அவன் காத்து கொண்டிருக்க....அவனோ அதை பற்றி கண்டுகொள்ளாமல் எழுந்தது அவளுக்கு கோபத்தை அதிக படுத்தியது.**

**பின்னர் கணினியை உயிர்பித்து வெற்றிக்கு அழைப்பு விடுத்தவன் அவன் லைனில் வந்ததும் சிறிது நேரம் நலம் விசாரிப்பு பின்னர் தொழில் சம்பந்தமாக பேசி கொண்டிருந்தனர்.**

**வெற்றியோ அவனிடம் பேசி கொண்டிருந்தாலும் கண்களோ தேடலிலே இருந்தது.சிறிது நேரம்  பொறுத்து பார்த்தவன்....”நண்பா பாப்பா  என்ன பண்றா.....தூங்கிட்டாளா” என கேட்க**

**“இல்ல வெற்றி...இதோ கூப்பிட்றேன்” என சொல்லி விட்டு மதியை அழைக்க**

**அவள் ஏதும் பேசாமல் அப்படியே அமர்ந்திருக்க**

**“மதி உங்க அண்ணா பேசறான்....இப்போ வர போறியா இல்லயா “என அவன் அதட்ட**

**அதை கவனித்து கொண்டிருந்த வெற்றியோ சற்று முகம் வாட**

**தமயனின் அழைப்பு என்றது துள்ளி குதித்து ஓடி வந்த மதி...VC ள் அவனை பார்த்தது சந்தோசமும்,ஆத்திரமும் கலர்ந்த உணர்ச்சியில் அவள் தேம்பி தேம்பி அழுக....”வெற்றியோ பாப்பா...என்ன ஆச்சு....என்ன ஆச்சு “என பதறி போனான்.**

**இங்கு அமர்ந்திருந்த வேந்தனோ எரிச்சலின் உச்சத்திற்கே சென்றவன்......அவளை வேகாமாக அங்கிருந்து  அறைக்கு இழுத்து சென்றவன்**

**“லூசாடி நீ......அவனே அவ்ளோ தூரத்துல இருந்து பேசறான்....நீ இங்க அழுதிட்டு இருக்க...முதல்ல கண்ணை துட....சத்தம் வெளியே வந்திச்சு அவ்ளோதான்” என மிரட்டி அனுப்ப**

**ஏற்கனவே அவன் மேல் கோபத்தில் இருந்தவள்,அவன் சொன்னது கொஞ்சம் புரிந்தாலும் அவனது மிரட்டல் கோபத்தை இன்னும் ஏத்தி விட**

**வேகமாக கணினி முன் அமர்ந்தவள்...எப்படி இருக்கீங்க அண்ணா என நலம் விசாரிக்க**

**அவளது சோகமான பேச்சு வெற்றின் மனதை பாதிக்க**

**"ஏண்டா பாப்பு......என்ன பிரச்சனைடா" என கேட்க**

**"அதெல்லாம் இல்ல அண்ணா நீங்க சொல்லுங்க...சாப்பிட்டிங்கள என கேட்டால்....என்ன அண்ணா முகம் எல்லாம் ஒரு மாதிரி இருக்கு" என விசாரிக்க**

**அப்போதுதான் வேந்தனும் கவனித்தான்.அவனும் இவ்ளோ நேரம் பேசினான்.இதை கவனிக்கவே இல்லை....சாப்பிட்டியா என்று கேட்கவும் இல்லை...ஆனால் அவளின் முதல் கேள்வியே அதுவாகத்தான் இருந்தது...பெண் என்று பிறந்து விட்டாலே அவளுக்குள் அந்த தாய்மை உணர்வு தானாக வந்து விடுகிறது.அதற்க்கு அவள் தாயாக வேண்டிய அவசியம் இல்லை என மனதில் நினைத்தவன் தன மனையாளை பெருமையுடன் பார்த்து கொண்டிருந்தான்.**

**"நீ சாப்பிட்டியா பாப்பா" என கேட்க**

**"இல்ல அண்ணா.....இன்னும் சாப்பிடல.....கையில கட்டு இருக்கா அதான் எப்படி சாப்பிட்ரதுன்னு யோசிச்சுட்டு இருக்கேன்" என அவள் அழுவது போல் சொன்னாள்.**

**"என்னது...கட்டா...என்னடா ......என்ன ஆச்சு" என அவன் பதற**

**வேந்தனின் முகத்தை பெருமைடன் நிமிர்ந்து பார்த்தவள்(அதில் என்ன தமயன்...எப்படி துடிக்கிறான் என்ற செய்தி ஒளிந்திருக்க)**

**அவளது இந்த சிறுபிள்ளை விளயாட்டை அவனும் ரசித்து கொண்டிருந்தான்.**



DO NOT COPY

**பின்னர் வெற்றியிடம் ...''ஒன்னும் இல்ல அண்ணா ...கதவுல நசுக்கிடேன்...அப்புறம் மாமா மருந்து போட்டு விட்டாங்க.''...என சொன்னதும் வெற்றி சற்று ஆறுதல் அடைய**

**"அண்ணா நீங்க எப்ப வருவீங்க"....அப்பா அம்மா உங்க நியபகமாவே இருக்கு என அவள் பாவமாக முகத்தை வைத்து கொண்டு ஏக்கமாக கேட்டாள்.**

**வெற்றின் முகமோ வேதனையில் சுருங்க...அந்த ஏக்கத்தின் தாக்கம் வேந்தனையும் வருத்த**

**அவளது அருகில் அமர்ந்தவன் அவளை தன் தோளில் சாய்த்து கொண்டான்.அதை கண்ட வெற்றின் மனமோ சந்தோசத்தில் விம்மி புடைத்தது.**

**"வெற்றி போதும்...இனி நாளைக்கு பேசலாம்" என சொல்லி விட்டு தொடர்பை துண்டித்தவன் அவளை அனைத்து கொண்டே சாப்பாடு எடுத்து ஊட்டி விட்டான்.வெற்றியை பார்த்த சந்தோசமா,இல்லை வேந்தனின் அணைப்பில் கிடைத்த இதமா அவளுக்கு தெரியவில்லை...ஆனால் மனம் லேசாக அவளும் அந்த தருணத்தை கெடுக்காமல் அவனுடன் ஒத்துழைத்தாள்.**

**அழுத களைப்பா...இல்லை அணைப்பில் கிடைத்த சுகமா தெரியவில்லை....சாப்பிட சாப்பிட தூக்கம் கண்களை தழுவ அப்படியே அவன் மேல் சாய்ந்த படியே தூங்கிவிட்டாள் அவனின் செல்ல ராட்சஸி.**

**அவளை அள்ளி எடுத்து படுக்கையில் கிடத்திவிட்டு நிமிர்ந்தவன் ... அவளது கை அவனது சட்டையை பிடித்து கொண்டு நகர முடியாமல் தடுக்க**

**அந்த நேரத்தில் வேந்தனின் வாலிபமும் விழித்து கொண்டு அவனை இம்சித்தது.**

**அவளது முகத்தை அணு அணுவாக ரசித்தவன் அவளது கோவபழம் போன்ற இதழ்கள் அவனை வா என்று அழைக்க மெதுவாக அவன் அவளை முத்தமிட குனிய**

**“வலிக்குது மாமா …வலிக்குது மாமா” என அவள் வாய் முனக**

**அப்போது தான் பார்த்தான்.அவளது விரல்களை அவனது கைகள் பிடித்திருக்க அதில இருந்து ரத்தம் வந்து கொண்டிருக்க வேகமாக அவளுக்கு முதல் உதவி செய்தவன் பின்னர் அவள் அருகில் அவளை பார்த்தபடியே படுத்திருந்தான்.**

**மனதிற்குள் பல ஆயிரம் கேள்விகள் படையெடுத்து கொண்டிருந்தது.**

**கள்ளமில்லா பிள்ளை முகம்**

**கருணை பொங்கும் வெள்ளை மனம்**

**பார்பதற்க்கோ பருவமங்கை**

**பழகி பார்த்தால் பச்சிளம் குழந்தை**

**சேயாக உன்னை நினைத்து அள்ளி**

**முத்தமிட நான் தாயாக இல்லையடி**

**உன்னை தாரமாக நெஞ்சோடு**

**அனைத்து உயிரோடு கலந்து**

**உணர்வோடு விளையாட**

**எந்தன் உள்ளமும் ஏங்குதடி……**

DO NOT COPY

## அத்தியாயம்-12

**நாட்கள் நொடிபொழுதில் வேகமாக ஓட வேந்தன் மதியின் உறவோ அடிமேல் அடி வைத்து மெதுவாக நகர்ந்து கொண்டு இருந்தது..ஓரளவு வேந்தனோடு இயல்பான நிலைக்கு மதி பழகி இருந்தாள்.விபீஷின் உதவி அவ்வப்போது கிடைத்ததால் பெரிதாக பிரச்சனை ஏதும் இல்லை.**

ஒரு பெரிய அப்பர்ட்மென்ட் ஆர்டர் இவர்களுக்கு கிடைக்க V4 பில்டர்ஸ்ம் பிசியாக இயங்கி கொண்டிருந்தது.

மதியோ சமையல் புத்தகத்தை பார்த்து சமையல் செய்கிறேன் என்று வேந்தனை சோதனை எலியாக்கி அவனது கோபத்தை தனது சமையலின் சாதனையாலும்,வீட்டை அழகுபடுத்தியும்  குறைத்து கொண்டிருந்தாள்.வேந்தனை பொறுத்தவரை எந்த பொருளையும் வீணாக்குவது பிடிக்காது என்பதால் சரியில்லை என்றாலும் திட்டி கொண்டே சாப்பிட்டு  விடுவான்.அந்த சமயத்தில் இந்த எலியோடு சேர்ந்து விபீஷ் என்ற பூனையும் மாட்டிக்கொள்ள ,அவள் ஆசையாக வைக்கும் பலகாரத்தை தவிர்க்க முடியாமல் வாயில் வைத்து விட்டு ,விழி பிதுங்கி ,தொண்டை அடைத்து அவன் நிற்பதை பலமுறை வேந்தன் பார்த்து சிரித்து இருக்கிறான். அறிவுரை சொல்வது ஈசி…அனுபவிச்சு பார் அந்த கஷ்டம் தெரியும் என்பதை போல் ஒரு பார்வையும் பார்ப்பான்.

வேந்தனின் திட்டும் மதிக்கு பழகி இருந்தாலும்...... அந்த பயம் அவளை விட்டு அகலவில்லை.

இங்கு காலேஜில் பரீட்சை இருப்பதால் வினு அலுவலகத்திற்கு வருவதில்லை....வேந்தனும்,விபீஷ்,ராஜ் மூவருமே பார்த்து கொண்டனர்.

அன்றுதான் ஒரு மாத விடுப்பிற்கு பிறகு வினு அலுவலகம் வந்தாள்..அலுவலகம் திறக்கபடததால் வேலையில் காத்திருக்க ,எப்போதும் இல்லாத திருநாளாக அன்று விபீஷ் நேரமே வர உள்ளே நுழைந்ததும் வெண்ணிற சுடிதாரில் ,விண்ணுலக தேவதை போல் தன்னவள் நிற்பதை பார்த்தவன் மனதில் உற்சாகம் கரை புரண்டு ஓட வண்டியை நிறுத்தி விட்டு வேகமாக வந்தவன்....

“ஹே வினு குட்மார்னிங் ....வாவ் !!! தேவதை வம்சம் நீயோ,வெண்ணிலா அம்சம் நீயோ என பாடிகொண்டே அருகில் வந்து அவளிடம் ஒரு வெள்ளை ரோஜாவை நீட்டியவன் ....ஒரு மலர் குவியலுக்கு  இந்த ராஜின் ஒற்றை மலர்…வெள்ளை ரோஜா…அன்பளிப்பு”  என நாடகபாணியில் சொல்லிக்கொண்டு அவளிடம் மலரை நீட்டினான் ராஜ்.

அவனது செய்கைகளையும் ,மொக்கை வசனத்தையும்  கேட்டு அவள் சில்லறையை சிதறி விட்டது போல்  கலகலவென சிரிக்க ,சாதரனமாக இதை பார்த்திருந்தால் இவள் புன்னகைக்கு கார்க்கியாக மாறி கவிதை புனைந்திருப்பான் விபீஷ்.

ஆனால் இப்போதோ உற்சாக மனநிலை உக்கிரமாக மாறி,துள்ளி குதித்து வந்தவன் துவண்டு போய் நிற்க ,இதை அறியாத வினுவோ வெட்கத்தில் முகம் சிவக்க சிரித்து கொண்டே அவனின் ஒரு கையில் செல்லமாக அடிகொடுத்தவள் ,.....”உனக்கு எப்போதும் கிண்டல் தான் ராஜ்” என சொல்ல.....இங்கு விபீஷோ ஆத்திரத்தில் தனது முஷ்டியை மடக்கி ஆத்திரத்தை அடக்கி கொண்டிருந்தான்.

சோளக்காட்டு பொம்மைக்கு துணி சுத்தின மாதிரி  இருந்துகிட்டு இந்த சுள்ளான் பன்ற அட்டகாசம் தாங்க முடியல...மவேனே நீ தனியா மாட்ன...இருக்குடா உனக்கு ஆப்பு என மனதிற்குள்லே கருவி கொண்டிருந்தான் விபீஷ்.

“இல்லை வினு நிஜமா தான் சொல்றேன்...ஒரு மாதம் உன்னை பார்க்காமல் செம போர் ஆபிஸ்ல ........யாரும் இருக்க மாட்டாங்க...நான் மட்டும் தனியா இருப்பேன்....அதான் உன்னை பார்த்ததும் மனசுல ஒரு சந்தோசம் “ தான் என்றான்.

“ஏன் நம்ம விபீஷ் சார் இருப்பாரே...அவர் இருந்தாவே களகட்டுமே ஆபிஸ்”என அவள் சொல்ல

வெந்து கொண்டிருந்தவன் வெப்பம் தணிந்து மனம் சற்று குளிர அப்படியே நின்று கொண்டிருந்தான்.

“நீ வேற வினு....அவரு ஆபிஸ்ல அதிகம் இருக்கிறதே இல்ல....வெளியதான் சுத்திட்டு இருக்கார்” என்றான் ராஜ் .அதுவும் உண்மைதான்....வினு அலுவலகத்தில் இருந்தால் அவளை பார்க்கவே அடிகடி ஆபிஸ் வருவான்.அவள் இல்லாததால் அவன் சைட் வேலையை முழுவதும் பார்த்து கொண்டிருந்தான்.

“அப்படியா...இந்த அப்பார்ட்மென்ட் நமக்கு பெரிய வேலை இல்லையா...இது மட்டும் நல்ல படியா செஞ்சு முடிச்சோம்...கண்டிப்பா நம்ம துறையில் நாமும் பெரிய ஆள்தான்....அதுக்குதான்



DO NOT COPY

வேந்தன்சாரும், விபீஷ் சாரும் ரொம்ப கஷ்டபடறாங்க...இந்த சமயம் பார்த்து நானும் லீவு எடுத்துகிட்டேன்....பாவம் வேந்தன் சார்...என்னோட வேலையும் சேர்த்து பார்த்திருப்பார்" என சொன்னவள் ....

"ஆனா விபீஷ் சாரும் சளச்சவர் அள்ள....வேலைன்னு வந்திட்டா நேரம்,காலம் பார்க்க மாட்டார் ராஜ்,.....எவ்ளோ சிக்கலான பிரச்சனையும் ஈசியா தீர்த்துடுவார் " என விபீஷை பற்றி பெருமையாக அவள் பேச

"ஆகா...என்னது ....திடிரென விபீஷ் சார் மேல இம்புட்டு பாசம்பொங்குது....பார்த்தாவே பயந்து நடுங்குவ" என ராஜ் சிரித்து கொண்டே கேட்டான்.

"அது வந்து".... என அவள் தயங்க

அவள் என்ன சொல்வாள் என விபீஷ் படபடக்கும் இதயத்தோடு காத்திருக்க

"டேய்!!!!!! இங்க என்ன வேடிக்கை பார்த்திட்டு நின்னுட்டு இருக்க...ஆபிஸ் திறக்கல" என கேட்டு கொண்டே வேந்தன் அவன் பின்னால் இருந்து குரல் கொடுக்க

அந்த சத்ததை கேட்டு ராஜும்,வினும் பேச்சை நிறுத்தி விட்டு பின்னால் திரும்பி பார்த்தனர்.

அந்த நேரத்தில் வேந்தனின் உருவம் அவனுக்கு இரணியன் உருவமாக தெரிய,விபீஷோ நரசிம்ம அவதாரம் எடுத்து அவனது உடலை கிழிப்பது போன்ற கோபம் வர .....விருமாண்டிடிடிடிடிட் உன்ன........என மதிற்குள் கருவியவன் .....

"ம்ம்ம்..... ....... என்று அவனை முறைத்தவாரே ....இப்பதான் வந்தேன் நண்பா."....என பல்லை கடித்து கொண்டு சொன்னவன் சாவியை ராஜடம் கொடுக்க அவன் கதவை திறந்தான்.

வினு வேந்தனை பார்த்ததும் சிரித்து கொண்டே" குட்மார்னிங் சார்" என சொன்னவள்

விபீஷை பார்த்தது மெதுவாக "குட்மார்னிங் சார்" என சொன்னாள்.

**அவள் மனதில் இருப்பதை சொல்ல வந்த நேரத்தில் வேந்தன் இடையில் நுழைந்த கோபம் அவனுக்கு குறையாமல் இருக்க.......,ம்ம்ம்...... என அனத்தி கொண்டே உள்ளே சென்றான்.**

**வேந்தனோ “குட்மார்னிங் வினு...பரிட்சை எல்லாம் எப்படி எழுதின....இன்னும் ஒரு வருடம் இருக்கா” என கேட்டு கொண்டே உள்ளே வர**

**விபீஷ் முகத்தை உர்ர் என்று வைத்து கொண்டு  அமர்ந்திருக்க**

**“என்னாச்சுடா விபீஷ்,,,,,,காலையிலே இப்படி இருக்க” என வேந்தன் கேட்க**

**“ஒன்னும் இல்ல நண்பா....சும்மாதான் என சொல்லிவிட்டு தனது வேலையை தொடங்கினான் விபீஷ் .....**

**பார்வை கணினியில் இருக்க மனமோ ராஜின் மேல் கோபத்தில் இருக்க.... நல்ல நேரத்தில் நாரதர் போல் வந்து கெடுத்திட்டானே.....ஊருக்குள்ள எத்தன பொண்ணுங்க இருக்காங்க...அவங்களுக்கு எல்லாம் கொண்டு போய் ரோஸ் கொடுக்கிறது....இவள சொல்லணும்...நம்ம கேட்டா மட்டும் கண்ணு,கருத்துன்னு தத்துவம் பேசறது....இங்க கெக்கபிக்கேன்னு சிரிச்சு பேசறது ...என மனதிற்குள் இருவரையும் திட்டி தீர்த்தவன்.....வேகமாக ஒரு காகிதத்தை எடுத்து எழுத**

**பெண்ணே**

**என் மனது உனக்கு புரியவில்லையா**

**என் இதயத்துடிப்பை நீ அறியவில்லையா**

**உன்னை பார்க்கும் ஒவொவொரு  முறையும்**

**நான் மறுஜென்மம் எடுக்கிறேனடி!**

**விழிகளுக்குள் விழுந்து**

**இதயத்திற்குள்  கலந்தவளே!**

லஷ்மிரவி

DO NOT COPY

எனக்குள் நீ கரைந்ததனால்

நான் நீயாகி போனேனடி!

நான் யாசிப்பது

உனக்குள் நுழைந்து

உன் உயிரினில் கலக்கும்

காலம் எப்போது என்றுதான்

காத்திருக்கிறேன் கண்ணமா !!!!!!!

என எழுதியவன் .....மீண்டும் மீண்டு அதை படித்து பார்க்க,துக்கம் நெஞ்சை அடைக்க,அவளிடம் சொல்லவும் முடியாமல், அவளை தள்ளவும் முடியாமல் தவித்து போனவன் ,இனியும் இருந்தால் தன்னை அறியாமல் எதாவது நடந்து விடும் என நினைத்து வேகமாக வெளியே கிளம்பினான்.

அவன் கிளம்புவதை பார்த்ததும் வேந்தன்.......

“விபீஷ் கொஞ்சம் இரு.....ஒரு சின்ன டிஸ்கசன் இருக்கு” என சொன்னவன் வினுவையும் அழைக்க மூவரும் நாளை அபார்ட்மென்ட்டில் 3 மாடிக்கும் போடப்படும் மோல்டிங் பத்தி பேசினார்.. தொழிலை பற்றி பேச்சு வந்ததும் விபீஷும் பழைய நிலைக்கு மாறி அதில் இருந்து வெளியே வந்தான்.

“மழை வருவது போல் இருக்கு...... கொஞ்சம் பொறுமையா செய்யலாம் .........பின்னாடி பில்லர் வைக்கிறது வேற பெண்டிங் இருக்கு...அதுனால அடுத்த வாரம் பார்த்து கொள்ளலாம்” என விபீஷ் சொன்னான்.,

“இல்ல விபீஷ் நான் க்ளியன்ட் கிட்ட நாளைக்கு போடறேன்னு சொல்லிட்டேன்....என்ன பண்ணலாம்”? என வேந்தன் கேட்க

“ஒன்னும் பிரச்சனை இல்ல சார்....நாளைக்கு போட்றலாம்......அதான் எல்லா பொருளும் நம்ம கிட்ட ஸ்டாக் இருக்கு.....ஆரம்பித்தால்

**சீக்கிரம் முடிச்சிடலாம்.....அதும் இல்லாம நாளைக்கு அமாவாசை...ரொம்ப நல்ல நாள்..... நம்முடைய முதல் பெரிய ப்ராஜெக்ட் .....அதுனால செஞ்சிடலாம் என அவளும் வேந்தனுக்கு சார்பாக பேசினாள்.**

**ஏற்கனவே கோபத்தில் இருந்தவன்......"அதான் நீங்க இரண்டு பேரும் முடிவு பண்ணிட்டிங்கள...அப்புறம் என்ன ...அதான் மேடம் சொல்லிட்டாங்கள.....என அவளை எரிச்சலோடு பார்த்து சொன்னவன்...அப்படியே செஞ்சிடு....நான் என்ன பண்ணனும் சொல்லு பண்றேன்" என சொன்னான்.**

**ஒருநிமிடம் வினு அதிர்ந்து போனாள்....நான் சாதரணமாகதான சொன்னேன்...அதற்கு ஏன் இவர் இவ்ளோ கோபபட்றார் என யோசித்தவள்**

**"சாரி சார்...விபீஷ் சார் சொல்றபடி செஞ்சுடுங்க" என சொல்லிவிட்டு அமைதியாக இருக்க**

**"ரொம்ப கஷ்டப்பட்டு நான் சொல்றத கேட்கவேண்டாம்" என அவளை பார்த்து கோபமாக சொன்னவன்**

**"என்ன விபீஷ் இது...வினு நம்ம நல்லதுக்குதான சொல்றா...அதுக்கு ஏன் கோவபட்ற...நானும் அவங்ககிட்ட நாளைக்கு போடறேன்னு சொல்லிட்டேன்...இப்ப எப்படி மாத்த முடியும்.என்றான் வேந்தன்.**

**"இல்ல சார் போனமாசம் நான் கஸ்டமர் கிட்ட பேசும்போதே அவர் சீக்கிரம் முடிச்சு தந்தா நல்லதுன்னு சொன்னார்...அதான் லேட் பண்ண வேண்டாம்னு....அவர் பேசும்போதே அவர் கொஞ்சம் அவசறப்பட்ரார்னு புரிஞ்சுது.....அதான்......." என இழுத்தவள் விபீஷை பார்க்க**

**"ஆமா மத்தவங்க சொல்றது எல்லாம் புரியுது ...ஆனா நான் சொல்லவரது மட்டும் உனக்கு புரியாது" என ஒரு வேகத்தில் அவன் வார்த்தயை விட**

**"என்ன பேசற விபீஷ்....நீ சொல்லி வினு என்ன கேட்காம போயிட்டா ...ஏன் வினு?"... என வேந்தன் புரியாமல் கேட்க**



DO NOT COPY

**"நிஜமாகவே வினுவிர்க்கு ஏதும் புரியாததால்...தெரியல சார்....சார் என்கிட்டே எதுமே சொல்லல...நானே லீவ்ல இருந்து இப்பதான் வரேன்" என்றாள்.**

**"விபீஷ் இப்ப எதுக்கு இவ்ளோ டென்ஷன் ஆகற....என்னாச்சு உனக்கு...வந்ததுல இருந்தே நீ சரி இல்லை" என வேந்தன் அவனை கேள்வி கேட்க**

**சில நிமிடங்க அமைதியாக நின்றவன்....."நான் கொஞ்ச நேரம் வெளியே போயிட்டு வரேன் நண்பா "என சொல்லி விட்டு வேகமாக கிளம்பி வெளியே வந்தான்.**

**என்னாச்சு இவனுக்கு என புரியாமல் வேந்தனும் வினுவும் குழம்பி கொண்டிருந்தனர்.**

**மதியம் இருவரும் சேர்ந்து வீட்ற்கு வர விபீஷ் அமைதியாகவே இருந்தான்...**

**மதி கூட என்ன ஆச்சு அண்ணாவுக்கு என கேட்க**

**வேந்தனும் "தெரியல...காலையிலே இருந்தே இப்படிதான் இருக்கான்...."என சொன்னவன்**

**"விபீஷ் நீ இவ்ளோ டிஸ்ட்டர்பா இருக்கனே கண்டிப்பா எதோ ஒரு விஷயம் உன் மனசுகுள குழப்பிட்டு இருக்குனு நினைக்கிறன்...அது என்னனு நீ சொல்ல வேண்டாம்.பட் எதையும் கோபமா இருக்கும்போது யோசிக்காத.....ப்ரீயா விடு...அப்புறம் அதை பற்றி யோசனை பண்ணு என்ன" என சொல்ல**

**விபீஷும் காலையில் ராஜ்,வினுவின் உரையாடலை கேட்ட பின்பு அவனது மனம் அவனிடம் இல்லை...ஏதோ ஒன்று கை நழுவி போகிறது போல் அவன் மனம் துடிக்கிறது....அவனாலும் அதை கட்டு படுத்த முடியவில்லை...வினுவின் குழப்பமான பதில்கள் அவனை பலவாறு யோசிக்க செய்தது.2**

**வேந்தனின் பேச்சை கேட்டு சற்று மனம் தெளிந்தவன்... பின்னர் சிரித்து கொண்டே "மயிலு இன்றிய சோதனை கூடத்தில் சிக்கிய பொருள் என்னவோ?" என கேட்க**



DO NOT COPY

**“முந்தரி கேக் செய்யலாம்னு செஞ்சேன் அண்ணா…ஆனாநாஆஆ….” என அவள் இழுக்க**

**“ஏன் முந்திரி ரொம்ப வெந்து தந்தூரி ஆகிடுச்சா” என அவன் கிண்டலாக கேட்க**

**“அப்டீல்லாம் இல்ல அண்ணா…கொஞ்சம் பால் அதிகமாக போய் முந்தரி கூலாகிடுச்சு….ஆனா டேஸ்ட் நல்லாத்தான் இருக்கு…இந்த முறை நீங்க முதல்ல  சாப்பிடுங்க அண்ணா….மாமா எப்போ சாப்பிட்டாலும் ஏதும் சொல்றதில்லை….அதான் உங்களுக்காக காத்திட்டு இருந்தேன்” என அவள் ஆர்வமாக  சொல்ல**

**“ நண்பா…….சொந்த காசுல சூனியம் வச்சுகிராதுன்னு சொல்வாங்களே அது இதானா….டேய் விபீஷ் இது உனக்கு தேவையா…உன்னை யாரு என்ன ஸ்பெஷல்னு  கேட்க சொன்னா…இப்ப பாரு சோதனை எலி  நீ தான்” என வாய் விட்டு புலம்பினான்.**

**“கிண்டல் பண்ணாதிங்க அண்ணா….சாப்பிட்டு பாருங்க” என அவள் நீட்ட**

**“மயிலு நான் இன்னைக்கு விரதம்…அதுனால நீ உன்ற மாமாவுக்கே கொடுத்திடு” என சொன்னான்.**

**“அசொசோ…நீங்க விரதமா….நான் வேற உங்களுக்கு பிடிக்குமேனு காளான்  பிரியாணி எல்லாம் செஞ்சு வச்ருக்கேன்” என  அவள் சொல்ல**

**“ஆஆ….இன்னைக்கு யார் முகத்துல முழிச்சனே தெரியலே….எல்லாமே எசக்குபிசக்கவே நடக்குதே” என மனதிற்குள் சொல்லி கொண்டவன்**

**இனியும் அவனது புலம்பலை கேட்க முடியாத வேந்தன்…”……மதி அத ஒரு பாக்ஸ்ல  போட்டு கொடுத்திடு…அவன் வீட்ல போய் சாப்பிடட்டும் … நீ அவனுக்கு பிரியாணி வை” என்றான்.**

**“நண்பா….என சொல்லி கொண்டே அவனது கைகளை பிடித்தவன்…இப்படி அடிகடி காப்பத்து நண்பா” என்றான்.**

"ஒரு நாளைக்கே இப்டினா...என்னோட நிலமைய நினச்சு பாரு..."என வேந்தன் அவன் காதில் சொல்ல

"ரோஓஓஓஓஓ ம்ப கஷ்டம் நண்பா...கன்னியகுமரியில் திருவள்ளுவர் சிலைக்கு பக்கத்துள உன் சிலைய வைக்கணும்...இந்த டிஷ் எல்லாம் சாப்பிட்றதுக்கு" என சொன்னான்.

அவன் சிரித்து கொண்டே சாப்பிட...உள்ளே வேலையாக சென்ற மதி வெளியே வரும்போது ஒரு பாக்ஸில் முந்திரி கூலோடு வர

"அண்ணா மறக்காம சாப்பிட்டு பாருங்க....என கொடுக்க...கண்டிப்பா இந்த பாசத்துகாவே சாப்பிடுவேன் மயிலு" என அதை வாங்கி வைத்து கொண்டான்.

"அப்புறம் மயிலு பொழுது எப்படி போயிட்டு இருக்கு" என விபீஷ் கேட்டான்.

"அது குழந்தைங்களோட நல்லா போயிட்டு இருக்கு" என அவள் சொல்ல

என்னது குழந்தைங்களா.....நண்பா...ஒரு 10 நாள் நான் வரல...அதுக்குள்ள எப்படி என அவன் முழிக்க

டேய்யியியியி!!!!!!!!! .... என வேந்தன் அவனை திட்டுவதற்கு முன்

"அச்சோ அண்ணா...என்ன இது...பக்கத்துக்கு வீட்டு குழந்தைகள்" என சொல்ல

"அதான பார்த்தேன்....10 நாட்களுக்குள்...ஹப்பா" என தலை உலுக்க

"அச்சோ ....போங்க அண்ணா" என வெட்கத்தில் அவள் முகம் சிவக்க

முதன் முதலாக தன் மனைவி வெட்கப்பட்டு அன்றுதான் பார்க்கிறான் வேந்தன்...செங்காந்த மலர்கள் தனது இதழ்களை விரிப்பது போல் அவளது முகம் வெட்கத்தில் விகாசிக்க வேந்தனின் மனமோ வெள்ளத்தில் குதித்து செல்லும் மீனை போல் துள்ளி குதித்து கொண்டிருந்தது.

DO NOT COPY

அந்த நேரத்தில் அலைபேசி ஒலிக்க பேசிய விபீஷ்…"வேந்தா பில்டிங்கில எதோ பிரச்சனையாம் …போயிட்டு வந்தரேன்" என கிளம்ப

"என்னடா பிரச்சனை….நானும் வரேன்" என அந்த மனநிலைமை மாற வேகமாக கிளம்பியவன் அவளிடம் சொல்ல கூடவில்லை.

அங்கு கட்டிடத்தில் பணியாலர்களுக்குள் பெரிய சண்டை வர இவன் சென்று தான் அதை தீர்த்து வைக்க வேண்டியதாக இருந்தது. பின்னர் நாளை செய்ய வேண்டிய வேலைகளை முடித்து விட்டு வீடு வர வெகு நேரமானது.வீட்டிற்கு வந்தவன் களைப்பில் சாப்பாடு வேண்டாம் என சொல்லி விட்டு அப்படியே படுத்து விட மதி தான் அவனது உடைகளை மாற்றவேண்டியதாக இருந்தது.

முதன் முதலாக அவனை தொட்டு அவனது உடம்பில் இருந்து ஆடைகளை கழட்டியவள்,அவளை அறியாமல் மனதில் ஒரு படபடப்பு…. வெட்கத்தில் கண்கள் தரையை பார்க்க சிறிது நேரம் அப்படியே குனிந்து கொண்டே நின்றவள் பின்னர் மெதுவாக அவனுக்கு உடை மாற்றி அவனை நேர் படுத்தினாள்..இதுவரை வேந்தனை அவள் இப்படி பார்த்தது இல்லை………..அவனை முழுதுமாக அவள் ரசித்ததும் இல்லை…முகத்தை பார்த்து மட்டுமே பேசுவாள்.மேலும் அவர்கள் இருவரும் சேர்ந்து இருக்கும் நேரம் மிக குறைவு.அப்படியே இருந்தாலும் ..அவள் சமையல்அறையில் இருப்பாள்…இல்லை தூங்கி கொண்டிருப்பாள். விடுமுறை காலத்திலும் அவன் புத்தகத்தோடு இருப்பான்…இவளும் புத்தகத்தோடு சமையல் அறையில் இருப்பாள்.அதனால் இருவருக்கும் இடையே இந்த மூன்று மாத காலத்தில் பெரிய அன்னியோன்யம் இல்லை…ஆனால் அன்பு அதிகமாகி இருந்தது.

இன்று மதியால் அவனுடன் அதே கட்டிலில் படுக்க முடியவில்லை…..அது என்ன விதமான உணர்வு என்றும் அவளுக்கு புரியவில்லை…ஆனால் தயக்கமாக இருந்தது. மனதளவில் அவள் முதிர்ச்சி அடையாவிட்டாலும் வயதின் தாக்கம் அவளுள்ளும் எழுந்தது. படுப்பதற்க்கும் வேறு இடம் இல்லை…….. அப்படி படுக்க வேண்டும் என்றால் தனியாக சின்ன அறையில் படுக்க வேண்டும்…. அதை நினைத்த உடன் பயம் மனதில் எழ பட்டென்று அதே கட்டிலில்

**படுத்து விட்டாள்.ஆனால் உறக்கம் தான்  வராமல் சண்டித்தனம் செய்தது.அவளுள்ளும் மெல்ல மாற்றம் வர ஆரம்பித்தது..இந்த மாற்றத்திற்கு காரணமான நாயகனோ வேலையின் அழுப்பில் தனை மறந்து உறங்கி கொண்டிருந்தான்.**

பூக்கள் மலரும் நேரத்தை

எப்படி அறிந்திட முடியாதோ

அது போல் ஒருவரின்  மனதிலும்

காதல் எப்போதும் வரும் என்பதை

அறிந்திட முடியாது......

வருடக்கணக்கில் கணக்கீடு செய்து

வருவதா காதல்

கண் இமைக்கும் நேரத்தில்

மனதில் தோன்றும் ஒரு உணர்வே காதல்....

அவளிடம் காதலை வேண்டி நாயகன் காத்திருக்க

அவளோ நெஞ்சம் நிறைய அதை வைத்து கொண்டு

என்னவென்று  தெரியாமல் விழித்திருக்க்

மனதில் புதைந்து கிடக்கும்

இந்த விதை விருட்சம் ஆவது எப்போது?????????

**அத்தியாயம் -13**

லஷ்மிரவி

DO NOT COPY

காலையில் எப்போதும் போல் கண் விழித்தவன்அருகில் மதி சுருண்டு படுத்து இருப்பதை பார்த்தவன் ....ஏன் இன்னும் தூங்குகிறாள் என யோசனையுடன் அவள் முகத்தை பார்த்து கொண்டே...... எதையும் அறியாத சிறு பிள்ளை போல் இருக்கிறாள்....இவளுக்கு எப்போது புரிய வைத்து .....ம்ம்ம் என பெருமூச்சு விட்டு கொண்டே வேந்தன் அங்கிருந்து நகர......அந்த அறியாபிள்ளை இரவு பட்டபாடு இந்த அறிந்தபிள்ளை  தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

சூரியனின் ஒளிக்கதிர் கண்களில் பட கஷ்டப்பட்டு கண் முழித்தவள்,இரவு முழுவது புரண்டு படுத்து தூங்காமல் வெகுநேரம் கழித்து உறங்கியதால் கண்கள் எரிய விழித்து பார்த்தவள்,நேரத்தை பார்த்ததும் வேகமாக எழுந்தாள்.அருகில் வேந்தன் இருக்கும் இடம் காலியாக இருக்க .படபடவென்று  காலை கடனை முடித்து விட்டு வேலையை ஆரம்பிக்க,அதற்குள் வேந்தனும் கிளம்பி வெளியே வந்தான்."மதி இன்னைக்கு நான் வர நேரமாகும் ...நீ சாப்பிட்டு தூங்கு" என்று சொன்னவன் "முதல்ல உனக்கு செல்போன்  வாங்கணும்" என சொல்லி கொண்டே வெளியே வந்தான்.

"எனக்கு எதுக்கு மாமா செல்போன் எல்லாம்....அதான் பக்கத்துல பூத் இருக்குல்ல ....அவசரம்னா கூப்பிடுகிறேன்" என சொல்ல

"ம்ம்ம் ...என தலையாட்டினான்.

"என்ன மாமா சாப்பிடாம போறீங்க" என கேட்க

"நேரமாச்சு மதி......ராஜ் அனுப்பி வைக்கிறேன்...கொடுத்து விடு" என சொல்லிவிட்டு கிளம்பினான்.

அங்கு மோல்டிங் போடுவதற்கு வேலை பரபரப்பாக நடந்து கொண்டிருக்க ,அதன் மேற்பார்வை வினு ,ராஜ் தலைமயில் இருக்க

நேற்று ஒரு கட்டிடத்தில் நடந்த பிரச்சனையை தீர்க்க வேந்தனும் ,விபீஷும் சென்று இருந்தனர்.

மோல்டிங் வேலை விறுவிறுப்பாக நடந்து கொண்டிருக்க,ராஜ் சுற்றிலும்  மேற்பார்வை இட,வினுவோ கலவை கலக்கும் இடத்தில்



DO NOT COPY

**நிற்க........ திடீரென்று தண்ணீர் எடுக்கும் மோட்டார் நின்றுவிட....... வேலை அப்படியே நின்று அந்த இடத்தில பதட்டம் நிலவியாது.**

**200 ஆட்கள் வேலை செய்யாமல் நிற்க , ராஜ்,வினு இருவரும் மோட்டார் சரி பண்ண பல முயற்சிகள் செய்தும் சரி ஆகவில்லை.அன்று விடுமுறை நாள் ஆனதால் அருகில் கடையும் இல்லை.ராஜ் மிகவும் பதட்டத்துடன் “என்ன வினு பண்றது....நேரம் வேற ஆகுது...மதியத்தோட வேலை முடிச்சாகணும்....இல்லினா 2 சம்பளம் கொடுக்கணும்” என சொல்ல**

**எனக்கும் ஒன்னும் புரியல ராஜ்....என சொன்னவள்**

**“நீ வேந்தன் சாருக்கு போன் பண்ணு என சொன்னவள் ...இல்ல தண்ணீர் லாரி வர சொல்லலாமா” என கேட்டாள்.**

**“இன்று விடுமறை ....தண்ணீர் லாரி முன்பே சொல்லி இருக்க வேண்டும்” என்றவன் போனில் மீண்டும்...மீண்டும் முயற்சிக்க**

**வேந்தன் விபீஷ் இருவரும் கட்டிடத்தின் உள்ளே இருந்ததால் எடுக்கவில்லை.....**

**அனைத்தையும் நல்ல விதமாக முடித்து விட்டு வெளியே வந்த விபீஷ் அலைபேசி பார்க்க அதில் வினி,ராஜ் எண்கள் அதிகமாக இருக்க**

**“என்ன வேந்தா...ராஜ்,வினு இரண்டு பேரும் கூப்பிட்ருக்காங்க” என சொல்லி கொண்டே ராஜ்வை அழைத்தவன்**

**விபீஷின் எண்ணை கண்டது வேகமாக எடுத்த ராஜ்....”சார் ஏன் சார் போன் எடுக்கலை...இங்க ஒரு பெரிய பிரச்சனை சார்” என சொல்லிவிட்டு நடந்தை சொன்னான்.**

**ஸ்ப்பீக்கர் போட்டு இருந்தால் வேந்தனும் அதை கேட்க**

**“அச்சோ இப்ப என்னாச்சு...அறிவிருக்கா உனக்கு...வேலை நடக்களைனாலும் 200 பேருக்கும் சம்பளம் கொடுத்தாகணும் ...அத கூட சரி பார்க்காம என்ன பண்ண நீ” என கோபத்தில் வேந்தன் கத்த**

**எதற்கும் அசராத விபீஷ் கூட கொஞ்சம் அதிர்ந்து விட்டான்....எவ்வளவு நஷ்டம் என நினைத்தவன் " என்ன ராஜ் ...உங்க 2 பேர நம்பிதான விட்டு வந்தோம்" என சொன்னவன்**

**"சரி வினு கிட்ட கொடுங்க" என சொல்ல**

**"இல்ல சார்...நான் மெக்கானிக் தேடிட்டு வெளியே வந்துட்டேன்...1 மணி நேரம் ஆச்சு...ஒரு ஆளும் கிடைக்கல்...தேடிட்டு இருக்கேன்...வினு சைட்ல இருக்காங்க" என சொன்னான்..**

**"முட்டாள் அவளை மட்டும் தனியா விட்டுட்டு இங்க எதற்கு வந்த....ஆட்கள் எதாவது பிரச்சனை பண்ணா என்ன பண்றது.....". என விபீஷ் கத்த**

**"பொறு விபீஷ்...வினு பார்த்துக்குவா" என வேந்தன் சொல்ல**

**"என்ன பார்த்துக்குவா...நல்ல ஊதுபத்தி கட்டி சாம்பிராணி போடுவா என எரிச்சலுடன் சொன்னவன் ...அவ சின்ன பொண்ணு வேந்தா...இவன் தனியா விட்டுட்டு வந்திருக்கான் பாரு....எவ்ளோ பேர் வேலை செய்யறாங்க....எதாவது பிரச்னைனா எப்படி சமாளிப்பா......" என புலம்பியவன்**

**சரி விடு...நேர்ல போய் பார்த்திடலாம் ......என சொல்லிவிட்டு இருவரும் வேகமாக கிளம்பி வந்தனர்...வரும் வழியில் எல்லாம் எந்த அளவு நஷ்டம் ஏற்படும் என்பதை வேந்தன் விளக்க விபீஷிர்க்கோ தலை சுற்றி விட்டது.**

**தூரத்தில் பார்க்கும்போதே வேலை நடப்பதை போல் தெரிய அருகில வர அனைவரும் வேலை செய்து கொண்டிருக்க, 3 வது மாடியில் நின்று பார்த்து கொண்டிருந்தாள் வினு.**

**குழப்பத்துடன் இருவரும் வினுவிடம் சென்றவர்கள் ."..என்ன வினு...ராஜ் என்னமோ சொன்னான்...பயந்திட்டே வந்தோம்...இப்போ தண்ணீர் எப்படி கிடச்சுது....மோட்டார் சரி ஆகிடுச்சா" என வேந்தன் கேட்க**



DO NOT COPY

“இல்ல சார்…பக்கத்துல கிளாஸ் நிறுவனம் இருக்குள்ள…அவர்களிடம் உதவி கேட்டேன்….இரவுக்குள் அவர்களுக்கு தண்ணீர் கொடுத்து விடுவதாக சொல்லி அங்க இருந்து தண்ணீர் எடுத்துகிட்டேன் சார் என சொன்னவள்…சாரி சார்…உங்களுக்கு அலைபேசியில் முயற்சி பண்ணோம்…கிடைக்கலை…அதான் ராஜ் மெக்கானிக் தேட அனுப்பிட்டு நானும் இப்டி முயற்சி செய்தேன்” என எங்கே அவர்களை கேட்காமல் இவள் செய்ததற்கு திட்டி விடுவார்களோ என பயத்தில் அவள் சொல்ல

“நல்ல காரியம் பண்ணிருக்க வினு….இல்லையினா நமக்கு எவ்ளோ நஷ்டம் தெரியுமா….என்று சொன்ன வேந்தன் …பாரு விபீஷ் நீ என்னமோ சொன்ன…ஊதுபத்தி காட்டத்தான் தெரியும் அவளுக்குன்னு….சின்ன பொண்ணா இருந்தாலும் எவ்ளோ புத்திசாலிதனமா பண்ணிருக்கா” என அவன் முன்பே அவளை பாராட்ட….அந்த இடத்தில அவளை நினைத்து விபீஷிர்க்கும் பெருமையாக தான் இருந்தது.அதற்குள் ராஜும் மெக்கானிக்குடன் வந்து விட பழுது பார்க்கும் பணியும் நடந்து மோட்டார் மீண்டும் வேலை செய்ய தொடங்கியது.

சொன்ன நேரத்தில் வேலை முடிய அனைவரின் முகத்திலும் சந்தோசம் .பின்னர் வேலையாட்களுக்கு சம்பளம் மற்றும் இதர செலவுகள் எல்லாம் கொடுத்து முடிக்க இரவு மணி ஏழு ஆகிவிட்டது.

“ஹப்பா …ஒரு வழியா ஒரு பெரிய வேலையை முடிச்சுட்டோம்….இனி எல்லாம் கிளம்பலாம்” என வேந்தன் சொல்ல …அனைவரும் கிளம்பினார்.

அவர்கள் வெளியே வரவும்,மேகம் கருகி இடி இடிக்கவும் இவர்களின் இதய துடிப்பு நின்று துடித்தது….மதியமே வேலை முடிந்து கலவை செட் ஆகிவிடும் என்றாலும் இப்போது மழை வந்தால் சில இடங்களில் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

சார்ரர்ர்ர்ர்……… என்று வினு இழுக்க

சுதாரித்த வேந்தன் “அதெல்லாம் மழை வராது …நீங்க கிளம்புங்க” என சொல்ல

“இல்ல சார்…நான் இருக்கோன் ’ என ராஜ் சொல்ல



DO NOT COPY

**“ஆமா சார் நானும் இருக்கேன்” என வினு சொல்ல**

**“நான் இருக்கேன்...நீங்க எல்லாரும் கிளம்புங்க” என விபீஷ் சொன்னான்.**

**“யாரும் இருக்க வேண்டாம்...எல்லாரும் காலையில இருந்து இங்கயே இருக்கோம்...வினுவிர்க்கும் லேட் ஆகிடுச்சு...எல்லாரும் கிளம்பலாம்....வாட்ச்மேன் இருக்கார் பார்த்துக்குவார்” என சொல்லிவிட்டு அனைவரும் மனமில்லாமல் கிளம்பினர்.**

**சிறிது தூரம் சென்றதும் வேந்தன் மீண்டும் கட்டிடத்திற்கே திரும்ப வந்தான்.அவனுக்கு மனம் இல்லை .மழை வந்தால் எல்லாம் வீணாகிவிடும்....ஆனால் அவர்கள் மூவரும் களைத்துபோய் இருக்கிறார்கள் ...எனவே அவர்களை அனுப்புவதற்காக தானும் கிளம்புவதாக சொன்னவன் மீண்டும் கட்டிடத்திற்கே வந்தான்.**

**சிறிது நேரத்தில் மற்றொரு வாகனம் வர அதில் விபீஷ்...அவனும் அதே நினைப்பில்தான் வந்தான்.**

**சிறிது நேரத்தில் ராஜ்,வினுவும் வந்து சேர்ந்தனர்...அவர்களும் அதே நினவோடுதான்.வந்தவர்கள் ஒருவரை ஒருவர் ஆச்சிரியத்துடன் பார்த்து மனம் விட்டு சிரித்து கொண்டனர்.**

**“வினு நீ எதுக்கு வந்த” என வேந்தன் கடிந்து கொள்ள**

**“இல்ல சார்....நான் அம்மா கிட்ட சொல்லிட்டு தான் வந்தேன்...ராஜ் கூட வரதுனால அம்மா ஒன்றும் சொல்ல மாட்டாங்க” என சொல்ல**

**விபீஷோ அவளயே பார்த்து கொண்டிருந்தான்.அதை இரண்டு கண்கள் கவனித்து கொண்டிருந்தன.**

**அந்த சமயத்தில் இடி இடித்து லேசாக மழை தூறல் போட**

**அச்சோ!!!!!!! என சொல்லி கொண்டே வினு வேகமாக செல்ல**

**“வினு என கத்திய வேந்தன்....நீயும் ராஜும் இங்க இருங்க....நாங்க மேல போறோம்” என சொல்ல**

“இல்ல சார் நானும் வரேன்...நான்தான் சைட் விசிட் பார்த்தேன்....எனக்கு தெரியும் எங்க கவர் பண்ணனும்னு “என சொல்லி கொண்டே ராஜ் முன்னே செல்ல

“சரி விபீஷ் நீ இங்க இரு....நானும் அவனும் மேல போறோம்” என சொல்லிவிட்டு சென்றான் வேந்தன்.

அப்போது இருந்த மனநிலையில் விபீஷ் எதுவும் சொல்லவில்லை.கீழே இருவரும் மழை தண்ணீர் வரும் இடங்களில் பாதுகாப்பிற்க்கு தடுப்பு ஏற்படுத்தினர்.

சட்டென்று மின்சார் தடை ஏற்பட “அய்யோ !!!!!! என கத்தி கொண்டே விபீஷின் கையை இருக்க பிடித்தவள் ...சார் கரென்ட் போய்டுச்சு சார் “என பயந்து கொண்டே சொல்ல

எப்போது பவர் கட்டிற்கு பக்கம் பக்கமாக வலைதளத்தில் கிண்டல் அடிக்கும் விபீஷ் இப்போது பவர் கட்டிற்கு பல்லாயிரம் முறை நன்றி சொன்னான்..பின்னர் எத்தன நாள் கனவு இது.....

நெஞ்சில் நிறைந்தவள் நெருங்கி நிற்க,கனவிலும் நினைத்திடாத வாய்ப்பு கிடைத்திருக்க விபீஷின் மனமோ சொல்ல முடியாத ஆனந்தத்தில் திளைத்து கொண்டிருந்தது. விபீஷின் கைகளை இறுக்கமாக அவள் பற்றிக்கொள்ள அவளை தோளோடு அவன் அணைத்து கொள்ள

அந்த நேரத்தில் பெரிய இடி இடிக்க .”..அர்ச்சனா...அர்ச்சனா “என சொல்லி கொண்டே அவனிடம் மேலும் அவள் ஒண்ட

விபீஷின் மனதில் ...ஐயையோ ஆனந்தமே....நெஞ்சுக்குள்ளே ஆரம்பமே...என்ற பாடல் ஒழிக்க அதற்க்கு ஏற்றார் போல் மின்னலும் மின்னி அதை மேலும் மெருகூட்டியது.

இந்த தருணம் அவன் வாழ்க்கையில் மறக்க முடியாத தருணம்.சந்தோஷ சாரல் நெஞ்சில் வீச ,அவளது அருகாமையை அனுபவித்து கொண்டிருந்தான்.மெதவாக அவளை தன முன் கொண்டுவந்தவன்,அவளது மூச்சுகாற்று அவனை மேலும் உசுப்பேற்ற



DO NOT COPY

... வினு!!!!! என அவன் மெல்ல முனக ,அவளோ அதை கேட்கும் நிலையில் இல்லை...கண்களை மூடிக்கொண்டு பயத்தில் அர்ச்சனா!!!!...அர்ச்சனா!!!!!!.... என முனகி கொண்டிருக்க...அவளது நெற்றி அவனது இதழில் மோத காதலின் வேகத்தில் தன் முதல் முத்ததை பதிக்க அவள் முகத்தை கையில் ஏந்த அதற்குள் ஜெனரட்டேர் போடபட்டு அனைத்து விளக்குகளும் உயிர் பெற்றன.

விளக்கின் ஒளியில் கண்களை மூடி கொண்டிருந்த வினு விழித்து பார்க்க ,விபீஷின் முகமும் அவளது முகமும் அருகில் இருப்பதை கண்டவள் ...அவனது விழிகள் தாபத்தோடு அவளை பார்க்க....மனதில் ஏதோ உறுத்த .......ஒரு நிமிடம் யோசித்தவள் ..........,சட்டென்று விலகி...... "சாரி சார்...எனக்கு இடினா கொஞ்சம் பயம்" என திக்கி திணறி சொல்லி விட்டு வேகமாக விலகினாள்.

அவன் சிரித்து கொண்டே தலை ஆட்டியவன் ஏதும் சொல்லாமல் அவள் கண்களையே பார்க்க அவளோ விழிகளை தாழ்த்தி நிலம் பார்த்தாள்.

சிலமணி துளிகள் இருவரும் அப்படியே நின்று கொண்டிருக்க...விபீஷ்!!!!!!!!! என வேந்தனின் குரல் இருவரின் மோனநிலையை கலைத்தது.

"சாரி சார் நீங்க அப்பவும் சொன்னிங்க.....மழை வரும்னு....நான் தான் கேட்கலை.......சொன்ன மாதிரியே வந்திடுச்சு....."என அவள் மெதுவாக சொல்ல

அதற்குள் உள்ளே வந்த வேந்தன் ராஜ் இருவரும்..."மேல எல்லாம் சரி பண்ணியாச்சு...இனி ஒன்னும் பிரச்சனை இல்லை.இப்போ எல்லாரும் நிஜமாவே கிளம்பலாம்.மணி பத்தாச்சு" என சொல்லி கொண்டிருக்க

வேந்தனின் அலைபேசி அலற."..அடடா ...இதோட பெரும் தொல்லையா போச்சு....ஏதோ புது நம்பர் வருது....நானும் வேலை அவசரத்துல கட் பண்றேன்...மறுபடியும் கூப்ட்டு கிட்டே இருக்காங்க...".என சொல்லி கொண்டே அலைபேசியை எடுத்தவன் அதற்குள் அது கட் ஆகிவிட பேசாமல் வைத்து விட்டான்.

"சார் நாங்க கிளம்பறோம்" என வினு சொல்ல

“சரி வினு...ராஜ் கூட போயிடுவியா...இல்ல நான் வரட்டுமா” என கேட்டான் வேந்தன்.

“இல்ல சார் ஒன்னும் பிரச்சனை இல்லை...நாங்க போய்க்கிறோம்” என ராஜ் வேகமாக சொல்ல

விபிஷ் அவனை பார்த்து முறைக்க

உடனே ராஜ் ஏதும் பேசாமல் தலையை கீழே போட “சரி விபீஷ் நீயும் கூடபோய் இவங்க வீட்டிற்கு போய் இவங்க அம்மாவிடம் சொல்லிவிட்டு அப்புறம் நீ கிளம்பு..”.என்றான்.

சரி என தலை ஆட்டிய விபீஷ் வினுவை பார்க்க அவளோ ஏதும் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தாள்.

“சரிடா நானும் கிளம்பறேன்....ரொம்ப களைப்பா இருக்கு” என சொல்லிவிட்டு கிளம்பினான்.

வீட்டின் அழைப்பு மணியை அடித்தவன்....வேகமாக திறந்த வெண்மதி கோபமாக ...”.எங்க போனிங்க மாமா ...நான் எத்தன முறை போன் பண்ணேன்.......ஏன் எடுக்கவே இல்லை..........நான் எவ்ளோ பயந்திட்டு இருந்தேன் தெர்யுமா ?” என அவள் அவனை உள்ளே வர விடாமல் வெளியே நின்று அழுவது போல் கேள்வி கேட்க

காலையில் இருந்து சாப்பிடாமல் ,நாள் முழுவதும் வேலை செய்த அலுப்பில் இருந்தவன்....அவளது பேச்சு அவனுக்கு கோபத்தை கிளப்ப

“முதல்ல உள்ள போடி ....என்ன நினைச்சுட்டு இருக்க...உன் மனசில....என்னை இது வரைக்கும் யாரும் இப்படி நிற்க வச்சு கேள்வி கேட்டதில்லை...நேரமாகும்னு சொல்லிட்டு தான போனேன்....நீ சின்ன புள்ளதனமா பயந்துகிட்டு இருக்கிறதுக்கு எல்லாம் நான் காவலா இருக்க முடியாது.நான் இப்படி தான்....இனி இந்த மாதிரி எதாவது பேசினா அவ்ளோதான்....நானும் போனா போகுதுன்னு பொறுமயா போனா ரொம்ப பேசற நீ......உனக்கு விருப்பம் இருந்தா இரு...இல்ல கிளம்பி உங்க ஊருக்கே போய்டு ....சும்மா அழுதுகிட்டு....பயந்துகிட்டு....... என்ன பொண்ணு நீ ........இந்த பயந்தகொள்ளியை கட்றதுக்குதான் உங்க

**ஊர்காரனுக என்ன அத்தனை கேள்வி கேட்டானுக…அவனுக மட்டும் வரட்டும்…இருக்கு கச்சேரி" என அவன் கோபத்தில் வார்த்தையை விட**

**"சும்மா எங்க ஊர்காரங்கள பத்தி தப்ப பேசாதிங்க மாமா…அவங்க என்ன பேசுனாங்கனு எனக்கு எப்படி தெரியும்…அடிகடி அதே சொல்லி காட்றிங்க" என ஊரின் பாசம் ரோசமாக மாறி அவனிடம் சண்டை போட வைக்க**

**"ஆமா…இந்த பட்டிகாட என் தலையில கட்றதுக்கு அவனுக கேட்ட கேள்வி இருக்கே" என சொல்லி கொண்டே திரும்பியவன்…அப்படியே அதிர்ந்து நிற்க**

**அங்கு மாசியும் அப்புச்சியும் சின்ன அறையின் வாயிற்படியில் நின்று கொண்டிருந்தனர்.**

உலகில் உள்ள அனைத்து இன்பங்களையும்

உன் அருகில நின்ற இந்த அரை நொடியில்

நான் அடைந்தேனடி!!

சிறகில்லா பறவையாய் வானில் பறந்தேன்!

முள்ளு இல்லாத ரோஜாவாய் செடியில் பூத்தேன்!

நிலவில் கயிற்று கட்டில் போட்டு படுத்து உறங்கினேன்!

உன் விரல்கள் என்ன தீண்டியபோது

என் அணுக்களின் எலக்ட்ரான்

எல்லாம் என்னுடன் சண்டையிட்டு

எதிர் மின்னூட்டம் எல்லாம்

என்னை எதிர்த்து செல்ல

என்னுள்ளே மின்சாரம் பாய்ந்ததே

இது போதும் பெண்ணே

லஷ்மிரவி

DO NOT COPY

.

DO NOT COPY

**அத்தியாயம் 14**

**கோபம் என்ற உணர்வு வந்து விட்டாலே நாம் பேசும் வார்த்தைகள் நம் கட்டுபாட்டில் இருக்காது.அதில் வேந்தன் மட்டும் விதி விலக்கா என்ன?...வார்த்தைகளை வேகமாக கொட்டிவிட்டு திரும்பியவன் அவர்களை பார்த்ததும் அதிர்ந்து நின்றான்.**

**பின்னர் கொஞ்சம் சமாளித்து “வாங்க...வாங்க...எப்ப வந்திங்க” என கேட்டவன்**

**“மதி வந்தவங்களுக்கு காபி கொடுத்தியா “என அவளை பார்த்து கேட்க**

**அவளோ அவனது பேச்சில் ரோசபட்டு அழுது கொண்டு நிற்க**

**வேந்தனுக்கு என்ன செய்வது என்றே தெரியாமல் அவளையும்,அப்புச்சியையும் மாறி மாறி பார்த்தவன்**

**“இல்லைங்க ....கொஞ்ச வேலை இருந்தது....அதான் லேட் ஆகிடுச்சு....பசி வேறயா ...அதான் இவ கேட்ட உடனே கொஞ்சம் வேகமா பேசிட்டேன்” என திக்கி திணறி சொன்னவன்,அவரயே பார்த்து கொண்டிருக்க**

**அப்புச்சியும் சிரித்து கொண்டே “அதுனால என்னங்க மாப்பிள்ளை....இந்த புள்ளைக்கு அறிவு இல்லை... வேலையை முடிச்சு வந்த ஆம்பிளைய வாசல்ல வச்சா கேள்வி கேட்கிறது....எம் பாப்பா இதான் நீ கத்து கிட்ட மரியாதியா “என அவர் மதியை பார்த்து கேட்க**

**அவள் ஏதும் பேசாமல் அவனியே முறைத்து பார்த்து கொண்டிருந்தாள்.**

**அவன் ஏதும் சொல்லாமல் அப்புச்சியிடம் திரும்பி**

**“வாங்க அய்யா சாப்பிடலாம்....ம்ம்ம் அப்புறம் உங்க பேரு” என அவன் மாசியை பார்த்து யோசிக்க**

**“மாசி சகலை”.... என சொல்ல**

**“ம்ம்ம்ம்....ஆமா...ஆமா வெற்றி சொல்லிருக்கான்... அன்னைக்கு பார்த்தது... கொஞ்சம் மறந்திடுச்சு......தப்பா எடுத்துகாதிங்க .......வாங்க மாசி சகலை சாப்பிடலாம்” என சொல்ல**

**மாசி சட்டென்று சிரித்து விட**

**வேந்தன் திரு திருவென முழிக்க**

**“ஏன் மாசி இப்ப எதுக்கு சிரிக்கிற...மாப்பிள்ளைக்கு தெரியாமதான சொல்றாபடி......அது வந்து மாப்பிளை அவன் பேரு மாசி.....நீங்க அவனுக்கு சகலை ஆகுது அதான் சொன்னான்” என அப்புச்சி விளக்கினார்.**

**ஹிஹிஹி என வலிந்தவன்,மனதிற்குள் “ஆரம்பிச்சுடாங்கடா இவனுக ஊர் குசும்ப.....இன்னும் எத்தன பல்பு வாங்குவம்மோ” என புலம்பிகொண்டே சாப்பிட அமர்ந்தான்.**

**அதற்குள் மதியும்........ சாப்பிட எல்லாம் எடுத்து வைக்க மூவரும் கொஞ்ச நேரம் பொது விஷயம் பேசிகொண்டே சாப்பிட்டு முடித்தனர்.**

**பின்னர் “ஏன் அய்யா முன்னடியே சொல்லி இருந்தா ரயில் நிலையத்திற்கு ஆள் அனுப்பி இருப்பேன்ல” என வேந்தன் அக்கறையாக விசாரிக்க**

**“இல்ல மாப்பிள்ளை நாங்க மதியமே வந்துட்டோம்.....சாயங்காலம் எல்லாம் கிளம்பிடலாம்னு நினைச்சோம் ....நீங்க வர ரொம்ப லேட் ஆகிடுச்சு...கருக்கால போய்டலாம்னு இருந்துகிட்டோம்” என்றார்.**

**“நேரமே வந்திடிங்களா...அப்ப எனக்கு போன் பண்ணிருக்கலாமே” என வேந்தன் சொல்ல**



DO NOT COPY

**"மதி தான் வேலை நேரத்துல கூப்பிட்ட உங்களுக்கு கோபம் வந்திடும்னு சொல்லுச்சு ...அதான் ஏழு மணியிலருந்து கூப்பிடோம்...நீங்க போனை எடுக்கலை ...அதான் பாப்பா கொஞ்சம் பயந்திடுச்சு ..."என மதியை வேந்தன் திட்டிய கோபத்தில் மாசி வேகாக சொல்ல**

**"அச்சோ ....நான் கொஞ்சம் வேலையா இருந்தேன் அப்போ ...அதான் எடுக்கலை...சாரி மாசி...."என பணிவாக கேட்டவன்**

**"மதி நீ புது நம்பேர்ல இருந்து கூப்பிட்டதும் நான் யாரோன்னு நினச்சு எடுக்கல....அதான்" என அவளிடமும் மெதுவாக சொல்ல**

**தனது தவறு என் தெரிந்துவுடன் சட்டன்று புது மனிதர்களிடமும் மன்னிப்பு கேட்கும் அந்த பண்பு அவர்களுக்கு பிடித்து போய் விட,பரவாயில்லை...எங்கே ஒரு அடாவடி மாப்பிள்ளையாக இருப்பாரோ என பயந்தேன்...பண்புள்ள மனிதனாகத்தான் இருக்கார் என மனதினுள் நினைத்து கொண்டான் மாசி.**

**அவன் நினைத்தை தன் அனுபவத்தால் முன்பே அறிந்திருந்த அப்புச்சி..."இதுக்கு எதுக்கு இம்புட்டு வருத்தபட்ரிங்க...வெளியே போனா வேலை நேரத்தை கணக்கு பார்த்தா செய்யா முடியும்....ஆனா அதை வீட்ல இருகிறவங்களுக்கு புரியற மாதிரி சொல்லிட்டம்னா அவங்களும் வருத்தபடாம இருப்பாங்கள" என சந்தடி சாக்கில் அவனுக்கு அறிவுரைகளை வாரி வழங்கினார்.**

**"அப்புறம் ஊர்ல எல்லாம் நல்ல இருக்காங்களா"? என வேந்தன் கேட்க**

**"எல்லாரும் நல்ல இருக்காங்க மாப்பிள்ளை....நம்ம மாசிக்கு வர திங்கள் கண்ணாலம் வச்சிருக்கோம்.அதுக்குதான் உங்களை அழைச்சுட்டு போகலாம்னு வந்திருக்கோம்.வெற்றி இருந்தா எல்லாம் இழுத்து போட்டு செய்வான்.அவனும் ஊருக்கு போய்ட்டான்.நீங்க 2 நாளைக்கு முன்னடியே வந்திருந்து கண்ணாலத்தை நல்லபடியா முடிச்சு கொடுத்திட்டு போகணும்" என அவர் வந்த காரியத்தை விளக்க**

**"வாழ்த்துக்கள் மாசி....அடுத்த வாரமா.....சந்தோசம்....ஆனா என்னால வர முடியாது...மதி வேணா அனுப்பி வைக்கிறேன்" என அவன் சொன்னான்.**

“என்ன மாப்பிளை இப்படி சொல்லிட்டிங்க....நீங்க கண்ணாலம் முடிஞ்சு மதிய இங்க கூட்டிட்டு வந்ததுதான் ...அப்புறம் ஊர்பக்கம் வரவே இல்ல... ...இப்பவும் பாப்பா மட்டும் வந்தா நல்லாவா இருக்கும்....நீங்களும் அவசியம் வரணும்” என அவர் சொல்ல

பெரியவர் சொன்னதும் மறுத்து சொல்ல மனம் இல்லாமல் “சரி பார்க்கிறேன் அய்யா...நாலு நாளைக்கு முன்னாடி வரமுடியாது.1 நாளைக்கு முன்னாடி வேணா வரோம் என சொன்னவன் சரி நேரமாகுது...நீங்க தூங்குங்க “என அவர்களை படுப்பதற்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு தனது அறைக்கு வந்தான். 1

அங்கு மதி கோபத்தோடு படுத்திருக்க....

“மதி...மதி” ன இருமுறை அழைத்தவன் அவள் திரும்பாமல் இருக்க

சட்டென்று கோபம் வர “மதிஈஈஈ....... என சத்தமாக அழைக்க

அவள் பயந்து உடனே படுக்கையில் இருந்து எழுந்து விட

“கூப்பிட்டா என்னனு கேட்கமாட்டியா .....இப்ப எதுக்கு அழுகிற நீ” என கேட்டவன்

“நான் திட்டினதுக்கு சாரி” என சொல்லி விட்டு படுத்து கொண்டான்.

கொஞ்ச நேரம் அப்படியே நின்றவள் ...பின்னர் “மாமா ....மாமா” என மெதுவாக அழைக்க

திரும்பாமலே “கேட்குது சொல்லு” என்றான்.

“இனிமேல் அப்படி பேசமாட்டேன் மாமா....அப்புச்சி,மாசி மாமா எல்லாரும் வந்திருந்தாங்களா....அதான் நீங்க இன்னிக்குனு பார்த்து இவ்ளோ லேட்டா வந்ததும் கோபம் வந்திடுச்சு...ரொம்ப வேலையா மாமா.... மழையில ரொம்ப நலஞ்சுடிங்களா...நான் வேணா சுடுதண்ணீர் வச்சு தரட்டுமா....ஆவி பிடிக்கிறிங்களா” என கேட்க

அவள் புறம் திரும்பியவன் எதுவும் பேசாமல் அவளை பார்த்து கொண்டே இருக்க

**மதியின் உடலில் ஒரு சின்ன அதிர்வு தோன்ற அவன் கண்களை பார்க்க முடியாமல் வேறு பக்கம் பார்க்க**

**சிலநொடிகள் அந்த நிலை நீடித்து இருக்க...**

**"மாமா வேற எதாவது வேணுமா" என மதி தான் முதலில் அந்த நிலையை கலைத்தாள்..**

**அவளின் நிலை என்னவென்று தெரியாமல்,... அவனுக்கும் மனதில் நினைத்ததை சொல்ல முடியாமல்,உடலின் களைப்பும் அவனுக்கு உறக்கத்தை கொண்டு வர........அதுவுமில்லாமல் உறவினர்கள் வேறு பக்கத்து அறையில் இருப்பதால் மனதை கட்டுபடுத்தியவன்...**

**"ம்ம்ம்ம் ...ஒண்ணுமில்லை...நீ படு" என சொல்லிவிட்டு திரும்பி படுத்து கொண்டான்.**

**மறுநாள் காலை நேரமாக எழுந்து மாசியும் அப்புச்சியும் கிளம்பினர்.எப்போதும் நேரமே எழுந்திரிக்கும் வேந்தன் இன்று அசந்து தூங்க, எப்போதும் போல் எழுந்த மதி அவர்களை கொண்டு போய் ரயில் நிலையத்தில் விட வேந்தன எழுப்ப**

**அவனோ கண்ணே முழிக்காமல் படுத்திருக்க**

**"விடு பாப்பா...மாப்பிளை தூங்கட்டும் நேத்து முழுசும் வேலை பார்த்திட்டு வந்திருக்கார்ல....நாங்க போய்கிறோம் "என சொல்லி விட்டு இருவரும் வெளியே வந்தவர்கள்**

**பாப்பா என அப்புச்சி அழைக்க...**

**என்ன அப்புச்சி என மதி கேட்க**

**"உனக்கு என்னஉதவி தேவைபட்டாலும்  நாங்க இருக்கோம் கண்ணு...நீ எதுக்கும் கவலைபடாத....ஒரு போன் பண்ணு நாங்க வந்திடறோம்" என குரல் தழுதழுக்க சொல்ல**

**உடனே மாசி அருகில் வந்து" நீ எதையும் மனசுல வச்சு மருவாத பாப்பா...பெத்தவங்களுக்கு  பதிலா நாங்க இருக்கோம்" என அவள் தலையை தடவி  கொண்டே சொல்ல**

**அவர்களின் மன நிலையை புரிந்து கொண்டவள் "இல்ல அப்புச்சி...நான் நல்லாத்தான் இருக்கேன்....என்ன மாமாவுக்கு கொஞ்சம் கோபம் வரும்.ஆனா கொஞ்ச நேரத்துல சரி ஆகிடும்.... நீங்க கவலை படாதிங்க ..........அண்ணா தினமும் என்கிட்டே பேசிட்டு தான் இருக்கு" என அவள் சிரித்து கொண்டே சொல்ல**

**எதோ சொல்ல வந்த அப்புச்சி ஏதும் சொல்லாமல்" ...சரி பாப்பா ....நாங்க கிளம்பறோம் "என சொல்லிவிட்டு கிளம்பினர்.**

**அவர்கள் சென்றபிறகு மதி எப்போதும் போல் தன வேலையை பார்க்க மணி ஏழு ஆன உடன் அவனுக்கு சத்து மாவு காஞ்சி கலக்கி எடுத்து செல்ல**

**அப்போதும் அவன் எழாமல் படுத்து இருந்தான்.**

**"மாமா ...என்ன இன்னைக்கு இவ்ளோ நேரம் தூங்கிரிங்க....நேரமாச்சு....காஞ்சி குடிக்கிலியா" என அவள் கூப்பிட**

**அவனிடம் இருந்து எந்த பதிலும் வராமல் போக அவன் அருகே சென்று மாமா...மாமா என குரல் எழுப்ப**

**அப்போதும் பதில் வராமல் போக**

**அவனை திருப்பி விடுவதற்காக \அவன் மேல் கைவைக்க சென்றவள் யோசனையுடன் பார்த்து கொண்டே நிற்க**

**அதற்குள் அவன் எதோ முனகுவது போல் தோன்ற**

**"மாமா என்ன சொல்றிங்க" என சொல்லிகொண்டே அவன் வாய் அருகில் காதை வைத்தவள்**

**அவன் வெப்ப மூச்சுகாற்று அவளை தாக்க ...சட்டென்று அவன் நெற்றியில் கை வைக்க அது சூடாக இருந்தது,பின்னர் அவனை வேகமாக திருப்பி நேராக படுக்க வைத்து கழுத்தில் கை வைத்தவள் அங்கு அனலாக கொதிக்க**

**அச்சோ காய்ச்சல் அடிக்குதே என பதறியவள் ஈரதுணியை நனைத்து அவனது நெற்றிக்கு போட்டாள்.அவளுக்கு தெரிந்தது அவ்ளோதான்.பின்னர் விபீஷிக்கு போன் செய்தாள்..**



DO NOT COPY

அவன் வந்து வேந்தனை எழுப்ப அவனால் எழுந்தரிக்கவே முடியவில்லை.பின்னர் அவனை தூக்கி காரில் வைத்து மருத்துவமனைக்கு அழைத்து சென்றான்.மழையில் நலைந்ததால் வைரஸ் காய்ச்சல் என்ற மருத்துவர் சொல்ல.பின்னர் மாத்திர மருந்து வாங்கி கொண்டு வீட்டிற்கு வந்தனர்.

அவன் உள்ளே நுழைந்ததும் "அண்ணா என்ன சொன்னங்க டாக்டர் ....பெருசா ஏதும் இல்லையில" என கேட்க

"ஒன்னும் இல்ல மயிலு... வைரஸ் காச்சல்தான் .....இந்த மாத்திரயை கொடு...இந்த டானிக் 1 மணிநேரத்திற்கு ஒரு முறை கொடுக்கணும் ...மறக்காம கொடுத்திடு...சாப்பாடு கஞ்சி மட்டும் கொடு."என்று சொன்னான்.

எல்லாவற்றிற்கும் தலை ஆட்டியவள்...பின்னர் "அண்ணா மாமாக்கு சரி ஆகிடும்ல....பேசவே மாட்டேன்கிறார்" என சொல்ல

"அவன் ..நல்ல தூங்கறான்...அவ்ளோதான்...நீ இத கொடு ...நான் ஆபிஸ் போயிட்டு மதியம் வரேன்" என சொல்லி விட்டு சென்றான்.

அவன் சென்ற பிறகு அவனை விட்டு நகரவில்லை மதி.அவன் முகத்தை பார்த்தபடியே அமர்ந்திருந்தாள்.அவன் சிறிது அசைந்தாலும் என்ன வேணும் மாமா என கேட்டு தலையணை நகர்த்துவது என செய்து கொண்டிருந்தாள்.

மாத்திரையின் உதவியாலும்,மதியின் கவனிப்பாலும் கொஞ்சம் தேறி வந்தான் வேந்தன்.இந்த இரண்டு நாட்களில் மதி அவனுக்கு ஊட்டி விடுவது,அவன் உடலை துடைத்து விடுவது,ஒரு முறை சாப்பிடும்போது அவன் வாந்தி எடுக்க அதையும் தன கைகளில் ஏந்தினால் அவள்.கைகளில் ஏந்தியதோ அவள் ஆனால் வேந்தனின் கண்களிலோ கண்ணீர்....

"ஏன் மாமா ...என்னாச்சு......ரொம்ப முடியலியா" என அவள் பதட்டத்துடன் கேட்க

இல்லை என்று தலைஆட்டியவன் அவளை தன் அருகில் அழைத்து அவள் தோளில் சாய்ந்தவன்

"மதிம்மா உன்னை பார்க்கும்போது எல்லாம் எனக்கு அம்மா நியாபகம் வருது....நான் இந்த அன்புக்கு எவ்ளோ நாள் ஏங்கிட்டு இருந்தேன் தெரியுமா ?....உன்னால வாழ்கையில எனக்கு எல்லா சந்தோசமும் கிடைக்குது" என மனம் நிறைவாக அவன் சொல்ல

அவன் முகத்தை தன நெஞ்சோடு அணைத்து கொண்டவள் "கவலை படாதிங்க மாமா ..கடவுள் எல்லாருக்கும் எல்லா நாளும் கஷ்டத்தை கொடுக்க மாட்டார்" என சொல்ல

அந்த இடத்தில் காதல் இல்லை,காமம் இல்லை...தாயின் அன்பை தேடி ஏங்கும் ஒரு ஜீவன் தன தாய் மடிலே தஞ்சம் அடைந்தது போல் அவளது நெஞ்சில் தஞ்சம் அடைந்தான்.

10 நாட்களுக்கு எங்கும் செல்ல கூடாது என மருத்தவர்கள் கூறியதால் அவனும் வீட்டிற்குள்ளே இருந்தான்.

உடல் நிலை சரி இல்லாமல் வேந்தன் இளைத்ததை விட அவனை பார்த்து கொண்டே சாப்பிடாமல் அவள் தான் இளைத்து போனாள்.

"மதி என்ன 3 இட்லி சாப்பிட்டர...இந்தா இன்னொரு இட்லி சாப்பிடு' என அவளை மிரட்டி சாப்பிட வைத்து கொண்டிருந்தான் வேந்தன். போதும் மாமா......இங்க யாரு உடம்பு சரியில்லதவங்கனே தெரியல.....நீங்க சாப்பிடுங்க என பெரிய மனுசி போல் மிரட்டி கொண்டிருந்தாலும்

இன்னும் அவனுக்கு ஊட்டு விட்டு கொண்டிர்ந்தாள்..சில சமயம் அவள் அவனை தொட்டு ஊட்டி விட,படுக்கையை சரி பண்ண என அவனை நெருங்கும்போது உடல் சரியான பிறகு வேந்தன் தான் தவித்து போனான்.வேண்டாம் என்று சொன்னாலும் அவள் கேட்பதில்லை.

ஆசைப்பட்டு மணந்தவள்,திருமணதிற்கு பிறகு அவளிடம் அவன் அதிகம் நெருங்கியது இல்லை.இந்த ஒரு வாரத்தில் அவளிடம் அதிகம் நெருங்கியவன் அவனால் அவனது உணர்வுகளை கட்டு படுத்த முடியவில்லை.

**அதுவும் இது வரை  காதலியாக மட்டுமே இருந்தவள் இப்போது தாய்மை குணத்தையும்  அறிந்தவனால்  அவளின் மேல் உள்ள அன்பு கட்டு கடங்காமல் சென்றது.**

**ஆனா அவளோ அதை அறிந்து கொள்ளாமல் அவன் உடல் நிலையை மட்டுமே நினைத்து கவலைபட்டு கொண்டிருந்தாள்.**

**இனியும் தன்னால் பொறுத்து கொள்ள முடியாது ....அவளிடம் பேசிவிட வேண்டும் என்ற முடிவோடு அன்று இரவு காத்திருந்தான்.**

**வேலையை முடித்து விட்டு அவளும் யோசனை உடனே உள்ளே வர**

**"மதி  இங்கே வா" என அழைக்க**

**உடனே "என்னாச்சு மாமா......மறுபடியும் வாந்தி வர மாதிரி இருக்குதா "என பதறி போய் அவனருகில் சொல்ல**

**அவளது அன்பில் அவன் கரைந்து போனான்.**

**"இல்ல மதி உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்" என அவன் ஆரம்பிக்க**

**"ஹாய்......நானும் அதே தான் மாமா நினச்சேன்....நம்ம இரண்டு பெரும் ஒரே மாதிரி நினைகிறோம்ல...same pinch" என சிறுபிள்ளை போல் அவள் சொல்ல**

**அவன் சிரித்து கொண்டே "என் மதி  என்ன நினச்சிங்க" என கொஞ்சி கேட்க**

**அவள் மெதுவாக அவன் அருகில் நெருங்கி அமர**

**வேந்தனோ ஏற்கனவே கொதிப்பில் இருந்தவன் இந்த நெருக்கம் மேலும் அவனை சூடு படுத்த**

**மதிஈஈஈ ...என அவள் காதில் ஆசையோடு  அவன் அழைக்க**

**அவளும்" மாமா ......ம்ம்ம்ம்....அதுவந்து" என இழுக்க**

**"சொல்லு  மதி ....மனசுல இருக்கிறத சொல்லு...மாமா தான" என ஆவலோடு கேட்டான்.**

**“அது வந்து நாளைக்கே எங்க ஊருக்கு போலாம் மாமா....வெள்ளிகிழமை கல்யாணம் .....போனா 2 நாளைக்கு இருந்திட்டு வரலாம்.....அங்க உங்களுக்கு எந்த வேலையும் கிடையாது...நல்லா படுத்து ரெஸ்ட் எடுக்கலாம்.என்ன சொல்ட்றிங்க மாமா “என கேட்க**

**கேட்ட வேந்தனோ ஏமாற்றமும் ,கோபமும் ஒன்னு சேர.....அவளை பார்த்து “இதுக்குதான் இவ்ளோ பில்டப் கொடுத்து ஆரம்பிச்சியா....இப்ப நீ உங்க ஊருக்கு போகணும் அவ்ளோதான” .....என கத்தாமல் அதே சமயத்தில் அழுத்தமாக கேட்க**

**அவள் “ஆமாம் ...ஆமாம் மாமா “ என்று சந்தோசமாக வேகமாக சொல்ல**

**எதுவும் சொல்லாமல் திரும்பி படுத்தவன் “சரி போயிட்டு நீ வா” என்றான்.**

**“என்னது நான் மட்டுமா........இல்ல மாமா நம்ம இரண்டு பேரும் தான் போகணும்....அப்புச்சி போகும்போதும் சொல்லிட்டு போச்சு...இரண்டு பேரும் அவசியம் வரணும்னு” என அவள் சொல்ல**

**“இங்க பாரு மதி.....என்ன கடுப்பேத்தாத.....நான் தான் உன்ன போக சொல்லிட்டேன்....நீ எப்போ வேணாலும் கிளம்பு” என அவன் திரும்பாமலே சொன்னான் .**

**“இல்ல மாமா...நீங்களும்தான் வரணும்....நான் உங்கள அங்க எந்த தொந்தரவும் பண்ணமாட்டேன்.....நீங்க இல்லாம நான் மட்டும் எப்படி போறது....எனக்கு பயமா இருக்கு” என அவள் பிடிவாதம் பிடிக்க**

**வேகமாக எழுந்துவன் “ஆமா எதுக்கெடுத்தாலும் பயம்...ஏழு கழுதை வயசாகிடுச்சு....இன்னும் ஒரு மண்ணும் புரியலை....உனக்கு சொன்னாலும் புரியாது....தானாவும் தெரியாது....நீ எல்லாம் எப்ப எல்லாம் தெரிஞ்சு” என அவனது உணர்வுகளை வார்த்தையில் கொட்ட**

**அவனது திடீர் தாக்குதலில் அதிர்ந்தவள் எப்போதும் போல் அழுக**

**“இங்க பாருடி முதல்ல அழுகயை நிறுத்து......இச்சே என்னமோ நினச்சு என்னமோ நடக்குது என புலம்பியவன்.....நான் வர முடியாது.....நீயும்**

போக வேண்டாம்…பேசாம படு “என சொல்லி விட்டு போர்வை எடுத்து முழுவது போர்த்தி கொண்டு உறங்கி விட்டான்.

அவள் சிறிது நேரம் அழுதவள் பின்னர் ஒரு யோசனை தோன்ற அதை செயல்படுத்தி விட்டு வந்து படுத்தாள்.

மறுநாள் காலை வேந்தன் யோகா முடித்து விட்டு வர அவன் முன் விபீஷ் நின்றான்.

“டேய் நீ என்னது இந்த நேரத்துல ….ஆச்சிரியமா இருக்கு……”என்றவன்.

“என்ன நண்பா பண்றது…உன்ன மாதிரி ஆளுக்கு எல்லாம் பிரிண்டா போயிட்டனே …அப்ப இப்படிதான் ராக்கோழி மாதிரி அலையணும்” என சொல்ல

“ஏண்டா என்ன ஆச்சு….உனக்கு உங்க அப்பாவுக்கும் சண்டையா….அதும் காலையிலேவா “என சிரித்து கொண்டே கேட்க

“அது எப்பதான் இல்லாம இருக்கு…டிவி மெகா சீரியல் மாதிரி …. அது எப்போ முடியும்னு யாருக்கும் தெரியாது” என கிண்டலாக சொன்னவன்

“சண்டைதான் ….ஆனா எனக்கில்லை….புடிச்ச முயலுக்கு மூனே காலுன்னு நிக்கிறவனுக்கும் .முயலே பார்க்காத பொண்ணுக்கும்” என சொல்ல

“என்னடா உளற “என ஆரம்பித்தவன்…..நிறுத்தி மதியை பார்க்க …அவள் சமையல் அறைக்குள் இருந்து எட்டி பார்த்து கொண்டு நின்றால்.

“என்ன உன் மயிலு வரசொன்னாலா…..இருக்காதே …சண்டையே நைட் தான…அதும் 10 மணிக்கு தான்…அப்டினா” என அவன் யோசிக்க

“தப்பு நண்பா….சண்டை ஆரம்பிச்சது 9.45க்கு…”என சொல்ல

“ஏய் உனக்கு எப்படி என்றவன்….அப்போ காலையிலே நேரமே போன் பண்ணிட்டளா” என்றான்.

“மறுபடியும் தப்பு நண்பா …..10.20கு சண்டை முடிஞ்சது….10.30 க்கு எனக்கு தகவல் வந்திடுச்சு” என சொல்ல அவன் சொன்னதை கேட்டது வேந்தனுக்கு சிரிப்பு வர அதையும் மீறி மதி மேல் கோபம் வந்தது.



DO NOT COPY

“மதி…மதி “என அழைக்க

அவள் மெதுவாக வந்து நிற்க

“என்ன சொன்ன ……இப்போ எதுக்கு அவனையும் தொந்தரவு பண்ண நீ…என்ன படுத்தறது பத்தாதா…அவனும் இதுல சிக்கனுமா “என கத்த

“டேய்….விடுடா…மயிலு சொன்னதுல என்ன தப்பு…..ஏன் நீ ஊருக்கு போக மாட்டேன்கிற…..பெரியவங்க வந்து சொல்லிட்டு போய் இருக்காங்களா…இதெல்லாம் போகணும் வேந்தா…கிராமத்துல இல்லினா தப்பா பேசுவாங்க…அப்புறம் நம்ம வெற்றிக்கு தான் அவமானம்…”என பலவாறாக பேசி அவன் மனதை கரைத்தான் விபீஷ்.

வெற்றின் பெயரை கேட்டதும் வேந்தன் முகம் மாற “சரிடா…..நான் போறேன்….ஆனா கல்யாணத்திற்கு ஒரு நாளைக்கு முன்புதான் போவேன்…ஒரு நாள் போதும்” என அவன் சொல்ல

ஆனால் மதியோ இன்றே போக வேண்டும் என அடம்பிடிக்க

“இங்க பாரு மயிலு….அவனே திருந்தி வரேன்னு சொல்லிருக்கான்….அதையும் நீ கெடுத்துகாத….பேசாம அவன் சொல்ற நாள்ல கிளம்பு “என அவளையும் ஒருவாராக பேசி நிலைமையை சீராக்கினான்.

பின்னர் காலை உணவை அங்கே முடித்து கொண்டு அன்று வேந்தனும் அலுவலகம்  வருவதால் அவனையும் அழைத்து கொண்டு கிளம்பினான்.வரும்  வழியில் நண்பா இனி இரவு நேரத்துல போன் சுவிட்ச் ஆப் பண்ணிடு….காலையில் 7 மணிக்கு நான் வரதுக்கு 5 மணியில இருந்து மயிலு கூப்பிட்டுகிட்டு இருக்கு….காதுல ரத்தமே வந்திடுச்சு” என அழுவது போல் சொல்ல

அவன் சிரித்து கொண்டே…..”விட்ரா…விட்ரா…..உன்னை என் மதி இன்னைக்கு சூரிய உதயத்தை பார்க்க வச்சிருக்கா…அதுக்கு நன்றி சொல்வியா…அத விட்டுட்டு புலம்பற” என அவன் கிண்டலாக சொல்ல

“டேய் அப்போ குடும்பமே பிளான் பண்ணிதான் இப்படி பண்ணிங்களா” என அவன் அலற

**இப்படி அலறலுடனும் சிரிப்புடனுமே அலுவலகத்தை அடைந்தனர்.**

**அன்பைத்தேடி அலைந்து**

**அடைக்கலமாய் ஓரிடத்தில் வாழ்ந்து**

**வாழ்கையின் ஓட்டத்தில்**

**ஓடிகொண்டிருந்த என்னை**

**கள்ளமில்லா உன் வெள்ளை மனதிள்**

**என் உள்ளம் கொள்ளை போக**

**என்னுள் பாதியாக உன்னை**

**நான் மாற்ற**

**நீயோ உன் அன்பால்**

**என்னை முழுவதுமாக ஆக்கிரமித்து**

**உன்னுள் நானே கரைந்தேனடி.**

DO NOT COPY

**அத்தியாயம் 15**

**ஒரு பெரிய பஞ்சாயத்திற்கு பின் வேந்தனும் மதியும் ஊருக்கு கிளம்பினர். பிறந்த ஊருக்கு செல்லும் சந்தோசம் ஒருபுறம்,கொஞ்ச நாட்களாக வேந்தன் அவளிடம் காட்டும் அன்பு மறுபுறம் என அவளது முகம் மகிழ்ச்சியின் பிறப்பிடமாக இருந்தது.இந்த முறை எங்கும் வேடிக்கை பார்க்காமல் அவனுடன் பொறுப்பாக நடந்து சென்றாள் மதி.**

ஊருக்குள் நுழைந்ததும்  ராக்காய் அத்தைதான் அவர்களை முதலில் ஆரத்தி சுத்தி வரவேற்றார்.

“எங்க அத்தை ஒருவரையும்  காணோம்” என மதி கேட்க

“எல்லாம் பொண்ணுவீட்டுக்கு எண்ணெய்கலயம் கொண்டு போயிருக்காங்க பாப்பா....இப்ப வந்திருவாங்க...மாப்பிள்ளை நீங்க உட்காருங்க “ என வேந்தனக்கு நாற்காலி எடுத்து போட்டார்.

அதற்குள் அந்த ஊர் பெருசு ஒன்று “ஏலே ராக்காயு ஆரு அது”... என கேட்டுகொண்டே வர

“நம்ம பாப்பாதான் மதினி வந்திருக்கா ...மாப்பிளையும் வந்திருக்காரு” என அவர் சொல்ல

“ஒ தம்பியும் வந்திருக்கா என அருகில் வந்தவர் எப்படி இருக்கீங்க தம்பி......வேலை வெட்டி எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு ?” என கேட்க

ஆஹா இப்பவே ஆரம்பிச்சுடிங்களா என மனதில் நினைத்தவன்,இதுக்குதான் வரலைன்னு சொன்னேன் என மதியிடம் பார்வையாலே சொன்னவன் ......

“ஹிஹி நல்ல இருக்கேன் பாட்டி......நீங்க எப்படி இருக்கீங்க?” என்றவன் உட்காருங்க பாட்டி என நகர்ந்து உட்கார்ந்தான்.

“பரவாயில்லை  தம்பி வேண்டாம்....ஏதோ உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்க.....இப்போ தேவலையா “... என கேட்க

“ இப்ப  சரி ஆகிடுச்சு பாட்டி “ என்றான்.

“ஆனா பார்த்தா அப்படி தெரியலயே என்றவர் .ஏலே ராக்கு மாப்பிள்ளைக்கு சளி இன்னும் போகலையாட்ட இருக்கு....பாரு பேசும்போதே தெரியுது...நான் முருகுகேசுகிட்ட விடகோழி கொடுத்து விடறேன்...சாறு வச்சு கொடு ...சரி ஆகிடும்”  என்று  சொன்னவர்

“ஏண்டி பாப்பு தம்பி எவ்ளோ நேரமா  உட்கார்ந்திருக்கு....வாயை பார்த்துட்டு நிக்குறவ...உள்ள போய் அத்தை கிட்ட  கேட்டு சாப்பிட எதாவது எடுத்து வா” என மதிய  விரட்ட

**அதற்குள் ராக்கு காபி கொண்டு வர**

**“என்ன இது....இந்த காபி கொடுக்கிறவ ....போய் சுக்கு தட்டிபோட்டு இரண்டு கருப்பட்டி போட்டு காபி எடுத்திட்டு வா....தொண்டை கரகரப்பு கொஞ்சம் சரி ஆகும்ல தம்பிக்கு ” என அவரையும் விரட்டினார் .**

**வேந்தனோ அந்த பாட்டியின் மிரட்டலை பார்த்து அசந்து போய் அமர்ந்திருந்தான்.அதற்குள் மதி பலகாரம் உள்ளே இருந்து எடுத்து வர**

**உட்காருங்க பாட்டி சாப்பிடுங்க என வேந்தன் சொல்ல ..... இல்லை தம்பி....வீட்டு மாப்பிள்ளைங்க முன்னாடி எப்படி உட்காரது....மரியாதையா இருக்காது” என சொல்ல**

**“பரவாயில்லை பாட்டி....உங்க பேரனா இருந்தா உட்கார மாட்டிங்களா அப்படி நினச்சுகுங்க”.என அவரை வற்புறுத்தி அமரவைத்தான்.**

**வேந்தனுக்கு ஒன்று மட்டும் புரியவில்லை.இதே பெருசுதான் திருமணத்தின் முன்பு கேள்விகனையால் அவனை கேள்விக்குறியாக்கியது.ஆனால் இப்போதோ அவன் சொல்லாமலே அவன் உடல்நிலை அறிந்து அதற்கு ஏற்றார் போல் சாப்பிட கொடுத்து மரியாதையும் தருகிறார்....இவர்களை எப்படி கணிப்பது என்றே தெரியாமல் அவன் முழித்து நிற்க ......**

**இதுதான் கிராமம்...இங்கு இருக்கும் மக்கள் ஒருவரை ஏற்றுக்கொள்ளும் வரை சந்தேகப்பட்டு ஆயிரம் கேள்வி கேட்பார்கள்....ஆனால் அவர்கள் மனதிற்கு பிடித்து விட்டால் அன்பால் ,பாசத்தால் அவர்களை திக்குமுக்காட செய்து விடுவார்கள்......யார் வீட்டு உறவினாராக இருந்தாலும் தன்னவர்கள் போல் பாவித்து அவர்களை உபசரிப்பர்.அதும் வேந்தன் இந்த ஊர் மாப்பிள்ளை ஆனதால் ராஜ மரியாதை தான் அவனுக்கு.**

**அந்த ஊரில் மதியை பெற்றவர்களும் இல்லை...வெற்றியும் இல்லை ...அதனால் அங்கு எப்படி இருக்குமோ என நினைத்து கொண்டே வந்தவன்.....அவர்களின் அக்கறையை பார்த்து அதிசியத்து போனான்.**

அதற்குள் வெளியே சென்றவர்கள் உள்ளே வர ....முதலில் வேந்தனை பார்த்த மாசி "வாங்க சகலை.. "என ஓடி வந்து அவனை கட்டி வரவேற்க

அதற்குள் இன்னொரு வாலிபன் "மாமா இதான் வர நேரமா.....இன்னும் புது மாப்பிள்ளை முறுக்குல இருந்து வெளியே வர முடியலையா ...... "... என கிண்டலாக கேட்க

"மச்சான் என்ன இப்படி இளச்சு போய்ட்டிங்க........ அந்த வேலை ரொம்ப ஜாஸ்தியோ...."என இரண்டு அர்த்தத்தில் இன்னொருவர் கேட்க

இவர்கள் இப்படி படபடவென்று பேசியதும் ஏதும் புரியாத வேந்தன் ஆமாம்!!!! என்று தலை ஆட்ட

"டேய் சும்மா இருங்கடா....வந்த மனுசனை விசாரிக்காம லந்து பண்ணிட்டு இருக்கானுக" என அப்புச்சி அவர்களை அடக்கினார்.

பின்னர் மாசி அவன் அருகில் வந்து"...சகலை இங்க எல்லாம் அப்படிதான்.....புரிஞ்சா தலை ஆட்டுங்க...மத்தபடி அமைதியா இருந்துக்குங்க...இல்ல இவனுக போதைக்கு நீங்க ஊறுகாய் ஆகிடுவிங்க" என சொல்ல

வேந்தனோ என்னடா நடக்குது இங்க என நினைத்தவன் ,"நான் முதல்ல வந்தப்ப இவங்களை எல்லாம் பார்த்ததே இல்லியே" என்றான்.

"அப்போ வெற்றியோட நண்பன்...இப்ப நீங்க இந்த ஊரு மாப்பிள்ளை ஆகிடிங்களா..இனி மேல எல்லாம் ஒன்னுக்குள்ள ஒன்னு தான்....இங்க பாருங்க இவங்க இரண்டு பேரும் உங்களுக்கு மச்சானகுது,இவரு சகலை ஆகுது,இவரு சின்ன மாமனார் ஆகுது "என உறவுமுறைகளை மாசி அவனுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

சிறியவயதில் தாய் தந்தையரை இழந்து அநாதை இல்லத்தில் வளர்ந்த தனக்கு இப்போது இவ்வளவு உறவுகாரர்களா........,பாசத்தையும் அன்பையும் வாரி கொடுக்கும் நல்ல மனிதர்களா என சந்தோஷ உணர்வில் நெஞ்சம் நிறைய பேச வார்த்தைகள் வர மறுக்க அதை மறைத்து கொண்டு அனைவரிடமும் புன்னகை ஒன்றயே பதிலாக தந்தான்.

**அதற்குள் பெரியவர்கள் பந்தக்கால் நடுவதற்கு அனைவரயும் அழைக்க அங்கும் வேந்தனுக்கே முதல் மரியாதை கொடுக்கப்பட்டது.பின்னர் மாசி வேந்தனையும் மதியையும் அழைத்து ஒரு பார்சல் ஒன்றை கொடுத்தான்.**

**“சகலை இது என் கண்ணாலத்திற்காக மதிக்கும் உங்களுக்கும் எடுத்தது.தயவு செய்து மறுக்காம இத வாங்கிக்கங்க” என்றான்.**

**வேந்தன் யோசிக்க உடனே மதி “வாங்கிக்கங்க மாமா....இது இந்த ஊரு வழக்கம்தான்” என்றாள்.வேந்தனும்  வாங்கி கொண்டான்.**

**பின்னர் மதி “மாசி மாமா நாங்க எங்க வீட்டுக்கு போறோம்....அப்பா அம்மா நினைப்பா இருக்கு...அதுநாள தோட்டத்துக்கு போயிட்டு வந்திடறேன்” என்றாள்.அவளின் மனதை புரிந்து கொண்ட மாசியும் சரி என்று தலை அசைத்தான்.**

**ஆனால் வேந்தனோ “வேண்டாம் மதி....அங்க போனா நீ ரொம்ப எமோஷன் ஆகிடுவ” என தடுக்க**

**“இல்ல மாமா....நான் அப்படி எல்லாம் பண்ணமாட்டேன்...ப்ளீஸ்” என கெஞ்ச**

**“மாப்பிள்ளை சொல்றத கேளு பாப்பு” என மாசி அதட்ட**

**உடனே அவள் முகம் சுருங்க**

**“சரி போலாம் வா....ஆனா ரொம்ப நேரம் இருக்க கூடாது” என கூறி வேந்தனும் அவளை அழைத்து சென்றான்.**

**ஐந்து மாதமாக புழங்காத வீடு குப்பை அண்டி கிடக்க அதை சுத்தம் செய்தாள் மதி.ஊரை விட்டு தோட்டத்தில் வீடு இருந்தால் அங்கு யாரும் வருவதில்லை.**

**தாய் தந்தை  படத்திற்கு விளக்கு ஏற்றியவள் வேகமாக பூவை பறித்து மாலையாக கட்டி அவர்களுக்கு போட்டாள்.அவளின் வேகத்தை பார்த்து வேந்தனே மலைத்து போனான்.பிறந்த வீட்டிற்கு வந்து விட்டால் இந்த பெண்கள் மட்டும் எப்படி மாறி போய்விடுகிறார்கள் என ஆச்சரியபட்டான்.**



DO NOT COPY

அமைதியான இடம் ,சுற்றிலும் தோப்பு,நடுவில வீடு என அந்த சூழ்நிலை அவனுக்கு ஒரு புதிய அனுபவத்தை கொடுத்தது.

இரவு திருமணவீட்டிற்கு செல்ல இருவரும் கிளம்பினர்.

“மதி இந்த டிரஸ் எப்ப போடணும்” என மாசி எடுத்து கொடுத்ததை கையில் பிடித்து கொண்டே உள்ளே வர

அப்போது புடவை மாற்றிகொண்டிருந்த “மதி என்ன மாமா” என நிமிராமல் கீழே குனிந்த படியே கேட்க

பதில் ஏதும் வராமல் போக நிமிர்ந்து பார்த்தவள்

வேந்தன் அவளை பார்த்து கொண்டே இருக்க, வெட்கத்தில் அவள் முகம் சிவக்க

“அப்படி பார்காதிங்கா மாமா....எனக்கு என்னமோ மாதிரி இருக்கு.....இப்ப நீங்க எதுக்கு உள்ள வந்திங்க” என சிணுங்கி கொண்டே அவள் கேட்க

அவளது சினுங்களும் வெட்கமும் அவனை உசுப்பி விட மெதுவாக அவன் அருகில் வர

“மாமா ....என்ன்ன்ன வேனும்” என அவளும் தடுமாற

அவள் கையில் வைத்திருந்த புடவை நழுவ ,அவள் பின்னாடியே சென்றாள்.

அவள் அருகில் வந்து அவள் முகத்தை கையில் ஏந்தியவன் கண்களோடு கண்களை சிறிது நேரம் கலக்கவிட,அவள் உடலில் ஒரு சிலிர்ப்பு தோன்ற ,வேண்டாம் மாமா என வாய் மறுக்க , ஆனால் அவளின் உடலின் மொழி அதற்க்கு சம்மதம் சொல்ல மெதுவாக அவள் நெற்றியில் முதல் முத்தை பதித்தான்.

மதிஈஈஈ!!!!!!!!!! என அவன் தாபத்தில் மெல்ல அவளை அணைத்து கழுத்தில் உதடு பதிக்க

அந்த நேரத்தில்...”.ஏண்டி வெண்மதி என்ன பன்ற ....நேரமாச்சு...அங்க எல்லாரும் உங்களை கூப்பிட்டாங்க” என வெளியில் இருந்து ஒரு குரல் கேட்டது.

**சட்டென்று சுதாரித்த மதி வேகமாக புடவையை எடுத்து கொண்டு வெளியே ஓடியவள்**

**“கரடி மாதிரி வரதே இந்த ஊர்காரங்களுக்கு பொழப்பா போச்சு” என சலித்து கொண்டே அவன் கிளம்ப**

**“யாரு ஜோதியா…வந்தறேன்…… எல்லாம் இவர்னாலதான்…இல்ல…இல்ல…..இந்த புடவைதான் கட்ட தெரியலை…அதான்” என மதி உளறி கொட்டினாள்.**

**அவளை ஒரு மாதிரி பார்த்த ஜோதி “என்னடி சொல்ல வர” எனக்கேட்க**

**எனக்கு புடவை கட்ட தெரியலை…சொல்லிகொடு என அவள் கெஞ்ச**

**அவள் வந்து கட்டிவிட்டவள்…”கண்ணாலம் ஆகி ஆறு மாசம் ஆகுது…இன்னும் புடவை கட்ட தெரியலை…உன்மேல தப்பில்லை….மச்சானை சொல்லணும் …எங்க கூப்பிடு மச்சானை” என அவள் கிண்டல் பண்ண**

**மாமா!!!!! என அவள் குரல் கொடுக்க**

**வெளியே ஆள் இருப்பது தெரியாமல் “மதி எனக்கு இந்த வேஷ்டி கட்ட தெரியல…இது என்ன இவ்ளோ பெருசா இருக்கு” என அவன் எட்டு முழ வேஷ்டியை சுத்தி கொண்டு வந்தான்.**

**அவனை பார்த்தும் அருகில் இருக்கும் தோழிகளும் சிரித்து விட**

**வெளியே வந்தவன் வெட்கப்பட்டு மறுபடியும் உள்ளே சென்று விட்டான்.**

**“நல்லா சேர்ந்தாங்கடி ஜோடி…..இப்படிதான் குடும்பம் நடத்தரிங்களா நீங்க” என கிண்டல் பண்ணியவர்கள்**

**அதற்குள் ஊர்கார இளைஞன் ஒருவன் வர அவன் வேந்தனுக்கு வேஷ்டி கட்ட உதவ ஒருவழியாக தோழிகளின் கிண்டல்களுடன் திருமணவீட்டிற்கு வந்தனர்.**

**திருமணவீட்டில அவளை பார்த்த ராக்காய் அத்தை…… “என்ன மதி இப்படி வந்திருக்க…இங்க வா” என உள்ளே அழைத்து சென்று**



DO NOT COPY

**அவளுக்கு நன்றாக தலை சீவி நகைகள் அணிவித்து ஜாதி மல்லி சூடி அவளை அழைத்துவந்தாள்..**

**அதற்குள் வேந்தனின் வேஷ்டி செய்தி திருமண வீட்டில்  பரவ “ஆஹா மாப்பிள்ளைக்கு இன்னும் வேஷ்டி கட்ட தெரியல...இதுல இருந்து என்ன தெரியுது..... அடிக்கடி அது........” என இழுத்தவன் அவனை ஒருமாதிரி பார்த்து சிரிக்க**

**பங்காளி விட்ரா....பாவம் அவரு...பட்டணத்துகாரர்ள....நம்ம லந்து எல்லாம் பழக்கம் இருக்காது என அவன் சார்பாக பேச**

**“அது எப்படி விடறது....இப்போ வரைக்கும் அவங்க தான் புதுசா கல்யாணம் ஆனா ஜோடி..... பாரு வெட்கத்துல எப்படி நெளியறார்னு .....என்ன மாப்பிள்ளை “ என அவனை கேட்க**

**என்ன பேசுவதென்றே தெரியாமல் யார் எதை கேட்டாலும் சிரித்து கொண்டே இருந்தான் வேந்தன்.**

**இங்கு மதியின் நிலைமையோ அதை விட கொடுமை....அவளுக்கு திருமணமாகிவிட்டது அதனால் அவளிடம் முதலிரவு  சம்பந்தமான சில சந்தேகங்களை  மணப்பெண்  கேட்க ....வெண்மதி தவித்து போனாள்.இலை மறவாய் காய் மறைவாய் சில விஷயங்களை அவளை வைத்து கொண்டே சிலர் பேச வெண்மதிக்கு சங்கடமாகி போனது.**

**மணப்பெண்ணின் தோழியாக வெண்மதி உடன் வர...... விளக்குகளின் வெளிச்சத்தில் அவளை பார்த்த வேந்தன் அசந்து போய் நின்றான். தோழிகளின் கிண்டலில் அவள் சேலை கட்டிய பிறகு அவளை சரியாக பார்க்காதவன் இப்போது தான் விளக்கின் ஒளியில் வெண்மதியை பார்க்கிறான். வெள்ளி தேவாதை மெல்ல வீதி உலா வருவது போல நீலவன்னபட்டு உடுத்தி,நெற்றியிலே சுட்டி வைத்து.கழுத்திலே இருக்கும்  அட்டிகை அவன் மனதை அசைக்க ,.காதில் ஆடும் ஜிமுக்கி அவனை கவர்ந்திழுக்க,கைகளில் குலுங்கும் வளையல் அவனுக்கு சேதி சொல்ல,கால்களில் போட்டுஇருக்கும் கொலுசின் ஓசை அவனுக்கு அழைப்பு விடுக்க தன்னையே மறந்து அவளை ரசித்து கொண்டிருந்தான்.**



Do Not Copy

“மதி அங்க பாரு எங்க மச்சான் உன்னயே வச்ச கண்ணு வாங்காம பார்த்திட்டு இருக்கார்”...... என ஜோசி கிண்டல் பண்ண

மெதுவாக நிமிர்ந்து பார்த்த மதி  பட்டு  வேஷ்டி சட்டையில் கம்பீரமாக நிற்கும் வேந்தனை பார்த்ததும் அவளை அறியாமல் நாணம் மேலிட வெட்கத்துடன் புன்னகை செய்தாள்.

கண்களாலே அவளுக்கு காதல் சொல்லி கொண்டிருந்தவன் அருகில் ...”.மச்சான் போதும்....இப்போ கல்யாணம் ஆகறவங்க கூட இந்த அளவுக்கு பண்ணல...உங்க அலும்பு தாங்களை....இங்க பாருங்க மாப்பிள்ளை  பையன் கையை புடிக்க சொன்னா பெட்ரமாஸ் லைட் கொண்டு போற பையன் கையை பிடிச்சுட்டு இருக்கீங்க” என ஜோதி சொல்ல

திடுக்கிட்டு திரும்பி பார்த்தவன்,அந்த பெட்ரமாஸ்காரன் இவனை பார்த்து முறைக்க .......”..ஹிஹிஹி என வழிந்தவன்.... திரும்பி இல்ல ஜோதி அது வந்து” என தடுமாற

“இதெல்லாம் வீட்ல போய் வச்சுகுங்க...இங்க எங்களையும் கொஞ்சம் கவனிங்க மச்சான்” என கிண்டலாக சொல்லி விட்டு  சென்றாள் அவள்.

சடங்குகள் நடத்து கொண்டிருக்க வேந்தன் வெண்மதியின் நினைவுகளோ வேறு உலகத்தில் இருந்தது.அனைவரும் சாப்பிட்டு வீட்டிற்கு கிளம்ப ஒரு பெரியவர் “பாப்பா நீ  இரவு கால்யாண பொண்ணோட இருந்துக்கோ” என்றார்.

வேந்தனோ திடுக்கிட்டு விழிக்க,வெண்மதியோ என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் வேந்தனை  பார்க்க ,இருவரின் மனதிலும் இருக்கும் எண்ணம் தெரியாமல் சொன்னவர் நடைய கட்டினார்.

அதற்குள் ஒரு சிலர்...வேண்டாம்...நீ கிளம்பு வெண்மதி ...நாங்க பார்த்துக்கிறோம் என்ற சொல்லி முடிப்பதற்குள் அவளை இழுத்து கொண்டு பாதி தூரம் வந்து விட்டான் வேந்தன்.

“என்ன மாமா நீங்க...இப்படி இழுத்திட்டு வரீங்க பார்க்கிறவங்க என்ன நினப்பாங்க” என அவள் சலித்து கொள்ள



DO NOT COPY

அவன் எது பேசாமல் அவளை வீட்டிற்கு அழைத்து வந்தவன் உள்ளே தள்ளி வேகமாக கதவை மூடியவன் அவளை அப்படியே அள்ளிக்கொண்டுபோய் படுக்கையில் கிடத்தினான். வெண்மதியும் இதை ஓரளவிற்கு எதிர்பார்த்து இருந்தாள்.அவளுக்கும் ஆசை இருந்தது...

ஆனாலும் அவனிடம் ஒன்றை கேட்க மனம் துடிக்க..."மாமா வந்து" என அவள் இழுக்க

"மதிம்மா...இனியும் என்னால முடியாது.....கொல்றடி என்ன....."அவளை இறுக்க அணைத்தவன்

"ஒருநிமிஷம் சொல்றத கேளுங்க மாமா" என அவள் சொல்ல

"போதும் மதி...ஏற்கனவே நிறிய பேசிட்டோம்.....என சொல்லிவிட்டு அப்படியே அவள் மேல படர்ந்தவன் நெற்றியில்  இருந்து தனது தேடலை தொடங்க கண்களில் தனது முத்தைதை பதிக்க

கண்களை திறக்காமல் அவள் மூடியே இருக்க

"மதி...மதி இங்க என்னை  பாரு...கண்ணை திறடா "என அவள் காதில் அவன் காதலோடு சொன்னான்.

மெதுவாக கண்ணை திறந்தாள் கண்களில் கண்ணீர் நிற்க அவனுக்கு சட்டென்று கோபம் வர

"என்னாச்சுடி....இப்ப எதுக்கு அழுகுர" என வேகமாக கேட்டு கொண்டே அவச்ன் எழ

பயத்தில்  ஒரு நிமிடம் உடல் அதிர்ந்தவள்" இல்ல மாமா....இப்பதான் இத பத்தி பேசிட்டு இருந்தாங்க.....எனக்கு கொஞ்சம் பயமா இருக்கு மாமா" என அவள் வார்த்தயை மென்னு முழுங்கி சொல்ல

"ஓ..... ......இவ்ளோதான என்றவன் வேகமாக அவளை இழுத்து நெஞ்சில் போட்டு அணைத்து கொண்டவன்.....மதிமா மாமாவா உனக்கு பிடிக்கும்தான" என கேட்டான்.

"பிடிக்கும் மாமா" என அவள் உற்சாகமாக  சொல்ல



DO NOT COPY

“எந்த அளவுக்கு பிடிக்கும்” என அவன் கேட்க,வாய் மட்டும் கேள்விகேட்க கைகளோ கட்டு பாடு இன்றி அவள் உடம்பில் சுற்றிகொண்டிருந்தது.

“ரொம்ப பிடிக்கும் மாமா”....என அவள் கண்களை விரித்து உதட்டை குவித்து சொல்ல  சொல்ல

“அப்போ மாமா சொல்றத நீ கேட்கணும்...என்ன......... உனக்கு பிடிச்ச மாதிரி  மாமா நடந்துக்குவேன் என்ன” என அவள் முகத்தோடு தன் முகத்தை உரசிகொன்டே சொன்னவன்

அவள் ம்ம்ம்!!!!! என்று பதில் சொன்ன அடுத்த வினாடி அவளது இதழை சிறைசெய்தவன் தான் விடியும் வரை அந்த இன்ப சிறையில் இருவரும் கட்டுண்டு கிடந்தனர்..

வேந்தனுக்கு எப்போதும் போல் விழிப்பு தட்டி விட கண் முழித்தவன்...தனது அருகில் தனை மறந்து உறங்கி கொண்டிருந்தவளை பார்த்ததும் இரவு முழுவதும் அவனோடு அவள் நடத்திய ஊடலையும் கூடலையும்   நினைத்தவன் மகிழ்ச்சி பொங்க அவளை  இழுத்து மறுபடியும் தன்னோடு அணைத்தவன் அவன் நெஞ்சம் எங்கும் சந்தோசம் பொங்க அதை வெளிபடுத்தும் விதமாக அவள் உடல் முழுவது மறுபடியும் ஒரு முத்தத்தால் ஒத்திகை நடத்தினான்.

பின்னர் எழுந்து தனது வேலையை தொடங்க,சிறிது நேரத்திற்கு பிறகு கண் விழித்த மதி சட்டென்று ஏழ முயல

முடியாமல் கால்கள்  மடிந்து போக,மெதுவாக சிரித்து கொண்டவள்.....”ஆனாலும் இந்த மாமா சுத்த மோசம்.....விருமான்டின்னு சும்மாவா பேர் வச்சாங்க....ஹப்பா சாமி” என மனதில் அதை ரசித்துக்கொண்டு வெளியில்  புலம்பிய படி எழுந்தவள் திரும்பி பார்க்க

அங்கு வேந்தன் அவளயே பார்த்து கொண்டிருந்தான் .....வெட்கபட்டு அவள் முகத்தை மறைத்து கொள்ள

“இப்ப என்ன சொன்ன நீ “என அவன் அதிகாரமாக கேட்டான்.

குரலின் மாற்றத்தில் முகத்தில் இருந்து கையை எடுத்தவள் ."..என்ன மாமா...என்ன சொன்னேன்" என பயப்பட

"இப்ப எதோ விருமான்டின்னு சொன்ன மாதிரி இருந்தது" என அவன் கோபமாக கேட்டான்.

"இல்ல மாமா...சும்மா சொன்னேன்" என அவள் நடுங்க

"ம்ம்ம்...என்ன பார்த்தா அப்படியா தெரியுது  என கேபாமாக கேட்க

அவள் இல்லையென்று தலை ஆட்ட

அப்போ எதுக்கு அப்படி சொன்ன....அதுக்கான தண்டனை  இதான்  என மறுபடியும் அவளை இழுத்து அணைத்தவன்...மதியோ  என்ன என உணர்ந்து கொள்ளும் முன்னே  அவனது வேகத்தை காட்ட அதில் அவள் தனை மறக்க அங்கு மறுபடியும் ஒரு யுத்தம் தொடங்கியது.

"அச்சோ விடுங்க மாமா...நானே நீங்க உண்மையாதான் மிரட்றிங்கலோனு பயந்திட்டேன்....போங்க மாமா...."என சொல்லி கொண்டே குளியலறைக்கு ஓடினாள்.

இந்த முறை அவளே புடவையை கட்டி கொள்ள.... அவளுக்கு உதவி செய்கிறேன் என்று அவன் செய்த சேட்டைகள் தான் அவளை பாடாய் படுத்தியது.பின்னர் இருவரும் மதியின் பெற்றோரை வணங்கிவிட்டு நகர சட்டென்று மதி அவன் காலில் விழ ....

"மதி என்ன இது...என்ன பன்ற நீ" என அவன் பதற

இல்ல மாமா......எனக்கு ரொம்ப மன நிறைவா இருக்கு.....எங்க வீட்ல,எங்க அப்பா அம்மா வாழ்ந்த இந்த இடத்துல  என்று நிறுத்தியவள் ......அவனது முகம் பார்க்க அவளை தன நெஞ்சோடு அணைத்தவன் ....அத நான் சொல்லன்னும்டி.....மதிமா....நீ என் வாழ்க்கையின் வரமடி  ......என் வாழ்க்கைக்கு முழு அர்த்தம் சொன்னவடி நீ.....எனக்கு எவ்ளோ சந்தோசமா இருக்கு  தெரியுமா ........ ஆனால் நீ இப்படி எதுகெடுதாலும் அழுககூடாது...சரியா....என்றவன்....சரி வா...நேரமாகிடுச்சு போகலாம் என சொல்லிவிட்டு அவள் முன்னே வெளியே வர



DONOT COPY

சட்டென்று அவளை உள்ளே இழுத்து அணைத்தவன்"மதி ரொம்ப தேங்க்ஸ் மதி" என வார்த்தையில் அன்பு பொங்க கண்களில் குறும்பு மின்ன சொல்ல .......

அந்த மாய கண்ணனின் லீலைகளில் நாணம் கொண்டவள் ....ஆனாலும் மாமா இவ்ளோ சீக்கிரம் சொல்லிட்டிங்க...நான் கூட நம்ம புள்ள பிறந்ததுக்கு அப்புறம் தான் சொல்வீங்கனு நினச்சேன்" என அவளும் கிண்டலாக சொல்ல

"ஆஹா....மதி....என்ன இது....இப்படி எல்லாம் பேசற...விபீஷோட சேராதேன்னு சொன்ன கேட்கிறியா.... ரொம்ப கெட்டு போய்ட்ட நீ" என அவன் அவளை செல்லமாக ஒற்றை விரலை நீட்டி மிரட்டினான்.

அதற்குள் அவர்களுக்கு அழைப்பு வர திருமணவீட்டிற்கு சென்றனர்.அவளை பார்த்த ஜோதி "என்ன மதி இப்போ என்ன இவ்ளோ அழகா இருக்க.....கன்னம் எல்லாம் ரோஜாபூ போல சிவந்திருக்கு....ஆஹா இப்போ பொண்ணு யாருனே தெரியலே"... என கிண்டல் பண்ண

அச்சோ!!!!!!!!! என வெட்கத்தில் மதி ஓட

இங்கு பந்தியில் ..."என்ன சகலை கல்யாணத்துல சாம்பார் ஊத்த சொன்னா சட்னி மாதிரி இத்துணுண்டு வைக்கிரிங்க....ஹே நாங்க எல்லாம் மாப்பிள்ளை வீட்டுகாரங்க ...நல்ல கவனிங்கப்பா" என வேந்தன் சவுண்ட் விட...கூட நின்றவர்கள் அசந்துவிட்டனர்.

இப்படி வெட்கபட்டும், சாம்பாருக்கு சவுண்டு விட்டும் ஒரு வழியாக திருமணம் முடிய அனைவரும் பொண்ணு மாப்பிள்ளை அழைப்பிற்கு செல்ல வேந்தனோ எங்கும் செல்லவில்லை.

அவன் இப்போது மிகவும் மனநிறைவுடன் இருந்தான்.அந்த சுகமான நினைவுகளை அசை போட அவனுக்கு சற்று தனிமை தேவைபட மெதுவாக தோட்டத்திற்கு நடந்தான்.

அப்போது..."என்ன மாப்பிள்ளை ...எங்க இங்க தனியா.....உங்களுக்கு வரப்புள எல்லாம் நடக்க தெர்யுமா"? என்று கேட்டு முடிப்பதற்குள் அவன் தடுமாற

**“பார்த்து பார்த்து.....எதுவும் புதுசுக்கு இப்படிதான் இருக்கும்...போக போக பழகிடும்.இதுக்காக அங்க பாருங்க எங்க ஊர்ல 5 வயசு சில்வண்டு எப்படி ஓடி வருதுன்னு...இவ்ளோ வயசாகி உங்களுக்கு தெரியலைன்னு நான் சொல்ல முடியுமா....எல்லாமே புதுசா கத்துகிறதுக்கு கொஞ்ச காலம் ஆகுமுல” என அப்புச்சி சொல்ல**

**வேந்தன் சட்டென்று நிமிர்ந்து அவரை பார்த்தவன்.... அவர் என்ன சொல்ல வருகிறார் எனபது புரிய........”இல்ல அய்யா ...அன்னைக்கு கொஞ்சம் வேலை அதான்” என இழுத்தான்.**

**“ஏன் தம்பி அதுக்காக எதவேனாலும் பேசிட்றதா.....அவ சின்ன பொண்ணு...ஏதோ தெரியாம பேசிட்டா ........அதுக்கு என்ன.... உங்க ஊருக்கு கிளம்பி போன்னு வார்த்தையை விட்ரிங்க.....தம்பி எங்களுக்கு அன்புக்கு கட்டு பட்டு தான் பழக்கம்...அதிகாரத்துக்கு இல்ல.....பொண்ண கொடுத்திட்டாங்க ...யாரு கேட்க போறான்னு நினச்சுகாதிங்க.....ஊரே இருக்கோம்.....”என அவர் அழுத்தமாக சொன்னார்.**

**“இல்ல அய்யா....எனக்கும் மதிய பிடிக்கும்” என அவன் ஆரம்பிக்க**

**“தம்பி எனக்கும் அது தெரியும்.ஆனா அடிச்சா அடி மறந்திடும்...சொன்ன சொல்லு எப்பவும் மறக்காது...அதுனால இனி பார்த்து பேசுங்க...”.என அப்புச்சி சொல்ல**

**அவன் ஏதும் பேசாமல் தலை ஆட்ட......”தம்பி பாராட்டறத பத்து பேருக்கு நடுவுல செய்யணும்....ஆனா தப்ப சுட்டிகாட்றத தனியாதான் சொல்லணும்...நாங்க உங்களை மாதிரி பேப்பரில் படிச்சதில்லை...ஆனா மனுசங்க மனச படிச்சிருக்கோம்..........எங்க ஊரு புள்ளைங்களை தாய்ப்பாலோடு சேர்த்து அன்பையும் பண்பையும் ஊட்டி வளர்த்திருக்கோம்.அது எப்போதும் அவங்களுக்கும் இருக்கும்” என கொஞ்சம் காட்டமாக சொன்னவர்.......**

**தம்பி வீட்ல பொம்பளைங்க சந்தோசமா இருந்தா தான் வெளியில நம்ம நிம்மதியா வேலை பார்க்க்க முடியும்....புரிஞ்சுக்குங்க என அவனுக்கு அறிவுரை வழங்கியவர்.....**

ஏலே மாறா அந்த இளநீர் நாலு  பரிச்சுபோடு…நம்ம மாப்பிளைக்கு….சூட்டுக்கு ரொம்ப நல்லது…..பாரு கண்ணெல்லாம் எப்படி சிவந்திருக்கு “ என சொன்னவர் பின்னர் அவனுடன் சகஜாமாக பேச வேந்தன் என்ன பேசுவது என்று தெரியாமல் முழித்து நின்றான்.

அதற்குள் அவருக்கு அழைப்பு வர “தம்பி சீக்கிரம் வந்து சேர்ந்திடுங்க…சீர்கொடுக்கிரதுக்கு நீங்க தான் வரணும்” என சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அவர் சென்றதும் அவர் சொன்னதை நினைத்து பார்த்த வேந்தனும்….அன்று வீட்டில் ஏதும் சொல்லாமல் அவளை கண்டித்து விட்டு  …..இன்று  நீங்க பேசினது தப்புன்னு குரலை உயர்த்தாமல், கோபபடாமல் அதே சமயத்தில் ஒருமிரட்டலோடு எப்படி சொல்லி விட்டு போகிறார் இந்த பெரியவர் என ஆச்சிரியப்பட்டு போனான். இதான் அனுபவும் பேசும் என்பார்களோ என நினைத்தவன்,……. . ஆனாலும் இந்த ஊர்காரணுக பயங்கரமான ஆளுக தான்……… அவனுக ஏரியாவுல வச்சுதான் நம்ம மிரட்றாணுக….இவனுக கிட்ட கொஞ்சம் ஜாக்கிரதயாதான் இருக்கணும் என நினைத்தான்.

அதற்குள்  பச்சை புல்வெளிக்குள் பருவமயில் ஓடிவருவது போல வெண்மதி அவனை தேடி  ஓடி வர  ,அருகில் வந்தவள்

“ஏன் மாமா…இங்க வந்துட்டிங்க…..அங்க உங்களுக்கு பேச்சு துணைக்கு யாரும் இல்லையா ….சாரி மாமா…..ரொம்ப போர் அடிக்குதா….கொஞ்ச நேரம் மாமா….நான் வந்திடறேன்…அப்புறம் உங்களை விட்டு எங்கு போகாமாட்டேன் …என்னோட friends எல்லாம் வந்திருக்காங்க… ரொம்ப ஜாலியா  இருக்கு மாமா” என அவள் கண்கள் விரித்து,சந்தோசத்தில் சொல்ல

அவளை பார்த்து கொண்டிருந்த வேந்தன்….அவளது இரண்டு கைகளையும் எடுத்து தனது நெஞ்சோடு வைத்து கொண்டவன் அப்படியே கண்மூடி சிறிது நேரம் அமைதியாக இருந்தான். ….

“என்னாச்சு மாமா…உடம்பு எதாவது பண்ணுதா” என அவள் பதற

கண்களை திறந்தவன்…..ஏதும் பேசாமல் இல்லை என்று தலை ஆட்ட

ஹப்பா!!!!!!!! என பெருமூச்சு விட்டவள்

“சரி நீ போயிட்டு வா......நான் இங்கே இருக்கேன்”என சொன்னான்.

“கொஞ்ச நேரத்துல வந்தறேன் மாமா” என சொல்லிவிட்டு சிட்டு போல் பறந்து சென்றவளை விழி மூடாமல் பார்த்து கொண்டிருந்தான்.

பின்னர் திருமணம்.... மறுவீடு அழைப்பு எல்லாம் முடிந்து அனைவரும் களைந்து செல்ல

மதியோ சோகமாக வர......”ஏன் மதி வருத்தமா இருக்க” என ஜோதி கேட்க

இப்பவே கிளம்பனும் ஜோதி....மாமா வரும்போதே சொல்லித்தான் கூட்டிட்டு வந்தார்.....என சொன்னாள்..

“அதுக்குள்ள கிளம்பரியா என்றவள்......நாங்க வேணா மச்சான் கிட்ட கேட்கவா” என சொல்லி முடிப்பதற்குள் வேந்தன் அங்கு வர

“ஏங்க மச்சான்.....என்ன அதுக்குள்ள கிளம்புரிங்கா....இரண்டு நாளைக்கு இருந்திட்டு போறது “ கண்ணாலம் முடிஞ்சா உடனே கூட்டிட்டு போய்ட்டிங்க.....இப்பதான் வரீங்க ....இருந்திட்டு போங்க மச்சான் என சொல்ல

அதற்குள் அங்கு வந்த ராக்காயி அத்தையும் ...இருங்க மாப்பிள்ளை...உடம்பு வேற சரியில்லைன்னு சொன்னிங்க...கோழி ,நண்டு,மீனு. எல்லாம் செஞ்சுகுடுக்கிறோம்...சாப்பிட்டு கொஞ்சம் உடம்ப சரி பண்ணிக்கிட்டு போங்க என அக்கரையாக சொல்ல அவனும் ஒத்து கொண்டான்.

அந்த இரண்டு நாட்களில் ஒவொவொரு வீட்டில் இருந்தும் அவர்களுக்கு வகை வகையான உணவுகள் வர அவர்களின் அன்பை கண்டு வேந்தன் வியந்து நின்றான்.அதுவும் ஒவொவொரு முறையும் அப்புச்சி வந்து சாப்பாடு எப்படி இருந்தது....காரம் எல்லாம் சரியாக இருந்ததா என விசாரிக்க அவர்களின் அன்பிற்கு அவன் அடிமையாகினான்.

**அங்கு  இருந்த இரண்டு நாட்களும் இருவரும் ஒருவராகவே வாழ்ந்தார்கள் என்று சொல்லலாம்.மனதின் மாற்றம் உறவில் முடிய „உறவின் மாற்றம் செயலில் வெளிபட இனிய இல்லறத்தின் அத்தியாயம் அங்கு அழகாக உருவானது.**

**சிப்பிக்குள்  இருக்கும் முத்தாய்**

**கல்லுக்குள் இருக்கும் சிலையாய்**

**கனிக்குள் இருக்கும் சுவையாய்**

**எனக்குள் இருக்கும் பெண்மையை**

**உணரவைத்தவனே**

**உனது அருகாமயில் எனது**

**ஐம்புலன்களும் செயலிழந்து போக**

**உனது ஆளுமையில் எனது**

**பெண்மை கரைந்து போக**

**காட்டாற்றின் கோபமும்**

**புயலை போன்ற வேகமும்**

**அருவிபோன்ற அன்பினாலும்**

**என்னை ஆட்டுவிப்பவனே**

**மண்ணாக இருந்த என்னை**

**பெண்ணாக மாற்றியவனே**

**உன்னுடன் சங்கமிப்பதில்**

**எந்தன் உள்ளமும் உடலும்**

**பேரானந்த நிலை அடையுதடா** !!!!!!

லஷ்மிரவி

DO NOT COPY

## அத்தியாயம் 16

இருவரும் கிராமத்தில் இருந்து கிளம்ப ஊரே சேர்ந்து அவர்களை வழியனுப்பியது.திருச்சி வந்த உடன் விபிஷிர்க்கு தான் வந்து விட்டதை குறுஞ்செய்தி அனுப்பியவன் வீட்டிற்குள் நுழைந்ததும் தனது அறைக்குள் செல்ல ஊரில இருந்து கொண்டு வந்த காய்கறிகள் ,பலகாரங்கள் அனைத்தயும் மதி எடுத்து வைத்து கொண்டிருந்தாள்.

திடீரென்று ஒரு கை பின்புறத்தில் இருந்து அணைக்க ...அய்யோ !!!!!!!! என பயத்தில் மதி துள்ளி குதிக்க

“ஹே நான்தாண்டி.....எத்தன முறை சொல்றது...இப்படி பயபடாதேனு” என அவள் கழுத்து வளைவில் தனது முகத்தை பதித்தவாறே சொன்னான்.

“அச்சோ என்ன மாமா இது.....எனக்கு வேலை இருக்கு ...நீங்க முதல்ல நகருங்க....விபீஷ் அண்ணாவுக்கு போன் பண்ணுங்க...அண்ணனுக்கு பிடிச்ச பலகாரம் எல்லாம் இருக்கு...வந்தா சாப்பிடுவாங்க” என அவள் சொல்ல

“யாரு அவனா... அவன் எதுக்கு இப்போ...........இந்நேரம் அவன் தூக்கத்துல யாரோட டுயட் பாடிட்டு இருக்கானோ...அவன் எல்லாம் இப்போ வரமாட்டான்....நீ முதல்ல என்னை கவனி” என மறுபடியும் அவளை அணைக்க செல்ல

வந்தேன்...வந்தேன்....மீண்டும் நானே வந்தேன் என்று பாடிகொண்டே விபீஷ் உள்ளே வந்தான்.

“ஆஹா...வந்துட்டானா....”என வேந்தன சலித்து கொண்டே திரும்ப

“என்ன நண்பா....முழுசா திரும்பி வந்திட்டியா “என அவனை சுற்றி சுற்றி பார்த்தான் விபீஷ்..

“ஏண்டா....எதுக்கு இப்படி பார்க்கிற” என வேந்தன் வேகமாக கேட்க

“இல்ல நண்பா…ஒரே நாள்ல திரும்பி வரேன்னு போயிட்டு 3 நாளா ஆள காணாமா……சரி வலையாபாளையத்துகாரங்க மாப்பிள்ளைய செமையா என்று சொல்லும்போது சற்று அழுத்தி சொன்னவன் கவனிச்சிருபாங்கனு நினச்சேன்….நீ வேற அந்த மாப்பிள்ளை பையன் யாரு  மாசியா….ம்ம்ம்….அவன்தான்  உன்ன முறைச்சுகிட்டே இருந்தான்னு சொன்னியா…அதான் வரும்போது சேதாரத்தோட வருவேன்னு நினச்சேன்…..ஆனா அப்படியே வந்தருக்க”…..என சொன்னவன்

அதற்குள் மதி “வாங்க விபீஷ் அண்ணா……உங்களுக்காக பலகாரம் எல்லாம் எடுத்து வச்சிருகேன்” என அவனை அழைக்க

“இரு மயிலு…இங்க ஒரு என்குயரி நடந்திட்டு இருக்கு…முடிச்சுட்டு வந்திடறேன்” என சொன்னவன் அவன் காதருகில் சென்று

“ஏன் நண்பா ஊமை அடி பலமோ” என கேட்க

“டேயீஈஈ…..” என வேந்தன் பல்லை  கடிக்க

“இல்ல நண்பா செய்கூலி சேதாரம் இல்லம் வந்திருக்கியே …அதான் கேட்டேன்….அப்புச்சி கூடவா ஒன்னும் சொல்லல “என அவனும் விடாமல் கேட்க

“அப்புச்சி பேரை கேட்டதும் வேந்தன் டென்ஷன் ஆக ….”டேய் போடா…..போய் உன் பாசமலர் என்ன சொல்றான்னு கேளு …..எல்லாம் எனக்குனு வந்து சேரிங்க பாரு” என சலித்து கொண்டே சென்றான்.

இப்போ இவன் எதுக்கு இப்படி சலிச்சுகிறான் என்று வாய்க்குள் முனகியபடியே மதியிடம் சென்றவன் “என்ன மயிலு ….ஊர்ல எல்லாம் நல்ல இருக்காங்களா என விசாரித்தவன் …மயிலு கொஞ்சம் நில்லு……என்ன திடிர்னு கொஞ்சம் பிரகாசமா இருக்க ….சொந்த ஊர்காரங்கள பார்த்த சந்தோசமா” என கேட்க

உடனே மயிலுவின் முகம் வெட்கத்தில் சிவக்க ….”இல்ல அண்ணா நான் எப்பவும் போல தான் இருக்கேன்” என தலையை குனிந்து கொண்டே மெதுவாக சொன்னால்.

DO NOT COPY

"ஆஹா இது என்ன இது.....மயிலு திடிர்னு தோகையை விரிக்கிறது ....ஏதோ நடந்திருக்கு" என நினைத்து கொண்டே மறுபடியும் வேந்தனிடம் சென்றவன்

"நண்பா ....உண்மைய சொல்லு....செய்கூலி சேதாரம் ஏதும் இல்லையா" என அவன் மீண்டும் அருகில் சென்று மெதுவாக கேட்க

வேந்தன் சிரித்து கொண்டே ஏதும் சொல்லாமல் நகர

"அதான......விருமாண்டி வாயில இருந்து ஒரு வார்த்தை வெளியே வராதே ...பெரிய புன்னகை மன்னனு நினைப்பு....இருடா என் மயிலு இப்ப சொல்வா பாரு" என அவனிடம் மனதில் சொல்லி கொண்டே

"அப்புறம் மயிலு வேற என்ன விஷேசம் ஊர்ல "...என கேட்க

"ஒன்னும் இல்ல விபீஷ் அண்ணா ...நம்மலே விசேஷத்துக்கு போனோம்.....அப்புறம் அதுல என்ன விசேஷம்" என அவள் அப்பாவியாக கேட்க

வேந்தன் பட்டென்று சிரித்து விட

அசடு வழிந்த விபீஷ் ...".மயிலு இப்படி எல்லாம் பேசகூடாது புரிஞ்சுதா.......அண்ணன் பாவம் "என அழுவது போல் சொன்னவன்

"நான் ஒன்னும் சொல்லல அண்ணா ....நீங்க கேட்டதுக்கு தான சொன்னேன்....ஏன் மாமா நான் எதாவது தப்ப சொல்லிடனா" என அவனை பார்த்து அவள் பாவமாக கேட்க

"இல்லை மதிமா....நீ என்னைக்கு தப்பா பேசிருக்க...இவன் தான் ஏதோ உளறிட்டு இருக்கான்...நீ போய் வேலைய பாருடா செல்லம்" என அவன் அவளை கொஞ்சும் குரலில் சொல்ல

"ஆஹா ....என்னடா நடக்குது இங்க....விறச்சசுகிட்ட நின்ன விருமாண்டி இப்போ விண்ணை தாண்டி வருவாயா சிம்பு ரேஞ்சுக்கு மாறிட்டான்..... இவனுக்கு இந்த கெட்டப் ஒத்து வராதே.......என நினைத்தவன்....நண்பா ஊருக்கு போகும்போது நல்லாதானடா போன ...அது என்னடா அந்த ஊருக்கு போயிட்டு வந்தாவே மந்திரிச்சு விட்ட மாதிரியே வரீங்க.....ஏன்



DO NOT COPY

மயிலு உங்க ஊரோட தொழிலே இந்த மாதிரி மந்திரிச்சு விடறதா" என அவன் கிண்டலாக கேட்டான்.

"சும்மா இருங்க விபீஷ் அண்ணா....மாமா இப்பதான் என்கிட்டே நல்ல பேசறார்...கண்ணு வைக்காதிங்க...மாமா நீங்க குளிச்சுட்டு வாங்க...நேரமாகிடுச்சு...அண்ணா நீங்களும் தான் ...நான் அதுகுள்ள டிபன் ரெடி பண்றேன்" என சொல்ல

வேந்தனும் அமைதியாக அவள் சொல்வதை கேட்டு உள்ளே செல்ல விபீஷின் மனதில் சொல்ல முடியாத ஒரு நிறைவான உணர்வு ஏற்பட்டது.வந்த உடனே அவன் புரிந்து கொண்டான்.வெண்மதியின் முகத்தில் இருக்கும் நாணமும் வேந்தனின் முகத்தில் தெரிந்த சாந்தமும் அவனுக்கு நடந்ததை உணர்த்திவிட்டது.சிறிது நேரம் அவர்களை கலாயித்து அதை உறுதி படுத்தி கொண்டான்.இனி இவர்களின் வாழ்வில் பிரச்சனைகள் ஏதும் இருக்காது என நினைத்து நிம்மதி அடைந்தான்.

மனதில் நினைத்தது எல்லாம்

நடந்துவிட்டால்

விதி என்று ஒன்று இருப்பதே

மனிதன் மறந்து விடுவான்.

இருவரும் சாப்பிட்டு விட்டு கிளம்பி அலுவலகம் வந்து சேர்ந்தனர்..அங்கு வேலைகள் நடந்து கொண்டிருக்க ஒரு வாரம் வேந்தன் பார்க்க வேண்டிய பைல்களை எல்லாம் அவன் முன் வைத்தாள் வினு.

"என்ன வினு எப்படி போயிட்டு இருக்கு படிப்பு எல்லாம்" என விசாரித்து கொண்டே அவன் அவற்றை சரிபார்த்து கொண்டிருந்தான்.அப்போது அவனுக்கு அலைபேசி வர வெற்றி அழைத்து இருந்தான்.

"என்ன நண்பா எப்படி இருந்தது நம்ம ஊரு" என அவன் கேட்க

"ம்ம்ம் ...நல்லா இருந்தது.... வெற்றி...ரொம்ப நல்ல மனிதர்கள்" என அவன் நெகிழ்ச்சியாக கூற



DO NOT COPY

வெற்றியும் சந்தோசமடைந்தான். "ம்ம்ம் மெயில்ல போட்டோஸ் எல்லாம் பார்த்தேன்...ரொம்ப சந்தோசமா இருந்தது ....நான் தான் உங்களை எல்லாம் ரொம்ப மிஸ் பண்றேண்டா" என  வருத்தமாக சொல்ல

அந்த வருத்தம் வேந்தனுக்கும் இருந்தது.அந்த சந்தோஷத்தில் அவனும் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என அப்போதே அவன் நினைத்தான் .அவன் ஏதும் பேசாமல் அமைதியாக இருக்க

"ம்ம்ம்...நண்பா "என வெற்றி அவனை அழைக்க....

"சொல்லு வெற்றி....நாங்களும் உன்ன ரொம்ப மிஸ் பன்றோம்டா...".என அவன் தனது வேதனையை குரலில் காட்ட

"கவலை படாத ...சீக்கிரம் வந்திடுவேன்.....அப்புறம் இங்க சுரேந்தர்னு ஒரு மல்டி மில்லினியார் எனக்கு பிரின்ட் ஆகிட்டார்.அவரும் தமிழர்தான்.அவரு நமக்கு ஒரு பெரிய மால் கட்றதுக்கான ப்ராஜெக்ட் கொடுக்கிறேனு இருக்கார். நம்மதான் செய்ய போறோம்" என வெற்றி சொல்ல

உடனே சந்தோசத்தில் வேந்தன் "என்னடா சொல்றா...நிஜமாவா...யாரு நம்ம மால் கட்ட போறமா....நண்பா என்னால நம்ப முடியலடா .....டேய் வெற்றி எல்லாம் உண்மையா" என அவன் வேகமாக கேட்க

வெற்றியும் சிரித்து கொண்டே "நானும் முதல்ல இப்படிதாண்டா அதிர்ச்சி ஆகிட்டேன்.இப்போ கன்பர்மேசன் லெட்டர் வந்திடுச்சு...நான் போட்டு கொடுத்த பிளான்க்கு ஓகே சொல்லிட்டாரு.அதுனால நீ முதல்ல சென்னைல நல்ல சைட் பாரு....எல்லாம் நம்மலே பார்த்துக்க சொல்லிட்டாரு ....அப்புறம் எனக்கு கொட்டேஷன் அனுப்பு...."என சொல்ல

"உடனே செஞ்சிட்றேண்டா" என வேந்தன் பதில் சொல்ல

"வேந்தா அந்த அப்பார்ட்மென்ட் எந்த லெவெல்ல இருக்கு".....

"பில்டிங் ரெடி ஆகிடுச்சு...இன்டீரியார் மட்டும் இருக்கு வெற்றி "என்றான் வேந்தன்..

**“அத சீக்கிரம் முடிச்சுடுங்க…அப்பத்தான் இந்த வேலையை ஆரம்பிக்க முடியும்.அப்புறம் விபீஷ் எங்கடா” என கேட்க**

**“அவன் சைட்க்கு போயிருக்காண்டா …கேட்டா ரொம்ப சந்தோசபடுவான்”….என்றான் வேந்தன்.**

**“ம்ம்ம் ஆமாம்….வேந்தா அவனை பார்த்துக்கடா…அவன் அவங்க குடும்பத்தையே பகைச்சுகிட்டு பிஸினெஸ்ல பெரிய ஆளா வரனமுனு நம்மள நம்பி வந்திருக்கான்…..நம்மதான் அவனுக்கு எல்லாமே…இந்த ப்ராஜெக்ட் வந்தப்ப அவனைத்தான் நினச்சேன் நான்..”.என வெற்றி சொல்ல**

**“வேந்தனும் எனக்கும் தெரியும் வெற்றி….நானும் அதான் நினைச்சுட்டு இருக்கேன்.நீ கவலைபடாத …கண்டிப்பா நம்ம சாதிச்சு காட்டுவோம்” என மனதில் இருந்த உறுதி வார்த்தையாக வெளிப்பட வெற்றியின் மனமும் குளிர்ந்தது.**

**“சரி வேந்தா….நான் இரவு பாப்பா கூட பேசறேன்…சொல்லிடு அவகிட்ட என்று சொல்லிவிட்டு அலைபேசியை அணைத்தான்.**

**அருகில் இருந்த வினு “என்ன பாஸ் …பெரிய ஆர்டர் கிடச்சிருக்கா…ரொம்ப சந்தோசமா இருக்கீங்க” என கேட்க**

**“ஆமாம் வினு என வெற்றி சொன்னதை சொன்னவன்…இனி தான் நாம் சுறுசுறுப்பா இருக்கணும்.அப்பார்ட்மென்ட் வேலையை முடிச்சுட்டு இத சீக்கிரம் ஆரம்பிக்கணும்” என்றான்.**

**கண்டிப்பா பாஸ் ….எக்ஸ்ட்ரா டைம் எடுத்து கண்டிப்பா வேலையை முடிச்சுடலாம் என அவளும் உறுதியுடன் சொன்னாள்.**

**அதற்குள் விபீஷும் ராஜும் வர அவங்களுக்கும் இந்த சந்தோஷ செய்தி சொன்ன வேந்தன் இனி நம்ம எப்படி வேலை செய்யணும் என்று சொல்ல அவர்களின் முகத்தில் இந்த ப்ரொஜெக்ட்டை நல்ல படியாக முடிக்க வேண்டும் என்ற வேகம் தெரிந்தது.**

**அன்று அனைவரும் சந்தோசத்தில் இருக்க…மதியம் வினு கல்லூரிக்கு செல்லாமல் அலுவலகத்தில் இருந்தாள்..**



DO NOT COPY

**சாப்பிட்டு வந்த விபீஷ்.....அவள் அங்கு இருப்பதை பார்த்து "என்ன இன்னைக்கு கல்லூரிக்கு போகலியா...இப்படியே பாதி நாள் போகாம இருந்தா எப்படி பாஸ் பண்றது" என கேட்க**

**பேசாமல் தலையை கீழே போட்டவள் பதில் ஏதும் சொல்லவில்லை.**

**"கேட்கிறேன்ல.....அது என்ன நான் கேட்டா மட்டும் பதிலே சொல்றதில்லை...மத்தவங்கனா சிரிச்சு சிரிச்சு பேசற" என கோபமாக கேட்க**

**"அப்படி எல்லாம் இல்ல சார்....நேத்து காலேஜில சின்ன பிரச்சனை...அதான் இன்னைக்கு போக வேண்டாம்னு பார்த்தேன்...சரி சார் ராஜ் வந்தா நான் கிளம்பிடறேன்" என்றாள்.**

**ராஜ் பெயரை அவள் சொன்னதும் அவனுக்கு கோபம் வர..."ஏன் துரை கூடத்தான் போவிங்களோ......நீங்க தனியா போகமாட்டிங்கலா" என அவன் நக்கலாக கேட்க**

**"அச்சசோ...அப்படி எல்லாம் இல்லை சார் என பதறி போனவள்.....அனேகமா ஸ்ட்ரைக் இருக்கும்...அதான் தனியா போக வேண்டாம்னு" என அவள் மெதுவாக சொல்ல**

**"சரி கிளம்பு நான் உன்னை கொண்டு போய் விடறேன்" என ரொம்ப உரிமையாக சொன்னான்.**

**சட்டென்று நிமிர்ந்த வினு...முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாக தெரிய...."நீங்களா வேண்டாம் சார்.....நானே போய்கிறேன்" என அவள் தடுமாற**

**"ஏன்? என் கூட வரமாட்டியா ....கிளம்பு " என அவன் ஆர்டர் போட**

**"இல்ல சார் அது வந்து ....சார் ஆபிஸ்ல யாரும் இல்ல...நீங்க இருங்க ...நான் கிளம்பறேன்" என அவள் சொல்ல**

**அவளது தவிப்பு அவனுக்கு பிடித்து போக...அவள் முகத்தை பார்த்து கொண்டே ..."இன்னைக்கு நான் தான் உன்னை கல்லூரிக்கு கூட்டிட்டு போவேன்....இப்போ நீ கிளம்பு என அழுத்தமாக சொன்னான்.**

**வேகமாக ஏதோ சொல்ல வாய் எடுத்தவள் அவள் கண்களும் ,அவனது கண்ணும் நேர்கோட்டில் மோதிக்கொள்ள அவளின் வாய் மௌனம் மொழி பேச ஏதும் பேசாமல் அவனுடன் சென்றாள்.**

**அலுவலக கார் இருக்க அதை தவிர்த்து அவன் டூவீலர் எடுக்க**

**“சார்.....கார்ல போய்க்கலமா” என அவள் கேட்க**

**அவளை திரும்பி முறைத்தவன் ....”ஏன் அம்மணி பைக்ல வரமாட்டிங்களோ” என கிண்டலாக கேட்க**

**“இல்ல சார்....யாரவது பார்த்தா உங்களுக்கு பிரச்சனை அதான்” என சொல்ல**

**அந்த நேரத்திலையும் தன்னை பற்றி அவள் நினைப்பது அவன் மனதிற்கு மகிழ்ச்சி தர**

**“ஒன்னும் பிரச்சன இல்லை வினு....நீ உட்கார் போகலாம்” என அவன் சிரித்து கொண்டே சொல்ல**

**மனதில் இருக்கும் பயம் முகத்தில் வெளிபட  அவள் ஏறி அமர்ந்தாள்..**

**தன் மனதிற்கு பிடித்தவள் முதன் முதலாக தன்னுடன் பைக்ல வரும்போது எந்த ஒரு ஆண்மகனுக்கும் தோன்றும் சிலிர்ப்பு அவனுக்கு தோன்றியது.மனம்  எல்லையில்லா சந்தோசத்தில் திளைக்க,வானில் பறப்பது போல் இருந்தது அவனுக்கு.இடையில் டிராபிக் வர வண்டியை நிறுத்த இரு கண்கள் அவனை அதிர்ச்சியுடன் நோட்டமிட்டது.**

**அந்த நேரத்தில் விபீஷ் வினுவிடம் ....”எதற்கு வினு ஸ்ட்ரைக் “என கேட்டான்.**

**“நேத்து ஒரு சின்ன பிரச்சனை சார்...அதுல பாய்ஸ்க்கும் கேர்ள்ஸ்க்கும் சண்டை வந்திடுச்சு...அதான் friends எல்லாம் இன்னைக்கு வரவேண்டாம்னு சொன்னங்க” என்றாள்.**

**“காலேஜுன்னு  இருந்தா இதெல்லாம் இருக்கத்தான் செய்யும்.இதுக்கெல்லாம் பயந்து வீட்ல இருந்தா எவ்ளோ நாளைக்கு இருக்கிறது.....பொண்ணுங்கனா தைரியமா இருக்கணும்...இப்படி கோழையா இருக்க கூடாது” என சொல்ல**

“இல்ல சார் அது வந்து என அவள் ஆரம்பிக்க.....அதற்குள் வண்டியை ஸ்டார்ட் பண்ணியவன் நீ ஏதும் பேசவேண்டாம்...எல்லார்த்துக்கும் ஒரு காரணம் சொல்லுவ.....இப்படி பயந்தாங்கோலியா இருக்காத வினு ...நல்ல தைரியமா இருக்கணும்.....இந்த காலத்துல பொண்ணுங்க எல்லாம் எப்படி இருக்காங்க....நீ என்ன பழைய பஞ்சாங்கம் மாதிரியே இருக்க” என்றான்.

“இல்ல சார்...அப்படி எல்லாம் இல்ல...நானும்” என அவள் ஆரம்பிக்க

“நீ ஏதும் பேசாத....உனக்கு ஒன்னும் தெரிய மாட்டேன்குது.....இங்க பாரு வெளியேனு போனா நாலு பொருக்கி பசங்க இருக்கத்தான் செய்வாங்க....நம்ம தான் முன் ஜாக்கிரதையா இருக்கணும்.ஆமா நீ எப்பவும் குண்டு ஊசி...ஹூக் வச்சுக்க,அப்புறம் மிளகாய்பொடி வச்சுக்கோ...இந்த காம்பஸ் அது வச்சுக்கோ.....யாரவது எதாவது வம்பு பண்ணங்கனா முதலா குண்டூசிள இருந்து ஆரம்பி....அதும் முடியலைனா மிளகாய் பொடிய கண்ல போட்டு ஓடி வந்திடு...என்ன புரிஞ்சுதா......ம்ம்ம்...இதெல்லாம் என்ன மாதிரி நல்லவங்ககிட்ட,உன் மேல அக்கறையா இருக்கிறவங்க தான் சொல்வாங்க........அதை விட்டுட்டு இந்த ராஜ் மாதிரி பொடி பசங்க பேச்சை கேட்டுட்டு இருக்காத ...என்ன....” என சொல்லி முடித்தவன்

“ஹப்பா...உன்ன தைரியசாலி ஆக்கிறதுகுள்ள நான் ஒருவழி ஆகிடுவனாட்ட இருக்கே” என சலித்து கொண்டவன்......

“இன்னைக்கு இது போதும்....நாளைக்கு வேற சொல்லி தரேன்” என்றான்.

அதற்குள் கல்லூரி வர...”சார்...சார்...இங்க நிறுத்துங்க....நான் இறங்கி போய்கிறேன்” என அவனை வாயிலில் நிறுத்தினாள் அவள்.

“சரி என்று நிறுத்தியவன் ....பார்த்து வினு பத்திரம்” என சொல்ல

அவளோ சுற்றும் முற்றும் பார்த்து கொண்டே தலையை வேகமாக ஆட்ட

“அச்சே இவ்ளோதூரம் சொல்றேன்...அப்புறம் எதுக்கு பயப்படற...இரு நானும்வாரேன்” என அவனும் அவளுடன் வர

“வேண்டாம் சார் என் பதறியவள்....நான் பார்த்துகிறேன் சார் “என வேகமாக கூற

“ம்ம்ம்...இல்ல...இல்ல....நீ ரொம்ப பயந்திருக்க...வேணா என் கைய பிடிச்சுக்கோ” என அவன் கையை நீட்ட

அந்த நேரத்தில் ஒரு மாணவி அழுது கொண்டே  வேகமாக ஓடி வந்தாள்.

“ஏய் ராமா என்னாச்சு “என வினு அவளை தடுத்தி நிறுத்தி கேட்க

அவள் “என்னை விடுங்க அக்கா ...நான் இனிமேல் இந்த காலேஜ்க்கு வரல...நான் படிக்கவே இல்ல ...எனக்கு பயமா இருக்கு” என அலுத்து கொண்டே சொல்ல

“முதல்ல என்ன நடந்ததுன்னு சொல்லு” என வினு அவளை அதட்டி கேட்டாள்.

“இல்ல  சீனியர் பசங்க ரொம்ப கிண்டல் பண்றாங்க...நான் ஒரே சுடிதார அதிகம் போட்டு வரானாம்...ஒரு மாதிரி பேசறாங்க...அசிங்கமா பேசறாங்க ....அவமானமா இருக்கு அக்கா “ என அவள் சொல்லி அழ

வேகமாக அவர்களிடம் சென்றவள் “இங்க யாரு ராமாவ இப்படி சொன்னது” என கேட்க

அதற்க்கு ஒரு மாணவன் வினு நீயும் நம்ம செட் ....ஜூனியர்க்கு சப்போர்ட் பண்ணாதே....சீனியர்னா அப்படிதான் பேசுவோம்...ஹே என்ன டிரஸ் வாங்கிறதுக்கு வக்கில்லை....ரெகமெண்டசனுக்கு ஆள் கூட்டிட்டு வரியா நீ”  என அவன் முடிப்பதற்குள் பளார் என்ற சத்தம் மட்டுமே கேட்டது.

அவனை அடிப்பதற்கு விபீஷ் நெருங்கும் முன் வினு அடித்திருந்தாள்..அனைத்து மாணவர்களும் அதிர்ந்து நிற்க.....”என்னடா திமிரா உங்களுக்கு....ஒருத்தரோட ஏழ்மை உங்களுக்கு கேலியா இருக்கா.....காசு கொடுத்து காலேஜில  சீட்டு வாங்கின உன்னை விட ...படிப்புல முதலா வந்து தனது திறமையால சீட்டு  வாங்கி இந்த கல்லூரிக்கு வந்திருக்க இந்த பொண்ணுதான் உணமையான பணக்காரி...அடுத்தவங்க காசுல வாழற நீங்க பிச்சசைகாரனைவிட

மோசமானவங்க .......நீங்க அவளை கேலி பண்றிங்களா "என சூரியனையே சுட்டெறிக்கும் கோபம் கண்களில் தெரிய,ஆத்திரத்தில் கழுத்து நரம்புகள் புடைக்க அவள் கேள்விகனைகளை வீசிகொண்டிருக்க

விபீஷோ பின்னால் அதிர்ந்து போய் நின்றான்.வினுவின் இந்த அவதாரம் அவனுக்கு புதிது.....அவன் பார்த்த வினுவிர்க்கு அதிர்ந்து பேச தெரியாது.இந்த அளவிற்கு அவளுக்கு கோபம் வரும் என்று அவனுக்கே இப்போது தான் தெரியும்.

"ரமா இங்க வா....இந்த உலகத்துல எங்க போனாலும் இந்த மாதிரி ஆளுங்க இருக்கத்தான் செய்வாங்க.....அதுக்கு எல்லாம் பயந்து ஓடுனா......அதுக்கு முடிவே இருக்காது...எதிர்த்து நின்னு பாரு.....இவனுக எல்லாம் உன் காலுக்கு கீழ இருப்பானுக" ...என்றவள்

"ரமேஷ் இனி இந்த மாதிரி நடந்துக்க மாட்டேனு நினைக்கிறேன்" என சொல்லிவிட்டு புயலென திரும்ப ...அப்போது தான் கவனித்தாள் விபீஷ் தன் பின்னால் நிற்பதயே....

"ஆஹா இவர் இங்கதான் இருக்காரா என ஒரு நிமிடம் தயங்கியவள் பின்னர்...சார் ...சார்......." என அழைக்க

அவன் அப்படியே சிலையாக நிற்க

"சாரி சார்....அது வந்து "என அவள் இழுக்க

"வினு நீ இவ்ளோ தைரியசாலியா ...அப்புறம் நான் கேட்டதுக்கு ஏதும் சொல்லாம வண்டில ஏன் அமைதியா வந்த" என கேட்டான்.

"எங்க சார் என்ன பேச விட்டீங்க....நீங்களா பேசிட்டு வந்திங்க...அதும் இல்லாம நீங்க என் நல்லதுக்குதான சொன்னிங்க....அதான்" என அவள் சொல்ல

"வினு உனக்கு கோவில்ல சாமிக்கு ஊதுபத்தி தான் காட்ட தெரியும்னு நினச்சேன்...இப்படி கோவில் பட்டி வீரலட்சுமியா இருப்பேன்னு நினைக்கவே இல்ல...ஹப்பா என்ன வேகம் என சொல்லி கொண்டே அவன் கன்னத்தில் அவனே கையை வைத்தவன்.....அந்த எபெக்ட் இங்க வரைக்கும் வந்திடுச்சு" என சொல்ல

**அவள் அவனது செயலில் சட்டென்று சிரித்து விட விபீஷும் அவளுடன் சேர்ந்து சிரித்தான்.ஆனால் அவனுக்குள் ஒரு பயஉணர்வு ஏறி அமர்ந்து கொண்டது.**

**பூவுக்குள் மறைந்திருக்கும் கனிபோல**

**மண்ணுக்குள் மறைந்திருக்கும் வைரம் போல**

**பெண்ணுக்குள் புதைந்திருக்கும் உருவங்கள்**

**எத்தனையோ ?**

**அன்பு காட்டுவதில் அமுத சுரபி.**

**அதே அவளை சீண்டினால்**

**பொங்கியெழும் எரிமலை...**

**நெருப்பின் அவதாரம் அவள்.**

**விளக்கின் ஒளியாகவும் மாறுவாள்**

**வீட்டை எறிக்கும் நெருப்பாகவும் மாறுவாள்.**

**மதித்து வணங்கினால் அவள் மகாசக்தி**

**மிதிக்க நினைத்தால் அவளே பத்திரகாளி....**

**அத்தியாயம்-17**

**வேலைகள் வேகமாக நடந்து கொண்டிருக்க நிற்க நேரம் இல்லாமல் ஓடி கொண்டிருந்தனர் மூவரும்.ஊரில் இருந்து வந்து ஒரு மாதம் நன்றாக இருந்த வேந்தன் பின்னர் வேலைபளுவின் காரணமாக மதியிடம் இருக்கும் நேரம் குறைந்தது.**



DO NOT COPY

கல்லூரியில் நடந்த நிகழ்ச்சிக்கு பிறகு வினுவும் விபிஷிடம் இயல்பாக பேச ,காதல் மொழி பேசாவிட்டாலும் அவள் தன்னிடம் இயல்பாக இருப்பது விபிஷிர்க்கு போதுமானதாக இருந்தது.

அடிக்கடி வெளியே சுற்றுவதால் விபீஷும் ராஜும் நண்பர்களாக ,வினுவின் அருகாமையும் விபீஷிர்க்கு ராஜ்ஜுவின்மேல் இருந்த கோபத்தை குறைத்தது.

அந்த நேரத்தில் வெற்றியிடம் இருந்து இன்னும் ஒரு மாதத்திற்குள் சுரேந்தர் இந்தியா வருவதாகவும் ,அதற்குள் சைட் பார்த்து வைக்கும்படியும் தகவல் வர வேந்தனுக்கோ ஒன்றும் புரியவில்லை.அப்பார்ட்மென்ட் வேலை வேறு ஜரூராக நடந்து கொண்டிருக்க இறக்கை இல்லாமல் சுற்றி கொண்டிருந்தனர் அனைவரும்.அதனால் சைட் பார்க்கும் வேலையை விபீஷிடம் ஒப்படைத்தனர்.

விபீஷும் திருச்சியில் இருந்து சென்னைக்கு சென்று தங்கி பல இடங்களை பார்த்தான்.அதில் ஒரு இடம் அவனுக்கு பிடித்து போக அதை பற்றி விசாரித்த போது அது அவன் தந்தையுடையது என தெரிய வந்தது.இவ்வளவு நாள் கையில் வெண்ணை வைத்து கொண்டு நெய்க்கு அலைந்து இருக்கிறோமே என நினைத்தவன் இதை வேந்தனிடம் சொல்ல ஆனால் வேந்தனோ சற்று யோசித்தான்.

“ஏன் நண்பா ....என்ன யோசிக்கிற” என விபீஷ் கேட்க

“இல்லடா...ஏற்கனவே நீ எங்களோட சேர்ந்து இருக்கிறதுல உங்க அப்பாவுக்கு விருப்பம் இல்ல....நாங்கதான் உன்னை தூண்டிவிட்றோம்னு சொல்றாரு......இப்போ இடம் கேட்டா தருவாரா...அதும் நம்ம பிஸினெஸ்க்குனு  கேட்டு தரமாட்டேன்னு சொல்லிட்டா என்ன பண்றது” என கேட்டான்.

விபீஷோ “எனக்கும் முதல்ல அந்த சந்தேகம் வந்தது......அதனால் என்ன நண்பா ....அவர் கேட்ட விலையை கொடுத்திடுவோம்....நான் பார்த்து கொள்கிறேன்......அது எவ்ளோ மெயினான இடம் தெரியுமா?......அங்க மட்டும் நம்ம கன்ஸ்ட்ரக்ஷன் நடந்துச்சு...V4 பெயர் எங்கோ போய்டும்” என சொல்ல



DO NOT COPY

அருகே அதை கேட்டு கொண்டிருந்த வினுவும் 'சார் அப்போ அந்த இடத்தையே பேசி முடிச்சுடுங்க......எவ்ளோ விலையானாலும் கொடுத்திடலாம்" என்றாள்.

வேந்தனுக்கும் அந்த உண்மை  புரிந்து தான் இருந்தது .ஆனால் மனதில் சிறு நெருடல் இருக்க சற்று யோசித்தான்.

வெற்றியிடம் இதை கொண்டு சென்றான் விபீஷ்.வெற்றியும் விபீஷிர்க்கு சாதகமாக  பேச அந்த இடம் முடிவானது.இவர்கள் சார்பில் வேந்தன் விபீஷின் தந்தையிடம் பேச அவர் வேந்தன் சொன்னது போலவே தர மறுத்ததோடு மட்டும் அல்லாமல் அவனை திட்டியும் அனுப்பிவிட்டார்.

இங்கு அவன் சொல்ல போகும் பதிலை எதிர்பார்த்து அனைவரும் காத்திருக்க வேந்தனோ முகம் சிறுத்து வர பார்த்த உடனே விபீஷ் புரிந்து கொண்டான்.

"என்ன நண்பா.....மாட்டேன்னு சொல்லிட்டாரா என வேகமாக கேட்டவன் ....இரு நான் பேசிக்கிறேன்" என கிளம்ப

அவனை தடுத்து நிறுத்திய வேந்தன் இதானால் குடும்பத்தில் எந்த சண்டையும் பண்ணகூடாது என அவனிடம் சத்தியம் வாங்கி கொண்டான்.பொங்கி வந்த கோபத்தை அடக்கிய விபீஷ் ....."இல்ல வேந்தா இந்த வாய்ப்பு எல்லாருக்கும் கிடைக்காது.....குறுகியகாலத்துல நமக்கு இப்படி ஒரு வாய்ப்பு கிடைச்சிருக்கு....எனக்கு உதவ வாய்ப்பு இருந்தும் பண்ணமுடியல....அதாண்டா ரொம்ப வருத்தமா இருக்கு" என புலம்ப

வினுவோ "இப்போ என்ன சார் பண்றது....சுரேந்தர் சார் வேற இன்னும் ஒரு வாரத்துல வந்திடுவார்.....அவர்க்கு இடம் காட்டணுமே" என சொல்ல

"எனக்கும் அதான் புரியல வினு ....இப்போ என்ன பண்றது" என வேந்தன் புலம்ப

முளைச்சு வரும் நாத்து

இடையில் தோன்றும் களைகளால்

லஷ்மிரவி

DO NOT COPY

**வளர வழியில்லாமல் வாடி நிர்ப்பது போல் ,**

**வளரத்துடிக்கும் இந்த  இளம் குருத்துகள்**

**வழிபாதையில் ஏற்படும்  தடைகளை**

**கண்டு தடுமாறி போக**

**உடன் இருக்கும் தன்னம்பிக்கையோ**

**அவர்கள் துவண்டு விடாமல்**

**துணை நிற்க**

**விடியும்பொழுது இவர்களுக்கான பொழுதாக**

**இருக்கும் என்ற நம்பிக்கையோடு**

**நடந்தனர் நண்பர்கள். .....**

**வீட்டிற்கு வர அங்கு வேந்தனை வெகுநேரமாக காணாமல் வெண்மதி கோபமாக இருக்க ,உள்ளே நுழைந்த வேந்தனோ அதை பற்றி கண்டு கொள்ளாமல்  படுக்கை அறைக்கு சென்றான்......**

**அவள் மெதுவாக எழுந்து அவன் பின்னால் சென்றவள்..".மாமா உங்கிட்ட "என ஆரம்பிக்க**

**..."மதி எனக்கு பசி இல்லை...சாப்பாடு வேண்டாம்" என சொல்லிவிட்டு அப்படியே படுக்க ,அருகில் வந்தவள் ஏதும் சொல்லாமல் படுக்கையை நேர்படுத்த,மனதின் உளைச்சல்,கோபம் ,நாள் முழுவதும் ஓடிய உழைப்பின் அசதி அவனை சோர்வுற செய்ய,அப்படியே உறங்கிவிட்டான்.**

**அவனுக்காக காத்திருந்து அவளும் எதுவும் சாப்பிடாமல்,சொல்லவந்த விஷயத்தையும் சொல்லாமல்  அப்படியே படுக்க மனதில் ஒரு ஏமாற்றம்  வந்து சென்றது..சிறிது நேரம் கழித்து மெதுவாக கை  அவள் மேல் விழ திரும்பி பார்க்க,அவளை பார்த்த வேந்தன்..."என்னடா மதி "....என கேட்க,அந்த அன்பில் கரைந்து "மாமா அது வந்து" என அவள் கண்களை உருட்டி சொல்ல  ஆரம்பிக்க...அந்த உருட்டலில் தானும் உருண்டவன் ........   பேச ஆரம்பிக்கும் முன் அவள் இதழை**



DO NOT COPY

சிறைசெயதவன் அவன் வேலை முடிந்த பின்னே தான் அவளை விடுவித்தான். வார்த்தைகள் தொடங்க அப்போதே அது முடிவடைய வெண்மதியோ வெறுப்பின் உச்சத்திற்கே சென்றாள்.

கொஞ்சநாட்களாக இது தான் நடந்து கொண்டிருந்தது.வேந்தன் வேலை அதிகமாக இருப்பதால் தாமதமாகத்தான் வீட்டிற்கு வருவான்.வந்த உடன் சாப்பிட்டு விட்டு உடனே படுத்து விடுவான்.அவன் எப்போதும் மதியை சாப்பிட்டாயா என கேட்பதும் இல்லை...நேரமாகி இருப்பதால் அவள் சாப்பிட்டு இருப்பாள் என அவனே நினைத்து கொண்டான்.ஏனெனில் அவன் வளர்ந்த விதம் அப்படி.பின்னர் மதி படுக்க வரும்போது சிறிது நேரம் தன் வேலையை பற்றி பேசுவான்.பிறகு அவளை அணைத்தவாறே தூங்கிவிடுவான்.மறுபடியும் காலை எழுந்து வேகமாக கிளம்பி போய்விடுவான்.

மதியோ மனதிற்குள் குழம்பி போனாள்....மாமா ஏன் இப்படி நடந்து கொள்கிறார்......வேலை..வேலை என்கிறார்....அது எப்படி பேசகூட நேரம் இல்லாமலா வேலை இருக்கும்.......சில சமயம் அவள் பேச முயற்சி பண்ணினால் திட்டியோ...அல்லது முத்தத்தாலோ அவளை அடக்கி விடுவான்.சிறு குழந்தையின்  கையில் மிட்டாய் கொடுத்து சில நிமிடங்களில் தட்டி பறித்தால் அந்த குழந்தை எந்த அளவு அதிர்ச்சி அடையுமோ அந்த நிலைமை தான் மதிக்கும்.சந்தோசத்தை காட்டி அதை உணரும் முன்பே அதில் இருந்து அவன் விலக அவள் துடித்து போனாள்..அவள் மனதில் முன்பே அரித்து கொண்டிருந்த ஒரு விஷயம் இப்போது விஸ்வரூபம் எடுக்க தொடங்கியது.

வேந்தனுக்கு இது புரியவில்லை.அவள் சந்தோசமாகத்தான் இருக்கிறாள் என நினைத்து கொண்டு அவன் எப்போதும் போல் இருந்தான்.வேலையின் காரணமாக விபீஷும் வீட்டிற்கு வருவது இல்லை.அவளுக்கு தன் நிலையை சொல்வதற்கு கூட வழியில்லாமல் தவித்து போனாள்..

சுரேந்தர் இந்தியா வர அவருக்கு எந்த இடமும் பிடிக்காமல் இறுதியாக விபீஷ் எதற்கும் இருக்கட்டும் என்று அவனது தந்தை சைட் காட்ட அது அவர்க்கு பிடித்து போய் விட்டது.இதற்க்கு என்ன விலை

வேண்டுமானாலும் கொடுத்து விடலாம்.இதையே முடித்து விடுங்கள் என அவர் சொல்லிவிட தடுமாறி போயினர் நண்பர்கள்.

என்ன செய்யலாம் என யோசித்து கொண்டிருக்க ,திடீரென்று விபீஷின் தந்தையிடம் இருந்து இடம் தருவதற்கு சம்மதம் என அழைப்பு வர V4 BUILDERS சந்தோஷ கடலில் மூழ்கி தத்தளித்தனர்.

வேந்தன் விபீஷை அழைத்து விசாரிக்க வீட்டில் அவனும் பிரச்சனை பண்ணியதாக ஒப்புகொண்டான்.ஆனால் இறுதி வரை தந்தை ஒத்துகொள்ளவே இல்லை....இந்த செய்தி தனக்கும் ஆச்சிரியம்தான் என்றான்........இடத்தின் மதிப்பை விட அதிக விலை கொடுத்தாலும் அந்த இடத்தை வாங்க சுரேந்தர் ஒத்து கொண்டதால் அவர்கள் வேலை சுலபமாக முடிந்தது.

சந்தோசமாக வீட்டிற்கு வந்த வேந்தன்.....”.மதி...மதி...மதிம்மா” என அழைத்து கொண்டே வர

மதியோ எந்த உணர்ச்சியும் காட்டாமல் அமைதியாக வந்து நிற்க

“ஹே நமக்கு நல்ல நேரம் ஸ்டார்ட் ஆகிடுச்சு......நான் ரொம்ப சந்தோசம்மா இருக்கேன் மதிம்மா.....உனக்கு என்ன வேணும் கேளு” என சொல்ல

ஆனால் மதியோ அதற்கும் எந்தவிதமன உணர்ச்சியும் காட்டாமல் “அப்படியா......சரி...வாங்க சாப்பிடலாம்” என உள்ளே செல்ல

“ஏண்டி எவ்ளோ பெரிய விஷயம் சொல்றேன்...என்னோமோ உங்க ஊர்ல ஆட்டுகுட்டி வாங்கினத சொன்ன மாதிரி ஒரு ரியாக்சனும் பண்ணாம போற “என அவளை இழுத்து அவள் முகத்தோடு முகத்தை உரசி கொண்டே கேட்க

“விடுங்க மாமா......வாங்க சாப்பிடலாம்” என அவள் நகர,அவளது மாமா என்ற வார்த்தையும்,அவள் சலித்து கொண்டு சொன்னது அவனுக்கு கொஞ்சுவது போல தோன்ற அவளை இழுத்து அணைத்தவன் அவளை அப்படியே தூக்கிகொண்டு கட்டிலுக்கு சென்றவன்...”மதிம்மா இன்னைக்கு மாமா ரொம்ப சந்தோசமா இருக்கேண்டா என சொல்லிய படியே அவளின் மேல் படர்ந்தவன் தனது மகிழ்வை இந்த விதத்தில்

அவளிடம் பகிர்ந்து கொண்டான்.அனைத்தும் முடிந்து அவன் திரும்பி படுக்க மதியின் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நின்றதை அவன் கவனிக்க வில்லை.

காலையில் எழுந்தும் அவன் துருதுருவென்று இருக்க வெண்மதியோ சற்று சோர்ந்தது போல இருக்க...."என்னடா மதிம்மா ....என் குட்டிம்மாக்கு என்னாச்சு...... ஏன் இப்படி இருக்கடா......இந்த ஆர்டர் கிடைத்ததில்  உனக்கு சந்தோசம் இல்லையா" என கேட்க

முதன்முதலாக தன்னை மதித்து தனது உணர்வை அவன் கேட்கிறான் என என்னை சந்தோசத்தில் அவள் முகம் விகாசித்து திரும்பி "இல்ல மாமா அது வந்து "என ஆரம்பிக்க ......

அதற்குள் அலைபேசிமணி அவர்களுக்கு இடையுறாக அமைய அதில் பேசியவன் உடனே கிளம்பி சென்றான்.மதியிடம் சொல்ல கூட இல்லை.

இங்க அலுவலகத்தில் ஒரு பெரிய பிரச்சனை....அப்பார்ட்மென்ட் வேலையில் ஒரு மாற்றம் வர அதற்க்கு அனைவரும் இங்க இருக்க வேண்டியதாக இருந்தது.இப்போது சென்னை சென்று யார் வேலையை பார்ப்பது என பிரச்சனை வர அந்த நேரத்தில் வெற்றி அவர்களை அழைத்திருந்தான்.

இன்னும் ஒரு மாதத்தில வேலை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்ல ,வேந்தனும் இங்கு இருக்கும் நிலையை எடுத்து சொல்ல நீண்ட ஆலோசனைக்கு பின் வெற்றி இந்தியா வருவது என முடிவு செய்யப்பட்டது.

ஆனால் வெற்றி வரவேண்டுமானால் கம்பெனிக்கு அவன் 5 லட்சம் பணம் கட்டினால் தான் வர முடியும்.V4 buildersன் பணம் அப்பார்ட்மென்ட்டில் முடங்கி இருந்ததால் பணம் கிடைக்காமல் திண்டாடினர் நண்பர்கள்.பின்னர் அனைவரின் சேமிப்பும் வினியின் சேமிப்பும் எல்லாம் சேர்த்து ஒருவழியாக பணம் கட்டப்பட்டு வெற்றி இந்தியா பயணம் உறுதி செய்யபட்டது.

வெற்றி இந்தியா வருகிறான் என்ற செய்தி வெண்மதிக்கு பெரும் மகிழ்ச்சியை தர VCல் வெற்றி தான் வரபோவதை சொன்னவுடன் சந்தோசத்தில் துள்ளி குதித்தவள் ...."அண்ணா நீங்க வரீங்களா



DO NOT COPY

....ஹப்பா....இனி எனக்கு யாரும் தேவை இல்லை......எங்க அண்ணன் வரபோறாரே" என வேந்தனிடம் உதட்டை சுளித்து பலிப்புகாட்டி அவள் விளையாட்டிற்கு சொல்ல அவன் மனதில் ஒரு சின்ன வலி வந்து போனது. 2

நிற்க நேரம் இல்லாமல் கால்கள் ஓடிகொண்டிருந்தாலும் விபீஷின் மனமோ வினுவை மிகவும் நாடியது.அதும் அவள் இப்போது அவனிடம் சிரித்து பேசி பழக....... எங்கே தன் கட்டுபாட்டை இழந்து விடுவோமோ என பயந்தான்.ஆனாலும் அவனையும் மீறி அவளை தேடி செல்லும் கண்களையும்,மனதையும் அவனால் கட்டுபடுத்த முடியவில்லை.இந்த விழிகளின் விளையாட்டு விபரீதத்தில் போய் முடிந்தது.

ஒரு நாள் விபீஷ் பேசிகொண்டிருக்கும்போது "சார் நீங்க வினுவ பத்தி என்ன நினைக்கிரிங்க" என ராஜ் கேட்க

அவனது பேச்சின் சூட்சமம் தெரியாமல் விபீஷும் வினுவை பற்றி நல்ல விதமாக சொல்ல

"அப்புறம் ஏன் அவளை முதல்ல பார்க்கும்போது எல்லாம் திட்டிகிட்டே இருந்தீங்க "என அவன் சந்தேகத்துடன் கேட்க

அப்போதுதான் தான் அதிகமாக பேசியதை உணர்ந்த விபீஷ்....".அது எல்லாம் அப்படிதான் ராஜ்....சரி நீ போய் வேலையை பாரு...போ...போ" என விரட்ட

"சார் உங்ககிட்ட நானும் ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும்.....நீங்க உணமை சொன்னா நானும் சொல்றேன்" என்றான்.

ராஜுவுடன் இப்போது அதிகம் பழகுவதால் அவன் பேச்சிள் நம்பிக்கை வர

வினுவை தான் விரும்புவதை முதன் முதலாக ராஜுவிடம் சொன்னான் விபீஷ்.

**"ராஜ் என் உயிர் நண்பர்கள் இரண்டு பேருக்கும் கூட இது தெரியாது....உன்னிடம் மட்டுமே சொல்கிறேன்" என சொல்ல**

**அவனது நம்பிக்கையில் மெய் சிலிர்த்த ராஜ்...."சார் என் வாயில இருந்து இந்த உண்மை வெளியே யாருக்கும் போகாது ......ஆனாஆஆஆஆஆஆ....." என இழுக்க**

**"என்ன ராஜ்...என்ன ஆனா" என அவன் கேட்க**

**ராஜ் சொன்ன பதிலில் விபீஷ் அதிருந்து போனான்.**

**"என்ன சொல்ற ராஜ்...இது உண்மையா என கேட்டவன்......இல்ல இருக்காது" என்றான்.**

**"ஆமாம் சார்...வினுவோட அம்மாதான் சொன்னாங்க....வினுகூட இரண்டு நாளா ஆபிஸ் வரலைல அப்பத்தான்....நான் கூட இத நம்பள....ஆனா வினுவோட நடவடிக்கை என்னை நம்ப வச்சுடுச்சு" என்றான்.**

**இப்படி நடந்திருக்கும் என்று விபீஷ் கனவிலும் நினைக்கவில்லை.தன்னை மீறி எவ்ளோ பெரிய விஷயம் நடந்திருக்கு என நினைத்தவன்......அடுத்த என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நின்றான்.**

**வினுவிடம் ராஜ் சொன்ன மாற்றங்களை நினைத்து பார்க்க அதும் உண்மை என தெரிந்தது அவனுக்கு..வினு தன்னுடன் இப்போது பழகுவதும்,இதற்க்கு முன்னால் பழகியதர்க்கும் இருந்த வேறுபாடு அவனுக்கு புரிந்தது.முன்பு எல்லாம் அவனை பார்த்த உடன் முகத்தில் ஒரு சின்ன நாண சிவப்புடன் தலையை கீழே போட்டு கொள்வாள்.அவன் கண்களை பார்த்து பேசமாட்டாள்.ஆனால் இப்போது அப்படி அல்ல....ராஜ் வேந்தனிடம் பேசுவது போல் அவனிடமும் பேசுகிறாள்......அது அவனுக்கு தெரிந்தாலும் அவள் தன்னை நெருங்குவதாக நினைத்தான்.இப்படி இருக்கும் என்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.**

ஒரு மாதத்திற்குள் பல நிகழ்வுகள் நடந்து முடிந்தன......வெற்றி இந்தியா வந்ததும் அவன் சென்னையில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட அதை கேட்ட மதி மிகவும் மனம் உடைந்து போனாள்..

“பாப்பு அண்ணா எங்க இருக்கேன்......இங்க சென்னைலதான இருக்கேன்...இன்னும் கொஞ்ச நாள்தான் ஓடி வந்திடுவேன் திருச்சிக்கு....இப்போ சுரேந்தர் சாரும் கூட வந்திருக்கார்......அதான் திருச்சி வர முடியல...இங்கே வேலை சரியா இருக்கு.....புரிஞ்சுக்கோடா” என வெற்றி அலைபேசியில் உடன்பிறந்தவளிடம் கெஞ்சிகொண்டிருக்க

அருகில் வேந்தன் இருந்ததால் எதுவும் மனம் விட்டு பேசவும் முடியாமல் ,அதே சமயத்தில் தனது வேதனையை அடக்கி வைக்கவும் முடியாமல் அவள் வாய் விட்டு அழ ,இதை பார்த்து கொண்டிருந்த வேந்தன் டென்ஷன் ஆக....கேட்டு கொண்டிருந்த வெற்றியோ பதறி போய் “பாப்பா ...பாப்பா...என்னாச்சுடா.....நான் வேணா உடனே வரட்டுமா” என கேட்டான்.

“அதற்குள் வேந்தன் போனை வாங்கி வெற்றி உன் தங்கச்சியை பற்றி உனக்கு தெரியாதா....நீ வறேன்னு சொன்னதும் ரொம்ப ஆசையா இருந்தா......இப்போ இல்லைனு சொன்னதும் தாங்கிக்க முடியாம ஒரே அழுகை....நான் பார்த்துகிறேன்....நீ பத்திரம் எழுதிற வேலையை பாரு”.....என தொழில் விஷியத்தை ஆரம்பிக்க இருவரும் வெண்மதியை மறந்து மணிகணக்கில் அதை பேசிகொண்டிருன்தனர்.

வெற்றியும் முதலில் வெண்மதி அழுதபோது பயந்து தான் போனான்....ஆனால் அதற்க்கு பிறகு வேந்தன் பேசிய உடன் அவன் எப்படியும் சமாளித்து விடுவான் என நம்பினான்.ஏன்னெனில் வேந்தனும் மதியும் இப்போது எந்த பிரச்சனையும் இல்லாமல் அன்னியோனயமாக இருப்பதாக அவனது தங்கையே முன்பு கூறி இருந்ததால் அவன் பயப்படவில்லை.ஆனால் வேந்தனே வேதனைக்கு காரணம் என்று அவன் அறியவில்லை.

மட்டும் போதாது

எதிர்காலத்தில் வரும் இடர்பாடுகளை

ஏற்று கொள்ளும் மனபக்குவமும் வேண்டும்.

அவள் புரிந்து கொள்வாள் என்று இவன் நினைக்க

புரிந்து கொள்ளும் பக்குவம் இல்லாமல் அவள் இருக்க

அது தெரியாமல் வாழ்க்கை கப்பலில்

இவர்கள் பயணம் செய்ய

காலம் கற்று கொடுக்கும் ஆசானாக மாற

அனுபவம் மட்டுமே இதற்க்கு பாடமாக அமைய

அந்த பாடத்தில் இவர்கள் தேர்ச்சிபெறுவார்களா ?

**உங்களை போல் கேள்விகளுடன் நானும்**

**அத்தியாயம் -18**

**அன்று வேந்தனும் ராஜுவும் வேலையில் இருக்க,வினு மட்டுமே ஆபிசில் இருக்க அப்போது தான் வந்தான் விபீஷ். மனதின் குழப்பம் முகத்தில் தெரிய யோசனையுடனே உள்ளே நுழைந்தான்.**



DO NOT COPY

அவனை பார்த்ததும் வினு உற்சாகத்துடன் "குட்மார்னிங் சார்.......ரோட்ல எந்த பிகரும் உங்களை பார்த்து சிரிக்கலையோ.....ரொம்ப வருத்ததுல வரீங்க " என கிண்டலாக கேட்க

அவளது புன்னகை முகமும்,சந்தோசமான பேச்சும் அவனுக்கு இதமாக இருக்க.......அவனுள் பழைய விபீஷ் குதித்தெழ ...".ஹஹஹஹா....இல்ல வினு ஒரு சூப்பர் பிகுரே செட் ஆகிடுச்சு....எங்க போனாலும் விடாம என்னையே துரத்துறா....இப்பகூட பாரேன்.....சினிமாவுக்கு போலாமான்னு கேட்டா....நான் தான் வேலை இருக்குனு சொல்லிட்டு வந்திட்டேன்.....ஆனா நான் வர வரைக்கும் வெயிட் பண்றேன்னு சொல்லிட்டு இருக்கா.....ஆள் பார்க்கிறதுக்கு நஸ்ரியா மாதிர்யே இருக்க தெரியுமா.....என்ன கலரு.......என்ன ஸ்டையில்....சூப்பர் "என வினுவை ஓரகண்ணால் பார்த்து கொண்டே சொல்ல

அவன் சூப்பர் பிகர் என்று சொன்னதும் அவள் முகம் சற்று சிறுத்து, பின்னர் சினிமாவிற்கு இவன் வரவில்லை என்று சொன்னதும் ஒரு நிம்மதி முகத்தில் தோன்ற ,வெயிட் பண்றேன்னு சொன்னா என்று சொன்னதும் சற்று முகத்தை சுருக்க அதைவிட அவள் ஸ்டைல்பற்றி சொன்னது முகத்தில் கோபத்தின் சாயல் முகத்தில் தெரிய..... இப்படி அவளது பல அபிநயங்களை பேச்சினூடே ரசித்து கொண்டிருந்தான் விபீஷ்.

என்ன வினு நான் சொல்றத கேட்டு உனக்கு கோபம் வந்திருக்கணுமே என கண்களை சுருக்கி அவளை பார்த்து கேட்க

சட்டென்று சுதாரித்தவள் ....."அப்படியா....நான் எதுக்கு சார் கோபபடனும்" என அவள் தன்னை சமன்படுத்தி கொள்ள முயற்சி செய்ய

"அது எனக்கு மட்டும் தான் தெரியும்" என ஒற்றை புருவத்தை தூக்கி ஒரு மாதிரியான குரலில் சொன்னவன்,

"என்ன சார் "என அவள் வேகமாக கேட்க

"இல்ல வினு.......ராஜ் தான் சொன்னான்.....உனக்கு இந்த மாதிரி விஷயம் எல்லாம் பிடிக்காதுன்னு சொல்லி அதான் கேட்டேன்" என பேச்சை மாற்றினான் விபீஷ்.......

அவனது பேச்சும் ,நடவடிக்கையும் அவளுக்கு ஏதோ உணர்த்த ஆஹா என்னடா இது எலி எட்டு முலம் வேஷ்ட்டி கட்டுது என மனதிற்குள் நினைத்த வினு

“ஹிஹிஹிஹி......அப்போ வேலையை பார்க்கலாம் சார்.....அனாவசியா பேச்சு நமக்கு எதுக்கு சார்” என அவள் அவனிடம் இருந்து தப்பிக்க முகத்தை சாதரனமாக வைத்து கொண்டு அவள் சொல்ல

அவளது செய்கையை அவனுக்கு மேலும் சந்தோசத்தை ஏற்படுத்த

எல்லாருக்கும் நான் அல்வா கொடுப்பேன்...எனக்கேவா....இன்னைக்கு நீ என்கிட்டே மாட்டின என மனதில் சிரித்து கொண்டே...

“ஆமா ஆமா வினு....வா ...வா நம்ம வேலையை பார்க்கலாம்” என சொல்லிகொண்டே அவள் அருகில் நாற்காலியை போட்டு அமர ஒரு நிமிடம் வினுவிர்க்கு மூச்சு நின்று போனது.

இது வரை விபீஷ் இது போல் நடந்து கொண்டது இல்லை....எப்போது ஒரு இடைவெளியை கடைபிடிப்பான்.இன்று திடீரென்று அவன் இது போல் அமர்ந்ததும் வினு நடுங்கி போனாள்..

“ம்ம்ம் சொல்லு வினு.....இன்னும் ப்ளோர் வேலை மட்டும்தான இருக்கு....அந்த 7ம் நம்பர் வீடு பிளம்மிங் வேலை முடிஞ்சுடுச்சா” என அவன் கேட்க

அவன் கேட்பதோ வேலையை பற்றிதான்....ஆனால் வினுவிர்க்கு பதில் சொல்ல முடியவில்லை.

“என்ன வினு பகல்லியே கனவா...யாருகூட “ என அவன் ஒரு மாதிரி கேட்க

“ம்ம்ம்ம்...இல்ல...இல்ல சார்.......அது வந்து” என அவள் தடுமாற

“நான் ஏதாவது கேட்டா மட்டும் இப்படி பண்ணு ...........இத நம்பிஈஈஈ அன்னைக்கு உன்கூட வந்ததுக்கு ஹப்பா சாமி என கன்னத்தில் கை வைத்தவன்......இன்னும் அந்த எபெக்ட் குறையல” என சொல்ல

அவனது செய்கையில் சட்டென்று சிரித்து விட்டவள் மனம் லேசாக “சார்....அது எல்லாம் அந்த மாதிரி பசங்களுக்கு தான்....”.என சொல்ல

“ம்ம்ம் தெரியுது....இல்லையினா  இந்நேரம் அந்த சத்தம் இங்க கேட்றுகனுமே” என அவள் தான்  அருகில் அமர்ந்தும் ஒன்னும் சொல்லவில்லை என்பதை அவன் மறைமுகமாக சொன்னான்.

உஷாரான வினு “சிலபேருக்கு அடிச்சாதான் சார் உறையும்.....ஆனா சிலர் பேச்சிலே புரிசுஞ்குவாங்க...உங்களை மாதிரி ........ நீங்க எல்லார்கிட்டயும் பேசறமாதிரி என்கிட்ட பேசறதில்லை...உங்க பேச்சுல ஒரு கண்ணியம் இருக்கு.....ஒரு மரியாதை இருக்கு......காமெடியா பேசினாலும் கல்மிஷம் இல்லாத பேச்சு உங்களோது ...இந்த மாதிரி எல்லாரும் இருந்திட்டா நாங்க எதுக்கு சார் கோப படறோம்..”.என அவள் அவனுக்கே ஒரு பெரிய பாடம் எடுக்க

“ஆஹா ....நமக்கே ரிப்பீட்டா....விபீஷு உஷாரு...எந்த பக்கம் போனாலும் ரெட் சிக்னல் கொடுத்திட்ரா......ட்ராக் மாத்து” என மனதில் தன்னை எச்சரித்தபடி

“சரி சரி....வெட்டி பேச்சு பேசாம வேலைய  பார்க்கலாம் என்றவன்,கொஞ்சம் பொறு வந்திடறேன்” என கூறி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான். வினுவோ அவன் செல்வதையே பார்த்து கொண்டிருந்தாள்.

வெளியே வந்த விபீஷோ....தன் மனதை எப்படி அவளிடம் சொல்வது என குழம்பி போனான்.ஆனால் சொல்லாமல் வெகுநாட்கள் நீட்டித்தால் அது பெரும் பிரச்சனை ஆகிவிடும் என்பதும் அவனுக்கு தெரியும்.

விடுமுறை நாள் அன்று சிறு சிறு வேலைகள் இருக்க விபீஷ்,வேந்தன்,வினு மூவரும் அலுவலகம் வந்திருந்தனர்.....அப்போது பொதுபடையாக பேசிகொண்டிருக்கும்போது வேந்தன் வினுவிடம்....”வினு உன் அம்மாவை போன வாரம் பார்த்தேன்....ஏதோ உன் சொந்தத்தில் உன்னை பெண் கேட்கிறாங்கலாம்.அது எல்லாம் இப்ப வேண்டாம்...நீ நல்ல படிச்சு நல்ல நில்லா நிலைமைக்கு வரணும்..ஒரு தெளிவு வரட்டும் அப்புறம் திருமணம் பண்ணிக்கலாம்” என்றான்.

வினு எதிர்பார்க்கவே இல்லை...தொழிலை பற்றி பேசி கொண்டிருக்கும்போது வேந்தன் இப்படி சொல்வான்

என்று............சட்டென்று விபீஷை திரும்பி பார்த்தவள்.....அவன் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாக தெரிந்தது. அவள் ஏதும் பேசாமல் தலை குனிந்து அமர்ந்திருக்க .......

இங்கு ஒரு இதயம் சத்தமே இல்லாமல் சிதைந்து சின்னாபின்னமாகி கொண்டிருந்தது.பெண் கேட்கிறாங்கலாமா என்ற வார்த்தை திரும்ப திரும்ப அவன் காதில் ஒலிக்க அதற்க்கு மேல் அவர்கள் பேசியது எதுவும் விபீஷ் காதில் விழவில்லை.

சரி வினு நம்ம வேலை பார்ப்போம்....என மீண்டும் பழைய பேச்சிற்கு திரும்பியவன் "அடுத்த மாதம் அங்க வேலை ஆரம்பித்து விடும்...நம்ம விபீஷ் சென்னை போகட்டும்...வெற்றி ஒருவனால் சமாளிக்க முடியாது....நம்ம இங்க இருக்க வேலையை பார்த்து கொள்ளலாம்" என வேந்தன் சொல்ல வினுவும் அதற்க்கு தலை ஆட்ட பதில் சொல்ல வேண்டியவனோ சிலையாய் அமர்ந்திருந்தான் .

"டேய் என்னடா சொல்ற என வேந்தன் இருமுறை அழைத்த பின்பே சுய நினைவிற்கு வந்தவன்......ம்ம்ம்...என்ன நண்பா ....அவர்கள் பேசியது என்ன என தெரியாமேலே சரி நண்பா என தலையாட்ட" அது அவன் வாழ்கையில் பெரிய சூறாவளியை கொண்டுவந்து விடும் என்பதை அவன் அறியவில்லை.

அவ்வப்போது வினுவின் வீட்டில் நடக்கும் நிகழ்ச்சிகளை ராஜிடம் கேட்டு தெரிந்து கொண்டான் விபீஷ்.

"டேய் விபீஷ் உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் பேசணும் ...வீட்டிற்கு வா" என வேந்தனிடம் இருந்து அழைப்பு வர கிளம்பி சென்றான்.

விபீஷை கண்டதும் பலநாட்களாக அவனை பார்க்காமல் திடிரென்று அவனை பார்த்தும் சந்தோசத்தில் பேச்சு வராமல் வெண்மதி அப்படியே அதிசயித்து நிற்க

அவளை பார்த்ததும் விபீஷிர்க்கும் தொலைந்து போன சந்தோசம் மீண்டும் மனதில் குடிகொண்டது.

**“என்ன மயிலு.......ஷில்ப்பாஷெட்டி மாதிரி சூப்பரா துருதுருனு இருப்ப....இப்ப சிக்கன் குனியாவந்த சிம்ரன் மாதிரி வாடிபோய் இருக்க.....ஏன் மயிலு இப்ப எல்லாம் நீ சமைச்சத நீயே சாப்பிட ஆரம்பிச்சுட்டியா.....நண்பன் உஸ்ராகிட்டானா...இருக்காதே...அவன் தான் ஊருக்கு போயிட்டு வந்ததில் இருந்து மந்திரிச்ச விட்ட மாதிரியே இருக்கானே ...அப்புறம் என்ன....... எதனால் இந்த மாற்றம்” என புருவம் இரண்டியும் தூக்கி கன்னத்தில் ஒரு விரலை வைத்து கொண்டு அவன் யோசிப்பது போல் பாவனை செய்ய**

**அவனது செய்கையில் தனது வேதனை மறந்து அவள் மனம் விட்டு சிரிக்க அந்த நேரத்தில் அவளை பார்த்த வேந்தன் இவள் என்னை தவிர மற்ற எல்லார் கூடவும் நன்றாகத்தான் பேசுகிறாள்...சிரிக்கிறாள்.....என்னிடம் மட்டும் ஏன் இப்படி நடக்கிறாள் என தெரியாமல் குழம்பினான்.**

**“அண்ணா இவ்ளோ நாள் இந்த சிரிப்பு சத்தம் இல்லாம இந்த வீடே எப்படி இருந்தது தெரியுமா?இப்பதான் கலகலப்பா இருக்கு” என அவள் மனம் நிறைவாக சொல்ல**

**“அப்படியா அப்போ விடு...இனி தினமும் வந்திடறேன்...மறுபடியும் கச்சேரி ஆரம்பிச்சுடலாம்” என அவன் சொல்லிபடியே வேந்தனை பார்க்க**

**அவனோ இவள் ஏன் தன்னிடம் மட்டும் இப்படி நடந்து கொள்கிறாள் என யோசனையில் இருந்தான்.**

**“நீ ஏண்டா திருவிழால கலவாடுன திருடன் மாதிர்யே முழிச்சிட்டு இருக்க”....என சந்தடி சாக்கில் வேந்தனின் காலை அவன் வார**

**“டேயீஈஈ....வேண்டாம் என வேந்தன் அவனை எச்சரித்தவன் நீ உள்ளே வா” என கோபமாக சொல்லிவிட்டு உள்ளே சென்றான்.**

**‘இல்ல நண்பா எப்போது சட்டைக்கு காஞ்சி போட்டமாதிரி விறைப்பா நிப்ப.....இப்போ குமரிமுத்து மாதிரி முழிச்சுட்டு நின்னியா அதான் கேட்டேன் என சமாளித்தவன் ...ஆஹா இனியும் நின்னு எதாவது**



DO NOT COPY

**உளருனோம் இன்னைக்கு சமையல்ல பிரியாணி நம்மதாண்டி" என நினைத்து கொண்டே வேகமாக உள்ளே சென்றான்.**

**"அந்த நேரத்தில் அண்ணா உங்களுக்கு பிடிச்ச பிரியாணி செய்யறேன்....இருந்து சாப்பிட்டு போங்க" .......என மதி சொல்ல**

**"ஆஹா ...நினச்சது நடந்திடும்போல இருக்கே என சொன்னவன்...ஏன் மயிலு இப்படி...... சாப்பாடே வேண்டாம் எனக்கு .... இப்பதான் சிங்கத்தோட குகையில நுளையாறேன்.....வரும்போது எப்படி வரபோறேனு தெரியல...நீ வேற பீதிய கிளப்பாத" என சொல்லி கொண்டே உள்ளே போனான்.**

**ஆனால் சொன்னதற்கு மாறாக வேந்தன் புன்னகையோடு அமர்ந்திருக்க**

**"என்ன நண்பா...திடிரென்னு வரசொல்லிருக்க...எதாவது முக்கியமான பிரச்சனயா.....மயிலு எதாவது பிரச்சனை பண்ணுதா...இல்ல ஊர்காரணுக மறுபடியும் வந்துடானுகளா" என கேட்க**

**"எந்த பிரச்சனையும் இல்லை.நாங்க சந்தோசமாகத்தான் இருக்கோம்.அது எல்லார்கிட்டயும் இருக்கணும்னு நினைக்கிறோம் அவ்ளோதான் என சிரித்து கொண்டே சொன்னவன்....இங்க வா...இப்படி உட்கார்......இப்படி மனம் விட்டு பேசியே ரொம்ப நாள் ஆச்சு........வெற்றி ஊருக்கு போனதற்கு பின் நம்ம பேசவே இல்ல" என ஆரம்பித்தான்.**

**"விபீஷும் ஆமா வேந்தா.....ரொம்ப நாளைக்கு அப்புறம் இப்பதான் அந்த வாய்ப்பு கிடைச்சிருக்கு" என்றான்.**

**"சரி சொல்லு  உன்னோட அடுத்த பிளான் என்ன "என வேந்தன் கேட்க**

**"ம்ம்ம்ம்...அதாவது நண்பா.....எனக்கும் ஒரே மாதிரி இருந்து  போர் அடிச்சுடுச்சு...அதுனால நான் ஒரு முடிவு பண்ணிட்டேன்" என ஆரம்பிக்க**

**"ம்ம்ம்...சொல்லு...சொல்லு அதான் நானும் கேட்கிறேன்......என்ன முடிவு பண்ணிருக்க" என ஆவலோடு அவன் கேட்க**

**“நம்ம டீச்சர்ஸ் பார்க் பக்கத்துல ஒரு புது காம்ப்ளெக்ஸ் ஒன்னு இருக்குல்ல” என சொல்ல**

**“ஆமா...இருக்கு...அதுகென்ன இப்ப “ என வேந்தன் குரலில் சற்று சுதி இறங்கியது போல் கேட்க**

**இல்ல நண்பா...அங்க ப்ளாக் &வெயிட்னு ஒரு சூப்பர் ஸ்பா ஆரம்பிச்ருக்காங்க...அங்க போய் முதல்ல இந்த ஹேர் ஸ்டையில் மாத்தனும்...அப்புறம் கொஞ்சம் அலைச்சல் ஜாஸ்தியா ...கொஞ்சம் மசாஜ் பண்ணனும் அப்புறம் ராஜா ராணி சினிமா போகணும்...அப்புறம் நீ திட்ட கூடாது.....நம்ம ஜாஸ் நைட் பார்ட்டிக்கு கூப்பிட்டு இருக்கான்....அவனோட பார்ட்டினா செம ஜாலியா இருக்கும்...அத மிஸ் பண்ணமாட்டேன்...அப்புறம் போய் குப்புற அடிச்சு தூங்கவேண்டியதுதான்.....இதான்பா என்னோட ப்ளான்”... என அவன் சீரியசாக சொல்ல**

**“டேயீஈஈ என பல்லை கடித்தவன் உன்ன நான் என்ன கேட்டேன்...நீ என்ன சொல்ற” என வேந்தன் டென்ஷன் ஆனான்.**

**“ஏன் நண்பா......நீ கேட்டதுக்குதாண்டா சொன்னேன்.... நீயும் அந்த பார்ட்டிக்கு வரியா...ஆனா அது பாச்சுலர்ஸ்பார்ட்டி.....உனக்கு ஒகேனா எனக்கு பிரச்சனை இல்ல” என சொன்னான்.**

**“விபீஷ் விளையாடத...நான் கேட்கிறதுக்கு நீ சரியா பதில் சொல்லு..... உங்க வீட்ல பார்த்த பொண்ண கலியாணம் பண்ண மாட்டேன்னு ஏன் சொல்ற.....எனக்கு உண்மை தெரிஞ்சாகனும்......உனக்கும் வயசாகுது இல்லயா....இல்ல நான் சம்பாரிச்சு செட்டில் ஆகணும் அப்டின்னு கதை சொல்லாத ....இப்போ நான் பண்ணலையா...நான் வாழலையா”....அதுனால நீ கல்யாணம் பன்ற” என்றான்.**

**இதை சற்றும் எதிர்பார்க்காத விபீஷ்.....ஏண்டா...ஏன்....எதுக்கு இந்த கொலைவெறி உனக்கு.......இப்பதான சொன்னேன்......வாழ்க்கையே என்ஜாய் பண்ணனும்னு....அதுக்குள்ள அதுல மண்ணை போடற “என அவன் அதிர்ச்சியுடன் கேட்க**

**“விபீஷ் உலராத ......ஏற்கனவே உங்க வீட்ல இந்த பேச்சு ஓடிட்டு இருக்குனு எனக்கு தெரியும்....சொல்லு” என்றான்.**

“இத யார் உனக்கு சொன்னா....அம்மாவா ....இருக்காதே ....அப்புறம் யார் சொன்னா” என அவன் கேள்வியுடன் நிற்க

“யார் சொன்னா என்ன ...ஏன் வேண்டாம்னு சொல்ற....உங்க அப்பா தான் சொன்னார்...........எவ்ளோ பெரிய மனுஷன் அவரு....என்கிட்டே அவரு இப்டி புலம்புவாருனு நானே எதிர்பார்க்களை...என்னாச்சுடா...வேற எதாவது பொண்ண விரும்பறியா...இருக்காதே....இது வரைக்கும் அப்படி இல்லேயே...அப்புறம் ஏன்” என கேட்டான்.

“நீயே கேள்வியும் கேட்கிற...நீயே பதிலும் சொல்லிக்கிற ....அப்புறம் நான் என்னடா சொல்றது” என பொதுவாக அவன் சொல்ல

“இங்க பாரு விபீஷ்......இன்னும் பத்து நாள்ல நீ சென்னை போகணும்....அதுக்குள்ள ஒரு முடிவு சொல்லிட்டு போ.....இன்னும் விளையாட்டுதனமாவே இருக்காத” என அவன் புத்திமதி சொல்ல

விபீஷோ “என்னது சென்னை போகனுமா......சொல்லவே இல்ல” என வேகமாக கேட்டான்.

“ஏண்டா...அன்னைக்கு கேட்கும்போது சரி...சரின்னு தலை ஆட்டுன......டிக்கெட் எல்லாம் போட்டாச்சு......நீ கிளம்பனும் அதுக்குள்ள யோசிச்சு நல்ல முடிவா சொல்லு” என்றான் வேந்தன்.

பல விஷயங்கள் தன்னை மீறி நடப்பது விபீஷிர்க்கு நன்றாக புரிந்தது. சென்னை கிளம்புவதற்குள் அடுத்து என்ன செய்ய வேண்டும் என யோசித்துகொண்டே அவன் வெளியே செல்ல

விபீஷ்...... என வேந்தன் அழைக்க

திரும்பி விபீஷ் வேந்தனை பார்க்க.....

“நீ எந்த முடிவு எடுத்தாலும் உனக்கு ஆதரவா எப்பவும் நாங்க இருக்கோம்.....ஆனா யோசிச்சு நல்ல முடிவா எடு......ரொம்ப போட்டு குழப்பிகாதடா...சில விஷயங்களை காலத்தோட கையில கொடுத்திடு...அது நமக்கு கண்டிப்பா நல்லத்தாதான் முடியும்” என சொல்ல

அவன் அருகில் வந்து அவனை அணைத்த விபீஷ்....".வேந்தா ஒரு சில விஷயங்கள என் ரோல் மாடல் நீதான்......கண்டிப்பா நான் செய்யறதும் எதுவும் தப்பாகாது.....கவலைபடாதே......ஆனா நான் ஒரு காரியம் பண்றேனா அது நம்ம நட்பை வலுபடுத்துமே தவிர பிரிக்காது " என்றான்.

வேந்தனும் "விபீஷ் நான் ஆனாதை இல்லைனு உணரதே உங்களோட சேர்ந்த பின்பு தாண்டா ........எனக்கு எல்லாமே நீங்கதான்....உங்க சந்தோசம் தான் என்னோட சந்தோசம்........இன்னைக்கு நான் கல்யாணம் பண்ணி நல்ல சந்தோசமா திருப்தியா இருக்கேன்......அது மாதிரி நீயும் வெற்றியும் இருக்கணும்.....அதான்.....உன்னோட திருமணம் முடிஞ்சா அடுத்து வெற்றிக்கு ரெடி பண்ணனும்" என சொல்ல அந்த இடத்தில் நட்பையும் மீறி ஒரு பாசபந்தம் உருவானது.

விபீஷிர்க்கு தனது சூழ்நிலை நன்றாக புரிந்தது.அவனது தந்தை எங்கே சொன்னால் வேலை நடக்கும் என்று சரியாக காய் நகர்த்தி இருக்கிறார்....இந்த பிரச்சனை விபீஷ் வீட்டில் ஒரு மாதமாக ஓடிகொண்டிருகிறது.அவன் அவர் சொன்ன பொண்ணை திருமணம் செய்தால் அந்த இடத்தை தருவதாக சொன்னார்.ஆனால் விபீஷ் தான் மறுத்து விட்டான்.பின்னர் அவரே அந்த இடத்தை தந்து விட்டார்.ஒரு வழியாக பிரச்சனை முடிந்தது என நினைத்த வேளையில் இப்போது வேந்தன் மூலமாக மறுபடியும் ஆரம்பித்து இருக்கிறார். இனியும் இதை தொடரவிடகூடாது என் எண்ணினான்..

வினுவை பற்றி ராஜ் சொன்ன விஷயம் வேறு அவனை மேலும் குழப்ப நேராக ஸ்ரீரங்கம் பெருமாள் கோவிலுக்கு சென்றான்.அங்கு தரிசனம் முடித்து விட்டு சிறிது நேரம் அமர்ந்து யோசனை செய்தவன் பின்னர் அதை செயல் படுத்தும் முடிவில் இறங்கினான்.

முதலில்  ராஜ்வை அழைத்து சில விஷயங்களை கேட்டு தெளிவுபடுத்தி கொண்டான்.இனியும் பொறுமையாக இருக்க கூடாது.விரைவில் வினுவிடம் சொல்லிவிட வேண்டும் என முடிவு செய்தவன் அடுத்த நாளே அதற்கான நேரத்தையும் குறித்தான்.

“சார்…பார்த்து சார்….எதா இருந்தாலும் பொறுமையா பேசுங்க…அவ கொஞ்சம் கோபமா பேசுவா….நீங்கதான் அவளுக்கு புரிய வைக்கணும். அவ உங்க காதலை கண்டிப்பா ஏத்துகுவா…என்ன கொஞ்சம் முரண்டு பிடிப்பா அவ்ளோதான்” என தனது தோழிக்காக ராஜ் அவனிடம் சொல்லி கொண்டிருந்தான்.

நீ கவலை படாதே ராஜ்….அவளை பத்தி எனக்கு தெரியும்…எப்படி சொன்னா அவள் என்ன மாதிரி ரியாக்ட் பண்ணுவாள் என்று நான் பார்த்து கொள்கிறேன்” என சமாதானம் சொன்னான்.

“சார்….இந்த விஷயம் எனக்கு தெரியும்னு வினுக்கு தெரிஞ்சுது அவ்ளோதான்….நான் தொலைஞ்சேன்” என அவன் அழுவது போல் சொல்ல

“நான் பார்த்துகிறேன்…..நீ கிளம்பு…நான் சொன்னத மறந்திடாத” என சொல்லிவிட்டு அவனும் கிளம்பினான்.

அலைபேசி மணி ஒலிக்க எடுத்து பார்த்தவள் அதில் ஆபிஸ் நம்பர் வர இன்று நான் விடுமுறை…..யார் கூப்பிட்ரா என யோசித்தவாறே காதில் வைத்தாள் வினு .

“ஒரு முக்கியமான விஷயம்…உடனே புறப்பட்டு ஆபிஸ் வா” என சொல்லிவிட்டு உடனே அலைபேசியை வைத்துவிட்டான் விபீஷ்.

நேத்துத்தான மீடிங்க்ள எல்லாம் பேசினோம்…அப்புறம் என்ன……வேந்தன் சார்க்கு போன் பண்ணலாமா என நினைத்தவள் பின்னர் ஆபிசில் இருந்துதானே அழைப்பு என நினைத்து வீட்டில் சொல்லிவிட்டு கிளம்பி அலுவலகம் வந்து சேர்ந்தாள்.

அங்கு விபீஷ் காரில் காத்திருக்க…..”என்ன சார்….எதுக்கு கூப்ட்டிங்க……. வேந்தன் சார் இன்னும் வரலயா…..வெயிட் பண்றிங்களா” என சாதரனமாக கேட்டாள்.

“இல்ல உனக்காகத்தான் காத்திட்டு இருக்கேன்…வண்டில ஏறு “என்றான்.

“ஏன் சார்…என்ன ஆச்சு…….யார்க்காவது எதாவது பிரச்சனையா” என கேட்டு கொண்டே அவள் உள்ளே அமர வண்டி சீறி பாய்ந்தது.

**மறுநாள் விபீஷ் தாதமாக அலுவலகம் வர...வேந்தன் "ஏண்டா லேட்....இன்னைக்கு வினுவும் ஆபிஸ் வரல...ராஜும் ஏதோ சுரத்தை இல்லாம இருக்கான்....நீயும் இப்படி வர என்னாச்சுடா.....வாரத்துல முதல் நாள் இப்படியா இருப்பிங்க" என கேட்க**

**"வினு ஆபிஸ் வரலையா" என்றவன் அதற்க்கு பின்பு ஏதும் சொல்லாமல் தனது இருக்கையில்  சென்று அமர**

**வேந்தனின் மனதில் சிறு சந்தேக முடிச்சு விழுந்தது.**

அணையில் அடைத்து வைத்துள்ள நீர்

திறந்து விட்டதும் சீறி பாய்வது போல்

மனதிற்குள்ளே உணர்வுகளை

குவித்து வைத்து கொண்டிருந்தவன்

அது எல்லை மீறும் போது

எடுக்கும் முடிவுகள்

அறிவுக்கு அப்பாற்பட்டு

ஆத்திரத்திற்கு முதலிடம் கொடுக்க

வீறு கொண்ட வேங்கையாய்

அவன் பொங்கி எழ

கோபமும் காதலுக்கு சத்ருதான்

என்பதை அறியவில்லையே அவன்

அதனால் அவன் இழந்ததும்

இனி இழக்கபோவதும் எத்தனையோ !!!!!!!!!!!

DO NOT COPY

**அத்தியாயம் -19**

**விடிகாலை பொழுது ஆதவன் தன் உறக்கத்தில் இருந்து வெளியே வர அந்த நேரத்திலும் நூற்றுகணக்கான மக்கள் தங்களது பணிகாண பயணத்தை தொடர காத்திருக்க சென்னை எக்ஸ்ப்ரஸில் வந்து இறங்கினான் விபீஷ்.**

**இடைவெளி இல்லாமல் மனித முகங்களாக தெரிய,அனைவரும் சோர்வில்லாமல் சுறுசுறுப்பக அவர்கள் இருப்பதை கண்டு மனதில் ஒரு உற்சாகம் தோன்ற அந்த மனநிலை மாறுமுன்னே வெற்றியின் அறையின் வாசலில் நின்றான்.**

**அழைப்பு மணி ஓசை கேட்டு தூக்க கலக்கத்துடன் வந்து கதவை திறந்தவன்......விபீஷ் நிற்ப்பதை கண்டு வியப்புற்று**

**“ஏய்.....நீ எங்கடா இப்போ....அடுத்த வாரம் தான வரேன்னு சொன்னாங்க.....சொல்லவே இல்ல...நேத்து கூட பேசுனேன் “என படவென்று பேச**

**“நண்பா எதா இருந்தாலும் உள்ள போய் பேசி தீர்த்துக்லாம்..... இப்படி வெளியிலே நிற்க வைத்து என்னை காட்சி பொருலாக்காத” ..........என சொல்லி கொண்டே அவனை தள்ளி கொண்டு உள்ளே சென்றான்.**

**டேய் நீ வந்தது வேந்தனுக்கு தெரியுமா என சந்தேகமாக அவன் கேட்க**

**“ம்ம்ம்ம்...ட்ரைன்ஏறின பிறகு அவனுக்கு போன் பண்ணி சொல்லிட்டேன்......நீ ..தொன...தொனனு ... கேள்வி கேட்காத... எனக்கு சூடா ஒரு கப் காபிடா...ரொம்ப அலுப்பா இருக்கு....குடிச்சுட்டு படுக்கணும்” என சொல்லி கொண்டே உள்ளே சென்றவன்**

**“டேய் என்னடா இது “என அலறிக்கொண்டு வெளியே ஓடிவந்தான் .**

**அப்போதுதான் அவனுக்கு காபி போட உள்ளே போன வெற்றி பதறி ஓடி வந்தவன்**

**“என்னடா ....என்னாச்சு” என கேட்க**

**" நீயா வெற்றி இது....ஐயகோ!!!!!!...நம்ப முடியவில்லேயே!!!!!! ........ அப்துல்கலாமுக்கு அடுத்த வாரிசா வருவேன்னு நினச்சனே....மோடிக்கு முன்னோடியா இருப்பேன்னு நினச்சனே இப்படி நினைக்கவே இல்லயே" என புலம்ப**

**"டேய் ...என்னடா உலற.....நான் என்னடா பண்ணேன் " என வெற்றி புரியாமல் குழம்பினான்.**

**"அடபாவிங்களா.......பேசறது எல்லாம் அம்மாஞ்சி மாதிரி......பன்ற சேட்டை எல்லாம் ஆர்யா மாதிரியா......எத்தன பிரியாணி காலியாச்சோ....ஆனாலும் நண்பா.....இதுக்குதான் நீ சென்னைலே இருக்கேன்னு சொன்னியா" என அவன் பேசி கொண்டே போக**

**"மவனே மேட்டர் சொல்லாம தேஞ்ச ரெகார்ட் மாதிரி பேசினதே பேசாத......என்னனு சொல்லி தொலை" என வெற்றி கடுப்பாக**

**இங்க வா என அவனை இழுத்து சென்றவன் உள்ளே பெண்களுக்கான டிரஸ் மெட்டீரியல்ஸ் நான்கு பைகள் இருக்க**

**"என்ன நண்பா இது....சொல்லவே இல்ல......கல்யாணமே முடிஞ்சுடுச்சா ....பொண்ணு யாரு நண்பா......கனடா போனது இதுக்குதானா....நானும் உங்கிட்ட பலமுறை கேட்டேன்...எதாவது சூப்பர் பிகரா இருந்தா எனக்கும் சொல்லுனு..........ஆனா கண்டுக்கவே இல்ல.. இப்போ நீ தள்ளிட்டே வந்திட்ட" என புலம்பினான்.**

**உடனே வெற்றி சத்தமாக சிரித்தவன் "அடபாவி ஒரு நிமிஷம் நானே பயந்துட்டேன்.டேய் நான் எங்கடா கல்யாணம் பண்ணேன்...நல்லவேளை நம்ம விருமாண்டி இல்லை....அவன் மட்டும் கேட்ருந்தான் நான் அவ்ளோதான்.... அதும் பாப்புக்கு தெரிஞ்சது" என பயந்தவன் போல் சொன்னவன்....**

**"இல்லடா விபீஷ் இது சுரேந்தர் சார் அவர் தங்கைக்காக வாங்கியது.நேத்து பார்ட்டிக்கு போறேன்னு சொல்லிட்டு என்கிட்ட கொடுத்திட்டு போய்ட்டார்....இப்போ கொண்டு போய் கொடுக்கணும்.....அது தெரியாம ....ஏண்டா......முதல்ல போய் ப்ரஷ்**

**பண்ணிட்டு வா ....அச்சோ காபி என்னாச்சுனு தெரியலே" என அவன் உள்ளே ஓடினான்.**

**"ஹப்பா ....அதான பார்த்தேன் நாங்க மட்டும் லோக்கல் பிகற கட்டி லோல்படுவோம்...இவரு மட்டும் கனடா பிகர கரெக்ட் பண்ணி கும்மி அடிப்பாரோ  விட்ருவமா என்ன" என சொல்லி கொண்டே அவன் பாத்ரூம் செல்ல**

**நல்ல எண்ணம்டா உனக்கு....நீ சொன்னாலும் சொல்லாட்டியும் நமக்கு எப்போது நம்ம ஊர் பொண்ணுதான் ஒத்து வரும்.நீ கவலைபடாம போ "என சிரித்து கொண்டே சொன்னான் வெற்றி.**

**"ஹஹஹா இல்ல நண்பா.......சும்மா சொன்னேன்.......உன்னோட நல்ல மனசுக்கு நீ விரும்புன பொண்ணே அமையும் பாரு" என சொல்ல**

**"எப்படி சொல்ற....அனுபவம் பேசுதோ " என வெற்றி கேட்க**

**வெற்றி !!!!!!!!என அதிர்ந்து போய் நின்றான் விபீஷ்.**

**"போ...போ...எதுக்கு இந்த ரியாக்ஸன்.......ஆள் தான் வேற பக்கம்....கவனம் எப்பவும் V4 பில்டர்ஸ்லதான்" என்றான்.**

**"இல்லைடா அது வந்து" என விபீஷ் ஆரம்பிக்க அதற்குள் பேப்பர்காரன் வர பேச்சு தடைபட்டது.**

**பின்னர் இருவரும் பொதுபடையாக சில விஷயங்களை பேசி கொண்டே கிளம்பினர்.**

**அங்கு சுரேந்தர் இவர்களுக்காக காத்திருக்க ...அவர்கள் உள்ளே நுழைந்ததும் "வெற்றி உனக்கு நானே போன் பண்ணனும்னு நினச்சேன்.....நான் அவசரமா இப்போ லண்டன் போகணும்......ரொம்ப முக்கியமான மீட்டிங் இருக்கு......நான் இப்போ கிளம்பிட்டேன்....எனக்கு ஒரு ஹெல்ப் பண்றியா" என கேட்டு கொண்டே திரும்பியவன்**

**"ஹே விபீஷ் எப்ப வந்த"...உள்ள வா மேன்.......உன்ன பத்தி வெற்றி சொல்லி சொல்லி நான் உன் ரசிகனா மாறிட்டேன்,அமலாபால் இருந்து கத்திரினா  கைப் வர உன்னோட டூயட் எல்லாம் சொல்லிருக்கான் வெற்றி......ஐ லைக் இட் மேன்"  என சொல்ல**

ஒரு முறை மட்டுமே அவனிடம் பேசிய விபீஷ் அவரது இந்த உரிமையான அழைப்பு மனதிற்கு மகிழ்ச்சியை கொடுத்தது.

“இன்னைக்குதான் வந்தேன் சார்......எப்படி இருக்கீங்க....ஹிஹிஹி என் புகழ் பரப்பரதுல என நண்பனுக்கு அப்படி ஒரு சந்தோஷம்  சார்” என பல்லை  கடித்து கொண்டு வெற்றியே முறைத்தவாரே அவன்  சொல்ல

“நோ விபீஷ்.....உங்களை எனக்கு ரொம்ப பிடிச்சு போச்சு    ....நீங்க என்னை சுரேந்தர்னே கூப்பிட்லாம்....கொஞ்ச வயசு வித்தியாசம்தான் நமுக்குள்ள ...அதுனால என் பேர் சொல்லி கூப்பிடுங்க’ என்றார் சுரேந்தர்.

“ஓகே பாஸ்...நாங்களே எப்பாவாவது தான் இப்படி மரியாதையா கூப்பிடுவோம்...அத நீங்களே வேண்டாம்னு சொல்லும்போது விட்ருவமா என்ன.....ஓகே பாஸ்....”என அவன் சிரித்து கொண்டே சொல்ல

“ஓகே விபீஷ் என சிரித்து கொண்டே சொன்னவன்  ...ம்ம்ம்...வெற்றி அப்புறம் இந்த டிரஸ் எல்லாம் என் தங்கைகிட்ட கொடுத்திடனும்.......அவ ஆசைப்பட்டு கேட்டது........நான் போன்ல விபரம் சொல்லிட்டேன்.......அவளால  இப்போ வரமுடியாதாம்......அதுநாள நீங்க கொண்டு போய் கொடுத்தரிங்களா” என கேட்டான்.

“இல்ல சுரேன் அந்து வந்து” என வெற்றி இழுக்க

“நோ ப்ராப்லம் பாஸ்....நாங்க கொடுத்திடறோம்....நீங்க கிளம்புங்க” என விபீஷ் வேகமாக சொன்னான்.

அதற்குள் சுரேனுக்கு போன் வர பேசிகொண்டே அவர்களிடம் விடைபெற்று கொண்டான்.

அவன் சிறிது தூரம் சென்ற பின்பே ......”டேய் அந்த பொண்ணு  பேர் என்ன...எந்த காலேஜ் ஏதும் கேட்கல” என வெற்றி சொல்ல

“உனக்கு தெரியாதா.....என்னடா கூடவே இருக்க ....உனக்கு தெரியும்னு நினைச்சுதான் நானும் ஏதும் கேட்கல” என்றான் விபீஷ்.

“கிழிஞ்சுது போ...அவருக்கு தங்கை இருக்கற விபரமே எனக்கு நேத்து தான் தெரியும்......வேற ஒன்னும் தெரியாதுடா” என வெற்றி புலம்ப

சரி அவர்க்கு போன போடு என சொல்லிவிட்டு அவனை தொடர்பு கொள்ள அது பிசி பிசி என்றே வந்தது. ....

“என்னடா பன்றது ....எல்லாம் உன்னால ....நான் மாட்டேனு சொல்றதுக்குள்ள குறுக்க பேசி குழப்பி விட்டுட்ட” என கடுப்பை விபீஷ் மேல் காட்டினான் வெற்றி.

அதற்குள் விபீஷ் எண்ணிற்கு சுரேந்தரிடம் இருந்து அழைப்பு வர என்ன விபீஷ் என கேட்டார் சுரேந்தர்.

“பாஸ் உங்க சிஸ்டர் பேர்,எந்த காலேஜ் ஏதும் சொல்லல” என சொன்னான் விபீஷ்.

“பேர் வெண்ணிலா .....AVR யுனிவேர்சிட்டி........ஆர்கிடேக்சர் இறுதி ஆண்டு ...பேர் சொன்னாவே போதும் அங்க எல்லாருக்கும் தெரியும் என சொன்னவர்....விபீஷ் நான் எர்போர்ட்டுகுள்ள போறேன்...இனி என் போன் எடுக்காது...சீக்கிரம் கொண்டு போய் குடுத்திடுங்க...காலேஜ் பங்சனுக்கு வேணும்னு சொன்னா” என சொல்லி முடிப்பதற்குள் இணைப்பு துண்டிக்கப்பட விபீஷும் போனை வைத்தான்.

“என்னடா என வெற்றி கேட்க விபரம் சொன்னவன் .....சீக்கிரம் கொடுக்க சொல்றார்.....”என சொல்ல

“என்ன விளையாட்றியா....நம்ம அந்த பொண்ண பார்த்ததும் இல்ல...எப்படி கண்டு பிடிக்கிறது ....அதும் இல்லாம இன்னைக்கு அஸ்திவாரம் பறிக்கிறாங்க...சைட்ல வேலை இருக்கு என்ன பண்றது” என வெற்றி யோசித்தான்.

“வெற்றி ஏன் புலம்பற...அதான் வெண்ணிலா...ஆர்க் பைனல் இயர்னு சொல்லிர்காருள்ள ....போய் சொன்னா உடனே வந்திடபோறாங்க...கொடுத்திட்டு சீக்கிரம் வந்திடலாம்” என அவனை சமாதானபடுத்தி கிளப்பிக்கொண்டு வந்தான் விபீஷ்...

DO NOT COPY

**இருவரும் காலேஜ் அருகில் வரும்போதே ஒரு மாணவன் ஓடிவர இரண்டு பெண்கள் அவனை துரத்தி கொண்டு வர அவன் நேராக இவர்களது வண்டின் முன்னே வந்து விழுந்தான் அவன்..**

**“ஏய்…ஏய் …யாருப்பா நீ…….நீ விழறதுக்கு எங்க பைக் தான் கிடைச்சுதா…..”என வெற்றி பதற**

**“என்னடா இது…ஆரத்தி எடுக்கிரவன் மாதிரி …நேரா ஒருத்தன் பைக்மேல வந்து விழறான்……என சொல்லி கொண்டே இறங்கியவன் …டேய் தம்பி இங்க வா…எதுக்கு இப்படி ஓடி வர” என விபீஷ் அவனை எழுப்பி கேட்டான்.**

**“இல்ல சார்…அது வந்து” என அவன் நடுங்க**

**“விபீஷ்…நம்ம வந்த வேலைய முடிப்போம் வா” என வெற்றி அவசரப்பட…**

**“இருடா அதான் கேட்டுட்டு இருக்கேன்…சரி நீ சொல்ல வேண்டாம்……..ஏம்பா இங்க வெண்ணிலானு ஆர்க் பைனல் இயர் படிக்கிற பொண்ணு உனக்கு தெரியுமா” என கேட்டான்.**

**பெயரை கேட்டதும் பயத்தில் அவன் முகம் வெளிற…”ஐயோ என்னை விட்ருங்க…நான் இனி அப்படி பண்ண மாட்டேன்” என சொல்லிகொண்டே அவன் அவர்களிடம் இருந்து வேகமாக ஓட**

**“என்னடா இது பேரை கேட்ட உடனே பின்னங்கால் புடரியில படற அளவுக்கு ஓடறான்….அவ்ளோ மோசமாவ இருக்கு பேரு…நல்லாத்தான இருக்கு” என விபீஷ் வெற்றியிடம் கேட்டான்.**

**அப்போது நடந்து சென்ற ஒரு மாணவனை அழைத்து வெற்றி பேர் சொல்லி விசாரிக்க**

**அவனும் பெயரை கேட்ட உடனே பயந்து ஓடினான் .**

**“என்னடா எல்லாரும் ஓடறாங்க…அந்த பொண்ணு அவ்ளோ கொடூரமாவா இருக்கும்”…. என மறுபடியும் விபீஷ் கேட்க**

**“இல்லைடா…நம்ம சுரேந்தர் சார் எப்டின்னு உனக்கு தெரியும்ல…..ரொம்ப நல்ல மனுசர்…அப்படி ஒரு அமைதி…எந்த அலட்டலும்**

**இருக்காது.....திட்டவே மாட்டார் ....அப்போ அவரோட தங்கை எப்படி இருப்பாங்க......கண்டிப்பா அவரு மாதிரிதான் இருப்பாங்க...நீவேனாலும் பாரேன்...வேற யாரோன்னு நினைச்சுதான் இவங்க ஓடறாங்க".....என வெற்றி அவனுக்கு விளக்கம் சொன்னான்.**

**"நண்பா.....எதோ நீ சொல்ற...ஆனா இந்த பொண்ணுங்களை நம்பவே முடியாது...எப்போ எப்படி மாறுவாங்கனு சொல்ல முடியாதுப்பா" என சொல்லியப்படியே கன்னத்தில் அவன் கை வைக்க**

**"நீ ஏன்டா அடி வாங்கின மாதிரியே பேசிட்டு இருக்க...அந்த பொண்ணு கண்டிப்பா பொறுமையான குணவதியான பொண்ணாதான் இருக்கும் பாரு" என சொல்லி கொண்டே கல்லூரிக்குள் நுழைந்தனர்.**

**அங்கு சென்று கொண்டிருந்த ஒரு மாணவனை வெற்றி அழைக்க...விபீஷ் தடுத்து ஒரு மாணவியை அழைக்க**

**அந்த பெண் அவர்களிடம் வர**

**"சிஸ்டர் இங்க வெண்ணிலா ஆர்க் பைனல் இயர் படிக்கிற பொண்ண பார்க்கணும்" என்றனர்.**

**"ஒஹ்ஹ்ஹ....நீங்க காலேஜ் டான் பார்க்கணுமா" என அவள் கேட்க**

**"இல்ல..இல்ல.....நாங்க வெண்ணிலாவை பார்க்கணும்" என விபீஷ் அதை சரி செய்ய**

**அவர்களை ஒரு மாதிரி பார்த்த அந்த பெண் ...."இந்த பக்கமா போங்க...அங்க ஒரு அண்ணாச்சி கடை வரும்...அங்க பாருங்க...அங்க இருப்பாங்க" என்றாள்.**

**"என்னடா இது.....நம்ம பேரை சொன்னா இவங்க தலை பேரை சொல்றாங்க டான்னு.....ஒருவேளை......... "என விபீஷ் யோசிக்க**

**"டேய் அப்படி எல்லாம் இருக்காதுடா ... பொண்ணுங்க யாரவது காலேஜ்ல டானா இருப்பாங்கலா.....அதும் இத்தனை பசங்க படிக்கிற காலேஜ்ல ......வா போய் பார்க்கலாம் ...... ஏதோ பொண்ணு டி வடை சாப்பிட போயிருக்கும்" என சொல்லி கொண்டே அண்ணாச்சி கடையை அடைந்தனர்.**



DO NOT COPY

**அங்கு சில மாணவிகள் அமர்ந்திருக்க.....இவர்கள் சென்றதும் சிறிது நேரம் அண்ணாச்சி அவர்களை உற்று பார்க்க**

**"டேய் அப்பவும் சொன்னேன்ல.. ....பாரு அண்ணாச்சி ஒரு மாதிரி பார்க்கிறார்...நம்ம டீய குடிக்கவும் ஒரு அடிமை சிக்கிடுசுனு நினச்சு பூரிப்புல டீயே இல்லாத கிலாச ஆத்திகிட்டு இருக்கார் ....".என வெற்றி விபீஷில் காதில் முனக**

**நண்பா...காலேஜுன்னு இருந்தா அண்ணாச்சி கடை இருக்கும்...அதுல 10 பசங்க 5 பொண்ணகை இருக்கத்தான் செய்வாங்க....இதெல்லாம் காலேஜ் லா...நீ சும்மா இரு...இப்ப பாரு அண்ணாச்சிகிட்ட எப்படி டீடைல் வாங்கிறேனு என சொல்லிகொண்டே விபீஷ் அண்ணாச்சி பக்கம் திரும்ப**

**"என்ன சார் டி சாப்ட்றிங்களா....ரொம்ப நேரமா பேசிகிட்டே இருக்கீங்க....அதும் இந்த இடத்துல வந்து....காலேஜ்க்கு புதுசா" என கேட்டார்.**

**"அஹா...அண்ணாச்சி எப்படி கண்டு புடிச்சிங்க..."என விபீஷ் ஆர்வமாக கேட்க**

**"ம்ம்ம்ம்...இத்தனை வருசத்துல இந்த கடை முன்னாடி இப்படி ஆம்பலபசங்க வந்து நிக்கிறது இப்பதான்....அதும் பேசிகிட்டே போற பொண்ணுங்களை சைட் அடிச்சுட்டு இருக்கீங்க பாருங்க....கண்டிப்பா நீங்க புதுசாதான் இருக்கணும்....ஏன்னா இங்க படிக்கிற பசங்களுக்கு அந்த துணிச்சல் வராது" என சொன்னார்.**

**"ஏண்டா இப்படி பன்ற" என வெற்றி விபீஷை முறைக்க**

**"விட்ரா...விட்ரா......பெர்சனாளிட்டியான ஒரு பையன் நின்னா பொண்ணுங்க திரும்பி பார்க்கதான் செய்வாங்க...நாமும் அவங்கள பார்க்கதான் செய்வோம்,,,இந்த ஆளுக்கு வயாசிகிடுச்சு பொறமை" என அப்படியே ட்ரக் மாத்திவிட்டான் விபீஷ்.**

**"விபீஷும் வெற்றியும் இந்த விஷயத்தில் வேந்தனை விட நெருக்கம் கொஞ்சம் அதிகம்.....விபீஷ் வேந்தனிடம் பேசும்போது எப்போதும் ஒரு**



DO NOT COPY

மரியாதையை கலந்த பேச்சு இருக்கும்...ஆனால் வெற்றியிடம் ரொம்ப ப்ரீயா பேசுவான்.

அப்போது இரண்டு மாணவிகள் "ஹே டான் வராங்க...எல்லாம் ரெடியா" என கேட்க

"எல்லாம் ரெடி...அவன பிடிக்க ஜூடியும் தேனும் போயிருக்காங்க" என்றனர்.

அவங்களா...அய்யோ இரண்டு பேரும் அடாவடியாச்சே....பையன் முழுசா வந்து சேருவானா என யோசனையுடன் மது கேட்டாள்..

"என்னடா இது இங்கயும் டான் சொல்றாங்க...அது யாரா இருக்கும்" என விபீஷ் யோசனை பண்ண

"யாரோ இருந்திட்டு போகட்டும்டா ...அந்த பொண்ண கூப்பிடு...வெண்ணிலாவை பத்தி கேட்கலாம்" என சொல்லிகொண்டே.......ஒரு பெண்ணை அழைத்தவன் பெயர் சொல்லி விபரம் கேட்க ..அம மாணவி அவனை மேலும் கீழும் ஒரு மாதிரி பார்த்து கொண்டே........இப்போ வருவாங்க...இருங்க" என சொல்லி விட்டு உள்ளே சென்றாள்..

அப்போது அங்கு ஒரு பெண் வேகமாக நடந்து வர

...மச்சான் அங்க பாரு ........ ப்ளூ ஜீன் , பிங்க் டாப் போட்டுட்டு ஒரு பொண்ணு வருது பாரு...... சூப்பரா இருக்குடா......என்ன ஸ்டைல் ....என விபீஷ் வர்ணிக்க

திரும்பி பார்த்தவன் முகம் சற்று மாற " விபீஷ் இந்த பொண்ணு யாருன்னு உனக்கு தெரியலயா" என்றான்.

"இல்ல நண்பா...ஏண்டா.....உனக்கு தெரிஞ்ச பொண்ணா என்றான். இதான் வெண்ணிலாவா இருக்குமா" என கேட்க

"இல்லடா ... கண்டிப்பா வெண்ணிலாவா இருக்கமாட்டா என அழுத்தமாக சொன்னவன் ..........அது நடையிலே ஒரு திமிரு



DO NOT COPY

தெரியுது...கண்டிப்பா இருக்காது...சுரேந்தேர் சார் தங்கை அப்படி இருக்க மாட்டாங்க “ என வெற்றி சொல்லி கொண்டிருக்கும்போதே

வேகமாக நடந்து வந்த அந்த பெண் நேராக வெற்றியின் சட்டையை பிடித்தவள்...”ஏண்டா உனக்கு எவ்ளோ திமிர் இருந்தா......பொண்ணுகளோட சுடிதார் சால் பிடிச்சு இழுத்திருக்க நீ........அதும் இழுத்துகிட்டே என்ன பாட்டு பாடுன........... கொடி அசைந்ததும் காற்று வந்ததா....காற்று வந்ததும் கொடி அசைந்ததானு பாடி இருக்க......உன்னைஈஈஈஈ....பொண்ணுங்கன அவ்ளோ இலக்காரமா போச்சா ....... என அவள் கர்ஜிக்க

அவளது சிவந்த முகம் கோபத்தில் மேலும் சிவந்து செந்நிறம் கொள்ள...... நாடனமாடும் அவளது கண்களின் அழகிய கருவிழிகள் ஆத்திரத்தில் தாண்டவம் ஆட.........மெல்லிய பூங்காற்றை போன்று வெளிவரும் மூச்சு காற்று, வேகத்தில் அனலாய் அவன் மேல் பட......... அவளுது முகமும் இவனது முகமும் நேர்கோட்டில் நிற்க சில மணி துளிகள் என்றாலும் அந்த நிமிடம் இருவருக்குமே மூளை செயபாட்டை நிறுத்தி மெய்மறக்க செய்தது.

“ஏய்...ஏய் என்னது...யார் நீ “என விபீஷ் அலறிகொண்டே அவளை தள்ள முற்ச்சிக்க

வெற்றி சுதாரிப்பதற்குள்

அதற்குள் அங்கு வந்த மாணவிகள்...... “தல இவன் இல்ல...அதோ அங்க நிக்கிறான் பாருங்க அவன் ” என எதிர்புறம் இருந்தவனை கை காட்ட

சட்டென்று அதிர்ச்சியில் அவள் திரும்பி பார்க்க அங்கு அவர்கள் வண்டியின் முன்னால் விழுந்த மாணவன் நடுங்கி கொண்டே நின்றுருந்தான்.

“அறிவிருக்கா...உனக்கு...முன்னாடியே சொல்ல மாட்டியா...கடைக்கு முன்னாடி நிக்கிரானு சொன்ன உடனே நான் இவங்கன்னு நினச்சுட்டேன்”...என்றவள்

பின்னர் திரும்பி “சாரி மிஸ்டர்...ஒரு சின்ன தப்பு நடந்து போச்சு...மன்னிச்சுக்குங்க...என சொல்லிவிட்டு நேராக அவனிடம்



Do Not Copy

**சென்றவள் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அரை விட்டவள் ....ஏண்டா துணிய இழுத்தா நீ கிண்டல் பன்ற...... உன்னோட துணியை கலட்ட எங்களுக்கு எவ்ளோ நேரம் ஆகும்கிற..... பிச்சுடுவேன் ஜாக்கிரதை ....முதல் வருடம்னு விடறேன் "இதான் உனக்கு கடைசி எச்சரிக்கை...மறுபடியும் இந்த மாதிரி கம்பளைன்ட் வந்திச்சு ....இழுத்து வச்சு" என ஆரம்பிக்க**

**"அய்யோ !!!!! என அம்மாணவன் கத்த கையை வெட்டிடுவேன்....நீ எங்க வேணாலும் போய் கம்ப்ளைன்ட் கொடு...எனக்கு கவலை இல்லை" என அசால்ட்டாக சொல்லி விட்டு ஏதும் நடக்காது போல் அவள் உள்ளே சென்றாள்.**

**உள்ளே நுழைந்ததும் தல...சூப்பர்...பின்னிட்டிங்க என அனைவரும் அவளை பாராட்ட .... தல நேத்து நம்ம ரம்யாவ கிண்டல் பண்ணாங்கள அவனுகள போலீஸ் அரெஸ்ட் பண்ணிடுச்சு....... ப்ரின்சிபால் மேடம் கூப்பிட்டு பாராட்னாங்க.....நீங்க லேபுக்கு போய்ட்டிங்க ....உங்ககிட்டயும் சொல்ல சொன்னாங்க......அதான் இன்னைக்கு எல்லா கேர்ள்ஸ்ம் வந்து இருக்காங்க.......எல்லாரும் சேர்ந்து நம்ம தலக்கு ஓஓஓஓ போடுங்க என சொல்ல**

**ஓஓஓஓஓஓஓ என சத்தம் வர**

**ஓகே ...ஓகே ...அண்ணாச்சி ஸ்டார்ட் மியூசிக் கோரசாக குரல் எழும்ப**

**உடனே ப்ளேயரில் இது அம்பானி பரம்பரை
அஞ்சாறு தலமுறை
ஆனந்தம் வளர்பிறைதான் பாடல ஆரம்பித்ததும் அங்கு ஒரே சந்தோஷ குரல்கள் மட்டுமே ஒழித்து கொண்டிருந்தது.**

**அந்த பெண் சட்டை பிடித்ததும் கோபத்தில் கையை ஓங்க நினைத்தவன்,அதற்குள் அவள் தவறை உணர்ந்து தடுமாறி மன்னிப்பு கேட்க ,கோபத்தில் அவன் திட்ட ஆரம்பிக்க அதற்குள் அவள் அந்த இடத்தை விட்டு நகர்ந்து விட ...வேகமாக அவளை நோக்கி நகர**



DO NOT COPY

அவனை தடுத்த விபீஷ்..."வேண்டாம் வெற்றி...இது காலேஜ்......ஏதாவது பிரச்சனைனா அது ஸ்டுடென்ஸ் பிரச்சனை ஆகிடும்...தனியா கவனிச்சுகலாம்" என சொன்னான்..

கோபத்தில் கண்கள் சிவக்க,கை நரம்புகள் முறுக்கேற ,அவளை பார்த்து கொண்டே நின்றவன்,சிறிது யோசனைக்கு பிறகு ,"அவள் பெயர் விலாசம் விசாரித்து வைய்...முதல்ல இந்த வெண்ணிலாவை பாரு...இந்த  பொண்ணுனால வந்த பிரச்சனை இத்தனையும்" என ஆத்திரமாக  சொல்லி கொண்டே அருகில் இருக்கும் சேரில் அமர

"ரிலாக்ஸ்டா...கேட்டு வந்தறேன்...முதல்ல நீ டி சாப்பிடு...."என அண்ணாச்சியிடம் டீ சொன்னான்.

"டீ கொண்டு வந்த அண்ணாச்சி தம்பி..தப்பா எடுத்துகாதிங்க...ஆள் தெரியாம அந்த பொண்ணு உங்களை திட்டிடுச்சு" என சொல்ல

ஏற்கனவே கோபத்தில் இருந்த வெற்றி அண்ணாச்சி சொன்னதும் மேலும் டென்சன் ஆக

"யாரு அண்ணாச்சி இந்த பொண்ணு...சுத்த ரவுடி பொண்ணா இருக்கு......இதை எல்லாம் வீட்ல வச்சு வளர்த்தாங்களா...இல்ல....காட்டுல வச்சு வளர்த்தாங்களா ......பார்கறதுக்கு பக்கவா இருக்கா...ஆனா கேரக்டர் சொர்ணாக்கா மாதிரி இருக்கு...ஹப்பா சாமி......"என விபீஷ் ஆத்திரப்பட

"அப்படி எல்லாம் இல்ல தம்பி...ரொம்ப நல்ல பொண்ணு அது."....என்றார்.

வெற்றிக்கு மட்டும் நெற்றி கண் இருந்தால் அண்ணாச்சி எரிந்திருப்பார் அப்படியே அவரேயே முறைத்தவன்

உடனே அண்ணாச்சியும் "புரியுது தம்பி......அதுக்கு கொஞ்சம் வேகம் ஜாஸ்தி அதான்"....என்றவர்

அதற்குள் ஒரு மாணவி "அண்ணாச்சி எங்க மெடீரியல்ஸ் எல்லாம் எங்க இருக்கு காணோம்" என கேட்டனர்.

"அது அந்த இடத்துல இருக்கு" என அவர் கைகாட்ட



DO NOT COPY

**“என்ன அண்ணாச்சி மேக்கப் சாமன்களா...இந்த பொண்ணுங்க மூச்சு விட மறந்தாலும் மறப்பாங்க..மேக்கப் போட மறக்க மாட்டாங்களே “ என சொல்லி கொண்ட விபீஷ் திரும்ப**

**அங்கு ஒவொவொரு மாணவி கைகளிலும் ஹாக்கி பேட் இருந்தது.**

**“ஹே சல்மா என் பேட் சரி இல்லைடி...நேத்து நெற்றியில் ஒருத்தன அடிச்சேன்...ரத்தமே வரல...மாத்தனும்” என மது சொல்ல**

**“அப்படியா...என்னது எல்லாம் ஒரே அடில கால் எலும்பு முறிஞ்சுடுசுல” என்றாள்.**

**உடனே விபீஷ் “நண்பா......நம்ம எதாவது தீவிரவாதி கூடாரத்துல வந்து மாட்டிகிட்டமா...எங்க பார்த்தாலும் அடிதடினே பேசறாங்க...என்னடா நடக்குது இங்க.......என்ன அண்ணாச்சி நீங்க தான் ஆயுத சப்ளையா..ஐயோ டேய் வெற்றி வாடாபோய்டலாம்” என அவன் அலறினான்.**

**“அச்சோ இல்ல தம்பி...நீங்க ஏன் புரளிய கிளப்பி விட்ரிங்க....எல்லாம் இந்த கார்த்தி பிள்ளையாள வந்தது” என அவர் சலித்து கொண்டே சொன்னார்.**

**“கார்த்தியா அது யாரு...ஆணா பொண்ணா” என புத்திசளிதனமாக ஒரு கேள்வி விபீஷ் கேட்க**

**அவனை முறைத்த அண்ணாச்சி...”தம்பி இது மட்டு அந்த பொண்ணுக்கு தெரிஞ்சுது அவ்ளோதான்” என்றார்.**

**“ஏன் அண்ணாச்சி உடனே அருவாள எடுத்துடுவாங்களா” என கேட்க**

**“அப்படி எடுத்தாதான் பரவாயில்லியே பேசியே கொன்னுடுவாங்க... காதுல ரத்தம் வர வர பேசுவாங்க...அத பார்த்தே எத்தன பேர் பயந்து ஓடிருக்காங்க தெரியுமா” என அவர்**

**“ம்ம்ம்ம்......அப்படியா...ரொம்ப இண்டரெஸ்ட்டிங்கா இருக்கே” என அவன் ஆவலோடு கேட்க**

**“டேய்!!!!! என வெற்றி அவனை முறைக்க**



DO NOT COPY

“இரு நண்பா ஒரு நியூ கேரக்டர் என்ட்ரி ஆகுது...விசாரிக்கலாம்...பின்னாடி நமக்கு யூஸ் ஆகும்ல என அவனை அடக்கி விட்டு ...நீங்க சொல்லுங்க அண்ணாச்சி” என கதை கேட்க தயாரானான்.

அது ஒன்னும் இல்ல தம்பி...அந்த பொண்ணுக ஒரு அஞ்சு பேரு அறுந்த வாலூங்க...எப்பவும் நம்ம கடைக்கு வந்துதான் எதா இருந்தாலும் பேசுங்க.....அதுனால பசங்களும் இங்க அதிகம் வருவாங்க.....அப்படி ஒரு சமயத்துல ஒரு பையன் ஒரு பொண்ண கிண்டல் பண்ண இவங்க எல்லாரும் சேர்ந்து அந்த பையன ஒரு வழி பண்ணிட்டாங்க...அதுல இருந்து இந்த க்ரூப்னா பசங்க கொஞ்சம் பயபடுவாங்க...அப்புறம் கொஞ்சம் கொஞ்சமா மாறி பொண்ணுங்களுக்கு எதாவது பிரச்சனைய்னா உடனே இவங்ககிட்ட வந்து சொன்னா போதும்... அதுக்குனு ஒரு சங்கம் இருக்கு......அதுல இருக்க எல்லா பொண்ணுங்களும் ரொம்ப தைரியமான பொண்ணுங்க ..... அவங்க கிட்ட அவன் மாட்னான் அவ்ளோதான்.... பிரச்சனை பண்ணுனவன் அடுத்த நாள் காலேஜ் லீவுன்னு நம்மலே முடிவு பண்ணிக்கலாம்...கார்த்தி போனதுக்கப்ரம் இந்த பொண்னுக்கு அந்த பொறுப்பு கொடுத்திட்டு போய்டுச்சு...அதாவது பரவயில்லை...வாயால பேசி மிரட்டி தான் பசங்கள ஓட வைப்பாங்க...ஆனா இந்த கும்பல் இருக்கே எதாவது பிரச்சனைனா உடனே ஹாக்கி பேட் தான்...இதோட எத்தன பேட் ஒடஞ்சிடுச்சு தெரியுமா “என அவர் ஒரு பெரிய கதை சொல்ல

...”என்னது இது...நண்பா...நம்ம தப்பிச்சுட்டோம்...தப்பி தவறி இந்த காலேஜ் வந்திருந்தோம் அவ்ளோதான்”......என விபீஷ் பீதியுடன் சொல்ல

“இல்லடா....இங்க இருக்க பொண்ணுங்களுக்கு கொழுப்பு கொஞ்சம் ஜாஸ்தி....ஏன் அண்ணாச்சி இவங்க வீட்ல எல்லாம் கேட்கவே மாட்டாங்களா” என வெற்றி கோபமாக கேட்டான்.

“நீங்க தப்பா நினச்சுகிட்டிங்க தம்பி....இந்த பொண்ணுங்க வம்பு சண்டைக்கு போகமாட்டாங்க...வந்த சண்டையா விடமாட்டங்க ....மத்தபடி ரொம்ப நல்ல பொண்ணுங்க” என்றார்.

**அதற்குள் வெற்றிக்கு சைட்டில் இருந்து அழைப்பு வர ...”இதோ இப்ப வந்திடறேன்” என்றவன்**

**“விபீஷ் எனக்கு நேரமாச்சு...நீ இருந்து விசாரிச்சு  கொடுத்திட்டு வா ...நான் கிளம்பறேன்” என கிளம்பினான்.**

**“ஐயோ நண்பா...என்ன இது என்ன தனியா விட்டுட்டு போறியா......நான் வேற எங்க வீட்டுக்கு ஒரே பையன்.....எதாவது சேதாரம் ஆச்சுனா அவ்ளோதான்...இந்த வேலை எல்லாம் நமக்கு வேண்டாம்........எதா இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து வந்தே பார்த்துக்கலாம் .... ...கிளம்பு “என அவனை இழுத்து கொண்டு நடந்தவன் .....**

**“காலேஜுக்குள்ள  வந்த உணர்வே இல்லைடா...எதோ ப்ருஸிலீ படம் பார்த்து வந்த பீலிங் வருது......என்னடா பொண்ணுங்க இதுங்க...ரொம்ப கஷ்டம்” என புலம்பிபடியே வந்தான்.**

**மறுபடியும் மாலை கல்லூரிக்குள்  செல்ல இப்போது நேராக பிரின்சிபால் அறைக்கே சென்றனர்.அங்கு விபரம் சொல்லி வெண்ணிலாவை பார்க்க வேண்டும் என்று சொல்ல**

**அவரும் வெண்ணிலாவை அழைக்க**

**அப்போது ஒரு பெண் அவர்களை நோக்கி வர அதிர்ந்து போய் நின்றனர் இருவரும்.**

**காற்றை கைகளால் தடுத்து நிறுத்த முடியுமா?**

**கடல் அலைகளை  கணக்கிடதான் முடியுமா?**

**காட்டுக்குள் சுற்றும்  வண்ணத்து பூச்சி**

**கட்டுபாடு இன்றி பறப்பது போல்**

**நட்புக்கு எல்லை கிடையாது.**

**பணம்,குணம்,நிறம் பார்த்து வருவதல்ல நட்பு**

**உரிமையுடன் உன்னுடன் சண்டையிடும்**

அதே சமயத்தில் உன் உரிமைக்காக

தன் உயிரையும் கொடுக்கும்.

ஆயிரம் உறவுகள் இருந்தாலும்

தோழனின்  கை தோல் மீது இருந்தால்

தொட்டு விடும் தூரம் தான் வானமும்!!!!!!!!!!!

அத்தியாயம்  -20

முதல்வர் அறையை நோக்கி அந்த பெண் வர ....”வெற்றி விடாது கருப்பு போல இந்த பொண்ணு நம்மலே தொடருதுடா......நண்பா நல்லவேளை நான் டீசர்ட் போட்ருக்கேன்.....இல்லினா சட்டை காலர பிடிச்சு இழுக்கும்ல”...என அவன் மிரண்டு பொய் சொல்ல

அந்த பெண்ணை பார்த்ததும் மீண்டும் வெற்றிக்கு கோபம் தலைக்கு ஏற ..”.இருடா வரேன் “என வேகமாக அவன் எழுந்தரிக்க

அதற்குள் ஒரு ஆசிரியர் அந்த பெண்ணை நிறுத்தி பேசி கொண்டிருந்தார்.

“டேய் வெற்றி இது காலேஜ் கேம்பஸ்....இங்க ஏதும் பேசாத...அதுவும் இல்லாம நம்ம வெண்ணிலாவ பார்க்க வந்திருக்கோம்.....இதுனால அவங்களுக்கு ஏதாவது பிரச்சனை ஆகிடபோகுது.....நைட்டுக்குள்ள உனக்கு இந்த பொண்ண பத்தின டீடைல்ஸ் நான் தரேன்......எதா இருந்தாலும் ப்ளான் பண்ணி செய்யணும்...என்ன” என அவனை விபீஷ் அடக்கினான்.

பிரின்சிபால் இவர்களை காத்திருக்க சொல்லிவிட்டு அவசர வேலையாக வெளியே சென்றதால் இருவர் மட்டுமே உள்ளே இருந்தனர்.



DO NOT COPY

வேகமாக உள்ளே வந்த அந்த பெண்....சுற்றும் முற்றும் பார்க்க

வரவேற்பறையில் விபீஷும் வெற்றியும் அமர்ந்திருப்பதை பார்த்தவள்...."சார் நீங்க எங்க இங்க... ப்ரின்சிய பார்க்க வந்திங்களா ...........எதவது உதவி வேணுமா" என சிரித்த படியே வர

அவளை பார்த்தது கொஞ்சம் அரண்ட விபீஷ் அவள் சிரித்து கொண்டே வந்ததும் சற்று நிதானம் அடைந்து... "என்ன நீங்க உதவி செய்யரிங்களா.....சட்டென்று சட்டை காலரை பிடித்து கொண்டவன் ...இல்ல...இல்ல...நாங்களே பார்த்துக்கிறோம்"..... என சொல்ல

அவள் வெற்றியை பார்த்து "சாரி சார்....காலையில தெரியாம நடந்திடுச்சு... எப்பவும் இப்படி நடக்காது...........தப்ப எடுத்துகாதிங்க......எனக்கே ரொம்ப கஷ்டமா போச்சு...அதுக்கப்றம் உங்களை தேடுனேன் காணோம் "என்றாள்.

"யாருருருரு ....நீ.......எங்கள தேடுன...அது எப்படி...பண்றது எல்லாம் பண்ணிட்டு எதுவுமே தெரியாத மாதிரி பேசற....ஏண்டி எங்கள பார்த்தா உனக்கு இழிச்சவாய்னு எழுதி ஒட்டிருக்குதா....அன்னைக்கு ஹோட்டல்ளையும் அப்படிதான் பண்ண...இப்ப காலையிலயும் சட்டைய பிடிச்சு இழுக்குற...என்ன பெரிய ரௌடியா நீ......இந்த வேலை எல்லாம் இங்க வச்சுகாத...பிச்சுடுவேன் ஜாக்கிரதை....பொம்பளை பிள்ளையாச்சேனு பார்க்கிறேன்......ஆள பாரு ...மூஞ்சிய பாரு....மன்னிப்பு கேட்கிறாளாம்" என வெற்றி தனது ஆக்ரோஷம்,கோபம் முழுவதையும் வார்த்தையில் கொண்டு வந்து கொட்டி தீர்த்தான்.

இதை சற்றும் எதிர்பார்க்காத அந்த பெண் அதிர்ச்சியில் உறைந்து போய் நிற்க

விபீஷோ வாய் பிளந்து நின்றான்.அவன் நினைக்கவே இல்லை வெற்றி இப்படி பேசுவான் என்று...அப்படியே சிலையாக நின்றான்.

"என்ன...தேடி...தேடி வம்புக்கு வறியா" என வெற்றி மீண்டும் ஆரம்பிக்க

"டேய்...யாருடா நீ.... நீ தான் மரியாதை இல்லாம பேசுவியா...நாங்களும் பேசுவோம்..........சும்மா சவுண்ட் விடற.....எதோ தெரியாம ஒரு தவறு நடந்திடுச்சு...அதுக்கு மன்னிப்பு கேட்டா...என்னமோ டயலாக் எல்லாம்

**பேசறா…ஆமாண்டா நான் ரவுடி தான்…பார்த்துகலமா…நீயா நானான்னு" என அந்த பெண்ணும் இறங்கி கண்ணா பின்னாவென்று பேச ஆரம்பிக்க**

**அதற்குள் விபீஷ் நிலைமை எல்லை மீறுவதை உணர்ந்தவன்…."வெற்றி கொஞ்சம் அமைதியா இரு என அவனிடம் சொல்லிவிட்டு….இங்க பாருமா நாங்க பிரின்சிபால் பார்க்க  வந்திருக்கோம்…நீ தான் இங்க வந்து பிரச்சனை பன்ற" என பேசி கொண்டிருக்கும் போதே**

**"ஹே வெண்ணிலா வந்திட்டியா……உன்னதான் கேட்டு வந்தாங்க இவங்க…..சார் நீங்க கேட்ட வெண்ணிலா இந்த பொண்ணுதான்" என சொல்ல**

**கேட்ட விபீஷும் வெற்றியும் அதிர்ச்சியில் அப்படியே நின்றனர்.**

**வெண்ணிலாவோ…."இவங்க எதுக்கு என்ன கேட்டு வராங்க மேடம்" என அவர்களை பார்த்து முறைத்து கொண்டே கேட்க**

**"ஏதோ உங்க அண்ணா டிரஸ் மெட்டேரியால் கொடுத்து அனுப்பிருகாறாம்" என சொல்ல**

**"ஆமா அது அண்ணாவோட friendsகிட்டதான கொடுத்து விடறேன்னு சொன்னாங்க" என சொல்லிய படியே அவர்களை பார்த்தவள் …நாக்கை கடித்தவள்…..அப்போ நீங்க என இழுக்க**

**அவர்கள் அமைதியாக நிற்பதை பார்த்த ப்ரின்சி …."மிஸ்டர் நீங்க இவங்கள தேடிதான வந்திங்க….அப்புறம் ஏன் அப்படியே நிக்கிறிங்க…கொடுத்திட்டு கிளம்புங்க …எனக்கு வேலை இருக்கு" என சொல்லி விட்டு மறுபடியும் வெளியே சென்றார்.**

**முதலில் நிதானத்திற்கு வந்த விபீஷ் வெற்றியின் காதருகே …"வெற்றி இதான் சுரேந்தர் தங்கை ….நம்ம பேசாம டிரஸ் கொடுத்திட்டு கிளம்பிடலாம்…ஏன்னா ஒரு  கோடி ப்ராஜெக்ட் நம்மள நம்பி கொடுத்திருக்காங்க…இதுனால அதுல ஏதாவது பிரச்சனை ஆகிடபோகுது "என சொல்ல**

**"இல்லடா அது வந்து" என வெற்றி ஆரம்பிக்க**

**விபீஷ் அவன் கையை அழுத்த**

**வெற்றியும் கோபம் சற்று குறையாமல் இருக்க ....விபீஷின் கையில் அந்த பையை கொடுத்து விட்டு வேகமாக வெளியேறினான்.**

**விபீஷ் அந்த பையை அவளிடம் நீட்ட......"அச்சோ சாரி....நீங்க அண்ணாவோட நண்பர்கள்னு தெரியாம ஏதோ ஏதோ பேசிட்டேன்...தப்ப எடுத்துகாதிங்க ஸாரி ..... ....ஸாரி "என கேட்க**

**அவளது கோபமும் சட்டென்று அந்த மனநிலை மாறி உடனே சமாதனம் ஆவதும் விபீஷுக்கு பிடித்து விட அவனும் சிரித்து கொண்டே "பரவயில்லை வெண்ணிலா ....நீங்க இதுல எல்லாம் சரியா இருக்கானு பார்த்துக்குங்க "என்றான்.**

**எல்லாம் சரி பார்த்தவள் ..."எல்லாமே இருக்கு...நான் அண்ணாகிட்ட பேசிக்கிறேன்....நீங்க தான் மால் கட்ற V4 BUILDERSAA" என கேட்க**

**"ஆமாம்" என்று தலை ஆட்டினான் விபீஷ்...**

**"அப்போ அவர்" என வெண்ணிலா கேட்க**

**"எவர்" என புருவத்தை உயர்த்தி விபீஷ் கேட்க**

**அவள் சிரித்து கொண்டே "நக்கீரனுக்கு பக்கத்து வீட்டுக்காரன் மாதிரி ஒருத்தர் போயிட்டு இருக்காரே அவரே கேட்டேன்" என வெற்றியை பார்த்து கொண்டே கேட்டாள்.**

**"நாங்க எல்லாம் பார்ட்னர் தான் ...பெயர் வெற்றி" என சொன்னவன் அதற்குள் வெற்றியிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வர**

**"சரிங்க வெண்ணிலா...நான் கிளம்பறேன்.....நீங்க உங்க அண்ணாகிட்ட பேசிக்குங்க" என சொல்லிவிட்டு நகர்ந்தான்.**

**வெளியே தனது ஆத்திரத்தை விரல்களில் கட்டியபடி விரலல்களை சக்கரம் போல் சுழற்றி கொண்டிருந்தான் வெற்றி.**

**வெளியே வந்ததும் அவனை பார்த்தவள் மனதில் ஒரு இனம் புரியாத சந்தோஷ உணர்வு பொங்க.....காலையில் இருந்து புரியாமல் மனதில்**



DO NOT COPY

குடைந்த பல கேள்விகளுக்கு இப்போது விடை கிடைக்க அப்படியே நகர்ந்தவள் அவளை அறியாமேலேய் இந்த பாட்டை முனுமுனுத்தாள்.

பூவுக்கெல்லாம் சிறகு முளைத்தது எந்தன் தோட்டத்தில்
விண்மீன் எல்லாம் நிலவாய் போனது எந்தன் வானத்தில்
முப்பது நாளும் முகூர்த்தமானது எந்தன் மாதத்தில்
முள்ளில் கூட தேன் துளி கசிந்தது எந்தன் ராகத்தில்
இது எப்படி எப்படி நியாயம்
எல்லாம் காதல் செய்த மாயம்
இது எப்படி எப்படி நியாயம்
எல்லாம் காதல் செய்த மாயம்

அதற்குள் தோழி ரம்யா அவளை தேடி அங்கு வர கண்களில் காதல் மயக்கத்துடன் அவள் தோளை சுற்றியபடி

ஒற்றை பார்வை உயிரை குடித்தது
கற்றை குழல் கைது செய்தது
மோதும் ஆடை முத்தமிட்டது
ரத்தம் எல்லாம் சுட்டு விட்டது
I love you... love you... சொல்லத்தானே
ஐயோ என்னால் முடியவில்லை

என பாட

"நிலா ...என்னாச்சு....நல்லத்தான இருந்த.......ப்ரின்சி கூப்பிட்ராங்கனு போன ....இப்போ இப்டி வந்து நிக்கிறியே .... ஏதாவது காத்து கருப்பு அடிச்சுடுச்சா ...........மாரியாத்தா கோயிலுக்கு கூட்டிட்டு போய் மந்தரிகனுமோ " என புலம்ப

"ஹஹஹஹா என சிரித்தவள் கத்து கருப்பு இல்லடி ...காதல் கருப்பு பத்திகிச்சு" என கண்ணடித்துகொன்டே சொல்ல

"எனதூஊஊஉ ....என இழுத்தவள் எப்போ இருந்து இது "என அவள் கேட்க

உன் விழியும் என் விழியும் சந்தித்தால்

உன்னை வெல்லும் மனம் துள்ளும் இன்பத்தால்

இளமை பொங்கும் உடலும் மனமும்
என்றும் உனதாக

என நிலா கண்களை படபடவென அசைத்து கொண்டே பாட

"ஆஹா.....காலைய்லே தெரியாத்தனமா எப்எம் போட்டு உன் தூக்கத்தை கெடுத்துட்டேன்...அதுக்கு இவ்ளோ பெரிய தண்டனையா...கொஞ்சம் ஊளைஇடறத நிறுத்தரியா" என கெஞ்சினாள் ரம்யா .

"அச்சோ ரம்யா அதெல்லாம் உனக்கு தெரியாது.......இப்போ நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன்.....என அவள் கையை பிடித்து சுற்றியவள் சட்டென்று நின்றவள் சரி ...சரி........இப்பதான் ஆரம்பிச்ருகேன்.....இன்னும் எனக்கு ஏகப்பட்ட வேலை இருக்கு......நான் வரேன்" என சொல்லிவிட்டு அலைபேசியில அவள் அண்ணனை அழைத்து பேசிகொண்டே நடந்தாள்.

இங்கு வெளியில் டென்சனாக நின்று கொண்டிருந்த வெற்றின் அருகில் வந்தவன்,"நண்பா சூப்பர் பொண்ணுடா.......அண்ணன் பிரிண்ட்ஸ்னு சொன்ன உடனே எவ்ளோ மரியாதையா பேசுச்சு தெரியுமா" என சொன்னவன்

வெற்றி அதை கண்டு கொள்ளாமல் வேறு பக்கம் பார்த்து கொண்டிருக்க

எதோ நிலைமை சரியில்லை என்பதை உணர்ந்த விபீஷ் வெற்றின் தோளை தொட்டு "என்ன வெற்றி.......ரொம்ப கோபமா இருக்கியா....அந்த பொண்ணா பார்த்த அப்படி அடாவடின்னு சொல்ல முடியாதூஊஊஊஊ" என இழுத்தவன்

வெற்றி அவனை பார்த்து முறைக்க



DO NOT COPY

**“இல்ல அடாவடிதான்....ஆனா அந்த ஒரு கோடிய நினைச்சு பாரு”......என சொல்ல**

**“லூசு மாதிரி உலராதடா.......பணத்துக்காக நம்ம தன்மானத்தை அடமானம் வைக்க முடியுமா?” என்றான்.**

**“டேய் நீ ஏன்டா இந்த அளவுக்கு யோசிக்கிற....அதான் அந்த பொண்ணு அப்பவே சாரி கேட்டுதுல....நீயும் ப்ரின்சி ரூம்ல கண்டபடி பேசிட்டில ...அப்புறம் என்னடா......ம்ம்ம்ம்.....ஆமா நீ என்ன அப்ப ஹோட்டல்லனு ஒரு வார்த்தை சொன்ன ...ஏற்கனவே மீட் பண்ணிருகிங்கிளா” என்றான்.**

**“விபீஷ் இன்னும் உனக்கு தெரியலயா......நான் கனடா போறதுக்கு முன்னாடி ஹோட்டெல ஒரு பொண்ணோட பிரச்சனை ஆச்சே....அந்த பொண்ணுதான் இது ....எனக்கு நல்ல நியாபகம் இருக்கு” என சொன்னான்.**

**“அப்டியா....எனக்கு நியாபகம் இல்லயே.......நிறிய பேர் இருந்தாங்களா ....எனக்கு தெரியலடா......ஆமா அந்த பொண்ணே அத மறந்திடுச்சு.....நானும் மறந்திட்டேன்.........நீ இன்னும் நியாபகம் வச்சுக்கிட்டு இருக்கியா” என்றான்.**

**“ஏண்டா.....மறக்க கூடிய நிகழ்ச்சியா அது......நம்மாலேயே கேனயன் ஆக்கிட்டாலா ....இப்பவும் இப்படி பண்ணிட்டா....அவளோட முகம் நான் மறக்கணும்னு நினச்சாலும் முடியலடா......கனடா போன போதும் இவ நினைப்பு தான்” என அவன் கோபத்தில் சொல்லி கொண்டே போக**

**“நண்பா.......நீ சொல்ற விஷயத்துக்கும் நீ காட்ற எக்ஸ்ப்ரசனுக்கும் சம்பந்தம் இல்லாம இருக்கே ....ம்ம்ம்ம்....இப்போ இத பத்தி பேசவேண்டாம்.....நைட் பேசிக்கலாம்....இப்போ நேர அண்ணாச்சி கடைக்கு போய் “என ஆரம்பிக்க**

**வெற்றி பார்த்த பார்வையில் “இல்ல மச்சி ஆரியபவன் ஹோட்டல்ல போய் சாப்பிட்டு அப்புறம் போலாம்னு சொன்னேன்” என அவனை இழுத்து கொண்டு கிளம்பினான்.**

அப்போது வீட்டிற்கு சென்ற இருவரும் எதுவும் பேசாமல் அமைதியாக படுக்க விபீஷின் அலைபேசி ஒலிக்க எடுத்தவன்... வேகமாக வெளியே வந்து....... "சொல்லு ராஜ்."..என்றான்.

எதிர்புறத்தில் இருந்து வரும் செய்தியை கேட்ட உடன் முகம் சற்று கடினமுற ...".இல்ல ராஜ்.......ஏதும் கேட்கவேண்டாம்......எனக்கு நம்பிக்கை இருக்கு.......என் மீதும் தப்பிருக்குள்ள என்றவன் சரி ராஜ்..... எனக்கு அப்போ அப்போ தகவல் மட்டும் சொல்லு....அவள பார்த்துகோடா.....என்னமோ மனசு கஷ்டமாவே இருக்கு.......ஒரு வேகத்துல புறப்பட்டு வந்தேன்.......ஆனா இங்கும் இருக்க முடியல ,அங்கும் இருக்க முடியல...எல்லாம் என் நேரம்.......எனக்கு வேற வழி தெரியலடா" என சொல்ல

அதற்க்கும் எதிர்புறத்தில் இருந்து என்ன பதில் வந்ததோ.....அவன் மேலும் முகம் சுருங்க..."போதும் ராஜ்....என்னால இதுக்கு மேல தாங்க முடியல...நாளைக்கு பேசிக்கலாம் வச்சுடு" என சொல்லி விட்டு அலைபேசியை அனைத்து விட்டு திரும்பியவன் அங்கு வெற்றி அவனை பார்த்து கொண்டே நின்று கொண்டிருந்தான்.

வெற்றியா பார்த்ததும் ஒரு நிமிடம் அதிர்ந்தவன் பின்னர் முகத்தை சாதரணமாக வைத்து கொண்டு "என்ன நண்பா......தூக்கம் வரலையா .......இன்னும் உன் கோபம் குறையலயா" என சிரித்து கொண்டே கேட்க

வெற்றி ஏதும் பேசாமல் அவனை பார்த்து கொண்டே இருக்க

"நண்பா என்ன விஷயம்னு மட்டும் கேட்ராத" என சொல்லும்போதே நா தழு தழுக்க அவன் கைகளை பிடித்து கொண்ட விபீஷ் அப்படியே சுவோரோடு சாய்ந்து அமர

அவன் கைகளை இறுக்கமாக பிடித்து கொண்ட வெற்றி......"விபீஷ் நீ வினுவ விரும்பறேனு எனக்கு தெரியும்......நான் கனடா போறதுக்கு முன்னாடியே கண்டு பிடிச்சுட்டேன்......ஆனா வேந்தனுக்கு தெரியாது.இப்பவும் நீ அவன் கிட்ட சொல்லாம கிளம்பி வந்திட்டு அப்புறம் போன் பண்ணிருக்க.........என்ன ஆச்சு உனக்குன்னு என்ன விசாரிக்க சொல்லிருக்கான்......அங்க வினுவும் இன்னைக்குதான் ஆபிஸ் வந்திருக்கா........நீ இங்க வந்ததுக்கும்,வினு இன்னைக்குதான்

ஆபிஸ் வந்ததுக்கும் நடுவுல எதோ நடந்திருக்கு......ஆனா என்னனு நான் கேட்கல.....உனக்கு எப்போ சொல்லனும்னு தோணுதோ அப்போ சொல்லுடா......ஆனா அதுவரைக்கும் நீ தனியா போட்டு குழப்பிக்காத......உனக்கு நாங்க இருக்கோம்.எது நடந்தாலும் நாங்க துணையா இருப்போம் .......இப்போ ஏதும் சொல்ல வேண்டாம்......நல்லா படுத்து தூங்கு ...விடியற பொழுது உனக்கான பொழுதா இருக்கட்டும்" என சொன்னவன் அவனை தன தோளோடு சேர்த்து அணைக்க

சட்டையில் ஈரம் பட ....நிமிர்ந்து பார்த்த வெற்றி.... விபீஷின் கண்களில் இருந்து கண்ணீர் வந்து கொண்டிருக்க

விபீஷ் வேண்டாம்டா......உன்ன இப்படி எங்கனால பார்க்க முடியல.......நீ கோகுல கண்ணனடா....உன்ன சுத்தி எப்பவும் சந்தோசமும் ,கொண்டாட்டமும் தான் இருக்கனும்....வேண்டாம்........தீர்க்க முடியாத பிரச்சனை ஏதும் கிடையாது ....நீ முதல்ல ரெஸ்ட் எடு......காலையில வேலை இருக்கு" என சொன்னவன் அவனையும் படுக்க வைத்து விட்டு தானும் உறங்க சென்றான்.

கண்ணை மூடிய விபீஷால் உறங்க முடியவில்லை......வினு தான் செய்த காரியத்தால் எந்த அளவு வேதனை பட்டிருப்பாள் என நினைக்க நினைக்க அவனுக்கு உறக்கம் வர மறுத்தது.அதே சமயத்தில் யார்காகவும் வினுவை விட்டு கொடுக்க முடியாது என்று நினைக்கும்போது அவன் செய்தது சரி என்றே அவனுக்கு பட்டது.

இங்கு வெற்றியோ கண்களை மூடினாலே நிலாதான் நினைவில் வந்தாள்.என்னடா இது இவளால் எப்பவு நமக்கு டார்செர்தான் என நினைத்தவன் போர்வை எடுத்து இழுத்து போர்த்தி உறங்கினான்.

மறுநாள் இருவரும் எப்போதும் போல் கிளம்பி சைட்டிற்கு வந்தனர்.என்ன வெற்றி ஆட்கள் ரொம்ப குறைவா இருக்காங்க...சொன்ன நேரத்துல வேலைய முடிசுடுவாங்களா என கேட்டு கொண்டே அலுவலக அறைக்கு சென்ற விபீஷ் அப்போது அலைபேசி ஒலிக்க எடுத்து காதில் வைத்தவன் "சார் நான் வினு பேசறேன்....நீங்க கேட்ட டிராயிங் அனுபிட்டேன்....சரியா இருக்கானு

பாருங்க....உங்க செல்போன் சுவிட்ச் ஆப் ல இருக்கு ....அதயும் பாருங்க" என சொல்ல

அலைபேசியை கையில் வைத்திருந்தவன் நிலையோ மனம் சந்தோசத்தில் ஆனந்த கூத்தாட நான்கு நாட்களுக்கு பிறகு தன்னவளின் பேச்சு தன் மனதை வருடி செல்ல, வார்த்தைகள் உயிர் வரை சென்று மனம் மயங்கி கண் மூடி அவன் நிற்க அங்கு எதிர்புறத்தில் இருந்து சார் சார் என வினு கத்தி கொண்டிருந்தாள்.

உள்ளே சென்றவனை காணோம் என்று வந்த வெற்றி அவன் நிற்கும் நிலைய கண்டு இவன் என்ன சிலை மாதிரி நின்னுட்டு இருக்கான்...என்று நினைத்த படி அருகில் வர

எதிர்புறம் வினுவின் சத்தம் அவனக்கு கேட்க ....ஓஒ இதானா என சிரித்தபடியே அலைபேசியை அவன் கையில் இருந்து வாங்கியவன் அது கூட தெரியாமல் விபீஷ் நின்று கொண்டிருந்தான்.

போனை காதில் வைத்தவன் "சொல்லு வினு என சொல்ல......சார் இவ்ளோ நேரம் சொன்னனே...ஏன் சார் போன் சரியா வேலை செய்யலயா .......கொஞ்ச நேரம் பதிலே காணோம்" என்றள்.

"இல்ல வினு அலைபேசி ஒழுங்காதான் வேலை செய்யுது.....இங்க ஒரு ஆசாமிதான் ஆணி அடிச்சா மாதிரி நின்னுட்டு இருக்கான்" என்றவன்

"ஏன் சார்....வேற யாரு" என அவள் முடிக்கும் முன்பே

"விபீஷ் தான் போன் அட்டென்ட் பண்ணான் வினு" என வெற்றி சொல்ல

வினுவிடம் இருந்து எந்த பதிலும் வராமல் சிறிது நேரம் அமைதியாக இருந்தது.

"இப்போ நீ இருக்க பார்த்தியா....இதே மாதிரிதான் இவனும் இங்க நின்னுட்டு இருக்கான்" என அவன் வார்த்தையில் அழுத்தம் கொடுத்து சொல்ல

“சார் கொஞ்சம் வேலை இருக்கு......நான் அப்புறம் பேசுகிறேன்” என சொல்லி விட்டு பட்டென்று போனை வைத்தவள் நிமிர்ந்து பார்க்க அங்கு ராஜ் நின்று கொண்டிருந்தான்.

அவனை பார்த்ததும் கண்களில் அக்னி சுவாலை கொழுந்து விட்டு எரிய,அவனை முறைத்தவள் எதுவும் பேசாமல் திரும்பி செல்ல ராஜ் மனமே மன்னிப்பு பிச்சை கேட்டு அவள் பின்னே சென்றது.

இங்கு விபீஷ் அப்படியே நின்று கொண்டிருக்க அவன் தோளை தொட்ட வெற்றி.....”டேய் .......கவலைபடாத எல்லாமே நல்லபடியா நடக்கும்......வா கொஞ்சம் வெளியே போகணும்” என அழைத்து வந்தான்.

விபீஷின் மன நிலை மாறுவதற்காக வெளியே வந்த நண்பர்கள் பேசிகொண்டே நடக்க அப்போது வேகமாக ஒரு பைக் முன்னே வந்து நிற்க

யாரு இப்டி வரது என கோபத்துடன் திரும்பி பார்க்க

ஹெல்மட்டுடன் ஒரு பெண் இறங்க

“ஏம்மா அறிவிருக்கா உனக்கு...வேலை நடந்து கிட்டு இருக்க ஏரியாவுல இப்டி தான் வருவியா” என வெற்றி திட்டிகொண்டுருகும்போதே ஹெலமட்டை அப்பெண் கழட்ட அது வெண்ணிலா.

என்ன விபீஷ் சார் ....காலையிலே கிளம்பிட்டிங்க.......என கேட்க .

வெண்ணிலாவின் முகத்தை பார்த்ததும் “ஆஹா அந்நியன் மாதிர் வேற வேற கெட்டப்ல வரிங்க....ஆனாலும் கொஞ்சம் டெர்ரர் தான் நீங்க” என விபீஷ் சிரித்து கொண்டே சொல்ல

கோபமாக இரண்டு கண்கள் அவளை முழுவதும் எடை போட.அவளை பார்த்த இரண்டு தருணங்களும் கோபம் மற்றும் தூரத்தில் இருந்தே பார்த்து இருந்தான் வெற்றி .இப்போது சாதரணமாக எளிமையான உடையில் சிரிக்கும்போது கன்னத்தில் குழி விழ , கண்கள் இரண்டும் கவிதை படிக்க ,புருவங்கள வளைந்து முகத்திற்கு மேலும் மெருகூட்டஅதை ரசித்த மனதை அவன் அடக்க .....



DO NOT COPY

அது தெரியாத அவளோ  சிரித்து கொண்டே விபீஷை பார்த்தவள் அப்படியா ....இல்லையே நான் எப்பவும் இப்டிதான் இருப்பேன்.....அன்னைக்கு நடந்தது எதிர்பாராத ஒன்னு.......ஒரு சின்ன பொண்ண கிண்டல் பண்ணானு சொன்ன உடனே கோபம் வந்திடுச்சு.....அதான் அப்படி .......மத்த படி நாங்க ரொம்ப நல்ல பொண்ணுங்க தான்" என நல்ல என்பதில் அவள் அழுத்தம் கொடுத்தாள்.

"ஆமா ஆமா அதான் நேத்து பார்த்தோமே" என விபீஷ் அவர்களோடு சரிக்கு சமமாக உரையாடி கொண்டிருந்தான் .

விபீஷை ரிலாக்ஸ் செய்ய வெளியே கிளம்பிய வெற்றி இப்போது அவன் தலைய பிடித்து கொண்டு நின்றான்.

"ஏன் என்னாச்சு சாருக்கு........  தலைய பிடிச்சுட்டு நிக்கிறார்."......என வெண்ணிலா கேட்க

பின்னால் இருந்த தோழி "இல்ல தல...ஏற்கனவே ஒரு தல இருக்கு அதான் நீங்க ....அப்போ இன்னொரு தல இருக்க கூடாதுல அதான்......சிம்பாலிக்கா தலைய கீழே போட்ருக்கார் இல்ல சார்" என அவள்  இழுக்க

"ஏய் " என வெற்றி கோபமாக ஆரம்பிக்க

உடனே விபீஷ் ....."யம்மா ...ஏன் இப்படி சும்மா இருக்கறவன ஏன் சொரிஞ்சு விட்ரிங்க...அப்புறம் அவன் ஆரம்பிச்சான் ...நீங்க தாங்க மாட்டீங்க.......ஆமா இப்ப எதுக்கு வந்திங்க....என்ன மிஸ் வெண்ணிலா என்ன இதெல்லாம்" என கேட்க

"ம்ம்ம் இதாண்டா பொழப்பு அவங்களுக்கு....அமைதியா இருகிறவன்கிட்ட வீரத்த காட்றது........ரிசெர்வே பண்ணாத டேபிளுக்கு ரிசெர்வ்னு பொய் சொல்லி உட்காறது....இதான் இவங்க வேலையே " என வெண்ணிலவை பார்த்து  வெற்றி பேச ஆரம்பிக்க

அதற்குள் விபீஷ்...டேய் கொஞ்சம் அமைதியா இருடா " என  அவனை அடக்கினான்.



DO NOT COPY

ச்சே!!!!!!!! என சொல்லியபடி வெற்றி அங்கிருந்து நகரந்தான்.

அவனது அவமதிப்பு வெண்ணிலாவை மேலும் உசுபேத்தியது.

“என்ன மிஸ்டர் ....என்னமோ ஆரம்பிச்சிங்க...அப்படியே விட்டுட்டு போய்ட்டிங்க.......சொல்ல வந்தத முழுசா சொல்லுங்க........நீங்க எந்த அளவுக்கு மரியாதையா பேசுவிங்கனு நானும் நேத்து காலேஜுல பார்த்தானே” என அவள் வம்பிழுக்க

“அய்யோ இவளுக வேற சும்மா போறவன சொடக்கு போட்டு கூப்ட்டு வம்பிலுக்கிராங்கலே” என விபீஷ் புலம்ப

“விபீஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்ஸ் என வேகமாக கத்தியவன் ....முதல்ல அந்த பொண்ண இங்க இருந்து போக சொல்லு” என கோபமாக கத்தினான் வெற்றி.

“மிஸ்டர் நான் ஒன்னும் உங்க கிட்ட பேசவரல......இந்த கன்ஸ்ட்ரக்ஷன் எனகாகதான் எங்க அண்ணா பண்றார்.அவருதான் போய் உனக்கு எப்படி வேணுமோ அப்படி சொல்லிட்டுவானு சொன்னார் அதான் வந்தேன் ...இனி நான் எங்க அண்ணா கிட்டே பேசிக்கிறேன்” என சொல்லிவிட்டு அவள் வேகமாக நடக்க

“அச்சோ வெண்ணிலா அவன் தெரியாம சொல்லிட்டான்....அது நீங்க தப்பா எடுத்துகாதிங்க....அவனுக்கு கொஞ்சம் கோபம் ஜாஸ்தி என விபீஷ் சொல்ல

பின்னால் திரும்பி சிரித்தவள்........ அவன் அருகில் வந்து “அதான எனக்கும் பிடிச்சதே” என வெட்கப்பட்டு சொல்ல

சாதரனமாக பேசிகொண்டிருந்த விபீஷ் இதை கேட்டதும் ஆஆஆஆஆ!!!!! வென்று வாயை பிளந்து நின்றான்.

அவளது கண்கள் செல்லும் இடத்தையும்.முகத்தில் செம்மையையும் இதழில் புன்னகையும் கண்டவன் ஆஹா என்னடா இது இங்கயும் அதே மாதிரி பேச்சு ஒன்ன இருக்கு...செயல் ஒண்ணா இருக்கே.....இது நடக்குமா என யோசித்து கொண்டே நிற்க



DO NOT COPY

**அவன் அருகில் வந்த வெண்ணிலா "என்ன விபீஷ் சார்...கண்டுபிடிசுட்டிங்கலாட்ட இருக்கே.......அதே தான்....கொஞ்சம் சொல்லி வைங்க உங்க KK கிட்ட "என சொல்லி விட்டு வண்டியை கிளப்பினாள்..**

**ம்ம்ம்ம் என்ன கொடுமைடா இது......ஒருத்தன் கல்யாணம் பண்ணி லோல்படறான்....நானு கல்யாணத்துக்கும் காதலுக்கும் நடுவுல நின்னு லோல் படறேன்...இவனுக்கும் இப்படியேவா.......ம்ம்ம்ம்ம்ம்.......இந்த பொண்ண கல்யாணம் பண்ணும்னா ஒன்னு கட்டதுரையா எதையும் சமாளிக்கிற ஆளா இருக்கனும்...இல்ல கைப்புள்ளயா கப்னு கால்ல விழற ஆளா இருக்கனும்.......நம்ம ஆளு இரண்டுக்கும் இடப்பட்ட பாசமலர் ஆச்சே ...இது எப்படி சாத்தியமாகும்? என யோசித்து கொண்டே நிற்க**

**அதற்குள் அங்க வந்த வெற்றி "என்னடா அந்த திமிரு ராணி போயிட்டாளா......அவ என்கிட்டே ஒரு நாளைக்கு மாட்ட போறா பாரு.....அப்போ இருக்கு கச்சேரி "என்றான்.**

**"நண்பா மாட்றது உறுதி...கச்சேரியும் உறுதி....ஆனா யார்க்கு அப்டிங்கிரதான் இப்போ பிரச்சன ......... என சொல்ல**

**என்னடா உளற என வெற்றி வேகமாக கேட்க**

**"அதான் எனக்கும் தெரியல...இது எங்க கொண்டு போய் முடியுமோ? ஆகமொத்தம் இந்த மால் முடியறதுக்குள்ள ஒரு பெரிய வார் நடக்க போகுது உறுதி" என சொல்லி கொண்டே அவன் முன்னாள் நடக்க யோசனையுடன் வெற்றி பின்னால் நடந்தான்.**

**உன் கண்களும் என் கண்களும்**

**சந்தித்த போது**

**உனது பார்வையின் வீச்சு**

**எனது உயிரின் அந்தத்தைதொட**

**அதில் இருந்து எழும் வெப்பம்**

லஷ்மிரவி

DO NOT COPY

உன் உயிரில் கலந்திட துடிக்க

உனது கோபத்தின் வேகத்தில்

எனது தாபம் அதிகமாக

இது எந்த மாதிரி உணர்வுடா !!

புரியாத பல சிந்தனைகள்

என் மனதில் தோன்ற

சிந்தையை சிதைத்தவனே!

விதியை படைத்தவனிடமே

விடை தேடி அனைவரும்

செல்வதுபோல்

என் குழப்பம் தீர

நின்னையே சரணடைந்தேன்!!!!!!!!!!

**அத்தியாயம் -21**

அன்று ஞாயிற்றுக்கிழமை....ஆனால் வேந்தனோ எப்போதும் போல் எழுந்து தனது ரெகுலர் வேலையை முடித்து விட்டு வரவேற்பறைக்கு வர அங்கு அவனுக்கு தேவையான கஞ்சி ரெடியாக இருந்தது.

அதை பார்த்த உடன் அவள் முன்பு ஒரு நாள் சட்டைக்கு கஞ்சி போட்ட நினைவு வர அதை நினைத்து சிரித்த படியே ...".மதிம்மா...மதிம்மா என்ன பண்ற" என அழைத்தபடி சமையல் அறைக்கு சென்றான்.

ஆம்....அவன் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது அவள் தன் அன்னையை பார்த்து கொண்டதால் அவளை மதிம்மா என்றே அழைப்பான்.ஆனால் இந்த இரண்டு மாதங்களாக அந்த அழைப்பும்

குறைந்து...ஏன் பேச்சைசே குறைந்து விட்டது.அதனால் அவளுக்கு அது கனவில் அழைப்பது போல் தோன்ற எதும்பேசாமல் சமையல் அறையில் வேலையில் இருந்தாள்.

மெதுவாக அவள் பின்னால் வந்து அவளை அணைத்தவன் அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து "இன்னைக்கு என்ன என் மகராணி என்னோட பேசமாட்டேன்கிறிங்க" என கேட்க

அவனது இந்த அன்பான பேச்சும்,இதமான அணைப்பில் அவளது உடல் ஒரு முறை சிலிர்க்க .....பேச நினைத்த வார்த்தைகள் தொண்டையில் இருந்து வர மறுக்க ,அப்படியே சிலையாக நின்றாள்.

ஆனால் அதை உணரும் நிலையில் வேந்தன் இல்லை......"என்ன பண்ணிட்டு இருக்க ....இன்னைக்கு லீவ் தான...மெதுவா செய்யலாம்ல என சொன்னவன் தனது கையில் ஈரம்பட ஹே என அவளை தன முகத்திற்கு நேராக நிறுத்தியவன் ...அவளது கண்களில் இருந்து கண்ணீர் வந்து கொண்டிருக்க....முகமோ சந்தோசத்தில் பூரித்திருக்க என்னாச்சுடி....கண்ணு எரியுதா ....அச்சோ என கண்களை துடைத்தவன் நான் உனக்கு உதவி பண்றேன் என சமையல் அறையில் அவன் உதவி பண்ண..... மதியோ எதவும் பேசாமல் ,,,,பேசக்கூடிய மன நிலையிலும் அவள் இல்லை....இந்த சந்தோசத்தை அவள் அனுபவித்து கொண்டிருந்தாள்.அவளும் வேலையை முடித்தாள்.

"என்னடி பூரிக்கு மாவு கொஞ்சம் பிசஞ்சிருக்க ....போதுமா இரண்டு பேருக்கும்" என கேட்டான்.

"இல்ல மாமா உங்களுக்கு மட்டும் தான்....நான் விரதம்" என்றாள் அவள்.

"விரதமா.......இன்னைக்கு கிருத்திகையா" என அவன் கேட்க

ஒரு நிமிடம் முழித்தவள் "ஆமாம் மாமா "என தலை ஆட்டினாள்.

"எதுக்கு மதிம்மா உனக்கு இந்த வேண்டாத வேலை.....பாரு உடம்பு எப்படி மெலிஞ்சு போச்சுன்னு" என அவன் வருத்தபட்டு சொல்ல

அவனது அந்த பேச்சு மதியின் மனதில் சந்தோசத்தை ஏற்படுத்த எதுவும் பேசாமல் அப்படியே அவன் மார்பில் சாய்ந்தாள்.

“ஹே என்னடி இது......இன்னைக்கு என்ன மேடம் ரொம்ப எமோஷனா இருக்கீங்க என சிரித்து கொண்டே  அவளை தன்னோடு இறுக்கி அணைத்தவன் சரி வா சாப்பிடலாம்” என்றான்.

அவனுக்கு அவள் பரிமாற ........”இன்னைக்கு ஒரு நாள் எனக்காக சாப்பிடேன் மதி ....எனக்கும் தனியா சாப்பிட்டு போர் அடிச்சுடுச்சு” என அவன் கெஞ்சலாகவும் கொஞ்சலாகவும் சொன்னான்.

ஒருமுறை தன்னையே கில்லி பார்த்தவள்...இது நிஜம்தானா....இது வரை வேந்தன் சாப்பிடும்போது நீ சாப்பிடு என்றே சொல்லமாட்டான்.முதன் முறையாக இன்று சொன்னதும் மதி சந்தோசத்தில் சரி மாமா என சொல்லி தனக்கும் சேர்த்து எடுத்து வைக்க

“இங்கே வா” என அருகில் அவளை அழைத்தவன் அவளுக்கு பூரி ஊட்டி விட ....அடுத்த நொடி விம்மி வெடித்து அவன் கழுத்தை கட்டி கொண்டு மார்பில் முகம் புதைத்து  அழுக ஆரம்பித்தவள் அவனது மார்பை விட்டு முகத்தை எடுக்க வில்லை.... “மதி என்னாச்சுடா...என்னாச்சுடா “என அவனும் பயந்து அவளை தன்னிடம் இருந்து பிரிக்க முயல ஆனால் அவளோ ஒரு இஞ்ச அளவுகூட அவனை விட்டு நகராமல் இதுவரை மனதில் அடக்கி வைத்திருந்த உணர்வுகளை எல்லாம் முடிந்த வரை அழுகையின்  மூலமே கரைத்துக்கொண்டிருந்தாள்.

முதலில் பயந்தவன் பின்னர் அவள் அழுது  முடியும் வரை அவள் தலையை தடவி கொண்டிருந்தவன் சிறிது நேரத்தில் அவளே நிதான நிலைக்கு வந்து அவனிடம் இருந்து விலக,அழுது  சிவந்த முகத்தை கையில் ஏந்தியவன் ...”ஏண்டா அம்மா ,அப்பா நியாபகம் வந்திடுச்சா” என கேட்க

என்ன சொல்வாள் அவள்.....எப்போது இவனோடு ஒன்றாக கலந்தாலோ அன்றில் இருந்தே இவன் மட்டுமே சுவாசம் என எண்ணி வாழ்கிறாள்....அவன் இப்போது கேட்கும்போது தான் அவர்களின் நினைவே அவளுக்கு வர,,,,,அது மனதின் வேதனையை இன்னும் கிளறிவிட......கண்களில் நீர் வந்து கொண்டிருக்க அவனியே பார்த்து கொண்டிருந்தவள் .....”என்னாச்சு மதிம்மா” என அவன் கேட்க

**அவள் ஏதும் சொல்லாமல் தலையை ஆட்டி கொண்டே மறுபடியும் அவன் மடிலே சரணடைய செல்ல**

**அதற்குள் அவனுள் இருந்த விருமாண்டி முழித்து....”மதி....மதி....இங்க பாரு....இப்ப எதுக்கு அழுதிட்டு இருக்க....இதுக்குதான் நான் லீவ்ல இருக்கிறதில்லை.......உனக்கு நான் முக்கியம் இல்லை.......உங்க அம்மா ,அப்பா,அண்ணன் இவங்கதான் முக்கியம்” என அவள் அழுகையை தவறாக புரிந்து கொண்டு அவன்  கோபமாக வார்த்தையை கொட்டினான்.**

**பூத்து குலுங்கிய மலரில் சேற்றை  வாரி அடித்தது போல்,சந்தோசத்தில் இருந்த மதி அவனது அதட்டலில் அவள் சந்தோசம் மறைந்து பயம் குடி கொள்ள ......... இருந்தாலும் தன்னுடைய எண்ணத்தை அவனிடம் சொல்ல வேண்டும் என்ற ஆசையில் ......”இல்ல மாமா.......எதுக்கு அழுதேனா” என ஆரம்பிக்க**

**“ஆமா அதுக்கு ஒரு பெரிய வியாக்கியானம் சொல்லுவ.....நீ எழுந்திரு முதல்ல.....போ....போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடு” என அவளை எழுப்பி படுக்கை அறைக்கு அழைத்து சென்றான்.**

**“மாமா அது வந்து என அவள் ஆரம்பிக்க....ஷ்ஷ்ஷ்  மூச்சு வெளியே வரகூடாது...படு...கண்ண மூடு” என சொல்ல**

**அவளும் படுத்து அவன் சொன்னதை கேட்டு கண்களை மூடிகொண்டாள்....அவளது குழந்தைதனமான இந்த செயலில் அவனுக்கு சிரிப்பை வரவைக்க,இதழில் புன்னகயோடு அவள் நெற்றியில் முத்தத்தை பதித்தவன்....இன்னும் சிறுபிள்ளையாகவே இருக்கிறாள் என நினைத்து கொண்டே  திரும்பி தனது வேலையை தொடர கணினி முன் அமர்ந்தான்.**

**நாட்கள் செல்ல சென்னைக்கு  விபீஷ் வந்து ஒரு  மாதம் ஆனது.**

**“டேய் விபீஷ் வேந்தன் போன் பண்ணான்.....நீ வீட்டுக்கே வரதில்லைன்னு உங்க அம்மா ரொம்ப கவலைபட்டாங்களாம்.அதுநாள இந்த பூஜா லீவுக்கு நம்ம இரண்டு  பேரையும் வர சொன்னான்.இங்கும் நமக்கு வேலை இல்லையில  போகலாம்டா “ என கேட்டான் வெற்றி.**

**“என்னது திருச்சிக்கா” என இழுத்தவன்...சிறிது நேரம் யோசிக்க**

**“டேய் நான் பாப்புவ பார்த்து ரொம்ப நாள் ஆச்சுடா........போகலாம்டா” என்றான் வெற்றி.**

**“ஓகே நண்பா.....போகலாம் என்றவன் ...எனக்கு மயிலுகிட்ட பேசி ரொம்ப நாள் ஆச்சு....பாவம் எப்படி இருக்கோ”....என சொல்ல**

**“அதான் தினமும் போன்ல பேசறாள” என வெற்றி சொல்ல**

**“இல்ல நண்பா.....மயிலு எதையும் வெளிபடையா சொல்லாது....அதும் ஊருக்கு போயிட்டு வந்ததில் இருந்து ஓவர் விருமாண்டி பாசம்......ம்ம்ம் ....கண்டிப்பா போகனும்டா.....நேரா அங்கே வரோம்...மயிலு சாப்பாடு ரெடி பண்ணி வைக்க சொல்லு” என்றான் சிரித்து கொண்டே சொன்னான்.**

**“விபீஷ் அது மட்டும் தானா...இல்ல வேற சந்தோசமும் கூட சேர்ந்து இருக்கா” என கண்களை உயர்த்தியபடி கேட்க**

**கண்ணில் ஒரு மின்னால் வந்து செல்ல புன்முறுவல் பூத்தவன் சட்டென்று முகம் மாறி ஒரு வருத்தம் தோன்ற எதுவும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்தான்.**

**“டேய்...டேய் ....நான் அன்னைக்கே சொன்னேன்....உனக்கு இந்த அழுகாச்சி செண்டிமெண்ட் எல்லாம் ஒத்து வராது .....நீ எப்பவும் புன்னகை மன்னன் தான் ......நாங்க இருக்கோம் ...எதுக்கும் கவலை படாதே” என அவனை வார்த்தைகளால் ஊக்கபடுத்திய வெற்றி திருச்சி செல்வதற்கு தயாரானான்**

**முடிக்க வேண்டிய வேலைகளை விரைவில் முடித்து இரண்டு நாள் விடுப்பில் நண்பர்கள் இருவரும் திருச்சி வந்தடைந்தனர்.**

**வேந்தனின் மன மாற்றத்தை கண்ட மதி இந்த சுகம் நிலையனது என அந்த சந்தோசத்தில் மூழ்கி இருக்க.......... விடுமறை நாள் முடிந்து மறுநாள் முதல் வேந்தன் பழையபடி தன் வேலையை பார்க்க........ மனமுடைந்த மதி மீண்டும் தனது கூண்டுக்குள் அடைந்து கொண்டாள்.இருவர் உள்ள வீட்டில் ஒருவர் முகம் பார்த்து ஒருவர் பேசுவது குறைந்து வெறுமை மட்டுமே நிறைந்து**

இருந்தது.தேவையில்லாத  மன குழப்பங்களில் அவள் சிக்கி தவிக்க ,வாழ்க்கைக்கு தேவையான பணத்தை சம்பாரிப்பதில் தன்னையே மறந்து இவன் கிடக்க...... கடந்து சென்ற காலம் திரும்ப வராது.....மனதிற்குள் இருப்பதை மனம் விட்டு சொன்னால் தவிர மற்றவர்களுக்கு தெரியாது....இதை அறியாத இந்த இருமனங்கள் ஒருவருக்கு ஒருவர் நன்மை செய்வதாக கருதி இருவரின் சுகங்களையும் இழந்து தவித்து கொண்டிருந்தனர்.

வெற்றியும் விபீஷும் வருவதை மதிக்கு சொல்ல வேண்டாம் என்று வேந்தனிடம் சொல்லி இருந்ததால் அவனும் சொல்லவில்லை.இருவரும் வீட்டிற்கு வந்து காத்திருக்க.பக்கத்து வீட்டு பெண்மணி மதி கோவிலிற்கு சென்று இருக்கிறாள் என சொல்ல இருவரும் வெளியில் அமர்ந்திருந்தனர்.

“என்னடா இவ்ளோ நேரமாச்சு ...இன்னும் காணோம்.....”என வெற்றி புலம்ப

“நண்பா ....அதை  ஏன் கேட்கிற....நம்ம மயிலு இப்போ அநியாத்திற்கு குடும்ப இஸ்திரி ஆகிடுச்சு.... ஊருக்கு போயிட்டு வந்ததில் இருந்து இப்போ எல்லாம்  மாமா மயம்தான் .....நீ வேணா பாரேன்.......வந்த உடனே மாமா வரலயான்னு தான் கேட்கும்....இத்தனைக்கும் அவன் விரச்சுகிட்டு விருமாண்டி கெட்டப்புல  நிற்கும்போதே இப்படி....ஆனாலும் இது  எல்லாம் ரொம்ப ஓவர்டா”...என சலித்து கொண்டே சொல்ல

தனது தங்கை கணவனுடன்  சந்தோசமாக வாழ்கிறாள் என காதால் கேட்பதை விட  ஒரு தமயனுக்கு வேறு என்ன சந்தோசம் இருக்கமுடியும்.மனம்நிறைவுடன் அவன் சொல்வதை ரசித்து சிரித்து கொண்டிருந்தான்.

அப்போது ஒரு ஆட்டோ அங்கு வந்து நிற்க அதில் ஒரு பெண்மணி இறங்க...”பார்த்துமா மெதுவா கீழே இறங்கு “ என கைபிடித்து இறக்கி விட

வேடிக்கை பார்த்து கொண்டிருந்த நண்பர்கள் இருவரும் இறங்கிய பெண்ணை பார்த்ததும் அதிர்ச்சியில் எழுந்து  நின்றனர்.



DO NOT COPY

“பாப்பூஊஊஊஊஉ!!!!!! என வெற்றி அடித்தொண்டையில் இருந்து கத்த

விபீஷோ வேகமாக ஓடி சென்று மயிலு என அவளை தாங்கி பிடிக்க

வாடிபோய் அசதியில் கண் மூடி கிடந்தவள் இருவரது குரல் கேட்டதும் தாயை தேடும் பிள்ளை போல் முகத்தில் சந்தோசகளை பூக்க அந்த நிலையிலும் அண்ணா என சொல்ல

அதற்குள் வெற்றியும் அருகில் வந்து என்ன பாப்பு இது என சொல்லி கொண்டே அவளை கைபிடித்து அழைத்து வந்தனர்.

“அண்ணா கொஞ்சம் பொறுங்க என்றவள்....அக்கா ரொம்ப தேங்க்ஸ்க்கா....நாளைக்கு வந்து கடைசி பூஜையும் முடிச்சுடறேன்” என சொல்லிவிட்டு வேகமாக திரும்பியவள் சற்று தடுமாறினாள்.

“என்ன மயிலு இது...என்ன ஆச்சு உனக்கு....ஏன் இப்படி இருக்க...உடம்பு சரியில்லையா ...சொல்லவே இல்ல” அவன் என விடாமல் கேள்வியை கேட்க

“அவளோ மாமா வரலையா......நீங்க வந்தது அவருக்கு தெர்யுமா ?ஆமா எப்போ வந்திங்க?” என கேட்டு கொண்டே சாவி எடுத்து கொடுக்க கதவை திறந்து அவளை உள்ளே சோபாவில் படுக்க வைத்த இருவரும் முதலில் இந்த தண்ரை குடி” என சொல்ல

“இல்ல அண்ணா ...சாமிக்கு விளக்கு ஏத்திட்டு தான் விரதம் முடிக்கணும்....அது வரைக்கும் பச்சை தண்ணீர் கூட குடிக்க கூடாது என சொல்லிவிட்டு மெதுவாக எழுந்து சென்று விளக்கு ஏற்றியவள் சாமி கும்பிட்டு பின்னர்...அண்ணா உங்களுக்கு டீ போடட்டுமா” என கேட்டால்.

அது வரை அமைதியாக இருந்த விபீஷ்...”மயிலு என கோபமாக அழைக்க...இங்க வா...வந்து உட்கார் என அதட்ட”......இது வரை அப்டி பேசிடாத விபீஷ் இப்போது பேசியதும் கொஞ்சம் மிரண்டவள் ஏதும் பேசாமல் வந்து அமர்ந்தாள்.

“வெற்றி நீ போய் டீ போடு” என்றவன் கையில் வைத்திருந்த தண்ணீரை அவன் முழுவதும் குடித்து விட்டு அப்படியே அமர்ந்து அவளை முறைத்து கொண்டிருந்தான். தாமரை போல மலர்ந்து சிரித்த



DO NOT COPY

மதியின் முகம் இப்போது வாடி வதங்கி களையிழந்து கிடக்க, உதடுகள் சிரித்தாலும் கண்ணில் வெறுமை இருக்க....எதானால் இப்படி என யோசனையுடன் அவன் பார்த்து கொண்டிருக்க

அவனது பார்வையின் வீச்சு தாங்காமல் தலை குனிந்தவள் இல்ல விபீஷ் அண்ணா....காலில இருந்து சாப்பிடல...ஒரு நேரம்தான் சாப்பாடு...விரதம் என சொல்ல அதற்குள் வெற்றி டீ கொண்டு வந்து கொடுத்தும் அதை அவளுக்கு கொடுத்துவிட்டு தங்களும் குடித்தனர்.

வெற்றி நீ மயிலு பார்த்துக்க...நான் சாப்பாடு இருக்காணு பார்க்கிறேன்...இல்ல வாங்கிட்டு வரேன்" என சொல்லி விட்டு உள்ளே செல்ல

"நான் எல்லாம் செஞ்சு வச்சுட்டு தான் போனேன் "என மயிலு மெதுவாக சொன்னாள்..

உடனே வெற்றி உள்ளே சென்று சாப்பாடு எடுத்து வந்து அவளுக்கு ஊட்ட இரண்டு வாய் சாப்பிடவள் கொஞ்சம் களைப்பு தெளிந்ததும் "ஆமா நீங்களப்போ வந்திங்க? ஏன் சொல்லாம் வந்திங்க?" என அவர்களிடம் சண்டைக்கு செல்ல

"முதல்ல சாப்பிடு ...அப்புறம் பேசலாம்" என வெற்றி மிரட்ட பேசாமல் சாப்பிடவள் போதும் அண்ணா என சொல்ல பின்னர் அவளுக்கு ஒரு பழத்தை கட் பண்ணி கொடுத்து அதையும் சாப்பிட வைத்த பின்னரே விட்டனர்.

இருவரும் அவளை பார்த்து முறைத்து கொண்டிருக்க ,குற்றவாளி போல் தலை குனிந்து நின்றிருக்க...... ,"இப்போ தலைய கீழ போட்டு என்ன பிரயோஜனம்...இந்த அறிவு முன்னால இருந்திருக்கணும்....உன்னை யாரு இப்போ விரதம் இருக்க சொன்னா.....அதும் ஒரு நாள் முழுதும்...ஒரு நேர சாப்பாடுதான்.....இது தேவையா உனக்கு....இந்த விஷயம் வேந்தனுக்கு தெரியுமா?" என கேட்க

"அவனுக்கு தெரியாதுடா "என விபீஷ் சொன்னான்.



DO NOT COPY

அதற்குள் மதியும்..."அச்சோ மாமாக்கு தெரியாது....தெரிஞ்சா அவ்ளோதான் என பயந்துபோய் சொன்னவள் .....நீ மாமாகிட்ட சொல்லிடதன்னா திட்டுவார் "என சொல்லும்போதே கண்களில் கண்ணீர் வர

"இப்ப எதுக்கு அழுகுர நீ " வெற்றி அதட்ட

"சரிடா...விடு.....நீ அழுகாத மயிலு......ஏன் மயிலு இப்டி பண்றா....நீ இருக்கிற உடம்பு கண்டிசனுக்கு இந்த விரதம் எல்லாம் ஒத்து வருமா......ஆமா இப்போ எதுக்கு இந்த விரதம் "என கேட்க

அவள் ஏதும் சொல்லாமல் தலை குனிந்து நின்றாள்.

"கேட்கிரான்ல சொல்லு....ஏதாவது பிரச்சனயா உனக்கு.......வேந்தனக்கும் உனக்கும் ஏதாவது சண்டையா ...இல்ல வேற எதாவதா "என அவள் கண்களை பார்த்து கொண்டே வெற்றி கேட்க

"அவள் பயத்தில் கண்களை உருட்ட.....அப்படி எல்லாம் இல்ல அண்ணா ...நல்லதுன்னு சொன்னாங்க" என வார்த்தையை மென்னு முழுங்க

"உண்மைய சொல்லு பாப்பு...நீ சொன்னதான் தெரியும்" என அவன் அழுத்தமாக கேட்க

"வெற்றி நான் வீட்டுக்கு போயிட்டு வந்திடட்டுமா" என வீபீஷ் கேட்டான்.

தான் இருப்பது அண்ணன் தங்கைக்கு இடைஞ்சலாக இருக்கும் என கருதியே அவன் சொல்ல

அதை புரிந்து கொண்ட வெற்றி "இல்ல விபீஷ் ...நீ இரு ....சொல்லு பாப்பு "என அதட்ட

அவள் சற்று மிரண்டு தொண்டைகுழியில் எச்சில் முழுங்கி மெதுவாக தலையை உயர்த்தி அது வந்து என தொடங்க

"டேய் ...வந்திட்டிங்களா "என சந்தோச கூக்குரலோடு வேந்தன் உள்ளே வர கையில் ஸ்வீட்ஸ்,பழங்கள் என நிறைந்திருந்தது......

உள்ளே நுழைந்தவன் இருவரின் முகமும் கடினாமாக இருக்க,மதியோ திரு திருவென்று முழித்து கொண்டிருக்க , எதோ தவறு நடந்துள்ளது என அவன் மனதுக்குள் பட்டது.

“மதி இதை கொண்டு போய் உள்ள வை” என அவளிடம் கொடுத்து விட்டு மெதுவாக வெற்றியின் அருகில் வந்து அமர்ந்தவன் ....”எப்படா வந்தீங்க” என கேட்க

வெற்றின் மனநிலை எதையும் யூகிக்க முடியாமல் குழம்பி போய் இருக்க...வெகுநாள் கழித்து உடன்பிறந்தவளை இந்த மாதிரி பார்த்ததில் அவன் மனம் எரிமலையாய் கொதித்து கொண்டிருக்க....என்ன நடந்தது என தெரியாமல் ஏதும் பேச முடியாது...அதே சமயத்தில் நண்பனின் மேல் இருந்த நமபிக்கையும் அவன் வாயை அடைக்க ...... ,இப்பதான் வந்தோம் என பட்டென்று சொல்லி விட்டு வேகமாக எழுந்து அறைக்குள் சென்றான்.

விபீஷை பார்த்த வேந்தன் ...”என்னடா நடந்தது” என கேட்க

விபீஷ் சொன்ன செய்தி அவனுக்கும் அதிர்ச்சி தான்.அவள் கோவிலுக்கு செல்கிறாள் என்று தெரியும்...ஆனால் இப்படி விரதம் .முழு நேரபட்டினி அதும் ஒரு மாதமாக இது நடந்து கொண்டிருப்பது அவனுக்கு தெரியவில்லை.ஏனெனில் இரவு நேரம் கழித்து வருவதால் அவள் சாப்பிட்டு இருப்பாள் என நினைத்து ஏதும் கேட்கமாட்டான்.காலையில் நேரமே சென்று விடுவதால் சில நேரம் ராஜ் தான் காலை மதியம் சாப்பாடு வாங்கி வருவான்.அதனால் அவனுக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

எதுவுமே பேசாமல் சிறிது நேரம் அமைதியாக இருந்த வேந்தன் சட்டென்று வேகமாக எழுந்து வெளியே சென்று விட்டான்.

அவன் ஏதாவது சொல்வான்,,,,எப்படி சமாளிப்பது என காத்து கொண்டிருந்த மதி அவனது இந்த வெளிநடப்பு மனதில் பயத்தை ஏற்படுத்தியது.

அந்த சமயத்தில் விபீஷிர்க்கும் வீட்டில் இருந்து அழைப்பு வர,”மயிலு நான் கிளம்பறேன் ....நீ ஏதும் இப்போ பேசவேண்டாம் காலையில் பேசிக்கலாம்”... என சொல்லி விட்டு அவன் கிளம்பினான்.

அவன் சென்று அரைமணி நேரம் ஆகியும்  வரமால் இருப்பதை கண்டு பயந்த மதி மெதுவாக வெற்றியின் அறைக்கு சென்றாள்.கட்டிலில் தலைக்கு கை கொடுத்து மேல் சுவற்றை பார்த்து கொண்டு முகம் சுண்ட படுத்திருந்தவன் அருகில் சென்றவள் அண்ணா …அண்ணா என அழைக்க

அவன் திரும்பி பார்க்க

“மாமா வெளியே போனவர் இன்னும் திரும்பி வரலை…..எனக்கு பயமா இருக்கு …..நான் இனி இப்படி பண்ண மாட்டேன்….அவரை போன் பண்ணி வர சொல்லுங்க ……அவருக்கு இது தெரியாதுண்ணா” என சொல்லும்போதே கண்களில் இருந்து அருவி போல் நீ கொட்ட அவள் கேவி கேவி அழுக

அந்த நேரத்தில் தங்கையின் அழுகை அவனுக்கு வேதனையை ஏற்படுத்த வேந்தனுக்கு தொலைபேசியில் அழைத்தான்.அப்போது தான் உள்ளே நுழைந்த வேந்தன் சத்தம் கேட்டதும் மதி திரும்பி பார்க்க

“மாமாமாமாமாமா என வேகமாக அவன் அருகில் செல்ல

அவனது பார்வையின் வீச்சில் இரண்டு  அடி தள்ளி நின்றவள்

“மாமா…இல்ல மாமா…..அது வந்து” என அவள் ஆரம்பிக்க

“கையை உயர்த்தி  அவளை பேசவேண்டாம் என தடுத்தவன்….சாப்பாடு இருக்கா….நான் வாங்கிட்டு வரட்டுமா….பாவம் வெற்றி  கலைச்சு போய் வந்திருப்பான் என சொல்லி கொண்டே சமையல் அறைக்குள் சென்றவன் ,அங்க சாதம் கொஞ்சமாக இருக்க பின்னால் வந்த மதி மாவு இருக்கு மாமா” என மெதுவாக சொல்ல…

“சரி நான் பார்த்துகிரேன்…நீ போய் ரெஸ்ட் எடு” என சொல்லி கொண்டே அடுப்பை பற்ற வைக்க

“நானே செய்யறேன் மாமா என வேகமாக அருகில் வந்தவள் …போய் படுன்னு சொன்னேன்ல….சொல் பேச்சு கேட்கிரதில்லயினு முடிவோட இருக்கியா” என ஒரு அதட்டல் போட எதுவும் பேசாமல் திரும்பி சென்றாள் மதி.

பின்னர் இருவருக்கும் சமைத்து எடுத்து கொண்டு வந்தவன் ,வெற்றியின் அருகில் வந்து....."என்னை மன்னிச்சுடு வெற்றி ......இனி இந்த தப்பு நடக்காது" என சொல்லும்போதே அவன் குரலின் வேதனை வெற்றியின் மனதை அசைத்தது.

ஏனெனில் வேந்தன் இதுவரை இப்படி பேசி பார்த்தது இல்லை.தவறு செய்யமாட்டான்....அப்படி செய்தாலும் அவன் கேட்கும் மன்னிப்பிலும் ஒரு ஹானஸ்ட் இருக்கும்...அவன் இப்போது முதன் முறையாக இந்த அளவு வருத்தத்துடன் பேசுவது வெற்றியின் மனதை பிசைய

வேகமாக எழுந்தவன்...."வேந்தா என்ன இது........உன் மேல தப்பிருக்காதுன்னு எனக்கும் தெரியும்....ஆனா இவ இப்படியே பண்ணிட்டு இருக்கா ....என்ன பண்றதுன்னு தெரியல ...அதான்."......என சொல்ல

வேந்தன் எதுவும் பேசாமல் அவன் இரு கைகளையும் அழுத்தி பிடிக்க வார்த்தைகள் சொல்லாத ஆயிரம் அர்த்தங்களை அவனது அழுத்தம் சொல்ல வெற்றியே ஒரு நிமிடம் தடுமாறி போனான்.

"டேய்....நீ எதுக்கு பீல் பன்ற.......ஒன்னும் பிரச்சனை இல்ல...ரொம்ப நாள் கழிச்சு வரனா...வந்த உடனே பாப்புவ இப்படி பார்த்ததும் கொஞ்சம் எமோசன் ஆகிட்டேன் அவ்ளோதான்...சரி...வா..வா சாப்பிடலாம்" என வேந்தனை சமாதான படுத்தி வெற்றி சாப்பிட அழைத்து சென்றான்.

இருவரும் அமைதியாக சாப்பிட......மெதுவாக பூனை குட்டி போல் வந்த மதி வேந்தனின் அருகில் அமர சென்றவள் அவனது முகத்தின் இறுக்கத்தை பார்த்ததும் வெற்றியின் அருகில் வந்து அமர்ந்தவள் "ஏண்டா பாப்பு இப்படி பன்ற......இப்ப பாரு எல்லாருக்கும் கஷ்டம் தான" என வெற்றி பாசமுடன் சொல்ல

"இல்ல அண்ணா ...இனி அப்படி பண்ணமாட்டேன்...வீட்ல சும்மா இருக்கிறதுக்கு கோவிலுக்கு போலாம்னு போனேன்...அப்போதான் ஒரு பாட்டி சொன்னங்க இந்த கோவிலுக்கு 30 நாள் விரதம் இருந்து தினமும் வந்தா அவங்க நினச்சது எல்லாம் நடக்குமுன்னு சொன்னாக ....இன்னைக்கு 29நாள்...அதான் கொஞ்சம் மயக்கம் வந்திடுச்சு ....ஆனா நாளையோட எல்லாம் முடிஞ்சுடும் ...அப்புறம் ஏதும் தேவை இல்லை.

இனி இப்படி நடக்காது அண்ணா" என குழந்தை போல் அவள் முகத்தை பாவமாக வைத்து கொண்டு சொல்ல

அதை கண்டதும் தமையன் உள்ளம் சாந்தம் அடைய ஆனால் மணாளன் முகமே இரும்பை போல் இறுகி இருந்தது.வெற்றியிடம் பேசி விட்டு விடையை எதிர்பார்த்து காத்திருக்கும் மாணவி போல வேந்தன் முகத்தையே அவள் பார்த்திருக்க அதை வெற்றி புன்முறுவலுடன் ...".சரி விடு வேந்தா அவதான் சொல்றாள" என சொல்லி முடிபதற்க்குள் வேந்தன் நிமிர்ந்து அவனை முறைக்க

அவன் சட்டென்று வாயை மூடிக்கொள்ள அதுவரை பொறுமையாக இருந்த மதி தன் தமயனை வேந்தன் முறைத்ததும் சிலிர்த்து எழுந்துவள்....."இப்போ எதுக்கு மாமா இப்படி உர்ருன்னு இருக்கீங்க.....அதான் இனி போகமாடேனு சொல்லிட்டேன்ல...அண்ணனும் சரின்னு சொல்லிடுச்சுல" என கொஞ்சம் வேகமாக சொல்ல

அவன் ஏதும் பேசாமல் அமைதியாக சாப்பிட

"நீங்க மட்டும் எது செஞ்சாலும் சரி...நான் செஞ்சா தப்பா....இப்போ என்னாச்சு எனக்கு...லேசா மயக்கம் வந்திடுச்சு ....நான் என்ன செத்தா போயிட்டேன்" என வேகமான பேச்சில் வார்த்தையை விட

ஏய் யி யி யி யி யி யி!!!!!!! என கோபத்தில் சட்டென்று எழுந்த வேந்தன்

அதற்குள் வெற்றியும் "பாப்பு என்னது இது" என அலற

அவளுக்கு வேகமான பேச்சில் என்ன பேசினோம் என்பது புரியாமல் ..."இப்போ எதுக்கு இப்படி கத்தரிங்க" என கேட்க

"என்ன வார்த்தைடி சொன்ன நீ" என அவள் அருகில் சென்று அவள் தோள்பட்டையை பிடித்து உலுக்க

அவனது முகம் கோபத்தில் கொழுந்து விட்டு எரிய அந்த வெப்பத்தின் தணலில் அவள் மிரண்டு பயந்து பின் வாங்க

"வேந்தா என்னது இது" என வெற்றி அவன் அருகில் வர



DO NOT COPY

**“இல்ல மாமா ...நான் வந்து” என சொல்ல சொல்ல அப்படியே மயங்கி விழ மதி ...மதி என அழைத்தபடியே வேந்தன் அவளை தாங்கி பிடிக்க**

**“பாப்பு ..பாப்பு என்ன பண்ணுதுடா” என வெற்றி அவள் தலையை பிடிக்க இருவர் முகத்திலும் பயம் நிறைந்திருக்க**

**“வெற்றி சீக்கிரம் ஆட்டோ கூப்பிடுடா....டாக்டர்கிட்ட போகணும்” என சொல்லிவிட்டு அப்படியே நெஞ்சோடு அவளை அணைத்தவன் மதிம்மா...மதிம்மா...கண்ண திறந்து பாருடா...மாமாடா...மாமாடா....ஒன்னுமில்லடா....” என கதறிய படியே இருந்தான்.**

**இயற்கை அள்ளித் தந்த அழகின் மேல்**
**என் இதயம் தனை இழந்தேன்**
**என் உணர்வுகளை உயர வைத்த உன் மனதில்**
**ஓர் இடம் வேண்டினேன் .**
**சிரித்தது சில நொடிகளே , ஆனாலும்**
**என்னை பல மணி நேரம் சிந்திக்க வைத்தாய் ,**
**உன் புன்னகை கண்களை எண்ணி.**
**மலர்கின்ற ஒவ்வொரு விடியலிலும்,**
**மனதை இழக்கின்றேனே**
**உன்னோடு கலந்து ஒன்றான பின்னே**
**என்னை நான் தொலைத்தேன்**
**உயிராய் இருக்கும் நீயும் ஒதுங்கிசென்றதால்**
**நான் நடமாடும் ஜடமானேன்**
**என்னை உயிர்பித்த நீயே**
**என்னை முடித்து விடு !!!!!!!!!!!!!!!!!**

**அத்தியாயம் -22**

**மருத்துவமனைக்கு வேகமாக வந்தவர்கள் மதியை உள்ளே கொண்டு செல்வதற்குள் ஆயிரம் முறை அவள் பெயரை சொல்லி அழைத்திற்ப்பான் வேந்தன். மதி...மதி என**



NOT COPY

அவளை நெஞ்சில் அணைத்த படியே அவன் அரற்றிகொன்டே வர,அவளோ துவண்டு போய் கண் மூடி கிடக்க ,இதை பார்த்த வெற்றியின் மனமோ வேதனையில் வெந்து துடித்தது.

மதியை பரிசோத்தித்த மருத்துவர் உடன் வந்தவர்களை உள்ளே அழைக்க புயல் போல  உள்ளே நுழைந்தவன் “மேடம் மதிக்கு ஏதும் இல்லையல...நல்லா இருக்கால” என கேட்க

அவனது வேகத்தை பார்த்து ஒரு நிமிடம் தடுமாறிய மருத்துவர்......”நீங்க யாரு.....என்ன உறவு” என அவர் கேட்க

அதற்குள் வெற்றி தங்களை அறிமுகபடுத்தி கொள்ள ,அவன் பேசிகொண்டிருக்க வேந்தனின் கண்களோ மதியே பார்த்து கொண்டிருந்தது.

ஏன் சார் இவ்ளோ படிச்சவங்களா இருக்கீங்க....இவ்ளோ அனிமிக்கா இருக்காங்க ..கவனிக்காம விட்றுகிங்க......சாப்பிட்டு எவ்ளோ நாள் ஆகுது....,ப்ரசெர் வேற கம்மியா இருக்கு......ஒரு 5  நாள் பெட் ரெஸ்ட் இருக்கனும்..........வேற ஒன்னும் பிரச்சனை இல்ல ...எல்லாமே நார்மலா இருக்கு என சொல்லிவிட்டு அவர் நகர்ந்தார்.

மருத்துவர் சென்றதும் அப்படியே அருகில் இருந்த நாற்காலில் அமர்ந்த வேந்தன்  கண்களில் இருந்து கண்ணீர் நிற்காமல் வந்து கொண்டிருந்தது.அவனது நிலையை பார்த்து வெற்றி தனது வேதனையை ஒதுக்கி விட்டு அவனுக்கு ஆறுதல் சொல்ல தொடங்கினான்.

“வேந்தா ஒன்னும் பிரச்சனை  இல்லடா....அதான் டாக்டர் சொல்லிடாங்கள...இப்போ எதுக்கு அழுதிட்டு இருக்க....இன்னும் கொஞ்ச நேரத்துல பாப்பு எழுந்து உட்கார்ந்திடுவா பாரு” என சொல்ல

“இல்ல வெற்றி ...எல்லாம் என்னாலதான்.....,அவ சாப்ட்ராலா இல்லயான்னு கூட கவனிக்காம விட்டுட்டேன் பார்த்தியா .....பாவம் மதி......நான் கல்யாணமே பண்ணிருக்க கூடாதுடா” என புலம்ப

இதை கேட்டதும் “வேந்தா !!!!!! “என வெற்றி அதிர

“இல்ல நண்பா....எனக்கு பொறுப்பே பத்தாது....நான் அனாதையா இருந்து அனாதையாவே வாழ்ந்திருகனும்.....பாரு மதி மாதிரி ஒரு நல்ல

பொண்ண என்னால சந்தோசமா வச்சுக்க முடியல........என்ன மன்னிச்சுடு வெற்றி.....என் மனசு அறிஞ்சு நான் தப்பு பண்ணலடா.....எனக்கு தெரியலடா....அய்யோ ஒரு மாதம் விரதம் இருந்திருக்கா....நான் கவனிக்காம விட்டேனே" என அரற்றி கொண்டே இருக்க

வெற்றியோ எதை சொல்லி அவனுக்கு ஆறுதல் சொல்வது என தெரியாமல் முழித்து கொண்டிருந்தான்.

"அப்போது வேகமாக வந்த விபீஷ் ...டேய் என்னாச்சுடா.......நான் போகும்போது நல்லா தான இருந்தது மயிலு...அப்புறம் என்ன பண்ணிங்க ...நீ எதாவது திட்னியா என வேந்தனை பார்த்து கேட்டவன் உனக்கு எத்தனைமுறை படிச்சு படிச்சு சொன்னேன்....அது குழந்த மாதிரி..........அதுக்கு எதுமே தெரியாது....நம்ம தான் சொல்லி தரணும்னு.......உன்னோட ரூல்ஸ நீ அந்த சின்ன பொண்ணுகிட்ட காட்டிருக்க....பாவம் அது ....உன்னை எல்லாம் திருத்த முடியாது" என கோபத்தில் அவன் வேந்தனை திட்ட

எதுவும் பேசாமல் தலையை இரு கைகளால் பிடித்த படியே அமர்ந்திருந்த வேந்தன் நிமர்ந்து விபீஷின் கண்களைபார்க்க ...அதில் தெரிந்த கரை காணாத வேதனை விபீஷின் நெஞ்சை உலுக்கியது.

"இல்ல வேந்தா.....உன்ன தப்பு சொல்லலடா ....ஆனா உன்னை நம்பி உன்னையே கதின்னு சுத்திட்டு இருந்த பொண்ணு.....மயிலு வந்ததுக்கு அப்புறம் தான் நம்ம எல்லாரும் இவ்ளோ சந்தோசமா இருக்கிறதே...அதான் கொஞ்சம் கோபம் வருது" என சொல்ல

என்ன சொல்வான் வேந்தன்.அவனுக்கும் அது புரிந்து தான் இருந்தது.அவனும் நன்றாக தான் பார்த்து கொண்டான்.அவனியும் மீறி இது நடந்திருக்கு....என்ன பண்ணுவது என அவன் குழம்பி போய் இருந்தான்.

அதற்குள் "பேசன்ட் கண்ணு முழிச்சுடாங்க.....ஒருத்தர் உள்ளே வாங்க" என நர்ஸ் அழைக்க

வெற்றி வேகமாக எழுந்து உள்ளே செல்ல

விபீஷோ அவனை நிறுத்தி வேந்தனை அனுப்ப

தன் மனதை புரிந்து கொண்ட விபெஷின் கைகளை அழுத்தி பிடித்து விட்டு வேகமாக உள்ளே சென்றவன்,அங்கு கிழிந்து போன நாராக முகத்தில் பிரானவாயு கொடுக்கப்பட்டு,கைகளில் குளுகோஸ்ஏற, ECG ஓடி கொண்டிருக்க இதை பார்த்த  வேந்தனோ அப்படியே கண்கள் நிலை குத்தி நின்றான்.

.மெதுவாக அவள் அருகில் சென்று அவள் தலையை தடவி கொடுக்க அவனது ஸ்பரிசம் பட்டதும் கண் விழித்தவள் …மெதுவாக "மாமா" என முனக அவள் முகத்தில் சிறு புன்னகை தோன்ற

அவளது அந்த முகம் அவன் மனதின் வேதனையை இன்னும் அதிகபடுத்த …கடவுள் அவனுக்கு அளித்த பொக்கிசத்தை இனி கண்ணுக்குள் வைத்து பார்த்து கொள்வேன்  என முடிவு எடுத்தவன் மெதுவாக அவள் உச்சந்தலையில் ஒரு முத்ததை பதிக்க

அவள் சிரித்து கொண்டே களைப்பில் அப்படியே கண்களை மூடி கொண்டாள்.

அதற்குள் வெளியே வந்த நர்ஸ் …."வெண்மதி பேசண்டோட லேடிஸ் யாராவது  இருக்காங்களா" என கேட்டார்.

வெளியே இருந்த விபீஷும் வெற்றியும் இல்லை என சொல்ல

"ஒரு லேடிஸ் இருந்தா நல்லா இருக்கும்…வர சொல்லுங்க" என சொல்லி விட்டு அப்படியே இந்த மருந்து வாங்கிட்டு வாங்க " என்றார்.

உடனே வெற்றி "விபீஷ் நீ வினுக்கு போன் பண்ணி விபரம் சொல்லி வர சொல்லு…நான் மருந்து வாங்கிட்டு வந்திடறேன்" என கூறி சென்றான்.

சரி என்று விபீஷும் இருமுறை அவளது அலைபேசிக்கு அழைக்க அது எடுக்கபடாமலே இருந்தது.அப்போது தான் அவனுக்கு உரைத்தது.தனது எண்ணை கண்டால் வினு எடுக்க மாட்டாள் என்று …என்ன செய்வது …வெற்றியே பேச சொல்லலாமா என யோசித்து கொண்டிருக்க

அப்போது உள்ளே இருந்து வேந்தன் வெளியே வர



DO NOT COPY

“வேந்தா வினுக்கு போன் பண்ணி வர சொல்லேன்” என சொல்ல

ஆனால் வேந்தனோ யாரிடமும் பேசக்கூடிய சூழ்நிலையில் இல்லாததால் அவனிடம் தனது அலைபேசியை கொடுத்து விட்டு அப்படியே அமர்ந்து கொண்டான்.

வேந்தனின் அலைபேசியில் இருந்து வினுவை அழைக்க இரண்டாவது ரிங்கிலே எடுத்தவள் “சொல்லுங்க சார்” என கேட்க

“வினு நான் விபீஷ் பேசறேன்” என சொன்னதும் சட்டென்று தொடர்பு கட் ஆனது.

மீண்டும் 2 முறை அவன் அழைக்க மறுபடியும் எடுத்தவள் ஏதும் சொல்லாமல் அமைதியாக இருக்க

“வினு நீ இப்போ உடனே புறப்பட்டு MSK ஹோஸ்பிடல் வா” என சொல்ல

உடனே....ஒரு தடவை தான் நீ சொல்லி ஏமாந்து வந்திட்டேன்....மறுபடியும் ஏமாறதுக்கு வேற ஆள பாருங்க......வேந்தன் சார்க்கு தெரியாம அவரோட போன்ல பேசறியா......இனி நான் ஏமாற மாட்டேன் என சொல்லும்போதே அவள் குரல் தடுமாற அவள் அழுவது போல் தோன்ற   போனை கட் பண்ணினாள்.

முதன்  முறையாக தன செய்த செயல் நினைத்து விபீஷ் வருந்தினான்.இனி தான் அழைத்தால் அவள் நம்ப போவது இல்லை என நினைத்தவன் வெற்றி வரும் வரை காத்திருக்க

அதற்குள் அந்த நர்ஸ் மறுபடியும் லேடிஸ் இருக்காங்களா என கேட்க

மீண்டும் விபீஷ் அவளுக்கு போன்  பண்ணினான். .

அலைபேசியை எடுத்து காதில் வைத்தவள் “உங்களுக்கு எத்தன முறை சொன்னாலும் புரியாதா .....இனியும் நான் ஏமாற மாட்டேன்” என கத்த

“ஹே வினு என்னாச்சு .....எதுக்கு இவ்ளோ டென்சனா பேசறா....அங்க உனக்கு எதாவது பிரச்சனயா “என வெற்றி கேட்க

“அச்சோ சார்.....நீங்களா...சாரி சார்....சொல்லுங்க சார்” என்றாள் வினு .

மேலும் நேரத்தை நீடிக்காமல் நீ உடனே புறப்பட்டு இங்கு ஹாஸ்பிடல் வா என விபரம் சொல்லி விட்டு போனை வைத்தான் வெற்றி.

சில மணித்துளிகளில் ஹாஸ்பிடலில் வந்து நின்றாள் வினு.......உள்ளே நுழைந்ததும் வெற்றி வேந்தனை அழைத்து கொண்டு மருத்துவரிடம் சென்று இருக்க அங்கு விபீஷ் மட்டும் நின்று கொண்டிருந்தான்.

வினுவை பார்த்ததும் கண்களில் சந்தோசம் பொங்க ஆனால் இருக்கும் சூழ்நிலை அவன் முகத்தில் அதை தெரியாமல் மூடி மறைக்க

விபீஷை பார்த்ததும் ஒரு நிமிடம் அப்படியே சிலையாக நின்றவள் கண்கள் இரண்டும் அவனை விட்டு நகர மறுக்க,மனமோ கோபாமா,சந்தோசமா என சொல்ல தெரியாத நிலையில் துடித்து கொண்டிருக்க இருவரின் எண்ணங்களும் எல்லையில்லாமல் பழைய நினைவுகளில் கரபுரண்டு ஊட கண்களாலே கட்டுண்டு நின்றனர் .

அதற்குள்  என்ன சார் லேடிஸ் வந்திட்டாங்களா என நர்ஸ் கேட்க

“என்ன வேணும் சொல்லுங்க நான் பண்றேன் “என அந்த நிலையில் இருந்து தன்னை மீட்டு  நடப்பு சூழ்நிலைக்கு தன்னை மாற்றி கொண்டாள் வினு.

அவளது முகத்தின் மாறுதல் விபீஷிர்க்கு வேதனையை தந்தாலும் அவனும் எதுவும் நடவாது போல் அருகில் இருக்கும் நாற்காளியில் அமர்ந்தான்.

அதற்குள் அங்கு வந்த வேந்தனும்,வெற்றியும் ...என்ன விபீஷ் வினு வந்தாச்சா என கேட்க

உள்ளே இருக்கிறாள் என விபீஷ் சொல்ல

வேந்தன் ஏதும் பேசாமல் அப்படியே அமர்ந்தான்.அவன் அருகில் அமர்ந்த விபீஷ் .......”.டாக்டர் என்ன சொன்னாங்க என கேட்டான். நீ கவலைபடத வேந்தா.....மதிக்கு ஒன்னும் ஆகாது.......பசி மயக்கம்தான்....சின்ன பொண்ணுதான ....பாவம் அவனாள தாங்க முடியல” என்றான் விபீஷ்.

DO NOT COPY

**“ஆமா விபீஷ்.......அவ சின்ன பொண்ணுதான்....நம்ம தான் நம்ம சுயநலத்துக்கு அவள பயன்படுத்திகிட்டோம். இங்க கூட்டிட்டு வந்த உடனே கல்லூரியில் சேர்த்திருக்கணும்.அதை விட்டு குடும்ப வாழ்க்கையில் அவளை நுழைத்து என்னோட தப்புதான்” என வேந்தன் புலம்ப**

**வெற்றியோ “என்னாலதான் வேந்தா உனக்கு இந்த நிலை” என வருந்த**

**“உளராத வெற்றி.......என்னோட வாழ்க்கைக்கு அர்த்தம் சொன்னவங்க நீயும் உன் தங்கையும் தான்......நான் தான் சரியா புரிஞ்சுகள” என வெற்றியை அவன் சமாதான படுத்த**

**“முதல்ல இந்த புலம்பலை நிருத்தறிங்களா......ஏண்டா விளையாடறிங்களா....கல்யாணம் பண்ணி 6மாசம் குடும்பம் நடத்திட்டு இப்போ நியாயம் பேசறிங்களா.......இப்பவும் ஏதும் மாறி போகல...முதல்ல மயிலு உடல் நிலை சரி ஆன உடனே காலேஜ்ல சேர்த்திடலாம்” என்றான் விபீஷ்.**

**“ஆமாண்டா அப்பத்தான் அவளுக்கும் உலகம் புரியும்” என வேந்தன் சொல்ல வெற்றியும் அதை ஆமோதித்தான்.**

**அப்போது “டாக்டர் உங்களை அழைக்கிறார்” என நர்ஸ் அழைக்க மீண்டும் உள்ளே சென்றனர் இருவரும்.**

**“mr.வேந்தன் நீங்கதான வெண்மதியின் கணவர் .....இப்படிதான் உங்க மனைவியை கவனிச்சுகுவிங்களா.......இந்த பதட்டம் அவரிடம் அன்பு செலுத்துவதில் இருந்திருக்க வேண்டும். ரொம்பவும் வீக்கா இருக்காங்க .......வீட்ல வேற யாரும் பெரியவங்க இல்லயா “என கேட்க**

**உடனே வெற்றி “இல்லை டாக்டர் .....நானும் என் தங்கை மட்டும் தான்.வேந்தன் என் நண்பன்தான்” என சொல்ல**

**“ஓ புரியுது......இந்த காலத்து இளைஞர்கள் சம்பாரிபதில் காட்டும் ஆர்வத்தை குடும்பத்தில் காட்டுவது இல்லை.அதான் பிரச்சனை.” என்றார்.**

**அவர் சொல்வதில் உண்மை  இருக்க நண்பர்கள் இருவரும் தலை குனிந்து இருக்க**



DO NOT COPY

**"உடம்பில் வேறு ஏதும் பிரச்சனை இல்லை......நன்றாக சாப்பிட்டால் போதும்.......என்ன இரண்டு பேருக்கும் சேர்த்து சாப்பிட வேண்டும் அல்லவா" என அவர் சிரித்து கொண்டே சொல்ல**

**"இல்ல டாக்டர் நான் நல்ல சாப்பிடறேன்....அவள் தான் நன்றாக சாப்பிடனும்........எப்படி கவனிக்காமல் விட்டேன்" என அவரிடமும் வேந்தன் புலம்ப**

**அவர் சிரித்து கொண்டே "இன்னும் கொஞ்சநாளில் உங்கள் மனைவியும்  உங்களை கவனிக்க மாட்டார்....உங்கள் குழந்தையை கவனிக்க வேண்டும் அல்லவா" என சொல்ல**

**"குழந்தை எல்லாம் இல்ல டாக்டர் நாங்க மாட்டும்" என சொல்லி முடிப்பதற்க்குள் அதன் அர்த்ததை உணர்ந்தவன் நிமிர்ந்து பார்க்க**

**அதற்குள் வெற்றிக்கு அவர் சொன்னது புரிந்து .....".டாக்டர் நிஜாமாவா "என சந்தோசமாக கேட்க**

**"என்ன சொன்னிங்க இப்போ "என வேந்தன் மறுபடியும் தெளிவாக தெரிந்து கொள்ளும் வேகத்தோடு கேட்க**

**"நீங்க அப்பா ஆகா போறிங்கனு சொன்னேன் வேந்தன் ...இப்போ புரியுதா.......இத புரிஞ்சுகவே இவ்ளோ லேட்பண்றிங்க......அப்புறம் உங்க மனைவிய எங்க புரிஞ்சுக்க போறீங்க" என அவர் சொல்ல**

**அது வரை இருந்த வேதனைகள்  எல்லாம் இருக்கும் இடம் தெரியாமல் ஓட,சந்தோசத்தில் வெற்றியை தாவி அணைத்தவன்...வெற்றி நான் அப்பா ஆகிட்டேண்டா ....எனக்கு வாரிசு வந்திடுச்சு"....என குதித்தவன்**

**சட்டென்று முகம் வாட "டாக்டர் அவ உடம்பு வேற ரொம்ப வீக்கா இருக்குனு சொன்னிங்க.....இப்போ மயக்கம் வேற ஒன்னும் பிரச்சனை இல்லயா" என்றான்.**

**"இப்போது தான் ஆரம்ப நிலை வேந்தன்.இனி நல்ல கவனிச்சுகிடிங்கனா ஒன்னும் பிரச்சனை  இல்லை.நல்ல ஆகாரம்,சந்தோசமான மன நிலை,சுகதரமான வாழ்கை முறை இது இருந்தா போதும்....நான்கு நாட்கள் இங்கு இருக்கட்டும்.....பின்பு அவரை நீங்கள் அழைத்து செல்லலாம்" என சொன்னார்.**

**வெற்றியோ சந்தோஷத்தில் வேந்தனின் கைகளை பிடித்தவன் ...."நண்பா ரொம்ப சந்தோசம்டா......நான் மாமவாகிட்டேன்......என்னோட பாப்புவுக்கு ஒரு பாப்பா பிறக்க போகுது ...நம்பவே முடியலடா" என தனது மகிழ்ச்சியை வெளிபடுத்த**

**அதற்குள் வெளியே வந்து விபீஷை பார்த்த வெற்றி..."நண்பா நான் மாமா ஆகிட்டேன்.....ரொம்ப சந்தோசமா இருக்குடா" என விபீஷிடம் சந்தோசத்தை பகிர்ந்தவன் வேகமாக உள்ளே சென்று மதியிடமும் பகிர்ந்து கொண்டான்.**

**விபீஷும் சந்தோசத்தில் திக்குமுக்காட அவனும் சேர்ந்து மதியை கிண்டல் செய்தது கொண்டிருந்தனர்.சோர்வாக இருந்த மதியும் இந்த செய்தியை கேட்ட உடன் சந்தோசமடைய ஆனால் கண்களும் மனதும் அலைபாய**

**அதற்க்கு ஏற்றார் போல் வேந்தன் உள்ளே வர ...அவளது முகத்தில் நான சிவப்பு மையம் கொள்ள....இதை கவனித்த வினு ..."சரி வாங்க....நம்ம வெளியில இருப்போம்" என அனைவரையும் அழைத்து சென்றாள்.**

**உள்ளே நுழைந்ததும் வேந்தனின் முகத்தை பார்க்காமல் அவள் கண்களை தாழ்த்தி கொள்ள**

**மெதுவாக அவள் அருகில் அமர்ந்தவன் அவளது கைகளை எடுத்து தன கன்னத்தோடு வைத்து கொண்டவன் அப்படியே கண் மூடி அந்த உணர்வினை அனுபவித்து கொண்டிருக்க**

**ஏதும் பேசாமல் அவன் இருப்பதை கண்டு நிமிர்ந்து பார்த்த மதி...மாமா என அழைக்க**

**கண்களை திறந்து பார்த்தவன்...அதில் தனது மனம் முழுவதும் உள்ளஅன்பு ,சந்தோசம் போன்ற உணர்வுகள் பொங்கி ததும்ப ....ரொம்ப தாங்க்ஸ் மதிம்மா என அவன் நெஞ்சம் தழுதழுக்க சொல்ல.....மெல்ல நகர்ந்து வந்து அவன் மேல் சாய்ந்து கொண்டாள் அவன் மனையாள்.**

**அந்த இடத்தில மௌனமே மொழியாக ,உணர்வுகளின் செய்தியை உள்ளங்கள் புரிந்து கொள்ள,விடை தெரியாத பல புதிர்கள் அவர்களை**

**சுற்றி இருந்தாலும் அவற்றை எல்லாம் ஒதுக்கி விட்டு தங்களுது நெஞ்சம் நிறைந்த காதலின் அடையாளமாய் தங்களுக்கு பிறக்கும் சின்னஞ்சிறு தேவதையை எப்படி வரவேற்பது என்ற கனவில் மூழ்கி இருந்தனர்.**

**மெதுவாக அவன் தலையை தடவி கொடுக்க**

**"மாமா என அழைத்து நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்தவள் ...என் மேல கோபம் இல்லயே ....நான் இனி அப்படி செய்யமாட்டேன் மாமா" என அவள் அப்பாவியாக சொல்ல**

**பொங்கிவந்த காதலில் அவளை அப்படியே நெஞ்சோடு அணைத்தவன் ....குட்டிம்மா இப்படி பேசி பேசியே என்ன கொல்றடி......நீயே ஒரு குழந்தை...உனக்கு ஒரு குழந்தை பிறக்க போகுதா....என சிரித்து கொண்டே சொன்னவன்**

**பதராய் கிடந்த எனக்கு**

**பற்றிக்கொள்ள**

**கொடியை நீ கிடைத்தாய்.**

**நினைத்தது கிடைத்த சந்தோசத்தில்**

**நான் திளைத்திருக்க**

**அரும்பாய் அதில் மொட்டு பூக்க**

**அடுத்தடுத்த இன்பத்தில் மனம் சதிராட**

**புதராய் கேட்பாரற்று இருந்தவன்**

**இன்று மலர்ந்து மனம் வீசும்**

**மலர்வனமாய் உன்னால் மாறினேனடி!!!!!!!!! என சொல்ல**

**"ஹா மாமா.....சூப்பறா கவிதை சொல்றிங்க என சொல்லி சிரித்தவள் மேலும் அவன் நெஞ்சோடு ஒன்ற.....ஆவளை அப்படியே அணைத்து பிடித்தவன் என் தாயும் நீயே...சேயும் நீயே என்று சொல்லி அவள் கன்னத்தில் முத்தமிட்டவன் அது தொடர்ந்து அவள் இதழ்களில் வந்து**

முடிய...சில மணித்துளிகள் அதில் நிலைத்து நின்றவன் அந்த சந்தோசத்தை இருவரும் உளமாற  அனுபவித்தார்கள்.

 சிறிது நேரம் கழித்து உள்ளே வந்த மூவரும் இனி மதியை பார்த்து கொள்வதே தங்களது தலயாய கடமை என்றனர்.

“ஒருத்தரும் ஒன்னும் பண்ணவேண்டாம்...என் பொண்டாட்டியா பார்த்துக்க எனக்கு தெரியும்......முதல்ல வேலை எல்லாம் அப்படி அப்படியே கிடக்குது அத போய் பாருங்க” என்றான் வேந்தன்.

“அதான என்னடா நம்ம விருமாண்டி மாறிட்டினானொன்னு நினச்சேன்...அது நடக்காது” என முனகி கொண்டே விபீஷ் நிற்க

“வெற்றி நான் 10நாளுக்கு மதிய விட்டு எங்கும் வர மாட்டேன்.அதுனால நீ மட்டும் சென்னை போ.......விபீஷ் வினுவும் இங்க இருக்கட்டும்..” என பொறுப்புகளை பிரித்து கொடுக்க

மாமா என்ன சொன்னிங்க ....10 நாளைக்கு என் கூட இருப்பிங்களா....சூப்பர் ...மாமா எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு......வினு மாமா என்கூட 10 நாள் இருக்க போறார்...என் கூட மட்டுமே...... என  அவள் அழுத்தி  சொல்ல

அவளது மலர்ந்த முகத்தை பார்த்த வேந்தன் அவள் எந்த அளவுக்கு தன்னை தேடி இருக்கிறாள் என நினைகும்போதே அவன் நெஞ்சம்துடிக்க அதற்குள்

“ஆமாம் அண்ணா ...எனக்கு ஒன்னும் இல்ல...நான் நல்லா இருக்கேன்......நீங்க உங்க வேலைய பாருங்க” என மதியும் சொல்ல

“ஆனாலும் மயிலு உன்ற மாமா கூட இருகிரார்னு சொன்ன உடனே எங்கள கலட்டி விட்டுட்ட பார்தியா......அதுக்குதான் வெற்றி இந்த பொண்ணுங்களை  நமபவே கூடாதுன்னு சொல்றது” என விபீஷ் சோகமாக முகத்தை  வைத்து கொண்டு சொன்னான்.

“நம்பிக்கையை பத்தி யார் பேசறதுன்னு ஒரு வரைமுறையே  இல்லாம போச்சு....பெண்களை பத்தி இவருக்கு என்ன தெரியும்” என வினு வேகமாக சொல்ல

இதில் இருக்கும் உள்குத்து அறியாத மதியோ..."இல்ல வினு விபீஷ் அண்ணாவுக்கு நல்ல தெரியும்.....அவங்க கூட பிறந்த தங்கை போல என்மேல பாசம் வச்சிருக்காங்க  தெர்யுமா ?உனக்கு தான் சரியா தெரியல அண்ணாவை பத்தி.....சொக்க தங்கம் விபீஷ் அண்ணா" என சொல்ல

விபீஷின் முகமோ பெருமையில் ஜொலிக்க வினுவுன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

"சரி வேந்தா நான் சாப்பிடறதுக்கு எதாவது வாங்கிட்டு வரேன்....விபீஷ் நீ வினுவ கொண்டு போய் அவங்க வீட்ல விட்டுட்டு வந்திடு" என சொல்லி விட்டு வெற்றி  சென்றுவிட்டான்.

வினு வேண்டாம் என சொல்வதற்கு கூட அவன் அங்கு இல்லை...வேந்தனோ மதியிடம் பேசி கொண்டிருக்க விபீஷும் வினுவும் வெளியே வந்தனர்.

வேந்தனின் பார்வையில் இருந்து வெளியே வந்தவள் வேகமாக நடக்க அப்போது அவள் கையை பிடித்து யாரோ தடுக்க

அவள் திரும்பி பார்க்க

"எங்க போற நீ......நான் தான் உன்னை கொண்டு  போய் விடனும்" என சிரித்து கொண்டே செல்ல

"வரதெரிஞ்ச எனக்கு போக தெரியாதா......முதல்ல கையை எடுங்க "என அவள் கத்த

"வினு இப்படி எதற்கெடுத்தாலும்  கோபபடாத ...நான் சொல்றத கேளு கொஞ்சம்" என அவன் கெஞ்சலாக கேட்டான்.

"ஆமா...நீங்க சொன்னத கேட்டு அன்னைக்கு வந்ததுக்குதான் எனக்கு சரியான தண்டனை கிடச்சுத்தே" என சொல்லும்போதே அவள் கண்களில் கண்ணீர் வர

அனைவரும் வந்து போகும் இடத்தில் அவள் அழுது கொண்டிருக்க,விபீஷுக்கோ மிகவும் சங்கடமாக போக..."அன்னைக்கு நடந்த தப்புக்கு இரண்டு பேருமே காரணம்  வினு.....நீ மட்டும் கொஞ்சம்



DO NOT COPY

பொறுமையா இருந்திருந்தா அப்படி நடந்தே இருக்காது" என அவன் பொறுமையாக சொல்ல

"ஏன் சொல்ல மாட்டிங்க ....காசு பணம் இல்லாதவங்க...எத பண்ணாலும் கேட்க மாட்டாங்க அப்டிங்கற ஆணவம் தான ....எல்லாம் என்ன சொல்லணும் என சொன்னவள் ....என்ன விட்ரு விபு ....நான் போய்டறேன்" என கையெடுத்து கும்பிட்டவள் விறு விறுவென்று திரும்பி பார்க்காமல் நடந்தாள்.

அவள் செல்வதையே பார்த்து கொண்டிருந்தவன் எங்க போய்ட போற......உன்னோட ஆணிவேர் என்னிடம்...நீ வந்து தான் ஆகணும் என சொன்னவன் அவள் பேசியதை நினைத்து பார்க்க அதில் அவள் விபு என்ற வார்த்தை பேசியதை நினைத்தவன் மனதில் ஒரு நம்பிக்கை ஒளி பிறக்க மகிழ்ச்சியுடன் கிளம்பினான்.

அப்போது எதிரே வந்த வெற்றி "என்னடா வினு எங்க" என கேட்க

"அவ கிளம்பிட்டா என்றவன்......அவன் ஒரு மாதிரி பார்ப்பதை பார்த்து இல்ல நண்பா ஏதோ பக்கத்துல கொஞ்சம் வேலை இருக்காம் அதான் கிளம்பிட்டா என சொல்லிகொண்டிருக்க அதற்குள் அவன் அலை பேசி ஒலித்தது.எடுத்து பார்த்தவன் வெற்றி ...உன் TR டா " என அலற

"என்னடா உளற....என்னோட TR........ யார் அது" என வெற்றி கேட்க

"அச்சோ......அதாண்ட அந்த சொர்ணாக்கா வெண்ணிலாடா "என்றான் .

அவனை முறைத்தவன் ......."அவ என்னோட TR றா .......உனக்கு லொள்ளு ஜாஸ்தி ஆகிடுசுசு ....ஆமா அவ எதுக்கு இப்போ போன் பண்றா" என்றவன் சரி பேசு என்றான்.

அலைபேசியை காதில் வைத்ததும் "என்ன KK பெர்மிசன் கொடுத்த தான் பேசுவின்களோ" என்றாள்.

என்னது இது நேர்ல நின்னு பார்த்த மாதிரி கேட்கிறா என மனதில் நினைத்தவன் ...".ஹிஹிஹி அப்டி எல்லாம் இல்லை.....சொல்லுங்க நிலா" என்றான்.

“சைட்க்கு போனேன்.....ஊருக்கு போய்ட்டிங்கனு சொன்னாங்க.....அதான் எப்போ வருவிங்கன்னு” கேட்கத்தான் என்றாள்.

“இல்ல நிலா ....இங்க வெற்றி சிஸ்டேர்க்கு உடம்ப சரி இல்லை......இன்னும் 2 நாள் ஆகும்” என்றான்.

“அச்சோ என்னாச்சு....ஏன் என்கிட்டே சொல்லல .....ஆமா வெற்றி எப்டி இருக்கார்.....அவருக்கு தங்கைனா உயிராச்சே .....அவர பார்த்துக்குங்க விபீஷ்....ரொம்ப போட்டு அலட்டிக்க போறார்” என அவள் பேசி கொண்டே செல்ல

“ஹெலோ.....ஹலோ .....நிறுத்துங்க...நிறுத்துங்க......உடம்பு சரியில்லினு சொன்னது அவன் தங்கைக்கு ....நீங்க இதுக்கு சம்பந்தமே இல்லாம வெற்றிக்கு பீல் பண்றிங்க ...இது சரி இல்லியே ........என்னப்பா நடக்குது” என அவன் கேலியாக கேட்க

“இல்ல...இல்ல விபீஷ் என தடுமாறிய நிலா ....நம்ம குடும்பத்துல எதாவது ஒண்ணுனா மனசு கஷ்டமா இருக்குல அதான் “என மேலும் உளற

“என்னது நம்ம குடும்பமா ....இது எப்போ இருந்து....ஆஹா நிலா இந்த விளையாட்டுக்கு நான் வரலை ....உங்கள் நலம் விரும்பி பக்கத்துலதான் இருக்கான் ....நீங்களே பேசிகிங்க என வெற்றியிடம் போனை கொடுத்தவன் ஏதோ உங்க குடும்ப விஷயம் பேசணுமா பேசுங்கப்பா” என சிரித்து கொண்டே சொன்னவன் .....அவனை அர்த்தம் பொதிந்த ஒரு பார்வை பார்த்து விட்டு நகர்ந்தான்.

போனை வாங்கியவன் காதில் வைக்காமல் பார்த்து கொண்டே இருந்தவன் சட்டென்று இணைப்பை கட் பண்ணினான்.

பின்னர் விபீஷை அழைத்து பேசிவிட்டேன் என சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்.

பின்னர் மீண்டும் அலைபேசி ஒழிக்க காதில் வைத்தவன் எதிர்புறம் இருந்து வந்த செய்தியை கேட்டு ஒரு நிமிடம் அதிர்ந்தவன் பின்னர் யோசனையில்  ஆழ்ந்தான் .

நேசமும் காதலும் நினைத்த உடன்

யாருக்கும் வருவதில்லை

ஆனால் வந்து விட்டாலோ

அது உயிரோடு ஒன்றாக கலந்து

கொல்லாமல் கொள்ளும்.

வாழும் வரை பேர்சொல்வது உறவு.

ஆனால் வாழ்க்கைக்கு பின்னும்

நிலைத்து நிர்ப்பது காதல்!!

காதலில் இரண்டு மனங்கள்

சிக்கி தவிக்க

காதலிக்க வேண்டிய நாயகனோ

நாயகியோ

காலசூழ்நிலையில் சிக்குண்டு கிடக்க

புதிர்களால் புனையப்பட்ட

இவர்களின் நேசத்தின்

நிலைதான் என்ன ?????????

**இப்படி கேள்விகளால் நிரம்பிய இந்த புதிர்க்கு விரைவில் விடைகளுடன் .**

**அத்தியாயம் -23**

லஷ்மிரவி

DO NOT COPY

மனதில் தோன்றும் எண்ணங்களும் ஆசைகளும் காற்றை போன்றது...அதை கட்டு படுத்த முடியாது. நினைத்த உடன் அதை அடைய துடிக்கும் மனதை அடக்கி கட்டுக்குள் கொண்டு வர மனபக்குவம் வேண்டும்.இளம் கன்று பயம் அறியாது.வானத்தை வளைத்து விட துடிக்கும் வயதில் வாழ்கையின் நியதியை எடுத்து கூறினால் அது அவர்களுக்கு அறிவுரை போல் தெரியுமே தவிர ஆலோசனை போல் தோன்றாது.

சிலபல மணித்துளிகள் யோசனையில் நின்ற விபீஷ் பின்னர் நடப்பதை காலத்தின் கையில் விட்டு விட்டு தனது வேலையை பார்க்க கிளம்பினான்.

இங்கு மருத்துவமனையில் வேந்தனும் வெற்றியும் கண்ணை இமை காப்பது போல் மதியை பார்த்து கொள்ள சாப்பாடு வினு கொண்டுவந்து கொடுக்க அலுவலக வேலைகளை விபீஷ் பார்க்க வேண்டியதிருந்தது.

அன்று காலை விபீஷ் அலுவலகம் வர அதற்க்கு முன்னரே ராஜும்,வினுவும் இருந்தனர்.

விபீஷ் உள்ளே நுழைந்ததும் “குட்மார்னிங் சார்” என ராஜ் சொல்ல ,அவனும் சிரித்து கொண்டே தலை அசைக்க வினு தலையை குனிந்தபடி கொண்டே “குட்மார்னிங் “ என மெதுவாக சொன்னாள்.

அவன் நகராமல் அங்கே நின்று கொண்டிருக்க மெதுவாக தலை நிமிர்ந்து அவள் பார்க்க

“இங்க என்ன பொண்ணு பார்க்கிற படலமா நடந்திட்டு இருக்கு.....முகத்த கூட பார்க்காம குட்மார்னிங் சொல்ற......இவ்ளோ கஷ்டப்பட்டு நீ சொல்ல வேண்டாம்.......இனி நாங்க வேணா உன் டேபிள்க்கு வந்து குட்மார்னிங் சொல்லிட்டு போறோம்” .......என அவன் கிண்டலாக சொன்னான்.

இதை எதிர்பார்க்காத வினு கண்களில் சிறு அதிர்ச்சியுடன் ம்ம்ம் என தலையாட்ட

“என்ன நாங்க வந்து குட்மார்னிங் சொல்றதா “என மீண்டும் அவன் கோபமாக கேட்க



DO NOT COPY

**“இல்ல சார்.....இனி நானே  சொல்லிடறேன் என்றவள் குட்மார்னிங்” என நிமிர்ந்து சொல்ல**

**ம்ம்ம்ம் என தலை ஆட்டியவன் ...ஹப்பா......இவ தெளியறதுகுள்ள எஸ்கேப் ஆகிடனும் என மனதில் நினைத்தவன் வேகமாக அங்கிருந்து நகர்ந்தான்.**

.

**பின்னர் அடுக்கடுக்காக வேலைகள் வந்து கொண்டிருக்க ராஜ் வெளியில் சென்று விட இருவருமே தம் தம் வேலையை தொடர்ந்தனர்.**

**தன் வேலையை  முடித்து விட்டு நிமிர்ந்த விபீஷ் கண்ணில் பட்டது வேலையை  மும்மரமாக பார்த்து கொண்டிருக்கும் வினுதான்.**

**உள்அறையில் இருந்து இவளே பார்த்து கொண்டிருந்தவன் இவள் மனதில் என்ன நினைத்து கொண்டிருகிறாள் என தெரியாமல் தவித்து போனான்.ஏதோ ஒன்று தன்னிடம் இருந்து மறைகிறாள் என்று மட்டும் அவனுக்கு தோன்றியது..அன்று பேசும்போதும் அப்படிதான் பேசினாள்.அது என்னவாக இருக்கும்.......யாருக்காவது பயப்படுகிராளா......அப்படியே இருந்தாலும் அன்று நடந்த நிகழ்வுக்கு பிறகு அவள் பயப்பட தேவை இல்லயே....மறுபடியும் ஏன் தன்னிடம் இருந்து விலகுகிறாள் என தெரியாமல் குழம்பினான்.**

**வேலை  செய்தது கொண்டிருந்தவள் ஏதோ உறுத்த சட்டென்று திரும்பி விபீஷை பார்க்க,அவன் வேறு பக்கம் ஏதோ அலைபேசியில் பேசிகொண்டிருக்க யோசனையுடன் வேளையில் மூழ்கினாள்..இதே போல் இரண்டு முறை நடக்க வர வர மன பயம் அதிகமாகிடுச்சு என நினைத்து கொண்டு தன் வேலையை  தொடர்ந்தாள்.**

**அப்போது அவள் பக்கத்தில் வந்து யாரோ அமர,அவள் வேலையில் கவனமாக இருக்க ....”இப்படிதான் இருப்பியா வினு......ஆபிஸ்ல வேலை செய்யும்போது பக்கத்துல என்ன நடக்குதுன்னு கூட பார்க்க மாட்டியா”......என விபீஷின் குரல் அருகில் கேட்க பயந்து சட்டென்று இடத்தை விட்டு ஏழ**

அவள் கையை பிடித்து இருக்கையில் அமர்த்தியவன்... "மரியாதை மனசில இருக்கட்டும் வினு...இப்டி அடிகடி எழுந்திரிக்க வேண்டாம்"......என அவன் சிரித்து கொண்டே சொல்ல

சிறிது தடுமாறிய வினு பின்னர் நேராக அமர்ந்து அவன் கண்களை பார்த்து "என்ன?......என்ன வேணும் உங்களுக்கு........அதான் நீங்க நினைச்சுது சாதிச்சுடிங்கள ......இப்ப என்ன வேணும் ..இனி என்ன இருக்கு".......என நேரடியாக அவள் விஷயத்திற்கு வர

"வினு என அதிர்ந்தவன்.......இல்லைடா....என்னை புரிஞ்சுக்கோ வினு.....மூன்று வருசமா லவ் பண்றேன்.....என்னைக்காவது தவறா நடந்திருகேனா...இல்ல பேசிருக்கேனா ....அன்னைக்கும் உன்கிட்ட எவ்ளோ கெஞ்சினேன்......நீதான் ஒத்துக்க மாட்டேன்னு சொன்ன .....அதனாலதான் நான் அப்படி பண்ண வேண்டியதா போச்சு" என சொல்ல

"வேண்டாம் விபீஷ் சார்......என்னை விட்டுடுங்க ....அன்னைக்கு நடந்தது விபத்துன்னு நினச்சு மறக்க நினைக்கிறன்....மீண்டும் நியாபக படுத்தாதிங்க .........உங்க வாழ்க்கை முறை வேற...என்னோட சூழ்நிலை வேற....இது ஒத்து வராது...ப்ளீஸ் என்னை புரிஞ்சுக்குங்க" என அவள் சொல்ல

வினு நீ நிஜமாதான் சொல்றியா....என்னை உனக்கு பிடிக்கலையா......நீ என்னை விரும்பலையா ....வினு நீ தேவை இல்லாம எதோ போட்டு குழப்பிக்கிற .........இங்க பாருடா என அவள் கைகளை எடுத்து தன் கைகளுக்குள் வைத்து கொண்டவன் என்னோட வாழ்க்கைல மனைவின்னு ஒருத்தி வந்தா அது நீதான் வினு....வேற யாருக்கும் இடம் கிடையாது.....என் நண்பர்களுக்கு அப்புறம் நீ தான்" என சொல்ல

நண்பர்கள் என்ற பெயரை கேட்ட உடன் சட்டென்று தன் கையை உருவி கொண்டவள் கோபமாக

"இங்க பாருங்க மிஸ்டர் விபீஷ்.......எனக்கு உங்களை பிடிக்கலை...ஒரு தரம் சொன்ன புரியாதா.....ஏன் என்னை கட்டாயப்படுத்ரிங்க.....காதல்கிறது தானா வரணும்....இப்படி மத்தவங்க சொல்லி வர கூடாது......இனி இந்த ஆபிஸ்ல நான் ஸ்டாப்......நீங்க MD....அது மட்டும்தான்....வேலை விஷயம்

இருந்தா மட்டும் என்கிட்டே பேசுங்க.......உங்க பர்சனல் விஷயத்தை என்கிட்டே பேசாதிங்க ...அப்படி இருந்தா நான் வேலையை விட்டு வெளியே போக வேண்டிய சூழ்நிலை வரும்” என சொல்லிவிட்டு வேகமாக அந்த இடத்தில் இருந்து நகர

வேடனின் அம்பில் அடிபட்ட மான் போல வினுவின் சொல்லம்பில் விபீஷின்  மனம் துடித்து போக ,ஆனாலும் தன் முயற்சில் இருந்து பின்வாங்க போவதில்லை என்பதில் தெளிவாக இருந்தான்.

இங்கு விபீஷை வேகமாக பேசி விட்டு வெளியே வந்த வினுவின் கண்ணில்இருந்து வரும்  கண்ணீர் கட்டு படுத்த முடியவில்லை...ரெஸ்ட் ரூமில் வாய் விட்டு அழமுடியாமல் தனது உணர்வுகளை மனதில் போட்டு புதைத்தவள் கொடுத்த  வாக்கை மீற போவதில்லை என முடிவு பண்ணியவள் அந்த  வைராக்கியமும் முகத்தில் தெரிந்தது. 1

நான்கு நாட்கள் விடுப்பில் இருந்தால் அவ்வப்போது வெற்றியும் அலுவலகம் வந்ததால் வேலைகள் தேக்கமின்றி ஓடின. அப்பார்ட்மென்ட்வேலை முடியும் தருவாயில் இருக்க வெற்றியும் ராஜுவும் அங்கு இருக்க அலுவலகத்தில் வினும் விபீஷும் இருந்தனர்.

அப்போது அலுவலக அலைபேசி ஒலிக்க வினு எடுத்தவள் வெற்றி அழைத்திருந்தான்....அவசரமாக அவர்கள் வெளியே செல்வதால் விபீஷும் வினுவையும் சைட்க்கு வர சொல்லி விட்டு போனை வைத்தான்.

விபீஷ் உடன்  சைட்க்கு செல்வதா என யோசித்த வினு சிறிது நேரம் அப்படியே நின்று கொண்டிருக்க

அங்கு வந்த விபீஷோ “வினு எனக்கு வெளியே ஒரு வேலை இருக்கு...நீங்க ஆபிஸ் பார்த்துக்குங்க...நான் வந்து விடுகிறேன்” என கிளம்ப

அதற்குள் அலுவலக  அலைபேசி  மீண்டும் ஒலிக்க வெற்றிதான் அழைக்கிறான்....இன்னும் வரவில்லை என கேட்கபோகிறான் என நினைத்த வினு



DO NOT COPY

**“சார்......வெற்றி சார் போன் பண்ணிருந்தார்......அவரு வெளியே போறாராம்........நம்ம ரெண்டு பேரையும் அங்க வர சொன்னார்........நீங்க அப்படியே வந்திடுங்க....நான் ஆபிஸ் பூட்டிட்டு வந்திடறேன் “என சொல்ல**

**உடனே விபீஷ் “அப்படியா....நான் என்னோட வேலைய அப்புறம் பார்த்துகிறேன்....இப்பவே கிளம்பலாம்”......என அவசரப்பட**

**“இல்ல சார்....நீங்க வேலைய முடிச்சுட்டு வாங்க.......நான் வந்திடறேன்” என அவள் தயங்க**

**“வினு இது ஆபிஸ் விஷயம் .....இங்க நீ ஸ்டாப் ....நான் MD...முதல்ல கிளம்பு ...நான் கார் எடுக்கிறேன்” என சொல்லி விட்டு முன்னே நடந்தான்.செல்லும்போதே முகத்தில் சிறு புன்னகை தோன்ற வெற்றிக்கு மனதில் நன்றி சொன்னான்.**

**இருவரும் சைட்டுக்கு வந்த உடன் வெற்றியும் ராஜும் கிளம்ப அவர்கள் மட்டுமே தனித்து இருந்தனர்.வெளியாட்கள் வேலை செய்ய அதை பார்த்து கொண்டிருந்தான் விபீஷ்.**

**சில இடங்களில் அவனுக்கு சந்தேகம் வர அங்கு வேலை செய்யும் நபர்களை கேட்க அவர்கள் வினுவை கை காட்ட வினுவும் அதற்க்கான விளக்கங்களை சொன்னாள்..**

**“இல்ல வினு நம்ம பிளான் போடும்போது இங்க இந்த ரூம் இல்லயே” என சொல்ல**

**அவளும் சரளமாக இல்ல விபு அப்புறம் வேந்தன் சார் மாத்திட்டார்....இங்க பாருங்க கிச்சனையும் இந்த பக்கம் மாத்திருக்கோம்...க்ளையண்டும் ஒன்னும் சொல்லல” என அவளும் சாதரனமாக பேசிகொண்டிருந்தாள்.**

**அப்போது மேனஜேர் வந்து “மேடம் 6 நம்பர் வீட்டு ஓனர் சதீஷ் வந்திருக்கார்.உங்க கிட்ட ஏதோ பேசனமுமாம்” என்றார்.**

**“ஓ அவரா என இழுத்தவள்...சரி நான் வரேன்னு போய் சொல்லு” என்றவள் மீண்டும் திரும்பி அவனுக்கு விளக்கம் கொடுக்க**

“இல்ல வினு முதல்ல க்ளையண்டு  போய் பார்க்கணும்...அதற்க்கு பிறகு நம்ம பேசிக்கலாம் வா” என அழைத்து சென்றான்.

அங்கு சென்றதும் ..”.ஹாய் வினு ....இந்த சுடிதார்ல சூப்பரா இருக்கீங்க ....அது எப்படி இந்த வெய்யிலையும் இவ்ளோ பிரெஷா இருக்கீங்க என படபடவென பேச அருகில் நின்ற விபீஷ்... சற்று அதிர்ந்தவன் பின்னர் அவங்க எப்பவும் கிரீன் டீ ல தான் குளிப்பாங்க....அதனாலதான் அப்டி இருக்காங்க”......என நக்கலாக  சொல்ல

அவன்  “என்னது  கிரீன் டீல குளிப்பாங்களா’ ...என வாயை பிளக்க

“உங்களுக்கு தெரியாதா ...நம்ம த்ரிஷாவா கேட்டு பாருங்க......சொல்வாங்க” என சிரிக்காமல் சொல்லி விட்டு  அவனை முறைத்து கொண்டே நிற்க

ஒரு நிமிடம் யோசித்தவன் பின்னர் புரிந்து கொண்டு சிரித்தவன் ...”சார் ரொம்ப காமெடியா பேசறார்.......ஆனா வினு நீங்களும் திர்சா மாதிரி அழகாத்தான் இருக்கீங்க” என வழிய

“இனிமேல் நானும் அதே யூஸ் பண்றேன்.....உங்களுக்கு மேட்ச்சா இருக்கணும்ல”  என சதீஷ் சொல்ல

“சார் இந்தாங்க துடச்சுகுங்க” என விபீஷ் கர்சீப் நீட்ட

“இல்ல சார் எனக்கு வேர்க்கலையே” என சதீஷ் மறுக்க

“இல்ல சார் ரொம்ப வழியுது அதான் கொடுத்தேன் “என விபீஷ் சொல்ல

சதிஷின் முகத்தில் ஈ ஆடவில்லை.

வினுவோஏதும் பேசாமல் நின்று கொண்டிர்ந்தாள்.. விபீஷ் சிரித்தபடி பேசினாலும் அவன் மனதின் கோபத்தை கண்கள் வெளிபடுத்தி கொண்டிருந்தன.

ஆனால் சதிஷோ அதை பற்றி கண்டு கொள்ளாமல் “என்ன வினு ஏதும் பேச மாட்டேன்கிறிங்க என்றவன் அருகில் விபீஷ் இருப்பதை பார்த்து ...ஓகே ஓகே சார் இருக்காருன்னு பார்க்கிறிங்களா...நம்ம சொந்த விஷயத்த அப்புறம் பேசிக்கலாம் .....என சிரித்து கொண்டே சொன்னவன் நம்ம வீட்டை  பார்க்கலாமா” என கேட்க



DO NOT COPY

“என்னது நம்ம வீடா “என எரிச்சலாக  விபீஷ் கேட்க ,

“ஹிஹி இல்ல சார்.....என் பிளாட் தான்......பட் மேடம் தான கட்றாங்க ...அதுனால நம்ம வீடுன்னு சொன்னேன்.......ஆமா நீங்க யாரு ...எங்க சொந்த விஷயத்துல தலையிட்ரிங்க “என அவன் வேகமாக கேட்டவன்...

“அது வந்து இவர்” என வினு தொடங்கும் முன்

“நான் இங்க மேனஜேர்” என விபீஷ் சொல்ல

“ஓ மேனஜரா ...சரி...சரி...என்றவன் வினு நீங்க முன்னாடி போங்க என சொல்லி விட்டு விபீஷிடம் வந்தவன் தம்பி நானும் மேடமும் மேல போறோம்......யாரவது வந்து கேட்டா மேடம் இல்லைனு சொல்லிடு....அவங்களும் நானும் பெர்சனலா  பேச வேண்டியது இருக்கு....என்ன புரிஞ்சுதா” என சொல்லி விட்டு அவன் செல்ல

சதீஷ் சொன்னதை கேட்டதும் கோபத்தில் நரம்புகள் புடைக்க,கண்கள் சிவக்க அவனை பார்த்து கொண்டே நின்ற விபீஷ் கைகள்  ராஜின் எண்களை அலைபேசியில் அழுத்தியது.

“சொல்லுங்க சார் ,,,,ஏதாவது அவசரமா...எனக்கு செமினார் இருக்கு.....சாயந்திரம் வந்திடுவேன் சார்” என சொல்ல

“யார் அந்த கோமாளி” என விபீஷ் கோபமாக கேட்க

“கோமாளியா அது யாரு......என்ன சார்...புரியலை” என அவன் சொல்ல

“ம்ம்ம்ம்......அதான் பச்சைமிளகாய்க்கு  பர்முடாஸ் போட்ட மாத்ரி தலை எது உடம்பு எதுன்னு தெரியாம  வழ வழனு பேசிட்டு ஒருத்தன் வந்திருக்கான்......... அதான் அந்த 6ம் நம்பர்  பிளாட் வாங்கி இருக்கிறவன் பேரு” என யோசிக்க

“ஓ நம்ம சதீஷ் சாரா......ஏன் சார்....பெரிய கோடிஸ்வரன் வீட்டு பையன்......ரொம்ப நல்லவர்தான்...நல்லா பேசுவார்” என சொன்னான்.

“ரொம்ப நல்ல பேசுவானா யார் கூட நல்ல பேசுவான் என இழுத்த விபீஷ் ராஜ் உண்மைய சொல்லு” என கேட்க

DO NOT COPY

"சார் எனக்கு செமினார் இருக்கு முடிச்சுட்டு வந்து ஈவ்னிங் ப்ரீய பேசலாமே" என சொல்ல

"கொன்னுடுவேன் உன்னை........இப்ப சொல்றியா...இல்ல நான் காலேஜ் வரட்டுமா .......வினுகிட்ட மட்டுமா...இல்ல எல்லார்கிட்டையுமா" என கேட்க

"இல்லை சார் அப்படி எல்லாம் இல்லை.வினுவ பார்த்து கொஞ்சம் ஜொள்ளு விடுவான்.கொஞ்சம் அதிகம் பேசுவான்...மற்றபடி ஏதும் இல்லை" என்றான்.

"அதுக்கு வினு என்ன சொல்வா" என விபீஷ் கேட்க ,

அவனது பேச்சில் இருந்த கடுமை ராஜ் மனதில் பயத்தை ஏற்படுத்த ,ஏனெனில் விபீஷிர்க்கு கோபம் வந்தால் என்ன நடக்கும் என்பதை அவன் நேரில் பார்த்தவனாச்சே அதனால் திடுக்கிட்டான்."இல்ல சார் வினு பெரும்பாலும் தவிர்த்துடுவா .....நாங்க யாரவது கூட இருக்கும்போதுதான் பேசுவா என்றவன் ,சார் கிளாஸ்க்கு நேரமாகிடுச்சு...இன்டெர்னல் மார்க் வேற" என அவன் இழுக்க

விபீஷ் சட்டென்று போனை கட் செய்தான். 2

மேலே சென்றவர்கள் சிறிது நேரம் கழித்தும் கீழே வராமல் இருக்க விபீஷ் மேலே வந்தான்.

அப்போது சதீஷ் ...."இங்க பாருங்க வினு இது உங்க வீடு மாதிரி........உங்களுக்கு என்ன செஞ்சா நல்லா இருக்குனு தோணுதோ அதை செய்யுங்க" என சொல்ல

வினுவும் சிரித்து கொண்டே "கண்டிப்பா சார்.......என் வீடு மாதிரி பார்த்து பார்த்து உங்களுக்கு செஞ்சு கொடுக்கிறேன் ....நீங்க கவலை படாதிங்க" என சொன்னாள்..

அப்போது உள்ளே நுழைந்த விபீஷ் "ஆமாம் சார்....எங்களுக்கு எப்போதும் கிளைன்ட் திருப்தி தான் முக்கியம் எல்லா பிளாட்டும் அதே மாத்ரி தான் பண்றோம் ...இல்லை வினு "என அவன் அழுத்தி சொல்ல



DO NOT COPY

அவன் சொல்லும் விதத்தில் இருந்தே அவனது மனநிலையை புரிந்து கொண்ட வினு அமைதியாக நிற்க

"இல்ல சார்....இந்த பிளாட் வினு மேடத்தோட கனவு இல்லமா இருக்கணும்......அவங்க நினச்சதை எல்லாம் செய்யலாம்......ஏன்னா அவங்க இருக்க போற பிளாட் இல்லையா" என சொன்னான் சதீஷ் .

கேட்டதும் அதிர்ச்யில் நிமிர்ந்த வினு விபீஷை பார்க்க அவனின் கண்களில் தெரிந்த அக்னி ஜுவாலை அவளை பயமுறுத்த......அய்யோ இவன் வேற...ஏற்கனவே அவன் அந்நியன் அவதாரம் எடுத்திருக்கான்....இன்னும் அவனை சீன்றானே......இன்னைக்கு இவன் விபீஷ் கையில சிக்கி சின்னாபின்னமாக போகிறான் என நினைத்தவள் ...சதிஷை பார்த்து முறைக்க

"இல்லை...இல்ல அவங்க கட்ற பிளாட் இல்லையா அத சொன்னேன் என சொல்லி விட்டு வினு ஜன்னல் திரைசீலை கூட உங்களுக்கு பிடித்த கலர்லே போட்டுடுங்க.......பணத்தை பத்தி கவலைபடாதிங்க.....உங்களுக்கு சரினா அது எவ்ளோ இருந்தாலும் பரவயில்லை" என்றான்.

அவள் ஏதும் பேசாமல் தலை அசைக்க ,

இங்கு விபீஷின் மனமோ எரிமலையாய் கொதிக்க "வினு உங்க பர்சனல் விஷயம் எல்லாம் பேசி முடிச்சாசுனா கொஞ்சம் ஆபிஸ் வேலையும் பார்க்கலாம்..........உனக்கு போன் வந்திருக்கு...கீழே போ ....நான் சார்கிட்ட கொஞ்சம் பேசிட்டு வந்திடறேன்" என அவன் பல்லை கடித்து கொண்டு வார்த்தைகளை துப்ப

எங்கே சதிஷ்ம் விபீஷும் தனியாக இருந்தால் ஏதாவது பிரச்சனை வந்து விடுமோ என பயந்த வினு "ஓகே சதீஷ் சார்....நான் பார்த்துகிறேன்......நீங்க கிளம்புங்க...எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு.....கீழே போறேன் ...நீங்களும் வரிங்களா" என கேட்க

உடனே சதீஷ் சந்தோசத்துடன் "உங்களுடன் வருவதானால் எங்கு வேண்டுமானாலும் வரேன் வினு "என சொல்ல



DO NOT COPY

ஆஹா இந்த கொசு தொல்லை தாங்க முடியலடா .....இவனுக்கு ஒரு வழி பண்றேன் என மனதில் கருவிய விபீஷ் ,அதே நேரத்தில் அவனுடன் சிரித்து பேசிகொண்டே கீழே இறங்கிய வினுவின் மேல் கடுமையான கோபத்தில் இருந்தான்.

கீழே வந்தவன் வினுவை காணமல் தேட அவள் அலுவலக அறையில் கணக்கை சரிபார்த்து கொண்டிருந்தாள். அவளை முறைத்தவாரே நேராக அவள் முன்னால் வந்து அமர்ந்தான்.

தன்னையே அவன் பார்த்து கொண்டிருப்பதை அறிந்த வினு ,அவன் முகம் கோபத்தில் கொந்தளித்து கொண்டிருப்பதை அறிந்தவள் தலையை நிமிராமல் குனிந்த படியே இருந்தாள்.

“எவ்ளோ நேரம் சரிபார்த்த கணக்கை திரும்ப திரும்ப சரிபார்ப்ப” என அவன் கேட்க

“ஆபிஸ் வேலைதானே பார்கிறேன் “ என சொல்லி விட்டு மீண்டும் வேலையை தொடர

“ஓ உங்க பர்சனல் மேட்டர் பேசும்போது நான் வந்து தொல்லை பண்ணிட்டனா......அதான் கீழே வரும்போது உங்களோடவே கூட்டிட்டு வந்துடிங்கலே அப்புறம் என்ன கோபம்........அவர விட்டு பிரியறது இல்ல” என குத்தலாக பேச

சட்டென்று நிமிர்ந்தவள் எதுவும் பேசாமல் கணக்கு நோட்டை மூடி வைத்து விட்டு அங்கிருந்து நகர

“ஓ நாங்க பேசினா நீங்க பேசமாட்டிங்க......சதீஷ்,ரமேஷ்னு கோடீஸ்வரங்க வந்து பேசுனா சிரிச்சு சிரிச்சு பேசுவிங்க” என நக்கலாக அவன் கேட்க

“கண்டபடி பேசாதிங்க...அவங்க நம்ம கிளையன்ட் ....அவங்க கேட்கிறதுக்கு நம்ம பதில் சொல்லணும்......அதான் நான் பண்ணினேன்” என்றாள்.

**“ஓ அப்போ கிளையன்ட் என்ன கேட்டாலும்  செய்வ நீ “என அவன் கோபமாக கேட்க**

**“உளறாதிங்க விபீஷ்....இது நம்ம கம்பெனி ...நம்ம பிளாட் அவரு வாங்கிறார்.....அது சம்பந்தமா அவரு என்ன கேட்டாலும் பதில் சொல்லி தான் ஆகணும்” என சொல்ல**

**“ஆமா...ஆமா    அவரு உன்ன தேடி வந்தல்ல கேட்கிறாரு....அப்போ நீ பதில் சொல்லணும்” என கிண்டலாக சொல்ல**

**“அவரு வரும்போது நான் இருந்தேன் ...அதுனால என்கிட்டே கேட்கிறார்...நான் தான் உங்களை இன்ட்றோ பன்றதுகுள்ள நீங்க மேனஜேர் சொல்லிடிங்க” என தன்னை நியப்படுத்த அவனை குற்றம் சொல்ல**

**“ம்ம்ம் ...அப்படி சொன்னதாலதான பல விஷியங்கள் தெரிய வந்தது......நீ இருக்க போற பிளாட் தான் அதுன்னு எனக்கு தெரிஞ்சுது “என அவளை முறைத்த படி சொன்னான்.**

**“வாட் யு மீன்?என வினு கோபமாக கேட்டவள் ,அவன் தன்னை குற்றம் சொல்வதா என்ற கோபத்தில்..... அவர் கேட்டதுக்கு நான் பதில் சொன்னேன்...அவ்ளோதான்....உங்கள் கற்பனைக்கு நான் பொறுப்பல்ல” என அலட்சியமாக சொல்லிவிட்டு அவள் அங்கிருந்து நகர முற்பட**

**அவளது அலட்சியமான பதில் அவனது கோபத்தை உசுப்பிவிட வேகமாக அவள் கைய பிடித்து இழுத்து சுவோரோடு அழுத்தியவன் ,அவளது முகத்தின் அருகில் தனது முகத்தை வைத்தவன்**

**அவளது மான் விழிகள் பயத்தில் மிரண்டு அங்கும் இங்கும் ஓட ,மூச்சு காற்று வேகமாக வந்து வந்து செல்ல ,இதயத்தின் படபடப்பு சத்தம் அவனுக்கு கேட்க அந்த சனத்தில்  அவளது முகபாவம் மனதில் பதிய...அது பழைய நியாபகத்தை நினைவுறுத்த**

**கோபம் குறைந்து நேசம் பெருக,.....”வினு என்னை ஏண்டி கொல்ற .....மத்தவங்க சொல்றத எல்லாம் கேட்கிற.........நான் சொல்லறது உனக்கு புரியலையா....என் நேசம் உனக்கு தெரியலையா....வேண்டாம் வினு....ஒரு முறை கோபபட்டே என்னென்னமோ**

நடந்திடுச்சு....மறுபடியும் அதே மாதிரி நடக்க வச்சிடாதே....யாருக்காகவும் உன்னை விட்டு தரமாட்டேன் வினு.....என்னை புரிஞ்சுகோ" என தன் மனதின் காதலை அவளுக்கு புரிய வைக்கும் நோக்கில் ஆத்மார்த்தமாக பேச

வினுவின் கண்களில் இருந்து சரம் சரமாய் கண்ணீர் வர ,நிற்க முடியாமல் துவண்டு அவன் நெஞ்சில் சாய்ந்தவள் எதுவும் பேசாமல் அழுது கொண்டே இருக்க

விபீஷும் அந்த கணத்தில் அவளை காக்க தான் இருக்கிறேன் என உணர்த்தும் பொருட்டு உள்ளன்போடு அவளை அணைத்து கொள்ள ,அந்த அணைப்பில் ஆசை இல்லை,காமம் இல்லை நெஞ்சில இருந்த உண்மையான நேசம் மட்டுமே நிறைந்திருந்தது.

சில மணித்துளிகள் அப்படியே நின்று இருந்தவர்கள் முதலில் விபீஷ் தான் அவளிடம் இருந்து விலகினான்.அவளை தள்ளி நிறுத்தியவன் அவளது கண்களுக்கு தனது கண்களை கலக்க விட்டவன் ....."வினு என்னை நீ நேசிக்கிறாய் தானே....உண்மைய சொல்லு....உன் இதயம் என்னிடம் சொல்லிவிட்டது....உனது வாய் தான் சொல்ல மாறுக்கிறது ....சொல் வினு...என்னை நேசிக்கிறாய் தானே" என அவன் தனது காதலை அவள் எப்படியும் ஏற்று கொள்வாள் என்ற நம்பிக்கையோடு கேட்க

பாவையின் சூழ்நிலையோ கயிற்றில் ஆடும் பந்தை போல எதுவுமே சொல்ல முடியாத நிலையில் அவள் பேந்த பேந்த முழித்தவள் ,சில வினாடிகளில் சுதரித்தவள் சட்டென்று தனது முகபாவணயை மாற்றி,முகத்தை கடுமையாக வைத்து கொண்டு

"சாரி விபீஷ் சார்.சில நேரங்களில் எவ்ளோ தைரியசாலியாக இருந்தாலும் யானைக்கும் அடி சருக்கும் என்பது போல் அவனும் மனம் தளர்வது இயல்பு....அது போன்ற நிகழ்ச்சிதான் இப்போது நடந்தது.அதற்காக எப்போதும் அப்படி கிடையாது....என்னை அறியாமல் இப்போது இது நடந்து விட்டது....நீங்கள் செய்த காரியம் மன்னிக்க கூடியது அல்ல...... மன்னிக்கவும் மாட்டேன்...........மேலும் இவர்களோடு பேசவேண்டாம் என கட்டுபடுத்தும் அதிகாரமும் உங்களுக்கு



Do Not Copy

கிடயாது.அது என் சொந்த விருப்பம்.இனி இது போல் வீண் கனவுகளை மனதில் வளர்த்தி கொண்டு என் பின்னால் அலையாதிர்கள்....நான் அன்று சொன்னது தான் இன்றும்.......என வழி வேறு....உங்கள் வழி வேறு ....எந்த காலத்திலும் ஒன்று சேராது....எனக்கு நேரமாகி விட்டது ...நான் கிளம்புகிறேன்" என சொல்லி விட்டு விடுவிடுவென்று வெளியேறினாள்.

விபீஷோ சுவற்றில் அடித்த ஆணி போல் அப்படியே நின்றான். 3

சிறிது நேரத்தில் வெற்றி அங்கு வர ....விபீஷோ சிலை போல் அமர்ந்திருக்க

"விபீஷ்...விபீஷ் என்னாச்சுடா....உடம்பு சரி இல்லையா "என வெற்றி அவனை உலுக்க

திடுக்கிட்டு நிமிர்ந்தவன் அங்கு வெற்றி நிற்க அவன் மனதின் வலியை கண்களில் தேக்கி கொண்டு அவனை பார்க்க

புரிந்து கொண்ட வெற்றி அவன் அருகில் அமர்ந்து அவன் தோளோடு சேர்த்து அணைத்தவன் ...மெதுவாக அவன் காதில் "உனக்கு ஒரு விஷயம் தெரியுமா" என கேட்க

என்ன என்பது போல் விபீஷ் நிமிர்ந்து பார்க்க

"நீ இப்படி சோகமா வயலின் வாசிச்சா எல்லாம் சொல்ல மாட்டேன் "என அவன் சொல்ல

அவன் ஏதும் பேசாமல் லேசாக சிரிக்க

"நான் வரும்போது தாண்டா வினு அழுதுகிட்டே வெளியே போனா....எனகென்னமோ அவ உன்னை நேசிக்கிறானு தோணுது.......ஏன்னா இப்போ உன்முகத்துல பார்த்த வலி அவ முகத்திலையும் இருந்தது........ஆனா ஏதோ நடந்திருக்கு....அதை நீயும் சொல்ல மாட்டேன்கிற.....அவளும் அதை மறைக்கிறா" என்றான்.

"இல்ல வெற்றி.....இன்னைக்கு எப்படி பேசிட்டா தெரியுமா" என்றவன் அவள் பேசியதை சொன்னான்.

"இவ்ளோதானா....... ஏண்டா பிடிக்கலைனா யாராவது கஷ்டம் வரும்போது நெஞ்சுல சாயவாங்களா.......இப்போ நான் உன் நண்பன் அப்டின்க்ராதுனாலதான என் தோள்ள உரிமையா சாயற....அவ உன்னை நேசிக்கிறது உண்மை தான் விபீஷ்....அவ எந்த இடத்தலையும் உன்னை பிடிக்கலைன்னு சொல்லல.......அன்னைக்கு நடந்த விஷயம் தான் பிடிக்கலைன்னு சொல்றா" என சொல்லி விட்டு வெற்றி அவன் முகத்தை பார்க்க

நிமிர்ந்து பார்த்த விபீஷ் மீண்டும் தலை குனிய .....

"ம்ம்ம் ....எவ்ளோ நாளைக்கு........ கத்திரிக்கா முத்தினா கடைக்கு வந்துதான ஆகணும்' என வெற்றி சொல்ல

"நண்பா இப்போ எதுக்கு கத்தரிக்காய் எல்லாம் இழுக்கிற.......என்னோட நிலைமை உனக்கு கத்திரிக்காய் லெவலுக்கு தான் தெரியுதா....நேரம்டா ....சரி சரி விஷயத்தை சொல்லு" என்றான் விபீஷ்.

வெற்றி சிரித்து கொண்டே "நான் என்ன சொன்னா நீ என்ன சொல்ற........ உனக்கு வினுதாண்டா சரியான மேட்ச்" என சொல்ல

உடனே விபீஷ் "எப்படி நண்பா .....பிடிக்காது...பிடிக்காதுன்னு சொல்லியே குடும்ப விஷயம் பேசற அளவுக்கு வந்தத விட நாங்க பெஸ்ட் மேட்ச்சா "என சொல்லி சிரிக்க

உடனே வெற்றி "ஏண்டா இப்படி......அவ சொன்னதுக்கு நான் என்ன பண்ண முடியும் .......அவ கிடகிரா லூசு" என்றான்.

"இப்படிதான் நண்பா மத்தவங்கள லூசுன்னு சொல்லியே அதை கேட்கிறவன லூசாக்கிட்றாங்க " என கண்களை உருட்டி கொண்டு விபீஷ் சொல்ல

"டேய் சும்மா இருடா.......அது எல்லாம் நமக்கு ஒத்து வராது....எப்போ பார்த்தாலும் கட்டையும் கையுமா ......திமிரு பிடிச்சவடா அவ.......அவளை எல்லாம் பெத்தாங்களா ...செஞ்சாங்களான்னு தெரியல" என சொல்ல

"ஆஹா......இது மட்டும் உன் TRக்கு தெரிஞ்சுது...மவேனே ஹாக்கி பேட் வராது....AK 47 தான்....அதும் வளைச்சு வளைச்சு சுடுவாங்க."....என சொல்லி சிரிக்க

**அவன் முகத்தை பார்த்து கொண்டிருந்த வெற்றி.......கண்களில் கண்ணீர் நிற்க "விபீஷ் நீ இப்படி சிரிச்சுகிட்டே இருக்கணும்டா......வினு உனக்கு தான் விபீஷ் .....எவ்ளோ பிரச்சனை வந்தாலும் நான் இருக்கேன்...நான் பேசறேன்" என சொல்ல**

**"இல்ல வெற்றி.......காதல் தானா வரணும்......மத்தவங்க சொல்லி வரகூடாது.......அதுமில்லாம வினு என்னை விட்டு எங்கும் போகமாட்டா...எனக்கு நம்பிக்கை இருக்கு....ஆனா அதுக்கு நான் கொடுக்கிற விலைதான் கொஞ்சம் ஜாஸ்தியா இருக்கும்.....திணற..திணற வார்த்தையாலே அடிக்கிறா என்றவன் தேங்க்ஸ் நண்பா" என்றான்.**

**சிறிது நேர நண்பர்களிடைய மௌனம் நிலவ**

**"அப்புறம் நண்பா நாளைக்கு சென்னை பயணமாட்ட  இருக்கு" என்றான்.**

**"ஆமாம் விபீஷ்...... அதுல ஒரு சின்ன குழப்பம்...அதான் உன்கிட்ட சொல்லலாம்னு வந்தேன்"....என சொல்ல**

**"என்ன நண்பா மயிலு ஏதாவது சொல்லுச்சா" என கேட்க**

**"இல்ல விபீஷ் .........நேத்து சுரேந்தர்கிட்ட இருந்து போன்......வெண்ணிலாக்கு  ஒரு ப்ராஜெக்ட் இருக்காம்....அதுக்கு நம்ம உதவி வேணுமா....அவளுக்கு தேவையானதை பண்ணி கொடுங்க அப்படின்னு சொல்றார். நமக்கு இதெல்லாம் ஒத்து வருமாடா.....அதான் யோசனையா இருக்கு" என்றான்**

**"அதுக்கு நீ என்ன சொன்ன" என விபீஷ் கேட்க**

**"நான் என்னடா சொல்றது....ஏதும் பேசல.....படிப்பு சம்பந்தமானு சொல்லும்போது தவிர்க்க முடியல" என சொல்ல**

**"நண்பா நானாவது சிங்கத்தோட வாலத்தான் பிடிச்ருகேன்....ஆனா நீ சிருத்தையோட சிங்கிளா கூட்டணி வைக்க போற ...மவனே சிக்குன நீ சிக்கன் சிக்ஸ்டிபைவ் தாண்டி" என சிரித்து கொண்டே சொல்ல**



DO NOT COPY

**அதெல்லாம் இந்த வெற்றிகிட்ட நடக்காது என அவன் வாய் சொன்னாலும் மனதிற்குள் ஒரு பய உணர்வு ஏற்படுவதை அவனால் தடுக்க முடியவில்லை.**

ஆசை கொண்ட இரண்டு மனங்கள்

நேசத்தோடு சங்கமிக்க

பாசம் கடமை நட்பு

என்ற உருவில் பலதடைகள்

முன்னே வர

காதல் கொண்ட மனமோ

கலங்கி போய் நிற்க

நேருக்கு நேர் நின்று மோதினால்

நீயா நானா என்று பார்த்து விடலாம்.

நட்பை கற்பை போல் என்னும்

நேசத்தையும் பாசத்தயும்

கொண்டு உருவாக்கின உறவை

காதலுக்கு விலையாக கேட்டால்

என்ன செய்வாள்.?

ஆயிரம் ஆசைகள் மனதில் இருந்தாலும்

மனம் கவர்ந்தவனிடம் மனதில்

உள்ளதை சொல்லமுடியாமல்

பரிதவித்து நிற்கிறாளே இப்பேதை!!!!!!!



DO NOT COPY

**அத்தியாயம்-24**

**வெற்றி சென்னை செல்ல,விபீஷும் வினுவும் திருச்சியில் இருக்க,வேந்தனோ மதியே கதி என கிடந்தான்.**

**மருத்துவமனையில் இருந்த 5 நாட்களில் ஒரு புதுவிதமான வேந்தனை கண்டாள் மதி.**

**சாப்ட்டியா,இல்லயா என்று கூட கேட்க தெரியாத வேந்தன் இன்று மதிக்கு ஊட்டிவிட்ட பின்பே அவன் உண்டான்.விபீஷ் கூட விளையாட்டிற்கு "நண்பா...இப்படி சட்டுன்னு மாறி எங்களுக்கு அதிர்ச்சி கொடுக்காத.......எங்கனால தாங்க முடியல" என சொல்ல**

**அதை கேட்டு மதி சிரிக்க**

**"சும்மா இருடா....சாப்பிடும்போது பேசிகிட்டு ....அவ சாப்பிட்ரதே கொஞ்சம் ......அதிலயும் நீ பேசி பேசி சிரிச்சு அவ சாப்பிட மாட்டேன்கிறா.....இரண்டு உசிருலடா...நல்ல சாப்பிட்டாத்தானே ஆகும்" ...... என அவனை அடக்க**

**"ஆஹா......இதெல்லாம் ரொம்ப ஓவர் மயிலு....உன்ற மாமா அநியாத்துக்கு நல்லவனா மாறான்........இது எங்க போய் முடியுமோ ....ஆனா மயிலு இந்த குழந்தை பிறக்குற வரை உனக்கு ராஜா உபசாரம்தான்....நல்ல அனுபவிச்சுக்கோ......எல்லாம் இந்த குழந்தைக்காக...அப்புறம் மறுபடியும் விருமாண்டி அவதாரம் தான் ...இல்ல நண்பா" என சிரித்து கொண்டே சொல்ல**

**"ஏண்டா....என அவனை பார்த்து முறைத்தவன் மதியை தன தோளோடு அணைத்து என் முதல் குழந்தை இவதாண்டா......இவளுக்கு அப்புறம் தான் எல்லாமே" என சொல்ல,அவன் தோளில் சிறித்து கொண்டே மதி சாய ஆனால் அவள் மனதில் குழந்தைகாகதான் எல்லாமா என ஒரு புது எண்ணம் பதிந்து போனது.**

**"ஆஹா ஆரம்பிச்சுட்டாங்கடா இவங்க ரொமான்சே ...இனி எஸ்கேப் ஆகிட வேண்டியதுதான்" என சொன்னவன் சிறிது நேரம் பேசி விட்டு கிளம்பினான்.**

மறுநாள் விடிகாலையிலே விபீஷின் அலைபேசி ஒலிக்க ,ஒருத்தன நிம்மதியா தூங்க விடமாட்டாங்கலே என சலித்து கொண்டே அலைபேசியை எடுத்தவன் அதில் இருந்த பெயரை பார்த்தும் ஒரு நிமிடம் அதிர்ந்தவன் பின்னர் சிரித்து கொண்டே.....” என்னது இது அதிகாலை சூரிய உதயத்திற்கு பதிலா சந்தரோதயம் வந்திருக்கு”........என கிண்டலாக கேட்க

“என்ன பார்ட்னெர் எனக்கே நக்கலா” என எதிர்புறத்தில் இருந்து பதில் வர

“ஹஹஹா என சிரித்தவன் நக்கலும் இல்லை,விக்கலும் இல்லை...எதுக்கு கூப்பிடிங்க ...அது என்ன புதுசா பார்ட்னெர்” என கேட்க

“நம்ம போட்ட திட்டத்திற்கு உங்களோட சப்போர்ட் ரொம்ப தேவை. இந்த ஆப்ரேஷன் முடியும் வரை நீங்க தான் என்னோட பார்ட்னர்”....என அவள் சாதரனமாக சொல்ல

“என்னது ஆப்ரேஷனா ...ஹலோ என படுக்கையில் இருந்து வேகமாக எழுந்தவன் .......என்னங்க நீங்க பாட்டுக்கு என்னென்னமோ சொல்றிங்க.........என்ன திட்டம் யார் போட்டா.........ஏங்க நான் சின்ன பையங்க...நீங்க எல்லாம் ஆபாயில் கட் பண்றதுக்கே அருவா எடுக்கிற ஆளுங்க... நான் ஆரஞ்சு மிட்டாய் சாப்டவே அரை நாள் யோசிக்கிற ஆளு .......வேண்டாம் இந்த விபரீத விளையாட்டு.....தூங்கிட்டு இருந்தவனை எழுப்பி இப்படி பீதிய கிளப்பரிங்க”......என அவன் அலற

“என்ன விபீஷ் உங்களை பத்தி உங்கள் நண்பர் எவ்ளோ புகழ்ந்து சொல்றார்.........நீங்க என்னடானா இப்படி சொல்றிங்க.... காலேஜ்ல பார்வையாலே பல பேர கதறி ஓட வச்சிருக்கிங்கலாம்..... .....நீங்க போய் எங்ககிட்ட......என்ன பார்ட்னெர்......எங்க கேப்டனா உங்களதான் போடலாம்னு இருக்கோம்” என எதிர்புறம் இருந்து பதில் வர

“எனதூஊஊஊ .....நானா....அச்சோ அப்போ எனக்கு மெட்ராஸ் ஐங்க... அதனால எல்லாரும் ஓடுனாங்க........இந்த புரளியை யார் கிளப்புனது.”....என புலம்பியவன்

“நிலா உங்களுக்கு என்ன வேணும்....இப்படி காலையில எழுப்பி எதுக்கு பீதிய கிளப்ரிங்க ” என சீரிசாக கேட்க

நிலாவும் “சாரி பார்ட்னெர்...உங்க தூக்கம் கலையட்டுமேனுதான் கொஞ்சம் கலாய்ச்சேன்.நான் KK வோட சேர்ந்து ப்ராஜெக்ட் வேலை செய்ய போறேன்......அவருக்கு வேற பஞ்சுவாலிட்டி ரொம்ப முக்கியாமாம் .....நானும் இன்னைக்கு தான் சூரியஉதயத்தை பார்த்தேன்.....அவரை பத்தி நினைக்க தூக்கமே வரலை ........ஒரே பதட்டமா இருக்கு............. அவரை பத்தி தெரிஞ்சுக்லாம்னுதான் உங்களுக்கு போன் பண்ணினேன் ....ஏன்னா ஏற்கனவே எங்க சந்திப்பு அடிதடில தான் ஆரம்பிச்சிருக்கு........மறுபடியும் சொதப்ப கூடாது இல்லயா அதான்”....என சொன்னாள்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த விபீஷ் பின்னர் நிலா நான் சொல்றேன்னு தப்ப எடுத்துகாதிங்க..... நீங்க மனசில ஏதோ நினசுகிட்டு தான் இப்படி பேசறிங்க....நான் வெளிபடையாவே பேசறேன்.........வெற்றியோட குணத்துக்கும் உங்க குணத்துக்கும் ஒத்து வராது.இது சினிமா இல்லை...பார்த்த உடனே பிடிச்சு உடனே திருமணம் பண்ண......வேண்டாம் நிலா.......அவன் ரொம்ப கஷ்டப்பட்டு முன்னேறிகிட்டு இருக்கான்.....அவனோட கனவுகளும் லட்சியமும் வேற .....உங்க விளையாட்டுக்கான ஆள் நாங்க கிடயாது.......சுரேந்தர் சார் தங்கை அப்டிங்கிறதால கொஞ்சம் ப்ரீயா பேசினோம்....மேலும் அவன் ஆரம்பத்துல இருந்தே உங்க மேல கோபமா இருக்கான்.......இது ஒத்துவராது....”என மெதுவாக அதே சமயத்தில் அழுத்தமாகவும் சொன்னான்.

எதிர்புறத்தில் இருந்து பதில் வராமல் மௌனமாக இருக்க

“நல்ல யோசிங்க நிலா......உங்களுக்கே புரியும்.....சுரேந்தர் சார் பற்றி வெற்றி எங்ககிட்ட நிறைய சொல்லி இருக்கான்....அவரோட பணபலம்,படைபலம் எல்லாம் தெரியும்......இந்த மால் எங்க நான்கு பேரோட வாழ்க்கையின் ஆணி வேர்.....உங்கனால அது சிதஞ்சிடபோகுது....வேண்டாம்....எங்களை விட்டுட்டுங்க.... உங்களோட குணத்துக்கும்,நல்ல மனசுக்கும் ஏத்த கோட்டீஸ்வரனை உங்க அண்ணா கண்டிப்பாக கொண்டு வருவார்.......அவரு வெற்றிய விட

ஆயிரம் மடங்கு சிறந்தவரா இருப்பார்.......இதை ஒரு பிரிண்டா உங்களுக்கு சொல்றேன்".....என்றவன் பதிலை எதிர்பார்க்காமல் அலைபேசியை வைத்து விட்டான்.

கேட்டு கொண்டிருந்த நிலாவின் மனமோ பல கேள்விகளால் தடுமாற நன்றாக யோசித்தவள் பின்னர் முகத்தில் ஒரு தெளிவுடன் மனதில் உறுதியுடன் அலைபேசியில் எண்ணை அழுத்தினாள்...... நான் நிலா பேசுகிறேன் என்றவள் தன் மனதில் உள்ளதை எல்லாம் சொல்ல,அதற்க்கு எதிர்புறத்தில் இருந்து என்ன பதில் வந்ததோ இவள் அதை மறுத்து பேச ஒரு நீண்ட கார சாரமான பேச்சவார்த்தைக்கு பிறகு சற்று சோர்வுடன் அலைபேசியை கீழே வைத்தாள்.

மதி மருத்துவமனையில் இருந்து கிளம்பும்  நாளில் வேந்தனை மருத்துவர் அழைக்க உள்ளே சென்ற வேந்தன் சிறிது நேரத்தில் ஒரு தெளிவுடன் திரும்பி வந்தான்.

மருத்துவமனையில் இருந்து கிளம்பும்போது வேந்தன் விபீஷிடம் ......"டேய் வேலை எல்லாம் சரியா நடக்குதானு எனக்கு அப்போ அப்போ மெயில் பண்ணு......சில சமயம் போன் எடுக்காது......அதனால எனக்காக காத்திருக்க வேண்டாம்....எந்த முடிவா இருந்தாலும் நீயே எடுத்திடு" ...என சொல்லி கொண்டிருக்க

அருகில் நின்று கொண்டிருந்த மதி......வீட்டுக்குத்தான போறோம் மாமா.....வீட்டுக்கு வர சொன்னா வந்திடுவார்.....இங்கே எதுக்கு இப்படி ஸ்கூல் பையனாட்ட அண்ணாவ நிக்க வச்சு சொல்லிட்டு இருக்கீங்க" என கேட்க

"மயிலு நீயா இப்படி பேசற.......ம்ம்ம்....நல்ல முன்னேற்றம்....நண்பா நீ கூட இருந்தா இந்த முனேற்றம்....நம்ப முடியலேயே" என விபீஷ் சொல்ல

"ஏண்டா......சும்மா இரு என்றவன் நீ முதல்ல கார்ல ஏறு மதி......சும்மா தொனதொனனு பேசிட்டு" என வேந்தன் அதட்டல் போட

அவனை முறைத்து கொண்டே காரில் ஏறியவள்  ..."அதான் அண்ணா சொன்ன மாதிரி விருமாண்டியாவது  திருந்தறதாவது "என அவள் வாய்க்குள் முனக

**"என்ன...என்ன முனு முனுங்கிற" என ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்த படி அவன் கேட்க**

**"ஹிஹி.......ஒண்ணுமில்ல மாமா" என்றவள் அமைதியாக இருந்தாள்.**

**"உனக்கு தூக்கம் வரும்....இந்தா என சின்ன தலையணை எடுத்து கொடுத்தவன் பேசாம தூங்கு" என்றான்.**

**"வேண்டாம் மாமா பக்கத்துலதான வீடு....அங்க போய் தூங்கிக்கிறேன்" என சொல்ல**

**"நான் சொல்றது ஏதும் கேட்ககூடாதுன்னு முடிவு பண்ணிட்டியா ....பேசாம கண்ணை மூடி தூங்கு" என மிரட்ட**

**"என்ன மாமா ஓவரா மிரட்ரிங்க என வேகமாக கேட்டவள் .....பேசாம ஆஸ்பத்திரில இருந்திருகலாமாட்ட இருக்கு" என புலம்ப**

**"என்ன சொன்ன"..... என அவன் வேகமாக கேட்க**

**"ஒண்ணுமில்லை....இப்படி கேள்விகேட்டா எப்படி தூங்கிறது.......நான் தூங்கிட்டேன்" என்றவள் மருந்தின் வேகத்திலும் உடலின் அசதியிலும் உடனே உறங்கிவிட்டாள்.**

**சிறிது தூரம் சென்றதும் கண் விழிக்க வண்டி NH7 ள் வேகமாக சென்று கொண்டிருக்க**

**"இன்னும் வீடு வரலையா மாமா....என்ன மாமா வழி மாறி போறீங்க....வீட்டுக்குத்தான போறோம்" என கேட்க**

**"ம்ம்ம்ம்....நீ சொன்ன பேச்சை கேட்க மாட்டேன்கிற ...அதான் மறுபடியும் ஆஸ்பித்திரிக்கே போறோம்" என என்றான் அவன்.**

**"அய்யோ ...வேண்டாம் மாமா.....நான் இனிநீங்க சொல்றத கேட்டுகிறேன்......அந்த நாத்தம் எனக்கு பிடிக்கலை....என்னால படுத்தே இருக்க முடியல" என புலம்பியவள்**

**சட்டென்று "மாமாஆஅஆஆஆஆஆ !!!!!!!!! என அலற**

**சட்டென்று வண்டியை நிறுத்தியவன் "...என்னாச்சு மதி"........என பதற**

**“நம்ம வளையாபலத்திற்க்கா போறோம்” என கேட்கும்போதே முகத்தில் சந்தோசம் மின்ன ,கண்களில் கண்ணீர் நிற்க**

**“அவளை பார்த்து முறைத்தவன் இதுக்கு தான் இந்த கத்து கத்தினியா.....ஏண்டி இப்படி பன்ற..... என சொன்னவன் சிரித்து கொண்டே அப்படியா ...இல்லையே என் பொண்டாட்டி ஊருக்கு போறோம்” என சொல்லி கொண்டே வண்டியை கிளப்பினான்.**

**வேகமாக இரு கைகள் அவன் முகத்தை இழுத்து அதில் முத்தத்தை பதிக்க**

**“ஏஈஈஈஈஈஈஈஈஈ ...என அலறியவன் ...அவளிடம் இருந்து விடுபட்டு வண்டி ஓட்டிட்டு இருக்கேண்டி.....நீ பாட்டுக்கு இழுத்து முத்தம் கொடுக்கிற” என கண்களை சாலையில் கவனம் வைத்துகொண்டு அவளை திட்டினான்.**

**அவள் அதை பற்றி கண்டு கொள்ளாமல் அவன் மேல ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு**

**“மாமா...மாமா.....’.என மெதுவாக அழைக்க**

**“உன் மாமா தான் சொல்லு “என்றான்.**

**“இன்னைக்கு காலைல தான் அம்மா நியாபகம் வந்துச்சு மாமா......இந்த விஷயம் தெரிஞ்ச உடனே அவங்க எவ்ளோ சந்தோசபட்டுருபாங்க.......ஆனா எனக்குதான் அந்த கொடுப்பினை இல்லேயே” என சோகமாக சொல்லி கொண்டிருக்க**

**வண்டி நேராக அவள் பிறந்த வீட்டிற்கு முன்னாள் போய் நிற்க ....அங்கு ராக்காயி ஆத்தை அவளை அன்புடன் வரவேற்க வெண்மதியோ மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றாள்..வேந்தன் முன்னறே சொல்லி இருந்ததால் வீடு சுத்தமாக இருக்க ,உறவினர்கள்,ஊர்காரர்கள் அனைவரும் வெண்மதி உண்டாகி இருப்பதில் தங்கள் சந்தோசத்தை பகிர்ந்து கொண்டனர்.**

**அனைவரும் சென்ற பின் கணவன் மனைவி இருவர் மட்டுமே இருக்க**

DO NOT COPY

நடந்த நிகழ்வுகள் நெஞ்சில் நிறைந்திருக்க,முகத்தில் சந்தோசம் வழிய ,கண்களில் காதல் பொங்க.....,தாய்மையில் உடல் மிளிர தன்னவனை வைத்த கண் வாங்காமல் பார்த்த வெண்மதி மாமா என அழைத்தவள் அவன் அருகில் வந்ததும் அவன் மடியில் படுத்து அவனது வயிற்றை இறுக்க பற்றியவள் அப்படியே கண்மூடி படுத்திருந்தாள்.

அவளது தலை முடியை மெதுவாக தடவி விட்டவன் ...."மதிம்மா......மதிம்மா என்ன இது .....எவ்ளோ நேரம் இப்படியே படுத்திருப்ப....மெத்தையில படுத்துகிரியா" என பாசத்துடன் கேட்டான்.

அவள் மறுத்து தலை இங்கும் அங்கும் ஆட்ட

"என்ன இது சின்னபிள்ளையாட்டம்.....ஊருக்கு வந்திட்டா போதும் ரொம்ப செல்லம் பன்ற நீ" என அவன் அன்புடன் கடிந்து கொண்டவன்

"மதி இன்னும் உனக்கு உங்க அப்பா...அம்மா நியாபகம் வருதா என தான் செய்வது அவள் பெற்றவர்கள் செய்வதை போல் இருக்கிறதா "என்று தெரிந்து கொள்ளும்  ஆவலோடு அவன் கேட்க

நிமிர்ந்து அவனை பார்த்தவள் ....மாமா என சொன்னவள் வேகமாக அவன் மடியில் உட்கார்ந்து அவனை இறுக்க கட்டி பிடித்தவள் ...".எனக்கு யாரும் வேண்டாம் மாமா.....நீங்க மட்டும் போதும் மாமா" என்றவள் அதற்க்கு மேல் சொல்ல முடியாமல் அழுகை வந்தது.

அவள் சொல்ல வந்ததை சொல்லாமலே புரிந்து கொண்ட அவள் மணாளன் அவளை தன் நெஞ்சோடு அணைத்து கொண்டான்.

சிறிது நேரம் அப்படியே இருந்தவர்கள் பின்னர்........."குட்டிமா கொஞ்சம் கீழே இறங்கு....உனக்கு ஜூஸ் பிழியணும் "என அவன் சொல்ல

"அச்சோ ....சாரி மாமா....ரொம்ப வலிக்குதா" என அவசர அவசரமாக கீழே இறங்க

"ஹே முதல்ல இப்படி அவசரபட்றத நிறுத்து........எதா இருந்தாலும் மெதுவா செய்யணும்....இல்லையினா வயித்துல இருக்க குட்டி பாப்பா பயப்படும்" என்றான்.

“ஆஹா...மாமா உங்களுக்கு இதெல்லாம் தெரியுமா” என ஆச்சரியப்பட்டு கேட்க

“என்ன மதி நீ....இந்த மாமன பார்த்து இப்படி கேட்டுபுட்ட.......அங்க பாரு ” என காட்ட

அங்கு கருவுற்ற நாளில் இருந்து குழந்தை பிறந்து ஐந்து வயது ஆகும் வரை என்ன செய்யவேண்டும் சம்பந்தம்மான ஒரு புத்தக மூட்டையே இருக்க

“என்ன மாமா...இது.......எப்ப வாங்கினிங்க” என அவள் ஆச்சரியமாக கேட்டாள்.

அதெல்லாம் அப்பவே வாங்கிட்டேன்....வேந்தன் குழந்தைனா சும்மாவா.....இனி பாரு அய்யோவோட திறமைய” என சந்தோசத்துடன் அவன் பேசி கொண்டிருக்க

உடனே அவள் “ஏன் மாமா அப்போ குழந்தைகாகதான் இது எல்லாமே ....இந்த பாசம் ,நேசம் எல்லாம்”.........என கேட்டவள் அதுவரை முகத்தில் இருந்த சந்தோசம் நொடிபொழுதில் மறைந்து ஏமாற்றம் குடிகொள்ள ,வேதனையுடன் வெளி திண்ணையில் சென்று அமர்ந்தாள்..

சந்தோஷ சங்கீதம் ஒலித்து கொண்டிருந்த இடத்தில் அபஸ்வரம் போல் மதியின் பேச்சு அமைய அதிர்ந்த வேந்தன் வெண்மதி என அழைக்க

அவள் ஏதும் பேசாமல் வாயில் தூணில் சாய்ந்து அமர்ந்தாள்..

மெதுவாக அவள் அருகில் வந்து அமர்ந்தவன் அவளையே பார்த்து கொண்டிருக்க

அவள் அவனை பார்த்ததும் முகத்தை திருப்பி கொள்ள

“இந்த மாமாவ பார்க்க உனக்கு அவ்ளோ வெறுப்பா இருக்கா மதி” என வேதனையுடன் கேட்டான் வேந்தன் .

திரும்பி அவனை முறைத்தவள்......”பேச்சை மாத்தாதிங்க மாமா.....நீங்க தான் அப்படி நடந்துகிரிங்க....இப்போ இந்த குழந்தைகாகதான் என் மேல பாசமா நடந்துகிரிங்க” என ஆரம்பித்தவள் அது வரை தன்



DO NOT COPY

மனதில் அடக்கி வைத்திருந்த அனைத்தையும் கொட்டி தீர்த்து விட்டாள். அவள் பேசியதை கேட்டு அவன் அயர்ந்து விட்டான்.

ஒரு பெரிய அலை அடித்தது போல் அவள் பேசி ஓய்ந்ததும்,அந்த அலையில் சிக்கிய சிறு துரும்பை போல் சுழன்று சுக்குநூறாக போனான் வேந்தன்.

அப்படியே சிலை போல் அமர்ந்திருந்தவன் எழுந்து வெளியே கிளம்பினான்.

கட்டிட்டத்தில் வேலை நடந்து கொண்டிருக்க அதை பார்த்து கொண்டிருந்த வெற்றி அலை பேசி ஒலித்ததும் எடுத்து பார்க்க அதில் நிலாவின் பெயர் வர இவளோட தொல்லையா போச்சு என சொல்லி கொண்டே காதில வைத்தவன் ஏதும் பேசாமல் இருக்க

“ஹலோ நான் நிலா பேசறேன்...”என்றதும் அவன் பதில் சொல்லாமல் அமைதியாக இருக்க ...”ஹலோ நான் நிலா பேசறேன்” என மறுபடியும் அவள் சொன்னாள்.

“தெரியுது....சொல்லுங்க” என அவன் சொல்ல

“என்ன வெற்றி உங்க போன்ல என் முகம் தெரியுதா.......ஆச்சிரியமா இருக்கு ....அச்சோ முன்னே தெரிஞ்சுருந்தா கொஞ்சம் மேக்கப் போட்டு வந்திருப்பேன்....பரவயில்லை.....இன்னைக்கு அட்ஜஸ்ட் பண்ணிக்குங்க” என அவன் எடுத்த உடன் பதில் சொல்லாமல் அவள் இரண்டு முறை அழைத்த பிறகும் ஒரே வார்த்தையில் பதில் வர அந்த ஆத்திரத்தில் அவள் நக்கலாக பேச

“ஹலோ உங்க குரல் கேட்குதுன்னு சொன்னேன்” என அவனும் அவளது நக்களை புரிந்து கொண்டு கோபமாக பதில் சொன்னான்.

“இதை முன்னடியே சொல்றதுக்கு என்ன என முனகியவள்,சில ப்ராஜெக்ட் சம்பந்தமா உங்ககிட்ட கொஞ்சம் சந்தேகம் கேட்கணும்.......எப்ப வரட்டும்” என்றாள்.

“என்ன சந்தேகம் “ என அவன் கேட்க

அவள் விபரம் சொன்னாள்..

“இவ்ளோதானா....இதுக்கு நீங்க வர வேண்டாம்....ரெபரன்ஸ் புக்ஸ் எல்லாம் நான் மெயில் பண்ணிவிடறேன் பார்த்து தெரிஞ்சுக்குங்க” என கூறிவிட்டு போனை வைத்தான்.

“ஆமா இவரு பெரிய இவரு ....புக்ஸ் எல்லாம் அனுப்பி வைகிறாராம்......நாங்க பார்க்கிறதாம்....இது எங்களுக்கு தெரியாதா” என திட்டி கொண்டே அவள் கணினி முன் அமர

“என்ன தல தானா புலம்பிட்டு இருக்கீங்க .......என்னாச்சு.....எப்பவும் உங்ககிட்ட பேசிட்டு வெளியே வறவந்தான் இப்படி புலம்புவான்.....ஆனா இப்போ நீங்களே இப்படி புலம்பரிங்க.....உங்களையும் மிஞ்சிற அளவுக்கு ஒருத்தன் பேசிட்டானா” என அருகில் இருந்த மது கேட்க

“வேண்டாம் போய்டு....நானே செம கோபத்துல இருக்கேன்”... என திட்டியபடி அவனுக்கு விபரங்களை மெயில் அனுப்பினாள்..

அவளிடம் பேசி முடித்து போனை வைத்தவன் ஒரு பெரிய மலையையே தகர்த்துவிட்டதை போல் உணர்ந்தான்.இன்னைக்கு தப்பிச்சோம்......நாளைக்கு எப்படியோ என நினத்தவாரே வேலையில் கவனம் செலுத்தினான்.

நிலாவும் தொடர்ந்து ஒரு வாரம் அவனை பார்ப்பதற்கு முயற்சி செய்ய வெற்றியும்,வெளியில் இருக்கிறேன்........,மெயில் அனுப்பு......நானே உன்னை கூப்பிடுகிறேன் என சொல்லியே தட்டி கழித்தான்.

அன்று அஸ்த்திவாரத்துக்கு பெல்ட் கான்க்ரீட் போடுவதால் நேரமாக வெற்றி சைட்டுக்கு வந்து விட ....போனை அலுவலக அறையில் வைத்து விட்டு மேற்பார்வை பார்த்து கொண்டிருந்தவன் ஒரு சில இடங்களில் பள்ளம் வர அவனே குழியில் இறங்கி அதற்க்கு தீர்வு சொல்லி கொண்டிருந்தான்.

அப்போது ஒரு கார் வந்து நிற்க அதில் இறங்கிய 5 பெண்கள் வேகமாக நடந்து வர

“ஏம்மா ...அங்க சிமென்ட் தளம் இப்பதான் போட்டுச்சு....போகாதிங்க” என மேஸ்தரி சொல்ல சொல்ல அவர்கள் நடந்து சென்றனர்.

**“ஏய் பொண்ணு சொல்றேன்ல....நீ பாட்டுக்கு போயிட்டு இருக்க “ என அவன் சத்தம் போட**

**என்னது ஏய் யயயயயாய என ஒருத்தி திரும்பி பார்க்க**

**ஏஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஎன் இன்னொரு குரல் மேஸ்த்ரியை பார்த்து ஒலிக்க**

**ஏஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈஈ என மற்றொரு குரல் அதைவிட அதிகமாக ஒழிக்க**

**இது போல் நான்கு பெண்களும் ஒவோவோருத்தராக குரல் கொடுக்க**

**வேலை செய்து கொண்டிருந்த அனைவரும் அவர்களை வேடிக்கை பார்த்தனர்.**

**சத்ததை கேட்டு “ஏய் யாரது இப்படி கத்தறது.... என வெற்றி குழியில் இருந்து சத்தம் போட**

**அது தெரியாமல் மறுபடியும் யாரோ திட்டுகிறார்கள் என எண்ணி**

**உடனே வெண்ணிலா.........”எவன் அவன் ....ஏய் என்ன திமிரா” என வேகமாக சொல்லியபடி குழியில் குனிந்து பார்க்க அங்கு வெற்றி நின்று கொண்டிருந்தான்.**

**அவனை பார்த்தும் “பாஸ் நீங்களா ...குட்...குட் மார்னிங் பாஸ் ,....உங்களை பார்க்க தான் வந்தோம்” என திக்கி திணறி உலறியவள் வேகமாக கைகளை நெற்றியில் வைக்க அப்போது கையில் இருந்த பர்ஸ் தவறி வெற்றியின் மீதே விழ**

**அவனது பார்வையில் அவள் மிரண்டு போனாள்..**

**“சாரி...சாரி “என சொல்லி கொண்டிருக்க**

**அதற்குள் அவளது தோழிகள் தல எங்க அந்த நாட்டாமையா காணோம்.....உங்களை பார்த்த உடனே பயந்து ஓடி போயிட்டாரா......நாங்க அப்பவும் சொன்னோம்......உங்களுக்கு கைடேன்ஸ்க்கு வேற ஆளா கிடைக்கல.......இவரு சொன்னா சரியா இருக்கும்னு சொன்னிங்க.......பாருங்க காணோம்” என சொல்லி விட்டு திரும்பியவர்கள் பின்புறத்தில் குழியில் இருந்து மேலே வெற்றி வர**

அவனை பார்த்ததும் அனைவரும் ஏதும் பேசாமல் அமைதியாகினர்.

வெண்ணிலாவோ தலையை குனிந்தவள் நிமிராமல் அப்படியே நின்று கொண்டிருந்தால்.

“சுவர் இல்லாம கட்டிடடம் கட்ட முடியுமா” என அவன் கேட்க

சம்பந்தம் இல்லம் பேசுகிறானே என நினைத்து அவள் நிமிர்ந்து பார்த்தாள்

“நீ நகர்ந்தா தான் அங்க கல்லு வச்சு சுவர் கட்ட முடியும்......உங்களோட கட்டிடமா இருந்தாலும் வேலை நாங்க செயறோம்...கூலி நாங்க கொடுக்கணும்....உன்னை வேடிக்கை பார்க்கிறதுக்கு எல்லாம் நாங்க கூலி கொடுக்க முடியாது” என வெற்றி கோபமாக சொல்ல

அப்போது தான் கவனித்தாள்...அவள் கான்க்ரீட் சுவற்றின் மேல் நின்று கொண்டிருந்ததை .......வேகமாக நகர்ந்தவள் “மத்தவங்க வேடிக்கை பார்க்கிற அளவுக்கு என்னைக்கும் நாங்க நடந்துக்க மாட்டோம்” என முகத்தை சுளித்து கொண்டு கோபமாக சொன்னவள்

“உங்களை பார்க்க வந்தோம்....நீங்க குழில கிடப்பிங்கனு என்றவள் அதற்குள் அவள் தோழிகள் சிரித்து விட சாரி குழிக்குள்ள இருப்பிங்கனு எங்களுக்கு எப்படி தெரியும்......அதான் தெரியாம பேசிட்டோம்” சிரிப்பை அடக்கியபடியே சொல்லி முடித்தாள்.

“ஆமா நானும் கேட்டேன்...என்னென்னே வார்த்தை தெரியாம பேசினிங்கனு” என சொல்லி கொண்டு அலுவலக அறை நோக்கி அவன் நடக்க அவர்களும் பின் தொடர்ந்தனர்.

அங்கு சென்று இருக்கையில் அமர்ந்தவன் அவளை நிமிர்ந்து பார்க்க ப்ளாக் ஜீன்,ரெட் குர்தா, குளிங்க்லாஸ் ,லூஸ் ஹேர் என ஸ்டைலாக அவள் நின்று கொண்டிருக்க ....”ஆமா எதுக்கு வந்திங்க......நான் தான் போன் பண்ணுனு சொல்லிருகேன்ல ... சொல்லாம எதுக்கு வந்த” என கேட்டான்.

“நானும் உங்களுக்கு நிறையா டைம் கூப்பிட்டேன்....நீங்க போன் அட்டென்ட் பண்ணவே இல்ல....அதான் நேர்ல வந்திட்டேன்”....என அவளும் சொன்னாள்.

**“ம்ம்ம்ம்....ஆமா நீ வந்த சரி....இவங்க எல்லாம் எதுக்கு ....நீ என்ன பெரிய அரசியல்வாதியா.....நாலு,அஞ்சு அல்லகைகலோடதான் சுத்துவியா” என அவன் கிண்டலாக கேட்டான்.**

**அவங்க எல்லாம் என் தோழிகள் ...அல்லகைகள் இல்லை....என கோபமாக சொன்னவள் .....இங்க பாருங்க....நான் ஹாஸ்டெல்ல வளர்ந்த பொண்ணு....எங்க போனாலும் தோழிகளோடு தான் போவேன்.... ......அண்ணா வந்தா கூட அப்டிதான்......அதான் என தான் செய்ததை  அவள் நியாயபடுத்தவது போல் பேசினாள்.**

**“முதல்ல இவங்களை எல்லாம் அனுப்பிட்டு வா நீ” என அவன் ஆர்டர் போட**

**அதற்குள் ஜூடி ...”நிலா நாங்க கிளம்பறோம்......இந்த ஆள் ரொம்ப ஓவரா பண்றான் ....எதவது பிரச்சனைனா உடனே கூப்பிடு வந்திடறோம்” என சொல்லி விட்டு அனைவரும் கிளம்பினர்.**

**அவர்களை அனுப்பி விட்டு வேகமாக உள்ளே வந்தவள் .........”ஏன் வெற்றி இப்படி பண்ணிங்க....பாருங்க என் தோழிகள்  எல்லாம் கோவிச்சுட்டு போறாங்க “என ஆத்திரத்துடன் சொன்னவள்**

**“என் மேல கோபம் இருந்தா என்னை மட்டும் திட்டுங்க....என் தோழிகளை  ஒன்னும் சொல்லாதிங்க.....நான் தான் அவங்கள் கூட்டிட்டு வந்தேன்........அவங்க முன்னாடி உங்கள திட்ட கூடாதுனுதான் ஏதும் சொல்லல......அவங்க என்னை பத்தி என்ன நினைப்பாங்க”  என வருத்தமாக சொல்லி முடித்தாள்.**

**“வெற்றிக்கே ஒரு மாதிரி போய்விட.....ஹே நிலா என்ன இது......நீயே பார்த்தில....இன்னைக்கு அவங்க சைட்டுல பண்ண கூத்த......எல்லாரும் வேலை செய்யாம உங்களையே பார்த்தாங்க.....அதுக்குதான் சொன்னேன்” என பக்குவமாய் எடுத்து சொல்ல**

**“இல்ல வெற்றி....நீங்க போன் எடுத்திருந்தா கேட்டுட்டு தான் வந்திருப்போம்....எடுக்காதனாலதான்’ என அவள் மறுபடியும் அதையே சொன்னாள்.**

DO NOT COPY

“சரி விடு…இப்ப என்ன வேணும்…….எதுக்கு வந்திருக்க” என அவன் விஷயத்திற்கு வந்தான்.

“இல்ல கன்ஸ்ட்ர்கசன்  அசைன்மென்ட் ஒன்னு இருக்கு……அது நேர்ல பார்த்து தான் எழுதணும்….அதான் நம்ம பில்டிங்கே இருக்குல்ல பார்த்துகலாம்னு வந்தேன்” என அவள் வந்த காரணத்தை கூறினாள்.

அவனுக்கும் அது புரிய…”சரி…சரி…….இன்னைக்கு பெல்ட் கான்க்ரீட்…சீக்கிரம் வேலை முடிஞ்சுடும்….நீ நாளையில இருந்து வா…….பார்க்கலாம்” என்றான்.

அவள் ஏதும் பேசாமல் அப்படியே நிற்க

“ஏன் என்னாச்சு” என அவன் கேட்க

“இல்ல பரவயில்லை…….நான் வேற பக்கம் பார்த்துகிறேன்………ரொம்ப தேங்க்ஸ்” என சொல்லி விட்டு அவள் நகர

அவளையே பார்த்து கொண்டிருந்தவன்……நிலா என அழைக்க …அவள் திரும்பி பார்க்காமல் நடக்க வெண்ணிலா என மறுபடியும் அழுத்தி அழைக்க

அவள் திரும்பி பார்க்க …..”நாளைக்கு நீ வர ….என்ன புரிஞ்சுதா” என ஒவொவொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்து அவன்  சொல்ல

அவன் முகத்தை பார்த்துகொண்டே “யோசிக்கிறேன் “என அசால்ட்டாக சொல்லி விட்டு விறு விறுவெண்டு நடந்தாள்….

அவள் செல்வதையே பார்த்து கொண்டிருந்தவன் இதழில் புன்னகை மலர இந்த சண்டைகோழியோட சண்டை இல்லாம இருக்கிறது ரொம்பபபபப  கஷ்டம் என மனதிற்குள் சொல்லியவாரே வேலை செய்யும் இடத்திற்கு சென்றான்.

தோழிகள் அனைவரும் சென்று விட தனியாக காரில் அமர்ந்தவள் மனம் கோபத்தில் கொந்தளிக்க……..  இவன் மனசுல என்ன நினச்சுட்டு இருக்கான்….ரொம்ப தான் மிரட்றான்……ஏதோ மனசுல நினச்சுட்டமே….போனா போகுதேன்னு பார்த்தா……இவன் ரொம்ப தான் சீன போடறான்….இருடா மவேனே….நாங்க எல்லாம் ஒபாமாவுக்கே



DO NOT COPY

**ஓமத்திரம்  கொடுக்கிற ஆளுஙக.....எங்களுக்கே நீ கோலா கொடுக்கிரியா என பொருமியவள் தனது கோபம் முழுவதையும் வண்டியில் காட்ட அதை தூரத்தில் இருந்து  பார்த்து கொண்டிருந்த வெற்றியின் முகத்தில் சிந்தனை முடிச்சுகள் விழுந்தன.**

**ஒரே நேர்கோட்டில் பயணம் செய்தால்**

**அதில் சுவாரசியம் இருக்காது.**

**வாழ்க்கை என்பது மேடு பள்ளம் நிறைந்தது.**

**தெரியாமல் செய்த தவறை**

**திருத்திக்கொள்ள நினைக்கிறான் அவன்.**

**அவளோ இதுவரை நடந்த தவறுகளுக்கு**

**விடை தேட முற்படுகிறாள்.**

**புண்பட்ட இடத்தின் வடு தெரியாமல்**

**அழித்துவிட துடிக்கிறான் அவன்.**

**அவளோ வலியின்  ரணத்தை**

**அவன் உணர வேண்டும் என நினைக்கிறாள்.**

**தவறை  நினைத்து வருந்துபவர்களுக்கு**

**மன்னிப்பு உண்டு மன்னிப்பவனே**

**மனிதன் என்கிறான் அவன்.**

**ஆனால் இது  தவறு செய்பவர்கள்**

**தங்களுக்கு சாதகமாக எடுத்து**

**கொள்ளும் ஆயுதம் என்கிறாள் அவள்.**



DO NOT COPY

**இதில் எது சரி? தீர்ப்பு உங்கள் கையில் தோழிகளே**

**அத்தியாயம் -25**

**வேந்தன் ஊரில் இருந்து திரும்பி விட வினுவும் வேந்தனும் அலுவலகத்தில் இருக்க........ விபீஷும் ராஜும் சைட் வேலை பார்த்தனர்.அன்று மதியம் வினு மட்டும் தனியாக இருக்க சீக்கிரம் வந்த ராஜ்....... வினு சோகமாக ஏதோ யோசனையில் அமர்ந்திருப்பதை பார்த்தவன் அவள் அருகில் சென்று நின்றான்.**

**நிமிர்ந்து பார்த்த வினு அவனை புழுவை போல் பார்த்து விட்டு ஏதும் பேசாமல் திரும்ப**

**"வினு நான் செஞ்சது தப்புதான்.....ஆனா அது உன் நல்லதுக்குதான்....நீ கண்டிப்பா புரிஞ்சுக்குவ...... இப்போ எதுக்கு நீ காலேஜ்க்கு அதிகம் லீவ் போடற.....நேத்து ஏன் வரலை .....உனக்கு என்ன பிரச்சனை......அந்த ஒரு விஷயத்த தவிர அப்புறம் நீ நினச்ச மாதிரி தான எல்லாம் நடக்குது...அப்புறம் ஏன் வினு......என்கிட்டே பேசு வினு.......எனக்கு ரொம்ப கஷ்டமா இருக்கு....முதல்ல எல்லாமே என்கிட்டே சொல்லுவ ....இப்போ நீயே மனசுக்குள்ள போட்டு குழப்பிக்கிற ...வேண்டாம் வினு.....உனக்கு எப்பவும் நான் இருக்கேன் வினு"..... என அவன் தனது தோழியின் துயர் கண்டு மனம் வருந்தி பேசினான்.**

**"நீயா....... நீயாயாயயாய எனக்கு நல்லது செய்யபவன்................உன்னை எப்படி நம்பினேன்.......ஆனா நீயும் விபுவோட சேர்ந்து" என சொல்லும்போதே கண்களில் கண்ணீர் வர பேச்சு தடி பட்டது.**

**உடனே அவள் அருகில் மண்டியிட்டு அமர்ந்தவன் "வினு உனக்கு நல்லது செய்யணும்னு நினைச்சுதான் அப்படி பண்ணேன்......சத்தியமா உனக்கு துரோகம் பண்ணல வினு....என்னை நம்பு.......இப்போ என்ன**

நானே விபீஷ் சார்கிட்ட பேசறேன்....என்ன பேசணும் சொல்லு.....இல்ல அவர எதாவது பண்ணனுமா....அதையும் சொல்லு பண்றேன்......என் தப்புக்கு இத பிராயச்சித்தமா செய்யறேன்" என்றான்.

"ஏற்கனவே நீ பண்ணது பத்தாதா...இன்னுமா....ஏண்டா என்னை இப்படி பாடாய் படுத்தரிங்க.......என்னால முடியலடா" என மேஜையில் படுத்து அவள் குலுங்கி குலுங்கி அழுக

"வினு...வினு அழுகாத " என அவனும்  அவளை சமாதனபடுத்த முயற்சி செய்தான் ராஜ்.

"என்னை  விடு ராஜ் என்றவள்  செத்திடலாம் போல இருக்கு ராஜ்.......உனக்கு தெரியுமா.....விபு என் மேல உயிரே வச்சிருக்கான்......அவன திட்ட திட்ட நான் தான் வேதனை படறேன்......என்னால இந்த கண்ணாமூச்சி ஆட்டம் ஆடமுடியல ராஜ்......நான் எங்காவது போய்டலாம்னு பார்க்கிறேன்" என அழுது கொண்டே சொன்னாள்..

"என்ன வினு இப்படி சொல்ற........நீ விபீஷ் சார விரும்பது உண்மை ....அப்புறம் என்ன...... யாரையாவது  நினச்சு பயப்பட்ரியா.....அதெல்லாம் விபீஷ் சார் பார்த்துக்குவார்...... அவரும்  உன் மேல உயிரே வச்சிருக்கார் வினு....ஒவொவொரு முறையும் உன் முகத்தை எவ்ளோ ஏக்கத்தோட பார்ப்பார்  தெரியுமா......நீ அவர பார்க்க மாட்டியா,சிரிக்க மாட்டியானு....ரொம்ப நல்லவர் வினு அவரு" என்றான்.

அழுது கொண்டிருந்தவள் லேசாக சிரித்த படி "அவரை பத்தி நீ எனக்கு சொல்றியா என்றவள்,........முடியல ராஜ்.......என்னை பத்தி உங்களுக்கு எல்லாம் என்ன தெரியும்.......என்னோட பால்யம் எவ்ளோ கொடுமையானது தெரியுமா......வேண்டாம் ராஜ்...நினைக்கவே வேதனையா  இருக்கு".....என்றவள்

வேதனையில் மனதில் அடக்கி வைத்திருந்த உணர்வுகள் எல்லாம் அலை அலையாய் பொங்கி வர

"ராஜ் இப்போ என்கூட இருக்கிறது என்னோட சொந்த அம்மா இல்லை......உனக்கு தெரியுமா?" என சொல்ல

என்னது!!!! என அதிர்ந்தவன் என்ன சொல்ற வினு நீ என்றான்.

“ஆமா ராஜ் நாங்க பொண்ணுங்க 3 பேர்,தம்பி பிறந்து 1 வருடத்தில்...... அம்மா ...அம்மா என அழுதவள் வேண்டாம் ராஜ் அந்த வார்த்தையால் அவளை அழைக்க வேண்டாம்.......அந்த பொம்பளை தனக்கு பிடித்தவனுடன் சென்று விட்டாள். அப்போது எனக்கு வயது பத்து.அப்பாவோ குடிகாரர்....அவள் சென்றதும் என் அப்பா தினமும் குடித்து விட்டு வந்து எங்களை அடிப்பார்.....அவரையும் சொல்லி குற்றம் இல்லை.....சுற்றி இருப்பவர்கள் அனைவரும் உன் பொண்டாட்டி எவனோடோ போய்ட்டா என சொல்லும்போது அவரும் என்ன செய்வார்.அடியிலும் உதையுளும் நாங்கள் இருந்த போது எங்கள் வீட்டில் குடி இருந்த ராணி அம்மாதான் எங்களை பார்த்து கொண்டார்.அவர் ஒரு அநாதை ........எங்களை நான்றாக கவனித்து கொண்டார்........அப்போது எல்லாம் வாழ்க்கையே நரகம்.........அந்த நேரத்திலும் நான் படிப்பை கைவிடவில்லை....இரவு முழுவதும் அடிவாங்கிவிட்டு பகலில் பள்ளி செல்வேன்.....இரண்டு தங்கைகளும் சிறியவர்கள் ....அவர்களை ஒளித்து வைத்துவிட்டு நான் மட்டுமே அடிவாங்குவேன்.தாய் தான் இல்லை தந்தை இருக்கிறார் என நினைத்து வாழ்ந்து கொண்டிருந்த எங்களின் வாழ்க்கையில் மறுபடியும் ஒரு இடி....ஒரு ஆக்சிடன்ட்டில் தந்தையும் இறந்து விட திக்கு தெரியாமல் தினறிபோனோம். சொந்தங்கள் எல்லாம் பொறுப்பு எங்கே தங்களிடம் வந்து விடுமோ என பயந்து பதுங்கின.

நல்ல வேலை சொந்த வீடு இருந்தது......ஆனால் துணைக்கு யாரும் இல்லை............அப்போது ராணி அம்மா நான் உங்களுக்கு தாயாக இருக்கிறேன் என தெய்வமாக வந்தார்.அவரின் பாதுகாப்பில் நாங்கள் இருக்க நானும் பருவம் எய்தினேன்......அப்போது என் தந்தையின் உறவினர்கள் இந்த வீட்டின் மீது ஆசைப்பட்டு என்னை பெண் கேட்டு வந்தனர்.நான் மறுத்துவிட என்னை எவ்ளோ கேவலமாக என சொல்லும்போதே அவள் குரல் நடுங்க,முகம் வேர்க்க....... யாரும் இல்லாத அநாதை நாய்க்கு இவ்ளோ ஆணவமா .......படிச்சு கிழிகிறாலாம்.....உன் தாய் போல தானே நீயும் இருப்பாய்.....என கண்டபடி பேசினர்....என்றவள் சிறிது நேரம் அழுது விட்டு மறுபடியும் தொடர்ந்தாள்.

**“ராஜ் ஏண்டா பெண்ணாக பிறந்தோம் என்று அப்போது தான் நான் வேதனை அடைந்தேன்….ஒரு தாய் செய்த தவறு அந்த பெண்ணை எந்த அளவு பாதிக்கிறது பார்……அதற்க்கு பிறகு ரோட்டில் போகும்போது கிண்டல் செய்தால் நான் திரும்பி திட்டினால் இந்த வார்த்தைய சொல்லியே என்னை வேதனை படுத்தினர் மனித உருவில் உள்ள சில மிருகங்கள்…..சிலர் என் வீட்டிற்க்கே வந்து ஆண்கள் இல்லாத வீடு…பாதுகாப்பு இல்லை……நான் வேண்டுமானால் உனக்கு பாதுகாப்பாக இருக்கிறோம் என கண்களில் விஷத்தோடு பார்த்துகொண்டே கூறுவார்கள்.அப்போது எல்லாம் எப்படி துடித்து போனேன் தெரியுமா.?……**

**ஆனாலும் நான் அசரவில்லை……நன்றாக படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என வெறியோடு இருந்தேன்.உதவி என்று யாரிடமும் சென்று நிற்க கூடாது என எனக்குள்ளே கோட்பாடு வைத்து கொண்டு வாழ்ந்தேன் . பின்னர் என் தங்கைகளை ஹாஸ்டலில் சேர்த்து விட்டு நானும் பகுதி நேர வேலை பார்க்க பாவம் ராணி அம்மாவும் எங்களுக்காக சம்பாரித்து கொடுத்தார்.பன்னிரண்டாம் வகுப்பில் நல்ல மதிப்பெண் எடுத்த மாநிலத்தில் முதலாவதாக வந்த பின்புதான் எங்கள் பகுதியில் எனக்கு ஒரு மரியாதை வந்தது.**

**“ஆனாலும் சில வல்லுருவிகள் ஒரு பெண் இப்படி மதிப்பெண் எடுப்பதா என நினைத்து …அதற்கும் என் நடவடிக்கையை பற்றி தவறாக பேசினார்.ஆனாலும் ராஜ் நாக்கிற்கு நரம்பில்லை என்பதற்காக இந்த மனிதர்கள் எப்படி எல்லாம் அதை பயன்படுத்துகிறார்கள் தெர்யுமா?”…..**

**இப்படி கேவலமான பேச்சிலும், பார்வையிலும் அடிபட்டு என் தம்பி தங்கைகளை படிக்க வைத்து கொண்டு நானும் படித்து வருகிறேன். இந்த மாதிரி குடும்ப சூழ்நிலையில் பிறந்த நான் அவருக்கு ஒத்து வருவேனா………எனக்கு விபுவின் காதல பெற என்ன தகுதி இருக்கு சொல்……அவரோட அளவில்லா காதல் தான் என்னை அணு அணுவாக கொல்கிறது…….நான் அதற்க்கு தகுதியானவள் இல்லை ராஜ்.எனக்கு**

**இந்த காதல் கல்யாணம் எதுவும் வேண்டாம்......நான் இப்படியே இருந்து விடுகிறேன்" என சொன்னவள்**

**சட்டென்று நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்து......"ராஜ் உன்னிடம் எல்லாமே சொல்லி விட்டனா.....அப்போ நீயும் என்னை அப்படிதானே நினைப்பாய்....அச்சோ இதை வேந்தன் சார் யாரிடமும் சொல்லி விடாதே என்று சொன்னாரே ......நான் என்ன பண்ணுவேன்...இல்லை ராஜ் இதை மறந்திடு "..... என உளற**

**அவள் சொன்ன விஷயங்களை கேட்டு அதிர்ச்சியில் இருந்து மீளாதவன் இவள் இப்படி கேட்டது சட்டன்று கோபம் துளிர் விட**

**"லூசா வினு நீ...பத்து வயதில் இருந்த தைரியம் இப்போது எங்கே போனது.....உன்னை நினச்சு நானே பிரமிச்சு போய் உட்கார்ந்திருக்கேன்.....அமைதியா ,சாந்தமா சிரிச்ச முகத்தோட இருக்க உனக்குள்ள இப்படி ஒரு ஜான்சிராணி இருப்பான்னு எதிர்பார்க்கவே இல்ல......ரொம்ப பெருமையா இருக்கு வினு...நான் உன்னோட நண்பனா இருக்கிறத நினைக்கும்போது" என அவன் உணர்ச்சி பெருக்குடன் சொல்லி கொண்டிருக்க**

**ஆனால் அவள் "அவ்ளோ கஷ்ட்டப்பட்டப்ப கூட நான் மனம் உடையாள ராஜ் ....ஆனா விபு அப்பா கேட்டார் பாரு ஒரு கேள்வி...செத்திட்டேன் நான்".....என சொன்னவள் குலுங்கி குலுங்கி அழுதாள். 1**

**"வினு ...வினு என்ன சொல்ற நீ....அவர் அப்படி என்ன சொன்னார்?" என அவன் பதற**

**அவள் நிமிர்ந்து அவன் முகத்தை பார்க்க...அதில் தெரிந்த வேதனை அவனை உலுக்கியது.**

**"இல்ல வினு விபீஷ் சார் அப்பா வந்திருந்தார் உங்க வீட்டுக்கு அப்டின்னு மட்டும் தான் உங்க அம்மா சொன்னங்க....உன்கிட்ட எதோ பேசிட்டு இருந்தாராம்......என்ன விஷயம்னு என்கிட்டே கேட்டாங்க......நான் தெரியலைனு சொன்னேன்.....அதை தான் அன்னைக்கு விபீஸ் சார் கிட்ட" என அவன் இழுக்க**



DO NOT COPY

“எந்த அப்பாதான் தன் பையன் இப்படி ஒரு பொண்ண விரும்பறத ஏத்துகுவாங்க ராஜ்..... அவர் சரியாதான கேட்டார்.......லட்ச ரூபாய் கொடுத்து செருப்பு வாங்கினாலும் அது இருக்க வேண்டிய இடத்துல இருக்கணும்.என்னதான் நீ படிச்சாலும் எங்க வீட்டு பெண்கள் மாதிரி நீ ஆகிட முடியுமா.....உங்க அம்மா ரத்தம் தான உன் உடம்பிலும் ஓடுது....நீ மட்டும் எப்படி ஒழுங்கா இருப்ப.......அதுக்குனு சில பேர் இருக்காங்க....அவங்ககிட்ட உன்னோட திறமைய காட்டு......என் பையனை விட்டுடு......வெளக்கமாத்துக்கு பட்டுக்குஞ்சம் கேட்குதோ.....அப்படின்னு கண்டபடி பேசிட்டார் ராஜ்.அவர் சொல்றதும் சரிதான்.....என்ன இருந்தாலும் எங்க அம்மா ரத்தம் தான என் உடம்பிலும் ஓடுது” என சொல்லும்போதே ஆத்திரமும் அழுகையும் வர சற்று அமைதியானவள் பின்னர் .

கோபமாக நிமிர்ந்தவள் “எனக்கு வேண்டாம் ராஜ்......இந்த கல்யாணம்,காதல்,கத்திரிக்காய் எல்லாம் வேண்டாம்.......நான் நல்லா படிக்கணும்....... சம்பாரிக்கனும்......என் தம்பி தங்கைகளை நன்றாக படிக்க வைக்கணும்.... சேத்துல மலர்ந்தாலும் செந்தாமரை ஆண்டவனுக்கு சாத்தும் புஷ்பம்...அது மாத்ரி தான் நானும்........என்னை மாதிரி இருக்க பெண்களுக்கு என்னால் முடிந்த உதவிய செய்யணும்......அது மட்டுமே இனி என் லட்சியம் ஆசை எல்லாம்”.......என ஆக்ரோசமாக சொல்லி முடித்தாள்.

அவளது வேதனையை கண்டு துடித்து போனவன்....”அப்படி எல்லாம் இல்ல வினு......அவரு கிடக்கிறார்......ஆனால் விபீஷ் சார் அவர் மாதிரி இல்லை என்றவன் ஆமா விபீஷ் சார் உன்னை லவ் பண்றார்னு அவருக்கு எப்படி தெரியும்...ஏன்னா இன்னும் வேந்தன் வெற்றி சாருக்கே தெரியாது.......என்னை தவிர யாருக்கும் தெரியாதுன்னு விபீஷ் சாரே சொன்னாரே” என சந்தேகமாக கேட்டான் ராஜ்.

“இல்ல ராஜ்....அவர் திருமணம் வேண்டாம்னு சொல்லிட்டு இருந்தார் இல்லயா....அப்போ என்னை ஒரு முறை காலேஜ்க்கு வண்டியில கூட்டிட்டு போனார்.அப்போ அவங்க அப்பா எங்கள பார்த்திட்டார்......உடனே விபீஷ கண்கானிச்ருக்கார்...அவரோட அறையை அவருக்கு தெரியாம பார்த்து இருக்காங்க ...அப்போ விபீஷ் சார் டைரி



DO NOT COPY

கிடைச்சிருக்கு.......அதுல என்னை பத்தி நிறய கவிதை எழுதி வச்சிருந்துகார்.....அத பார்த்திட்டு தான் என்னை தேடி வந்தாங்க.....

முதல்ல மால் கட்றதுக்கு இடம் தரமாட்டேன்னு சொன்னவரு அப்புறம் எப்படி தந்தார்னு நினைக்கிற.......என்கிட்டே சத்தியம் வாங்கிட்டார்...அந்த இடம் வேணும்னா நான் அவர விட்டு விலகனுமா.....நான் என்ன பண்ணட்டும் ......அதை நம்பி வெற்றி சார் வேற வேலைய விட்டு வந்திட்டார்......எங்க நான்கு  பேருக்கும் அதான் முன்னேற்றத்திற்கான முதல் படி............என்னால அது தடைபட கூடாது இல்லயா.....வேலை கேட்டு வந்தவளை பார்ட்னெரா சேர்த்த அந்த நல்ல உள்ளங்களுக்கு என்னால முடிஞ்சது ராஜ்" என சொன்னவள் அவனை பார்க்க

"ஏன் வினு  விபீஷ்சார நீ   லவ் பண்ணியா? எனக்கு அப்படி தெரியலயே "என  விபீஷ் தெரியாதவன் போல் கேட்டான்.

அவள் அவனை பார்த்துலேசாக சிரித்தவள் ஏதும் பேசாமல் சிறிது நேரம் இருந்தவள்......பின்னர்    ..."எனக்கும் தெரியல...அது முடிந்து போன அத்தியாயம்......இப்போ எதுக்கு" என அந்த பேச்சை அவள் தவிர்க்க

"ஆனா முடிந்த போன விஷயத்திற்கு மறுபடியும் விபீஷ் சார் முகவுரை எழுதிட்டாரே......உன்னால அந்த அத்தியாயத்த  விட்டு வெளியே வரமுடியாதுல" என அவள் மனம் மாற வேண்டும் என்ற நோக்கில் ராஜ் அவளிடம் கேள்வி எழுப்பினான்.

அதுவரை நன்றாக பேசிகொண்டிருந்தவள் திரும்பி அவனை முறைக்க...அதில் தெரிந்த ஜுவாலையில் அவன் நடுங்க....இப்படி நடக்கனும்னு தான  அன்னைக்கு எல்லாரும் திட்டம் போட்டு அப்படி பண்ணிட்டிங்க .......உன்னை நம்பினேன் பாரு....ஒரு பெண்ணோட இளகின மனச  உங்களுக்கு சாதகமா பயன்படுத்திகிட்டிங்க....... ஆனா அதை பத்தி எனக்கு கவலை இல்லை...சட்டப்படி என்ன பண்ணனுமோ நான்  அத பண்ணுவேன்.....இந்த ஆண் வர்க்கம் என்றாலே ஆணவம் தான்....தான் சொல்வதை அவள் கேட்காமல் போவதா அப்டின்னு ஈகோ .......அத  வச்சு என்ன மிரட்டலாம்னு யாரும் நினச்சுடாதிங்க......ச்சே உன்

**கிட்ட போய் இதெல்லாம் பேசிட்டு இருக்கேன் பாரு ....போ...போய் இதையும் அவன் கிட்ட சொல்லு...அதுக்கு அவன் வந்து" என சொல்ல சொல்ல அவளுக்கு ஆத்திரம் வர**

**"வினு ...ப்ளீஸ் வினு...என்னை மன்னிச்சுடு வினு....நீ என்ன சொன்னாலும் நான் கேட்கிறேன்.....ஒரு முறை தப்பு பண்ணிட்டேன்....இனி செய்யமாட்டேன்... என்னை வெறுக்காத........ப்ளீஸ் வினு" என ராஜ் அவனிடம் மீண்டும் கெஞ்சினான்.**

**சிறிது நேரம் அப்படியே நின்றவள் பின்னர் கண்களை துடைத்து கொண்டு "சரி விடு.......இனி நடப்பதை யோசிப்போம்.....ஆமா நீ காலேஜ் போகலையா" என பேச்சை மாற்றினால்.**

**"இல்ல வினு இந்திய அளவுல சிறந்த கட்டிட வடிவமைபாளருக்கான போட்டி அறிவிச்ருக்காங்க .....அதுல கலந்துக்கணும்னா மூன்று வருடம் அனுபவம் வேணுமாம்......என்ன நண்பன் இதுல கலந்துக்கிறான்.. .....அத பத்தின விபரம் சேகரிக்க போகணும்" என்றவன்**

**சட்டென்று அவளை பார்த்து " ஏன் வினு நீ அதில் கலந்துக்க கூடாது.....உனக்குத்தான் structural drawing நல்ல வருமே......மால்க்கு கூட நீ தான போட்டு கொடுத்த" ...என்றாவன் "நீ கண்டிப்பா கலந்துக்கிற வினு.......நான் உனக்கு ஹெல்ப் பண்றேன்" என உறுதியாக கூறினான்.**

**"நான் எப்படி ராஜ்....நான் ஸ்டுடென்ட் தான" என வினு தயங்கினாள்.**

**இதும் ஸ்டுடென்ட் காண போட்டி தான ....அப்புறம் v4 BUILDERS ல நீயும் பார்ட்னெர் தான .......நீ கவலைபடாத ......நான் உனக்கு எல்லாம் பண்ணி தரேன்...ஆனா போட்டி கடுமையா இருக்கும்... பெரிய பெரிய காலேஜ்ல இருக்க கட்டிட வல்லுனர்கள் எல்லாம் இதுல கலந்துக்குவாங்க...........நம்மளும் மோதி தான் பார்க்கலாமே......நீ மட்டும் ஜெயிச்சுட்ட....அதுக்கப்ரம் நீ கேட்ட பணம்,புகழ் எல்லா கிடைக்கும் ..... அப்புறம் வெளிநாடு வேலை வாய்ப்பும் கிடைக்கும் " என அவன் உற்சாகமாக சொல்லி கொண்டே சென்றான்.**

DO NOT COPY

" ஹே ராஜ்....அப்டியா....அப்போ நான் வெளிநாடு போய்டலாம்....விபீஷை விட்டு போய்டலாம்" என சொல்லும்போதே வார்த்தை தடுமாற ...ஆனாலும் முடிவில் உறுதியாக இருந்தாள்.

"ஆமா வினு....நீ கலந்துக்கோ" என அவன் ஊக்கபடுத்த

வினுவும் "சரி ராஜ்....நான் கலந்துகிறேன்....எனக்கு இங்க யாரும் வேண்டாம்....நான் விபீஷை விட்டு வெகு தூரம் போகணும்....அதற்காகவே இதுல கலந்துகிறேன்" என மனதின் உறுதி வார்த்தையில் அழுத்தமாக வெளி வர பேசி கொண்டே திரும்பியவள் அங்கு விபீஷ் அவளயே பார்த்து கொண்டு நின்று இருந்தான்.

முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் பாறையாக நின்று இருக்க.......சற்று நேரம் நின்று கொண்டிருந்தவன் பின்னர் எதுவும் பேசாமல் வந்த அமர்ந்தவன் கணினியில் கவனத்தை செலுத்தினான்.

விபீஷை பார்த்ததும் ஒரு நிமிடம் வினுவின் மூச்சு நின்று வந்தது....முகத்தில் பதட்டம் வெளிப்பட அவன் என்ன சொல்வானோ.......எப்படி எதிர்கொள்வது...இவன் எப்போது வந்தான் என எண்ணம் கடிவாளமின்றி கட்டவிழ்ந்து ஓட ஆனால் அவன் ஏதும் பேசாமல் சென்று அமர்ந்தது அவளுக்கே அதிர்ச்சி தான்.

ராஜும் விபீஷை பார்த்த அதிர்ந்தவன் பின்னர் அவன் அமைதியாக சென்றதும் இவனும் தன் வேலையை தொடர்ந்தான்.

சிறிது நேரத்தில் வேந்தன் வர வேலைகள் படபடவென நடந்தன.

இங்கு வெண்ணிலா மறுநாள் கட்டிடத்திற்கு வர அவளுக்கு தேவையான தகவல்களை கொடுத்தான் வெற்றி.......இப்போது வெண்ணிலாவும் வெற்றியும் ஓரளவு பேசி பழகினாலும் சண்டை என்பது குறை இல்லாமல் இருந்தது.

வெற்றியின் பொறுமையும் நிதானமும்,வெண்ணிலாவின் வேகமும் சுறுசுறுப்பும் அவர்களுக்குள்ளே புரிதலையும் ஏற்படுத்தி சண்டையையும் ஏற்படுத்தின.

ஒரு முறை வெற்றி வெளியில் சென்று இருக்க.....அவனை பார்க்க வந்த நிலா அவனை தேடி மேலே செல்ல

அப்போது அங்கு வேலை செய்தது கொண்டிருந்த மேஸ்திரி ஒருவன் ஒரு பெண்ணிடமே அதிக வேலை வாங்கினான்....மற்ற பெண்கள் சிரித்து பேசி நின்று கொண்டிருந்தனர். வேடிக்கை பார்த்து கொண்டே வந்தவள் அங்க பெண்கள் பேசிகொண்டிருப்பதை பார்த்து "வேலை செய்யாம இங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க" என கேட்க

"மேஸ்தரி தான் அவர் கூப்பிடும்போது வந்தா போதும்னு சொன்னார்" என சொல்ல

"எங்க மேஸ்தரி" என கேட்டவள் அங்கே செல்ல

அங்கே அவன் அந்த சின்ன பெண்ணிடம் அதிக கலவைகளை கொடுத்து அது செய்ய முடியாமல் அவள் திணற இவன் உதவி செய்கிறேன் பேர்வழி என்று பல இடங்களில் அவன் கைகள் சென்று கொண்டிருந்தது....அதை பார்த்த நிலாவிற்கு ரத்தம் கொதிக்க வேகமாக சென்றவள் மேஸ்த்ரியின் சட்டை காலரை இழுத்து கன்னத்தில் பளார் பளார் என்ற அறைந்தாள்.

அதை சற்றும் எதிர்பார்க்காத அவன் பயத்தில் சத்தமிட ,அந்த பெண்ணோ மிரண்டு பின்வாங்க

சத்தை கேட்டு சுற்றி இருப்பவர்கள் அங்கு ஓடி வந்தனர்.

"ஏண்டா நாயே ......உனக்கு கட்டட வேலை செய்யறதுக்கு நாங்க ஆள் கொடுத்த நீ என்ன வேலைடா பண்ணிட்டு இருக்க என கர்ஜிக்க ,அவளது முகம் வணபத்ரகாளிபோல் சிவந்திருக்க ........உங்க அம்மாகிட்டயும் உன் தங்கைகிட்டையும் இப்படிதான் பண்ணுவியா.....பரதேசி நாயே......உன் பொண்ணு வயசுடா அந்த பொண்ணுக்கு.......உன்னை எல்லாம்" என மறுபடியும் வெறி வந்தவள் போல் அவன் மேல் பாய

அதற்குள் வெற்றி அங்க வந்திட,அவள் மேஸ்தரி அடிக்க செல்வதை மட்டும் பார்த்தவன் ..."நிலா...வெண்ணிலா என்ன இது.......என்ன பண்ணிட்டு இருக்க" என கோபமாக கேட்டவன் அவளை தடுக்க ....அதற்குள் கும்பல் கூடி விட்டது.

**உடனே நிலா கோபமாக “இல்ல வெற்றி......இவன முதல்ல வெளியே அனுப்புங்க...அனுப்ரதுக்கு முன்னாடி நான் இவன கொஞ்சம் கவனிக்கனும் என சொல்லிவிட்டு அலைபேசியை காதில் வைத்தவள் சல்மா ,நம்ம பொண்ணுங்க எல்லாரையும் கூட்டிட்டு இங்க வா” என சொல்லி விட்டு அவனை முறைத்து கொண்டு நின்றாள்.**

**உடனே அங்கு வேலை செய்யும் அனைத்து மேஸ்த்ரிகளும் ஒன்று கூடி.....”சார் நீங்க என்ன அனுப்றது நாங்களே கிளம்பறோம்.....நாங்க உங்ககிட்ட தான் வேலை பார்க்கிறோம்...வரவங்க போறவங்க எல்லாம் வந்து எங்கள அடிச்சா இத சும்மா விடமாட்டோம்......எல்லாரும் அப்படியே உட்காருங்க...யாரும் வேலை செய்யகூடாது ........அந்த அம்மா எங்க மேஸ்தரி கிட்ட மன்னிப்பு கேட்டே ஆகணும்” என சொல்லி விட்டு அங்கு உள்ள ஐநூறுக்கும் அதிகமான நபர்கள் அப்படியே அமர்ந்துவிட்டனர்.**

**வெற்றி விகித்து போய் நின்றான்........பல லட்சங்களை உள்ளே போட்டு வேலை நடக்க வில்லை என்றால்....இன்று ஒரு நாள் நடக்கவில்லை என்றாலும் அவர்களுக்கு நஷ்ட்டம் தான்......என்ன செய்வது.....என அவன் தடுமாறியவன்**

**கோபமாக நிலாவை திரும்பி பார்க்க**

**அவள் அதை விட கோபமாக அந்த மேஸ்த்ரியை முறைத்து கொண்டு நின்றாள்.....”என்ன காரியம் பண்ணி வச்சுருக்க நிலா” என கோபத்தை அடக்கி பல்லை கடித்து கொண்டு அவன் கேட்க**

**“அவன் என்ன பண்ணானு முதல்ல கேளுங்க வெற்றி “ என அவளும் சிலிர்த்து கொண்டு நின்றாள்.**

**அதற்குள் கூட்டத்தில் ஒருவன் “நாங்க என்ன பண்ணாலும் அது எங்களுக்குள்ள முடிச்சுகுவோம்....நீங்க ஏன் உள்ளே வரிங்க...உங்க கிட்ட கம்ப்ளைன்ட் பண்ணாதான் நீங்க நடவடிக்கை எடுக்க முடியும்” என சத்தம் எழுப்ப**

**“பன்னுவிங்கடா பன்னுவிங்க...கேட்க ஆள் இல்லினா என்ன வேணாலும் பண்ணுவிங்க” என நிலா மீண்டும் குதித்தாள்.**

“அச்சோ கொஞ்சம் சும்மா இரு நிலா....நீ முதல்ல கிளம்பு” என வெற்றி கோபமாக அவளிடம் சொன்னவன் திரும்பி தொழிலாளிகளை பார்த்து

“இங்க பாருங்க.....இவங்க தான்  இந்த கட்டிடதோட முதலாளி ....அவங்ககிட்ட தான் நம்ம எல்லாம் வேலை செய்யறோம்” என தன்னையும்  தொழிலாளியின்  நிலையில் நிறுத்தி வெற்றி பேசினான்.

“அதுக்காக அவங்க என்ன பண்ணாலும் நம்ம பொறுத்து போகனுமா.....எதா இருந்தாலும் உங்ககிட்ட சொல்லிருக்லாம்...இல்ல சைட்இஞ்சினீயர்கிட்ட சொல்லிருக்கலாம்...அத விட்டுட்டு இவங்க எப்படி எங்க மேஸ்திரி மேல கை வைக்கலாம்” என கூட்டத்தில் ஒருவன் எழுந்து  கொஞ்சம் பொறுமையாக நியாயம் கேட்டான்.

ஹப்பா......இனி சமாளிச்சிடலாம் என வெற்றிக்கு நம்பிக்கை வந்தது.

“அதான் நான் அவங்க கிட்ட கேட்டுட்டு உங்களுக்கு பதில் சொல்றேன்...நீங்க போய் வேலைய  பாருங்க” என தகுமானம் சொன்னான்.

அதற்குள் “முடியாது சார்...அந்த அம்மா மன்னிப்பு கேட்டாதான் வேலை” என ஒருவன் கிளப்பிவிட அனைவரும் அதற்க்கு ஒத்து ஊதினார்.

“இப்போ என்ன பண்றது நிலா...இது என்ன உங்க காலேஜ்னு நினச்சிங்கலா....அதுக்குதான் உங்கள இங்க வரவேண்டாம்னு சொன்னேன்...என்னை சொல்லணும்” என சொல்லி கொண்டே கோபமும் ஆத்திரமும் முகத்தில் கொந்தளிக்க அவளை பார்த்தான்.

“வெற்றி இவங்க பேச்சை நம்பாதிங்க ...அந்த ஆளு என்ன பண்ணான் தெரியுமா “ என சொல்லிவிட்டு மெதுவாக அவன் காதில் சொல்ல

வெற்றியின் முகத்தில் கோபம் ஜொலிக்க கைகளை முறுக்க அந்த நேரத்தில் ஒரு உதவி இஞ்சினியர் “சார் ...கலவை எல்லாம் போட்டு வச்சு வீணா போகுது.....சீக்கிரம் பேசி அனுப்புங்க...அப்புறம் இதான் சாக்குன்னு இவனுக நாள் கணக்குல இப்படி உட்கார்ந்துகுவாணுக” என்றார்.

சில நிமிடம் யோசித்தவன் பின்னர் அந்த பொண்ணை மேஸ்த்ரிய வர சொல்லு....நான் என்னனு விசாரிக்கிறேன் என சொல்லிவிட்டு நிலாவுடன் தனது அலுவலக அறைக்கு சென்றான்.

கோழிகுஞ்சு போல் நடுங்கி கொண்டே அந்த பெண் வர

“என்னய்யா நடந்தது” என வெற்றி அந்த மேஸ்திரிய பார்த்து கேட்டான்.

உடனே மேஸ்திரி “சார் இந்த பொண்ணு இப்பதான் புதுசா வேலைக்கு சேர்ந்திருக்கு.....கூட வேலை செய்யறவங்க யாரும் வரல...வேலை அதிகமா இருந்தது......அதுக்கு நான் வேலை கத்து கொடுத்திட்டு இருந்தேன்......திடிர்னு இந்த அம்மா வந்து எனை அறைஞ்சாங்க ...ஏண்டா நாயே இப்டிதான் பண்னுவியானு மரியாதை இல்லாம பேசறாங்க............வேலை கத்து கொடுக்கிறது என்னோட வேலை.....அதான் நான் செஞ்சேன்” என அவன் தான் செய்ததை ரொம்ப திமிராக நியாய படுத்தினான்.

“ஏண்டா நீ வேலையா அந்த பொண்ணுக்கு கத்து கொடுத்த” என வெண்ணிலா அவன் மேல் வேங்கை போல் சீறினாள்.

முதலில் சற்று மிரண்டவன் பின்னர் சுதாரித்து “நான் வேலை தான் கத்து கொடுத்தேன் சார்...... அத இந்த அம்மா தப்பா பார்த்தா நான் என்ன பண்றது” என அவன் அசால்ட்டாக விளக்கம் சொன்னான்.

“ஏம்மா அவன் சொல்வது உண்மையா?” என வெற்றி பாத்திரக்க பட்ட பெண்ணை பார்த்து கேட்டான்.

அவன் கேட்டதும் பயத்தில் அந்த பெண் முழிக்க .......பாவம் அவளும் என்ன சொல்வாள்....சிறு பெண்....வயிற்று பசிக்காக ஊரு விட்டு ஊரு பிழைப்பு தேடி வந்திருப்பவள்....இந்த தொழிலும் அவளுக்கு புதிது.....அவன் பல இடங்களில் தொட்டது அவளுக்கு தெரிந்தாலும் வேலை கற்று கொள்ள வேண்டுமே......கூட வேலை செய்பவர்களும் யாரும் இல்லை...அவன் திட்டமிட்டு அவர்களை அனுப்பியது அந்த பெண்ணுக்கு தெரியாது......அதனால் அவள் அதை பொறுத்து கொண்டாள்...திடிரென்று வெண்ணிலா வந்து அவனை அடிக்க ஒரு பக்கம் மகிழ்ச்சியாக இருந்தாலும் மறுபக்கம் இந்த வேலை போய்

விடுமா என்ற பயமும் அவள் மனதில் இருந்தது......வறுமை கோட்டிற்கு கீழ் இருக்கும் பாதி மக்களில் பெண்களின் நிலை இது தான்.....அவள் பயந்து  ஏதும் பேசாமல் தலை குனிந்து நின்றாள்.

"சொல்லு புள்ள...கேட்கிறாங்கல்ல.....அப்புறம் நீ என் கிட்டதான வேலை செய்யணும்".......என அவளை ஊக்குவிப்பது போல் மேஸ்திரி மிரட்டினான்.

அந்த பெண்ணோ பயந்து கொண்டே "எனக்கு தெரியல சார் என அழுது கொண்ட சொன்னவள் ...பட்டென்று வெற்றியின்  காலில் விழுந்து சார்...என்னை வேலையை விட்டு எடுத்திடாதிங்க.....எனக்கு ஏதும் தெரியாது.....இத நம்பித்தான் என் குடும்பமே பீகார்ல காத்திட்டு இருக்கு" என கதறினாள்.

வெண்ணிலாவே ஒரு நிமிடம் நிலை தடுமாறி போனால்.அவளுக்கு என்ன சொல்வது என்பதே தெரியவில்லை......இப்படியும் பெண்களின் நிலை இருக்கிறதே ......இவர்கள் எப்போது தான் மாறுவார்கள் என ஆயசாமாக அவளுக்கு தோன்ற  ...

"சரி...சரி....நீ போய் வேலைய பாரு"  என அந்த பெண்ணை அனுப்பி வைத்தவன் பின்னர் அந்த மேஸ்த்ரியை அழைத்து கொண்டு குடோன்னுக்கு நடந்தான்.

வெண்ணிலாவும் பின்னே செல்ல

திரும்பி அவளை முறைத்தவன் ...நீ இங்கே இரு என சொல்லிவிட்டு அவன் தோளில்  கை போட்டு உள்ளே சென்றவன் சிறிது நேரத்தில் அந்த மேஸ்தரி சிரித்து கொண்டே வெளியே வந்து......"எல்லாம் மேலிடத்தில் பேசியாச்சு......இனி பிரச்சனை வராது...எல்லாரும் அவங்க அவங்க வேலைய பாருங்க" என சொல்ல

மலை போன்ற ஒரு பிரச்சனை வெற்றியின் முயற்சியால் விரைவில் தீர்க்க பட்டது.

இங்கு அலுவலக அறையில்  வெண்ணிலா கோபத்தில் அமர்ந்திருக்க வேகமாக உள்ளே வந்தவன்...."இங்க பாரு....இனி இங்க நீ வரவேண்டாம்.......எது வேணாலும் போன் பண்ணு.....இல்ல நான் உன்



DO NOT COPY

அண்ணன் கிட்ட சொல்லிடறேன்....என்னால உனக்கு உதவி பண்ண முடியாதுன்னு.....நீ இன்னைக்கு பண்ணி வச்ச வேலைக்கு ...அய்யோ சாமி....நீ முதல்ல கிளம்பு" என அவளை விரட்டுவது போல் பேசினான்.

"புரியாம பேசாதிங்க வெற்றி....அவன் அந்த பொண்ணை எங்க எங்கெல்லாம் என சொல்லும்போதே அவள் முகம் கோபத்தில் சிவக்க .....இப்ப நினச்சாலே கொதிக்குது எனக்கு ....ஏன் வெற்றி நீயும் ஆண் வர்க்கம் அப்டிங்க்ராதாலதான அவனுக்கு சப்போர்ட் பன்ற" என ஆத்திரத்தில் என்ன பேசுகிறோம் என தெரியாமல் பேசிகொண்டே சென்றாள்.

அவள் பேசி முடிக்கும் வரை அவள் கண்களையே பார்த்து கொண்டிருந்தவன் "நீ அப்படி நினைக்கிறியா நிலா" என அழுத்தமாக கேட்டான் வெற்றி.

"பின்ன ஏன் வெற்றி...அவன திட்டாம என்னை திட்ற......நான் காலேஜ்ல ரவுடி தான்...ஆனா அநியாத்தை கண்டாதான் அடிதடியில இறங்குவோம்.....பெண்களுக்குனு யாரும் சப்போர்ட் வரமாட்டாங்க வெற்றி.....அப்படியே வந்தாலும் கூடவே சுத்திட்டு இவ அந்த மாத்ரிடா அப்டின்னு சொல்லிட்டு போய்டுவாங்க..... அதான் எங்க கையே எங்களுக்கு துணை.....இப்போ இந்த பொண்ணும் பாரு....அங்க இருந்த பல பெண்களுக்கு தெரியும் என்ன நடந்ததுன்னு ...ஆனா யாரும் வரலை....பாவம் வெற்றி...இந்த சின்ன வயசுல" என சொல்லும்போதே வார்த்தை கமற

"நிலா..ரிலாக்ஸ் என அவளுக்கு தண்ணீர் எடுத்து கொடுத்தவன், நிலா நீ சொல்றது சரிதான்....ஆனா இங்க இருக்கிறவங்க எல்லாம் வாழ்க்கையின் அடிமட்டத்தில் இருப்பவர்கள்....வயிற்றுக்கு சாப்பாடு கிடைத்தால் போதும் என்று ஊரு விட்டு ஊரு வந்து பிழைத்து கொண்டிருப்பவர்கள்.....அவர்களின் எண்ணம் செயல் எல்லாம் இன்றிய நாள் எப்படி அப்டின்னு தான் இருக்கும்...மேலும் இங்கு காண்ட்ராக்ட் மூலமா தான் ஆள் எடுத்திருக்கோம்....அதுனால அவங்க விஷயத்துல நம்ம ஏதும் பண்ண முடியாது....நீயும் பார்த்த இல்லயா...அந்த பெண் என்ன சொல்லிட்டு போறான்னு.....அவளை கண்டு நீ புலம்பிட்டு இருக்க....ஆனா அவ என்னை வேலையை விட்டு எடுத்திராதிங்கனு



DO NOT COPY

சொல்றா....நீ அவளுக்கு நல்லது பண்ணியது கூட அவளுக்கு தெரியல...அவள் பொருத்தவரைக்கும் வேலை,சாப்பாடு பணம் முக்கியம்......உன்னோட இந்த கொதிப்பு ஆதங்கம் இது எல்லாம் சரி....ஆனால் நீ இப்படி பண்றதால இந்த கொடுமை தீராது......... இந்த பிரச்சனைக்கான ஆணி வேர் என்னனு பாரு...அதுல இருந்து ஆரம்பி......இதெல்லாம் நாள் கணக்குல தீர்க்கிற பிரச்சனை இல்ல.....பல ஆண்டுகள் ஆனாலும் கண்டிப்பாக தீர்வு இருக்கும்...அதும் உன்னை மாதிரி பெண்கள் எந்த விஷயத்துக்கும் யாருக்கும் பயப்படாம துணிச்சலா முடிவு எடுத்தா 33% இட ஒதுக்கீடு நீங்க கேட்கனும்கிரதே இல்லை.....அவங்களா தந்திடுவாங்க" என நிலைமையின் எதற்த்தை எடுத்து சொன்னான் வெற்றி.

இப்போ நீ வந்து இப்படி பிரச்சன பண்ணிட்டு போய்டுவ....நாளைக்கும் இதே மாதிரி பண்ணிட்டு தான் இருப்பாங்க.......அதுனால எப்பவும் பிரச்சனயை கண்டு ஆதிரபடாம அதை அமைதியா எப்படி தீர்க்கலாம்னு யோசனை பண்ணு....என்ன புரியுதா."....என அவன் அவள் தலையில் சிறு கொட்டு வைத்த படி சொன்னான்.

தன் உள்ளம் கவர்ந்தவன் தன்னை போலவே சிந்திப்பதை கண்டு அவள் முகத்தில் சந்தோசம் போங்க ரொம்ப தேங்க்ஸ் வெற்றி என மனம் நிறைவாக சொல்ல

"சரி...சரி கிளம்பு....போற வழில மறுபடியும் யாராவது அடிச்சு வம்பு தும்புக்கு போகாத".....என சிரித்து கொண்டே சொன்னான் அவன்.

அவள் திரும்பி அவனை முறைக்க

ஹிஹி...என வலிந்தவன்...சும்மா சொன்னேன்...கிளம்பு என அவளை அனுப்பி வைத்தவன்...ஹப்பா இவளை கல்யாணம் பண்றவன் கட்ட பஞ்சயாத்து பண்ணியே காலம் போயடுமாட்ட இருக்கே என நினைத்தவாரே சென்றான்.

இங்கு அந்த நிகழ்ச்சிக்கு பிறகு விபீஷ் வினுவிடம் பேசுவதை குறைத்து கொண்டான்....வினுவும் அந்த போட்டிக்காக கடுமையாக உழைத்தாள்.வேந்தன் கூட அது ரொம்ப கஷ்டம் வினு......இன்னும்



DO NOT COPY

கொஞ்ச நாள் போகட்டும்...அப்புறம் கலந்துக்கோ என சொல்ல யார் சொல்வதையும் கேட்காமல் அதில் கலந்து கொண்டாள்..ராஜ் அவளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்க காலையில இருந்து மதியம் வரை V4 பில்டர்...பின்னர் காலேஜ்...மாலை இரவு போட்டிக்கான தேடல் இப்படியே சென்றது.

ஒரு நாள் விபீஷ் இரவு சினிமா பார்த்து விட்டு அலுவலகம் வழியாக வீட்டிற்கு வர அப்போது அங்கு விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதை பார்த்தான்.

விளக்கை அணைகாம்லே சென்று விட்டனரா என திட்டி கொண்டே வந்தவன் உள்ளே ஆட்கள் இருக்கும் அரவம் கேட்க வேகமாக கதவை தட்டினான்.

“யாரது...உள்ளே யார் இருக்கா” என சத்தம்  போட

கதவு மெதுவாக  திறக்க பார்த்தவன் அதிர்ந்தான்....வினு நின்று கொண்டிருந்தாள்.....அவனை பார்த்ததும் ஏதும் பேசாமல் அவள் உள்ளே செல்ல அவள் பின்னே நடந்தவன்

“இங்க என்ன பண்ணிட்டு இருக்க....மணி என்னனு தெரியுமா ?”என கேட்டான்.

“இல்ல...கொஞ்சம் வேலை இருந்தது..அதான்” என வினு  இழுக்க

“அதுக்கு இவ்ளோ நேரமா என கேட்டவன்....ஆமா என்ன வேலை...அதான் பில்டிங் முடியபோகுது....வெளி வேலை தான் ஜாஸ்தி...ஆபிஸ் வேலை இருக்காதே” என கேட்டவன் பக்கத்தில் சிறு குறட்டை ஒலி கேட்க

அவன் திரும்பி பார்க்க

“அவன் என் தம்பி ....கூட துணையா இருக்கட்டுமேனு” என அவள் வார்த்தை மென்னு முழுங்கினாள் வினு.

“இவன் ..உனக்கு துணை......எத்தனாவது படிக்கறான்” என வந்த சிரிப்பை அடக்கி கொண்டு அவன் கேட்க



DO NOT COPY

**“ஆறாவது படிக்கிறான்” என்றாள் அவள்.**

**நீ எப்பவும் இப்டிதானா வினு...எதையும் தெளிவா செய்யமாட்டியா.....இப்போ மணி என்ன ஆகுது....இங்க தனியா இருக்க.....எதாவது பிரச்சனையினா” என அவன் நிறுத்த விட்டு அவளியே பார்த்தான்.**

**உடனே அவள் அவள் தம்பியை பார்க்க**

**“யாரு இவன்.... ஏன் வினு இப்படி பன்ற” என சிரித்து கொண்டே அவள் அருகில் வந்தவன்**

**அவள் பின் வாங்க**

**“சரி..சரி என்றவன்.....உனக்கு என்ன பிரச்சனை இப்போ....எதுக்காக இப்படி பன்ற” என்றான்.**

**“இல்ல அந்த போட்டி சம்பந்தமா சில குறிப்புகள் எடுக்க வேண்டியது இருந்தது.........காலேஜ் போனாதால மதியம் பண்ண முடியல...அதான் இப்போ உட்கார்ந்து பண்றேன்......எப்பவும் ராஜ் இருப்பான்....இன்னைக்கு அவங்க வீட்ல வர சொன்னாங்களா, அதான் வரல”...என அவள் சொல்ல**

**“ஏன் உன்கிட்ட மடி கணினி இருக்குல...அதுல பண்ண வேண்டியது தான” என வேகமாக கேட்டான் விபீஷ்.**

**அவள் ஏதும் பேசாமல் தலை குனிந்து இருக்க**

**“என்ன வினு கேட்கிறன்ல....இப்படி தனியா நாடு ராத்திரி இங்க வந்து பண்றது உங்க வீட்ல பன்னிருக்லாம்ல” என்றான்.**

**அவள் கண்களை இறுக்க மூடி கைகளை பிசைந்து கொண்டிருக்க**

**வினு என அவன் அதட்ட**

**“என்னோட மோடம்  ரீசார்ஜ் பண்ண முடியல...மாச கடைசி...பணம் இல்ல...அதுநாள் இன்டேர்நெட் எடுக்காது...அதான் இங்க வந்து பண்றேன் போதுமா” என கோபத்தில் அவள் வெடிக்க**

**இதை சற்றும் எதிர்பார்க்காத விபீஷ் வாயடைத்து நின்றான்.**



DO NOT COPY

அவனிடம் கோபமாக பேசிவிட்டு வேகமாக கணினியை அணைத்தவள் கிளம்ப முற்பட

அவளது கையை பிடித்து இழுத்து நிறுத்தியவன் “சாரிடா.....வெரி சாரி வினு.......ப்ளீஸ் வினு” என சொல்லும்போதே அவன் குரல் வருத்ததுடன் வர

“விடுங்க விபீஷ் சார்......இது எனக்கு புதுசா என்ன” ......என ஒரு மாதிரி குரலில் சொல்லி விட்டு அவள் நகர

வேகமாக அவளை பிடித்து இழுத்து இறுக்க அணைத்தவன்.....அவள் காதில் மெதுவாக “என்னை ஏண்டி உயிரோட கொல்ற ....என்னோட உடம்புல இருக்க ஒவொவொரு அனுவும் உன்னோட பேர்தான் சொல்லுது ....அது உனக்கு தெரியலியா .....ஏன் வினு என்னை விட்டு விலகி போற....... எனக்கு நீ மட்டு தான் வினு....என்னோட உயிர் சுவாசம் எல்லாமே நீதான் வினு.....நீ எப்படியோ வினு.....என்னோட வாழ்வு உன்னோடுதான்” என்றவன் அவள் நெற்றியில் அழுந்த முத்தம் பதித்தவன் உடனே விலகி வெளியே போய் அமைதியாக நின்றான்.

வினுவோ அப்படியே உறைந்து போய் நின்றவள் ....பின்னர் தன்னை சமாளித்து கொண்டு தன் தம்பியை எழுப்பி அழைத்து கொண்டு வெளியே வர ஆபிஸ் சாவி அவளிடம் இருந்தததால் பூட்டிவிட்டு கிளம்பினால்.அவள் வீடு செல்லும் வரை அவள் பின்னே வந்தவன் அவள் உள்ளே நுழைந்த பின்னேரே தன் வீடு திரும்பினான்.

மறுநாளில் இருந்து ராஜ் உடன் இருந்தாலும் வெளியே அவளுக்கு தெரியாமல் அவன் காத்திருந்தான்.இதை ராஜ் பார்த்து “சார் நான் இருக்கேன் சார்” என சொல்ல

“விடு ராஜ்.....இந்த சந்தோசமாவது எனக்கு கிடைக்கட்டும்” என்றவன் ஏதும் பேசாமல் அமைதியாக நின்றான்.

ராஜ் மனம் வருந்தியவன் வினுவிடம் பேசிபார்க்க....இதை பற்றி பேசுவதாக இருந்தால் உனது நட்பே வேண்டாம் என் அவள் சொல்ல அவனும் அவளை வற்புறுத்தவில்லை..

**அன்றும் அப்டிதான் வேகமாக உள்ளே வந்த விபீஷ் ராஜின் சட்டையை பிடித்து ..."ஏண்டா ரகுமான் வீட்டுக்கு ஏன் போனிங்க" என கேட்க**

**ராஜ் புரியாமல் முழிக்க**

**அருகில் இருந்த வினு ..."அதான் ராஜ் சிவில் அசோசியட் டைரெக்ட்டர போய் பார்த்தோம்ல ...அத சொல்றார்" என சொல்ல**

**விபீஷ் திரும்பி அவளை முறைக்க**

**"இல்ல சார்....வினு சில தகவல்கள் அவர்கிட்ட கேட்க வேண்டியது இருந்தது அதான்" என இழுக்க**

**"அவன் சரியான பொம்பள பொறுக்கி ...அவன் கிட்ட போய்" என கோபமாக திட்ட**

**"இல்ல சார் வேற யாரையும் எங்களுக்கு தெரியாது...அவர்கிட்ட நிறயா ஆர்க்கிடேக்சேர் இருக்காங்க அதான் என அவன் சொல்ல**

**சத்தத்தை கேட்டு அங்கு வந்த வேந்தன் "ஏண்டா...எப்போ பார்த்தாலும் வினுவ ஏதாவது சொல்லிட்டே இருக்க.....கொஞ்சா நாள் பேசாம இருக்க...அப்புறம் ஆரம்பிசுட்ற" என கேட்டான் .**

**"இல்ல நண்பா...இது வேற".....என சொல்லும்போதே வேந்தனுக்கு போன் வர அவன் சென்று விட்டான்.**

**ஒரு நிமிடம் யோசித்தவன் "இங்க பாரு...இந்த நம்பர் எழுதிக்கோ ...பேர் வெண்ணிலா ....என்னோட பேர் சொல்லு தெரியும்....உனக்கு என்ன தகவல் வேணும்...எல்லாமே கிடைக்கும்" என சொல்லி விட்டு திரும்ப**

**"அது யாரு வெண்ணிலா ...புதுசா.....கேளு ராஜ்" என வினு கேட்க**

**திரும்பி அவளை ஆழமாக பார்த்தவன் ஏதும் பேசாமல் நடந்தான்.**

**நாட்கள் வேகமாக ஓட அன்று வேந்தன் வினு ,விபீஷ் ,வெற்றியும் VCL அழைத்திருந்தான்...அனைவரும் இருக்க ..."என்ன நண்பா என்ன விஷியம்" என விபீஷ் கேட்க**



DO NOT COPY

**“க்ளையன்ட் எல்லாம் பிளாட் கேட்கிறாங்க…அதுக்கு முன்னாடி நம்ம ஒரு சின்ன விழா வச்சிடலாம்……நம்ம தொழில்ல இருக்கிறவங்களை எல்லாம் அழைக்கலாம்…..நமக்கு அது தான் செலவில்லாத விளம்பரம்……கட்டிடத்திற்கு நம்ம சார்பாக கிரகப்ரவேசம் செய்ததும் ஆச்சு…விளம்பரம் செஞ்ச மாதிரியும் இருக்கும்” என சொல்ல**

**“சூப்பர் ஐடியா வேந்தா” என வெற்றி பாராட்ட**

**“நல்ல ஐடியா சார்….அப்பதான நம்ம பத்தி எல்லாருக்கும் தெரியும்…..கண்டிப்பா பண்ணலாம் சார்” என வினு  சொல்ல**

**“எப்போ நண்பா பண்றோம்” என விபீஷ்  கேட்க**

**“வெற்றி உனக்கு அங்க வேலை எப்போ குறைவா இருக்கும் …சொல்லு “என கேட்டான் வேந்தன் .**

**“நவம்பர் 14 வச்சுக்கலாம் நண்பா” என அவன் சொல்ல**

**சரி அன்னைக்கே வைச்சுகலாம்….இன்னும் 15 நாள் இருக்கு…..அதுக்குள்ள எல்லாம் ரெடி பண்ணிடலாம் …வினு நீ தான் இன்டீரியர்  எல்லாம் பார்க்கணும்” என பொறுப்பை பிரித்து கொடுத்தான் வேந்தன்.**

**கவலைபடாதிங்க சார்…கலக்கிடலாம்…..என அவள் சந்தோசமா சொல்ல**

**நடக்க போகும் விபரீதம் தெரியாமல் மகிழ்ச்சியாக களைந்து சென்றனர்   நால்வரும்.**

**மாதவராய் பிறக்க மா தவம்**

**செய்திட வேண்டும் அம்மா**

**சொன்ன ஔவை பாட்டியே**

**இளைமையின் கொடுமைக்கு**

**பயந்து தான் முதுமையை**



DO NOT COPY

விரும்பி ஏற்று கொண்டாரோ!

நெற்றியில் வைக்கும் பொட்டில் இருந்து

காலில் போடும் மெட்டி வரை

பெண்ணின் அனைத்து செயல்களும்

இப்போது விவாதங்கள் ஆகின்றன.

தங்கள் மனநிலையை

மாற்றி கொள்ள தெரியாதவர்கள்

மற்றவர்களுக்கு அறிவுரை சொல்ல

அரங்கத்தில் வந்து நின்று விடுகின்றனர்..

கோஷங்களும் கொடிபிடிப்பது  மட்டுமே

இதற்க்கு தீர்வு ஆகாது.

விழித்தெழு பெண்ணே

விழித்தெழு!

சாத்திரத்தின் பெயரால் நம்மை

சீரழிக்கும் இவர்களின்  முன்னால்

பாரதி கண்ட புதுமை பெண்ணாய்

பார் உலகம் போற்றும் புரட்சி பெண்ணாய்

வெற்றி கொடியை நிலை நாட்டு!!!!!!.

DO NOT COPY

**அத்தியாயம் -26**

**அதிகாலை  பொழுது ஆதவன் தனது சிறகினை விரித்து மெல்ல வெளியே வர ,வினுவின் கண் இமைகளோ திறக்க முடியாமல்**

தவிக்க,வேலைகளின் பளுவை மூளை நினைவு படுத்த ,ஆனால் உடலோ அதற்க்கு ஒத்துழைக்க மறுக்க படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

காலை காலேஜ்,பின்னர் கிரகப்ரவேச வேலை,பின்னர் போட்டிக்கு தயார் செய்வது என பம்பரமாக சுழன்று கொண்டிருந்தாள். ஒரு வழியாக போட்டிக்கு தன்னோடைய படைப்புகளை அனுப்பி விட்டு இரவு வெகு நேரம் கழித்து தான் உறங்கினாள். காலையில் ஆபிஸ் வர பொருள்கள் எல்லாம் வாங்க வினுவும் விபீஷும் கடைக்கு அனுப்பினான் வேந்தன்.

இருவரும் ஒரே வண்டியில் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட கொஞ்சம் தயங்கியவள் பின்னர் அமைதியாக அவனுடன் சென்றாள்.அங்கு சென்று பொருள்களை வாங்கி கொண்டிருக்கும் போது காலையில் அவசரத்தில் ஏதும் சாப்பிடாமல் வந்ததால் அவளுக்கு கலைப்பாக இருக்க சோர்ந்து மெதுவாக நடந்து வந்தாள்.தன்னை தவிர்க்கவே அவள் அவ்வாறு வருகிறாள் என நினைத்த வீபீஷ் வேகமாக அவளிடம் சண்டை போட அவள் அருகில் வந்தான்.

அந்த நேரம் அவள் தடுமாறி சாய அவளை அப்படியே தாங்கியவன்"....வினு...வினு என்ன ஆச்சு" என பதறியவன் அதற்குள் கும்பல் கூட அவளை ஓரமாக ஊர் இடத்தில் அமரவைத்தவன் ,ஒருவர் தண்ணீர் கொண்டு வர வாங்கி குடித்தவள் சற்று தெளிவுற.....கும்பலை பார்த்ததும் தர்மசங்கடமாக உணர்ந்தவள் "ஒண்ணுமில்லை......கொஞ்சம் தடுமாறிட்டேன்" என உளற...எதுவும் பேசாமல் அவளை கை தாங்களாக பிடித்தவன் கடைகாரரிடம் விலாசம் சொல்லி பொருளை அங்கே கொண்டு போக சொன்னவன் அவளை காரில் அமர வைத்து நேராக ஹோட்டல்க்கு அழைத்து சென்றான்.

"இங்க எதுக்கு...நாம் ஆபிஸ் போகலாம்" என அவள் சொல்ல .....திரும்பி கோபமாக ஒரு பார்வை பார்க்க.... அந்த பார்வை ஏதும் பேசாமல் இரு என சொல்லாமல் சொல்ல...அவள் ஏதும் பேசாமல் உடன் சென்றாள்..



DO NOT COPY

சாப்பிடுவதற்கு ஆர்டர் செய்தவன் அமைதியாக அமர்ந்திருக்க...அவனது அமைதி அவளை உறுத்த...."இல்ல விபு நான் நல்லா தான் இருக்கேன்" என மெல்ல சொல்ல

நிமிர்ந்து அவள் முகத்தை அவன் பார்க்க ...அவள் முகத்தை கீழே பார்த்தபடி ......"நைட் கொஞ்சம் வேலை இருந்தது அதுனால சாப்பிடல...காலையில நேரமாகிடுச்சா... கிளம்பி வந்துட்டேன்....... அதான் கொஞ்சம் தடுமாறிட்டேன்.......இப்போ ஓகே" ....என பேசிகொண்டே போக ..அவன் எதையும் கண்டுகாதது போல் அமர்ந்திருந்தான்.

"உன்கிட்ட தான் சொல்லிட்டு இருக்கேன் விபு......திட்றதா இருந்து திட்டிடு.....இப்படி இருக்காத ...எனக்கு கஷ்டமா இருக்கு" என்றாள்.

அவளிடம் திரும்பியவன் "இதைத்தானே நான் ரொம்ப நாளா சொல்லிட்டு இருக்கேன் வினு.......எதா இருந்தாலும் மனச விட்டு சொல்லு......என்னை திட்றதா இருந்தாலும் திட்டு....ஆனா என்னை விட்டு விலகி மட்டும் போகாதேன்னு"......என்றவன்

"இப்போ யாருகாகடி இந்த கஷ்டப்ற......என்னை விட்டு விலகி போறதுக்குத்தான......அதை நீ என்கிட்டே முன்னடியே சொல்லிருந்தா நானே விலகி போயிருப்பனே........ஏண்டி உன்னையே நீ கஷ்ட்படுத்திகிற........எனக்கு ஒன்னு மட்டும் தெரியும்...நீ என்னை காதலிக்கிற....அதை உறுதியா தெரிஞ்ச பின்புதான் நான் அந்த முடிவே எடுத்தேன்.....அதும் உன்னாலதான்......நீ அப்பவே நான் சொன்னத கேட்டு இருந்தா இந்த மாதிரி நடந்தே இருக்காது.......இப்பவும் நீ எதுக்காக விலகி போறேன்னு எனக்கு தெரியல......ஆனா என்னோட வாழ்க்கை உன்னோடுதான்...இது உறுதி... நீ இல்லைனாலும் உன் விபு எப்பவும் இப்படியே உன் விபுவாவே இருப்பேன் "என மனதின் உறுதியை வார்த்தையில் வெளிபடுத்தினான் விபீஷ்.

அவன் சொல்ல சொல்ல வினுவின் கண்களில் கண்ணீர் வந்து கொண்டிருக்க அவன் கடைசியா சொன்ன வார்த்தையில் இருந்து அவன் தந்தை செய்தது அவனுக்கு தெரியாது...தான் சொன்னதயும் அவன் கேட்கவில்லை...கடைசியாக தான் வந்து இருக்கிறான் என

நினைத்தவள் மனதில் ஒரு நிம்மதி வர அந்த சூழ்நிலையிலும் தன்னால் அந்த குடும்பத்திற்கு ஒரு பிரச்சனை வந்துவிட கூடாது என அவள் மனம் நினைத்தது,

அதற்குள் உணவு வர அமைதியாக இருவரும் சாப்பிட அவளிடம் இருந்து எந்த பதிலும் வராததை கண்டு விபீஷின் மனம் துனுகுற்றாலும் எல்லாம் கை மீறி சென்று விட்டது ...இனி வருவதை எதிர்கொள்வோம் என நினைத்தவன் அங்கிருந்து கிளம்ப யோசனையுடனே அவளும் பின்னே வர

சட்டென்று நின்றவன் வேகமாக உள்ளே சென்று டைரி மில்க் சில்க் சாக்லேட் வாங்கி வந்தவன் "இந்தா வினு நீ விரும்பி சாப்பிடுவில" என கொடுத்தான்.

அவள் ஆச்சிரியத்துடன் அவனை பார்க்க

"ஏன் வினு.... எனக்கு எப்படி தெரியும்னு பார்க்கிறியா......நான்கு வருசண்டி...உன்னோட மனசுக்குள்ளே குடும்பம் நடத்திருக்கேன்.....நீ விடற மூச்சு காத்து கூட எத்தனைன்னு சொல்லிடுவேன் என தனது காதலின் ஆழத்தை அவளுக்கு அவன் சொல்ல

அவன் கைகளை அழுத்தி பிடித்து அவன் தோள்களில் சாய்ந்தவள் ..."நான் ரொம்ப துரதிஷ்டசாலி விபு" என சொன்னவள் வேகமாக சென்று காரில் அமர்ந்தாள்..

இங்கு அப்பார்ட்மென்ட்டில் வேலை வேகமாக நடந்து கொண்டிருக்க வெற்றியும் நான்கு நாட்களுக்கு முன்னதாகவே வந்து விட்டான்.

மறுநாள் வினு மட்டும் அலுவலகத்தில் இருக்க........ஒரு அழகிய இளம் பெண் வேகமாக உள்ளே வந்தவள் வினுவின் முன்னால் இருக்கும் நாற்காலியில் ஒய்யாரமாக சாய்ந்து கொண்டு ... அலுவலகத்தை ஒரு நோட்டம் விட்டவள் ......விபீஷ் எங்க காணோம்...ஆபிஸ் நேரத்துள ஊரு சுத்த போய்ட்டாரா..... சரி...சரி...அவர உடனே வர சொல்லு என ஆர்டர் போட்டாள்.

அவள் வந்த விதத்தை பார்த்து கொஞ்சம் அதிர்ந்திருந்த வினு அவள் விபீஷை உரிமையாக பேசவும் சுறு சுறுவென கோபம் வர

**"ஹலோ ...முதல்ல நீங்க யாரு....... உங்களுக்கு என்ன வேணும் "என வேகமாக கேட்டாள்.**

**உடனே அவள் "நீ முதல்ல விபீஷ் எங்கேனு சொல்லு......போன் பண்ணப்ப ஆபிஸ்ல தான் இருக்கேனு சொன்னான்....என்ன என்னை கண்டு பயந்துகிட்டானா" என சொல்லி கொண்டே வினுவை கண்டு கொள்ளாமல் அங்கும் எங்கும் தேடினாள் அந்த பெண்.**

**வினுவின் கோபம் உச்சத்தை அடைய**

**"ஏய் ...என்ன திமிரா...யாரு ஆபிஸ்ல வந்து யார பத்தி என்ன பேசிட்டு இருக்க " என அவள் சத்தமிட**

**"ஏய்...என்ன மரியாதை குறையுது"........என அந்த பெண் எகிற**

**அதற்குள் அங்கு வேந்தனோடு வந்து விபீஷ் "ஹே நிலா சாயந்திரம் வரேன்னு சொன்ன ...இப்ப வந்து நிக்கிற" என ஆச்சிரியமாக கேட்டு கொண்டே உள்ளே நுழைந்தான்.**

**"ஹே பார்ட்னர்...... உனக்கு அதிர்ச்சி தரலாம்னு முன்னடியே வந்தேன்....ஆனா நீ ஆபிஸ்ல இருக்கேனு பொய் சொல்லிட்டு ஊர் சுத்திட்டு வர ....என்ன IGC பக்கம் ரௌண்ட்சா ....கலக்கு பார்ட்னர்....ஆனாலும் நம்ம பொண்ணுங்க எல்லாம் உன்னை ரொம்ப மிஸ் பண்றேன்னு சொல்ல சொன்னாங்கப்பா " என அவள் சிரித்து கொண்டே சொல்ல**

**பக்கத்தில் இருந்த வேந்தன் விபீஷை முறைக்க அங்கு வினுவின் முகமோ கோபத்தில் கொதித்து கொண்டிருந்தது .**

**ஆஹா ...வந்த உடனே பத்த வச்சிட்டியே நிலா என மனதில் நினைத்தவன்......வினுவை பார்க்க ...அவளோ அவனை பார்த்ததும் முகத்த திருப்ப.......போச்சு......எல்லாம் போச்சு.......ஏற்கனவே புகஞ்சிட்டிருக்கு...இனி இவளோட பங்குக்கு கொஞ்சம் பெட்ரோல ஊத்தராலே என புலம்பியவன்**

**"யாரு விபீஷ்" என வேந்தன் கேட்க**

**வேந்தன் சுரேந்தரை மட்டுமே  பார்த்து இருக்கிறான்....வெண்ணிலாவை பற்றி அவனுக்கு ஏதும் தெரியாது...ஏன் இங்க இருப்பவர்கள் யாருக்கும் தெரியாது......விபீஷும் அவனோட பிரச்சனயில் இதை மறந்துவிட்டான்.அதனால் வேந்தன்  கேட்டான்.**

**"இவங்க நம்ம சுரேந்தர் சாரோட தங்கை வெண்ணிலா நண்பா.......ஆர்க் முடிச்சுட்டாங்க.....ப்ராஜெக்ட் மட்டும் இருக்கு...நம்ம கட்ற மால் இவங்களுக்குதான்" என சொன்னவன்**

**நிலாவிடம் திரும்பி .....".நிலா என் நண்பன் வேந்தன்.....V4 பில்டர்சோட முதுகெலும்பு " என சிரித்து கொண்டே சொன்னான்.**

**நிலாவும் "வணக்கம் சார் என கை கூப்பியவள் உங்களை பத்தி வெற்றி நிறையா சொல்லிருக்காப்டி......நீங்க இல்லினா அவரு இந்த நிலைக்கே வந்திருக்க முடியாது...உயிர் கொடுப்பான் தோழன் என்பது எங்கள் நட்பு தான்னு சொல்லுவார்.உங்களை சந்திச்சதுல ரொம்ப சந்தோசம்....எப்படி இருக்காங்க மதி.....நல்ல இருக்காங்களா....அன்னைக்கு அவங்க ஆஸ்பத்திரியில  இருந்தப்ப நான் வரலாம்னு நினச்சேன்...இந்த பார்ட்னெர் தான்" என அவள் வழவழவென பேச**

**உடனே விபீஷ் உள்ளே பூந்து "ம்ம்ம்...நிலா அப்புறம் இவங்க" என வினுவை நோக்கி கை நீட்டியவன்**

**உடனே திரும்பிய நிலா...."ஆமா விபீஷ் முதல்ல ஆபிஸ்ல ரிசபனிஸ்ட் மாத்துங்க...ஒரு மரியாதை தெரியலை......உங்களை எங்கேனு கேட்கிறேன்......முறைக்குது...பதில் சொல்ல மாட்டேன்குது "..... என பட படவேண்டு பேசி கொண்டே போனாள் நிலா.**

**வேந்தனிடம் இருந்து திசை திருப்ப வினுவிடம் திரும்பியவன் அதனால் தனக்கே ஆப்பு வர என்ன சொல்வது என தெரியாமல் திரு திருவென முழித்து கொண்டு நிற்க**

**அதற்குள் வேந்தன் "அவங்க ஸ்டாப் இல்லை....v4 பில்டர்சோட இன்னொரு பார்ட்னர் வினோதினி  BE" என வேந்தன் அறிமுக படுத்த**

**"அச்சோ நீங்க தானா அது......சாரி வினோ தெரியாம பேசிட்டேன்" என சொன்னவள்**



DO NOT COPY

“ஏன் விபீஷ் இவ்ளோ தூரம் சொல்லிட்டு இருக்கேன்....நீங்க பாட்டுக்கு முழிச்சுட்டு நிக்கிறிங்க....பட்டுன்னு சொல்ல வேண்டியதான....நாங்க பார்ட்னர்னு ....பாருங்க எல்லாம் உங்களால் தான் அவங்கள கண்டபடி பேசிட்டேன் ...சாரி வினோ “.என அவள் வருத்தத்துடன் சொல்ல

ஆஹா ஆணிவேர்லே ஆப்பு வைக்கிறாளே.......இது தேவையா விபீஷ் உனக்கு......என் சோலிய முடிக்காம இந்த இடத்த விட்டு கிளம்பாமாட்டாலாட்ட இருக்கே என நினைத்தவன் வினுவை பார்க்க

விபீஷை எரித்து விடும் பார்வை பார்த்த வினு......”பரவயில்லை நிலா...உங்களை யாருன்னு எனக்கும் தெரியல...அதான் நானும் பேசிட்டேன்...சுரேந்தர் சார்க்கு இப்டி ஒரு தங்கையா” என அவள் சிரித்து கொண்டே கேட்டால்.

அதற்குள் வேந்தன் வேலை இருக்கு என்று கிளம்பினான்.

“பொறு நண்பா நானும் வரேன்”...என அங்கிருந்து விபீஷ் கிளம்ப முயற்சித்தான்.

நிலாவோ “என்ன பார்ட்னெர்.......நானே புதுசு.....நீங்க இல்லினா எப்படி......எனக்கு யாரையும் தெரியாதுல”....என சொல்ல

“நீ அவங்களுக்கு எல்லாம் ரெடி பண்ணி கொடுத்திட்டு மதியம் வந்திடு...வேலை இருக்கு “ என வேந்தன் முகத்தை கடுமையாக வைத்து கொண்டு சொல்லிவிட்டு சென்றான்.

ஆஹா விருமாண்டி விரச்சுகிட்டு போறான்.....இனி என்ன திட்டு கிடைக்குமோ என புலம்பியபடி திரும்பியவன் வினு பேக்கை எடுத்து கொண்டு கிளம்ப

“என்ன வினு கிளம்பிட்ட” என விபீஷ் வேகமாக கேட்க

“நான் தான் பார்ட்னெர் போக சொன்னேன்......நம்ம மேட்டர் கொஞ்சம் பேசணும்.....அதான் அவங்கள வேலை இருந்தா போய் பார்க்க சொன்னேன்...நம்ம ஆபிஸ்ல இருந்துகலாம்ல அதான்” என சாவகாசமாக சொனால் நிலா.

“வினுவும் அதான் சார்…உங்க பெர்சனல் விஷயம் பேசும்போது நான் எதுக்கு இடைஞ்சலா ….கிளம்பிட்டேன் சார்” என சொல்லி கொண்டே வெளியேறினாள்..

“அச்சோ ஏன் நிலா இப்படி பன்ற…….வந்த உடனே உன்னோட ஆட்டத்த ஆரம்பிச்சுட்டியா……பாரு வினு வேற கோவிச்சுட்டு போறா……உன்னை” என வேகமாக அவளை திட்ட

“ஏன் மேன் இவ்ளோ கோப படற…ஹே பார்ட்னெர் அப்போ அதுவா” என அவள் சிரித்து கொண்டே கேட்க

அவனோ வினுவின் கோபத்தில் குழப்பத்தில் இருந்தவன்…”என்ன அதுவா…இதுவானு…ஏதும் இல்லை…நீ கிளம்பு முதல்ல…..உனக்கு ரூம் புக் பண்ணிருக்கேன்….ஆமா நீ வந்தது வெற்றிக்கு தெரியுமா?” என பேச்சை மாற்றினான் விபீஷ்.

“இல்ல விபீஷ் …தெரியாது அவரு 13தேதி ஈவ்னிங் வந்தா போதுமனு சொன்னாரு………நான் தான்” என இழுக்க

“ம்ம்ம்ம்….நீ என்ன சொன்னாலும் திருந்த மாட்ட” என சொல்லியவன்..காரில் அவளை அழைத்து செல்ல இருவரும் வெற்றியை பற்றி பேசிகொண்டிருந்தபோது

இடையில் நிலா “ஏன் பார்ட்னெர்……உனக்கு ஏதும் பிரச்சனயா” என ஒரு மாதிரி குரலில் கேட்க

அவள் முகத்தை திரும்பி பார்த்தவன் “இல்லயே…ஏன் கேட்கிற….ஏதாவது மாற்றம் தெரியுதா” என்றான்.

“இல்ல….நீ பழைய விபீஷா இல்ல…….என்னாச்சு பார்ட்னெர் ……..நான் உன்கூட பழகினது வேணா கொஞ்ச நாள் தான்….ஆனா உன்னோட கலலப்பான குணம், எதையும் ஈசியா எடுத்துகிற விதம் எனக்கு ரொம்ப பிடிச்சுது பார்ட்னெர்…..அந்த பழைய கலகலப்பு இப்ப இல்ல உன்கிட்ட……என்ன இவ இப்படி பட்டுனு கேட்கிறான்னு நினைச்சியா…….இப்பவும் சொல்றேன் பார்ட்னெர்……..என் மனசுக்கு பிடிச்சவர் வெற்றியா இருக்கலாம்….ஆனா என்னோட பெஸ்ட் பிரிண்டு நீ தான் பார்ட்னெர்…..இல்லனா விடிகாலை உன்னை எழுப்பி என்

**மனசுல இருக்கிறத சொல்லிருப்பனா.......அந்த உரிமையிலதான் கேட்கிறேன்" என என்றாள்.**

**மனதின் வலி விழிகளில் தெரிய அவளை பார்த்தவன்.....மெதுவாக சிறித்து கொண்டே அமைதியாக வர அப்போது காரில்**

**கண்ணிலே என்ன உண்டு**

**கண்கள் தான் அறியும்**

**கல்லிலே ஈரம் உண்டு கண்களா அறியும்**

**என் மனம் என்னையன்றி யாருக்கு தெரியும் என பாட**

**நிலா ஏதும் பேசாமல் அவனையே பார்த்து கொண்டிருக்க விபீஷும் அமைதியாக வண்டியை ஓட்டினான்.**

**நாம் ஒருவர் மேல் வைக்கும் அன்பு என்பது தன்னலமில்லாமல் ...எதிர்பார்ப்பு இல்லாமல் இருந்தால் நல்லது....ஆனால் அது போல் இருப்பவர்கள் அன்னை தெரசா போல் ஒரு சிலரே ...மற்றவர்கள் அனைவருமே எதிர்பார்ப்புடனே அன்பு செலுத்துகின்றனர்.இது உண்மை..**

**"மதி...மதி...என்ன பன்ற...இங்க வா...".என உற்சாக குரலோடு உள்ளே வந்தான் வேந்தன்.**

**"கொஞ்சம் வேலையா  இருக்கேன் மாமா...இருங்க வரேன்" என சமையல் அறையில் இருந்து குரல் மட்டும் வர**

**"அங்க என்ன பண்ணிட்டு இருக்க.......நான் தான் வேலை எல்லாம் செய்யவேண்டாம்னு தான சொல்லிட்டு போனேன்" என சொல்லியபடியே அங்கே வந்தான் வேந்தன்.**

**அங்கே நாற்காலியின் மேல் ஏறி ஒரு டப்பாவை எடுத்து கொண்டிருந்தாள் மதி.....**

DO NOT COPY

**“ஹே என்னடி பன்ற  என பதறியவன்.......உன்னைத்தான் இது மேல எல்லாம் ஏறகூடாதுன்னு சொல்லிருகேன்ல ...எதுக்கு ஏறுன” என அவளை கடிந்து கொள்ள**

**“இல்ல மாமா உங்களுக்கு  சத்துமாவு தீர்ந்திடுச்சு .......அரைக்கனும்...அதான் அந்த பெரிய டப்பா எடுக்கணும்” என்றாள்.**

**“அது இப்போ அவசரமா.....அதெல்லாம் மெதுவா எடுத்துக்கலாம்...நீ இப்போ மதர் ஹார்லிக்ஸ்  குடிச்சியா” என அவன் கேட்க**

**அவள் கண்களை உருட்டி அங்கும் இங்கும் பார்த்தவள் மெதுவாக இல்லை மாமா என சொல்ல**

**“அதான எத்தன முறை சொல்லிருக்கேன்....என்னை பத்தி கவலை படாதே உன்னை பாருன்னு......இரு நானே  போட்டு தரேன் ...பால் எங்கே” என கேட்டவன் எடுத்து அடுப்பில் வைத்தான்.**

**“ஹார்லிக்ஸ் எடு மதி” என சொல்ல**

**“இல்ல மாமா அது வந்து “என இழுத்தவள்**

**“என்ன வந்து ...போய்னு எடு மதி” என அவன் அதட்ட**

**“தீர்ந்திடுச்சு மாமா” என சொல்ல**

**“தீர்ந்திடுச்சா......எப்போ தீர்ந்திச்சு....ஏன் என்கிட்டே சொல்லல என முறைத்தவன் அவள் முகம் சுருங்கியதும் அவள் தோளோடு அணைத்து வெளியே அழைத்து வந்தவன் ....இங்க பாரு மதி ....எதா இருந்தாலும் சொல்லணும்...அப்பதான எனக்கு தெரியும்........உன்கிட்ட எத்தன முறை சொல்றது....இனிமேல் கொஞ்சம் இருக்கும்போதே சொல்லிடு” என கனிவாக சொன்னான்.**

**“மாமா” என அவள் மறுபடியும் அழைக்க**

**“என்னடா” என அவன் அன்புடன் கேட்க**

**“எனக்கு அது பிடிக்கலை மாமா...அது வேண்டாம்” என கெஞ்சுவது போல் சொல்ல**

DO NOT COPY

“டாக்டர் சாப்பிட சொல்லிருகாங்கள மதி......நம்ம குழந்தை நல்ல இருக்கணும்னா இதெல்லாம் சாப்டனும்டா” என பொறுமையாக சொன்னான்.

“சரி மாமா....வாங்கிட்டு வாங்க.......என்றவள் ஏன் மாமா மதர் ஹார்லிக்ஸ் குடிச்சா மதர்க்கு தான நல்லது.....பாப்பாவுக்கு எப்படி அது நல்லதாகும்” என சிரித்து கொண்டே அவனை பார்த்து கேட்க

அவன் என்ன சொல்வது என தெரியாமல்  முழித்து கொண்டிருக்க

“சரி மாமா இல்லாத மூளையை போட்டு குழப்பிக்காதிங்க ...நீங்க வாங்கிட்டு வாங்க” என அவள் ஏதோ அவன் நல்லதுக்கு சொல்வது போல் சலித்து கொண்டே சொல்ல

“எல்லாம் என் நேரமடி” என அவன் சிரிக்க

அவள் அதற்கு பலிப்பு காட்டி கொண்டே மீண்டும் சமையல் அறைக்கு சென்றாள்..

அவள் செல்வதையே பார்த்து கொண்டிருந்தவன் இப்படி பூ போல் இருந்தவளா அன்று புயல் போல் அப்படி பேசினால் என யோசித்தவன் அன்று அவள் பேசியது இல்லை குமறியது இன்றும் அவன் காதில் ஒலித்து கொண்டிருந்தது.

அன்று வளயாபலயத்தில் தெரியாமல் அவன் ஒரு வார்த்தை சொல்லிவிட பொங்கி எழுந்து விட்டாளே......எல்லாமே உங்க குழந்தைகாகதான் செய்யறிங்க......எனக்காக இல்ல என அவள் கோபமாக கேட்டதும்

இவன் அதற்க்கு தகுமானம் சொல்ல....அதற்க்கு அவள் கோபித்து கொண்டு அமர்ந்திருக்க

அவளிடம் ஏன் மதி என்னை பார்க்க பிடிக்கவில்லியா என கேட்ட உடன் அவள் மனதில் உள்ள அத்தனை ஆத்திரங்களையும் கொட்டி தீர்த்து விட்டாலே......பார்ப்பதற்கு குழந்தை போல் இருப்பவள் என்னென்ன வார்த்தைகள் பேசிவிட்டாள்....இப்போது நினைத்தாலும் உடம்பு சிலிர்கிறது என சிலிர்த்தவன் அவளது அந்த வார்த்தை ...

DO NOT COPY

**“உங்களுக்கு தான் மாமா என்னை பிடிக்கலை.........எந்த சமயத்துல நீங்க எப்போ எப்படி இருப்பிங்கனே தெரியமாட்டேன்குது...... உங்க கிட்ட பேசும்போது எல்லாம் உங்க முகத்த பார்த்து என்ன சொல்விங்களோ...திட்டுவிங்களோ அப்டின்னு பயந்து பயந்து தான் பேசுவேன்....எனக்கு என்ன பிடிக்கும் ,பிடிக்காதுன்னு உங்களுக்கு தெரியுமா?ஏன் நான் சாப்ட்டனா இல்லயான்னு கூட கேட்க மாட்டிங்க?எத்தன நாள் உங்களுக்கு சாப்பாடு போட்டுட்டு நீங்க எதாவது சொல்விங்கலானு உங்க முகத்தையே பார்த்திட்டு இருந்தேன் தெரியுமா மாமா?ஏன் விபீஷ் அண்ணா சொல்லும்போது கூட நீங்க சிரிப்பிங்கலே தவிர வேறு ஏதும் பேச மாட்டிங்க....எத்தன நாள் அத நினச்சு வேதனை பட்டிருக்கேன் தெர்யும? ஆனால் இப்போ உங்க குழந்தை என் வயித்துல இருக்குனு தெரிஞ்ச உடனே நான் சாப்ட்டதுக்கு அப்புறம் தான் நீங்க சாப்பிட்ரிங்க....ஏன் அப்ப இருக்கிற மதி தான இப்பவும் இருக்கேன்....என்ன இப்போ உங்க குழந்தை என் வயித்துல ...அதனால இந்த பாசம்....அப்பவும் விபீஷ் அண்ணா சொன்னார் தான ...குழந்தை பிறக்கும் வரைதான் உனக்கு இந்த உபசாரம் எல்லாம்னு” என அவள் ஆக்ரோசமாய் பேச**

**“இல்ல மதி ...நான் அப்படி எல்லாம்” என அவன் அவசர அவசரமாய் அதை மறுத்து பேச முற்பட**

**“நடுவுல பேசாதிங்க மாமா.....இப்டியே தான் நான் எது சொல்ல வந்தாலும் நடுவுல பேசி என்னை அடக்கிறீங்க .....இன்னைக்கு நான் பேசிடறேன் மாமா...என்னால இதுக்கு மேல அடக்க முடியல” என சொல்லும்போதே ஆத்திரத்தில் அழுகை வர**

**“வேண்டாம் மதி...அழுகாத” என அவளின் வேதனையை கண்டு அவன் துடிக்க**

**நிமிர்ந்து அவனை முறைத்தவள்....”இந்த மாதிரி எத்தனை முறை நான் அழுதிட்டு இருந்திருப்பேன்.......ஒரு முறையாவது என்னனு  நீங்க கேட்டு இருக்கிங்களா” என கோபமாக கேட்க**

**“ஏன் மதி நான் தான்” என அவன் ஆரம்பிக்க**

“ஆமா...என்ன கேட்பிங்க....உங்க அப்பா அம்மா நியாபகம் வந்திடுச்சா போ...போய் வேலையை பாருன்னு சிடு சிடுன்னு பேசுவிங்க” என சொல்ல

“இல்ல மதி அப்பதான நீ அழுகிறதா நிறுத்துவேன்னு தான் “ என அவன் இழுக்க

“நீங்களா ஒரு விஷயத்த கற்பனை பண்ணிக்கிட்டு அத என் மேல திணிப்பிங்க........உங்களுக்கு தெரியுமா மாமா எப்போ உங்களோட நான் கலந்தனோ அப்பவே எனக்கு எல்லாமே நீங்க தான் மாமா......என்னோட நினைவு முழுவதும் நீங்க தான் நிறைஞ்சு இருக்கீங்க......அது உங்களுக்கு தெரியலியா மாமா” என தனது அன்பை அவன் புரிந்து கொள்ள வில்லையே  என்ற வேதனையின் வலி அவள் வார்த்தையில் தெரிய

அதை கேட்டதும் ஒரு நிமிடம் தன்னவள் பெற்றோர்களையும் மறந்து தன்னை இந்த அளவு நேசிக்கிராலா என்ற சந்தோசம் ஒரு புறம் இருந்தாலும் ...தான் அறியாமல் அவளது அன்பை உதாசீனபடித்திவிட்டோமே என்ற குற்ற உணர்வு அதிகமாக ...கண்களில் வலியுடன் அவளை பார்க்க

“ஒரு முறை கூட ஏன் அழுகிராய்னு நீங்க கேட்டதே  இல்ல மாமா என்றவள் ...எனக்கு மாவிடாய் நேரத்தில் வாயிற்று வலி தாங்கவே முடியாது......எங்க அம்மா அதுக்கு வெந்தயம் ,சீரகம் தண்ணீர் எல்லாம் தருவாங்க .......அந்த மாதிரி நேரத்துல என்னால எழுந்திரிக்க கூட முடியாது.......அந்த மாதிரி நேரத்துல நான் அழுதிட்டு படுத்திருப்பேன்.....ஆனா நீங்க வார்த்தையால என்னை இன்னும் நோகடிப்பிங்க......என்னை பேசவே விடமாட்டிங்க” என சொல்லும்போதே அழுகை பொங்கி வர ....

அவள் வேதனையில் துடிப்பதை கண்டு அவளை இழுத்து தனது மார்போடு சாய்த்து கொண்டவன் அப்படியே அதிர்ச்சியில் அமர்ந்திருக்க

சிறிது நேரம் அப்படியே இருந்தவள் “இப்படி தான் மாமா ....நான் வேதனையை அடக்க முடியாம உங்க கிட்ட சண்டை  போடலாம்னு

நினைத்து  இருந்தால் அன்று ரொம்ப பாசமா பேசி என்னை அந்த விஷயத்த மறக்க வச்சட்ரிங்க.....ரொம்ப கஷ்டபட்டுட்டேன் மாமா"....

"எதா இருந்தாலும் என்னிடம் நேரடியாக பேசணும்னு நீங்க தான் சொன்னிங்க.....ஆனா என்னைக்காவது என்னை பேச விட்ருப்பிங்களா........பல விசியங்களை உங்க கிட்ட பகிர்ந்துக்க முடியாம மனசுக்குள்ளே புழுங்கி இது தான் நமக்கு வாழ்க்கை என என் மனச தேத்திட்டு இருந்த நேரத்துல

திடிரென்னு வந்து பூரி எல்லாம் ஊட்டி விட்டு கொஞ்சுனிங்க.....பாரவியில்லை...மாமா மாறிட்டாரு என நான் சந்தோசபட்ட நேரத்துல மறுபடியும் வேலை வேலைன்னு கிளம்பிட்டிங்க.....வீட்ல ஒருத்தி இருக்கிறத மறந்திட்டிங்க......ரொம்ப நொந்திட்டேன் மாமா...நீங்க எப்போ  எப்படி இருப்பிங்கன்னு தெரியாம ...புயல்ல மாட்டுன காத்தாடி மாதிரி அல்லாடி போயிட்டேன்" என்றவள் அதிகம் பேசியதில் மேல் மூச்சு...கீழ்மூச்சு வாங்க

"மதிம்மா" என அதிர்ந்து அவள் நெஞ்சை நீவி விட்டவன்...அவளுக்கு தண்ணீர் எடுத்து வந்து கொடுக்க அவள் குடித்து விட்டு சிறிது நேரம் தன்னை  ஆசுவாசபடுத்தி கொள்ள

"போதும் மதி....வேண்டாம்......ரொம்ப பேசாதடா...நான் "என அவன்  பேச ஆரம்பிக்க

இப்பவாவது என்னை பேசவிடுங்க மாமா என அவள் கையெடுத்து கும்பிட

"மதிம்மாஆஆஅ ...என பதறியவன்......பேசுடி.......உனக்கு என்ன எல்லாம் பேசணும்னு தோணுதோ பேசு......ஏன் அடிக்கணும்னு தோணுச்சுனா அடிச்சுடு....ஆனா ஆத்திரபடாம பேசுடா" என அவன் அழுது கொண்டே சொல்ல

ஏன் மாமா கல்யாணம் ஆனதுல இருந்து உங்க பழக்க வழக்கம் ஏதாவது மாறுச்சா......உங்களுக்கு பிடிச்சது...பிடிக்காதது எல்லாம் அப்டியே தான இருக்கு.......அது மாதிரி எனக்கும் இருக்கும்ல என்றவள் என்னைக்காவது அத நினச்சு பார்த்து இருப்பிங்களா........உங்களுக்கு தெரியுமா மாமா எனக்கு கை நிறய வளையல் போடறது ரொம்ப

பிடிக்கும்...கலர் கலரா டிசைன் பொட்டு வைச்சுகிறது ரொம்ப பிடிக்கும்....ஆனா நான் இங்க வந்ததுக்கு அப்புறம் அந்த மாதிரி ஏதும் போட்டதில்லை......ஏன்னா நீங்க என்னை கடைக்கே கூட்டிட்டு போனதில்லை......பக்கத்துக்கு வீட்டுகாரன்களோட சேர்ந்து கோயிலுக்கு மட்டும் தான் போயிருக்கேன்........உங்களுக்கு தெர்யுமா மாமா எங்க ஊரு கிராமம் தான்....ஆனா எந்த படம் வந்தாலும் எங்க அப்பா என்னை கூட்டிட்டு போய்டுவார்....மாசத்துக்கு இரண்டு படம் பார்த்திடுவேன்....ஆனா திருமணமாகி இதனை மாசத்துல ஒரு படம் கூட தியேட்டர்ல பார்த்தது இல்ல ....ஏன்னா உங்களுக்கு சினிமா பிடிக்காது....ஆனா என்னை பத்தி நீங்க நினைக்கவே இல்ல......என அவள் உள்ளகிடங்கில் புதைத்து வைத்திருந்த அனைத்து கோபத்தையும் அவனிடம் கொட்ட அதில் இருந்த உண்மை அவனை சுடத்தான் செய்தது. 3

“இப்பவும் எனக்கு பயமா தான் இருக்கு மாமா....இந்த பாசம்,அன்பு எல்லாம் குழந்தைகாக்தான் .....அது பிறந்திட்டா நான் மறுபடியும் இயந்திரம் தான்.......இப்ப சொல்லுங்க மாமா......இது உணமைதானா”......என கோபத்தில் ஆரம்பித்து கேள்வியில் முடிக்க

கேள்வியின் நாயகனோ எதிர்பாராத அவளது சொற்தாக்குதலில் அதிர்ந்து போய் அமர்ந்திருந்தான்.

அமைதியாக இருந்தவன் பின்னர் எழுந்து சென்றான்....திரும்பி வரும்போது அவளுக்கு பால் மற்றும் சாப்பிட சில பொருட்களை கொண்டுவந்தவன்...அவளுக்கு சாப்பிட உலர்பழங்களும் பாலும் கொடுக்க

அவள் சாப்பிடாமல் அவனை பார்த்து கொண்டே இருக்க

“முதல்ல சாப்பிடு மதிம்மா”......என பொறுமையாக சொல்ல

அவள் சாப்டாமல் அப்படியே அமர்ந்திருக்க

“கோபம் என்மேல் தான.....அதுக்கு ஏன் நீ பட்னி இருக்க ...சாப்பிடு” என அவன் பாலை அருகே கொண்டு செல்ல

**முகத்தி திருபியவள்..."ஓ உங்க குழந்தை சாப்டமா இருக்கும்னு கவலை படறிங்க அப்டித்தான" என அவள் உதட்ட சுளித்தபடி கேட்க**

**"அப்போ அது உனக்கு குழந்தை இல்லயா மதி" என அவன் வருத்தத்துடன் கேட்க**

**அவள் ஏதும் பேசாமல் அமர்ந்திருக்க**

**"ஏண்டி....ஏண்டி என்னை கொல்ற....நான் உன்மேல வைத்திருக்க அன்பை எப்படி சொல்றது என கத்தியவன் கிளம்புடி....இந்த குழந்தை தான பிரச்சனை...இது நமக்கு வேண்டாம்....நான் உன் மேல வச்சிருக்க பாசத்த நிருபிக்க எனக்கு வேற வழிதெரியலை என சொல்லும்போதே குரல் கம்ம**

**"அச்சோ மாமா என்ன சொல்றிங்க" என அவன் வாயை அவள் மூடினாள்.**

**"அவளது இரு கைகளையும் பிடித்து தனது முகத்தில் வைத்து கொண்டவன் வேற என்ன பண்ண சொல்ற மதி.....நான் என்ன சொன்னாலும் உனக்கு புரிய போறதில்லை......இதை தவிர எனக்கு வேற வலி தெரியலை" என சொல்ல**

**"இல்ல மாமா.....நான் குழந்தைக்காக சொல்லல...நீங்க என்மேல பாசம் வைக்களையேனு ஆதங்கத்துலதான் அப்படி பேசினேன்....நீங்க என்ன மாமா"என அவளும் அழுக**

**உடனே அவன் அழுகயை நிறுத்தியவன் நிமிர்ந்து அவளை பார்த்து "மதி...மதி என்னை பார்" என சொல்ல**

**அவளும் முன்பு இருந்த கோபம் குறைந்து கொஞ்சம் அமைதி அடைந்திருந்ததால் அவன் சொல்லிற்கு கட்டுபட்டு அவனை பார்க்க**

**"இந்தா இத முதல்ல சாப்பிடு" என பாலை கொடுக்க அவள் குடித்த பின்பு உலர்பழங்களை கொடுக்க**

**"நீங்க ஏதும் சாப்பிடல்யே மாமா...எனக்கு போதும்...நீங்க சாப்பிடுங்க...".என அவள் சொல்ல**

அவன் கணகளில் இருந்து மறுபடியும் கண்ணீர் பெருக..."முதல்ல நீ சாப்டுடா...மாமா பிரட் இருக்கு சாப்பிட்டுக்கிறேன்" என்றான்.

"இல்ல மாமா எடுங்க...இரண்டு பெரும் சேர்ந்தே சாப்பிடலாமா" என அவள் மறுபடியும் சொல்ல

"அச்சோ மதிம்மா என அவளை இழுத்து நெஞ்சோடு அழுத்தி கொண்டவன்....நான் ரொம்ப புண்ணியம் பண்ணிருகனும்டி நீ எனக்கு மனைவியா வந்ததுக்கு" என சொன்னவன்

அவள் முகத்தி கையில் ஏந்தி "மதி...இப்போ மாமா சொல்றத கோபபடாம கேளுடா" என கெஞ்சும் குரலில் சொல்ல

அவள் ஏதும் பேசாமல் அவனயே பார்க்க

"மதி நீ சொல்றது எல்லாம் எனக்கு புரியுதுடா......எவ்ளோ கஷ்ட பட்ருக்க.....ஆனா சத்தியமா சொல்றேன் மதி......உன்னை என் உயிருக்கு மேல நேசிகிறேண்டா...அத மட்டும் நீ நினைவில் வச்சுக்கோ......எனக்கு தெரியலை மதி...இப்படி எல்லாம் பெண்கள் எதிர்பார்ப்பாங்கனு......சின்ன வயசுல இருந்தே ஆசிரமம்.....படிக்க வந்தப்பவும் என்னோட கடுமையான குணத்த கண்டு எந்த பொண்ணுங்களும் வந்து பேச மாட்டாங்க......வேலைக்கு வந்து பெருசா பெண்களோட பழக்கம் இல்ல...வினு மட்டும் தான்...அதும் சின்ன பெண்......அப்புறம் கல்யாணமும் நான் எதிர்பார்க்காம நடந்திடுச்சு" என சொல்ல

அப்போது மதி அவனை அடிபட்ட பார்வை பார்க்க

"எல்லாமே உடனுக்குடன் நடத்தால என்னால யோசிக்க முடியலடா.....சில விஷயங்கள் நான் செஞ்சது தப்புதான்....உன்னை வெளியே கூட்டிட்டு போகமா விட்டது எல்லாம் என்னோட தப்புதான்.....என்னை மன்னிச்சுடு...மதி."

இப்பவும் ஒரு சில விஷயங்கள் நீ சொல்றது எனக்கு புரியலைடா.....நீ வயிற்று வலியியாள துடிச்சது எனக்கு தெரியலடா.......குழந்தை விஷியமும் எனக்கு டாக்டர் கூப்பிட்டு ஆறிவுரை சொன்னாங்க...நீங்க இப்படி எல்லாம் பார்த்துக்கணும்....அவங்க தான் இந்த புக்ஸ் எல்லாம்

**சிபாரிசு பண்ணாக......அத பார்த்து தான் செய்யறேன்....மத்தபடி குழந்தைன்னு இல்லடா.....நான் அன்றே சொன்னேன் இல்லயா....விபீஷ் சொன்னத மட்டும் நியாபகம் வச்சிருக்க...நான் சொன்னது உனக்கு நியாபகம் இல்லயா.....என்னோட முதல் குழந்தை நீதாண்டா ...உனக்கு அப்புறம் தான் எல்லாரும் என சொன்னவன் அவள் நெற்றியில் தன அன்பின் அடையாளமாக ஒரு முத்தத்தை பதித்தவன் ...குட்டிம்மா எனக்கு உன்னை விட்டா யாரு இருக்கா சொல்லு....உனக்காவது உன் அண்ணன் இருக்கான்.....எனக்கு நீ மட்டும் தான்.....இனி நம்ம ரெண்டு பேருக்கும் சொந்தம்னு வரபோவது நம்ம குழந்தை தாண்டா...அதான் கொஞ்சம் அதிக உரிமை எடுத்துகிட்டேன்".......என தன் தரப்பை எடுத்து சொன்னவன்**

**இப்பவும் சொல்றேன் மதி....நான் உடனே மாறிடுவேன் என்று சொல்ல முடியாது.....மாறவும் முடியாதுடா........குடும்ப வாழ்க்கை எப்போதும் நம்ம நினச்சா மாதிரி அமைஞ்சிடாது மதி.......நம்ம தான் அதை நமக்கு பிடிச்ச மாதிரி சீர்படுத்தனும்.......... அதற்க்கான முயற்சியை நான் எடுப்பேன்......நீயும் சில விஷயங்களை சின்ன பொண்ணாவே இருக்கடா......என்னையும் புரிஞ்சுக்க முயற்சி பண்ணு மதி" என சொல்ல**

**அவள் திரும்பி அவனை முறைக்க**

**"பாரேன் இதான்.....முயற்சி பண்ணுனு தான் சொன்னேன்...... அதுக்கு எதுக்கு முறைக்கிற.........முதல்ல நீ எதுக்கு என்னை பார்த்து பயப்படற ....என்கிட்டே எதா இருந்தாலும் நேரிடியா கேட்க வேண்டியதானே .... உன் மாமா தான நான்........நீ மனதுக்குள் நினைப்பது எனக்கு எப்படி தெரியும் மதி".......**

**"எனக்கு தெரியலே மாமா........நீங்க என் மேல இவ்ளோ பாசம் வச்சிருபிங்கனு" என அவள் அழுது கொண்டே சொல்ல**

**"எனக்கும் தெரியலடா...உன் மனசுல இவ்ளோ ஆதங்கம் இருக்கும்னு......சரி.......நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்....இனி நடப்பது நல்லவையாக இருக்கட்டும்.......இனி எதா இருந்தாலும் இரண்டு பெரும் மனச விட்டு பேசிக்கணும்.....சரியா....".என அவன் கேட்க**

**அவள் தலைய அசைக்க**



DO NOT COPY

**“இப்போ என் குட்டிமா தெளிவா இருக்காங்களா” என அவன் சிரித்த படி கேட்க**

**“இருக்கேன் மாமா......ஏன் மாமா பேசாம நம்ம இங்கே இருந்திடலாமா......நீங்க அங்க போனாலே மாறிட்ரிங்க” என அவள் மறுபடியும் ஆரம்பிக்க**

**“பாரு இப்ப தான சொன்னேன்...நம்பு மதி......எதையும் சந்தேகமா பார்க்காத...அப்படி இருந்தா கூப்பிட்டு நாலு அடி வச்சு ஏண்டா இப்டி பண்றேன்னு கேளு.....அத விட்டு இப்படி உளற கூடாது” என சொல்ல**

**ம்ம்ம்...சரி மாமா....என அவள்  தலை ஆட்ட**

**“என்ன மாமாவ அடிக்கிறதா”என அவன் சிரித்து கொண்டே கேட்க**

**“அச்சோ...என்ன மாமா நீங்க என்றவள்......எனக்கு களைப்பா இருக்கு மாமா ...கொஞ்ச நேரம் படுத்துகிறேன்” என்றவள் அவன் பதில் சொல்வதற்கு முன்பே அவன் மடியில் படுத்தவள் உடனே உறங்கி விட்டாள்..அவளை பார்த்து கொண்டிருந்தவன் பல நேரம் குழந்தையாகவும் சில நேரம் குமரியாகவும் மாறி என்னை கொல்றாலே......என நினைத்தான்.**

**பின்னர் அங்கிருந்த நாட்களில் முடிந்த அளவு அவளை சந்தோசமாக வைத்து கொண்டவன் ராக்கய் அத்தையிடம் மதியை எப்படி கவனித்து கொள்ளவேண்டும் என்ற விபரங்களையும் கேட்டு வாங்கி கொண்டான்.இப்போதும் அவளிடம் பேசும்போது சிறிது கவனத்துடன் பேசுகிறான்.அது அவளை கண்டு பயம் அல்ல...அவளது அன்பில தன்னை தொலைத்தவன் அது சிறிதும் அவளிடம் குறையகூடது என்ற ஆசைதான்.**

**“என்ன மாமா என்ன பண்றிங்க இன்னும்......உட்கார்ந்துகிட்டே தூங்கறிங்களா” என கேட்டு கொண்டே மதி அருகில் வர**

**ஆறு மாதம் தாய்மையில் அழகுடன் நின்ற தன் மனைவியை பார்த்து ரசித்தவன்,எழுந்து அவள் அருகில் சென்றவன் அவள் கன்னத்தில் தனது காதலின் அடையாளமாக ஒரு முத்ததி பதித்தவன் “அழகான ரட்சசிடி நீ “என சொல்லியபடியே கிளம்பினான்.**



DO NOT COPY

கிரகப்ரவேச வேலைகள் தடபுடலாக நடந்து கொண்டிருக்க....முதல் நாள் இரவு நெருங்கிய நண்பர்கள் மட்டும் அங்கு இருந்தனர்......வேந்தனும் வெண்மதியை அழைத்து சென்று இருந்தான்......விபீஷ் குடும்பத்தினர்  வந்து இருந்தனர். சுரேந்தர் வந்திருந்தால் வெண்ணிலா அவருடன் வந்திருந்தாள்.வினுவின் அம்மாவும் தம்பியும் வந்திருந்தனர்.....மற்றும் அந்த அப்பார்ட்மென்ட்டில் இருக்க போகும் அனைத்து நபர்களும் வந்திருந்தனர்.

நீல நிற வண்ண புடவியில் வெண்ணிலா வந்து இறங்க பார்த்த விபீஷ் வாயை பிளக்க ,வேந்தனே விழி விரித்து நிற்க ,ரசிக்க வேண்டியவனோ அதிர்ச்சியில் சிலையாக நின்றான்.

பல உடைகளில் அவளை பார்த்தவன் இன்று தான் முதன் முதலாக புடவையில் பார்க்கிறான்.காரில் இருந்து இறங்கியவள்  கண்கள் தனது கண்ணனை தேட

“தேடும் கண் பார்வை தவிக்க துடிக்க” என அவள் காதருகில ஒரு பாடல் கேட்க

“சும்மா இரு விபீஷ்” என அவள் வெட்கத்தில் சிவக்க

அங்கு ஒருத்தியின் முகம் கோபத்தில் கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்தது......வெண்ணிலா வந்ததில் இருந்து வினு விபீஷை பார்க்க,அவன் வாயை பிளந்து நின்றதும் ,பின்னர் அவள் அருகில் சென்று பேசியதும் எல்லாம் கவனித்து கொண்டிருந்தாள்.

வேகமாக ராஜ்  அருகில் சென்றவள்  அவனிடம் ஏதோ சொல்ல

அவன் விபீஷிடம் ஏதோ  வேலை சொல்ல அவன் அங்கிருந்து நகர்ந்தான்.

அப்போது அங்கு வந்த சதீஷ் வேந்தனிடம் தனது தந்தை பேச விரும்புவதாக அழைத்து சென்றான்.

அதற்குள் ஏதோ கேட்பதற்கு நிலா விபீஷிடம் வர

மறுபடியும் வினு ராஜிடம் சொல்ல இதே போல் நான்கு முறை நடக்க விபீஷ் கவனித்து விட்டான்.



DO NOT COPY

**அடுத்த முறை ராஜ் வந்ததும் அவனை பிடித்து நிறுத்தியவன்....."உணமை சொல்லு நீயே வரியா...இல்ல வினு அனுப்புனாளா" என கேட்க**

**"ஏன் பாஸ் மாட்டி விட்றிங்க என்றவன்.....வினுதான் பாஸ்...என்னை போட்டு கொடுத்திடாதிங்க" என சொல்லி விட்டு நகர்ந்தான்.**

**அவன் வெண்ணிலாவை விட்டு நகர்ந்தனா என பார்க்க வந்த வினுவின் முன்னால் போய் நின்றவன்......"ஆள விட்டு ஏன் சொல்லணும்...நீ வாடானா நான் வந்திடறேன்......அதுக்குதான காத்திட்டு இருக்கேன்" என்றான்.**

**அவன் கண்டு பிடித்துவிட்டானே என கோபம் வர**

**"ம்ம்ம் ...இப்படி பெரிய ஆளுக வர இடத்துல நீங்க ஒரு பொண்ணுகிட்ட சிரிச்சு சிரிச்சு பேசிட்டு இருந்தா நம்ம கம்பெனி பத்தி என்ன நினப்பாங்க அதுக்குதான் சொன்னேன்.....நீங்க எப்படி போனா எனக்கென்ன" என சொல்லி விட்டு திரும்பியவள் விபீஷின் தந்தை தன்னை கவனிப்பதை கண்டவள் வேகமாக அந்த இடத்தில் இருந்து நகர்ந்தாள்..**

**இவள் ஏன் இப்படி ஓடுகிறாள் என யோசனை உடனே திரும்பியவன் அங்கு நிலா வெற்றியிடம் சிரித்து பேசி கொண்டிருப்பதை பார்த்தவன்**

**"அடபாவி......என்னடா இது....இந்த பொண்ண கண்டாலே சிங்கம் மாறி சீறிகிட்டு நிற்ப.......இப்போ சிரிச்சு பேசிட்டு இருக்க....உன்ன நம்பி வேற விடிய காலையில அவ்ளோ டையலாக் பேசுனனே...என்னடா நடக்குது இங்க " என வடிவேல் பானியில் கேட்க**

**"பார்ட்னெர் எல்லாம் உங்க ஐடியா தான்" என நிலா கண்ணடித்து கொண்டே சொல்ல**

**யாரு...இவனா என வெற்றி பார்த்து முறைக்க**

**"ஏண்டா முறைக்கிற ......ஆஞ்சநேயர் பக்தனாட்ட சீன போடறிங்க.....ஆனா ஆறு மாசத்துல் ஆள கரெக்ட் பண்ணிட்ரிங்க...எப்டிடா இப்படி எல்லாம்" எனக்கு ஒன்னுமே புரியலைடா என்றான்.**

“உலராத விபீஷ்.......நிலா முதல் முறையா புடவை கட்டிட்டு வந்திருக்கா ...நல்லா இருக்கானு கேட்ட....அதான் சொல்லிட்டு இருக்கேன்” என்றான்.

“இத நான் நம்பனும்........நடத்து நண்பா நடத்து.........இந்த கொடுமை எல்லாம் நான் பார்க்க வேண்டியது இருக்கு” என தலையில் அடித்த படி நகர

“விபீஷ் அண்ணா எங்க போனிங்க “ என கேட்ட படி மதிஅங்கு வர

“ஏன் மயிலு.......உன் சார்பா நீ எதாவது பண்ண போறியா” என்றவன் சட்டென மூலையில் பல்பு எரிய

“மயிலு உனக்கு முக்கியமான ஆள அறிமுகபடுத்தறேன் வா”.....என அழைத்து சென்றவன்

நேராக நிலவிடம் அழைத்து செல்ல அங்கு வெற்றியும் இருக்க

மதிய பார்த்த உடன் வெற்றி தடுமாற

“வா மயிலு......இவங்கள உனக்கு தெரியுமா.....உனக்கு ரொம்ப வேண்டியவங்க....சொந்தகாரங்க ” என அவன் இழுத்து சொல்ல

“அப்படியா...யார் அண்ணா இது....நான் பார்த்ததே இல்ல...நம்ம ஊர்ல மளிகைக்கடை வச்சு இருக்கங்களே சுப்பு அண்ணன் அவங்க பொண்ணா “என கேட்க

“அச்சோ அது இல்ல மயிலு.... இது வேற மாதிரி “என விபீஷ் தொடங்க

அதற்குள் உஷாரான வெற்றி “இல்ல பாப்பு...நம்ம சென்னைல ஒரு மால் கட்றோம்ல...அது இவங்கலோடது தான் ..பேரு வெண்ணிலா” என அறிமுக படுத்த

“ஜஸ்ட் மிஸ்” என விவேக் ஸ்டைலில் விபீஷ் சொல்ல

“மவனே வெளியே வாடி உனக்கு கச்சேரி இருக்கு” என வெற்றி அவன் காதில் சொல்ல

“அதான் எஸ்கேப் ஆகிட்டில அப்புறம் என்ன” என்றவன் அதற்குள்

**“ஹாய் மதி…எப்படி இருக்கீங்க……உங்கள் பத்தி உங்க அண்ணா அடிகடி சொல்லிட்டு இருப்பார்…..எனக்கும் கூட பிறந்த சகோதரி  யாரும் இல்ல…அண்ணா ஒருத்தர்தான்…அவரும் வெளிநாடுனு சுத்திட்டு இருப்பார்…..உங்கள் பார்க்கரப்பா எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு”… என வெண்ணிலா ஐஸ் வைக்க**

**“யப்பா சாமி…உலகம் மகா நடிப்புடா இது “என விபீஷ் வாயை பிளக்க**

**“ஆமாமா …எங்க அண்ணாவுக்கு என் மேல ரொம்ப பாசம்” என சொன்னவள்**

**“ நீங்க இந்த புடவையில ரொம்ப அழகா இருக்கீங்க என்றவள் …….ஏன் உங்க அப்பா அம்மா எங்க ” என மதி கேட்க**

**“அவங்க சின்ன வயசுல இறந்திட்டாங்க மதி…நானும் உங்கள மயிலுனே கூப்பிடட்டுமா….அது எனக்கு ரொம்ப பிடிச்சுருக்கு” என சொல்ல**

**“அச்சோ….உங்களுக்கு அப்பா அம்மா இல்லயா…..எங்களுக்கும் அப்படிதான்…எனக்கும் எங்க அண்ணா  தான்…..ஆனா இரண்டு அண்ணா ..விபீஷ் அண்ணா வெற்றி அண்ணா” என விபீஷை அவள் முதலில் சொல்ல**

**விபீஷின் கண்களில் கண்ணீர் வர வெற்றி அவன் தோளை தட்டி கொடுக்க “உண்மையான பாசத்துக்கு எப்போதும் மதிப்பு இருக்கும் நண்பா என சொன்னவன் காதலுக்கு அது போலதான்” என அவன் காதில் சொல்ல**

**அவனை  நிமிர்ந்து பார்த்தவன் வேகமாக அவனை அணைத்து கொண்டவன் …”நன்றி நண்பா…ரொம்ப டிஸ்டர்பா இருந்தேன்…..தேங்க்ஸ் நண்பா” என மனதில் இருந்து வார்த்தைகள் வந்தான.**

**“ஹே எல்லாரும் இங்கதான் இருக்கிங்களா என வந்த வேந்தன் இந்த வினு எங்க அவளையும் கூப்பிடு ஒரு முக்கியமான விஷயம் பேசணும்” என்றான்.**



DO NOT COPY

**“என்ன நண்பா......விற்காத ஒரு பிளாட்டும் வித்திடுச்சா...இவ்ளோ சந்தோசமா இருக்க” என விபீஷ் கேட்க**

**“ம்ம்ம்ம்...எல்லாம் காரணமாகத்தான் என்றவன் ...சரி வெற்றி நம்ம ஆறாவது பிளாட் வாங்கி இருக்காருல்ல சதிஸ்னு ஒருத்தர்” என சொல்ல**

**“ஆமா நீ கூட சொல்வியே பெரிய கோடிஸ்வரன் ........நல்ல பையன் அப்டின்னு..... ஏன்” என கேட்க**

**“ஏன் அவனுக்கு என்ன” என விபீஷ்ம் அழுத்தமான குரலில் கேட்க**

**அந்த நேரத்தில் வினுவும் ராஜும் அங்கு வர**

**“வா வினு...உனக்கு நல்ல நேரம் ஆரம்பம் ஆகிடுச்சு......உன்னோட கஷ்டத்துக்கு எல்லாம் விடிவு வந்திடுச்சு “என வேந்தன் சந்தோசமாக சொல்ல**

**“என்ன சார் என்ன நடந்தது....அந்த போட்டிக்கான ரிசல்ட் வந்திடுச்சா...இல்லயே அதுக்கு இன்னும் நாள் இருக்கே” என அவள் படபடக்க**

**விபீஷ் அவளே பார்த்து கொண்டிருக்க**

**“உன்னை பெண் கேட்கிறாங்க வினு.....அதும் யாரு நம்ம பிளாட் வாங்கி இருக்காருல்ல mr.சதிஸ் அவர்தான்......உன்னை அவருக்கு ரொம்ப பிடிச்சுடுசாம்...எதுமே வேண்டாம் பெண்ணை கொடுத்தா போதும்னு சொல்றார்...உங்க அம்மா கிட்ட கேட்டேன்...அவங்களும் சம்மதம் சொல்லிட்டாங்க......மத்தபடி உன்கிட்ட அவரும் பேசி இருக்காராம்....அதுனால வேற பார்மாலிட்டீஸ் ஏதும் வேண்டாம்.....நேரா கல்யாணம் தான் சொல்றார்...நீ என்ன சொல்ற” என சந்தோசத்துடன் சொல்ல**

**“மதியோ ...அப்பபடியா மாமா...வினு உன் நல்ல குணத்துக்கு நல்ல இடமா அமஞ்சிருக்கு ......ம்ம்ம்...இனி எங்களை எல்லாம் கண்டுக்க மாட்ட” என பேச**

**“வாவ் !!!!!! வாழ்த்துக்கள் வினு” என நிலா வாழ்த்த**

**பேச வேண்டியவளோ அதிர்ச்யில் அப்படியே நிற்க**

**“விபீஷோ வேகமாக அதெல்லாம் வேண்டாம் வேந்தா....அவன பத்தி ஒன்னும் தெரியாது.....அதெல்லாம் வேண்டாம்...அவ படிக்கணும்” என சொல்ல**

**இல்ல விபீஷ்...எல்லாம் விசாரிச்சுட்டேன்....பொண்ணு கேட்டதே அவங்க அப்பாதான்......முறைப்படி எல்லாம் செய்யறான் அந்த பையன்......படிப்பும் திருமணம் முடிஞ்சு படிக்கட்டும்னு சொல்லிட்டான்......இங்கதான இருக்க போறா .........இந்த பிளாட் அவனுக்குதானாம்...திருமணம் முடிஞ்சதும் இங்கதான் வினு இருப்பா ...அதுனால ஒன்னும் பிரச்சனை இல்லை” என அவன் விளக்க**

**“வெற்றியோ வேந்தா யோசிச்சு பண்ணலாம்.....அவசரபடாத” என்றவன் ஏனெனில் விபீஷ் காதலிக்கிறான் என்று அவனுக்கு தெரியும்...ஆனால் வினு....அவனும் அதை பற்றி ஏதும் சொல்ல மறுக்கிறான்...அதனால் வெற்றியால் முழுதாக மறுப்பு கருத்து தெரிவிக்க முடியவில்லை.**

**“வினுதாண்டா சொல்லணும்......நம்ம என்ன சொல்றது” என வேந்தன் வினுவ பார்க்க**

**வினுவின் மனமோ அனலில் இட்ட புழுபோல் துடித்து கொண்டிருக்க அவள் என்ன சொல்வாள்.....அமைதியாக தலை குனிந்த படி இருக்க**

**விபீஷோ “அதெல்லாம் வேண்டாம் வேந்தா.......எல்லாம் அப்புறம் பேசிக்கலாம்.....வா வேலைய பார்கலாம்” என நகர**

**“நீ சும்மா இரு விபீஷ்...வினு ஏதும் சொல்லலை...அப்போ அவளுக்கு விருப்பம் தான்னு நினைக்கிறன்...இல்ல வினு” என கேட்க**

**“ஏன் மாமா.....அவ சின்ன பொண்ணு சொல்ல கஷ்டப்படலாம்...வேண்டான்ன உடனே சொல்லி இருப்பால்ல” என மதி சொல்ல**

**“அப்போ சரின்னு சொல்லிடட்டுமா” என்றவன் அருகில் இருக்கும் அவள் அன்னையை பார்க்க அவள் முடிவு தான் என்னோட முடிவும் என அவர் சொன்னார்.**

**வேந்தன் “நான் சதீஷ் அப்பாவிடம் சொல்லி விட்டு வருகிறேன்” என கிளம்ப**

**எதிரே வந்த விபீஷ்…”வேண்டாம் நண்பா …எதற்கு அவசரபடாத…பொறுமையா செய்யலாம்” என தடுக்க**

**“விபீஷ் எனக்கு வினுவ பத்தி நல்ல தெரியும்…இதான் அவளுக்கு பாதுகாப்பும் கூட……உனக்கு புரியாது விபீஷ்” என சொல்லல**

**“எனக்கு எல்லாம் புரியும் வேந்தா……நீ வேண்டாம்னு சொல்லிடு …அவளுக்கு இதுல விருப்பம் இல்லையனு சொல்லிடு “என கெஞ்ச**

**“விபீஷ்…என்னடா இது…எப்பவும் வினுகிட்ட சண்டைகட்டிட்டு இருப்ப…அது மாதிரின்னு நினைச்சியா இதை …இது வாழ்க்கைடா …….அவளே அமைதியா இருக்கா…நீ ஏண்டா” ….எனவேந்தன் திட்ட**

**“ஆமாடா…வாழ்க்கை தான் என்னோட வாழ்க்கை இல்லயா அதான்” என சொல்ல**

**“என்னடா உலரா” என வேந்தன் வேகமாக கேட்க**

**“அய்யோ ஏண்டா எல்லாரும் சேர்ந்து என்னை கொல்றிங்க என்றவன் வேகமாக வினுவிடம் சென்றவன் இப்பவும் நீ பேசமாட்ட” என கேட்க**

**அவள் ஏதும் பேசாமல் அமைதியாக நிற்க**

**“பேசு வினு…பேசு …சொல்லு வினு…இப்பவாவது சொல்லு வினு.”……என அவளிடம் விபீஷ் கெஞ்ச**

**வேந்தன் சூழ்நிலை ஏதோ சரியில்லை என நினைத்தவன் வேகமாக வெற்றியிடம் சென்றவன் “என்னடா உளறான் அவன்……வினுக்கு எதவாது பிரச்சனையா” என கேட்க**

**“தெரியல வேந்தா” என வெற்றி ஒரே வார்த்தையில் முடிக்க**

**ஏதும் புரியாமல் வேந்தனுக்கு கோபம் வர**

**“விபீஷ் நீ பண்றது ஏதும் சரியில்லை…உனக்கு என்னதான் பிரச்சனை…ஏன் இப்படி பைத்தியகாரனாட்ட நடந்துக்கிற……இது அவ**

**முடிவு பண்ண வேண்டியது...நீ ஏன் தலையிட்ற...அவ மட்டுமே எடுக்க வேண்டிய முடிவு "என அவன் அழுத்தி சொல்ல**

**"இதுல எனக்கும் பங்கிருக்கு வேந்தா" என அவனும் அழுத்தமாக சொல்ல**

**"என்னடா சொல்ற" என வேந்தன் கேட்க**

**"அவ என் பொண்டாட்டிடா....சட்டப்படி தாலி கட்டிய பொண்டாட்டி" என சொல்ல**

**கேட்ட அனைவருமே அதிர்ந்து போய் நின்றனர் வெற்றி உட்பட......**

நீங்காத நினைவுகளால்,
தூங்காத என் கண்கள்
ஏங்காத ஏக்கமில்லை.
ஒளிவு மறைவற்ற வார்த்தைகளால்,
எனை உன் வசமாகினாய்
குழந்தை போன்ற குறும்புகளால்
எனை குறுக சிந்திக்க வைத்தாய்
காரணம் என்னவென்று புரியவில்லை
ஆனால் கரணம் இன்றி உறவுகள் இல்லை.
மௌனத்தின் போர்வைக்குள்

உன் மனதை மறைகிராயே....

யாருகாகடி உன்னை ஏமாற்றி கொள்கிறாய்

உனது இந்த மௌனம்

எனது உயிரை குடிக்கும்ஆயுதம்

என்பது உனக்கு புரியவில்லையா

எதிர்பார்ப்புகள் இல்லாத பழக்கம்

ஏமாற்றம் அடைவது வழக்கமோ ?

லஷ்மிரவி

DO NOT COPY

முடியாது பெண்ணே

நானும் எனது காதல் வேள்வியை

தொடங்கிவிட்டேன்..........

வேள்விக்குள் எழும் கேள்விக்கு

உனது பதில் என்ன????????

காத்திருக்கிறேன் !!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!!

DO NOT COPY

அத்தியாயம் -27

கனவிலும் நினைக்காத சில நிகழ்வுகள் சில நேரம் நடைபெறும்போது அதை ஏற்று கொள்வது கடினமே...

விபிஷின் வார்த்தையில் அனைவரும் உறைந்து போய் நிற்க

வினுவோ அழுதுகொண்டே நிற்க......... விபீஷ் தனது இரண்டு கைகளிலும் தலையை தாங்கியபடி அப்படியே நாற்கலியில் அமர்ந்திருந்தான்.

ராஜ் தான் முதலில் அந்த சூழ்நிலையை கலைத்து வேந்தனின் அருகில் வந்து அவனை சார்...சார் என அழைக்க

நிலாவும் நிலைமை உணர்ந்து வினுவின் அருகில் செல்ல

வெற்றி மெதுவாக விபீஷின் அருகே அமற

மதியோ விபீஷின் முகத்தை பார்த்த படியே நின்றாள்.

ராஜின் அழைப்பை கேட்டு நிதானத்திற்க்கு வந்த வேந்தன் "என்ன ராஜ் உளறான் இவன்.......என்னடா நடக்குது" என ஆத்திரமாக கேட்டான்.

“சார் எல்லாரும் பார்க்கறாங்க …கொஞ்சம் மெதுவா பேசுங்க” என சொன்னான்.

சுற்றிலும் பார்த்த வேந்தன் மற்றவர்கள் எல்லாம் கூட்டம் கூட்டமாக பேசிகொண்டிருக்க….. வினியின் தாயாரும் ,விபீஷின் குடும்பமும் அதிர்ச்சியில் அப்படியே நின்று கொண்டிருந்தது.

வேகமாக விபீஷிடம் சென்ற வேந்தன் அவனது தோள்களை பிடித்து எழுப்பி “டேய் விபீஷ்…சும்மாதான சொன்ன….இது உண்மை இல்லை தான ….நீ அப்படி எல்லாம் செய்யமாட்ட……….அப்படியே இருந்தாலும் என்கிட்டே கண்டிப்பா நீ சொல்லிருப்ப …எனக்கு தெரியும்” என சொல்லி கொண்டிருக்கும்போதே

“இல்லை வேந்தா…..நான் சொல்வது எல்லாம் உண்மைதான்” என விபீஷ் அழுத்தமாக சொன்னான்.

“டேய் வெற்றி என்னடா பேசறான் இவன்” என அவனை திரும்பி கேட்க

வெற்றி தலை குனிய

அதிர்ச்சியுடன் அவனை பார்த்த வேந்தன் “டேய் அப்போ இது உனக்கு முன்னாடியே தெரியுமா?”என கேட்டான்.

“அது வந்து விபீஷ் வினுவ விரும்பறான்னு தெரியும்…ஆனா….” என அவன் இழுக்க

“ஆனா என்னடடாஆஆஆஆஆஆ!!!! என வேந்தன் கோபத்தில் கர்ஜிக்க …கேட்ட அனைவருமே ஒரு நிமிடம் அதிர்ந்து விட்டனர்.

“திருமணம் ஆனது இப்பதான் தெரியும் வேந்தா “என மெதுவாக சொன்னான்..

“ஆஹா நம்ம எல்லாம் நண்பர்கள் …நமக்குள்ள ஒளிவு மறைவு ஏதும் இல்லைனு நினச்சு இருந்தேன்….ஆனா அது தவறுன்னு இப்பதான் புரிஞ்சுகிட்டேன்” என வேதனையுடன் வேந்தன் கூற

DO NOT COPY

“அப்படி இல்லை வேந்தா என ஒரே நேரத்தில் விபீஷும் வெற்றியும் சொன்னவர்கள்.......நானே உன்கிட்ட சொல்லனும்னு இருந்தேன் “என விபீஷ் முடிப்பதற்க்குள் வேந்தன் அவனை முறைக்க

அதற்குள் விபீஷின் தந்தை ...”நான் அப்பவும் சொன்னேன்....இந்த ஆநாதை பசங்களை நம்பி போகாதேன்னு....இப்ப பாரு......பார்ட்நர்னு சொல்லி உன்ன உள்ள இழுத்து இப்போ கல்யாணம் என்னஎன்னமோ சொல்லி ஏதும் தெரியாத மாதிரி நடிக்கிறாங்க.......இந்த பொண்ணு அமுக்குணி மாதிரி இருந்திட்டு என்ன வேலை பண்ணி இருக்கு பாரு”...என வினுவை எரித்து விடும் பார்வை பார்த்து கொண்டே கத்தி கொண்டிருந்தார்.

வெற்றி அவரிடம் சென்றவன் “அங்கிள் என்ன நடந்ததுன்னு தெரியாம கண்டபடி பேசாதிங்க..... இது எல்லாம் சொன்னதே விபீஷ் தான.......நீங்களே பார்த்திங்கள...எங்களுக்கே இப்பதான் தெரியும்....முதல்ல விசாரிப்போம்” என அவரை சமதானபடுத்தினான்.

வேந்தன் வினுவின் அருகில் சென்றவன்...”ஏன் வினு விபீஷ் சொல்றது உண்மையா...அப்படி இல்லதான....அப்படி இருந்தா நீ கண்டிப்பா என்கிட்டே சொல்லிருப்ப எனக்கு தெரியும்”......என நம்பிக்கையுடன் கேட்டான் .

அதை கேட்டதும் வினு வெடித்து கதற

“அவளை கேட்காத வேந்தா....அவள் மேல எந்த தப்பும் இல்லை...அவ விருப்பம் இல்லாமதான் தான் இந்த திருமணம் நடந்தது” என விபீஷின் குரல் வர

திரும்பி பார்க்க அதற்குள் ராஜ் வேந்தன் அருகில் வந்தவன் ...”சார் மன்னிச்சுகுங்க....இந்த திருமண விஷ்யம் வினுவுக்கே திருமணம் நடப்பதற்கு சில வினாடிகளுக்கு முன்தான் தெரியும்” என்றான்.

“என்ன ராஜ் சொல்ற” என புரியாமல் வேந்தன் கேட்க

“நானே சொல்றேன் வேந்தா என ஆரம்பித்தான் விபீஷ் ...நான் வினுவ நான்கு வருசமா உயிருக்கு உயிரா நேசிக்கிறேன்...இது யாருக்கும் தெரியாது...ஏன் வினுவுக்கும் தெரியாது.

நானும் இலைமறைவா காய்மறைவா அவகிட்ட சொல்லி பார்த்தேன்...அவ கண்டுக்கவே இல்ல.....அப்பத்தான் வினுவோட அம்மா அவள் திருமணத்தை பத்தி பேசினாங்கன்னு நீ சொன்ன...எனக்கு பயங்கிற அதிர்ச்சி.....அந்த சமயத்துல எங்க வீட்லயும் திருமண பேச்சு எடுத்தாங்க...சரி இனியும் காத்திருக்க கூடாது வினுகிட்ட காதலை சொல்லிடணும்னு நினச்சேன்.........அப்பத்தான் ராஜ் என்கிட்ட என் அப்பா அவங்க வீட்டுக்கு வந்ததா சொன்னான்....என் விஷயம் எதோ அப்பாவுக்கு தெரிஞ்சுடுசோனு பயம் வந்திடுச்சு......ஆனா வினுவும் சரி,எங்க அப்பாவும் சரி அந்த மாதிரி ஏதும் என்கிட்டே நடந்துகலை.ஆனாலும் என் மனதை வினுக்கிட்ட சொல்லிடணும்னு முடிவு பண்ணேன்.

அந்த சமயத்துல நீயும் வீட்டுக்கு வர சொல்லி என் திருமணத்தை பற்றி பேசுனியா...சரி விஷயம் வேகமாக போயிட்டு இருக்குனு தெரிஞ்சுது.உன்கிட்ட பேசிட்டு வெளியே வந்து ராஜ்க்கு போன் பண்ணேன்.

“அவன் காலேஜ்ல மார்க் சீட் வாங்கிட்டு வந்திட்டு இருக்கேனு சொன்னான்.அவனை அப்படியே கோவிலுக்கு வர சொல்லிட்டு கிளம்பினேன்.அப்போ என்னோட நண்பன் ஜாஸ் போன் பண்ணான்.......அவன் விரும்பின பொண்ண அவன் ரிஜிஸ்டர் திருமணம் பண்ணிக்க போறானாம்...சாட்சி கையெழுத்து போட என்னை அழைத்தான்.அங்க போனதுகப்ரம் தான் தெரிஞ்சுது. அவங்க வீட்ல எல்லாரும் எதிர்ப்பு அதுனால ஒரு பாதுகாப்புக்கு இந்த திருமணம்...அப்புறம் மனசு மாறுன உடனே முறைப்படி பண்ணிக்குவோம்னு சொன்னான்.எனக்கும் அந்த ஐடியா பிடிச்சு இருந்தது......என்னோட பிரச்சனை என்னை மீறி போனா அந்த மாதிரி பண்ணலாம்னு நினச்சேன்.

மறுநாள் வினுக்கு போன் பண்ணி வேலை இருக்குனு வர சொன்னேன்.அவளும் வந்தாள் என்றவன் அந்த நினைவுகள் பின்னோக்கி செல்ல

“என்ன சார் யாரும் இல்லை என கேட்டு கொண்டே காரில் அமர்ந்தாள் வினு.......சிறிது தூரம் சென்றவன் ஆபிஸ் வேலை இல்லை



DO NOT COPY

வினு....உன்னிடம் கொஞ்சம் பேசனும் அதான்" என மெதுவாக சொன்னான்.

அவள் அதை எதிர்பார்த்தது போல் அமைதியாக அவனை பார்க்க காவிரி ஆற்றின் கரை ஓரத்தில் காரை நிறுத்தியவன் அவளிடம் திரும்பி அமர்ந்தான்.

"வினு...வினு" என இருமுறை அழைக்க

அந்த குரலில் இருந்த ஒரு மென்மை வினுவை தாக்க அவளும் ம்ம்ம் என பதில் கொடுக்க

"வினு எனக்கு சுத்தி வலச்சு பேசதெரியாது வினு......மனசில பட்டத சொல்லிடறேன்......இப்படி பட்டுன்னு சொல்றதால என்னோட உணர்வுகளை குறைவா நினச்சிடாத....என மனசுல இருந்து இல்ல உன் உயிரில் இருந்து வரும் வார்த்தை வினு இது "என சொல்லிவிட்டு அவள் கண்களையே பார்க்க

அவளோ அதை எதிர்கொள்ள முடியமல விழிகளை மூட

மெதுவாக அவள் முகத்தை கைகளில் ஏந்தியவன் "நான் உன்னை விரும்பறேன் வினு.......உயிருக்கு உயிரா விரும்பறேன் வினு" என தனது மனதில் உள்ள காதலின் ஆழத்தை வார்த்தையில் கொண்டுவந்து சொன்னான் விபீஷ்.

ஒருசில வினாடிகளே என்றாலும் அந்த சனத்தை இருவரும் மனதார அனுபவித்தனர் . .

அவள் அமைதி அவனுக்கு மகிழ்ச்சியை தர அவளோடு இதழில் அவன் முத்தமிட அந்த கனத்தில் அவன் கன்னத்தில் இடி போல் அவள் விரல்கள் பதிந்தன.

அவள் கன்னத்தில் அறைந்ததை அவன் உணரும் முன்னே அவள் வேகமாக காரை விட்டு இறங்கி சிறிது தூரம் சென்று இருந்தாள்..விபீஷ் சுய நினைவிற்கு வரவே சில நிமிடங்கள் பிடித்தன.....தனது தலையை ஒரு சிலுப்பு சிலுப்பியவன் என்ன நடந்ததது......அமைதியாகத்தானே இருந்தாள்...சட்டென அறைந்துவிட்டாள் என நினைத்தவன்



DO NOT COPY

வினு...வினு என அழைத்து கொண்டே அவள் பின்னால் சென்றவன் அவள் கைகளை பிடித்து தடுத்து நிறுத்தி......ஏன் வினு என்னாச்சு....என்னை உனக்கு பிடிக்கலையா ...உணமை சொல்லு.......இல்ல இப்போ நான் உனக்கு முத்தம் கொடுத்தது பிடிக்கலியா ...சாரி வினு......நானும் கண்ட்ரோல் பண்ணி பார்த்தேன் முடியலடா என சிரித்து கொண்டே சொன்னவன் இந்த நாட்களுக்காக எவ்ளோ நாள் ஏங்கிட்டு இருந்தேன் தெரியுமா" என காதல் மயக்கத்தில் அவன் சொல்லி கொண்டிருக்க

"அச்சோ...கொஞ்சம் உலறத நிருத்தறிங்களா.......நீங்க இப்போ சொன்னது பண்ணது ஏதும் எனக்கு பிடிக்கலை" என கத்தினாள்.

" என்ன சொல்ற வினு என அதிர்ச்சியுடன் கேட்டவன் ......இல்ல உனக்கு பிடிச்சுருக்கு...உன் கண்ணே சொல்லுதே.....என்னோட காதலை நான் எந்த அளவுக்கு அனுபவிச்சு உன்கிட்ட சொன்னனோ அதே உணர்வு அத கேட்ட உனக்கும் இருந்ததே......உன் முகத்தை பார்க்கும்போதே தெரிந்ததே......சொல்லு வினு இப்போ எதுக்கு என்னை அறைஞ்ச நீ "என கேட்க

அவள் ஏதும் பதில் சொல்லாமல் நடந்து கொண்டே அலைபேசியில் முயற்சிக்க அங்கு டவர் இல்லதததால் அது வேலை செய்ய மறுத்தது.

"வினு இங்க பாரு....கொஞ்சம் நில்லு....என்னை பார்த்து பேசு....என்னை உனக்கு பிடிக்கலையா" என அவன் கோபமாக அவளை நிறுத்தி கேட்க

"எனக்கு உங்கள பிடிக்கலை...பிடிக்கலை என கண்ணை மூடி கத்தியவள் இப்போ நீங்க என்னை வீட்டுக்கு கூட்டிட்டு போறிங்களா...இல்லயா.....அப்புறம் நான் கத்தி ஊரை கூட்டிடுவேன் என மிரட்டினாள் .

அவன் ஏதும் பேசாமல் அமைதியாவே நிற்க

கண்ணை மூடிக்கொண்டு பேசிகொண்டிருந்தவள் மெதுவாக கண்விழித்து பார்க்க

விபீஷ் அவளயே பார்த்து கொண்டிருந்தான்.

அவனை பார்த்ததும் முகத்தை திருபியவள் “நான் போகணும் விபீஷ்” என சொல்ல

“நான் கேட்டதுக்கு இன்னும் பதில் வரலை.....சொல்லு போகலாம்” என அவன் அமைதியாக அழுத்தமாக சொன்னான்.

“என்ன சொல்றது விபீஷ்.......நீங்க விரும்புனா நானும் விரும்பனும்னு ஏதாவது கட்டயமா என்ன.......எனக்கு உங்களை பிடிக்கலை அவ்ளோதான்” என்றாள்.

“அதான் ஏன் பிடிகலைய்னு கேட்கிறேன்” என அவன் மறுபடியும் அதிலே நிற்க

“பிடிக்கலைனா பிடிக்கலைதான் ....ஏன்...எப்படின்னு எல்லாம் உங்ககிட்ட விளக்கிட்டு இருக்க முடியாது” என அவள் சொல்ல சொல்ல அழுகை வர

நான் சொல்றேன்...நீ என்னை விரும்பற....மனதார காதலிக்கிற அதும் எனக்கு தெரியும்” என அவன் மீண்டும் அழுத்தமாக சொன்னான்.

“நீங்க அப்படி நினச்சுகிட்டா நான் எப்படி பொறுப்பாக முடியும்....நான் உங்களை விரும்பலை...விரும்பலை என அவள் விடாமல் சொல்லி கொண்டே இருந்தாள்.

“அப்புறம் ஏன் வினு நான் எழுதின கவிதையை பத்திரமா உனது மேஜை டிராவுல இருக்கு....அதும் அதை சுற்றி இதயத்தின் படம் போட்டு” என அவன் கேட்டான்.

அதிர்ச்சியில் சிலையாக சில நிமிடம் நின்றவள் பின்னர் சமாளித்து “அப்படி எல்லாம் ஏதும் இல்லை....சும்மா உளறாதிங்க.....”.என அவள் தடுமாற

அவன் சிரித்து கொண்டே அவள் அருகில் வந்தவன் அவளை தோளோடு அணைத்து “எனது வினு குட்டிக்கு பொய் சொல்ல வராதுன்னு எனக்கு தெரியும்.......ஏண்டா இப்படி அழிச்சாட்டியம் பன்ற.......உனக்கும் என்னை பிடிச்சருக்கு.....அதை ஏன் மறைக்கிற...... வீட்ல தெரிஞ்சா திட்டுவாங்கனா” என அவன் சொல்ல



DO NOT COPY

அவள் முகம் அந்த வார்த்தையை கேட்டதும் பயத்தில் வேர்க்க வேகமாக அவனிடம் இருந்து நகர்ந்தவள்...."இங்க பாருங்க mr.விபீஷ் நம்ம இரண்டு பேரும் ஒரே இடத்துல இருக்கோம்...பார்ட்னெர் வேற...எனக்கு நீங்க  வேந்தன்  வெற்றி சார் மேல நல்ல மரியாதை இருக்கு...உங்கனால அது மாறிடபோகுது......இப்போ நீங்க இப்படி பேசினது வேந்தன் சார்க்கு தெரிஞ்சது அவ்ளோதான் "என கோபத்தில் அவள் அவள் படபடவென பொரிய

அவன் மீண்டும் சிரித்தபடியே "அச்சோ...இதுக்குதான் பயபட்ரியா....அவன் என் நண்பன்...நான் சொன்னா கேட்டுகுவான்.......அவன் மூலமாதான் உன்கிட்ட முதல்ல பேசணும்னு நினச்சேன்....ஆனா நானே சொல்லும்போது   உன்னோட மனநிலை எப்படி எல்லாம் இருக்கும்னு தெரிஞ்சுக்க ஆசைப்பட்டேன்...அதான் உன்னை இங்க கூட்டிட்டு வந்தேன் ...நீ கவலைபடாத வினு...... வேந்தனும் வெற்றியும் ஒன்னும் சொல்லமாட்டங்க" என சொல்லியபடியே அவள் அருகில் வந்தான்.

"இல்ல சார்...வேண்டாம்...நமக்கு இது ஒத்து வராது....உங்க குடும்ப அந்தஸ்த்து வேற...எங்க குடும்ப சூழ்நிலை வேற ....என்னை விட்டுடுங்க ...நான் கிளம்பறேன்" என அவள் மறுக்க

விபீஷும் அவளிடம் பலவிதமாக  எடுத்து கூறியும் அவள் அவனது காதலை ஏற்க மறுத்தாள்..

பேசிகொண்டே சென்றவர்கள் ஒரு இடத்தில் பேச்சு வலுக்க...."இப்படியே பேசிட்டு இருந்திங்க...நான் வீட்டுக்கு போன உடனே எங்க அம்மா சொன்ன மாப்பிளையை கல்யாணம் பண்ணிக்குவேன்......இது சத்தியம் ....என்னை அந்த நிலைக்கு கொண்டு வந்திடாதிங்க என அவள் அழுத்தமாகவும் ஆக்ரோசமாவும் சொல்ல

அவளது முகமும் அவள் செய்து விடுவாள் என அவனுக்கு உணர்த்த அவன் மனதில் ஒலிந்திருந்த இன்னொரு விபீஷ் சட்டென முழிக்க

உடனே "சரி வினு......என் மனசுல இருக்கிறத சொன்னேன்......உனக்கு டைம் கொடுக்கிறேன்...நல்ல யோசிச்சு பார்த்து முடிவு சொல்லு" என்றான்.

“இனி எத்தனைமுறை யோசிச்சாலும் இதே தான் சார்....நானும் சொல்றேன்...இனி இத பத்தி பேசுனிங்க அடுத்த நாள் எனக்கு கல்யாணம் தான்” என அவளும் உறுதியாக சொன்னாள்..

எதுவும் பேசாமல் சில வினாடிகள் அவளையே பார்த்தவன்....அவளது வாய் பேசிகொண்டிருக்க மனதின் வலி கண்களில் தெரிய உடலில் ஒருவிதமான நடுக்கம் இருக்க விபீஷின் மனம் ஏதோ கணக்கிட்டது.பின்னர் சரி வினு வா கிளம்பலாம்” என்றவன் இந்தா என குளிர்பானத்தை நீட்ட

அவள் வேண்டாம் என்று மறுக்க

“தொண்டை தண்ணீர் வற்ற என்னோ பேசி இருக்கில்ல ...அதுக்குதான் குடி....இன்னும் தெம்பா பேசலாம்” என்றான்.

அதற்க்கு மேல மறுக்க முடியாமல் வாங்கி குடித்து விட்டு காரில் அமர்ந்தாள்..விபீஷும் காரை எடுத்தவன் சிறிது தூரம் சென்றதும் அவள் உறங்கிவிட.....திரும்பி பார்த்தவன் என்னை மன்னித்து விடு வினு என மனதில் சொல்லிகொண்டே அலைபேசியில் பல்வேறு கட்டளைகளை பிறபித்து கொண்டிருந்தான்.

கண் விழித்தவள் காரில் இருப்பதை கண்டு சுற்றிலும் பார்க்க அங்கு ஒரு சில இடத்தில் கும்பல் கும்பலாக ஒரு சிலர் நின்று கொண்டிருக்க காரில் விபீஷும் இல்லை.

எங்க இருக்கோம் என் புரியாமல் மணியை பார்த்தவள் மதியம் ஆகிருக்க.....அச்சோ என்ன இது இவ்ளோ நேரம் வந்திருக்கமா......வீடு பக்கத்துலதான என யோசிக்க அவள் மூலையில் சட்டென்று மின்னல் தோன்ற வேகமாக காரை திறக்க முயற்சி பண்ண அது முழுவதும் லாக் செய்யபட்டு இருந்தது.வேகமாக அலைபேசியை தேட அதுவும் இல்லை.

வினுவின் மனதில் பயம் எழ ஏதோ தவறு நடக்கபோகிறது என தோன்ற காரின் கதவை வேகமாக தட்டினால்.அப்போது வந்து கொண்டிருந்த விபீஷ் அவள் காருக்குள் அல்லாடுவதை கண்டு வேகமாக வந்தவன் காரை திறந்தான்.



DO NOT COPY

கதவை திறந்து வேகமாக கீழே இறங்கியவள் "அறிவிருக்க உனக்கு.......லூசாடா நீ ........சொல்லிட்டு போகமாட்டியா.......இப்போ எங்க இருக்கோம்" என ஆத்திரத்தில் என்ன பேசுகிறோம் என தெரியாமல் கத்த

விபீஷ் அருகில் வந்து அவள் கைகளை பிடித்து "வினு...வினு ரிலாக்ஸ்......ஒன்னும் பயபடாத......நீ பாதுகாப்பாதான் இருக்க" என சொல்ல

சற்று நேரம் தன்னை நிலைபடுத்தியவள் பின்னர் நிமிர்ந்து "என்ன விபீஷ் இது.......இது எந்த இடம் என்னை வீட்ல விட்டுட்டு" என சொல்லும்போது ராஜ் அங்கு வந்தான்.

"ஹே ராஜ் ......"என அவள் சந்தோசமாக அழைக்க ...பயந்து கொண்டிருந்தவள் மனதில் ராஜ் கண்டதும் ஒரு நிம்மதி தோன்றியது.

அதற்குள் அருகில் வந்தவன் வினுவ நிமிர்ந்து பார்க்காமல் "சார் அடுத்தது நம்ம தான்.......ஜாஸ் சொல்ல சொன்னார் என சொல்லி விட்டு வேகமாக செல்ல

"ஹே ராஜ் என்றவள்....இவன் எங்க இங்க சுத்திட்டு இருக்கான்......என்ன விபீஷ் சார் ...இது எந்த இடம்" என சுற்றி பார்க்க ஓர் இடத்தில் கண்கள் நிலைகுத்தி நின்றது.

அங்கு திருமண பதிவாளர் அலுவலகம் என இருக்க

விபீஷிடம் திரும்பியவள் "இங்க எதுக்கு விபீஷ் வந்திங்க" என கேட்க

அவன் "அது வந்து வினு "என தடுமாற

"யார்காவது சாட்சி கையெழுத்து போடணுமா "என அவளே பதிலும் சொன்னாள்.

"ம்ம்ம்...ஆமாமா ....நீ நான் சொல்ற இடத்துல மட்டும் கையெழுத்து போடு போதும்" என்றான்.

"இல்ல விபீஷ் எனக்கு இது எல்லாம் பிடிக்காது...நான் கிளம்பறேன்" என அவள் திரும்ப

**“விபீஷ் வா” என ஒரு குரல் கேட்க**

**“வா வினு” என அவளை பேச  விடாமல் இழுத்து சென்றான் விபீஷ்.**

**அங்கு சென்றது ராஜ் ,ஜாஸ் மற்றும் வினுவின் தோழியும் இருக்க**

**அவளை பார்த்ததும் வினு “ஹே நீ எங்க இங்க” என கேட்டு கொண்டே வர**

**அதற்குள் “ரிஜிஸ்ட்டர் பொண்ணு மாப்பிள்ளை வாங்கப்பா” என அழைக்க**

**“வினு வா” என விபீஷ் இழுத்து செல்ல**

**தோழியுடன் பெசிகொண்டிருந்ததால் அவர் சொன்னதை அவள் கவனிக்கவில்லை.**

**வேகமாக இழுத்து சென்றவன் அவள் காதருகில் “வினு ஏதும் பேசாத கையெழுத்து மட்டும் போட்டுரு” என அழுத்தமாக அதே சமயத்தில் அதிகாரமாகவும் சொல்ல**

**வினுவின் மனதில் அபாய மணி ஒலிக்க அவள் அதை உணரும் முன்பே “சரி...சரி ,,,,இதுல கையெழுத்து போட்டு இந்த மாலைய மாத்திகிங்க” என்றார் அவர்.**

**விபீஷ்ஷ்ஷ்ஷஸ்!!!!! என அதிர்ந்த  அவள் அவனையே பார்க்க**

**“போடு வினு..... கையெழுத்து போடு வினு “ என அந்த வார்த்தையை அழுத்தத்துடன் மீண்டும் சொல்ல**

**“இல்ல...இல்ல” என அவள் பினோக்கி செல்ல முயற்சிக்க**

**அதற்குள் அவளது தோழியும் ஜாசும் போடுங்க வினு பாருங்க...எல்லாரும் பார்கிறாங்க..... அடுத்தது வேலை இருக்குள்ள என அவளை பேசவிடாமல் அதே சமயத்தில் சிந்திக்கவும் விடாமல் அவளை நெருக்க**

**விபீஷும் வினு போடு வினு ...கையெழுத்து போடு வினு அவனும் நெருக்க**

**யோசிக்கவே விடாமல் அவளிடம் தொடந்து அவர்கள் சொல்லிகொண்டே இருக்க அவளும் பதட்டத்தில் கையெழுத்திட்டாள்....அடுத்தது விபீஷும் கையெழுத்து இட......... ,திருமணம் நடக்கும் பெண்ணிற்கே தனக்கு திருமணம் என தெரியாமல் கடைசி நிமிடத்தில் அவளை யோசிக்க விடாமல் மனதளவில் அவளுக்கு அதிர்ச்சி கொடுத்து அந்த அதிர்ச்சியின் தாக்கத்தில் அவளது பலகீனமான நேரத்தை  பயன்படுத்தி விபீஷ் தனது  காரியத்தை சாதித்து கொண்டான்.**

**விபீஷ் கையெழுத்து போட்டதும் ,மாலை மாற்றியது ஏதும் அவளுக்கு நினைவில் இல்லை.அவளால் தன்னோட நிலையை யோசிக்க கூட முடியவில்லை.....**

**வெளியே வந்ததும் நண்பர்கள் அவனுக்கு வாழ்த்து சொல்ல அவனது மனதோ சந்தோசத்தில் தளும்ப .....அந்த மகிழ்ச்சியில்  விபீஷ் தன்னை மறந்து "தேங்க்ஸ் வினு குட்டி" என  அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.**

**பளார்ர்ர்ரர்ர்ர்!!!!! என்ற சத்தம் பலரது செவிப்பறையை கிழிவது போல் கேட்க ,அடி வாங்கியவனின் நிலை சொல்லவும் வேண்டுமோ.....**

**பளார்..பளார் என கண்ணை மூடிக்கொண்டு அவன் முகத்தில் கைகளில் நெஞ்சில்  என மாறி மாறி அடித்தவள்...நீ  எல்லாம் மனசனாடா......உன்னை நம்பி வந்தேன் பாரு என்ன சொல்லணும்..... ச்சீ........இந்த பொழப்புக்கு நீ என்னை கொன்னுருக்கலாம்.......என் முகத்துல முழிக்காத...அச்சோ நீ இப்படி பண்ணவேணு நான் நினைக்கவே இல்லயே என தன்னை முகத்தில் அடித்து கொண்டு அவள் அழுக**

**விபீஷோ ஏதும் சொல்லாமல் அவளையே  பார்த்து கொண்டிருக்க....அவனுக்கும் தெரியும் தான் செய்தது தவறுதான் என்று...ஆனால்.....ஆனால் காதல் என்று வந்துவிட்டால் உலகநியாங்கள் கண்ணுக்கு தெரிவதில்லையே.....அவள் தனக்கு வேண்டும் என்ற எண்ணமே மேலோங்கி இருக்க மற்றது மறைந்து போனது.**

**ராஜ் மெதுவாக அவள் அருகில் சென்றவன் ...வினு...வினு என அழைக்க**

திரும்பி அவனை பார்த்தவள் வெறி வந்தவள் போல் அவன் சட்டையை பிடித்து "ஏண்டா...உன் அக்கா தங்கச்சிக்கும் இப்படிதான் பண்ணுவியா நீ" என கேட்க

வினுனுனுனுனுனு என அவன் அலற

அடுத்தவன் வீட்டு பொண்ணுதான்னு தான இவன் கூட சேர்ந்து இந்த வேலை பண்ணிருக்க என ஆத்திரத்துடன் கேட்டாள்.

அவளது பேச்சில் ராஜ் அப்படியே சிலை போல் நிற்க...கண்களில் இருந்து கண்ணீர் கொட்ட

பேச்சு எல்லை மீறவும் விபீஷ் அவளிடம் வந்தவன் "வினு அவனை ஏதும் சொல்லாத....நான்தான் அவனை செய்ய சொல்லி கட்டாயப்படுத்தினேன்" என சொன்னான்.

அவன் பேசியதும் அவனை நிமிர்ந்து கூட பார்க்காத வினு "இனி உன் முகத்துல கூட நான் முழிக்க மாட்டேன்....நீ என்கிட்டே பேசாத,....உன்னை பார்த்தாலே அருவருப்பா இருக்கு.....உன்னை எப்படி உயர்வா நினைச்சுட்டு இருந்தேன்.......உனக்கும் அக்கா தங்கச்சி இருக்குல என கேட்டவள் ....இன்னையோட என்னோட விபு செத்திட்டான்......நீ செஞ்ச இந்த காரியம் நம்ம இரண்டு பேருக்கும் நடுவுல இருக்க எல்லாத்தியும் அழிச்சுடுச்சு ......என் மூஞ்சிலே முழிக்காத நீ "என்றவள்

திரும்பி அவள் தோழியிடம்வர...."வினு சாரி வினு....உன்னை ரொம்ப விரும்பறேனு சொன்னார் அதான் " என அவள் சொல்ல

"நீ என்னடி பண்ணுவ.......எவன உயிராய் நம்பி இருந்தனோ அவனே என்னை ஏமாத்திட்டான்...........சகோதரானா பழகினவன் எனக்கு கூட இருந்தே குழி பறிச்சுட்டான்.......உன்னை சொல்லி என்ன பண்றது" என சொல்லி விட்டு நகர

ஜாஸ் அவளிடம் சென்றவன்..."வினு கொஞ்சம் புரிஞ்சுக்குங்க....அவன் உங்க மேல உயிரே வச்சிருக்கான்.......இதும் ஒரு பாதுகப்புக்குதான்.....கண்டிப்பா அவன் உங்க வீட்ல வந்து பொண்ணு கேட்டு முறைப்படி கல்யாணம் பண்ணுவான் வினு" என சொல்ல

அவனை நிமிர்ந்து பார்த்தவள் ........பொணத்துக்கு இரங்கல் மாலைதான் போடமுடியும் சார்...கல்யாண மாலை எல்லாம் போடமுடியாது......அவனை பொறுத்தவரை  இந்த வினு செத்திட்டா...அப்படி அவன் எங்க வீட்டுக்கு வந்தானா அன்னைக்கு என் பொணம் தான் அங்க இருக்கும் என சொன்னவள் ....நண்பனுக்காக உயிர் கொடுக்கலாம்...அதுக்காக அடுத்தவங்க உணர்வுகளோட விளயாடதிங்க....நாங்க எல்லாம் மானத்தை உயர்வா நினைகிரவங்க...எந்த மாதிரி  என்னை டார்ச்சேர் பண்ணிங்க...என்னை யோசிக்கவே  விடல......கொடுமை சார்.... என்றவள்

"எனக்கே என்னை பார்த்தா இப்போ வெறுப்பா இருக்கு....நானா இப்படி ஏமாந்தேன்......அச்சோ என்ன மாதிரி...ஒரு பொண்ணுக்கு திருமணம் எப்படிப்பட்ட நிகழ்வு.......அதுக்கு எனக்கு  எப்படி "என சொல்ல சொல்ல ஆத்திரமும் அழுகையும் வர

"எல்லாம் முடிஞ்சுடுச்சு சார்" என சலித்த படியே நடக்க

"வினு கொஞ்சம் பொறுங்க "என ஜாஸ் பின்னாடியே வர

"சார் அதான் நீங்க நினைச்சுது நடந்திடுச்சுல ...அப்புறம் என்ன என்றவள்......காதல்ங்கிறது மனசுல இருந்து வரணும்...இவன் கல்யாணம் பண்ணிட்ட உடனே நான் இவனுக்கு பொண்டாட்டி ஆகிடுவனா......அது இந்த ஜென்மத்துல நடக்காது"........என கோபமாக சொல்லிவிட்டு விறு விறுவென நடந்தாள்..

"வினு கோபபடுவாள் என்று தெரியும்...ஆனால் இந்த அளவுக்கு என்னை வெறுத்திடுவானு நான் எதிர்பார்க்கவே இல்ல வெற்றி" என வருத்தத்துடன்  விபீஷ் சொல்ல

அந்த சமயத்தில் வேகமாக ஒரு கை அவனது சட்டையை பிடித்து இழுத்து பளார்!!!!! என்று அறைய

வேந்தா என வெற்றி அலற....மாமா என மதி  கத்த

வேந்தனோ அதை கண்டுகொள்ளாமல் ..."ஏண்டா...நம்மள நம்பி அவங்க அம்மா ஆபிஸ் அனுப்பி  வைக்கிறாங்க......அவங்களுக்கு இப்படி துரோகம் செஞ்சுட்டியே........போடா....நீ இப்படி இருப்பேனு



DO NOT COPY

நினைக்கவே இல்ல நான் என சொல்லும்போதே நா தழுதழுக்க அவனை தள்ளியவன் .......நான் எதிர்பார்க்கவே இல்ல விபீஷ் ....விருப்பம் இல்லாத பொண்ண கூட்டிட்டு போய் ...அச்சோ விபீஷ் நீயா இப்படி பண்ணது.......என்னால இன்னும் நம்ப முடியலடா" என்றவன்

"இல்ல வேந்தா....நான் சொல்றத கேளு...அவளும் என்னை விரும்பறா.....ஆனா அதை மறைக்கிரா ...நான் சொல்றத கேளுடா" என அவன் பின்னே கெஞ்சி கொண்டே வர

வேந்தன் ஏதும் பேசாமல் அமர்ந்திருக்க அங்கு ஒவொவருவரின் மனநிலையும் ஒவொவொரு மாதிரி இருந்தது.விபீஷின் தந்தை அதிர்ச்சியில் சிலையாக நிண்டு கொண்டிருந்தார்.

வெற்றியோ விபீஷின் அருகில் வந்தவன்...."நீ என்ன விளக்கம் சொன்னாலும் நீ செஞ்சது தப்பு விபீஷ்......அதும் நீ திட்டம் போட்டு இப்படி பண்ணிருக்க" என சொல்ல

அய்யோ நீயும் ஏண்டா என்னை புரிஞ்சுக்க மாட்டேனு சொல்றா.....நான் திட்டம் எல்லாம் போடலடா.....எதிர்பாராம நடந்தது "என்றான்.

"எங்களுக்கு தெரியும் விபீஷ்...ரிஜிஸ்ட்டர் ஆபிஸ்ல முன்னாடியே பதிவு பண்ணனும்...அதுக்கு உங்க இரண்டுபோரோட பிறப்பு சான்றிதழ் கொடுக்கணும் ...அப்போ அது எல்லாம் நீ முன்னாடியே பண்ணிருப்ப தான " என சொல்ல

"இல்ல வெற்றி.......நம்ம ஜாஸ்க்கு ரெஜிஸ்டர் ஆபிஸ்ல தெரிஞ்சவங்க இருக்காங்க.....ராஜ் மூலமா அவங்க வீட்ல இருந்து மார்க் சீட் எடுத்து வர சொன்னேன்...அப்புறம் என்னோடது கொடுத்து முன்னாடி பதிவு செஞ்சமாதிரி மாத்தி பண்ணிட்டோம்......சத்தியமா உடனே பண்ணது தாண்டா இது......எனக்கு அவள யாருக்கும் விட்டு தரக்கூடாதுன்னு வெறி வேற எதையும் யோசிக்க வைக்கலை......அவளை என் மனைவியாவே நினைச்சு வாழ்ந்திட்டேன்டா.....புரிஞ்சுக்கங்கடா" என கெஞ்சினான்.

"அழாதிங்க விபீஷ் அண்ணா" என மதி அவன் அருகில் செல்ல

**“மயிலு என வேகமாக அவளிடம் சென்றவன் ...நீயாவது என்னை நம்பறியா மயிலு.....”என கேட்க**

**நம்பறேன்  விபீஷ் அண்ணா......ஆனாலும் எங்க யார்கிட்டயாவது சொல்லி இருக்கலாம்ல....நாங்களே பேசி பன்னிருப்போம் இல்ல என்றாள்..**

**அவன் ஏதும் பேசாமல் தலைகுனிந்து நிற்க**

**வினுவிடம் சென்ற மதி “ஏன் வினு உனக்கு நிஜமாவே விபீஷ் அண்ணாவே பிடிக்கலியா என கேட்க**

**அவள் ஏதும் சொல்லாமல் அழுது  கொண்டே நிற்க...எப்படி சொல்வாள் அந்த பேதை......ஏழ்மை குடும்பத்தில் பிறந்து அதும் பெற்றவர்கள் சரியில்லாத நிலையில் மனதில் இருக்கும் ஆசைக்கு வடிவம் கொடுக்க நினைத்தால் விபீஷின் தந்தை சொன்னது போல் விளக்கமாற்றுக்கு பட்டு குஞ்சம் கட்டுவது போல்தானே......இந்த நிலைமை தனது எதிரிக்கும் வரகூடாது என மனதில் வெந்து புளுங்கியவள் விபீஷின் தந்தை வரும் வரை  வினுவிர்க்கு விபீஷை பிடிக்குமே தவிர காதல் என்ற நினைப்பு ஏதும் இல்லை......அவர் வந்து அந்த டைரியை அவளிடம் கொடுத்துவிட்டு திட்டி விட்டு செல்ல அவள் அதை படித்த பின்புதான் அவளை அறியாமலே மனம் அவனிடம் சென்றது.அதனால் தான் அவன் காதலை சொல்லும்போது அவளது மனம் அதை தடுக்காமல் ஏற்றுகொள்ள வீட்டு  பெரியோர்கள் என்ற பேச்சு வரும்போது தான் அவளது வாக்குறுதி ,விபீஷின் தந்தையின் பேச்சு நினைவுக்கு வர அவள் அவனை விட்டு விலகினாள்..... இப்போதும் அவள் விபீஷை காதலிக்கிறாள்.....ஆனால் அவனது தந்தை இவர்களது காதலை தவறாக சொல்லி இருந்தால் பரவயில்லை...நடத்தையை தவறாக சொல்லியதால் அவளது தன்மானம் அதற்க்கு இடம் ஒடுக்க மறுக்கிறது.அதனால் தான் இப்போதும் அமைதியாக இருக்கிறாள். மேலும் விபீஷ் அவளை மனஉளச்சளுக்கு ஆட்படுத்தி திருமணம் செய்தது அவளை ஏமாற்றியது போல் இருக்க....அவளால் அதை ஏற்று கொள்ள முடியவில்லை.....அதனால்தான் ஏதும் பேசமுடியாமல் அழுகையால் மட்டுமே தனது மனகொதிப்பை ஆற்றி கொண்டிருகிறாள்.**

**அவள் ஏதும் சொல்லாமல் அமைதியாக நின்றாள்..**

**“ வினு.......அண்ணா செஞ்சது தப்புதான் ...அதற்க்கு மன்னிப்பு கேட்டார் இல்லயா ...எங்களுக்காக வினு” என மதி ஆரம்பிக்க**

**மதிஈஈஈஈ என வேந்தன் அதட்ட**

**அவள் ஏதும் பேசாமல் அமைதியாகிவிட**

**“இத்தனைபேர் பேசறம்ல ...நீ எதாவது சொல்லு வினு....இப்படியே அழுதிட்டு இருந்தா என்ன அர்த்தம் என வெற்றி கோபமாக பேச**

**“அவ பேசமாட்டா சார்.......கேட்ட வாக்கு கொடுத்திட்டேன்......மீற மாட்டேன் அப்டின்னு சொல்வா “என ராஜ் சொல்லி கொண்டே வர**

**“என்ன சொல்ற ராஜ்” என வெற்றி கேட்க**

**“ராஜ் நீ பேசாம இரு” என வினு அதட்ட**

**இதுவரை பேசாத வினு இப்போது ராஜிடம் பேசவும் நிமிர்ந்து பார்த்த விபீஷ் நேராக ராஜிடம் சென்று...”என்ன ராஜ் நடந்து.......யாருக்கு வாக்கு கொடுத்திட்டா ....என்ன மீறமாட்டா “ என வேகமாக கேட்டான்.**

**“வேண்டாம் ராஜ்” என அவள் மிரட்ட**

**விபீஷின் தந்தையோ அமைதியாக நிற்க**

**இல்ல வினு......எவ்ளோ நாளைக்கு நீயும் மறைச்சு வைப்ப...உண்மை தெரியட்டும் வினு....இல்லனா எல்லாரும் உன்னை தவறா நினைச்சுடுவாங்க என்றவன் விபீஷின் தந்தை பேசியதை கூற அடுத்தடுத்து அதிர்ச்யில் அனைவரும் ஆடிவிட்டனர்.**

**வினுவின் பால்யம் இவ்ளோ கொடுமையானதா என மலைத்து போய் நிற்க**

**மேலும் மால் காட்றதுக்கு இடம் வினுவால்தான் கிடைத்தது என ராஜ் சொல்ல**

**“இது என்னது தோண்ட தோண்ட பூதமாட்ட வந்திட்டே இருக்கு” என நிலா வாயை விட்டுவிட**



DO NOT COPY

**வெற்றி அவளை முறைக்க**

**விபீஷோ இதை சற்றும் எதிர்பார்க்கவில்லை.நேராக வினுவிடம் சென்றவன் கீழே குனிந்து இருந்தவளை நேராக நிமிர்த்தி இங்க பார் “வினு....நான் கேட்பதற்கு என கண்ணை பார்த்து பதில் சொல்லு”.....என்றவன்**

**“ராஜ் சொல்வது உண்மையா” என கேட்க**

**பதில் வராமல் இருக்க**

**வினுஊஊஊஊஊ என அவன் கத்த**

**உடனே ம்ம்ம் என அவள் தலை ஆட்ட**

**அவள் அருகில் நின்றவன் “ஏன் வினு என் காதல அந்த இடத்துக்காக விலை பேசிட்டில நீ” என கேட்க**

**அடிபட்ட பார்வை பார்த்தவள் “காதலுக்காக இல்லை விபு...நட்புக்காக....உங்க நட்புக்காக....எனக்கு வேற வலி தெரியல......வெற்றி சாரும் வேலை விட்டு வந்திட்டார்....அதற்கானே கடன் இருக்கு......மேலும் இந்த மால் கிடச்சா நம்மோட திறமைக்கு சரியான வழிகாட்டுதலா இருக்கும்....என்னை வாழ வைக்கும் உங்களுக்கு எனது நன்றியை எப்படி செய்யறது.......எனக்கு வேற வலி தெரியல அதான்” என்றவள்**

**வேந்தனும் வெற்றியும் அவளை அதிர்ச்சியுடன் நிமிர்ந்து பார்க்க “**

**வேந்தனோ “ஏன் வினு எங்க மேல உனக்கு நம்பிக்கை இல்லையா....மேலும் நீ பண்ண காரியம்........ இப்போ அதுனால எவ்ளோ பிரச்சனை” என்றான்.**

**“அச்சோ அப்படி எல்லாம் இல்லை...... என்னால உங்களுக்கு எதாவது உதவ முடியுமான்னு நினச்சுட்டு இருந்தேன்...... அந்த சமயத்துல அவர் இதை கேட்டதும் நான் சரின்னு சொன்னேன்” என்றாள்.**

**“இதை ஏன் நீ என்கிட்டே சொல்லல வினு.....எங்க அப்பா செஞ்ச தப்புக்கு நான் என்ன பண்ணுவேன் வினு .......சொல்லு” என விபீஷ் அதட்ட**



DO NOT COPY

“எப்படி சொல்வேன் விபு....உங்க அப்பா என்னை எவ்ளோ கேவலமா பேசினார் தெரியுமா........கேவலமான குடும்பத்தில் பிறந்த நான் கேவலமாகத்தான் இருப்பேனா அப்டின்னு....செருப்பு .விளக்கமாருனு எவ்ளோ கேவலமான வார்த்தையை பேசினார் தெரியுமா ?கடைசியா நான் அவங்க வீட்டு குடும்ப பொண்ணுங்க மாதிரி கிடையாதாம்......எங்க அம்மா மாதிரி” என சொல்லும்போதே ஆத்திரம் வர அழுகையுடன் பேச்சு வர மறுக்க

கேட்ட விபீஷோ உடைந்து போய்விட்டான்......வினுவின் குணத்தை பற்றி அவனுக்கும் தெரியும்.......சிறிது மரியாதை குறைவு என்றாலே தாங்கி கொள்ளமாட்டாள்.அதும் இப்படி பேசி இருக்கிறார் என்றால் அப்போது எப்படி துடித்து போய் இருப்பாள்....என்றவன் வேகமாக எழுந்து தந்தையிடம் வந்து அவர் முகத்தை பார்த்தவன் ......”இதுக்கு நீ என்னை கருவிலே கொன்னிருக்கலாம்பா” என சொல்ல

“டேய் விபீஷ்” என அவன் பெற்றோர் அலற

“விபீஷ் அண்ணா என்ன சொல்றிங்க” என மதி கத்த

“வேந்தனோ டேய்  விபேஷ்” என அழைக்க

அதற்குள் ஹோமத்திற்கு  ஐயர் அழைக்கிறார் என ஒருவர் வந்த சொல்ல...அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த படி அமைதியாக நிற்கசிறிது நேரம் மயான அமைதி நிலவியது.

அப்போது   அவர்கள் நடுவில் வந்து நின்ற நிலா” நான் இப்படி பேசறதுக்கு என்னை மன்னிச்சுடுங்க......இப்போ நடந்தது யாராலயும் உடனே  ஜீரணிக்க முடியாது...ஆனா வெளியே உங்க தொழில் சம்பந்தமா எல்லாரும் இருக்காங்க...அவங்க முன்னாடி நீங்க இப்படி போய் நின்னா அது உங்களை பத்தி தவறான மதிபீட்டை அவங்களுக்கு ஏற்படுத்திடும்...அப்புறம் வினுவோட இந்த தியாகம், உங்களோட முயற்சி,உழைப்பு எல்லாம் வீணாகிடும்....சின்ன பசங்களை நம்பி ஒரு வேலை செஞ்சா இப்டிதான்.....மேலும் பார்ட்னெர்களுக்குள்ள ஏதோ பிரச்சனையின்னு புரளிய கிளப்பிடுவாங்க.....நமக்குள்ள இருக்க பிரச்சனையை  நம்ம முடிச்சுகலாம்...இது தொழில்... அதும் உங்க ஒட்டு மொத்த முயற்சியின் முதல் படி இது.........அதுல எந்த விதமான

தடங்களும் வந்திடக்கூடாது........நல்ல யோசிச்சு பாருங்க.......தொழில் வேற...சொந்த விஷயம் வேற ........அதுனால நான்கு பேரும் ப்ரேஷுப் பண்ணிட்டு வாங்க ப்ளீஸ் .... இந்த நிகழ்ச்சியை சந்தோசமா முடிச்சுடலாம்........நான் சொல்லவரது உங்களுக்கு புரிதா "என சூழ்நிலையின் நிதர்சனத்தை அவள் எடுத்துரைக்க

சுரேந்தரும் "ஆமாம் வேந்தன்....நீங்க போய் முகம் கழுவிட்டு எல்லாரும் கிளம்பி வாங்க...இந்த விழா முடியட்டும்.....அப்புறம் பேசி முடிவு பண்ணிக்கலாம்" என சொன்னார்.

அவர் சொல்வதும் சரி என பட வேந்தன் வெற்றியை பார்க்க,வெற்றி விபீஷை பார்க்க அவன் வினுவை பார்க்க நான்குபேரும் ஒரே நேரத்தில் தலை அசைக்க பார்த்து கொண்டிருந்த நிலாவே ஒரு நிமிடம் அசந்துவிட்டாள்....என்ன நட்பு இது.....அவளுக்கு மிகவும் பெருமையாக இருந்தது...தன் மனதை கவர்ந்தவனும் இதில் ஒருத்தன் என நினைக்கையில் ...பின்னர் வேலைகள் பட படவென நடந்தன.... வினுதான் இயல்பு நிலைக்கு சட்டென மாறமுடியாமல் தவித்து கொண்டிருந்தாள்.அனைத்து நிகழ்சிகளும் முடிய அனைவரும் அப்பாடி என்று ஓய்வு எடுக்க

"சார் சமையல்காரருக்கு  பணம் கொடுக்கணும்"......என ராஜ் வர

"விபீஷ் பொறுப்பு அது...அவனை கேளு" என வெற்றி சொன்னான்.

"அவரதான் சார் தேடிட்டு இருக்கேன்.....ஆளே காணோம்" என்றான் ராஜ்.

இங்கதான இருந்தான் என அலைபேசியில்  அழைக்க அது ஸ்விட்ச்ஆப் என்று வர வெற்றின் மூலையில் அபாயமனி ஒலித்தது.

அனைவருக்கும் இல்லை என்று சொல்லாமல்

அள்ளி கொடுக்கும் கடல் அன்னையே

சீற்றம் என்று வந்தால் யாரையும் சீர்தூக்கி பார்ப்பதில்லை.

தென்றலாக தாலாட்டும் காற்றே

புயலென்று வந்தால்

உயர்திணை அக்றிணை என்று பாகுபாடு பார்ப்பதில்லை.

இது போல

இயற்கையின் நிகழ்வுகளை ஏற்று கொள்ளும் மனம்

காதல் என்பதும் மனதில் எதிர்பாராமல் ஏற்படும்

ஒரு நிகழ்வு தானே.....

அதுவும் அன்பு அதிகம் ஆகும்போது

எதையும் யோசிப்பது இல்லை

தான் செய்வது எல்லாம் சரி

என்றே மனம் சொல்கிறது

அதை காதல் கொண்ட மனம் ஏற்றுக்கொள்ளும்

ஆனால் கேட்பவர்களும் அது நியாயம்

என்று ஏற்று கொள்வார்களா?

நியாயம் கேட்டு நிற்கின்றான் அவன்

தீர்ப்பு என்ன வரும் ?

**உங்களை போல் நானும் காத்திருக்கிறேன்**

**அத்தியாயம்-28**

**என்னது விபீஷ் அண்ணாவ காணோமாஆஆஆஆஆஆஆ என மதி அதிர**

**அனைவரும் திகைத்து போய் நிற்க**



DO NOT COPY

அவனது தந்தைக்கு  வேந்தன் தொடர்பு கொள்ள ,அவனது தந்தையோ அவன் தன்னிடம் சண்டை போட்டுகொண்டு கிளம்பிவிட்டான்.....எங்கே போகிறான் என்று சொல்லவில்லை....எல்லாம் உங்களால் வந்தது என அந்த சூழ்நிலையிலும் குற்றங்களை எல்லாம் அவர்கள் மேல் சுமத்தினார்.

வேந்தனோ அதை எல்லாம் கேட்க நேரம் இல்லாமல் எங்கே போய் இருப்பான் என மனம் அலைபாய

உடனே வெற்றி “சென்னை கிளம்பி இருப்பானோ .....இப்போ ட்ரைன்,பஸ் இரண்டும் இல்லை...எப்படி போய் இருப்பான்.....அங்கே கேட்க வேண்டும் என்றாலும் இன்னும் எட்டு மணி நேரம் ஆக வேண்டும்....ஆப்போது தான் அவன் சென்னை சென்று சேர முடியும்” என்றான்.

“ஒருவேளை அண்ணா கோவிச்சுட்டு வேற எங்காவது போயட்டாங்கலோ” என மதி பீதிய கிளப்ப

“உலாறாத மதி...நீ கொஞ்சம் சும்மா இரு” என வேந்தன் அவளை அதட்டினான்.

“ஆமா எல்லாரும் இப்ப என்னை திட்டுங்க.....நீங்க எல்லாம் நேத்து விபீஷ் அண்ணா சொன்னதை நம்பி இருந்தா இன்னைக்கு விபீஷ் அண்ணா கிளம்பி போயிருக்கா மாட்டார்......எல்லாரும் சேர்ந்து அவர திட்னிங்க” என அவள் பொருமி தள்ள

“இப்ப என்ன சார் பண்றது “என்றான் ராஜ். யாரும் இல்லை நம்ம மட்டும் தான் இருக்கோம்” என்றான்.....

நடந்தை பார்த்து கொண்டிருந்த நிலா...”ம்ம்ம்.......அவனுக்கு இதே பொழப்பா போச்சு.....செய்யறது எல்லாம் செஞ்சிட்றது....அப்புறம் ஓடி போய் ஒண்டிக்கிறது” என கோபமாக பேச

“நிலா கொஞ்சம் அமைதியா இருக்கியா” என வெற்றி அவளை மிரட்ட

“நீங்க சும்மா இருங்க வெற்றி.......நேத்து அவ்ளோ பெரிய விஷயம் நடந்திருக்கு....அதுக்கான தீர்வே இன்னும் கிடைக்கலை...இப்போ இவர்

காணாம போனா என்ன அர்த்தம்......இப்போ என்ன பண்றதுனே தெரியலை” என தனது ஆதங்கத்தை தெரிவித்தாள்.

“இங்க பாருங்க மிஸ் வெண்ணிலா ....ஏற்கனவே நாங்க குழம்பி இருக்கோம்....நீங்க மேலும் எங்களை குழப்பாதிங்க......எங்க பிரச்சனையை நாங்க பார்த்து கொள்கிறோம்” என மூன்றாவது மனிதர்கள் நம் பிரச்சனையில் தலையிடுவதா என்ற கோபத்தில் வேந்தன் பேசினான்.

உடனே வெண்ணிலா தான் வெற்றி,விபீஷிர்க்கு மட்டும் தான் பழக்கம்....மற்றவர்களுக்கு தன்னை பற்றி தெரியாது என்பதை மறந்து விட்டு அவள் தன்னை இந்த குடும்பத்தில் ஒருத்தியாக நினைத்து கொண்டிருந்ததால் அந்த உரிமை மட்டுமே நினைவில் இருக்க சட்டென்று கோபமாக ...”என்ன தெரியும் உங்களுக்கு....அவன் லவ் பண்ணி ,கல்யாணம் பண்ணி ஆறுமாசத்துக்கு அப்புறம் என்னது கல்யாணம் ஆகிடுசானு அதிர்ச்சியா கேட்கிறிங்க...இதான் நீங்க பார்த்துகிறதா......பாருங்க வினுவை என வினுவின் நிலையை நினைத்து  அவள் பேசினாள்.தன்னை வேந்தன் தனித்து பேசியதை அவள் கண்டு கொள்ளவே இல்லை.

ஆனால் அவள் முடிக்கும் முன்பே “இங்க பாருங்க வெண்ணிலா நாங்க ஏற்கனவே நொந்து போய் இருக்கோம்....நீங்க மேலும் காயபடுத்தாதிங்க”.....என வினு வேதனையாக கூற

“இல்லை வினு உனக்காகத்தான்” என நிலா ஆரம்பிக்க

ஆனால் வினுவோ நிலாவை தவறாக புரிந்து கொண்டு அவளை பேசவிடாமல் தடுத்தாள்...”போதும் நிலா ப்ளீஸ்” என சொல்ல

நிலா அதிர்ச்சியுடன் வெற்றியை பார்க்க

வெற்றி அவளயே பார்த்து கொண்டிருக்க ...அந்த பார்வை அவளுக்கு ஏதோ உணர்த்த அவள் அமைதியானாள்.

ஆனால் இதை வேந்தன் கவனித்து விட்டான். அந்த சூழ்நிலையில் அவனால் அதற்க்கு மேல யோசிக்க முடியவில்லை.”சரி...இப்போ என்ன செய்வது” என்றான் வேந்தன்.

அதற்குள் அங்கு சதிஸ் வந்தான்.

அவனை பாரத்தும் அனைவரும் அமைதியாகிவிட ...."வேந்தன் தான் எழுந்து அவன் அருகில் வந்தவன் வாங்க சதிஷ்....ஸாரி நேத்து பதில் சொல்றேன் சொன்னேன்...அதுக்குள்ள மத்த வேலைகள் இருந்ததால என்னால அத பற்றி பேச முடியல......இன்னும் இரண்டு நாள் கொடுங்க ...நான் சொல்லிடறேன்" என்று சொன்னான்.

மற்றவர்கள் அனைவரும்  அவனையே பார்த்து கொண்டிருந்தனர்.

மதியோ இந்த மாமா லூசா....அண்ணா தான் வினுவ கல்யாணம் பண்ணிட்டாரே ...அப்புறம் இவர் ஏன் அத சொல்லாம இப்படி சொல்றார்....வர  வர மாமாவுக்கு மூளை குழம்பி  போச்சு என மனதில் நினைத்து கொண்டிருக்க

உடனே சதீஷ் "இல்ல சார்......விபீஷ் சார் காலையில  என்னை வந்து பார்த்தார்......நடந்தது எல்லாம் சொன்னார்.....ஆனா இதுல வினுக்கு உடன்பாடு இல்லை.......அதுனால நான் விடுதலை பத்திரத்துல கையெழுத்து போட்டு வச்சிருக்கேன்......நீங்க வினுவ கல்யாணம் பண்ணிக்கங்கனு சொல்லிட்டு போய்ட்டார் என சொன்னவன் இதான் அந்த கவர் என  ஒரு கவரை நீட்டியவன் நீங்க பிரச்சனை எல்லாம் முடிச்சுட்டு வாங்க பின்பு பேசி கொள்ளலாம்" என கூறிவிட்டு சென்று விட்டான்.

அதற்குள் வாட்ச்மேன் உள்ளே வர "சார் விபீஷ் சார் இதை ஒரு பதினொருமணிக்கு  உங்க கிட்ட குடுக்க சொன்னார்" என சொல்லி அவனும் ஒரு கவரை நீட்டினான்.

நிலாவிர்க்கே கடுப்பாகி   போக  " இவன்  லொள்ளு தாங்க முடியல..... பண்றது எல்லாம் கேடித்தனம்.......ஆனா மாட்டாம எப்படி எஸ்கேப் ஆகிருக்கன் பாரு" என நினைத்தவள்

அதற்குள் வாட்ச்மேன் கொடுத்த கவரை வேந்தன் வேகமாக பிரிக்க ...அதில் வெற்றி வேந்தன் பெயருக்கு ஒரு கடிதம் இருக்க திறந்து பார்த்தால் மன்னிப்பு வாசகமாக இருந்தது.



DO NOT COPY

பின்னர் வினுவின் பெயரில் இருந்த கடிதத்தை அவள் கையில் கொடுத்து அவளை பிரித்து படிக்க சொல்ல அதில் "என்னை மன்னிச்சுடு வினு...என் அப்பா செஞ்ச தவறை மன்னிக்க முடியாது......உன் முகத்தை பார்க்கவே எனக்கு வெட்கமாக இருக்கிறது....எப்படி எல்லாம் துடித்திருபாய் நீ... ....என்னால் தானே உனக்கு இவ்ளோ துன்பம்.........போதும் வினு...நான் போகிறேன்....இனி நீ உன் விருப்பபடி சந்தோசமாக உன் வாழ்கையை அமைத்து கொள்.....இனி என்னால் எந்த துன்பமும் உனக்கு வராது"......என அக்கடிதம் நீண்டு கொண்டே போக

ஏற்கனவே பல மன உளைச்சல்களில் களைத்து போயிருந்த வினு இதை படித்த உடன் அப்படியே அருகே அமர்ந்திருக்கும் நிலாவின் மடியில் சாய

"வினு...வினு என்னாச்சு என நிலா பதறி போய் அவளை எழுப்பி விட

எழவே முடியாமல் அவள் அப்படியே துவண்டு போய் அவள் மேல விழ நிலாவிர்க்கோ கோபம் வர அவளை மடியில் சாய்த்து கொண்டு வேகமாக அலைபேசியில் எண்ணை அழுத்தினாள்.

விடியற்காலை வெண்பனி மேகம் மெல்ல களைய, .செவ்வானம் வெளியே தெரிய, சிறுமலர்கள் பூத்து குலுங்க......இளம் காற்று வீச...அந்த திருமணமண்டபம் களை கட்ட தொடங்கியது.

"ஏம்பா அந்த தட்டு எல்லாம் எடுத்து வச்சாச்சா.....மொத்தம் 11 தட்டு இருக்கணும் ....அப்புறம் வெற்றிலை பாக்கு எல்லாம் வாங்கிட்டு வந்தாச்சா......முதல்ல ஐயர் வந்துட்டாரானு பாருங்க" என சொல்லி கொண்டே மதி வேகமாக செல்ல

"டேய் என்ன பண்ற...இங்க பாரு சமையல் செக்ஸன்ல நெய் இல்லைனு சொல்றாங்க...கொஞ்சம் கவனி ராஜ்" என வெற்றி சொல்லி கொண்டே வர

"அச்சோ என்ன நிலா இது........கல்யாண பொண்ணு மேக்கப் போயிட்டு வர இவ்ளோ நேரமா" என வினு கேட்டு கொண்டே உள்ளே வர

“நான் என்ன பண்றது….அதான் சொன்னேன்…நானே பண்றேன்னு….யாரு கேட்டிங்க……இப்ப பாரு எவ்ளோ டென்ஷன்” என அவள் அங்கலாய்க்க

“வரவேற்புல யாரும் இல்லாம எங்கடா போனிங்க” என வேந்தன் சத்தமிட

அங்கே ஒரே பரபரப்பாக திருமணவேலைகள் நடந்து கொண்டிருந்தன……என்னப்பா மாப்பிளை ரெடி ஆகிட்டாரா என சத்தம் வர

“ம்ம்ம்…மாப்பிள்ளை எல்லாம் அப்பவே ரெடி “ என்றான் சுரேந்தர்….

“அச்சோ அண்ணா வழியுது துடச்சுகோ” என நிலா துண்டு கொடுக்க அங்கே ஒரே சந்தோஷமும் கும்மாளமும் குடிகொண்டிருந்தது.

“அம்மா வினு இந்த தாலிக்கொடிய அந்த தேங்காய் பழதட்டுல வச்சுடுமா” என விபீஷின் தந்தை கொடுத்தார்..

“கொடுங்க அங்கிள் வச்சிடறேன்”…என அவள் வாங்கி கொண்டு போய் வைத்தாள்..

“என்னப்பா எல்லாரும் வந்தாச்சா”என கேட்டுகொண்டே உள்ளே வந்த வேந்தன் அங்கு மதி ஏழுமாதம் வயிற்றை தள்ளிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடுவதை பார்த்தவன்

“என்ன மதிம்மா…இங்க வா என்றவன் அவளை தன் அருகில் அமரவைத்து….இப்போ எதுக்கு ஓடிட்டு இருக்க நீ…அதான் வேலை செய்ய நாங்க இருக்கோம்ல …நீ ஜூஸ் குடிச்சியா” என கணவனின் கடமையை செவ்வனே செய்து கொண்டிருந்தான்.

அவள் திருட்டு முழி முழிக்க

“இப்படியே பண்ணிட்டு இரு …நாளைக்கு நம்ம பாப்பாவும் இதே மாதிரி இருக்கபோறா “ என அவன் சிரித்து கொண்டே சொன்னான்.

**“இல்ல மாமா …அவ அவங்க அப்பா மாதிரி ….. யாரையும் எதிர்பார்க்க மாட்டா …..தானே செஞ்சுகுவா” என அவள் ஒரு பக்கமாக  கழுத்தை சாய்த்து சொன்னாள்.**

**“ம்ம்ம்ம் அப்படியா” என அவனும் அவளை போலேவே அவன் கழுத்தை நொடித்து கேட்க**

**“ச்சீ போங்க மாமா” என அவள் வெட்கப்பட**

**“என்ன மதி   நீ வெட்கபட்ற…அப்புறம் இங்க பொண்ணு யாருன்னு சந்தேகம் வந்திடபோகுது” என அங்கு வந்த நிலா கிண்டலாக கேட்டு கொண்டே வந்தாள்.**

**“ அச்சோ நீங்களுமா…போங்க நிலா” என அவள் வேந்தனின் நெஞ்சில் தஞ்சம்  அடைந்தாள்.**

**“ஆஹா இந்த நேரத்துல விபீஷ் இல்லாம போய்ட்டானே…இருந்திருந்தா டைமிங் டயலாக் ஒன்னு  சொல்லிருப்பான் “என நிலா சிரித்து கொண்டே சொன்னாள்.**

**சந்தோசமாக இருந்த அனைவரின் முகமும் ஒரு நிமிடம் வருத்தத்தில் வாடிவிட**

**அதன் பிறகே தான் சொன்னதை உணர்ந்த நிலா …நாக்கை கடித்தவள் ..”.சரி…சரி கிளம்புங்க…அங்க மணவறைக்கு போகணும்” என அவசரபடுத்தினாள்..**

**திரும்பியவர்கள் அங்கு வினு நின்று கொண்டிருக்க,அவள் கண்களில் கண்ணீர் முட்டி கொண்டு நிற்க …அவள் அருகில் சென்ற வேந்தன்….. “வினு” என அவள் தலையை தடவி  கொடுக்க….. உடனே அவள் தன்னை நிலைபடுத்திகொண்டு “ஒன்னும் இல்லை சார் “என சொல்லிகொண்டே நகர …உடனே மதி “வினு அந்த தாம்பூல தட்டு எடுத்து வச்சுட்டியா என பேச்சை மாற்ற … “இன்னும் இல்ல மதி …இதோ எடுத்திட்டு வந்திடறேன்” என்று சொல்லிவிட்டு வேகமாக சென்றாள்..**

**“மதிம்மா தேறிட்டடா” என வேந்தன் அவளை தட்டி கொடுக்க**



DO NOT COPY

“பின்ன வீட்ல யாரவது ஒருத்தராவது புத்திசாலியா இருக்க வேண்டாமா மாமா” என அவள் சொல்லிகொண்டே அங்கிருந்து நகர்ந்தாள்.

கூட வந்த நிலா தான் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்து போனாள்.

அவளை பார்த்ததும்  வேந்தன் “ஹிஹிஹி...அவ எப்பவும் இப்படிதான் என்றவன்.......  பார்க்கிறதுக்கு பச்சபுள்ள மாதிரி  இருந்துகிட்டு ஒத்த வார்த்தையில நம்மள ஓரங்கட்டிராலே...இவளை என்ன பண்றது” என புலம்பிகொண்டே சென்றான்.

எல்லாரும் திருமணவேலையில் தீவிரமாக இருக்க ஒருவரின் கண்கள் மட்டும் வாசலையே பார்த்து கொண்டிருந்தது.

அப்போது “நிலா நீ எதோ பண்றேன்னு தெரியுது .....ஆனா எதா இருந்தாலும் சொல்லிட்டு பண்ணு” என ஒரு குரல் அவள் அருகில் கேட்க

அவள் சட்டென்று திரும்பி பார்க்க வேந்தன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

“ஆஹா  வேந்தன் சார்  உங்களுக்கு கழுகு கண்ணு” என அவள் சிரித்து கொண்டே சொன்னாள்.

“அப்படியா...இதே ஆள் தான் அன்னைக்கு உனக்கு என்ன தெரியும்னு கேட்டுது” என அவனும் சிரித்து படியே திருப்பி கேட்டான்.

நிலாவின் முகம் சுருங்க ...”இல்ல ...அது வந்து” என அவள் தடுமாற

“நான் சும்மா சொன்னேன் நிலா... என்ன விஷயம்......யார எதிர்பார்க்கிற என கேட்டான் வேந்தன்.. அவள் சொல்லிகொண்டிருக்க

அதற்குள் நிலாவும் வேந்தனும் பேசிகொண்டிருப்பதை பார்த்த வெற்றிக்கு மனதில் சிறு பயம் வர ஏனெனில்  வேந்தனுக்கும் நிலாக்கும்  அதிக கருத்து வேறுபாடு வரும்....ஆனால் இருவருமே அதை பெரிது படுத்தமாட்டார்கள்... வெற்றியும் மதியும் தான் தவித்து போய் விடுவார்கள்.

உடனே வெற்றி வேகமாக அவர்கள் அருகில் வந்தான்.

நிலா சிரித்துகொண்டே வெற்றியை பார்த்து கண்ணடித்தாள்.

"அச்சோ சிரிக்கிறாலே...என்ன பிரச்சனைய கிளப்பி விட்ருக்காலோ" என அவன் வேந்தனின் முகத்தை பார்த்தான்.

அவனோ முகத்தை கடுமையாக வைத்துகொண்டு நின்றான்.

நண்பா என அவன் அழைக்க

வேந்தன் ஏதும் பேசாமல் நிற்க

நண்பா ...நண்பா என அவன் மீண்டும் அழைக்க

அவனை பார்த்து முறைத்துவிட்டு வேந்தன் அங்கிருந்து நகர்ந்தான்.

"நிலாஆஆஆஅ ...என்ன பண்ணி வச்ச" என அவன் வேகமாக கேட்க

"நான் ஒன்னும் பண்ணல...நீங்க உங்க நண்பர கேளுங்க" என அசால்ட்டாக சொல்லிவிட்டு நகர்ந்தாள் நிலா.அவன் முழித்து கொண்டு நின்றான்.

விபீஷின் தந்தை வாயிலே பார்த்து கொண்டிருந்தார்.

அருகில் வந்த வினு "அங்கிள் நீங்க உள்ளே என்ன வேணும்னு பாருங்க ....நான் இங்க பார்த்துகிறேன்" என்றாள்.

அவர் வினுவை நிமிர்ந்து பார்க்க அவர் கண்களில் கண்ணீர் நிற்க ...."வயசுல சின்ன பொண்ணா இருந்தாலும் உனக்கு பெரிய மனுசுமா" என சொல்லிவிட்டு நகர்ந்தார்.

அப்போது வேகமாக ஐந்து கார்கள் வர அனைவரின் பார்வையும் அங்கே சென்றது.

கார் நின்ற பிறகும் யாரும் இறங்காமல் இருக்க வேந்தன் தான் முதலில் காரின் அருகில் வந்தான்.

அப்போது முதல் கார்ல இருந்து நான்கு பெண்கள் இறங்க ....அவர்களை பார்த்த உடன் வெற்றி இதுகளா என அதிர்ந்து நின்றான்.

வெண்ணிலாவோ "ஹே ஜூடி,தேனு,மது "என சொல்லியபடி ஓடி வந்தாள்.



DO NOT COPY

உடனே பட படவென நான்கு கார்களும் திறக்க 10பெண்கள் இறங்க...அங்கு கூடி இருந்தவர்களோ என்னமோ ஏதோவென்று வேடிக்கை பார்க்க ஓடி வந்தனர்.

மதியும் எதற்கு இத்தனை பெண்கள் என வாய் விட்டு கேட்டு விட்டாள்.

“எல்லாம் எங்க கேப்டனுக்கு  ஒரு பாதுகாப்புக்குதான்” என அவர்கள் கோரசாக சொன்னார்கள்.

“எனக்கு எதுக்குடி பாதுகாப்பு...நான் சொல்லவே இல்லையே....உங்களை பார்த்தாலே வெற்றி டென்ஷன் ஆகிடுவார்....அதும் இந்த நேரத்துல...ஏண்டி இப்படி பண்றிங்க” என வெண்ணிலா சல்மாவின் அருகில் சென்று அவள் காதை கடித்தாள்.

“இல்ல தல....இது உங்களுக்கு இல்ல......நம்ம நண்பர்க்கு தான்.....ரொம்ப பாவம் தல ...அவர் கதைய கேட்டு நாங்க கலங்கி போய்ட்டோம் .....இவரா பாதுகப்பா அவங்க மனைவி கைல ஒப்படைகனும்னு அதுக்குதான் எல்லாரும் செமஸ்டர் இருந்தாலும் பரவாயில்லையினு உடனே புறபட்டு வந்தோம்” என சொல்லி விட்டு

“என்ன பாஸ் ...இன்னும் என்ன தயக்கம்.......நீங்க கீழே இறங்குங்க...நாங்க இருக்கோம்”......என அவர்கள்  சொல்ல

என்ன கதை சொல்லி இருக்கானு தெரியலையே என நிலா யோசித்து கொண்டிருக்க

திருவிளையாடலின் நாயகனோ  ஒன்னும் தெரியாதவன் போல் காரில் இருந்து   கீழே இறங்கினான் விபீஷ்..

முகத்தை வருத்தமாக வைத்துகொண்டு ,எதோ இவர்கள் அவனை அடிக்க வருவது போலவும் அவன் தப்பே செய்யாமல் தண்டனை பெறுவது போலவும் முகபாவனையுடன் நின்று கொண்டிருக்க

சுற்றி இருந்தவர்களும்  அதுவரை இருந்த சீரியசான நிலை மாறி அவனை பரிதாபமாக பார்த்தனர்..

“மவனே உன்னஆஆஆஆஆ  என வெண்ணிலா வேகமாக அருகில் இருக்கும் ஒரு கட்டையை தூக்க

“அய்யோ  என்னை காப்பத்துங்க என விபீஷ் ஓட……… தல வேண்டாம் விட்டுடுங்க.”……. என மற்றவர்கள் பின்னால் ஓட  அந்த இடம் அல்லோலபட்டு போனது.

“விபீஷ் என்ன இது” என வெற்றி அவனை இழுத்து வந்தான்.

“இல்ல நண்பா வேண்டாம்” என அவன் பயந்தவன் போல் நடிக்க

“இங்க பாரு….பழசை எல்லாம் மறந்திடு….இப்போ கல்யாணத்திற்கு வந்திருக்க…….சந்தோசமா உள்ளே வா…..இந்த கும்பல் எதுக்கு கூட்டிட்டு வந்த…இதுக எல்லாம் அறுந்த வாலுங்க…….பாரு கொஞ்ச நேரத்துல என்ன பாடுபடுத்திடுச்சுங்க  என பேசியவாரே  அவன் கையை படித்து இழுத்து சென்றான் வெற்றி,

“யாருப்பா அது…நம்மால பத்தி கவுன்ட்டர் கொடுக்கிறது “என ஒரு குரல் கும்பலில் கேட்க

வெண்ணிலா பின்னால் திரும்பி பார்க்க அனைவரும் அமைதியாகினர்.

பின்னர் விபீஷை  முறைத்து கொண்டே வெண்ணிலா கூட வர….அவள் காதருகில் “என்ன நிலா எப்படி என் நடிப்பு…நான் மட்டும் தனியா வந்திருந்தேன்….இந்நேரம் என்னை பின்னி பெடல் எடுத்திருப்பிங்க…அதான் இப்படி …இந்த ஐடியா கொடுத்ததே உன் சீனியர் டான் கார்த்தி தான் என சொன்னவன் …..ஆனாலும் உன் சங்கத்து ஆளுங்க ரொம்பபபப நல்லவங்க….என்ன சொன்னாலும் நம்பிடறாங்க என சொல்ல…..இப்போ கவனம் எல்லாம் அவங்க மேல திரும்பிடுச்சு….நான் எஸ்கேப்” என்றான்.

அவனை ஆத்திரமாக பார்த்தவள் “இரு…….உனக்கு இருக்கு ஆப்பு…வெளியே வா……அங்க தேனு உருட்டு கட்டையோட நிக்கிறா”….என்றாள்.அதற்குள் அனைவரும் அருகே வந்து விட பேச்சு தடைபட்டது. .

**பின்னர் அனைவரும் மணவறைக்கு  வர அங்கு மாப்பிள்ளை கோலத்தில் சுரேந்தர் அமர்ந்திருக்க மணமகளாக விபீஷின் தங்கை அமர்ந்திருந்தாள்..**

**நண்பர்கள் அனைவரும் ஒன்றாக நிற்க விபீஷையும் இழுத்து வந்து உடை மாற்றி நிற்க வைத்து இருந்தனர்........**

**மற்றவர்களில் பார்வை எல்லாம் மணமக்களை பார்த்திருக்க விபீஷோ தன் மனம் கவர்ந்தவளை தேட அவளோ அவன் பார்வைக்கு சிக்கவே இல்லை.**

**அவன் சந்தோசமாக இருப்பதாக வேலையில் காட்டி கொண்டாலும் அவனது கண்களின் தேடலும் மனதின் ஏக்கமும் அவனது முகத்தில் பிரதிபலித்தது.**

**“டேய் அங்க என்ன பார்வை....தாலி கட்ட போறாங்க...இங்க பாரு......உன்னோட கூடபிறந்த தங்கச்சிடா “என வெற்றி அவன் காதை கடித்தான்.**

**விபீஷ் ஏதும் சொல்லாமல் அமைதியாக திரும்பினான்.**

**திருமண வைபோகம் நல்ல படியாக முடிய அடுத்த வினாடி வேந்தனின் கைசிறையில் இருந்தான் விபீஷ்.**

**அதற்குள் இங்கே “தல விபீஷ் சாருக்கு  ஏதும் பிரச்சனை இல்லில.......ரொம்ப நல்ல மனுசனா இருக்கார்.......எவ்ளோ வெகுளியா பேசறார் தல” என மது  அவனை பற்றி புகழ பாடி கொண்டிருந்தாள்.**

**இந்த பீலா வேற விட்ருகானா என நினைத்த நிலா .....”சரி சரி நீங்க போய் ரெஸ்ட் எடுங்க ....நாளைக்கு ஊருக்கு போகலாம்” என்றவள் ராஜ் அழைத்து இவங்களுக்கு தங்க ஏற்பாடு பண்ணி கொடு “என்றாள்.**

**இங்கு மண்டபத்தில் அனைவரும் ஒரு அறையில் குழுமி இருந்தவர்கள் ஏதும் பேசாமல் விபீஷை பார்த்து கொண்டிருந்தனர்.**

**சிறிது நேரம்  அமைதியாக இருந்த விபீஷ்  பின்னர் வேகமாக எழுந்தான்.**

**என்ன செய்யபோகிறான் என அவர்கள் ஊகிக்கும் முன்பே பொத்தென்று அவர்களின் முன்னாள் கீழே விழ இதே எதிர்பார்க்காத அனைவரும் ஆடிபோய்விட்டனர்.**

**முதலில் வேந்தன் தான் அவனை எழுப்பி "டேய் என்னடா இது என சொல்லும்போதே அவன் கண்ணில் கண்ணீர் வர அவனை இழுத்து அணைத்து கொண்டவன்.....ஏன்டா இப்படி பண்ற என சொன்னவன் அதற்க்கு மேல் பேசமுடியாமல் சிறிது நேரம் இருந்தவன்...பின்னர் இனிமேல் இந்த மாதிரி பண்ணாத விபீஷ்......நாங்க எவ்ளோ துடிச்சு போய்ட்டோம் தெரியுமா...நீ சென்னைல இருக்கேன்னு நியூஸ் வர வரைக்கும் எங்க உயிர் எங்ககிட்ட இல்ல...ஏன்டா இப்படி பன்ற" என கோபமாக பேச நினைத்தவன் வேதனையாக பேச**

**"ஆஹா...மறுபடியும் கவுத்துட்டானே" என நிலா அவனை பார்க்க**

**"விபீஷ் அண்ணா .....என்கிட்டே கூட நீங்க பேசவே இல்லில ஒரு மாசமா" என மதி பாவமாக கேட்டாள்.**

**உடனே விபீஷ் "அச்சோ இல்ல மயிலு ....என் நிலைமை அப்படி என்றவன் வெற்றி, வேந்தா நான் செஞ்சது தப்பா சரியா எனக்கு தெரியல ....ஆனா வினு எனக்கு மட்டும் தான்......அது தான் என் மனசுல ஓடிட்டு இருந்தது.அன்னைக்கு எங்க அப்பா அப்படி பேசினார்னு கேட்டதுக்கு அப்புறம் என்னால வினுவ ஏறெடுத்து பார்க்க முடியல...அவளை பத்தி எனக்கு நல்ல தெரியும்......எவ்ளோ துடிச்சு போயிருப்பா.......அதை நான் என்ன பண்ணி சரி பண்ணுவேன்...எனக்கே புரியலை.......அதான் வீட்ல நல்லா யோசிச்சு பார்த்தேன்..........மேலும் வேந்தன் என் மேல வச்சிருக்க நம்பிக்கைக்கு உரியவனா நான் நடந்துகளை......அவன் நீ கண்டிப்பா அப்படி செஞ்சிருக்க மாட்டேனு சொல்லும்போது நான் செத்தே போயிட்டேன்.......நான் அவ்ளோ கேட்டும் வினுவும் அன்னைக்கு பேசவே இல்ல.....இது எல்லாமே என்னை ரொம்ப குழப்பிடுச்சு......நான் செஞ்சது தப்போனு ஒரு நிமிடம் என்னையே யோசிக்க வச்சிடுச்சு...அந்த நேரத்துலதான் அந்த விடுதலை பத்திரத்தை எடுத்துகிட்டு சதிஸ் வீட்டுக்கு போனேன்...வினுவாவது நல்ல இருக்கட்டுமேனுதான்.........அதை கொடுத்த பிறகு எனக்கு இங்க**

இருக்கவே பிடிக்கலை...மறுபடியும் எப்படி உங்க முகத்துல முழிகிறதுன்னு யோசிச்சு தான் சென்னை கிளம்பிட்டேன்.என்றவன்

"நான் உங்களோட பேச மறுத்ததும் அதுக்குதான்....நான் இங்க வர மறுத்ததும் அதுக்குதான்......என் தங்கைக்கு திருமணம் செய்தி வந்த உடனே எனக்கு பயமாகிடுச்சு...எப்படியும் இங்க வர வேண்டியாதா இருக்குமோனு.......ஆனா எனக்கு வர பிடிக்களை........நிலா தான் என்னை மிரட்டி என்னோட கடமையை ஒரு அண்ணனா நான் பண்ண வேண்டியதும் இருக்குல்ல புரிய வச்சா " என தன்னோட நிலைமையை விளக்கி கொண்டிருந்தான் விபீஷ்.

"சரிடா நீ சென்னை ஓடி போய்ட்டா எல்லாமே சரி ஆகிடுமா "என வேந்தன் ஆத்திரத்தை அடக்கி கொண்டு கேட்க

"இல்ல வேந்தா...ஆனா எல்லாருக்கும் கொஞ்சம் அதிர்ச்சியை ஜீரனிக்க அவகாசம் கிடைக்கும்ல ......எனக்கும் வினுவ நினைச்சு கொஞ்சம் வருத்தம் கொஞ்சம் பயமாவும் இருந்ததுடா அதான்" என மனதில் இருப்பதை அவன் வெளிபடையாக சொன்னான்.

"யாரு நீ வினுவை நினைச்சு பயப்படற ஏன்டா "என வெற்றி கிண்டலாக கேட்டான்.

"நம்பு நண்பா ....உண்மை அதான்" என்றான்.

அனைவரும் ஏதும் பேசாமல் அமைதியாக இருக்க அப்போது உள்ளே வந்த விபீஷின் தாய் தந்தை ...அவனை பார்த்ததும் சந்தோசத்தில் அருகில் செல்ல ...."அம்மா அந்த ஆள வெளியே போக சொல்லு" என அதுவரை பொறுமையாக பேசிகொண்டிருந்தவன் திடிரென்று ஹிஸ்டீரியா வந்தவன் போல கத்தினான்.

அதிர்ச்சியில் பெற்றவர்கள் அப்படியே நிற்க வேந்தன் விபீஷின் அருகில் சென்று..."டேய் என்ன இது.....அவர்தான் செஞ்ச தவறுக்குதான் மன்னிப்பு கேட்டாரு இல்லியா ...அப்புறம் என்னடா" என சமதானபடுத்தினான்.

ஆம்...... வேந்தன் சொல்வது உண்மை............விபீஷ் வீட்டை விட்டு சென்றதும் விபீஷின் தந்தையும் ஆடிபோய்விட்டார்.....வயதின் கோளாறில் அவன் இப்படி பண்ணுகிறான் என்று நினைத்து இருந்தவர்



DO NOT COPY

அவனது உறுதியை பார்த்ததும் அதிர்ந்துவிட்டார்..மேலும் ஊரை விட்டு கிளம்புவதற்கு முன்னாள் விபீஷின் பேச்சு அவர்களின் உறவையே அறுத்து எறிவது போல் பேசியதால் பயந்து விட்டார்.எங்கே தனது மகன் தங்களை விட்டு போய் விடுவானோ என்ற பயம் அவருக்கு வந்தது.பின்னர் வேந்தனை தேடி வந்தார்.

“இல்ல வேந்தா ....இதுல யார் சொன்னாலும் நான் கேட்பதாக இல்லை” என விபீஷ் உறுதியாக கூறினான்.

“நான் சொன்னால் கூடவா விபீஷ்” என்ற குரல் கேட்க

புதுமாப்பிள்ளை சுரேந்தர் அங்கு நின்று கொண்டிருந்தார்.

அவர் அருகில் சென்ற விபீஷ்.....”சார் உங்களுக்கு நான் ரொம்ப கடமைபட்டிருகேன்......இவ்ளோ விஷயம் தெரிஞ்சும் என் தங்கையை நீங்க திருமணம் செஞ்சுகிட்டிங்க...ரொம்ப சந்தோசம் பாஸ்...ஸாரி என்னாலதான்” என அவன் தலைகுனிந்து நின்றான்.

உடனே சுரேந்தர் “விபீஷ் உன்கிட்ட சொல்றதுக்கு என்ன......நான் இங்க வரும் வரை இந்த திருமணம் என்ற எண்ணம் இல்லை.....இங்கு வந்து உன்னோட பிரச்சனை தெரியும் வரை அந்த எண்ணம் இல்லை....ஆனால் அதற்க்கு பின்பு உன் நண்பர்கள் செய்த வேலைகள் என்னை மலைக்க செய்து விட்டது......உன்னை காணோம் என்று சொன்னது அவர்கள் முகத்தில் தெரிந்த வேதனை .......உன்னை தேட அவர்கள் எடுத்து கொண்ட முயற்சி........அந்த நிலையிலும் உன் வீட்டை பற்றி கவலைப்பட்ட வினு” என சொல்ல

வினுவின் பெயரை கேட்டுடன் அவன் முகத்தில் ஒரு மின்னல் வந்து மறைந்தது.

அதற்க்கு பின்பு நடந்தது எல்லாம் கனவு போல இருக்கு விபீஷ் என்றவர் அந்த நிகழ்வுகளை அவனுக்கு சொன்னார்.

“என்னடா பண்றது...அவன் பாட்டுக்கு இப்படி பண்ணிட்டு போய்ட்டான்” என வெற்றி தலையில் கை வைத்து அமர்ந்திருந்தான்.

அதற்குள் “அவன் எங்கும் போகல.....சென்னை தான் போறான்......டாக்ஸியில் போறான்.....நம்பர் வேணுமா” என்றாள்.

“என்னது சென்னை போறானா” என ஒரே நேரத்தில் அனைவரும் குரல் எழுப்ப

“கழுத கெட்டா குட்டி சுவரு.......வேற எங்க போவான்” என வெண்ணிலா கோபத்தில் வார்த்தைகளை கொட்டினாள்.

“நிலா என்ன இது” என வெற்றி அதட்ட

“உனக்கு எப்படி தெரியும் நிலா” என வேந்தன் கேட்டான்.

“எல்லாம் நமக்கு ஆள் இருக்கு என சொல்லிவிட்டு முதலில் வினுவை பாருங்க.....அவளுக்கு சாப்பிட ஏதாவது கொடுங்க” என சொல்லிவிட்டு அங்கிருந்து நகர்ந்தாள்.

இனி அடுத்து என்ன செய்வது என வெற்றி பேச்சை ஆரம்பிக்க

“ஹேய்ய்ய் வினு நீ ஜெயிச்சுட்ட” என சந்தோசத்தில் கத்தி கொண்டே வந்தான் ராஜ்.

“என்ன ராஜ்......என்னது” என மதி ஆர்வமாக கேட்க

“சார் நம்ம வினு ஜெயிச்சுட்டா “என மகிழ்ச்சியில் வேந்தனை பிடித்து சுத்தினான்.

அனைவரும் என்னவென்று தெரியாமல் ஆனால் உற்சாகத்துடன் தெளிவா சொல்லு ராஜ் என்றான் வெற்றி.

“சார் அந்த போட்டியில நம்ம வினுதான் முதல் பரிசு.......இப்பதான் காலேஜ்க்கு மெயில் வந்துச்சாம்......ஆனா முறைப்படி அடுத்த மாதம் தான் அறிவிப்பாங்கலாம்” என்றான்.

“ஹே வினுஊஊஊஊஊஊ “ என சந்தோசத்தில் வெண்ணிலா அவளை தூக்கி சுத்த

எல்லாரும் பழையதை மறந்து அந்த மகிழ்ச்சியில் மனம் நிறைந்தனர்..

சிற்பியின் உளியினால் அடிபட்டபாறை தான் சிற்ப்பமாகும்...அதுபோல வாழக்கையின் அவளுக்கு ஏற்பட்ட வேதனைகளே அவளது வெற்றிக்கு காரணமாக இருந்தன.......யாரெல்லாம் அவளது குடும்பத்தை, வாழ்க்கையை இழிவாக பேசினார்களோ அவர்களின் முன்னாள் இன்று இந்தியா அளவில் சிறந்த கட்டிட வடிவமைப்பாலராக அவள் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிறாள்.அனுபவசாலிகள் கூட செய்ய முடியாத ஒரு காரியத்தை அவள் செய்து இருக்கிறாள்.ஆனாலும் அவளது சூழ்நிலை இந்த நிகழ்வையும் அவளால் முழு மனதுடன் கொண்டாடமுடியவில்லை.

அவளது நிலையை பார்த்த வெண்ணிலா அவளை அழைத்து சென்று ..".இங்க பாரு வினு இது உன் வாழ்க்கையில் ஒரு பொன்னான நாள்...நீ இருபது வருடம் பட்ட உழைப்பிற்க்கு பலன் கிடைத்த நாள்......அதை நீ முதலில் நீ தெரிந்து கொள்.....துன்பம் இல்லாத வாழ்க்கை கிடையாது.......இப்போது இருக்கும் சந்தோசத்தை நீ உளமார அனுபவி........அது உனக்கு துன்பத்தை தாங்கும் சக்தியை கொடுக்கும் ''......என சொல்லி கொண்டிருந்தாள்.

அங்கே வந்த மதியும் "ஆமா வினு.......வாழ்க்கையின் நாட்கள் ஓடிகொண்டே இருக்கும்...அதுல நம்ம சந்தோசம் வரும்போது அனுபவிச்சுகனும்.....துக்கம் வரும்போது அதை எதிர்கொள்ளனும்......அதை விட்டு இன்பத்திலும் துன்பத்தையே நினைச்சுட்டு இருந்தோம்னா வாழ்க்கை நமக்கு எப்பவும் துன்பமாதான் தெரியும்னு மாமா சொல்வார்......நீ எத பத்தியும் கவலைபடாதே ......எல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்......நீ சந்தோசமா இரு" என்றாள்.

அன்றிய நாள் அந்த நண்பர்களுக்கு ஒரு மறக்க முடியாத நாளாக அமைந்து போனது.

பின்னர் அனைவரும் அது விஷயமாக பேச V4 பில்டர்ஸ்க்கும் நல்ல பெயர் கிடைத்தது.அதில் உள்ள பார்ட்னெர் என்று அவளால் மற்றவர்களும் சிறப்பு பெற்றனர்.

"விபீஷ் நீ நம்ப மாட்ட அந்த நேரத்தில் அவர்களின் செயலை கண்டு எனக்கு பொறாமையாக கூட இருந்தது விபீஷ்....உங்களில் ஒருவனாக



DO NOT COPY

நான் இல்லேனு........அப்போது தான் வேந்தன் என்னிடம் பேசினார்.அந்த இடத்தை விபீஷின் தந்தையிடமே கொடுத்து விடலாம்......நாங்கள் இந்த ப்ரொஜெக்ட்ல விலகிட்றோம்.......எங்களுக்கு வினு, விபீஷ் தான் முக்கியம்" என்றார்.

"எனக்கு அதிர்ச்சி.......நானும் BUSINEES பண்றவன் இல்லயா.....கொஞ்சம் பொறுங்கள் ....இன்னும் இரண்டு நாட்களில் சொல்கிறேன் என சொல்லிவிட்டு தான் உன் தந்தையை சந்திக்க உன் வீட்டிற்கு சென்றேன்.அங்கு தான் உன் தங்கையை பார்த்தேன்...... அப்போது என மனதிற்கு ஒரு யோசனை தோன்றியது......நான் உங்களுடன் ஒன்றாக இருக்கவேண்டும்...அதே சமயத்தில் எனக்கும் அந்த ப்ராஜெக்ட் நிற்க கூடாது ...மேலும் உன் தங்கையை எனக்கு பிடித்து விட்டது.நேரிடியாக உன் தந்தையிடம் பேச அவரும் சரி என்று சொன்னார்.நான் விரைவில் கனடா செல்ல வேண்டியது இருப்பதால் திருமணத்தை விரைவாக முடிக்கனும்னு சொல்லிட்டேன்.இங்க வேலை அதிகமாக இருந்ததால் யாரும் சென்னை வர முடியவில்லை".என சுரேந்தர் சொல்லி முடித்தார்.

.

"எனக்கும் தெரியும் பாஸ்.....என் friend சொன்னான்....வினு ஜெய்ச்சுட்டானு......ஆனா அவ கஷ்டபட்டதே என்னை விட்டு போகத்தானே" என சொல்லும்போதே அவன் குரல் உடைந்து வேதனை விளிம்பில் நின்றது.

"என்னடா உளற" என வேந்தன் கேட்க

"இல்ல நண்பா...இந்த போட்டில வெற்றி பெற்றால் பாரின் போய்டலாம் அப்டிங்கிர திட்டதோடதான் அவ இந்த போட்டில கலந்துகிட்டாள் "என்றான்.

"இத எங்கள நம்ப சொல்றியா" என வெற்றி அவனை கேட்க

"இல்லைடா நிஜம் தான்...ராஜ் எங்க ...அவனுக்கு தெரியும் என்றான்"

..."அந்த ராஜ் பயலை கூப்பிடு...கமுக்கமா இருந்திட்டு எல்லா விஷ்யத்திலையும் உள்ள இருக்கான்" என வேந்தன் கோபமாக சொல்ல

**“அய்யோ பாஸ்…என்னை ஏன் மாட்டி விட்ரிங்க” ….என ராஜ் அலறினான்.**

**பின்னர் விபீஷை பார்த்து முறைத்த வேந்தன் “முட்டாள்…..இப்படியே தான் எதையும் முழுசா புரிஞ்சுக்காம அரகுறையா பேசு” …“வினு என்ன பண்ணா தெரியுமா” என்றவன்**

**“அன்னைக்கு நீ போன உடனே உன்னை தூக்கிட்டு வந்து கட்டி வச்சு உதைகனும்னுதான் கிளம்பினோம்…..ஆனா வினுதான் வேண்டாம்னு சொல்லிட்டா……எனக்கு கொஞ்சம் யோசிக்க அவகாசம் வேணும்…அது வரைக்கும் அவரை தொல்லை பண்ணாதிங்க….அப்டின்னு சொல்லிட்டா…..அப்புறம் தான் நாங்க உன்னை கூப்பிடலை…..நாங்களும் உன் கூட பேசலை …**

**“அவள் வெற்றி பெற்றது நம்ம தொழில் வட்டத்துல எல்லாருக்கும் தெரிஞ்சுடுச்சு……பெரிய பெரிய ஆளுங்க எல்லாம் வினுவ அழைத்தாங்க…ஆனா அவ மறுத்திட்டா…அப்போதான் தஞ்சாவூரில் ராஜ பரம்பரையல இருந்து வந்து வினுவ திருமணத்துக்கு கேட்டாங்க…..அன்னைக்குதான் உங்க அப்பாவும் என்கிட்டே பேச வந்திருந்தார்.அவங்க வினுவ பத்தி புகழ்ந்து சொல்லிட்டு அவங்க குடும்பத்தை பத்தி கேள்விப்பட்டோம்…..அந்த பொண்ணோட தைரியம் எங்களுக்கு ரொம்ப பிடிச்சருக்கு…அதுகாகத்தான் அந்த பெண்ன பெண் கேட்டு வந்திருக்கோம்னு சொன்னங்க…உங்க அப்பா முகத்துல ஈ ஆடலை……அவரு முன்னாடியே வினுவையும் கூப்பிட்டு கேட்டாங்க ….ஆனா அவ மறுத்திட்டா “என்றான்.**

**சில நிமிடம் அமைதியாக இருந்த வேந்தன் “ஸாரி நண்பா…நான் கூட அவளை வற்புறுத்தினேன்…ராஜ வம்சம் ….நீ சரின்னு சொல்லு வினுனு “என மெதுவாக சொன்னான் .**

**விபீஷோ வேந்தனை அடிபட்ட பார்வை பார்க்க**

**“இல்ல விபீஷ் அவளோட அண்ணன் ஸ்தானத்துல நினச்சு பார்த்தா …நீயே சொல்லு…அவளும் வாயை திறந்து உன்னை விரும்பறேனு சொல்லல…நீயோ அடிகடி சொல்லாம போய்ற….நான் என்னதான்**

நினைக்கிறது அதான் அப்படி சொன்னேன்....அதுக்கு அவ என்ன சொன்ன தெரியுமா" என்றவன் விபீஷை நிமிர்ந்து பார்க்க

விபீஷோ கண்களில் ஏக்கத்தோடு அவள் என்ன சொல்லிருப்பாள் என்பதை கேட்க ஆவலாக அவன் முகத்தயே பார்த்து கொண்டிருந்தான்.

"எனக்காக விபீஷ் அப்பாகிட்ட மாப்பிள்ளை கேட்பிங்களா சார்"....என கேட்டாள்.. என்றான்.

"எனக்கு பயங்கிற அதிர்ச்சி.......என்ன வினு சொல்ற "என புரியாம கேட்டேன்.

"இல்ல சார் நான் நல்லாத்தான் யோசிச்சு சொல்றேன்......விபீஷ் அப்பா என்னை ரொம்ப கேவலமா பேசிட்டாரு...அதான்...இப்போ என்னோட அந்தஸ்த்து என்னனு அவருக்கே புரிஞ்சுருக்கும்...இப்போ போய் நம்ம கேட்கலாம் சார் என சொல்லும்போது...அவள் முகத்தில் சிறு கர்வம் இல்லை...ஆனால் உறுதி,ஒரு வைராக்கியம் தான் நினைத்ததை முடித்த திருப்தி தெரிந்தது............ விபீஷ் நிஜமா சொல்றேன் எனக்கு கொஞ்சம் பொறாமையா கூட இருக்குடா......வினு மாதிரி ஒரு பொண்ணு கிடைக்க நீ கொடுத்து வச்சிருக்கனும்டா" என்றான்.

விபீஷின் முகத்தில் பெருமிதம் மின்ன "நிஜமாவ சொல்ற வேந்தா" என அவனை பிடித்து உலுக்கியவன்

"ஆமாண்டா கூமட்டை என வெண்ணிலா ஆரம்பிக்க.....அந்த பொண்ணு உன் மேல உயிரே வச்சுருக்கு...நான் கேட்கும்போதும் அதான் சொன்னாள்.....இந்த போட்டிக்கு நான் உள்ளே நுழைந்தது வேறு எண்ணத்தில் தான்........ ...ஆனா முடிக்கும்போது என் மனம் முழுவதும் விபீஷ் தான் இருந்தான்...அவனை திருமணம் செய்து கொள்ளவேண்டும்.........அப்போது அவர்கள் எதிர்பார்க்கும் அந்தஸ்த்து என்னிடம் இருக்கனும் அப்டிங்கிறது மட்டும் தான் என் மனசில இருந்ததுனு" சொன்னாள்.

"அதுக்கு ஏண்டா அவ இவ்ளோ கஷ்டபடனும் ...நான் தான் அவமேல உயிரா இருக்கேனு அவளுக்கு தெரியுமே...என்கிட்டே சொல்லிருக்கலாம்ல...எத்தன நாள் தூங்கமா வேலை பார்த்தா



DO NOT COPY

தெரியுமா" என அவளின் வேதனையை நினைத்து விபீஷ் மனம் வருந்தி சொன்னான்.

கேட்டேன் விபீஷ் என வெற்றி ஆரம்பிக்க ...."எனக்குதான் அப்பா அம்மா சரி இல்லை ......விபீஷ் விஷ்யத்தில அந்த மாதிரி இருக்க கூடாது என்னால அவங்க குடும்பத்துல பிரச்சன வரகூடாது.......பெற்றோர்கல்னால பிள்ளைங்க படற கஷ்டம், பிள்ளைங்கனால பெற்றோர் படற கஷ்டம் எல்லாம் என்னோட போகட்டும்...எங்க திருமணம் அவங்க குடும்ப சம்மதத்தோட தான் நடக்கணும்...அதுக்குதான் இவ்ளோனு சொல்றாடா" என்றான்.

விபீஷ் சிறிது நேரம் ஏதும் பேசாமல் இருந்தவன் அப்படியே கீழே முட்டி போட்டவன் தன இரு கைகளையும் முகத்தை மூடிக்கொண்டு கத்தி அழுக

அந்த இடத்தில் யாரும் அவனை தடுக்காமல் அமைதியாக அந்த அறையை விட்டு வெளியேறினர்.

சிறிது நேரம் அழுதவன் பின்னர் சத்தம் ஏதும் இல்லாததை கண்டு கைகளை முகத்தில் இருந்து எடுத்தவன் எதிரில் வினு நின்று கொண்டிருக்க

கண்கள் முழுவதும் கண்ணீர் நிரம்பி இருந்தால் உருவம் மங்கலாக தெரிய

வினு!!!!! என்றவன் கண்களை நன்றாக துடைத்து விட்டு பார்க்க

அழகு மயில் வண்ண நிறத்தில் பட்டுடுத்தி மல்லிகை சரமிட்டு அன்று மலர்ந்த மலர் போல் அவள் நின்று இருக்க

"வினு ...வினு" என அவன் சொல்லி கொண்டே இருக்க

காதல் கல்யாணம் என்பதெல்லாம்

என் வாழ்க்கையில் கனவில் மட்டுமே

இருக்கும் என நான் நினைக்க

உன் பேச்சால் என் மதி மயங்க



DO NOT COPY

வைத்தாய்!

உன் அன்பால் என் மனதை

கொள்ளை அடித்தாய்.!

உன் காதலால் என்னையே நீ

வென்றாயடா!

தோற்பதிலும் ஒரு சுகம்

அதை உன்னிடம் கண்டேனடா!

என் மனதில் நுழைந்து

உயிரில் கலந்து

என் உணர்வுகளோடு கலந்தவனே

உன் காதல் கடிதம் படிக்கும் வரை

எனக்கும் காதல் மலரும் என்று

அறியவில்லையடா....

படித்த பின்போ உனது பிம்பமே

எனக்கு முகம் பார்க்கும் கண்ணாடி

ஆனதடா......

உன் பெயரே எனக்கு

காவியம் ஆனதடா !

இன்னும் என்ன பார்வை

இனியாவது எனது உள்ளத்தில் இருப்பதை

உணர்ந்து எனக்கு இன்பத்தை கொடுப்பாயா !!!!!

லஷ்மிரவி

DO NOT COPY

என சொல்லிவிட்டு ...ஒற்றை கண்ணை மேல தூக்கி "எப்படி இருக்கு விபு "என கேட்க

அடுத்த வினாடி அவனது அணைப்பினில் இருந்தவள்....அவளை இறுக அணைத்தவன் வினு...வினு என இடைவிடாமல் சொல்லி கொண்டே இருக்க

அவளும் அவனுக்குள் ஒன்டியவள் அவனை இறுக தழுவ .....சில நிமிடங்கள் கடந்திருக்க ...மெதுவாக தன்னிடம் இருந்து அவளை விடுவித்தவன் ....."வினு என்னால ரொம்ப கஷ்ட்டபட்டுடடா ....என்னை மன்னிச்சுடு வினு" என மனதின் வலி வார்த்தையாக வெளிவந்தது........

அவள் நிமிர்ந்து அவனை பார்க்க

"நீ எனக்கு வேணும் வினு....உன்னை விட்டுட்டு என் வாழ்க்கையை நினைத்து கூட பார்க்க முடியல...... அதான் இப்படி பண்ணிட்டேன்.......ஒரு வேகத்துல சதிஷ் கிட்ட பேப்பர் கொடுத்திட்டேன் ....ஆனா அதுக்கப்ரம் எப்படி துடிச்சு போனேன் தெரியுமா" என்றான்.

"விடு விபு.....பழசை பேசவேண்டாம்" என அவன் பேச்சை தடுத்தவள் காதலில் மன்னிப்பு கிடையாதுடா.......உண்மையான நேசம் என்னைக்கு தவறு செய்யாது என சொன்னவள்.....இனி நம்ம எப்போதும் சந்தோசமான விஷயம் மட்டும் தான் பேசணும்" என சிரித்து கொண்டே சொன்னாள்.

உடனே "ஆமா வினு....வா ...வா நமக்கு ஏகப்பட்ட விஷயம் இருக்கு" என்றவன் அவள் அருகில் நெருக்கமாக வர

"டேய் என்னடா பண்றா....... அறைக்கு வெளியே எல்லாரும் இருக்காங்க" என வினு ஒற்றை விரல் காட்டி அவனை மிரட்டி கொண்டிருக்க

அவனோ அதை காதில் வாங்காமல் அருகில் வந்தவன் அவள் முகத்தின் அருகில் தன் முகத்தை கொண்டு செல்ல

அவனது மூச்சு காற்று அவளது உடலில் நெருப்பாக சுட



DO NOT COPY

பயத்தில் கண்களை உருட்டி கொண்டு அங்கும் இங்கும் பார்த்து கொண்டே..."வேண்டாம் விபு...வேண்டாம் விபு" என அவள் மெதுவாக சொல்ல அது அவளுக்கே கேட்கவில்லை.

அவளது கண்களை பார்த்தவன் ..."இந்த முழி தான் வினு...இதே மாதிரி தான் வேலைக்கு வந்த முதல் நாளும் முழிச்ச....அன்னைக்கு விழுந்தவன்தான் வினு இன்னுமும் எழுந்தரிக்கலை என காதலாக சொன்னவன் கண்ணுலே சொக்கு பொடி போட்டு இழுக்கிறடி என சரசமாக சொல்லிகொண்டே அவள் கண்களில் முத்ததை பதித்தவன் அது முகம் முழுவது ஊர்வலம் வர அந்த சுகத்தில் இருவரும் மயங்கி நிற்க

வினு...வினு என அவன் பிதற்ற

விபு...விபு என அவளும் உளற

எத்தன நாள் ...எத்தன நாள் இதுக்காக காத்திருந்தேன் என்றவன் ........ அவளை இறுக அணைத்தவன் ...........இது வரை தேக்கி வைத்திருந்த குமறல்கள் ,உணர்வுகள் அனைத்தயும் அந்த அணைப்பின் மூலமே வெளிபடுத்திவிட்டான்

"டேய் விடுடா.....அச்சோ விடுடா......எழும்பு நொறுங்கிடுமாட்ட இருக்கே " என அவள் கத்த

"ஐ லவ் யு வினு .....ஐ லவ் யு வினு" என்றவன் அவள் இதழை சிறை செய்ய அந்த இடத்தில் இரு காதல் மனங்களின் சங்கமம் அழகாக இணைந்தது.

.விபீஷு...டேய் விபீஷு எவ்ளோ நேரம்டா " என வெளியே இருந்து அனைவரும் சத்தமிட

"இந்த கொசுங்க தொல்லை வேற தாங்க முடியல" என சொல்லிகொண்டே அவன் கதவை திறந்து வெளியே வந்தான்.

"ஏண்டா சொல்லமாட்ட.......வினுவ உன் கண்ணுல காட்னது தப்பா போச்சு............நாங்க கஷ்ட்டப்பட்டு எல்லாம் சொல்லி தேத்தி வச்சிருப்போம்.......... நீ வந்து நோகாம நொங்கு சாப்பிட்டு போவ என வெற்றி கிண்டலாக சொல்ல



DO NOT COPY

வெட்கத்தில் வினுவின் முகம் குங்குகம பூவாக சிவந்திருக்க விபீஷின் முகமோ சந்தோசத்திள் பூத்து குளுங்கியது.

"அப்போ இப்பவே இந்த கல்யாணத்தையும் முடிச்சடலாம்" என விபீஷின் தந்தை சொல்ல

விபீஷ் ஏதும் சொல்லாமல் அவரை முறைத்தவன்.......வேந்தனிடம் திரும்பி ..."நண்பா இவர் செய்த காரியத்தை என்னால் மன்னிக்கவே இயலாது......நான் அவருடன் பேச விரும்பலை...என்னோட விஷயங்களில் அவர தலையிட வேண்டாம் என்று சொல்லிடு" என்றான்.

"டேய் என்ன இது....அவர்தான் தவறை உணர்ந்து விட்டார் இல்லயா" என வெற்றி சொல்ல

"இல்லடா...என் வினு அப்போ எப்படி துடிச்சிருப்பா.....முடியாது...அவருடன் என்னால் பேசமுடியாது" என்றான்.

"விபு அவர் நிலையில இருந்து யோசிச்சு பாரு...எந்த அப்பாவா இருந்தாலும் இதை தான் பன்னிருபாங்க" என வினு ஆரம்பிக்க

அவளை திரும்பி முறைத்தவன் பின்னர் அவள் கையை பிடித்தவன் "வினு என்னால அவர மன்னிக்க முடியாது ...அவரு என்னை என்ன வேணா பேசி இருக்கலாம்....ஆனா உன்னை பேச என்ன உரிமை இருக்கு அவருக்கு....முடியாது வினு....நீ வேற எது வேண்டுமானாலும் சொல்லு செய்யறேன் .....ஆனால் இவரை என்னால் மன்னிக்கவே முடியாது என உறுதியாக கூற மற்றவர்கள் எவ்ளவோ எடுத்து கூறியும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை.பின்னர் அவர்களுக்கு திருமணம் பற்றி பேச விபீஷோ அனைவரயும் அழைத்து வினுவின் வீட்டில் தான் திருமணம் செய்யவேண்டும் என்று சொல்லிவிட்டான்....அவளை கேவலாமாக பார்த்தவர்கள் முன்னால் அந்த ஊரே மெச்சும் அளவு அவர்களது திருமணம் நடக்க வேண்டும்" என்றான்.

அவனது இந்த முடிவு வினுவின் இதயத்தில் விபீஷின் காதலை பல மடங்காக உயரத்தியது........தனக்காக எப்படி பார்த்து பார்த்து செய்கிறான் என்ற உணர்வு அலைகள் அவளுக்கு பொங்கி

கொண்டிருக்க அப்போது சுரேந்தர் தேங்காய் பழதட்டோடு உள்ளே வந்தார்.

அனைவரும் கேள்வியோடு அவரை பார்க்க

நேராக மதியிடம் வேந்தனிடம் வந்தவர் “எனக்கு வெற்றியை ரொம்ப பிடிச்சிருக்கு....அதான் என் தங்கைக்கு வெற்றியை திருமணத்திற்கு கேட்கலாம்னு வந்திருக்கேன்” என்றான்.

“என்னது இது....தொடர்ந்து இப்படி அதிர்ச்சியா வந்திட்டு இருக்கு...என்னால முடியல மாமா” என மதி அப்படியே அமர்ந்தாள்.

வேந்தனோ வெற்றியை பார்க்க

வெற்றி ஏதும் பேசாமல் அமைதியாக நின்று கொண்டிருந்தான்..

அதற்குள் விபீஷ் “நண்பா என்னடா இது  இன்னும் மெயின பிச்சரே வெளிவரலையா...டரையலர்தான் தான் இவ்ளோ நாளா ஓடிட்டு இருக்கா” என சத்தமாக கேட்டான்.

“என்னது மெயின் பிச்சர்” என மதி கேட்க

“டேய் அடங்குடா “என வெற்றி அவன் காதை கடித்தான்.

“என்ன அண்ணா ...என்னது ...எனக்கு மட்டும் சொல்லுங்களேன்” என மயிலு சின்ன குழந்தை போல் அவன் அருகில ஓடி வர

“மதி...என்னது இது...”.என வேந்தன் குரல் கொடுக்க மதி அமைதியானாள்.

“என்ன சுரேந்தர் இப்படி திடிர்னு வந்து கேட்க்கிறிங்க” என வேந்தன் தயங்கினான்.

“இல்ல நான் கனடா கிளம்பிடுவேன் .....அப்புறம் எப்போ வருவேன்னு தெரியாது அதான்......வெண்ணிலாவுக்கு இதுல சம்மதம்....வெற்றி தான் சொல்லணும்” என சுரேந்தர் இழுக்க

உடனே வெற்றி மிகவும் அமைதியாக “என் நண்பர்கள் எல்லாம் பார்த்து என்ன சொல்றாங்களோ .....அதும் என் பாப்புக்கும் பிடிச்சிருந்தா அப்புறம் நான் என்ன  சொல்றது” என அமைதியாக சொன்னான்.

**உடனே விபீஷ் பர பரவென தேட**

**அனைவரும் “என்ன ஆச்சு விபீஷ் என்னது” என பரபரக்க**

**வெற்றியோ அவனை இழுத்து “என்னடா......குட்டைய குழப்பிற” என் பல்லைகடித்து கொண்டே கேட்க**

**“இல்ல நண்பா வெற்றி ...வெற்றின்னு ஒரு மானஸ்தன் இங்கு நின்னுட்டு இருந்தான்...திடிர்னு காணாம போய்ட்டான் அதான் தேடிட்டு இருக்கேன்” என முகத்தை சீரியசாக வைத்து கொண்டு சொன்னான் விபீஷ்.**

**“டேய் வெளிய வாடா உனக்கு இருக்கு” என வாய்க்குள்ளே முனகினான் வெற்றி.**

**வேந்தன் மதியை பார்க்க “.நீ என்ன மதி சொல்ற” என கேட்க**

**“நம்பமுடியவில்லை...இல்லை...இல்லை” என சிவாஜி ஸ்டைலில் மீண்டும் ஒரு குரல் கேட்க**

**அங்கு விபீஷ்..... சிவாஜி போல் நின்று கொண்டிருந்தான்.**

**“அச்சோ இவனா ஏண்டா கூட்டிட்டு வந்திங்க என வெற்றி கடுப்பாகி சொன்னவன் ...என்னதாண்டா உனக்கு பிரச்சனை” என கேட்க**

**“இல்ல நண்பா நம்ம விருமாண்டி இப்போ மயிலு கிட்ட எல்லாம் கருத்து கேட்க ஆரம்பிச்சுட்டான்......இவன் எப்போ கருத்து கந்தசாமி ஆனான்.....எப்போதும் இவனே பேசுவான்...இன்னைக்கு இப்படி நடந்துகிறான்.......ஏண்டா மனுஷன் ஒரு ஆறு மாசம் இல்ல...அதுக்குள்ள இம்புட்டு மாற்றங்களா.......ஷ்ஷ்ஷ் ...என்னால முடியல.....எதா இருந்தாலும் இப்பயே பேசி முடிங்க...தினமும் ஒவொவொரு அதிர்ச்சி கொடுத்தா இந்த பிஞ்சு உள்ளம் தாங்காதுடா என சொல்லியவன் ....என்ன மயிலு மேல்சுவற்றை அண்ணாந்து பார்த்திட்டு இருக்க.........உன்னாலே இந்த அதிர்ச்சியை தாங்க முடியலியா” என கேட்டான்.**

உடனே மதி “கொஞ்சம் பொறுங்க விபீஷ் அண்ணா நான் யோசனை பண்ண வேண்டாமா” என யோசிப்பவள் அவள் நின்று கொண்டிருந்தாள்.

“ஓ இதுக்கு பேர்தான் யோசிக்கறதா ...நல்ல யோசி மயிலு” என விபீஷும்  அவளை உசுபேத்திவிட்டான்.

“ஆஹா....சும்மா இருந்தவளை பேசியே யோசிக்க வச்சுட்டானே...இவன...... என   மனதிற்குள் விபீஷை திட்டிய வெற்றி மீண்டும் அவனிடமே தஞ்சம் அடைந்தான்.

“டேய் விபீஷ் பாப்பு எதாவது சொல்லி குழப்பிடபோகுது...நான் வேற ரொம்பா வீராப்ப நீங்க எடுக்கிற முடிவுதான் சொல்லிட்டேன்.......கொஞ்சம் காப்பாத்துடா” என கெஞ்சினான்.

உடனே விபீஷ் நேராக மயிலு காதில் ஏதோ சொல்ல.....உடனே மதி “அப்படியா சொல்றிங்க.......அப்போ எப்போ கல்யாணத்தை வச்சுக்கலாம்” என்றாள்.

கேட்டவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைய  வெற்றியின் முகத்திலோ பெரிய நிம்மதி தோன்றியது.

“எனக்கு இப்போ இந்த திருமணம் வேண்டாம்” என குரல் கேட்க

அனைரும் திரும்பி பார்க்க வெண்ணிலா அமைதியாக கையை கட்டி நின்று கொண்டிருந்தாள்.

“ஹே நிலா என்ன ஆச்சு ......உன்கிட்ட கேட்டு தான இந்த பேச்சை எடுத்தேன் இப்போ என்ன” என சுரேந்தர் வேகமாக கேட்டான்.

வெற்றியின் முகத்தில் அதிர்ச்சி அப்பட்டமாக தெரிந்தது.

“நான் இப்போ திருமணம் வேண்டாம்னு தான்  சொன்னேன்...ஆனா திருமணமே  வேண்டாம்னு  சொல்லல ......எனக்கு கொஞ்சம் அவகாசம் வேணும்” என அவள் நிதானமாக சொன்னாள்.

“ நிலா என்ன இது” என விபீஷ் அவளிடம் பேச வர

“விபீஷ் பொறு என அதட்டிய வேந்தன்.....சரி நிலா நீ எப்போ சொல்றயோ அப்போ கல்யாணத்தை வச்சுகலாம் .... இப்போ உறுதி மட்டும் பண்ணிக்கலாம் என சொல்லிவிட்டு தட்டை வாங்கி கொண்டான்.........திருமண வீட்டுக்கு வந்தவங்க எல்லாம் போய்ட்டாங்க...நம்ம தான் இருக்கோம் .........இப்போ ரொம்ப களைப்பா இருக்கு......... வாங்க வீட்டுக்கு போலாம் என கிளம்பினான்” வேந்தன்.

போகும்போது வெற்றியிடம் ஏதோ சொல்லி விட்டு சென்றான்.

“சரி...சரி வா வினு வீட்டுக்கு போலாம்” என விபீஷ் அவள் தோளில் கை போட

“எங்கடா போற.......என விபீஷை இழுத்த வெற்றி ......வினு அவங்க வீட்டுக்கு போறா....நீ எங்க போற “ என்றான்.

“டேய் என்னடா இது...அவ என் பொண்டாட்டிடா” என அவன் அதிர

“அது எல்லாம் நீ சொன்னமாதிரி கல்யாணம் நடந்ததுக்கு அப்புறம்.......இப்போ நீ அந்த பக்கம் போ...வினு நீ இந்த பக்கம் போ” என பிரித்து விட்டான்.

“அடபாவிங்களா” என புலம்பி கொண்டே அவன் செல்ல

“நிலா போலாமா” என கேட்டு கொண்டே வெற்றி நடக்க

“டேய் ...நீ எங்கடா போற என அவனை கை பிடித்து இழுத்த விபீஷ் .......எனக்கு ஒரு நியாயம் ...உனக்கு ஒரு நியாயமா......நீயும் என் கூட வா” என்றான்..

“இல்லடா...நிலாகிட்ட நான் முக்கியமான விஷயம் பேசணும்......அதான் வேந்தன் கிட்ட சொல்லிட்டேன்” என்றான்.....

“டேய் வெற்றி இது எல்லாம் ஓவர்டா ......இந்த கன்னி பையனோட சாபம் உன்ன சும்மா விடாது” என்றவன் .......

“இங்க பாரு ஒருத்தன் இறந்த வீட்டுக்கு போயிட்டு புது மாப்பிளையா திரும்பி வரான்...இன்னொருத்தன் பிடிக்கலை  பிடிக்கலைன்னு சொல்லிட்டு ஆறு மாசத்துல பிக்கப் பண்ணி கல்யாணம் வரைக்கும் வந்துட்டான்......நான் தான் நான்கு வருசமா காதலிச்சு .....கல்யாணம்

**ஆகி ஆறு மாதம்  கழிச்சும் இன்னும் ஒன்னும்  பண்ணாம இருக்கேன் என சொல்லி முடிக்கும் முன்பே அவன் கன்னத்தில் அழுத்தமான ஒரு முத்தம் பதிய அப்படியே சிலையாக நின்றவன்**

**அப்படியே அவளை இழுத்து முன்னால் நிறுத்த வினு வெட்கத்தில் தலை  குனிய மெதுவாக அவள் முகத்தை கைகளில் ஏந்தியவன் கண்களால் அவளை அள்ளி பருக அவளோ நாணத்தால் தடுமாற...அவள் கண்களுக்குள் அவன் தன் உயிரே தேட அவளோ தனது மெல்லிய இதழ்களை திறந்து  "விபு  ஐ லவ் யூ டா" என தன் உணர்வுகள் அனைத்தயும் குரலில் கொண்டுவந்து சொல்ல அது அவன் உயிர் வரை  ஊடுருவி சென்றது. ...வினுஊஊஊஊ  என ஆசையில் அவளை உச்சி முகர்ந்தான். ..**

**இங்கு வீட்டிற்கு வந்த உடன் வேந்தன் ஏதும் பேசாமல் அமைதியாக இருக்க....மதியோ "என்ன மாமா யோசனை" என்றாள்.**

**"ஒண்ணுமில்லை மதி "என சொல்லி விட்டு அவன் படுக்கையில் சாய**

**அவனோடு இணைத்து சாய்ந்தவள் ......."ஏன் மாமா உங்களுக்கு நிலாவ பிடிக்கலையா" என்றாள்.**

**அவன் ஏதும் பேசாமல் சிறிது நேரம் இருந்தவன் ......"நீ என்ன நினைக்கிற மதி "என்றான்.**

**அவள் அமைதியாக  இருக்க........"அந்த பெண்ணோட வேகத்துக்கும் வெற்றியோட சுபாவத்துக்கும் ஒத்து வருமா மதி" என்றான்.**

**அவள் ஏதும் பேசாமல்  அவனையே பார்த்து கொண்டிருந்தாள்.**

**"எனக்கு என்னமோ கொஞ்சம் சந்தேகம் தான் மதி" என்றான்.**

**"ஏன் மாமா நம்ம குடும்பத்துக்கும் அந்த பொண்ணோட பழக்கவழக்கத்துக்கும்  ஒத்து போகாதுன்னு சொல்றிங்களா" என்றாள்.**

**"தெரியலை மதி...ஆனா எனக்கு மனசுல எதோ நெருடல் இருக்கு" என்றான்.**

**"எப்படி வேண்டுமானாலும்  இருக்கட்டும் மாமா...ஆனா அந்த பொண்ணுதான் அண்ணாவுக்கு" என உறுதியாக சொன்னாள் மதி.**



DO NOT COPY

“என்ன மதி இப்படி சொல்ற நீ” என அவன் வேகமாக கேட்டான்.

“ஆமா மாமா திருமண வாழ்க்கைகிங்கறது எல்லாருக்கும் நினைச்ச மாதிரி அமையறது இல்லை........அந்த மாதிரி வாய்ப்பு கிடைக்கும்போது நம்ம சில விஷயங்களை தியாகம் பண்ணலாம் ...தப்பில்லை மாமா” என அவள் உணர்வுபூர்வமாக சொல்ல

“மதி” என அழைத்தவாறே சட்டென்று எழுந்தவன்

அவள் கண்களையே பார்த்தவன் ....”நீ இன்னும் என்னை நம்பலையா மதி” என வேதனையாக கேட்டான்.

“அப்படி எல்லாம் இல்லை மாமா......நான் எப்பவும் உங்களை நம்பறேன்....அன்னைக்கும் என் மனசுல பட்டத சொன்னேன்...அவ்ளோதான்....அதுக்காக நான் உங்களை வெறுக்கிறேனு இல்லை....இப்பவும் அதான் சொல்றேன்”.....என்றவள்

“நினைச்சு பாருங்க மாமா...உங்களுக்கும் எனக்கும் எந்த சூழ்நிலையில திருமணம் ஆச்சுனு........என்னை நீங்க பார்க்க கூட இல்ல......எங்க அண்ணாக்காகதான நீங்க என்னை கல்யாணம் பண்ணிகிட்டிங்க என சொல்லும்போதே அவள் கணகளில் இருந்து கண்ணீர் வர....நீங்க மனசுல எவ்ளோ கற்பனை வச்சிருந்திப்பிங்க......அதை எல்லாம் மறந்து எங்க குடும்ப சூழ்நிலைக்கு உங்கள் பலிகாடா ஆக்கிடோம் மாமா.......இன்னைக்கும் எனக்கு நினைச்சா மனசு ஆறவே மாட்டேங்குது......உங்க வாழக்கை தான் இப்படி ஆகிடுச்சு .....வெற்றி அண்ணாவாவது அது மனசுக்கு பிடிச்சவளோட வாழட்டுமே” என்றாள்..

இவள் இப்படி எல்லாம் யோசிப்பாளா என வேந்தன் நினைத்தே பார்க்கவில்லை.....அதான் பெண்கள் மனம்......ஒவொவொரு சூழ்நிலையிலும் அடுத்தவர்களின் நிலைமையில் இருந்து தான் எந்த பொண்ணும் யோசிப்பாள்....அதற்க்கு பின்பே தன்னை பற்றி நினைப்பாள்..இங்கும் அதே தான் நடந்தது.

மதி என படுக்கையில் சாய்ந்தபடியே அவளை தன மேல் இழுத்து போட்டு கொண்டவன்....”ஏன் மதி என்னை உனக்கு பிடிக்கிலியா” என சொல்லும்போதே அவன் குரலில் ஏக்கம் எட்டி பார்க்க....அவள் என்ன சொல்வாளோ என மனம் பதபதைக்க



DO NOT COPY

**“அப்படி எல்லாம் இல்லை மாமா என பதறியவள் ....எனக்கு அப்போ திருமணம் பற்றிய எண்ணமே இல்லை.....அப்பா,அம்மா அண்ணா தோழிகள் என என்னோட உலகம் ரொம்ப சின்னது மாமா.......எந்த எதிர்பார்ப்பும் இல்லை......அதுனால அந்த இடத்துல அண்ணா யார சொல்லிருந்தாலும் நான் திருமணம் செய்திருப்பேன்.......ஆனால் நீங்கள்” என நிறுத்தியவள்**

**“உங்கள் படிப்பிற்கும் தகுதிக்கும் சம்பந்தம் இல்லாமல் அண்ணாவுக்காக” என ஆரம்பிக்க**

**தன் கைகளால் அவள் வாயை மூடியவன் “இனி ஒரு முறை அந்த வார்த்தை கூறாதே மதி என்றவன் ...ஏன் மதிம்மா நான் காட்டும் அன்பில் என் உண்மையான நேசம் உனக்கு புரியவில்லயா” என மனதில் வலியோடு கேட்டான்.**

**“இல்ல மாமா...என்னை உங்களுக்கு பிடிக்கும்னு எனக்கும் தெரியும்....ஆனால் நான் சொல்வது திருமணத்தின் போது” என அவள் பதறி போய் சொன்னாள்.**

**“மதிம்மா.....யார் சொன்னது நான் உன்னை பார்க்கவில்லைன்னு ...அழகான மேகக்கூட்டங்களுக்கு நடுவே அழகிய நிலவாக நீ ஜொலித்ததை நான் பார்த்த பின்பே திருமணத்திற்கு சம்மதித்தேன்” என்றான் வேந்தன்..**

**“என்ன மாமா சொல்றிங்க” என அவள் புரியாமல் கேட்க**

**“அன்று இரவு வெற்றி  உன் அண்ணன் உன்னை தங்கை என்று சொல்வதற்கு முன்பே நீ என் மனதில் இடம் பிடித்து விட்டாய்....என்றவன் அவள் அப்போது இருந்த நிலையை விவரித்தவன் உன்னை நான் நிலவோடு ஒப்பிட்டு பார்க்க உன் பெயரும் வெண்மதி என்று இருக்க நான் எவ்ளோ சந்தோசப்பட்டேன் தெரியுமா.......எனக்கு பிடிக்கவில்லை என்றால் கண்டிப்பாக இந்த திருமணதிற்கு ஒத்து கொண்டிருக்க மாட்டேன் மதி.......அங்கே உன்னை இரண்டு மூன்று பேர் பெண் கேட்டனர்.....எங்கே உன் அண்ணன் சரி என்று சொல்லிவிடுவானோ என்று பயந்து கொண்டிருந்தது எனக்கல்லவா தெரியும்......உனக்கு தாலிகட்டும் வரை என் மனம் அலைபாய்ந்து**

கொண்டிருந்தது என்றவன் அங்கு அந்த பெருசுகள் பண்ணிய கூத்தையும் சொன்னவன் அதான் தாலி கட்டி முடிச்ச உடனே உன்னை இங்கே கூட்டிட்டு வந்துட்டேன்......இங்கே வந்த பின்பு தான் எனக்கு நிம்மதி என்றவன்....இதுக்குதான் அன்று நான் திருமணத்தை பற்றி பேசும்போதும் நீ முகம் மாறினாயா என்றவன் இனி இது போல் பேசாதே மதி....உன்னை விரும்பிதான் நான் திருமணம் செய்தேன் என்றவன் ....ஆனாலும் இந்த குட்டி மூளைக்குல்ல இவ்ளோ விஷயத்தை அடக்கி வச்சிருக்க நீ" என அவள் மூக்கை பிடித்து திருவியபடி அவன் செல்லம் கொஞ்சினான்.

கண்களில் கண்ணீர் நிற்காமல் வர அவனியே பார்த்து கொண்டிருந்தவள் சட்டென்று அவனை இழுத்து இதழோடு முத்தத்தை பதித்தவள் சில நிமிடங்கள் அது நீடிக்க அவன்தான் அவளிடம் இருந்து விடுபட போராடினான். "ஹே மதி....பாப்பா இருக்குடி...விடு...உனக்கு மூச்சு முட்டும் என அவன் அவளை பிரிக்க அவ்ளோ தனது சந்தோசத்தை முத்தத்தால் அவனுக்கு அள்ளிதெளிக்க ஒரு கட்டத்தில் வேந்தனும் அதில் முக்குளித்தான்.

சிறிது நேரத்திற்கு பிறகு வெண்மதியே களைத்து போய் அவனை விட்டு விலக..."ஹப்பா என் பொண்டாட்டிகிட்ட இருந்து இப்பதான் முத்தமே வருது...இப்படின்னு தெரிஞ்சா இத எப்பவே சொல்லிருப்பனே" என அவன் கேலியாக சொல்ல

"போங்க மாமா என்றவள்.......நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன் மாமா.......இனி எனக்கும் எதுவும் வேண்டாம்......எங்க நீங்க எங்க அண்ணாவுக்காக என்னை திருமணம் செய்திங்கனு வேதனைபட்டுகிட்டு இருந்தேன்.....என்னை விரும்பி எனக்காக நீங்க என்னை கல்யாணம் பண்ணிருக்கிங்க....இதை விட ஒரு பொண்ணுக்கு வேற என்ன வேணும்......... தேங்க்ஸ் மாமா" என்றவள் மீண்டு அவன் இதழில் முத்தத்தை ஒற்றி எடுத்தாள்.

"அடிபாவி இப்போ ஏதும் செய்யமுடியாதுன்னு நினச்சு இந்த துள்ளு துள்ற...இருடி பாப்பா வெளியே வரட்டும்...அப்புறம் பாரு" என அவன் சொல்லி கொண்டிருக்க

**“ஆமா அப்படியே இருந்திட்டாலும்...வேலை வேலையின்னு ஓடிடுவிங்க” என அவள் சரசமாக சொல்ல**

**“மதிம்மா என ஆசையாக அவளை தழுவியவன் ரொம்ப உசுபேத்தாதடி....அப்புறம் நீ தான் கஷ்டபடனும்” என கண்களில் காதலோடு  சொன்னான்......**

**“சரி..சரி...வேண்டாம்...வேண்டாம்...அப்புறம் விருமாண்டி முகம் வந்திச்சு என் பாடு திண்டாட்டம்தான்” என பயந்தவள் போல் சொல்ல தாய்மை அழகோடு  அவளது முகத்தில் பொங்கும் மகிழ்ச்சியை  கண்டவன் அவளை இழுத்து நெஞ்சோடு அணைத்து கொண்டான்.**

**பின்னர் மெதுவாக “மதிம்மா” என அவன்  அழைக்க**

**“என்ன மாமா” என அவள் கொஞ்ச**

**“இனி இந்த மாதிரி மனசுக்குள்ள எதாவது நினைச்சுட்டு நீயே குழம்பிக்காதடி.....எதா இருந்தாலும் மனசு விட்டு பேசு “என்றான்.**

**அவள் ஏதும் சொல்லாமல் தலைய ஆட்டினாள்..**

**சிறிது நேரம் கழித்து “மாமா...மாமா” என அவள் மெல்ல அழைக்க**

**“என்ன மதி” என்றான்.**

**“அண்ணா விஷயம்” என அவள் இழுக்க**

**“சரி மதி...உனக்கு விருப்பம்னா எனக்கும் சரிதான் “ என சொல்ல**

**“தேங்க்ஸ் மாமா” என்றாள்.**

**“அத இப்படிதான் சொல்வாங்களா” என அவன் கண்சிமிட்ட ...”போங்க மாமா” என வெட்கத்தில் அவன் நெஞ்சினிலே  முகம் புதைத்தாள்..**

**அந்தி  மாலை பொழுதில் நிலாவோடு  வெற்றி கல்லாற்றின் அணையின் கரையில் கைகோர்த்து நடக்க**

**“வெற்றி  என் மேல் உங்களுக்கு கோபம் இல்லயே” என கேட்டாள் வெண்ணிலா.**

**“ இல்லை “என ஒரே வார்த்தையில் பதில் சொன்னான் வெற்றி**



DO NOT COPY

"வெற்றி நம்ம இரண்டு பெரும் இதபத்தி அதிகம் பேசினது கிடையாது............ஆனா நீங்க என் மனசில இருக்கீங்க.......நான் உங்க மனசில என நிறுத்தியவள் இருக்கேனு நினைக்கிறேன்" என்றாள்.

அவன் எதுவும் பேசாமல் அவளை பார்க்க

"இதுக்குதான் வெற்றி நான் திருமணம் தள்ளிபோடனும்னு சொன்னேன்" என்றாள்.

"என்ன" என அவன் புரியாமல் கேட்க

"நம்ம இரண்டு பெரும் இன்னும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சக்கனும் வெற்றி.......நிறைய விஷ்யங்கள் நம்ம இருவருக்கும் அடிபடையிலே கருத்து வேறுபாடு இருக்கு....... நான் என் அண்ணன் கிட்ட சொல்லிட்டு தான் உங்க கூட பழகினேன்....ஆனா நீங்க என்கிட்டே கேட்காமலே திருமணதிற்கு சரி சொல்றிங்க ..........நீங்க என்னை விரும்பறதா என்கிட்டே சொல்லலாம் இல்லயா ..........ஆனா நான் அப்படி கிடையாது....மனசில பட்டத பட்டேனு சொல்லிடுவேன்.........இதை நான் உங்ககிட்ட குறையா சொல்லல.....இதான் நம்ம கேரேக்ட்டர்...........அது எனக்கும் தெரியும்....இன்னும் நம்ம தெளிவாகமா இருக்கோம் வெற்றி.........முதல்ல நம்ம இரண்டு பெரும் எப்படி இருந்தாலும் அத அப்படியே ஏத்துக்கிற மனபக்குவம் இருவருக்கும் வரணும் இல்லயா........திருமணத்திற்கு பிறகு அது வரும் வெற்றி...ஆனா அது ஒரு கட்டாயமா இருக்கும்.......அது ஒத்துவராது".......என்றவள்

மேலும் "எனக்கு வினுவையும் மதியும் பார்க்கும்போது ரொம்ப ஆச்சரியமாவும் ஏன் பொறாமையாக கூட இருக்கு....... சின்ன வயசுல எவ்ளோ முதிர்ச்சி.......அவங்களோட நானும் இருக்கணும்னா என்னை கொஞ்சம் நான் சீர்படுத்திகனும்....என்னோட உலகம் வேற...இங்க வந்து பார்த்தா இது ஒரு தனி உலகம்........இது எனக்கு பிடிச்சிருக்கு வெற்றி....ஆனா அதை நான் முழுசா அனுபவிக்கணும்னா இன்னும் எனக்கு கால அவகாசம் வேணும்.அதுக்குதான் கேட்டேன்" என்றாள்.

வெற்றியும் ஏதும் பேசாமல் அமைதியாக வர

" இதான் வெற்றி உங்களுக்கும் எனக்கும் இருக்கிற மிகப்பெரிய பிரச்சனை........நீங்க எதையும் மனசுக்குள்ளே வச்சுக்குவிங்க...நான்

வெளியே உடனே சொல்லிடுவேன்.......அத முதல்ல இரண்டு பேருமே புரிஞ்சக்கனும் என சொல்லி விட்டு அவன் முகத்தை பார்த்தாள்.

அவன் நிமர்ந்து அவள் முகத்தை பார்த்தவன்......"என் அழகான திமிரு ராணியே" என அவள் கன்னத்தை பிடித்து கிள்ளியவன்

"என்னது திமிரு ராணியா " என அவள் முறைக்க

"ம்ம்ம்...திமிரு ராணி தான்... TR என சாதரனமாக சொன்னவன் . ....உன்னை பார்த்த உடனே எனக்கு தோனின பேர் இது........உன்கிட்ட பிடிச்சதும் இந்த திமிருதான்....பிடிக்காததும் இந்த திமிர்தான்" என்றவன்

நிலா "அன்று ரெஸ்டாரென்ட்ல உன்னை பார்த்ததுல இருந்தே நீ என்னை ரொம்ப டிஸ்டர்ப் பண்ண.....உன்ன காலேஜ்ல பார்த்த உடனே அது கோபமா இல்ல என்னோட சந்தோசத்த வெளிபடுத்த முடியாத இயலாமையா எனக்கே தெரியலை.......அதான் எரிஞ்சு விழுந்தேன்......அப்புறம் பழக பழக உன்னோட பழக்கம் வேற...என்னோடது வேற ...ஒத்துவராதுன்னு முடிவு பண்ணேன் என சொல்லும்போதே வார்த்தை தேய ......ஆனாலும் இந்த மனசு கேட்கலை என்றவன்....... அது உன்னையே சுத்தி வந்தது.......சரி என்ன நடந்தாலும் நீ எப்படி இருந்தாலும் உன்னைத்தான் திருமணம் பண்ணனும்னு முடிவு பண்ணேன்......சில விஷ்யங்கள நீ என்னை ரொம்ப அட்மையர் பண்ணிட்டடா........அன்னைக்கு சைட்ல அந்த மேஸ்திரி இன்சிடென்ட் உன் மேல என் காதல இன்னும் ஆழபடுத்திடுச்சு........அப்புறம் நானும் மனுஷன் தான...இப்படி எல்லாம் வித்தியாசாமான காஸ்ட்யூம்ல வந்து என்னை தடுமாற வச்சுட்ட" என அவளை ஓரக்கண்ணால் பார்த்தவாறே சொல்ல ...

"அடபாவி...டேய்......ஊமைகோட்டனாட்ட இருந்திட்டு என்னென்ன கவனிச்சிருக்க நீ" என அவள் அவன் காதை திருக

ஹிஹிஹி என வழிந்தவன்.........."இப்பவும் நீ திருமணம் வேண்டாம்னு சொன்ன உடனே எனக்கு கடுப்பாச்சு தெரியுமா......ஆனா நீ இப்போ பேசினத கேட்கும்போது உன்னோட மெச்சுரிட்டி எனக்கு ஆச்சிரியமா இருக்கு..........நீ சொல்றதும் சரிதான் நிலா.... நம்ம இன்னும் ஒருத்தர் ஒருத்தர் புரிஞ்சுக்கணும்...அப்புறம் நம்ம லவ்வர்சா ரெமான்சே

பண்ணல...அதுக்குள்ள திருமணம் செஞ்சா அது ஒத்து வராது என்றவன் கொஞ்ச நாள் பொறுத்தே நம்ம திருமணத்தை வைத்து கொள்ளலாம் “ ஆனா அதுவரைக்கும் கட்டுபாடோடு இருக்கணும் என்றான்.

அவனை விழிவிரித்து பார்த்தவள்...”வெற்றி நீயா பேசியது ...என் அன்பே நீயா பேசியது “ என அவள் பாட

“உனை பார்த்த பின்பு நான் நானாக இல்லயே” என அவன் எசப்பாட்டு பாட

மனதில் சந்தோசம் பொங்க “தேங்க்ஸ் வெற்றி” என்றவள் சட்டென்று அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அவன் அவளை இழுத்து இதழோடு முத்தம் பதிக்க

அவனிடம் இருந்து விடுபட்டவள்...”அடபாவி நான் முத்தம் கொடுத்தா நீ திட்டுவேனு நினச்சா ....என்னடா இது என்றவள் பயங்கரமான கேடிடா நீ” என சொல்லி சிரித்தாள்.

“யாரு நானா...நீயா.......எப்படி இருந்த என்னை இப்படி மாத்திட்டியே...ஆனா நிலா வேந்தன்கிட்ட எனக்கு மண்டகபடி உண்டு....அவன் முகத்தை பார்க்கும்போதே தெரியுது” என்றான்..

“அவரு ஏன் வெற்றி எப்ப பார்த்தாலும் கோல்டன் பீச்சுல நிக்கிற கூர்க்கா மாதிரியே முகத்தை உம்முன்னு வச்சிருக்கார்” என அவள் சீரியசாக கேட்க

“கொழுப்பு உனக்கு” என அவள் காத திருகியவன்......அவனை பத்தி உனக்கு என்ன தெரியும் என்றவன் அவனை பற்றி சொல்ல நிலாவுக்கு வேந்தன் மேல் ஒரு மரியாதை வந்தது.

பின்னர் மெதுவாக “ஏன் வெற்றி அவருக்கு நம்ம கல்யாணத்துல விருப்பம் இல்ல போல இருக்கு என மெதுவாக கேட்டாள்.

“நானும் கவனிச்சேன் நிலா....... என்னோட குணத்துக்கு நேர் எதிர் குணம் நீ...அதான் வேந்தன் யோசிச்சிருப்பான்” என்றான்.

.

"நம்ம விபீஷ் மட்டும் என்னனு நினச்சா......பாப்புவ பார்த்தைல ....என்னை விட விபீஷ் மேலதான் அவளுக்கு பாசம் அதிகம்...அந்த அளவுக்கு அவன் அவளுக்கு செய்திருக்கான்......ஆனா இப்படி பண்ணுவான்னு நினைக்கவே இல்ல .......சந்தானம் மாதிரி காமெடி பண்ணிட்டு சத்தியராஜ் மாதிரி என்ன வில்லத்தனம் பண்ணிற்க்கான் பாரேன்" என வெற்றி அவனது தவறையும் சுட்டி காட்டினான்.

"ஆமா வெற்றி....ஆனாலும் அவன் லக்கிடா ......ஒரு பொண்ணு அவளோட லட்சியம் திறமை அந்தஸ்த்து ஏதும் வேண்டாம்...அதுக்கு பதிலா உங்க பையன எனக்கு கொடுங்கன்னு கேட்கிறானா ரியலி கிரேட் தான் " என்றாள் நிலா..

"அவனோட அன்பு அந்த மாதிரி நிலா......பார்க்கத்தான் ஆள் இப்டி இருப்பான்....வினு தன்னை பார்க்கா மாட்டலானு எத்தன நாள் அவன் அவள் முகத்தே பார்த்திட்டு இருந்தான் தெரியுமா......எனக்கு எல்லாம் அந்தபொறுமை கிடையாது " என்றான்.

"ஆமா அதான் பார்த்தானே அந்த மேஸ்திரி விஷயத்துல" என அவள் சிரித்து கொண்டே சொல்ல

"என்ன பார்த்த" என அவன் கேட்க

"வெளியே நல்லவனாட்ட பேசிட்டு உள்ள கூட்டிட்டு போய் செம சாத்து சாத்தி வெளியே ஒன்னும் தெரியாத மாதிரி வந்திங்களே" அதான் என்றாள்.

"ஒ அதுவா என்றவன்.......அது எல்லாம் அப்டிதான்" என்றான்.

"ஏன் வெற்றி நான் உங்களுக்கு சரியான ஜோடி இல்லியா " என அவள் இழுத்தவள்....இல்ல வேந்தன் வெண்மதி விபீஷ் வினு நீங்க எல்லாம் ஒருமாதிரி...நான் மட்டும் என அவள் நிறுத்த

"யாரு சொன்னா ஒரே மாதிரின்னு......இங்க பாரு நிலா....நாங்க நான்கு பேரும் பிரிண்ட்ஸ் தான்....ஆனா ஒரே மாதிரி இல்லை.......நான்கு பேரும் நான்கு குணம்.... எவ்ளோ நாள் அடிச்சுட்டு இருக்கோம் தெரியுமா........அது எல்லாம் சில நிமிடம் தான்.....அப்புறம் சரி ஆகிடுவோம்........நாங்க ஒருத்தர ஒருத்தர் நம்பறோம்.....அந்த

நம்பிக்கைதான் எங்க நட்பை இந்த அளவு கொண்டு வந்திருக்கு...சில சமயம் நான்கூட தடுமாறி இருக்கிறேன் ....ஆனா வேந்தன் உன் நம்பிக்கை எப்பவும் தப்பகாதுன்னு அடிக்கடி சொல்வான்...அதுனால தேவை இல்லாம போட்டு குழப்பிக்காத"......என்றான்.

"ஆமாம் வெற்றி...உங்களுக்குள்ள அந்த புரிதல் உணர்வு இருக்கு......விபீஷ் தப்பு பண்ணத வேந்தன் திட்னாலும் அதே நான் சொல்லும்போது என்னை திட்னாரு......விட்டு கொடுக்காம பேசினாரு......அந்த சமயத்துல நீ எனக்கு சப்போர்ட் பண்ணலையினு நான் வருத்தப்பட்டேன் தெரியுமா...ஆனா இன்னைக்கு அண்ணன் தட்ட நீட்டும்போது உன் முகத்த பார்த்திட்டு அவருக்கு விருப்பம் இல்லய்னாலும் சரின்னு வாங்கிட்டாரு....எனக்கு அதும் தெரியும்.........கிரேட் வெற்றி ....உங்களுக்குள்ள நானும் இருக்கேனு நினைக்கும்போதே சந்தோசமா இருக்கு" என்றாள்.

பின்னர் இருவரும் என்ன பேசுகிறோம் என் தெரியாமேலே சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்பினர்.

பெரியவர்கள் ஒன்று கூடி பேசி இரண்டு நாட்களுக்குள் வினு விபீஷ் திருமணம் இனிதே நடந்தேறியது.அனைவரும் சென்ற பின்னர் ராஜ் மெதுவாக விபீஷை சுரண்ட

"என்னடா" என விபீஷ் கேட்க

"ஒரு முக்கியமான விஷயம் பாஸ்...கொஞ்சம் தனியா வரிங்களா" என்றான்.

"இரு வரேன் என்றவன் ஒரு நிமிடம் வந்தறேன் "என அனைவரிடமும் சொல்லிவிட்டு வந்தான். .

என்ன ராஜ் என்ன வேணும் ...... எதுக்கு வர சொன்ன என கேட்டான்.

"பாஸ் உங்களோட வந்தாங்கள அந்த பொண்ணுக" என அவன் இழுக்க

"அச்சோ என்னடா அச்சு.......எதாவது சேதாரமா என என அவன் பதற

"இல்ல பாஸ் ... அவங்க பத்திரமா தான் இருக்காங்க என அவன் வேகமாக சொன்னான்.

“அது எனக்கும் தெரியும்டா....அதுக எல்லாம் ஒசாமவுக்கே தண்ணீ காட்ற ஆளுங்க........நான் உனக்கு கேட்டேன்டா ...எதாவது பேசிட்டியா...அச்சோ “என அவன் பதறி போய் கேட்டான்.

“இல்ல பாஸ்...அது வந்து.......... அதுல அந்த தேனுவ எனக்கு ரொம்ப பிடிச்சருக்கு......அதான் நீங்க கொஞ்சம் சிபாரிசு பண்ணா” என இழுக்க

“ஏண்டா.....உனக்கு வேற ஆளா கிடைக்கலை.......அதும் அந்த க்ரூப்பா........டேய் அவங்க எல்லாம் கரண்டிய பிடிக்கிறதுக்கு பதிலா கட்டையை பிடிச்சுட்டு சுத்தற ஆளுங்கடா ...அதும் அந்த தேனு அச்சோ...அது கைல எப்பவும் பூரிகட்டைய இல்ல இல்ல உருட்டு கட்டயே வச்சு சுத்திட்டு இருக்கும்...அத போயா வேண்டாம்டா...உனக்கு ஏத்த அனுஷ்கா,ஹன்சிக்கானு நீ ட்ரை பண்ணு என்றான்” விபீஷ்.

“அப்படியா........ பார்த்தா அப்படி தெரியல பாஸ் என்றவன் எனக்கு அந்த பொண்ணுதான் வேணும்” என அவன் பிடிவாதமாக சொன்னான்.

“இங்க பாரு... யாரு பெத்த பிள்ளையோ...சொந்த காசுல சூனியம் வச்சுகனும்னு நினைக்குது.......சரிடா.....உன் தலைஎழுத்து கடைசி வரை நீ உருட்டுகட்டயாலதான் அடிவாங்கனும்னு இருந்தா யாரால மாத்த முடியும்...ஆனா ஒன்னு ராஜ்........எப்பவும் தலயில ஹெல்மெட் போட்டுக்கோ ...அதான் உனக்கு பாதுகாப்பு” என்றான்.

“பாஸ்” என அவன் இழுக்க

“சரிடா...... வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கிறதுன்னு முடிவு பண்ணிட்ட பேசறேன்”......என சொல்லிவிட்டு நகர்ந்தான்.

பின்னர் வேந்தனும் விபீஷும் திருச்சியில் இருக்க வெற்றி எப்போதும் போல் சென்னை சென்றான்.நிலாவும் படிப்பை முடித்து விட்டு வெற்றியோடு இணைந்து வேலை செய்தாள்.

வேந்தனுக்கு சுபயோக நாளில் விகாஷினி என்ற அழகான பெண்குழந்தை பிறக்க அந்த குடும்பமே சந்தோசத்தில் மூழ்கியது.

V4 பில்டர்ஸ் பெரிய நிறுவனமாக மாற அதில் பல ஆயிரம் பேர் வேலை செய்தனர். வினு சென்னை செல்ல மறுக்க.....காரணம் விபீஷின் பெற்றவர்களை பார்க்க வேண்டும்என்பதே ....விபீஷ் பெற்றோர்களிடம்

பேசுவதில்லை…ஆனால் வினு அவர்களுக்கு செய்வதை தடை சொல்வதில்லை……சொன்னாலும் அவள் கேட்க போவதில்லை.

வெண்மதியின்  நிலையோ ரொம்பவும் கவலைக்கிடமானது …அவள் எவ்வளவோ மறுத்தும் அவளை வீட்டில் இருந்தே டிகிரி படிக்கவேண்டும் என வேந்தன் சொல்லி விட்டான்.வேண்டா வெறுப்பாக அவள் படித்து கொண்டிருந்தாள்.

வெற்றியோ இரண்டு வருடங்களுக்கு பிறகு தாங்கள் திருமணம் செய்து  கொள்வதாக சொல்லி விட்டனர்.

ஒரு வருடம் கழித்து வினுவின் வளைகாப்பில் அனைவரும் ஒரே இடத்தில் கூடி இருந்தனர்.

விழா முடிந்ததும் அனைவரும் சென்று இருக்க….ஆண்கள் டிவி பார்த்து கொண்டிருக்க

வினுவின் அருகில் நிலா கையில் மதியின் குழந்தியோடு அமர்ந்திருக்க, மதியும் தனது செல்ல மகளுக்கு பால் ஆற்றி கொண்டே நிலாவின் அருகில் அமர்ந்திருக்க…….”வினு நல்லா சாப்பிடு …..அப்பதான் குழந்தை ஆரோக்கியமா இருக்கும்” என பெரிய மனுசி போல் மதி சொல்லி கொண்டிருக்க

“அத நீ சொல்ற …ம்ம்ம்…”என வேந்தன்  கேட்டதும்….

“ஹிஹிஹி…என வழிந்தவள்…இல்ல மாமா நீங்க சொன்னத தான் சொன்னேன்” என்றாள்.

“அதெல்லாம் விபீஷ் பார்த்துக்குவான் மதி…….அவன் தான் வினுவே சரணம்னு சொல்லிட்டு இருக்கானே…….கேட்ட நாங்க எல்லாம் கைப்புள்ள சாதி அப்டிங்கிறான்” என்றாள் நிலா.

“கைபுள்ளயா அப்டினா” என்ன என மதி குறுக்கே புகுந்து கேள்வி எழுப்ப

“ நிலாஆஆஆஅ என அலறிய விபீஷ்……..அது வந்து மயிலு” என ஆரம்பிக்க



DO NOT COPY

“இல்ல பாப்பு ....எதாவது பிரச்சனை வந்தா கப்புன்னு கால்ல விழுந்திடனும் அத சொல்றான்” என்றான் வெற்றி.

“ஓ ...அதான...அது நல்ல விஷ்யம்தான” என மதி சொல்ல

உடனே விபீஷ் “பாசமலரே...என் அன்பில் விளைந்த பாசமலரே” என பாட அங்கே சிரிபொலி நிறைந்திருந்தது.

“ஆனாலும் விபீஷ் இது கொஞ்சம் ஓவர் தான்” என நிலா சொல்ல

உடனே வினு சிரித்து கொண்டே “விபீஷாவது இப்படின்னு எல்லாருக்கும் தெரியும்...ஆனா கடமை ,கண்ணியம் கட்டுபாடுனு இருந்த எங்க வெற்றி சாரே எப்படி நிலா இப்படி கவுத்த” என வினு அவளை பார்த்து கண்ணடித்து கேட்க

உடனே நிலா “ நான் எங்க கவுத்தேன்...அவருதான் என்னை கவுதுட்டாறு” என்றவள் வெட்கத்தில் முகம் சிவந்தாள்.

“நிலா நீ மத்தவங்கள அடிச்சு கை சிவந்து பார்த்திருக்கேன்....அதும் ஒரு ஆளுக்கு கன்னம் சிவந்து பார்த்திருக்கேன்” என சொல்லி கொண்டே விபீஷ் வெற்றியை பார்த்தான்.

வெற்றியோ விபீஷை முறைக்க

“விடு நண்பா.......உண்மையதான சொல்றேன் என்றவன் ஆனா உன் முகம் சிவந்து இப்பதான் பார்க்கிறேன்...இரு ஒரு போட்டோ எடுத்துக்கிறேன்...அப்புறம் இந்த மாதிரி அதிசயம் எல்லாம் எப்போ நடக்குமோ” என சொல்லி கொடி செல்போனில் போட்டோ எடுத்தான்.

“விபீஷ் நீ அடிவாங்காம அடங்கமாட்ட ” என நிலா கடுப்பாகி அவனை அடிக்க வர

“வினு ...பாரு இததான் சொன்னேன் ...அடிக்க வரா பாரு....என்னை காப்பாத்து ” என அவன் வினுவிடம் சரணடைந்தான்.

“மதி.... குட்டிம்மா அழுகிறா பாரு அவளை கவனி” என இந்த அலம்பலில் கலந்துகாமல் டிவி பார்த்து கொண்டிருந்த வேந்தன் அவளை பார்காமலே சொன்னான்.



DO NOT COPY

எங்கே பேசி மதிய குழப்பி விடுவார்களோ எனற பயம் அவனுக்கு…ஏற்கனவே ஆஸ்பத்ரியில் விபீஷ் தான் பிரச்சனைக்கு பிள்ளையார் சுழி போட்டான்…எனவே மத்தின் கவனத்தை திசை திருப்ப வேந்தன் சொன்னான்.

“இந்தா பார்கிறேன் மாமா” என சொல்லிகொண்டே அழுகின்ற குழந்தையை நிலாவிடம் இருந்து வாங்கி அதற்க்கு பால் கொடுக்க ஆரம்பித்தாள் மதி.

உடனே “ஹப்பா சாமி உன்ற மதிய நாங்க ஏதும் பண்ணல”….என விபீஷ் கிண்டலாக சொல்ல

“எப்படி நீ எல்லா விஷயத்தையும் இவ்ளோ ஈசியா எடுத்துகிற…..எது சொன்னாலும் கேட்கிற மதி” என நிலா கேட்டாள்.

வினுவோ …”நிலா இத நீ வேந்தன் சார்கிட்ட கேட்கணும் …….அவரு இப்படி பொறுமையா பேசறதே அதிசியம்…எல்லாம் மதியின் மாயம் தான்” என்றாள்…. ……….

உடனே நிலா “வெற்றி மட்டும் என்னை ஏதாவது சொன்னா அவ்ளோதான் நமக்கு கோபம் அதிகம்பா ” என அவனை ஒரு கண்ணில் பார்த்து கொண்டே சொன்னாள்.

வேந்தன் திரும்பி வெற்றியை முறைக்க

வெற்றியோ நிலாவை முறைக்க

நிலா அமைதியானாள்.

உடனே விபீஷ் “அப்படி இல்லை நிலா…எதுவுமே நம்ம எப்படி பார்க்கிறமோ அத பொறுத்து தான் இருக்கு……..எங்க மயிலு கேரக்ட்டர் எப்படி தெரியுமா” என்றவன் அவளது குணத்தை அவன் கவிதையாக இப்படி சொன்னான்.

மதியே சொல்வது போல் சொன்னான்.

குடும்ப ஓட்டிற்குள் உன்னை
சுருக்கி கொள்ளாதே
என்றார்கள்…..

லஷ்மிரவி

ஓட்டையும் கவசமாக்கி
நகர்த்தி செல்வேன்
என்றேன் நான்.
புரட்சி பெண்ணாக
விருப்பமில்லையா
என்றார்கள்...........
என் கணவனுக்கு பிடித்த
பெண்ணாக இருக்கவே விருப்பம்
என்றேன் நான்.
உன்னை திருத்த முடியாது
என்றார்......
விடையை திருத்த முடியாது ,
மதிப்பெண்தான் அளிக்க
வேண்டும்
என்றேன் நான்!......

T COPY

(நன்றி வாரமலர்)

“இதான் மயிலு” என்று சொல்ல

“உண்மைதான் விபீஷ்........எந்த ஒரு விஷயமும் நம் எப்படி எடுத்து கொள்கிறோமோ அதை பொறுத்தே அதன் வடிவம் அமையும்” என்றாள் நிலா .

உடனே மதி “அப்படி எல்லாம் இல்லை நிலா...மாமா சொல்றத நான் செய்யறேன் அவ்ளோதான்” என சாதரனாமாக சொல்லிவிட்டு அவள் வேலையே தொடர்ந்தாள்.

உடனே விபீஷ் “சூப்பர் மதி” என பாராட்டினான்.

வெற்றி எழுந்து வந்து மதியின் தலையை வருடிகொடுக்க,அது அவனின் மன நிறைவை அவளுக்கு சொல்லாமல் சொல்லியது.

வேந்தன் திரும்பி பார்த்துவன் முகம் சுருங்க

உடனே மதி வேகமாக வந்து அவன் அருகில் அமர்ந்து அவனின் தோள் சாய...."நீ எப்பவும் எனக்கு தான் மதிம்மா" என அவன் காதில் சொல்லியவாரே அவள் உச்சந்தலையில் முத்தமிட்டான்.வளர்ந்த பிள்ளை தோளில் சாய்ந்திருக்க ,மலர்ந்த பிள்ளை மடியில் இருக்க வேந்தனின் நெஞ்சம் பெருமிதத்தில் விம்மி புடைத்தது.

விபீஷ் வினுவின் அருகில் சென்று அவளை தோளோடு அணைத்து நிற்க

வெற்றியோ நிலாவின் கையை பிடித்தவாறு நிற்க

சிறிது நேரம் அந்த கனத்தை அனைவரும் அனுபவித்தனர்.

அப்போது விபீஷின் அலைபேசியில் இருந்து

."இந்த பொண்ணுங்களே இப்படித்தான் புரிஞ்சுபோச்சு டா
அவங்க கண்ணு நம்ம களரனு தெரின்ஜி போச்சு டா "

என்ற பாடல் ஒலிக்க

அந்த சூழ்நிலையில் அதை எதிர்பார்க்கத அனைவரும் ஒரு நிமிடம் அதிர்ந்து பின் அவனை முறைக்க

உடனே "நண்பா.........இது யாரோ பண்ண சதி எனக்கு தெரியாது" என சொல்லிவிட்டு அவன் ஓட அவர்கள் இருவரும் துரத்த...அந்த இடத்தில் சந்தோசம் சதிராட்டாம் போட......வேந்தனின் செல்ல தேவதை விகாஷினி கை தட்டி சிரித்தாள்.

உடனே நிலா ......."எங்கிருந்து வந்தாங்களோ இவங்க...நம்மள இந்த பாடு படுத்த" என வார்த்தை சலித்தபடி வந்தாலும் முகத்தில் பூரிப்பு நிறைந்திருந்தது.

"ஆமா...ஆமா அன்பான ராட்ச்ஸர்கள் மூன்றுபேரும்" என வினு சந்தோசமாக சொல்ல

"அப்போ நம்ம அழகான ராட்சஸிங்களா" என மதி கண்களை உருட்டி கொண்டு கேட்டாள்.

**“மதீஈஈ கவுண்ட்டர் பின்ற  நீ “ என இருவரும் சந்தோசத்துடன் அவளை பாராட்ட அந்த இடத்தில் குதூகலம் பொங்கி வழிந்தது.**

**வாழ்க்கை என்பது நீரை  போல......அதை எதில் அடைக்கிறோமோ....இல்லை எதுவாக பார்க்கிறோமோ அதுவாகத்தான் நமக்கு தெரியும்......இவர்கள்  இந்த வாழ்க்கையை  சந்தோசமாக பார்க்கிறார்கள்......எனவே அவர்கள்  வாழ்வில் என்றும் சந்தோசமே!!!!!!!!!!இன்பத்தின் இருப்பிடம் அவர்களின் இல்லமே !!!!!!!!!!**

**சுபம் ! 5**

.

DO NOT COPY

DO NOT COPY

.

DO NOT COPY

DO NOT COPY

DO NOT COPY

.

DO NOT COPY

DO NOT COPY